# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத்தரமதிப்பீட்டில்A+(CGPA: 3.64)தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின்
முதல்தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி -630 003

# ONLINE PROGRAMMES

## எம்.ஏ - தமிழ்

### இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்

### 205131 – சங்க இலக்கியம்

Copy Right Reserved

For Private use only

**Author :**

**Dr.KR.KAMALAMURUGAN**
**Assitant Professor of Tamil**
**Queen Marry's College**
**Chennai – 4**

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

**Reviewer:**

**Dr. V. THIRUVENI**
**Assistant Professor of Tamil,**
**Directorate of Distance Education,**
**Alagappa University,**
**Karaikudi -630003.**

# தாள் : 31931 – சங்க இலக்கியம்


| வ.எண். | பாடத்திட்டம் - பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| | பிரிவு – 1 : குறிஞ்சி – முல்லை | |
| கூறு 1 | குறிஞ்சிப்பாட்டு | 1 |
| கூறு 2 | முல்லைக்கலி – 1 முதல் 8 வரை | 21 |
| கூறு 3 | முல்லைக்கலி – 9 முதல் 17 வரை | 50 |
| கூறு 4 | ஐங்குறுநூறு – மருதம் | 65 |
| கூறு 5 | அகநானூறு – நெய்தல – 10 முதல் 200 வரை | 92 |
| | பிரிவு – 2 : அகநானூறு – குறுந்தொகை | |
| கூறு 6 | அகநானூறு – நெய்தல – 210 முதல் 400 வரை | 114 |
| கூறு 7 | குறுந்தொகை – பாலை – 1 முதல் 50 வரை | 137 |
| கூறு 8 | குறுந்தொகை – பாலை – 51 முதல் 93 வரை | 145 |
| | பிரிவு – 3 : நற்றிணை – பரிபாடல் | |
| கூறு 9 | நற்றினை – முதல் இருபது பாடல்கள் | 150 |
| கூறு 10 | நற்றினை – அடுத்த இருபது பாடல்கள் | 166 |
| கூறு 11 | பரிபாடல் : வையப் பாடல்கள் | 181 |
| | பிரிவு – 4 : பதிற்றுப்பத்து – ஆற்றுப்படை | |
| கூறு 12 | புறநானூறு – 151 முதல் 200 வரை | 233 |
| கூறு 13 | பதிற்றுப்பத்து – ஐந்தாம் பத்து | 278 |
| கூறு 14 | சிறுபாணாற்றுப்படை | 293 |




| | |
|---|---|
| | பிரிவு – 1 : குறிஞ்சிப்பாட்டு, முல்லைக்கலி, ஐங்குறுநூறு, அகநானூறு |
| கூறு - 1 | குறிஞ்சிப்பாட்டு |
| 1.1 | முன்னுரை |
| 1.2 | குறிக்கோள்கள் |

| | |
|---|---|
| 1.3 | அறத்தொடு நிற்றல் |
| 1.4 | தலைவி தோழியிடம் ரகசியம் பகிரல் |
| 1.5 | நற்குணம் விலகினால் மீண்டும் திரும்பாது |
| 1.6 | தலைவி தன் தாயிடம் காதலைத் தெரிவிக்க நினைத்தல் |
| 1.7 | தலைவியின் காதல் நோய் |
| 1.8 | தோழியின் நிலை |
| 1.9 | குடும்பத்தை ஒத்திட்டுப் பார்க்காத கூடல் மணம் |
| 1.10 | தினைப்புனம் காத்தல் |
| 1.11 | பறவை ஓட்டும் இசைக் கருவிகள் |
| 1.12 | பெருமழை |
| 1.13 | அருவியில் நீராடல் |
| 1.14 | குறிஞ்சித் திணைப் பூக்கள் : 99 வகைப் பூக்கள் |
| 1.15 | அசோகின் அடியில் அமர்ந்திருந்தோம் |
| 1.16 | தலைவனின் வருகையும், அவனின் அழகும் |
| 1.17 | வேட்டை நாய்களின் தோற்றம் |
| 1.18 | தலைவனின் வருத்தம் |
| 1.19 | தலைவனின் பேச்சு |
| 1.20 | யானையின் வருகை |
| 1.21 | யானையால் வந்த துயரம் |
| 1.22 | உயிர் காத்தான் தலைவன் |
| 1.23 | தலைவனின் உறுதிச் சொல் |
| 1.24 | தலைவியின் நாணம் |
| 1.25 | தலைவனின் மரை நாட்டின் வளம் |
| 1.26 | மணம் கொள்வோம் என்று தலைவன் கூறியமை |
| 1.27 | யானை தரு புணர்ச்சி |
| 1.28 | மாலைக் காட்சி |
| 1.29 | தலைவன் எங்களை ஊர் சேர்த்தான் |
| 1.30 | தலைவனின் இரவுக்கால வருகை |
| 1.31 | தலைவியின் துன்பம் |
| 1.32 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 1.33 | தொகுத்துக் காண்போம் |
| 1.34 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு – 2 | முல்லைக்கலி – 1 முதல் 8 வரை |
| 2.1 | முன்னுரை |
| 2.2 | குறிக்கோள்கள் |
| 2.3 | ஏறு தழுவலும் தோழியின் கூற்றும் |
| 2.4 | ஏறு தழுவி வென்றவன் |
| 2.5 | ஆயமகள் தோள் |
| 2.6 | ஊராரை உச்சி மிதித்து |
| 2.7 | நெஞ்சம் சென்றதடீ! |
| 2.8 | முலை வேது ஒற்றுவோம் |
| 2.9 | தெய்வம் அல்லவா காட்டிற்று |
| 2.10 | காஞ்சிக்கீழ் வா! |

| | |
|---|---|
| 2.11 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 2.12 | தொகுத்துக் காண்போம் |
| 2.13 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு -3 | முல்லைக்கலி – 9 முதல் 17 வரை |
| 3.1 | முன்னுரை |
| 3.2 | குறிக்கோள்கள் |
| 3.3 | சொல்ல முடியாத வனப்பு |
| 3.4 | தேள் கடி மருந்தோ! |
| 3.5 | பேச்சுக்குப் பின் |
| 3.6 | தழுவாதே என்றாரே? |
| 3.7 | குற்றம் ஏதும் இல்லை |
| 3.8 | இருமணம் இயல்பன்று |
| 3.9 | களவு வெளிப்பட்டுத |
| 3.10 | அங்கே வருவாய்! |
| 3.11 | தெளியாது என் அறிவு |
| 3.12 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 3.13 | தொகுத்துக் காண்போம் |
| 3.14 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு – 4 | ஐங்குறுநூறு – மருதம் |
| 4.1 | முன்னுரை |
| 4.2 | குறிக்கோள்கள் |
| 4.3 | வேட்கைப்பத்து |
| 4.3.1 | தோழி தலைவனிடம் கூறியது (தோழி கூற்று) |
| 4.3.2 | |
| 4.3.3 | |
| 4.3.4 | |
| 4.3.5 | |
| 4.3.6 | |
| 4.3.7 | |
| 4.3.8 | |
| 4.3.9 | |
| 4.3.10 | |
| 4.4 | வேழம் பத்து |
| 4.4.1 | தலைவி தோழியிடம் அல்லது பாணனிடம் கூறியது |
| 4.4.2 | தலைவி கூற்று |
| 4.4.3 | |
| 4.4.4 | |
| 4.4.5 | |
| 4.4.6 | தோழி தூது வந்த பாணனிடம் கூறியது |
| 4.4.7 | தலைவி தோழியிடம் கூறியது |
| 4.4.8 | தலைவி தலைவனின் நண்பர்களிடம் கூறியது |
| 4.4.9 | தலைவி தோழியிடம் கூறியது |
| 4.4.10 | தலைவி தோழியிடம் கூறியது |
| 4.5 | கள்வன பத்து (களவன் பத்து) |

| | |
|---|---|
| 4.5.1 | தோழி தலைவியிடம் கூறியது |
| 4.5.2 | தலைவி தோழியிடம் கூறியது |
| 4.5.3 | தலைவி தோழியிடம் கூறியது |
| 4.5.4 | தோழி தலைவியிடம் கூறியது |
| 4.5.5 | |
| 4.5.6 | |
| 4.5.7 | |
| 4.5.8 | தோழி செவிலித்தாயிடம் கூறியது |
| 4.5.9 | |
| 4.5.10 | |
| 4.6 | தோழி உரைத்த பத்து |
| 4.6.1 | தோழி தலைவியிடம் கூறியது |
| 4.6.2 | தலைவி தோழியிடம் கூறியது |
| 4.6.3 | |
| 4.6.4 | |
| 4.6.5 | |
| 4.6.6 | |
| 4.6.7 | பரத்தை தன் தோழியிடம் கூறியது |
| 4.6.8 | பரத்தை தன் தோழியிடம் கூறியது |
| 4.6.9 | பரத்தை தன் தோழியிடம் கூறியது |
| 4.6.10 | பரத்தை தன் தோழியிடம் கூறியது |
| 4.7 | புலவிப்பத்து |
| 4.7.1 | தலைவி பாணனிடமும் தலைவனின் நண்பர்களிடமும் கூறியது |
| 4.7.2 | தலைவி தலைவனிடம் பரத்தையைப் பற்றிக் கூறியது |
| 4.7.3 | தலைவி தலைவனிடம் கூறியது |
| 4.7.4 | தோழி தலைவனிடம் கூறிது |
| 4.7.5 | தோழி தலைவனிடம் தலைவி கூறுவதைப் போல் கூறியது |
| 4.7.6 | தோழி தலைவனிடம் தலைவி கூறுவதைப் போல் கூறியது |
| 4.7.7 | தலைவி தலைவனிடமும் பாணனிடமும் கூறியது |
| 4.7.8 | தலைவி தலைவனிடமும் பாணனிடமும் கூறியது |
| 4.7.9 | தலைவி தலைவனிடமும் பாணனிடமும் கூறியது |
| 4.7.10 | தோழி தலைவனிடம் கூறியது |
| 4.8 | தோழி கூற்றுப் பத்து |
| 4.8.1 | தோழி தலைவனிடம் கூறியது |
| 4.8.2 | தோழி தலைவனிடம் நகையாடிக் கூறியது |
| 4.8.3 | தலைவி தலைவனிடம் கூறியது அல்லது தோழி தலைவனிடம் கூறியது |
| 4.8.4 | தோழி வாயில் மறுத்து தலைவனிடம் கூறியது |
| 4.8.5 | தோழி தலைவனிடம் கூறியது |
| 4.8.6 | |
| 4.8.7 | |
| 4.8.8 | |
| 4.8.9 | |
| 4.8.10 | |

குறிப்புகள்


| | |
|---|---|
| 4.9 | கிழத்திக் கூற்றுப் பத்து |
| 4.9.1-4.9.10 | தலைவி தலைவனிடம் கூறியது |
| 4.10 | புனலாட்டுப் பத்து |
| 4.10.1 | தலைவி தலைவனிடம் கூறியது |
| 4.10.2 | தலைவன் தோழியிடம் கூறியது |
| 4.10.3 | |
| 4.10.4 | |
| 4.10.5 | |
| 4.10.6 | |
| 4.10.7 | பரத்தை தலைவனிடம் கூறியது |
| 4.10.8 | பரத்தை தலைவனிடம் கூறியது |
| 4.10.9 | பரத்தையின் தோழி தலைவனிடம் கூறியது |
| 4.10.10 | தலைவி தலைவனிடம் கூறியது |
| 4.11 | புலவி விராய பத்து |
| 4.11.1 | பரத்தை தலைவனிடம் கூறியது |
| 4.11.2 | தலைவி பாணனிடம் கூறியது |
| 4.11.3 | தலைவி தலைவனிடம் கூறியது |
| 4.11.4 | தோழி தலைவனிடம் கூறியது |
| 4.11.5 | தலைவி தலைவனிடம் கூறியது |
| 4.11.6 | பரத்தை தலைவனிடம கூறியது |
| 4.11.7 | பரத்தை தலைவனிடம் கூறியது |
| 4.11.8 | பரத்தை தலைவியின் தோழியர் கேட்கும்படி கூறியது |
| 4.11.9 | பரத்தை பாணனிடம் தலைவியின் தோழியர் கேட்கும்படி கூறியது |
| 4.11.10 | பரத்தை தலைவியின் தோழியரும் தலைவனும் கேட்கும்படி கூறியது |
| 4.12 | எருமைப் பத்து |
| 4.12.1 | தோழி தலைவனிடம் கூறியது |
| 4.12.2 | தலைவன் தலைவியிடம் கூறியது |
| 4.12.3 | தோழி செவிலித்தாயிடம் சிறைப்புறத்தே உள்ள தலைவன் கேட்கும்படி கூறியது |
| 4.12.4 | தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது |
| 4.12.5 | தலைவி தலைவனைப் பற்றிக் கூறியது |
| 4.12.6 | தலைவனின் தோழர்கள் தலைவியைப் பற்றிக் கூறியது |
| 4.12.7 | பாணன் தலைவியைப் பற்றிக் கூறியது |
| 4.12.8 | தோழி தலைவனிடம் கூறியது |
| 4.12.9 | தலைவன் தலைவியைப் பற்றிக் கூறியது |
| 4.12.10 | தோழி தலைவனிடம கூறியது |
| 4.13 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 4.14 | தொகுத்துக் காண்போம் |
| 4.15 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு – 5 | அகநானூறு – நெய்தல் - 10 முதல் 200 வரை |
| 5.1 | முன்னுரை |

| | |
|---|---|
| 5.2 | குறிக்கோள்கள் |
| 5.3 | தோழி தலைவனிடம் கூறியது – அம்மூவனார் |
| 5.4 | தோழி தலைவனிடம் கூறியது – உலோச்சனார் |
| 5.5 | தோழி தலைவனிடம் கூறியது – முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் |
| 5.6 | தலைவி தோழியிடம் கூறியது – குன்றியனார் |
| 5.7 | தோழி பாணனிடம் கூறியது – கருவூர பூதஞ்சாத்தனார் |
| 5.8 | தோழி தலைவனிடம் கூறியது – குடவாயில் கீரத்தனார் |
| 5.9 | தோழி தலைவியிடம கூறியது – மதுரைத் தமிழ் கூத்தனார் |
| 5.10 | தோழி கூற்று – மருங்கூர்கிழார் பெருங்கண்ணனார் |
| 5.11 | தோழி கூற்று – மதுரை மருதன் இளநாகனார் |
| 5.12 | தோழி கூற்று – உலோச்சனார் |
| 5.13 | தோழி கூற்று – போந்தைப் பசலையார் |
| 5.14 | தோழி கூற்று – நக்கீரனார் |
| 5.15 | தலைவன் கூற்று – வெண்கண்ணனார் |
| 5.16 | தலைவன் கூற்று – அம்மூவனார் |
| 5.17 | தோழி கூற்று – குறுவழுதியார் |
| 5.18 | தோழி கூற்று – குமிழி ஞாழலார் நப்பசலையார் |
| 5.19 | தலைவி கூற்று – மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் |
| 5.20 | தோழி கூற்று – கருவூர்க் கண்ணம்பாளனார் |
| 5.21 | தோழி கூற்று – உலோச்சனார் |
| 5.22 | தோழி கூற்று – உலோச்சனார் |
| 5.23 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 5.24 | தொகுத்துக் காண்போம் |
| 5.25 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| | பிரிவு – 2 : அகநானூறு, குறுந்தொகை |
| கூறு – 6 | அகநானூறு – நெய்தல் - 210 முதல் 400 வரை |
| 6.1 | முன்னுரை |
| 6.2 | குறிக்கோள்கள் |
| 6.3 | தோழி கூற்று – உலோச்சனார் |
| 6.4 | தோழி கூற்று – மதுரை மருதன் இளநாகனார் |
| 6.5 | தலைவன் கூற்று – மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் |
| 6.6 | தோழி கூற்று – எழூஉப்பன்றி நாகன் குமரனார் |
| 6.7 | தோழிகூற்று –செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார் |
| 6.8 | தோழி மற்றும் தலைவியின் கூற்று – மோசிகரைனார் |
| 6.9 | தோழி கூற்று – சாகலாசனார் |
| 6.10 | தலைவன் கூற்று – அம்மூவனார் |
| 6.11 | தலைவி கூற்று – நக்கீரர் |

| | |
|---|---|
| 6.12 | தோழி கூற்று – உலோச்சனார் |
| 6.13 | தோழி கூற்று – நக்கீரனார் |
| 6.14 | தோழி கூற்று – உலோச்சனார் |
| 6.15 | தோழி கூற்று – நக்கீரனார் |
| 6.16 | தோழி கூற்று – சேந்தங்கண்ணனார் |
| 6.17 | தோழி கூற்று – மதுரைக் கண்ணத்தனார் |
| 6.18 | தோழி கூற்று – அம்மூவனார் |
| 6.19 | தோழி கூற்று – மதுரை மருதன் இளநாகனார் |
| 6.20 | தலைவன் கூற்று – அம்மூவனார் |
| 6.21 | தோழி கூற்று – உலோச்சனார் |
| 6.22 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 6.23 | தொகுத்துக் காண்போம் |
| 6.24 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு – 7 | குறுந்தொகை – பாலைப் பாடல்கள் - 1 முதல் 50 வரை |
| 7.1 | முன்னுரை |
| 7.2 | குறிக்கோள்கள் |
| 7.3 | கண்டோர் கூற்று – பெரும்பதுமனார் |
| 7.4 | தலைவி கூற்று – மாமூலனார் |
| 7.5 | தலைவி கூற்று – ஓதலாந்தையார் |
| 7.6 | செவிலித்தாய் கூற்று – ஔவையார் |
| 7.7 | தோழி கூற்று – சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ |
| 7.8 | தலைவி கூற்று – கோப்பெருஞ்சோழன் |
| 7.9 | தோழி கூற்று – சேரமானெந்தை |
| 7.10 | தலைவி கூற்று – வெள்ளிவீதியார் |
| 7.11 | தலைவி கூற்று – ஔவையார் |
| 7.12 | தலைவி கூற்று – கச்சிப்பேட்டு நன்னாகையார் |
| 7.13 | தோழி கூற்று – சேர மன்னன் பாலை பாடிய பெருங்கடுங்கோ |
| 7.14 | தலைவி கூற்று – ஔவையார் |
| 7.15 | தலைவி கூற்று – அணிலாடு முன்றிலார் |
| 7.16 | தலைவி கூற்று – ஔவையார் |
| 7.17 | செவிலித்தாய் கூற்று – வெள்ளிவீதியார் |
| 7.18 | தோழி கூற்று – பூங்கணுத்திரையார் |
| 7.19 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 7.20 | தொகுத்துக் காண்போம் |
| 7.21 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு – 8 | குறுந்தொகை – பாலைப் பாடல்கள் - 51 முதல் 93 வரை |
| 8.1 | முன்னுரை |
| 8.2 | குறிக்கோள்கள் |
| 8.3 | தலைவன் கூற்று – சிறைக்குடி ஆந்தையார் |
| 8.4 | தோழி கூற்று – மோசிகீரனார் |




குறிப்புகள்

குறிப்புகள்


| | |
|---|---|
| 8.5 | தலைவன் கூற்று – உகாய்க்குடிக்கிழார் |
| 8.6 | தலைவி கூற்று – அள்;ர் நன்முல்லையார் |
| 8.7 | தலைவன் கூற்று – கருவூர் ஓதஞானியார் |
| 8.8 | தலைவி கூற்று – மதுரை மருதன் இளநாகனார் |
| 8.9 | தலைவி கூற்று – குடவாயில் கீரனக்கனார் |
| 8.10 | செவிலித்தாய் கூற்று – மோசிகீரனார் |
| 8.11 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 8.12 | தொகுத்துக் காண்போம் |
| 8.13 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| | பிரிவு – 3 : நற்றிணை, பரிபாடல் |
| கூறு – 9 | நற்றிணை – முதல் இருபது பாடல்கள் |
| 9.1 | முன்னுரை |
| 9.2 | குறிக்கோள்கள் |
| 9.3 | தலைவி கூற்று – குறிஞ்சித் திணை – கபிலர் |
| 9.4 | கண்டோர் கூற்று – பாலைத்திணை – பெரும்பதுமனார் |
| 9.5 | தலைவன் கூற்று – பாலைத்திணை - இளங்கீரனார் |
| 9.6 | தலைவி கூற்று – நெய்தல் திணை – அம்மூவனார் |
| 9.7 | தோழி கூற்று – குறிஞ்சித்திணை – கபிலர் |
| 9.8 | தலைவன்கூற்று – குறிஞ்சித் திணை – பரணர் |
| 9.9 | தோழி கூற்று – பாலைத் திணை – நல்வெள்ளியார் |
| 9.10 | தலைவன் கூற்று – குறிஞ்சித் திணை – பெயரில்லை |
| 9.11 | தலைவன் கூற்று–பாலைத் திணை–சேரன் பாலைப்பாடிய பெருங்கடுங்கோ |
| 9.12 | தோழி கூற்று – பாலைத் திணை – பெயரில்லை |
| 9.13 | தோழி கூற்று – நெய்தல் திணை – உலோச்சனார் |
| 9.14 | தோழி கூற்று – பாலைத் திணை – கயமனார் |
| 9.15 | தோழி கூற்று – குறிஞ்சித் திணை – கபிலர் |
| 9.16 | தலைவி கூற்று – பாலைத்திணை – மாமூலனார் |
| 9.17 | தோழி கூற்று – நெய்தல் திணை – பாண்டியன் அறிவுடை நம்பி |
| 9.18 | தலைவன் கூற்று – பாலைத்திணை – சிறைக்குடி ஆந்தையார் |
| 9.19 | தலைவி கூற்று – குறிஞ்சித் திணை – நொச்சி நியமங்கிழார் |
| 9.20 | தோழி கூற்று – பாலைத் திணை – பொய்கையார் |
| 9.21 | தோழி கூற்று – நெய்தல் திணை – நக்கண்ணையார் |
| 9.22 | தலைவி கூற்று – மருதம் திணை - ஓரம்போகியார் |
| 9.23 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 9.24 | தொகுத்துக் காண்போம் |
| 9.25 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு – 10 | நற்றிணை – அடுத்த இருபது பாடல்கள் |
| 10.1 | முன்னுரை |

| | |
|---|---|
| 10.2 | குறிக்கோள்கள் |
| 10.3 | தலைவன் கூற்று – முல்லை – மருதன் இளநாகனார் |
| 10.4 | தோழி கூற்று – குறிஞ்சி – பெயரில்லை |
| 10.5 | தோழி கூற்று – குறிஞ்சி – கணக்காயனார் |
| 10.6 | தலைவி கூற்று – பாலை – பெயரில்லை |
| 10.7 | தோழி கூற்று – குறிஞ்சி – பேரிசாத்தனார் |
| 10.8 | தோழி கூற்று – பாலை – சாத்தந்தையார் |
| 10.9 | தோழி கூற்று – நெய்தல் - குடவாயிற் கீரத்தனார் |
| 10.10 | தோழி கூற்று – பாலை – முதுகூற்றனார் |
| 10.11 | நற்றாய் கூற்று – பாலை – பூதனார் |
| 10.12 | தோழி கூற்று – மருதம் - கொற்றனார் |
| 10.13 | தலைவி கூற்று – நெய்தல் - நக்கீரனார் |
| 10.14 | தோழி கூற்று – குறிஞ்சி – கபிலர் |
| 10.15 | தோழி கூற்று – பாலை - இளவேட்டனார் |
| 10.16 | தோழி கூற்று – குறிஞ்சி – பிரமசாரி |
| 10.17 | தோழி கூற்று – நெய்தல் - அம்மூவனார் |
| 10.18 | தோழி கூற்று – குறிஞ்சி – சீத்தலைச் சாத்தனார் |
| 10.19 | தோழி கூற்று – பாலை – பேரி சாத்தனார் |
| 10.20 | தலைவி கூற்று – நெய்தல் - உலோச்சனார் |
| 10.21 | தலைவன் கூற்று – குறிஞ்சி – மருதன் இளநாகனார் |
| 10.22 | பரத்தை கூற்று – மருதம் - கோண்மா நெடுங்கோட்டனார் |
| 10.23 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 10.24 | தொகுத்துக் காண்போம் |
| 10.25 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு – 11 | பரிபாடல் - வையைப் பற்றிய பாடல்கள் |
| 11.1 | முன்னுரை |
| 11.2 | குறிக்கோள்கள் |
| 11.3 | பாடியவர் - நல்லந்துவனார், பண் - நல்லச்சுதனார் |
| 11.4 | பாடியவர் - மையோடக் கோவனார், பண் - பித்தாமத்ர் |
| 11.5 | பாடியவர் - கரும்பிள்ளை பூதனார், பண் - மருதன் நல்லச்சுதனார் |
| 11.6 | பாடியவர் - நல்லந்துவனார், பண் - நாகனார் |
| 11.7 | பாடியவர் - நல்வழுத்தியார், பண் நன்னாகனார் |
| 11.8 | பாடியவர் - நல்லழிசியார், பண் - நல்லச்சுதனார் |
| 11.9 | பாடியவர் - நல்லந்துவனார், பண் - நல்லச்சுதனார் |
| 11.10 | பாடியவர் மற்றும் பண் அமைத்தவர் பெயர் அறியப்படவில்லை |
| 11.11 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 11.12 | தொகுத்துக் காண்போம் |
| 11.13 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| | பிரிவு – 4 : புறநானூறு, பதிற்றுப்பத்து, ஆற்றுப்படை |
| கூறு – 12 | புறநானூறு – 151 முதல் 200 வரை |

| | |
|---|---|
| 12.1 | முன்னுரை |
| 12.2 | குறிக்கோள்கள் |
| 12.3 | பாடல் : பெருந்தலைச் சாத்தனார், பாடப்பட்டோன் : இளவிச்சிக்கோ |
| 12.4 | பாடல் : வன்பரணர், பாடப்பட்டோன் : வல்வில் ஓரி |
| 12.5 | பாடல் : வன்ரணர், பாடப்பட்டோன் : வல்வில் ஓரி |
| 12.6 | பாடல்: மோசிகீரனார், பாடப்பட்டோன் : கொண்கானங்கிழான் |
| 12.7 | பாடல் : மோசிகீரனார், பாடப்பட்டோன் : கொண்கானங்கிழான் |
| 12.8 | பாடல் : மோசிகீரனார், பாடப்பட்டோன் : கொண்கானங்கிழான் |
| 12.9 | பாடல் : குறமகள் இளவெயினி, பாடப்பட்டோன் : ஏறைக்கோன் |
| 12.10 | பாடல் : பெருஞ்சித்திரனார், பாடப்பட்டோன் : குமணன் |
| 12.11 | பாடல் : பெருஞ்சித்திரனார், பாடப்பட்டோன் : குமணன் |
| 12.12 | பாடல் : பெருஞ்சித்திரனார், பாடப்பட்டோன் : குமணன் |
| 12.13 | பாடல் : பெருஞ்சித்திரனார், பாடப்பட்டோன் : குமணன் |
| 12.14 | பாடல் : பெருஞ்சித்திரனார், பாடப்பட்டோன் : இளவெளிமான் |
| 12.15 | பாடல் : பெருஞ்சித்திரனார், பாடப்பட்டோன் : புலவரின் மனைவி |
| 12.16 | பாடல் : பெருந்தலைச் சாத்தனார், பாடப்பட்டோன் : குமணன் |
| 12.17 | பாடல் : பெருந்தலைச் சாத்தனார், பாடப்பட்டோன் : குமணன் |
| 12.18 | பாடல் : ஆவூர் மூலங்கிழார், பாடப்பட்டோன்-கௌணியன் விண்ணந்தாயன் |
| 12.19 | பாடல் : மதுரை குமரனார், பாடப்பட்டோன் : ஏனாதி திருக்கிள்ளி |
| 12.20 | பாடல்-கருவூர்க்கதப்பிள்ளைச் சாத்தனார், பாடப்பட்டோன்-பிட்டங்கொற்றன். |
| 12.21 | பாடல் : காரிக்கண்ணனார், பாடப்பட்டோன் : பிட்டங்கொற்றன் |
| 12.22 | பாடல் : மருத்துவன் தாமோதரனார், பாடப்பட்டோன் - பிட்ங்கொற்றன் |
| 12.23 | பாடல் : காரிக்கண்ணனார், பாடப்பட்டோன் : பிட்டங்கொற்றன் |
| 12.24 | பாடல் : வடம கண்ணக்கன் தாமோதரன், பாடப்பட்டோன்-பிட்டங்கொற்றன் |
| 12.25 | பாடல் : கிள்ளிவளவன், பாடப்பட்டோன் : சிறுகுடி கிழான் பண்ணன் |
| 12.26 | பாடல் : நப்பசலையார், பாடப்பட்டோன்-சோழிய வேணாதி திருக்கண்ணன் |
| 12.27 | பாடல் : கள்ளில் ஆத்திரையனார், பாடப்பட்டோன் : ஆதனுங்கன் |
| 12.28 | பாடல்-புறத்திணை நன்னாகனார், பாடப்பட்டோன் : நல்லியங்கோடன் |
| 12.29 | பாடல் : ஆவூர் மூலங்கிலார், பாடப்பட்டோன் : மல்லிகிழான் காரியாதி |
| 12.30 | பாடல் : ஆவூர் மூலங்கிழார், பாடப்பட்டோன் : கீரஞ்சாத்தன் |
| 12.31 | பாடல் : வடநெடுந்தத்தனார், பாடப்பட்டோன் : நாலைகிழான் நாகன் |

| | |
|---|---|
| 12.32 | பாடல் : மாடலன் மதுரைக் குமரனார், பாடப்பட்டோன் : தோயன் மாறன் |
| 12.33 | பாடல் : சிறுகருந்தும்பியார், பாடப்பட்டோன் : வல்லார்கிழான் பண்ணன் |
| 12.34 | பாடல் : கடலுள் மாய்ந்தி இளம்பெருவழுதி |
| 12.35 | பாடல் : ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் |
| 12.36 | பாடல் : பிசிராந்தையார், பாடப்பட்டோன் : பாண்டியன் அறிவுடைநம்பி |
| 12.37 | பாடல் : தொண்டைமான் இளந்திரையன், |
| 12.38 | பாடல் : மோசிகீரனார் |
| 12.39 | பாடல் : ஔவையார் |
| 12.40 | பாடல் : பாண்டியன் அறிவுடை நம்பி |
| 12.41 | பாடல் : நக்கீரனார் |
| 12.42 | பாடல் : சோழன் நல்லுருத்திரன் |
| 12.43 | பாடல் : பிசிராந்தையார் |
| 12.44 | பாடல் : கணியன் பூங்குன்றனார் |
| 12.45 | பாடல் : ஓர் ஏர் உழவனார் |
| 12.46 | பாடல் : படுக்கை நன்கணியர் |
| 12.47 | பாடல் : நரிவெரூஉத்தலையார் |
| 12.48 | பாடல் : ஆவூர் மூலங்கிழார், பாடப்பட்டோன் : நன்மாறன் |
| 12.49 | பாடல் : மதுரைக் குமரனார், பாடப்பட்டோன் : பெருந்திருமாவளவன் |
| 12.50 | பாடல் : வடம வண்ணக்கன் பேரிசாத்தனார், பாடப்பட்டோன் - நன்மாறன் |
| 12.51 | பாடல் : பெரும்பதுமனார் |
| 12.52 | பாடல் : கபிலர், பாடப்பட்டோன் : விச்சிக்கோ |
| 12.53 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 12.54 | தொகுத்துக் காண்போம் |
| 12.55 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு – 13 | பதிற்றுப்பத்து – ஐந்தாம் பத்து - பாடியவர் : கபிலர் |
| 13.1 | முன்னுரை |
| 13.2 | குறிக்கோள்கள் |
| 13.3 | சுடர் வீ வேங்கை |
| 13.4 | தசும்பு துளங்கு இருக்கை |
| 13.5 | ஏறா ஏணி |
| 13.6 | நோய் தபு நோன் தொடை |
| 13.7 | ஊண் துவை அடிசில் |
| 13.8 | கரைவாய்ப் பருதி |
| 13.9 | நன்னுதல் விறலியர் |
| 13.10 | பேர் எழில் வாழ்க்கை |
| 13.11 | செங்கை மறவர் |
| 13.12 | வெருவரு புனல் தார் |
| 13.13 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 13.14 | தொகுத்துக் காண்போம் |

குறிப்புகள்


| | |
|---|---|
| 13.15 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |
| கூறு – 14 | சிறுபாணாற்றுப்படை – பாடியவர் : நல்லூர் நத்தத்தனார் |
| 14.1 | முன்னுரை |
| 14.2 | குறிக்கோள்கள் |
| 14.3 | நிலமகளின் தோற்றம் |
| 14.4 | இளைப்பாறும் பாணன் |
| 14.5 | விறலியரின் அழகு |
| 14.6 | விறலியரின் காலைத் தடவிவிடும் இளையர்கள் |
| 14.7 | பரிசில் பெற்ற பாணன் சந்தித்தல் |
| 14.8 | சேரநாட்டின் வளம் |
| 14.9 | பாண்டிய நாட்டின் வளம் |
| 14.10 | சோழ நாட்டின் வளம் |
| 14.11 | கடையெழு வள்ளல்களின் சிறப்பு |
| 14.12 | நல்லியக்கோடனின் ஈகைச் சிறப்பு |
| 14.13 | நல்லியக்கோடனைக் காணுவதற்கு முன்னும் பின்னும் |
| 14.14 | பாணனின் ஆற்றுப்படுத்தும் பண்பு |
| 14.15 | எயிற்பட்டினத்தின் வழியும் விருந்தும் |
| 14.16 | வேலூரின் சிறப்பும் விருந்தும் |
| 14.17 | ஆமூரின் வளமும் விருந்தும் |
| 14.18 | நல்லியக்கோடனின் ஊரின் தூரம் |
| 14.19 | நல்லியக்கோடனின் அரண்மனை |
| 14.20 | மன்னனைச் சான்றோர் புகழ்தல் |
| 14.21 | மன்னனின் குணம் |
| 14.22 | ஆளுமைப் பண்பு |
| 14.23 | பரிசு வழங்கும் சிறப்பு |
| 14.24 | நல்லியக்கோடனின் அவை |
| 14.25 | மன்னனின் விருந்தோம்பல் |
| 14.26 | மன்னன் இரவலருக்கு விருந்தோம்பல் செய்யும் முறை |
| 14.27 | நல்லியக்கோடன் பரிசு வழங்கல் |
| 14.28 | நல்லியக்கோடனை அடைந்தால் வளம்பெறுதல் உறுதி |
| 14.29 | முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் |
| 14.30 | தொகுத்துக் காண்போம் |
| 14.31 | மேலும் பயில்வதற்கான நூல்கள் |

# கூறு – 1 : குறிஞ்சிப் பாட்டு

சங்க இலக்கியம்

## 1.1.முன்னுரை :

தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அகம் புறம் என்னும் இரு திணைகளாக அமைகின்றன. அகம் இல்வாழ்வை அதாவது, தலைவன் தலைவியின் ஒழுகலாறுகளையும் புறம் பண்டைத் தமிழரின் செம்மாந்த போர் வாழ்வையும் சமூக வாழ்வையும் எடுத்துக்காட்டுகின்றன. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அக இலக்கியங்களில் யாருடைய பெயரையும் சுட்டிச் சொல்வது மரபல்ல. அவ்வாறு சுட்டிக் கூறினால் அவ்விலக்கியம் புறம் என்று கொள்ளப்படும். சங்க இலக்கியத் தொகுப்புகளுள் எட்டுத் தொகை உதிரிப் பாடல்களாகவும் பத்துப்பாட்டு இலக்கியங்கள் நீண்ட அடிவரையறையைக் கொண்ட இலக்கியங்களாகவும் அமைந்திருக்கின்றன. பத்துப்பாட்டு நூல்களுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்னும் மூன்றும் அக இலக்கியங்களாகும். நெடுநல்வாடையும் மதுரைக்காஞ்சியும் புற இலக்கியங்களாகவும் மற்றவை ஆற்றுப்படை இலக்கியங்களாகவும் இருக்கின்றன.

குறிப்புகள்

பத்துப்பாட்டு இலக்கிய நூல்களுள் அகம் சார்ந்தது குறிஞ்சிப்பாட்டு. இது கபிலரால் இயற்றப்பட்டது. ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிப்பதற்காக இயற்றப்பட்டது. இருநூற்று அறுபத்தொரு அடிகளை உடைய ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. திணை : குறிஞ்சி, துறை : அறத்தொடு நிற்றல். இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் இன்பம் தந்து செல்லா அவன் நினைவில் உடல் மெலிந்து வாடும் தலைவியின் நிலைகண்டு செவிலித்தாய் வெறியாடல் நடத்த முயன்ற போது தோழி, இவளுக்கு உற்ற நோய் இது என்று தலைவியின் வழி அவள் கூறியபடி தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள காதலைச் செவிலியிடம் எடுத்துக் கூறும் முறைமையில் அறத்தொடு நிற்றல் துறையில் இலக்கியம் சிறந்து நிற்கின்றது.

ஒருவருடைய மனநிலையைப் புரிந்துகொண்டு ஒரு செய்தியை எவ்வாறு வெளிப்படுத்துவது என்னும் உளவியல் சார்ந்த சிந்தனையினைக் குறிஞ்சிப்பாட்டு கொண்டிருக்கிறது. தோழி ஒரு நாடகம் போலத் தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள உறவைச் சுவைப்படச் செவிலித் தாயிடம் எடுத்துக்க கூறும் முறை போற்றதற்கு உரியதாகும்.

## 1.2.குறிக்கோள்கள் :

தலைவர்கள் குணம் மாறுபட்டுத் தீயவழி சென்றால் மீண்டும் என்னதான் முயன்றாலும் அக்குணத்தை மீண்டும் பெற இயலாது என்ற உண்மையை உணர்த்தக் கூடியதாக இருக்கின்றது குறிஞ்சிப்பாட்டு. அதனையும்

குறிப்புகள்

பண்டையக்கால மக்களின் குறிஞ்சி நிலத்தின் வாழ்க்கையை முறையினை மாணவர்களுக்கு உணர்த்துவதே இப்பகுதியின் நோக்கமாகும்.

## 1.3. துறை : அறத்தொடு நிற்றல்- திணை : குறிஞ்சித் திணை

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! ஒள்நுதல்,
ஒலி மென்கூந்தல், என்தோழி மேனி
விறல் இழை நெகிழ்த்த வீவு அருங்கடு நோய்
அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்,
பரவியும், தொழுதும், விரவு மலர்தூயும்
வேறுபல் உருவின் கடவுள் பேணி,
நறையும் விரையும் ஓச்சியும், அலவுற்று,
எய்யா மையலை நீயும் வருந்துதி

தாயே! நீ வாழ்வாயாக! நான் கூறுவதை விருப்பமுடன் கேட்க வேண்டும். தாயே! ஒளிமிக்க நெற்றியினையும் நீண்டு செறிந்து வளர்ந்த மென்மையான தலை முடியினையும் உடைய என் தோழியின் உடலில் அணிந்துள்ள சிறப்பான அணிகலன்கள் நெகிழ்ச்சி அடைந்து விழுந்தது கண்டு இவள் நோயுற்றிருக்கிறாள் என்று நினைத்துப் பெரிய ஊரில் உள்ள குறி கூறுவதில் வல்லவர்களையும், கட்டுவிசிசியையும், வேலனையும் அணுகிச்சென்று என் மகளின் உடல் நோய்க்கான காரணத்தைக் கூறுங்கள் என்று கூறினாய். அவர்கள் இது தெய்வத்தால் ஏற்பட்டது என்று கூறியதும் இறைவனைப் போற்றி வாழ்த்தியும் வணங்கியும் பலவிதமான மலர்களைத் தூவி வழிபட்டும் நறுமணப் பொருள்களைக் காணிக்கையாகச் செலுத்தியும் அவளுடைய நோய் நீங்காத காரணத்தால் வருத்தமுடன் இருக்கிறாய்.

## 1.4.தலைவி தோழியிடம் ரகசியம் பகிரல் :

நல்கவின் தொலையவும், நறுந்தோள் நெகிழவும்,
புள்பிறர் அறியவும், புலம்பு வந்து அலைப்பவும்,
உள் சுரந்து உறையும் உய்யா அரும் படர்
செப்பல் வன்மையின் செறித்து, யான் கடவலின்.

என் தோழியின் அழகிய உடல் அழகு கெடவும், நறுமணம் மிகுந்த தோள்கள் மெலியவும், அவளுடைய வளையல்கள் கழன்று விழுவதைப் பிறர் பார்க்கவும், தனிமை எண்ணம் தோன்றி அவளை அவ்வப்போது துன்பம் கொள்ளச் செய்யுவுமாகிய இவை எல்லாவற்றிற்கும் காரணமாக இருந்து இவள் உயிரைக் கொல்லச் செய்து கொண்டிருக்கும் நோயினை

என்னுடைய சிறந்த சொல் வன்மையினால் அவளின் மனத்தின் வழி நின்று அவள் கூறியதுபோல நான் கூறுகின்றேன்.

குறிப்புகள்

## 1.5.நற்குணம் விலகினால் மீண்டும் திரும்பாது :

முத்தினும் மணியினும் பொன்னினும், அத்துணை,
நேர்வரும் குரைய கலம் கெடின், புணரும்,
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்,
மாசு அறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல்
ஆசு அறு காட்சி ஐயர்க்கும், அந்நிலை,
எளிய என்னார், தொல் மருங்கு அறிஞர்

முத்து, மாணிக்கக் கற்கள், பொன் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டிய முறையில் கோர்த்துச் செய்யப்பட்ட அணிகலன் ஏதேனும் ஒரு காரணத்தால் நூல் அறுந்து போனால் அதனை மீண்டும் சிறந்த தொழில் நுட்பக் கலைஞரைக் கொண்டு சீர்படுத்திக் கொள்ளலாம். முன்புபோல அழகுடைய அணிகலனாய் ஆக்கிக் கொள்ளலாம். ஆனால் சாந்றாண்மையும், பெருமையும், நல்லொழுக்கமும் ஏதேனும் ஒரு காரணத்தால் வாழ்நாளில் கெட்டுவிடுமானால் அதனால் ஏற்பட்ட குற்றத்தை நீக்கி மீண்டும் அவ்வுயர்வினைப் பெறுதல் மன மயக்கங்களை நீக்கித் துறவு வழி நிற்கும் தலைமைப் பண்புடைய முனிவர்களுக்கும் இயலாத செயலாகும் என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

## 1.6.தலைவி தன் தாயிடம் காதலைத் தெரிவிக்க நினைத்தல் :

மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப,
இருவேம் ஆய்ந்த மன்றல் இது என,
நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ?
ஆற்றின் வாரார் ஆயினும், ஆற்ற
ஏனை உலகத்தும் இயைவதால், நமக்கு என

நீங்கள் பொருத்தமானவருக்கு மணம் செய்து கொடுப்போம் எனத் தலைவி மீது கொண்டிருந்த காதலும் எம்முடைய மடமைக் குணமும் நீங்கிச் செல்ல நீண்ட தேரினை உடையவரான தந்தையின் கடப்பதற்கு அரிதான காவலைக் கடந்து சென்று நானும் தலைவனும் செய்துகொண்ட காதல் மணம் இது. நாமே இதனைக் தாய்க்குக் கூறினால் புகழ் அல்லாமல் பழியும் வரும். அவ்வாறு கூறிய பின்பு அவர்கள் நம் வழிக்கு வராவிட்டாலும் எம்முடைய உயிர் நீங்கும் காலம் வரை காத்திருப்போம். அவ்வாறு காத்திருந்தால் இப்பிறவியில் இல்லை எனினும் அடுத்துவரும் பிறிவியிலாவது அவனோடு சேரும் காலம் வருவது உறுதி என்று கூறி.

## 1.7.தலைவியின் காதல் நோய் :

மான்அமர் நோக்கம் கலங்கி, கையற்று,
ஆனாச்சிறுமையள் இவளும் தேம்பும்

மான்கள் விரும்புவதற்குக் காரணமான அழகினை உடைய அவள் விழிகள் கலங்கி நிற்கவும் ஏதும் செய்ய இயலாதவளாகப் பொறுக்க இயலாத காதல் நோயுடன் மெலிந்து வாடுகின்றாள்.

## 1.8.தோழியின் நிலை :

இகல் மீக்கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல,
இருபேர் அச்சமோடு யானும் ஆற்றலென்

பகைகொண்டு போருக்குத் தயாராக இருக்கும் இரண்டு மன்னர்களுக்கு இடையே தூது சென்று அவர்களின் பகையை நீக்கும் சான்றோர்களைப் போல, தாயே! உனக்கும் காதல் நோயால் மெலிந்து கொண்டிருக்கும் தலைவியின் காதலுக்கும் இடையே பெரிதும் அச்சம் கொண்டு நானும் வருந்தியிருக்கிறேன்.

## 1.9.குடும்பத்தை ஒத்திட்டுப் பார்க்காத கூடல் மணம் :

கொடுப்பின் நன்கு உடைமையும், குடிநிரல் உடைமையும்,
வண்ணமும், துணையும், பொரீஇ எண்ணாது,
எமியேம் துணிந்த ஏமம் சால் அருவினை
நிகழ்ந்த வண்ணம் நீ நனி உணரச்
செப்பல் ஆன்றிசின் சினவாதீமோ!

தலைவன் ஒருவனுக்குத் தங்கள் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க நினைப்பவர்கள் திருமணம் செய்து கொடுத்தால் நன்மை இருக்குமா என்பதை எல்லாம் நன்றாக ஆராய்ந்து அறிந்து தலைவனின் குணநலன்களையும் அவனுடைய உறவினர்களின் குணம் மற்றும் தகுதிகளையும் தலைவியின் குணநலன்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். உங்கள் துணை இல்லாமல் நாங்களாகவே ஏற்றுக் கொண்ட இக்கறவுத் திருமணம் முன்பே நிகழ்ந்து முடிந்தமையை நீ நன்றாக உணர்ந்து கொள்ளும் பொருட்டு நான் கூறுகிறேன். அதனைக் கேட்டு நீ என்மேல் கோபம் கொள்ளக் கூடாது.

## 1.10.தினைப்புனம் காத்தல் :

“நெல்கொள் நெடு வெதிர்க்கு அணந்த யானை,
முத்துஆர் மருப்பின் இறங்குகை கடுப்ப,
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்

குறிப்புகள்

நல்கோள் சிறு திணைப் படு புள் ஓப்பி,
எல்பட வருதியர்'' என, நீ விடுத்தலின்,

நெல்லைத் தன்னிடத்தே கொண்டு விளங்கும் உயர்ந்து வளர்ந்த மூங்கிலைத் தின்பதற்கு மேலே பார்த்தவாறு நின்ற ஆண்யானை அவ்வேதனையைத் தீர்க்கும் பொருட்டு முத்துகள் நிறைந்திருக்கும் தன் கொம்பின் வழியாக இறங்கும் வளைவான தும்பிக்கையினைப் போன்று வறைந்த பெரிய கதிர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற தினைப் பயிரில் வந்து தினைக் கதிர் கவர்ந்து செல்லும் பறவைகளை விரட்டிவிட்டுச் சூரியன் மறையும் பொழுதில் வருக என்று நீ கூறியதால் நாங்களும் தினைப்புனம் சென்று…

## 1.11.தினைப்புனக் காவல் : பறவை ஓட்டும் இசைக் கருவிகள்

கலிகெழு மரமிசைச் சேணோன் இழைத்த
புலி அஞ்சு இதணம் ஏறி, அவண,
சாரல் சூரல் தகை பெற வலந்த,
தழலும் தட்டையும் குளிரும், பிறவும்,
கிளி கடி மரபின, ஊழ் ஊழ் வாங்கி,
உரவுக் கதிர்தெறூஉம் உருப்பு அவிர் அமயத்து

பறவைகளின் ஒலி மிகுந்து ஒலிக்கும் மரத்தின் உச்சியில் மலை நாடன் செய்ததும் புலியும் அச்சம் கொள்வதற்குக் காரணமாகிய பரணில் ஏறி அமர்ந்து கொண்டு அந்த மலைச் சரிவுகளில் உள்ள குரல் பிரம்பினால் பின்னிய தழல், தட்டை, குளிர் ஆகிய கருவிகளையும் இவை போன்ற இன்ன பலவற்றையும் கொண்டு கிளிகளை விரட்டும் தொழிலைச் செம்மையாகச் செய்து கொண்டிருந்த சூரியன் காயும் மதியப் பொழுதில்,

## 1.12.பெருமழை :

விசும்பு ஆடு பறவை வீழ் பதிப்படர,
நிறை இரும் பௌவம் குறைபட முகந்து கொண்டு,
அகல்இரு வானத்து வீசு வளி கலாவலின்,
முரசு அதிர்ந்தன்ன இன்குரல் ஏற்றொடு,
நிரைசெலல் நிவப்பின் கொண்மூ மயங்கி,
இன் இசை முரசின், சுடர்ப் பணூண், சேஎய்
ஒன்னார்க்கு ஏந்திய இலங்கு இலை எஃகின்,
மின்மயங்கு கருவிய கல்மிசைப் பொழிந்தென,

வானில் பறந்து கொண்டிருந்த பறவைகள் எல்லாம் தாங்கள் விருப்பமுடன் தங்கும் கூட்டிற்குச் சென்று அடங்குமாறு நீர் நிறைந்திருக்கின்ற கருமையான கடல் தன் அளவில் குறையுமாறு நீரைக் கவர்ந்து கொண்டு பரந்த ஆகாயத்தில் பரவி, காற்று வீசுவதனால் முரசு போன்று இனிய ஓசையுடன் இடி இடித்து வரிசையாகச் செல்லும் இயல்புடைய மேகம் இனிமையான ஓசை உடைய முரசினையும் தன் பகைவர்களைக் கொல்லும் பொருட்டு முருகப் பெருமான் ஏந்திய வேலின் ஒளியினையும் போல இடி இடித்து மின்னல் மின்னி மலையின்மேல் மழை பொழிந்தது.

## 1.13.அருவியில் நீராடல் :

அண்ணல் நெடுங் கோட்டு இழிதரு தெள்நீர்,
அவிர் துகில் புரையும், அவ் வெள் அருவி,
தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடி,
பளிங்கு சொரிவு அன்ன பாய் சுனை குடைவுழி,
நளிபடு சிலம்பில், பாய் அம்பு அடி,
பொன் எறி மணியின்சிறு புறம் தாழ்ந்த எம்
பின் இருங் கூந்தல் பிழிவனம் துவரி,
உள்ளகம் சிவந்த கண்ணேம்,

தலைவனுடைய மலை நாட்டு மலையின் உச்சியில் இருந்து குதித்துவரும் தெளிவான நீரினை உடைய வெண்மையான துகில் போன்ற வெண்மை நிறமான அருவியில் நீராடுவதில் நீங்காத விருப்பம் கொண்டு ஓய்வு இல்லாமல் விளையாடினோம். பளிங்கினைக் கரைத்து ஊற்றியது போன்று நீர் நிறைந்த சுனையில் குடைந்து குடைந்து ஆடும்பொழுது எங்கள் மனம் விரும்பியபடி பாடிக்கொண்டிருந்தோம். தங்கத்தில் அழுத்தப்பட்ட நீல நிற வயிரக்கல் போன்ற சிறிய முதுகில் தாழ்ந்து கிடந்த எம்முடைய பின்னி முடிக்கப்பட்ட கூந்தலை ஈரம் காயப் பிழிந்து காய வைத்தோம். தொடர்ந்து நீராடியதனால் செம்மை நிறமான கண்களை உடையவர்கள் ஆனோம்.

## 1.14.குறிஞ்சித் திணைப் பூக்கள் : தொண்ணூற்றொன்பது வகை மலர்கள்

............ வள் இதழ்
ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண் கயக்குவளை, குறிஞ்சி. வெட்சி,
செங் கொடுவேரி, தேமா, மணிச்சிகை,
உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ், கூவிளம்,

எரி புரை எறுழம், சுள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான்பூங் குடசம்,
எருவை, செருவிளை, மணிப் பூங் கருவிளை,
பயினி, வானி, பல் இணர்க் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல்இணர்க் காயா,
விரி மலர் ஆவிரை, வேரல், சூரல்,
குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி,
குருகிலை, மருதம், விரி பூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங் கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந் தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடி கமழ் கலி மா,
தில்லை, பாலை, கல் இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமாரோடம்,
வாழை, வள்ளி, நீள் நறு நெய்தல்,
தாழை, தளவம், முள் தாள் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந் தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறுசெங்குரலி,
கோடல், கைதை, கொங்கு முதிர்நறு வழை,
காஞ்சி, மணிக்குரைலக் கள்கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல் பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்கு இணர்க் கொன்றை,
அடும்பு, அமர்ஆத்தி, நெடுங் கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல்பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்துவாரம்,
தும்பை, துழாஅய், சுடர்ப் பூந் தோன்றி,
நந்தி, நறவம், நறும் புன்னாகம்,
பாரம், பீரம், பைங் குருக்கத்தி,
ஆரம், காழ்வை, கடிஇரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மாஇருங் குருந்தும், வேங்கையும், பிறவும்,
அரக்கு விரித்தன்னபரு ஏர்அம் புழகுகுடன்,
மால், அங்கு, உடைய மலிவனம் மறுகி,

பின்பு, பெரிய இதழ்களை உடைய ஒளிமிக்க சிவந்த கோடல் பூ, ஆம்பல் பூ, அனிச்ச மலர், குளிர்ச்சி நிறைந்த குளத்தில் மலர்ந்த செங்கழுநீர்ப் பூ, குறிஞ்சிப்பூ, வெட்சிப்பூ, செங்கோட்டு வேரிப் பூ, தேமாம்பூ,

செம்மை நிறமுடைய செம்மணிப்பூ, விரிந்த பங்கொத்தினை உடைய மூங்கில் பூ, வில்வம் பூ நெருப்பின் நிறத்தை உடைய எறுழம் பூ மராமரப் பூ, கூவிரம் பூ, வடவனம் பூ, வாகைப் பூ, வெண்ணிறமான வெப்பாலைப் பூ, பஞசாய்க் கோரைலப் பூ, வெண் காக்கணம் பூ, நீல வயிரக்கல் போன்று விளங்கும் கருவிளம் பூ (விளாம்பூ), பயினிப்பூ, வானிப்பூ, பல இதழ்களை உடைய குரவம்பூ, பச்சை இலைப்பு, மகிழம்பு, பல கொத்துகளை உடைய காயாம்பூ, விரிந்த பூக்களைஉடைய ஆவாரம் பூ சிறுமூங்கில் பூ, சூரைப் பூ, சிறு பூளைப் பூ, குன்றிப் பூ, முருக்ம் பூ, மருதம் பூ, விரிந்த இதழ்களை உடைய கோங்கம் பூ, மஞ்சாடிப்பூ, மஞ்சாடி மரத்தின் பூ, தேன் மணக்கும் பாதிரிப்பூ, செருந்திப்பூ, புனலிபபூ, குளிர்ந்த சண்பகப்பூ, மணம் வீசும் கரந்தைப்பூ, காட்டு மல்லிகைப்பூ, மணம் வீசும் மாம்பு, தில்லைப்பூ, பாலைப்பூ, கல்லில் படர்ந்த முல்லைப்பூ, கஞ்சங் குல்லைப்பூ, பிடவம் பூ, செங்கருங்காலிப்பூ, வாழைப் பூ, வள்ளிப் பூ, நீண்ட மணமுடைய நெய்தல் பூ, தென்னம்பாளைப் பூ, செம்முல்லைப்பூ, முள் பொருந்திய கொடியினை உடைய தாமரைப்பூ, ஞாழல் பூ, மல்லைகைப்பு(மௌவல்), குளிர்ச்சியான கொகுடிப்பூ, பவழ மல்லிகைப் பூ, சாமந்திப்பூ, கருந்தாமக் கொடிப் பூ, வெண்கோடல்பூ, தாழம்பூ, சுரப்புன்னை பூ, காஞ்சிப்பூ, கருங்குவளைப் பூ, பாங்கர்ப் பூ, மரவம் பூ, கொத்தாக மலரும் தணக்கம் பூ, இண்டம் பூ, இலவம் பூ, கொன்றைப் பூ, அடம்பம் பூ, அத்திப் பூ, நீண்ட கொடியுடைய அவரைப் பு, பகன்றைப் பூ, பலாசம் பூ, அசோகம் பூங்கொத்து, வஞ்சிப் பூ, பிச்சிப் பூ, கருநொச்சிப் பூ, தும்பைப் பூ, துளசவிப் பூ, விளக்கின் சுடர் போன்ற தோன்றிப் பூ, நந்தியாவட்டம் பூ, நறைக்கொடி பூ, புன்னாகம் பூ, பருத்திப் பூ, பீருக்கம் பூ, குருக்கத்திப் பூ, சந்தனப் பூ, அகில் பூ, புன்னைப் பூ, நாரத்தம் பூ, நாகப்பூ, இருள்வாசிப் பூ, குருந்தம்பூ, வேங்கைப் பூ என்னும் பூக்களையும் இவை தவிரப் பிற பூக்களையும் சாதிலிங்கம் பரப்பியது போன்று விளங்கும் புழகுவிப் பூவுடன் இம்மலர்களின் மீதெல்லாம் ஆசைகொண்டு அலைந்து திரிந்து பறித்து வந்து..

## 1.15.அசோகின் அடியில் அமர்ந்திருந்தோம் :

வான் கண்கழீஇய அகல் அறைக் குவைஇ,
புள்ஆர் இயத்த விலங்கு மலைச் சிலம்பின்,
வள் உயிர்த் தெள் விளி இடை இடைப் பயிற்றி,
கிள்ளை ஓப்பியும், கிளைஇதழ் பறியா,
பை விரி அல்குல் கொய்தழை தைஇ,
பல்வேறு உருவின் வனப்பு அமை கோதை, எம்

மெல்இரு முச்சி, கவின்பெறக் கட்டி,
எரிஅவிர் உருவின் அம் குழைச் செயலைத்
தாதுபடு தண்நிழல் இருந்தனம் ஆக

குறிப்புகள்

மழை பெய்து தூய்மையான அகலமான பாறையில் அம்மலர்களைக் குவித்து வைத்து, பலவாகிய பறவைகளின் இன்னிசையுடன் மலைப்பக்கம் உள்ள தினைப்புனத்தில் செறிவான சொற்களை இடையிடையே பேசிக்கொண்டு கிளிகளை விரட்டியபடி பூக்களின் புற இதழ்களை நீக்கிவிட்டுப் பாம்பின் படம் போன்றிருக்கும் அகன்ற அல்குலுக்கும் மார்புக்கும் பறித்துக் கொண்டு வந்த தழைகளைக் கட்டி ஆடையாக உடுத்திக் கொண்டோம். பல்வேறு நிற மலர்களால் தொடுக்கப்பட்ட மலர் மாலைகளைத் தலையில் முடிந்து கொண்டு இளம்தளிர்களை உடைய அசோக மரத்தில் மகரந்தம் சிந்துகின்ற குளிர்ச்சியான நிழலில் அமர்ந்திருந்தோம்.

## 1.16.தலைவனின் வருகையும், அவனின் அழகும் :

எண்ணெய் நீவிய, சுரி வளர் நறுங் காழ்,
தண்நறுங் தகரம் கமழ மண்ணி,
ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா,
காழ் அகில்அம் புகை கொளீஇ, யாழ் இசை
அணி மிகு வரி மிஞிறு ஆர்ப்ப, தேம் கலந்து
மணிநிறம் கொண்ட மா இருங் குஞ்சியின்,
மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும்
வண்ண வண்ணத்த மலர் ஆய்பு விரைஇய
தண்நறுந் தொடையல், வெண்போழ்க் கண்ணி,
நலம்பெறு சென்னி, நாம் உற மிலைச்சி,

பலமுறை எண்ணெ் பூசப்பட்டதால் நன்றாக வளர்ந்து சுருண்டு கருமை நிறமோடு விளங்கும். முடியில் குளிர்ச்சியான மயிர்ச் சந்தனத்தை மணம் வீசுமாறு பூசிக் குளித்து அதன் ஈரம் உலருமாறு கைகளால் கோதிச் சிக்கு எடுத்து, வயிரம் பாய்ந்த அகிலை நெருப்பில் இட்டுப் புகைத்து முடியை உலர்த்துவதனால் அங்கிருக்கும் வண்டுகள் பறந்து ஆரவாரம் செய்ய, அகிலின் புகையைப் பெற்று நீல வயிரக் கல்லின் நிறமுடைய கருமையான தலைமுடியின்மேல் மலை, நிலம், கொம்புகள், சுனைகள் ஆகிய இடங்களில் பூத்த பலவிதமான மலர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கட்டிய மாலையினையும் வெண்மை நிறமுடைய

தாழையின் மடலால் கட்டப்பட்ட மாலையினையும் இவன் முருகனோ என்று காண்பவர்கள் அச்சம் கொள்ளுமாறு சூடிக் கொண்டு,,,

பைங் கால் பித்திகத்து ஆய் இதழ் அலரி
அம் தொடை ஒரு காழ் வளைஇ, செந் தீ
ஒண்பூம் பிண்டி ஒரு காது செரீஇ,
அம்தளிர்க் குவவு மொய்ம்பு அலைப்ப,
சாந்து அருந்தி,
மைந்து இறை கொண்டு, மலர்ந்து ஏந்து
அகலத்து,
தொன்று படு நறுந் தார் பூணொடு பொலிய,

பசுமையான காம்புடைய பிச்சிப்பூவின் சிறிய இதழ்களை உடைய பூக்களால் கட்டப்பட்ட மாலை ஒன்றைத் தலைமுடியில் சுற்றிச் சிவந்த பொருப்பினைப் போன்ற வெண்மையான பூக்களை உடைய அசோகமரத்தின் அழகிய இளம்தளிரை ஒரு காதில் செருகிக் கொண்டு அத்தளிர் தோளில் கிடந்து புரண்டு கொண்டிருக்க சந்தனம் பூசிய அகன்ற மார்பில் வழக்கமாக அணியும் மாலையை அணிகலன்களோடு சேர்த்து அணிந்துகொண்டு அழகுபெற்ற உருவத்துடன்.

செம் பொறிக்கு ஏற்ற, வீங்கு இறைத் தடக் கையின்
வண்ண வரி வில் ஏந்தி, அம்பு தெரிந்து,
நுண் வினைக் கச்சைத் தயக்கு அறக் கட்டி
இயல் அணிப் பொலிந்த ஈகை வான் கழல்
துயல் வரும் தோறும் திருந்து அடிக் கலாவ
முனை பாழ் படுக்கும் துன் அருந் துப்பின்

சிறந்த தொழில் நுணுக்கத்தோடு செய்யப்பட்டு கோடுகள் உடைய பூண் என்னும் அணிகலன் இறுகிக் காணப்படும் முன் கையை உடைய பெரிய கையில் வண்ணம் பொருந்திய வில்லையும் ஆராய்ந்து தெரிந்தெடுக்க நல்ல அம்புகளையும் பிடித்துக்கொண்டு, தொழிலால் சிறந்த சோலையினை அழகுறத் தன் இடையில் கட்டிக் கொண்டு இயற்கையான அழகுடன் பாதம் வைத்து நடக்கும்போது காலில் அணிந்துள்ள வீரக்கழல் உயர்ந்தும் தாழ்ந்தும் அசைந்து கொண்டிருக்க…

## 1.17.வேட்டை நாய்களின் தோற்றம் :

பகை புறம் கண்ட பல் வேல் இளைஞரின்
உரவுச்சினம் செருக்கி, துன்னுதொறும் வெகுளும்,
முளை வாள் எயிற்ற, வள் உகிர், ஞமலி

திளையாக் கண்ண வளைகுபு நெரிதர,

பகைவர்களின் சாட்டைப் பாழ்படுத்தும் கிடைப்பதற்கு அரிதான போர்த்திறம் உடையவனும் பகை கொண்டவர்களைப் புறமுதுகு இட்டு ஓடச் செய்த பல வேல்களைக் கொண்டிருக்கும் இளைமையான போர் வீரனைப் போன்று அதிகரிக்கின்ற கோபத்தினால் செருக்குக் கொண்டு அவனை நெருங்கிச் செல்கின்ற போதெல்லாம் கோபம் கொள்ளும் இயல்புடைய வெண்மையான பற்களும் கூர்மையான நகங்களையும் உடைய நாய்கள் கண்களை இமைக்காமல் எங்களைச் சூழ்ந்துக் கொண்டு நெருங்கி வந்தமையினால்…

## 1.18.தலைவனின் வருத்தம் :

நடுங்குவனம் எழுந்து, நல் அடி தளர்ந்து, யாம்
இடும்பை கூர் மனத்தேம் மருண்டு புல் படர
மாறு பொருது ஓட்டிய புகல்வின் வேறு புலத்து
ஆகாண் விடையின், அணி பெற வந்து எம்
அலமரல், ஆயிடை, வெரூஉதல் அஞ்சி,
மெல்லிய இனிய மேவரக் கிளந்து, எம்
ஐம்பால் ஆய் கவின் ஏத்தி, ‘‘ஒண்தொடி
அசை மென் சாயல், அவ்வாங்கு உந்தி,
மட மதர் மழைக் கண், இளையீர்! இறந்த
கெடுதியும் உடையேன்’’ என்றனன் அதன் எதிர்

நாய்கள் அருகே வந்ததைக் கண்டு நாங்கள் மிகுதியான அச்சம் கொண்டு நடுங்கி அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து வேகமாகச் செல்ல இயலாதவாறு நடை தடுமாறிய காரணத்தால் துன்பம் மிகுந்த மனம் கொண்டவர்களாக மயக்கம் கொண்டு வேறு இடம் நோக்கி அகலவும், தனக்குப் பகையான காளைகளை எல்லாம் வென்று மனச் செருக்குடன் திகழ்ந்த காளை வேறு நிலத்திற்குச் சென்று அங்கு பசு ஒன்றைக் கண்டு நின்றதுபோல எங்களை நெருங்கி வந்து நாங்கள் அச்சம் கொண்டதைப் பார்த்துத் தானும் அச்சம் கொண்டவனாக மென்மையும் இனிமையும் நிறைந்த சொற்களால் எங்கள் பயத்தைத் தெளிவித்து ஐந்தாகப் பின்னி முடிக்கப்பட்ட அழகான கூந்தலைப் பார்த்துப் பாராட்டினான். ஒளிமிக்க வளையலையும் அசைந்து நடக்கும் மென்மையான சாயலையும் அழகியதாய்ச் சுழித்து வளைந்திருக்கும் கொப்பூழினையும் குளுமையான கண்களையும் உடைய பெண்களே! நான் இங்கு வந்தமைக்கு இழப்புகள் பல உண்டு என்று கூறினான். நாங்கள் அவனுடைய மொழிக்குப் பதில் கூறாததனால் மிக்க வருத்தம் கொண்டான்.

## 1.19.தலைவனின் பேச்சு :

சொல்லேம் ஆதலின், அல்லாந்து “கலங்கிக்
கெடுதியும் விடீஇர் ஆயின், எம்மொடு
சொல்லலும் பழியோ, மெல் இயலீர்?” என,
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பின், இம்மென இமிரும்
மாதர் வண்டொடு, சுரும்பு நயந்து இறுத்த,
தாது அவிழ் அலரித் தா சினை பிளந்து,
தாறு அடு களிற்றின் வீறு பெற ஓச்சி,
கல்லென் சுற்றக் கடுங் குரல் அவித்து, எம்
சொல்லல் பாணி நின்றனன் ஆக

அவன் ஏமாற்றத்தினால் மன வருத்தம கொண்டு எங்களை நோக்கி உயர்ந்த சாயலை உடைய பெண்களே! நான் இழந்த விலங்குகளை நீங்கள் காட்டிக் கொடுக்கவில்லை என்றாலும் பராவயில்லை. என்னோடு பேசினால் என்ன? பழி வந்து விடுமா என்று கூறி, நட்ட ராகத்தில் அமைந்த பாடலைப் பாலை யாழ் கொண்டு இசைக்கும் இசைக் கலைஞன் கையில் பட்ட நரம்பினைப் போல ஆண் வண்டும் பெண் வண்டும் ஒலி எழுப்பிக் கொண்டு புணர்ச்சியாகிய சேர்க்கையை விரும்பிப் பறந்து செல்ல அவன் அங்கிருந்த கொம்பு ஒன்றை ஒடித்து ஓசை மிகக் குலைத்துக் கொண்டிருந்த நாய்களின் வலிமையான ஒலியை மாற்றி அமைதிப்படுத்தி எங்களின் பதிலுக்காகக் காத்து நின்றான்.

## 1.20.யானையின் வருகை :

இருவி வேய்ந்த குறுங் காற் குரம்பை,
பினை ஏர் நோக்கின் மனையோள் மடுப்ப,
தேம் பிழி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,
சேமம் மடிந்த பொழுதின், வாய்மடுத்து.
இரும் புனம் நிழத்தலின், சிறுமை நோனாது,
அரவு உறழி, அம் சிலை கொளீஇ, நோய் மிக்கு,
உரவுச் சின முன்பால் உடல் சினம் செருக்கி,
கணைவிடு(பு), புடையூ கானம் கல்லென,
மடி விடு வீளையர் வெடி படுத்து எதிர,

தினைகள் களைந்த தாளில்வேயப்பட்ட சிறிய கால்களை உடைய குடிசை வீட்டில் வாழ்கின்ற மானின் பார்வையினை உடைய மனைவி கொடுக்கத் தேனாகச் செய்யப்பட்ட கள்ளினைப் பருகி மகிழ்ச்சி நிறைந்த மனத்துடன் காவல் செய்பவன் தன்னுடைய தொழிலை மறந்திருந்தபோது,

யானை தன் தும்பிக்கையினால் தினைகளை உருவி அழித்துவிடுவதனால் எஞ்சிய தினையின் அளவு கண்டு மன வருத்தம் கொண்டு பாம்பினைப் போன்ற அழகுடைய வில்லை எடுத்து அதில் நாண் ஏற்றி யானை பயிரை அழித்த வருத்தத்தின் மிகுதியினால் உடலில் கோபத்தின் மெய்பாடு தோன்ற அதனால் மயக்கம் கொண்டு அம்பினை எய்து தட்டை முதலிய கருவிகளைக் கொண்டு அவன் துரத்துக் காடெல்லாம் ஓசை பெருகுமாறு வாயைக் குவித்து சீழ்க்கை ஓசை எழுப்பி யானையைத் துரத்துவதனால்…

## 1.21.யானையால் வந்த துயரம் :

கார்ப் பெயல் உருமின் பிளிறி, சீர்த் தக
இரும் பிணர்த் தடக் கை இரு நிலம் சேர்த்தி,
சினம் திகழ் கடாஅம் செருக்கி, மரம் கொல்பு,
மையல் வேழம், மடங்கலின், எதிர்தர,
உய்வு இடம் அறியேம் ஆகி, ஒய்யென,
திருந்து கோல் எல் வளை தெழிப்ப, நாணு மறந்து,
விதுப்புறு மனத்தேம், விரைந்து அவற் பொருந்தி,
சூர்உறு மஞ்ஞையின் நடுங்க…..

கார் கால மழை பெய்யும் போது இடிக்கும் இடிபோலப் பிளிறி வரிகள் உடைய பெரிய தும்பிக்கையைத் தூக்கிப் பெரிய நிலத்தில் அறைந்து கோபம் கொள்ளக் காரணமாகிய மதத்தால் செருக் கடைந்து வருகின்ற வழியல் மரங்களை உடைத்து எதிர்ப்பட்ட ஆண்யானை, இயமன் போன்று எங்களை நோக்கி வந்தபோது அதனை விடுத்து உயிர் பிழைப்பதற்கான வழியை எவ்வகையிலும் நாங்கள் அறியாமல் கையில் அணிந்த வளையல்கள் ஒலி எழுப்ப நாணத்தை மறந்தவர்களாய் அச்சம் கொண்ட மனத்தோடு வேகமாகச் சென்று அவனை நெருங்கி நின்று நடுங்கினோம்.

## 1.22.உயிர் காத்தான் தலைவன் :

……………………. வார் கோல்
உடுஉறும் பகழி வாங்கி, கடு விசை,
அண்ணல் யானை அணி முகத்து அழுத்தலின்,
புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து இழிதர,
புள்ளி வரி நுதல் சிதைய, நில்லாது,
அயர்ந்து புறங்கொடுத்த பின்னர் …….

அவன் உடனடியாக நீண்ட கோலில் நாண் கட்டப்பட்டு வில்லில் அம்பு சேர்த்து அதனை வலிமையாக இழுத்து வேகமாகச் செல்லுமாறு

குறிப்புகள்

ஏவியவுடன் அந்த அம்பு யானையின் அழகு பொருந்திய முகத்தில் தைத்தது. அதனால் யானையின் முகத்தில் இரத்தம் பெருகி அதன் முகத்தில் வழிந்தது. கோடுகளையும் புள்ளிகளையும் உடைய அழகு மறைந்து அந்த யானை அங்கு நிற்காமல் ஓடிய பின்பு…

## 1.23.தலைவனின் உறுதிச் சொல் :

……………………………..நெடு வேள்
அணங்கு உறு மகளிர் ஆடுகளம் கடுப்ப,
திணி நிலைக் கடம்பின் திரள் அரை வளைஇய
துணை அறை மாலையின், கை பிணி விடேஎம்,
நுரையுடைக் கலுழி பாய்தலின், உரவுத் திரை
அடும் கரை வாழையின் நடுங்க, பெருந்தகை
“அம் சில் ஓதி! அசையல் யாவதும்
அஞ்சல், ஓம்பு நின் அணி நலம் நுகர்கு” என
மாசு அறு சுடர் நுதல் நீவி, நீடு நினைந்து,
என் முகம் நோக்கி நக்கனன்,

யானை ஓடியதும் அந்த இடம் முருக கடவுளுக்குத் தெய்வம் தீண்டித் துன்பமுற்ற பெண்கள் அத்துன்பம் தீரும் பொருட்டு ஆடு வெட்ட பலிகொடுத்து வெறியாட்டு நடத்திய இடம்போல இருந்தது. அங்கு நிற்கும் கடம்ப மரத்தின் அடிப்பகுதியை வளைத்துச் சூடப்பட்ட பெண்களுக்கு ஒப்புமை கூறும் மலர்மாலை போல நாங்கள் அவனைக் கட்டி அணைத்துக் கொண்ட கைகளை விடாதவர்களாக வெள்ளம் பெருக்கெடுக்கும் ஆற்றின் கரையில் நிற்கும் வாழை மரம்போல் நடுங்கினோம். அவ்போது நிறைந்த குணமுள்ள தலைவன் அழகிய கூந்தலை உடைய பெண்ணே! நடுக்கம் வேண்டாம். எதற்காகவும் அச்சம் கொள்ள வேண்டாம். நான் உன் அழகினை எனாக்கிக் கொள்வேன் என்று கூறி ஒளியுடைய தலைவியின் நெற்றியை விரல்களால் துடைத்து நீண்ட சிந்தனைக்குப் பின்பு என் முகத்தை நோக்கிப் புன்னகை செய்தான்.

## 1.24.தலைவியின் நாணம் :

……………………………. அந்நிலை,
நாணும் உட்கும் நண்ணுவழி அடைதர,
ஒய்யெனப் பிரியவும் விடாஅன், கவைஇ
ஆகம் அடைய முயங்கலின், …………

தலைவனால் தலைவி தீண்டப்பட்ட நிலையில் தலைவிக்கும் நாணம், அச்சம், மடம் முதலான குணங்கள் தோன்றியதனால் அவனைவிட்டு விரைவாகத் தழுவிய கைகளை விலக்க முயன்றாள்.

ஆனால் அவன் அவளை விடாமல் தன் கையால் அணைத்துக் கொண்டு அவள் மார்பு அவன் மார்பில் இணையுமாறு தழுவினான்.

குறிப்புகள்

## 1.25.தலைவனின் மரை நாட்டின் வளம் :

.............................. அவ்வழி,

பழு மிளகு உக்க பாறை நெடுஞ் சுனை,
முழு முதற் கொக்கின் தீம் கனி உதிர்ந்தென,
புள் எறி பிரசமொடு ஈண்டி, பலவின்
நெகிழ்ந்து உகு நறும் பழம் விளைந்த தேறல்,
நீர் செத்து அயின்ற தோகை, வியல் ஊர்ச்
சாறு கொள் ஆங்கண் விழவுக் களம் நந்தி,
அரிக் கூட்டு இன் இயம் கறங்க, ஆடு மகள்
கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல்,
வரைஅர மகளிரின் சாஅய், விழைதக,
விண் பொரும் சென்னிக் கினைஇய காந்தள்
தண் கமழ் அலரி தாஅய், நன் பல
வம்பு விரி களத்தின் கவின் பெறப் பொலிந்த
குன்று கெழு நாடன், .........................

அப்பொழுது பழுத்துக் கனிந்த மிளகுகள் உதிர்ந்து கிடந்த பாறையில் உள்ள நீண்ட சுனையில் பெரிய அடியினை உடைய மா மரத்திலிருந்து மாங்கனி உதிர அக்கனியின் சாறும், வண்டுகள் சிதறித் துளிர்த் தேனும், பலாக்கனி கனித்து துளிர்த்த தேனும் கலந்து இருந்த தெளிவான தேனை நீர் என்று நினத்து உண்ட மயிலானது, விழா நடக்கும் இடத்தில் கயிற்றில் ஏறி ஆடுகின்றவள் தாளம் தவற ஆடித் தளர்வது போலத் தளர்கின்ற மலைச் சாரலையும், வரையர மகளிர் ஆடுவதனால் தம்முடைய எழில் சிறிது குறைய மலைச் சிகரங்களில் மலர்ந்திருந்த செங்காந்தள் மலர்கள் விழா நடக்கும் இடங்களில் பல கச்சு அணிகளை வரித்திருந்ததுபோல உதிர்ந்து கிடக்கும் மலை நாட்டை உடைய தலைவன்.

## 1.26.மணம் கொள்வோம் என்று தலைவன் கூறியமை :

................ எம் விழைதரு பெரு விறல்
உள்ளத் தன்மை உள்ளினன் கொண்டு,
"சாறு அயர்ந்தன்ன, மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா, வள நகர் பொற்ப,
மலரத் திறந்த வாயில் பலர் உண,
பைந் நினம் ஒழுகிய நெய்ம் மலி அடிசில்

குறிப்புகள்

வசைஇல் வான் திணைப் புரையோர் கடும்பொடு
விருந்து உண்டு எஞ்சிய மிச்சில், பெருந்தகை,
நின்னோடு உண்டலும் புரைவது'' என்று, ஆங்கு
அறம் புணை ஆகத் தேற்றி, ………………

எம்மை எப்போதும் விரும்புகின்ற பெரிய வெற்றியை உடையவன் தலைவியை அணைத்துக் கொண்டபோது இவளுடைய மனம் துள்ளியதனை நினைத்து இவளைத் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவதை நினைத்தான். பலரும் வந்து விருந்து உண்டு மகிழவும் திறந்து கிடக்கும் வாயிலை உடைய செல்வ வளம் நிறைந்திருக்கும் இல்லத்தில் இருந்து வருகின்ற அனைவருக்கும் இல்லை என்று கூறாமல் கொடுத்து திருவிழாப்போலக் கொண்டாடும் செல்வம் நிறைந்த வீடு சிறப்படையும்படியாக நெய் வழியும் சோற்றை நீ வழங்குவதனால் உயர்ந்தோர்கள் தங்கள் உறவுகளுடன் இருந்து உண்ண, விருந்திட்டது போக எஞ்சியிருக்கின்ற உணவினை நீ வழங்க நான் உண்ணுவது உயர்ந்ததாகும் என்று தலைவியிடம் கூறி இல்வாழ்வு நம்மைச் சேர்த்து வைக்கும் என்று கூறினான்.

## 1.27.யானை தரு புணர்ச்சி :

………………………………பிறங்கு மலை
மீமிசைக் கடவுள் வாழ்த்தி, கைதொழுது,
ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி,
அம் தீம் தெள் நீர் குடித்தலின், நெஞ்சு அமர்ந்து,
அருவிடர் அமைந்த களிறு தரு புணர்ச்சி,
வான்உரி உறையுள் வயங்கியோர் அவாவும்
பூ மலி சோலை, அப் பகல் கழிப்பி,

உயர்ந்த மலைமீது வாழ்கின்ற முருக கடவுளை வாழ்த்தி அவன் இருக்கின்ற திசையை நோக்கி கரம் குவித்துத் தலைவி இன்பமடையக் காரணமாகிய உறுதி மொழிகளைக் கூறி அவளுக்குத் தெளிவினை ஏற்படுத்தி மலையில் இருக்கின்ற தெளிவான அருவி நீரை அவன் குடித்து இவளுடைய மனம் அவனுடைய உறுதி மொழியில் ஒன்றுபட்ட அருமைத் தன்மை உடைய காட்டில் ஆண் யானையினால் நிகழ்ந்த உறவினை வானுலகில் உள்ள தேவர்களும் தாங்கள் வாழும் உலகை வெறுத்து இன்பம் பெற நினைப்பதாகிய பூக்கள் நிறைந்து பூத்திருக்கும் சோலையில் அன்றைய மீதிப் பொழுதை அவனோடு இருந்து கழித்து…

## 1.28.மாலைக் காட்சி :

எல்லை செல்ல, ஏழ் ஊர்பு, இறைஞ்சி

பல் கதிர் மண்டிலம், கல் சேர்பு மறைய
மான் கணம் மரமுதல் தெவிட்ட, ஆன் கணம்
கன்று பயிர் குரல மன்று நிறை புகுதர,
ஏங்கு வயிர் இசைய கொடு வாய் அன்றில்
ஓங்கு இரும் பெண்ணை அக மடல் அகவ,
பாம்பு மணி உமிழ, பல் வயின் கோவலர்
ஆம்பல் ஆய் இதழ் கூம்பு விட, வள மனைப்
பூந் தொடி மகளிர் சுடர் தலைக் கொளுவி,
அந்தி அந்தணர் அயர, கானவர்
விண்தோய் பணவை மிசை ஞெகிழி பொத்த,
வானம் மா மலை வாய் சூழ்பு கறுப்ப, கானம்
கல்லென்று இரட்ட, புள்ளினம் ஒலிப்ப,
சினைஇய வேந்தன் செல் சமம் கடுப்பத்
துணைஇய மாலை துன்னுதல் காணூஉ

பகல் பொழுது கடந்து செல்லுமாறு ஏழு குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்தி வழி நடத்திய பல கதிர்களைக் கொண்டு விளங்கும் சூரியன் மேற்கு மலையை அடைந்து மறைந்ததனால் மான்களின் கூட்டம் மரத்தடியில் வந்து கூடவும், பசுக்களின் கூட்டம் தம்முடைய கன்றுக் குட்டிகளை அழைக்கும் குரலை உடையனவாகக் கொட்டிலை அடைந்து நிற்கவும், கொம்புக் கருவியின் ஓசை போன்ற குரலினை உடைய அன்றில் பறவை உயர்ந்த பனை மரத்தின் உள்புற மடலில் அமர்ந்து தன் பெண் துணையினை அழைக்கவும், பாம்பு தன்னிடம் உள்ள மாணிக்கக் கல்லை உமிழ்ந்து வைத்துவிட்டு இரை தேடவும், பல்வேறு இடங்களிலும் உள்ள ஆயர்கள் இனிய ஆம்பல் குழல் கொண்டு இசையினை இசைக்கவும், அல்லி மலரின் இதழ்கள் விரிந்து மலரவும், செல்வம் நிறைந்த இல்லங்களில் கையில் வளையல் அணிந்துள்ள பெண்கள் விளக்கேற்றி மாலைக் காலக் கடமைகளைச் செய்தனர். அந்தணர்கள் மாலை நேரத்தில் செய்ய வேண்டிய சடங்குகளைச் சொய்தனர். காட்டில் வாழும் கானவர்கள் வானத்தைத் தொடுமாறு அமைத்திருக்கின்ற பரணியில் இருந்து கொண்டு தீக்கடை கோல் கொண்டு நெருப்பைப் பற்ற வைத்து எரிய வைக்கும் மேகங்கள் சூழ்ந்த மலையில் சூழ்ந்து எரியும் நெருப்பைக் கண்டு காட்டில் வாழ்கின்ற பல்வகை விலங்குகளும் ஓசை எழுப்பி ஒன்றை ஒன்று அழைத்தபடி இருக்கவும், பறவைக் கூட்டங்கள் ஒலி எழுப்புவதனால் பகைவர்கள் மேல் கோபம் கொண்ட அரசன் படை எடுத்துச் சென்றதுபோல விரைவாக மாலைப்பொழுது நெருங்கி வருவதைக் கண்டு…

## 1.29.தலைவன் எங்களை ஊர் சேர்த்தான் :

"நேர் இறை முன்கை பற்றி, நுமர் தர,
நாடு அறி நல் மணம் அயர்கம் சில் நாள்
கலங்கல் ஓம்புமின், இலங்கு இழையீர்!" என,
ஈர நல் மொழி தீரக் கூறி,
துணை புணர் ஏற்றின், எம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயில்,
உண்துறை நிறுத்துப் பெயர்ந்தனன்.

ஒளி விளங்கும் அணிகலன்களை அணிந்திருக்கும் பெண்களே! உம்முடைய அழகிய முன் கையைப் பிடித்து உன்னுடைய பெற்றோர்களுமன் உறவினர்களும் எனக்குத் தர நாட்டில் உள்ளவர்கள் எல்லாம் அறியுமாறு நடக்கும் நல்ல திருமணத்தினைப் பின்பு நடத்துவோம். அது நடைபெறுவதற்கு இடையில் உள்ள நாட்களில் உன்னுடைய வருத்தத்தைத் தவிர்ப்பாயாக என்று அவனுடைய இனிய சொற்களால் எங்களுடைய துன்பத்ரதப் போக்கி பசுவைக் கூடிய காளை போன்று விலகாமல் எங்களைப் பின் தொடர்ந்து வந்து நம் ஊரின் நுழைவாயில் எல்லையில் உள்ள உண்ணும் நீர்த் துறையில் விட்டு விட்டுச் சென்றான்.

## 1.30.தலைவனின் இரவுக்கால வருகை :

……………………………………அதற் கொண்டு,
அன்றை அன்ன விருப்போடு, என்றும்,
இரவரல் மாலையனே வருதோறும்
காவலர் கடுகினும், கத நாய் குரைப்பினும்,
நீ துயில் எழினும், நிலவு வெளிப்படினும்,
வேய் புரை மென் தோள் இன் துயில் என்றும்,
பெறாஅன் பெயரினும், முனியல் உறாஅன்,
இளமையின் இகந்தன்றும் இலனே வளமையின்
தன்நிலை தீர்ந்தன்றும் இலனே …………….

பூஞ்சோலையில் இயற்கைப் புணர்ச்சி நடைபெற்ற பின்பு காதல் வேட்கை குறையாதவனாக அவன் ஒவ்வொரு நாளும் தலைவியைத் தேடி வருபவன் ஆனான். அவன் அவ்வாறு வரும்போது நிறைந்த காவலாலும், நாய் குரைப்பதனாலும், தாயே நீ உறக்கம் கொள்ளாமல் விழித்திருப்பதனாலும், நிலவின் ஒளியினாலும் துன்பம் கொண்டு இவள் தோளில் சாய்வதால் கிடைக்கும் இன்பம் கிடைக்காமல் வெறுமையான மனத்துடன் திரும்பிச் செல்வான். அவ்வாறு செல்ல நேர்ந்தாலும் இவளை

வெறுக்கவில்லை. இவ்வாறு வருபவன் இளமைப் பருவத்தைக் கடந்தவனும் இல்லை. செல்வம் நிறைந்தவன் ஆனாலும் கர்வம் சிறிதும் இல்லாதவன்.

## 1.31.தலைவியின் துன்பம் :

குறிப்புகள்

………………………………….. கொன் ஊர்
மாய வரவின் இயல்பு நினைஇ, தேற்றி,
நீர்ஏறி மலரின் சாஅய், இதழ் சோரா
ஈரிய கலுழும், இவள் பெரு மதர் மழைக்கண்
ஆகத்து அரிப் பனி உறைப்ப, நாளும்,
வலைப் படு மஞ்ஞையின், நலம் செலச் சாஅய்,
நினைத் தொறும் கலுழுமால், ……………

அச்சம் தரத்தக்க நிகழ்வுகளைக் கொண்டிருக்கும் இவ்வூரில் இரவுக் குறியில் வந்து இன்பம் பெறுதல் பொய்யாக இருக்கின்ற காரணத்தினால் இது குற்றம் என்று மனத்தால் நினைத்து அவன் திருமணம் செய்து கொள்ள அவனோடு சேர்ந்து வாழ்க்கை நடத்துவதே சிறந்தது என்று நினைப்பதனால், மழையால் தாக்கப்பட்ட மலர்போல இவளுடைய உடல் அழகெல்லாம் கெட இமைகள் சோர்ந்து கண்ணீரை உடையவளாக் கலங்கியிருக்கிறாள். என் தோழியின் அழகிய கண்களில் இருந்து துளிர்க்கும் கண்ணீர் மார்பில் விழ வலையில் சிக்கிய மயில்போல அவர் வருகின்ற வழி துன்பம் நிறைந்ததாயிற்றே என்று நினைக்கும் போதெல்லாம் இவள் கண் கலங்குவாள்.

…………………………………இவளே கங்குல்,
அளைச் செறி உழுவையும், ஆளியும், உளியமும்,
புழற் கோட்டு ஆமான் புகல்வியும், களிறும்,
வலியின் தப்பும் வன்கண் வெஞ் சினத்து
உருமும், சூரும், இசை தேர் அரவமும்,
ஒடுங்கு இருங் குடத்து அருங் சுழி வழங்கும்
கொடுந் தாள் முதலையும், இடங்கரும் கராமும்
நூழிலும், இழுக்கும், ஊழ் அடி முட்டமும்,
பழுவும், பாந்தளும், உளப்படப் பிறவும்,
வழுவின் வழாஅ விழுமம், அவர்
குழு மலை விடரகம், உடையவால் எனவே,

இரவு நேரத்தில் குகையில் வாழும் புலிகளும் சிங்கமும் கரடிகளும் கோடுகள் உடைய கொம்புடைய காட்டு மாடும், யானையும், இடியும், தெய்வமும், இரைதேடும் பாம்பும், நீர் நிலையில் முதலை இடங்கர்கராம் ஆகியனவும், வழிப்பறி செய்யும் கொலைஞர்கள் நிறைந்த இடமும், வழி

குறிப்புகள்

தெரியாத இடங்களும், பேயும், மலைப் பாம்பும் இவை தவிர பிறவும் அவர் வரும் வழியில் உண்டு. அதனை நினைக்கும் போதெல்லாம் இவள் கண் கலங்கி அழுவாள்.

## 1.32.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. மரை நாட்டின் வளத்தினை குறிஞ்சிப்பாட்டு வழி எடுத்துரைக்க.
2. தினைப்புனக்காவலில் யாது நிகழ்ந்தது:?
3. நற்குணத்தின் அவசியத்தனைக் குறிஞ்சிப்பாட்டு எவ்வாறு வலியுறுத்துகின்றது?
4. குறிஞ்சிப்பாட்டின் வழி யானைதருப் புணர்ச்சி குறித்து குறிப்பு வரைக

பெருவினா :

5. குறிஞ்சிப்பாட்டுக் கூறும் 99 வகையான மலர்கள் எவையெவை?
6. குறிஞ்சிப்பாட்டு பேசும் தலைவனின் வருகையை மிளிர்ந்த தலைவனின் சிறப்பினை எடுத்துரைக்க
7. குறிஞ்சிப்பாட்டில் காணலாகும் இயற்கை நலத்தினை விரித்துரைக.

## 1.33.தொகுத்துக் காண்போம். :

பண்டையக்கால மக்களின் குறிஞ்சி நிலத்தின் வாழ்க்கை முறையினையும், அந்நிலத்தின் காணப்படும் பண்பாட்டு கூறுகளையும், இயற்கை வளமையினையும் இப்பகுதியின் மூலம் அறிந்து கொண்டீர்கள்.

## 1.34.மேலும் பயில்வதற்கான நூல்கள் :


- குறிஞ்சிப்பாட்டு, உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- குறிஞ்சிப்பாட்டு, நாரயாணவேலுப்பிள்ளை, முல்லை நிலையம், சென்னை-17.
- குறிஞ்சிப்பாட்டு, கதிர்முருகு, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.
- பத்துப்பாட்டு, கழக வெளியீடு, திருநெல்வேலி,
- குறிஞ்சிப்பாட்டு, புலவர் வி.நாகராசன், நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை-98

# கூறு – 2 கலித்தொகை

**முல்லைக்கலி - 1 முதல் 8 வரையிலான பாடல்கள்**

## 2.1.முன்னுரை :

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடலும் கலித்தொகையும் இசைப்பாவால் ஆனது. அக இலக்கிய வகையினைச் சார்ந்தது. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளை நிலைக்களனாகக் கொண்டு, அகப்பொருளில் பாடப்பெற்ற கலிப்பாக்களைக் கொண்டு தொகுக்கப்பெற்றதனால் இது கலித்தொகை என்னும் பெயர் பெற்றது. பரிபாடலைப் போன்றே தொடக்கக் காலத்தில் கலித்தொகையும் இசையுடன் பாடப்பட்டுள்ளது.

பாலைக் கலியைப் பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக் கலியைக் கபிலரும், மருதக் கலியை மருதன் இளநாகனாரும், முல்லைக் கலியை நல்லுருத்திரனாரும், நெய்தல் கலியை நல்லந்துவனாரும் பாடியுள்ளனர். நம் பாடப்பகுதியில் முல்லைக்கலிப்பாடல்களுள் மட்டும் வைக்கப்பட்டுள்ளன.

## 2.2.குறிக்கோள்கள் :

முல்லை என்பது அந்த நிலத்தில் சிறப்பாக மலரும் மலரின் பெயர். இம் மலரின் பெயரினையே இந்நிலத்திற்கு சூட்டியுள்ளனர். முல்லை நிலம் காடும் காடு சார்ந்த பகுதியுமாகும். ஏறு தழுவுதல், முல்லை நில மக்களின் மனவுறுதி, முல்லை நிலக் காளையரின் வீரம், பழந்தமிழ் மக்களின் பண்பாடு போன்றவற்றை விளக்கிக் காட்டுவதே இந்த முல்லைக் கலியாகும்.

## 2.3.பாடல் : 1 பாடியவர் : சோழன் நல்லுருத்திரன்

**ஏறு தழுவலும் தோழியின் கூற்றும் :**

தளிபெறு தண் புலத்துத் தலைப்பெயற்கு அரும்பு ஈன்று
முளி முதல் பொதுளிய முள் புற பிடவமும்,
களி பட்டான் நிலையே போல் தடவுபு துடுப்பு ஈன்று
ஞெலிபு உடன் நிரைத்த ஞெகிழ் இதழ் கோடலும்,
மணி புரை உருவின காயாவும் பிறவும்,
அணிகொள மலைந்த கண்ணியர் தொகுப்பு உடன்
மாறு எதிர்கொண்ட தம் மைந்துடன் நிறுமார்,
சீறு அரு முன்பினோன் கணிச்சி போல் கோடு சீஇ,
ஏறு தொழூஉப் புகுத்தனர் இயைபு உடன் ஒருங்கு.
அவ்வழி முழக்கு என இடி என முன் சமத்து ஆர்ப்ப,
வழக்கு மாறு கொண்டு வருபு வருபு ஈண்டி,
நறையொடு துகள் எழ நல்லவர் அணி நிற்பத்
துறையும் ஆலமும் தொல் வலி மராஅமும்
முறை உளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ.
மேல் பாட்டு உலண்டின் நிறன் ஒக்கும் புன் கருக் கண்
நோக்கு அஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக் குத்திக்,

கோட்டு இடைக் கொண்டு குலைப்பதன் தோற்றம் காண்!
அம்சீர் அசை இயல் கூந்தல் கை நீட்டியான்
நெஞ்சம் பிளந்து இட்டு நேரார் நடுவண், தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்.
சுடர் விரிந்தன்ன சுரி நெற்றிக் காரி
விடரி அம் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர் சொரியக் குத்திக் கலைப்பதன் தோற்றம் காண்!
படர் அணி அந்திப் பசுங்கண் கடவுள்
இடரிய ஏற்று எருமை நெஞ்சு இடந்து இட்டுக்
குடர் கூளிக்கு ஆர்த்துவான் போன்ம்.
செவி மறை நேர் மின்னும் நுண் பொறி வெள்ளைக்
கதன் அஞ்சான், பாய்ந்த பொதுவனைச்ச சாடி,
நுதி நுனைக் கோட்டால் குலைப்பதன் தோற்றம் காண்!
ஆர் இருள் என்னான் அருங் கங்குல் வந்து, தன்
தாளின் கடந்த அட்டு, தந்தையைக் கொன்றானைத்
தோளின் திருகுவான் போன்ம்.
என ஆங்கு,
அணி மாலைக் கேள்வதன் தரூஉமார் ஆயர்
மணி மாலை ஊதும் குழல்.
கடாஅக் களிற்றினும் கண்ணஞ்சா ஏற்றை
விடாஅது நீ கொள்குவை ஆயின், படாஅகை
ஈன்றன் ஆயமகள் தோள்.
பகலிடக் கண்ணியன், பைதல் குழலன்,
சுவல் மிசைக் கோல் அசைத்த கையன், அயலது
கொல் ஏறு சாட இருந்தார்க்கு எம்பல் இருங்
கூந்தல் அணை கொடுப்பேம் யாம்.
கோளாளர் என் ஒப்பார் இல் என நம்ஆன் உள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கு, ஒரு நாள்
கேளாளன் ஆகாமை இல்லை அவன் கண்டு
வேளாண்மை செய்தன கண்.
ஆங்கு ஏறும் வருந்தின! ஆயரும் புண் கூர்ந்தார்!
நாறு இருங் கூந்தல் பொது மகளிர் எல்லாரும்
முல்லை அம் தண் பொழில் புக்கார், பொதுவரொடு
எல்லாம் புணர் குறி கொண்டு.

முன்னர் உலர்ந்திருந்த பிடவம். மழை பெறுகின்ற குளிர்ந்த பூமியிலே, முள்ளைப் புறத்தே கொண்ட அரும்புகளையும் ஈன்றது. கள்ளுண்டவனின் நிலையைப் போல ஆடியசையும் துடுப்புகளை ஈன்று, பின்னர்த் தீக்கடை கோலாற் கடைந்து நிரைத்த நெருப்புப் போன்ற ஒளியுடன் செங்காந்தள் பூக்கள் விளங்கின. காயாம்பூக்கள் நீலமணியின் உருவினையும் நிறத்தையும் உடையவாயிருந்தன. இவற்றோடு விற்பமாகிய

பூக்களை அழகுறத் தொடுத்துக் கண்ணியாகச் சூட்டியிருக்கின்றனர், ஆயரிளைஞர்.

அவர்களைத் தொகுதியாகச் சேர்த்துச், சீறுதற்கரிய வலியுடையோனான இறைவனின் கணிச்சி போலக் கொம்புகள் சீவப்பட்ட ஏறுகள் நிற்கின்ற தொழுவினுள், தம்மைப் பகைத்தவரும் அவற்றைத் தழுவித் தம் ஆற்றலைச் சேர நிறுத்துவதற்காக, ஒருங்கே சென்று புகுந்துவிட்டனர் ஆயர்கள். அவ்விடத்திலே, முழக்கென இடியெனத் தம் முன்னே ஆரவாரம் எழ, ஏறுகள் முகாரமிட்டு நின்றன. 'ஏறு தழுவியவர்க்கே மகளைத் தருவேம்' என்ற ஆயர்குல வழக்குப்படி, ஏறு தழுவ முன் வந்தார் அனைவரும் வந்து சேர்ந்தனர். ஆரவாரத்தோடு எங்கும் புழுதியும் எழுந்தது. நல்ல மகளிர் திரண்டு ஒரு சார் நின்றனர். நீர் துறைகளிலும், ஆலமரத்தடிகளிலும், பழைய வலியுடைய மராமத்தின் கீழும் உறையும் தெய்வங்களுக்கு முறையாக வழிபாடுகள் செய்தபின், இளைஞரும் தொழுவினுள்ளே சீறிப் பாய்ந்தனர்.

**தோழி கூறுகிறாள் :**

உயர்ந்த கொம்பிடத்திலே வைத்த பட்டுப் பூச்சியினது நிறத்தைப் போன்ற, கருஞ்சிவப்பு நிறத்தைக் கொண்ட ஏற்றின் பார்வைக்கு அஞ்சாமல், அதன் மேற் பாய்ந்து பற்றினான் ஆயரிளைஞன். அவனைச் சாவுமாறு குத்திக் கொம்பினிடையிலே கொண்டு, அது அவனுடலைக் குலைக்கின்ற காட்சியைப் பார்! அழகிய சீருடைய, அசையும் இயல்பினதான, திரௌபதியின் தலைமயிரிலே கைநீட்டிய துச்சாதனனைப் போரிலே நெஞ்சத்தைப் பிளந்து அழித்துப் பகைவர் நடுவே தன் வஞ்சினத்தை நிறைவேற்றிய வீமசேனனைப் போல,. அதுவும் தோன்றுகின்றதல்லவோ?

சந்திரனைப் போன்ற நெற்றிச் சுட்டியையுடைய காரி, மலைப்பூக் கண்ணி சூடிய அப்பொதுவனைச் சாடிக் குடர்சரியக் குத்திக் குலைக்கின்றதைப் பார்! ஊழி முடிவிலே, ஒரு பாகத்தில் பசுமையான உமையையுடைய கடவுள், எருமை வாகனனான கூற்றுவனின் நெஞ்சத்தைப் பிளந்து, குடரைக் கூளிக்குப் பலியாக ஊட்டுவது போன்றிருக்கின்றல்லவோ?

செவிப்புறத்திலே மின்னும் நுண்ணிய செம்புள்ளி களையுடைய வெள்ளை ஏற்றின் கோபத்துக்கும் அஞ்சாது, அதன் மேற் பாய்ந்த இளைஞனை, அது சாடித், தன் கூரிய கொம்பு முனையால் குத்திக் குலைப்பதைப் பார். அடர்ந்த இருள் என்றும் கருதானாய். நடு இரவிலே வந்து தன் தந்தையைக் கொன்றவனைத், தன் ஆற்றலின் வலிமையினால், தலையைத் திருகிய அசுவத்தாமனைப் போன்றிருக்கிறதே அது!

ஆயர்கள் மணிமாலை அணிந்த குழலினை ஊதுகின்றனர். நல்ல நிமித்தம் இது. அழகிய மாலை அணிந்த உன் காதலனை உனக்குக் கட்டாயம் இன்று கொண்டு தரும். (இவ்வாறு கூறியவள், தலைவனிடம் சென்று அவனை ஊக்கப்படுத்துகின்றாள்)

மதங்கொண்ட களிற்றுயானையினும் மிகுந்த வலியுடைய ஏற்றை விடாது பற்றி நீ வெற்றிகொள்வாய். நீ அவ்வாறு செய்தால், எம் ஆயமகள் தோள் பிறரினும் வெற்றிக்கொடியைப் பெற்றதாகும். (பின்னர்த் தலைவியிடம் வந்து)

‘‘பகற்போதில் கண்ணியையுடையவன். வருத்தம் ஒலிக்கும் குழலினையுடையவன். தோள்மேல் வைத்த கோலினைப் பற்றி அசைத்துக்கொண்டே இருக்கும் கையன், அயலிலே கொல்லேறு சாட இருந்தானுக்கு, எம் பல்லிரும் கூந்தல் அணையாகப் பயன்பட நாமும் தருவோம்’’ என்றாள்.

‘‘ஏறு கொள்ள வல்லார் என்னைப் போன்றவர் எவரும் இலர்’’ என்று, நம் பசுத்திரளிடையே நின்று வீரம் பேசுகின்ற பொதுவன், நமக்கு ஒரு நாள் உறவினன் ஆகாமற் போவதில்லை. அவனைக் கண்டு எம் கண்களும் காதற் பயிரினை வளர்க்கின்றன என்கிறாள்’’ தலைவி.

தோழியும் தலைவியும் இவ்வாறு பேசி இருக்க, அங்கே தொழுவினுள் ஏறுகளும் வருந்தித் தளர்ந்தன. ஆயர்களிற் பலர் புண்பட்டனர். மணங்கமழும் கூந்தலினரான ஆய மகளிர் எல்லாரும், தம்மைக் காதலித்த பொதுவர்களுடன் சேர்ந்து, களித்து ஆட விரும்பியவர்களாக, முல்லை மலர் நிறைந்த குளிர்ந்த சோலையினுள்ளேயும் சென்று புகுந்தனர்.

இதனால், ‘நீயும் உன் தலைவனைப் பின்பற்றிச் செல்க’ எனத் தன்னருகே இருந்த தலைவிக்குத் தோழி கூறாமற் கூறியதுமாயிற்று.

## 2.4.பாடல் : 2 :ஏறு தழுவி வென்றவன் பாடியவர் : சோழன் நல்லுருத்திரன்

**தலைவன் :**

கண் அகல் இரு விசும்பில் கதழ் பெயல் கலந்து, ஏற்ற
தண்நறு பிடவமும், தவழ் கொடித் தளவமும்
வண்ண வண் தோன்றியும், வயங்கு இணர்க் கொன்றையும்
அன்னவை பிறவும், பல்மலர் துதையத்
தழையும் கோதையும் இழையும் என்று இவை
தைஇயினர், மகிழ்ந்து திளைஇ விளையாடும்
மடமொழி ஆயத்தவருள் இவள் யார், உடம்போடு
என் உயிர் புக்கவள், இன்று?

**தோழன் கூற்று :**

ஓஒ! இவள் பொரு புகல் நல்ஏறு கொள்பவர் அல்லால்,
திரு மா மெய் தீண்டலர் என்று கருமமா,
எல்லாரும் கேட்ப அறைந்து, எப்பொழுதும்
சொல்லால் தரப்பட்டவள்.

**தலைவன் கூற்று :**

சொல்லுக ‘‘பாணியேம்’’ என்றார் ‘‘அறைக’’ என்றார்
பாரித்தார் மாண் இழை ஆறு ஆகச் சாறு,

**சுற்றத்தார் கூற்று :**

சாற்றுள் பெடை அன்னார் கண் பூத்த நோக்கும் வாய் எல்லாம்
மிடை பெறின், நேராத் தகைத்து,
தகை வகை மிசை மிசைப் பாயியர் ஆர்த்து, உடன்
எதிர் எதிர் சென்றார் பலர்.
கொலை மலி சிலை செறிசெயிர் அயர் சினஞ் சிறந்து,
உருத்து எழுந்து ஓடின்று மேல்
எழுந்தது துகள்,
ஏற்றனர் மார்பு,
கவிழ்ந்தன மருப்பு,
கலங்கினர் பலர்,
அவருள் மலர் மலி புகல் எழ, அல் மலி மணிபுரை
நிமிர்தோள் பிணைஇ
எருத்தோடு இமில் இடைத் தோன்றினன் தோன்றி,
வருத்தினான் மன்ற அவ்ஏறு,
ஏறு எவ்வம் காணா எழுந்தார் எவன் கொலோ,
ஏறு உடை நல்லார் பகை?
மடவரே நல்ஆயர்மக்கள் நெருநை
அடல் ஏற்று எருத்து இறுத்தார்க் கண்டும் இன்றும்
உடல் ஏறு கோள் சாற்றுவார்
ஆங்கு, இனித்
தண்ணுமைப் பாணி தளராது எழூஉக,
பண் அமைஇன் சீர் குரவையுள், தெள் கண்ணித்,
திண்தோள், திறல் ஒளி, மாயப் போர், மாமேனி,
அம்துவர்ஆடைப் பொதுவனோடு, ஆய்ந்த
முறுவலாள் மென்தோள் பாராட்டிச் சிறுகுடி
மன்றம் பரந்தது உரை!

**தலைவன் :**

ஏடா! இதோ களிப்புடன் விளையாடும் கன்னியரின் கூட்டத்தைப் பார். பிடவும், முல்லையும், தோன்றியும் பிறவுமான மலர்களைக் கொய்து, தழை, கோதை, இழை என்பனவாகக் கட்டி அமைத்திருக்கின்றனர். களி துள்ள ஆடும் அக்கூட்டத்தினருள், இன்று தன் இடலோடும் என் உயிர் புகுமாறு கவர்ந்து கொண்டு அதோ நிற்கிறாளே, அவள் தான் யாரோ காண்?

**பாங்கன் :**

ஓ ஓ! அவளோ? “கொடிய போரெற்றைத் தழுவி வெற்றி பெறுபவரல்லாத பிறர், இவள் அழகு தவழ்கின்ற மேனியைத் தீண்டத்தக்கவர் அல்லர்!” என்று பறையறைந்து, சொல்லால் எங்கும் தரப்பட்டவள் அல்லளோ அவள்!

**தலைவன் :**

‘அவள் பெற்றோர் பாற் சென்று சொல்லுக யான் அந்தக் கொல்லேற்றைத் தழுவுதற்கு முன் வந்தேன்’ என்று,

**சுற்றத்தார் :**

சுற்றத்தார் சென்று அவள் பெற்றோர்பால் அவ்வெய்தியைச் சொல்லி, ‘யாங்கள் தாழ்த்திரோம்’ என்றனர். அது கேட்ட அவள் சுற்றத்தார், ‘மாணிழைக்காக நடைபெறும் ஏறு தழுவுதல் நிகழும்’ என்று பலரும் கேட்டு, அறிய எங்கணும் பறையறைவித்தனர்.

இவ்விழாவிலே, பெண்களெல்லாம் கண்கள் பூக்குமாறு நோக்கும் இடம் எல்லாம் பரணிலே இருக்கப் பெறுவார்களாயின், அதுவும் ஓர் அழகாயிருக்கும் என அமைத்தனர். அழகினை உடைத்தாகிய வகுப்பையுடைய அவ்வேறுகளின் மேலே பாய்வதற்காக, ஆரவாரத்துடன் அவற்றின் எதிர் எதிராகச் சென்றனர் ஆயரிளையுர்கள் பலர்,

அவர்கள் வரக்கண்ட ஏறுகள், கொலை மிகுந்த வில்லானது செறிந்த போரைச் செய்வது போன்று, சினங்கொண்டு எழுந்து, அவரை நோக்கிப் பாய்ந்து ஓடின.

அப்போது, எங்கணும் ஒரே புழுதிப் படலம் எழுந்தது. மார்பைக் காட்டி நின்றனர் ஆயர். ஏறுகளின் கொம்புகள் தரையை ஒட்டிக் கவிந்தன. ஐயோ! என்று கதறிக் கலங்கினர் பலர்.

அவருள், நீலமணி போன்ற நிறமுடைய நெடுந்தோள் ஏற்றின் கழுத்தை இறுகத் தழுவி, அதன் திமிலிடையிலே தோன்றினான் ஒருவன். தோன்றி, அந் ஏறு பெரிதும் வருத்தமுறும்படி அதனைப் பற்றி இழுத்து அலைத்தான் அவன்!

ஏறு படுகின்ற துன்பத்தைக் கண்டவர்கள் எழுந்தனர். ஏற்றின் உரிமையாளர்கள், அவன் செயலுக்குத் தாம் மகிழ்தல் அன்றி ஏனோ அவன்மேற் பகைகொள்கின்றனர். முன்னர் கண்டிருந்தும், இன்றும் வருத்துகின்ற ஏற்றைக் கொள்ளுங்கள் எனச் சொல்லுகின்றனரே இந்த ஆயர் மக்கள்? இவர்கள் மிகவும் அறியாமையை உடையவர்கள் தாமே!

ஆங்கு, இனித் தண்ணுமையின் பாணி தளராது எழுக! என்றனர் சுற்றத்தார். பண் அமைந்த இனிய தாளத்தையுடைய குரவையுள் விளங்கிய கண்ணியையும், திண்மையான தோள்களையும், திறலினது விளக்கத்தையும், மாயப் போரினையும், கரிய மேனியினையும், அழகிய துவரூட்டின ஆடையைமணிந்த பொதுவனோடு, சேரும் அழகிய முறுவலாளின் மென்

தோள்களையும் பாராட்டிச் சிறுகுடி மன்றத்திலே குரலையாடி மகிழலாம் எழுக' என்று கூற, அனைவதும் குரவை காண எழுந்தனர்.

## 2.5.பாடல் : 3 : ஆயமகள் தோள்!

குறிப்புகள்

**பொதுவர் ஏறு தழுவுதல் :**

மெல் இணர்க் கொன்றையும், மென் மெலர்க் காயாவும்,
புல் இலை வெட்சியும், பிடவும், தளவும்,
குல்லையும், குருந்தும், கோடலும், பாங்கரும்,
கல்லவும், கடத்தவும், கமழ் கண்ணி மலைந்தனர்
பலஆன் பொதுவர், கதழ் விடை கோள் காண்மார்
முல்லை முகையும் மருந்தும் நிரைத்தன்ன,
பல்லர், பெரு மழைக் கண்ணர்,. மடம் சேர்ந்த
சொல்லர், சுடரும் கனம் குழைக் காதினர்,
நல்லவர் கொண்டார் மிடை,
அவர் மிடை கொள,
மணி வரை மருங்கின் அருவி போல
அணி வரம்பு அறுத்த வெண்கால் காரியும்,.
மீன் பூத்து அவிர்வரும் அந்தி வான் விசும்பு போல்
வான் பொறி பரந்த புள்ளி வெள்ளையும்,
கொலைவன் சூடிய குழவித் திங்கள் போல்
வலையுபு மலிந்த கோடு அணி சேயும்,
பொரு முரண் முன்பின் புகல் ஏறு பல பெய்து,
அரிமாவும், பரிமாவும், களிறும், கராமும்
பெருமலை விடர் அகத்து ஒருங்கு உடன்குழீஇ,
படுமழை ஆடும் வரை அகம் போலும்,
கொடி நறை சூழ்ந்த தொழூஉ.
தொழுவினுள், புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தன ஏறு.
ஏற்றின் அரி பரிபு அறுப்பன சுற்றி,
எரி திகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்கண்
உருவ மாலை போலக்
குருதிக் கோட்டோடு குடர் வலந்தன.

**தோழி தலைவிக்குக் காட்டல் :**

கோட்டொடு சுற்றிக் குடர் வலந்த ஏற்றின் முன்,
ஆடி நின்று, அக்குடர் வாங்குவான் பீடு காண்
செந்நூல் கழி ஒருவன் கைப்பற்ற, அந்நூலை
முந் நூலாக் கொள்வானும் போன்ம்.
இகுளை! இ∴து ஒன்று கண்டை! இ∴து ஒத்தன்
கோட்டு இனத்து ஆயர் மகன் அன்றே, மீட்டு ஓரான்

போர் புகல் ஏற்றுப் பிணர் எருத்தில் தத்துபு
தார் போல் தழீஇயவன்?
இகுளை! இ∴து ஒன்று கண்டை! இ∴து ஒத்தன்
கோ இனத்து ஆயர் மகன் அன்றே, ஓவான்
மறை ஏற்றின் மேல் இருந்து ஆடித் துறை அம்பி
ஊர்வான் போல் தோன்றும் அவன்?
தொழீஇஇ! காற்றுப் போல வந்த கதழ் விடைக் காரியை
ஊற்று களத்தே அடங்கக் கொண்டு, அட்டு அதன்
மேல் தோன்றி நின்ற பொதுவன் தகை கண்டை!
ஏற்று எருமை நெஞ்சம் வடிம்பின் இடந்து இட்டுச்
சீற்றமொடு ஆர் உயிர் கொண்ட ஞான்று, இன்னன் கொல்
கூற்று என உட்கிற்று என் நெஞ்சு.
இகுளை! இ∴து ஒன்று கண்டை! இ∴து ஒத்தன்
புல்லினத்து ஆயர் மகன் அன்றே, புள்ளி
வெறுத்த வ யவெள் ஏற்று அம்புடைத் திங்கள்
மறுப்போல் பொருந்தியவன்?
ஓவா வேகமோடு உருத்துத் தன் மேல் சென்ற
சேஎச் செவி முதல் கொண்டு, பெயர்த்து ஒற்றும்
காயாம் பூங் கண்ணிப் பொதுவன் தகை கண்ட,
மேவார் விடுத்தந்த கூந்தல் குதிரையை
வாய் பகுத்து இட்டுப் புடைத்த ஞான்று, இன்னன் கொல்
மாயோன் என்று உட்கிற்று என் நெஞ்சு.
ஆங்கு இரும்புலித் தொழுதியும் பெருங்களிற்று இனமும்
மாறு மாறு உழக்கியாங்கு உழக்கிப் பொதுவரும்
ஏறுகொண்டு, ஒருங்கு தொழூஉ விட்டனர், விட்டாங்கே,
மயில் எருத்து உறழ் அணி மணி நிலத்துப் பிறழப்
பயில் இதழ் மலர் உண்கண்
மாதர் மகளிரும் மைந்தரும் மைந்து உற்றுத்
தாது எரு மன்றத்து அயர்வர் தழூஉ.
கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆயமகள்.
அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை,
நெஞ்சு இலார் தோய்தற்கு அரிய, உயிர் துறந்து,
நைவாரா ஆயமகள் தோள்,
வளியா அறியா உயிர் காவல் கொண்டு
நளிவாய் மருப்பு அஞ்சும் நெஞ்சினார் தோய்தற்கு
எளியவோ ஆயமகள் தோள்?
விலை வேண்டார் எம் இனத்து ஆயர் மகளிர்,
கொலை ஏற்றுக் கோட்டு இடைத் தாம் வீழ்வார் மார்பின்
முலை இடைப் போலப் புகின்,

குறிப்புகள்

ஆங்கு,.
குரவை தழீஇ, யாம் மரபுளி பாடி,
தேயா விழுப்ப புகழ்த் தெய்வம் பரவுதும்,
மாசு இல் வான் முந்நீர்ப் பரந்த தொல் நிலம்
ஆளும் கிழமையொடு புணர்ந்த
எங்கோ வாழியர், இம் மலர்தலை உலகே!.

பல பசுக்களுக்கு உரிமையுடையவரான பொதுவர்கள், கல்லிடத்தனவும், காட்டிடத்தனவும் ஆகிய மென்மையான கொன்றை, காயா, வெட்சி, பிடவம், முல்லை, கஞ்சங்குல்லை, குருந்தம், கோடல், பாங்கர் முதலிய மலர்களாற் செய்த கண்ணிகளைச் சூடியவராக வந்து கொண்டிருந்தனர். அவர்கள் விரைந்து வந்து ஏறுதழுவுதலைக் காண விரும்பிய ஆயர்மகளிர் பலரும், பரண்களிலே முற்படவே வந்து அமர்ந்தனர். முல்லை முகையும் மயிற்பீலிக் கொழுந்தும் வரிசைப்படுத்தயியது போன்ற பல் வரிசையும், குளிர்ந்த நோக்கும், மடப்பம்பொருந்திய சொல்லும் உடையவரான அந்த ஆயமகளிர், காதுகளிலே பொன்னாற் செய்த மகரக் குழைகளையும் அணிந்து கொண்டிருந்தனர்.

ஏறுகள் திரண்டிருந்த தொழுவோ ஒரே புழுதிப் படலத்தின் இடையே விளங்கிற்று. பெருமழை பெய்து எங்கும் வெள்ளமான காலத்திலே, மலக்குகையிலே சிங்கமும் குதிரையும் யானைகளும் முதலைகளும் ஒருங்கே சேர்ந்திருந்தால் எப்படியோ, அப்படிப்பட்ட ஆரவாரத்துடன் எருதுகள் யாவும் பயங்கரமாச் சுற்றிச் சுழன்று திரிந்தன. ஓர் எருது கருமை நிறமாக வெள்ளை கால்களுடன் காணப்பட்டது. மற்றொன்று அந்தி வானம் போலச் சிவந்த உடலில் புள்ளியுடன் விளங்கிற்று. மற்றொளன்று சிவன் அணிந்த பிறை போல் வளைந்த கொம்புடையதாயிருந்தது. இவற்றோடு வேறு பலவும் ஒன்றோடொன்று முக்காரமிட்டுச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

அத் தொழுவினுள், அவ்வேறுகளைத் தழுவிப் பற்றி வெற்றி கொள்ள விரும்பிக் குதித்த ஆரியளைஞரை, அவை தெரிந்து, தம் கொம்புகளால் குத்தின அவ்வாறு அவ்வேறுகள் குத்தின காட்சிகள் பயங்கரமானவை! இறைவனின் பிறையிலே சூடிய சிவந்த மாலையைப் போலப், பகையான எருதுகளை விரும்பிச் சென்று போக்குவனவாகிய ஏற்றினங்கள், குருதி தோய்ந்த கொம்புகளிற் குடர்கள் சுற்றியிருக்க விளங்கின. அப்படி நின்ற ஏற்றின் மன்னர், அஞ்சாது சென்று, நின்று, அக்குடரை வாங்கித் தன் வயிற்றிலே இடுபவன்றன்னைப் பார். சிவந்த நூற்கழிழயஒருவன் இரண்டு கைளிலும் பிடித்துக்கொள்ள, அந்நூலை மூன்று வடமாக நூற்கின்றவனைப் போலத் தோன்றுகின்றானே! அவன் பெருமைதான் என்னேடி?

போர்க்குணம் உடைய ஏற்றின் கழுத்திலே பாய்ந்து, அதிலிட்ட மாலைபோலே தழுவிக் கிடப்பவைனைப் பாரடீ! அவன் எருமைத் திரளுக்கு உரிய ஆயனல்லவோ! எனவே, இனி அவன் அதை விடமாட்டான். தோழி!

*Self -Instructional Material*

இதோ இஃதொன்று கண்டாயோ? இவன் ஒருவன், கோவினத்தாயர் மகன் அல்லனோ? மறையேற்றின் மேலிருந்து ஆடிவிட்டுத் தெப்பத்திற் கிடந்து அதனைத் தள்ளுவதுபோல, ஏற்றின் மேலிருந்து தழுவிக் கொண்டிருக்கின்றானோ? இவன் தன் முயற்சியைக் கைவிடான்!

பார்த்துக் கொண்டிருப்பவளே! காற்றுப்பேல வந்து விரைந்த காரி ஏற்றை, பலரும் வந்து பொருதுகின்ற களத்திலே முழுவதும் வலியடங்குமாறு வருத்தி. அதன்மேல் தோன்றி நிற்கும் பொதுவனின் சிறப்பைக் காணடீ! எருமை ஏற்றிற்கு உரியோனாகிய கூற்றுவனின் நெஞ்சத்தைக் காலாலுதைத்துச், சீற்றமோடு சிவனார் அந்நாளிற் பிளந்தபோது, இப்படித் தானிருந்தாரோ? அதைக் கண்டு, என் நெஞ்சமும் திடுக்குற்றதேடீ!

புள்ளி செறிந்த வலிய வெள்ளை ஏற்றைத் திங்களிலே மறுப்போலத் தழுவி ஒருவன் நிற்பதைக் காணடீ! இவன் ஒருவன்! ஆட்டினம் உடைய ஆயர்மகன் அல்லனோ!

கட்டுக்கடங்காத வேகத்துடன் வெவ்விதாகத் தன் மேற் சென்ற சிவந்த ஏற்றினைச் செவியடியிற் பற்றிக் கொண்டு, அதனைப் புரட்டி வென்று நிற்கும் காயாம் பூக்கண்ணி சூடியவனைப் பாரடீ! பகைவர் விடுத்த கூந்தற் குதிரையை வாயைப் பிளந்து கொன்ற காலத்திலே, நம் மாயவனும் இப்படித்தான் இருந்திருப்பானோ? என்று என் நெஞ்சம் நடுங்குகின்றதடீ!

இப்படியாக, அங்கே கொடிய புலிக்கூட்டமும், பெருங்களிற்றினமும் மாறுமாறு தம்முள் புரண்டு புரண்டு போரிட்டனபோல, ஏறுகளும் பொதுவரும் போரிட்டனர். ஏறு தழுவி வெற்றி கொண்ட பொதுவரனைவரும் ஒருங்கே தொழுவைவிட்டு வெளி வந்தனர். வந்த பின்னர், அங்கே, மயிற் கழுத்திலே புரளும் அழகிய மணி நீலத்தையும் மாறுபடும் மையுண்ட கண்ணினரான, அவர் காதல் கொண்ட மகளிரும், மைந்தரும் காதற் பெருக்காலே மன வலியுற்றுப், பூந்தாதாகிய தாது எருவாக வீழ்ந்து கிடக்கின்ற மன்றத்திற் சென்று, ஒருவரையொருவர் தழுவியாடும் கூத்தினை ஆடுகின்றனர். அங்கே நாமும் சென்றாடுவோம் வா என ஒருத்தியையழைக்க, மகளிர் இருவரும் அங்கே சென்றனர்.

கொல்லேற்றின் கொம்புக்கு அஞ்சுகின்றவனை, மறுமையிலும் ஆயமகள் தழுவமாட்டாள்.

அஞ்சாதவராக் கொல்லேற்றைத் தழுவிக் கொள்பவரையல்லாமல், அத்தகைய நெஞ்சில்லாதவர் தழுவுவதற்கு அரியன ஆயமகள் தோள்கள். அவர்கள், ஏன் வீணே காமத்தால் உயிர் துறந்து நைவதற்கு முயல்கின்றனர்?

காற்றுப் போலப் போய்விடுவது உயிர் என்றறியாமல், உயிரைக் காவல் காக்கும் அச்சங்கொண்டு, ஏற்றின் மருப்பிற்கு அஞ்சியிருக்கும் நெஞ்சினார் தழுவுவதற்கு, அத்துணை எளியவோ, ஆயமகள் தோள்கள்?

எம் இனத்து ஆயர் முலைவிலை வேண்ட மாட்டார்கள். ஆனால், கொல்லேற்றுக் கொம்பினிடையினைத், தாம் காதலிக்கும் பெண்களின்

முலையிடையே போலக் கருதி, ஆர்வமுடன் வீழ்ந்து தழுவினால், அவனையே தம் மகட்கேற்றவனாகக் கருதுவார்கள்.

அங்கே, குரவையை யொட்டியே நாம் எம் மரபுகளைச் சுட்டிப்பாடத் தேயாத புகழை உடைய தெய்வத்தைப் போற்றுவோமாக. மாசற்ற அழகிய கடலிடத்தே பரந்து கிடக்கின்ற பழைய நாட்டை, ஆளும் உரிமையோடு வந்து ஆட்சி செய்கின்ற எங்கோமானான பாண்டியன், இவ்வகன்ற உலகிலே என்றென்றும் நிலைபெற்று வாழ்வானாக!

## 2.6.பாடல் : 4 : ஊராரை உச்சி மிதித்து!

**தோழி கூற்று :**

மலி திரை ஊர்ந்து தன் மண் கடல் வௌவலின்,
மெலிவு இன்றி மேல் சென்று மேவார் நாடு இடம்படப்,
புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த கிளர் கெண்டை,.
வலியினான் வணக்கிய வாடாச் சீர் தென்னவன்
தொல் இசை நட்ட குடியொடு தோன்றிய
நல் இனத்து ஆயர் ஒருங்கு தொக்கு எல்லாரும்,
வான் உற ஓங்கிய வயங்கு ஒளிர் பனைக் கொடிப்
பால் நிற வண்ணன் போல் பழி தீர்ந்த வெள்ளையும்,
பொரு முரண் மேம்பட்ட பொலம் புனை புகழ் நேமித்
திரு மறு மார்பன் போல் திறல் சான்ற காரியும்,
மிக்கு ஒளிர் தாழ் சடை மேவரும் பிறை நுதல் ஷ
முக்கண்ணான் உருவே போல் முரண் மிகு குராலும்,
மா கடல் கலக்குற மா கொன்றை மடங்காப் போர்
வேல் வல்லான் நிறனே போல் வெரு வந்த சேயும், ஆங்கு அப்
பொருவரும் பண்பினவ்வையும், பிறவும்
உருப் பல் கொண்மூக் குழீஇயவை போலப்
புரிபு புரிபு புகுத்தனர் தொழூஉ.
அவ்வழி முள் எயிற்று ஏஎர் இவளை பெறும், இது ஓர்
வெள் ஏற்று எருத்து அடங்குவான்.
ஒள்ளிழை வாருறு கூந்தல் துயில் பெறும், வை மருப்பின்
காரி கதன் அஞ்சான் கொள்பவன் ஈர் அரி
வெரூஉப் பிணை மான் நோக்கின் நல்லாள் பெறூஉம் இக்
குரூஉக் கண் கொலை ஏறு கொள்வான் வரிக் குழை
வேய் உறழ் மென் தோள் துயில் பெறும், வெந்துப் பின்
சேஎய் சினன் அஞ்சான் சார்பவன் என்று ஆங்கு,
அறைவனர், நல்லாரை, ஆயர் முறையினால்,
நாள்மீன் வாய் சூழ்ந்த மதி போல் மிடை மிசைப்
பேணி நிறத்தார் அணி.
அவ்வழி பறை எழுந்து இசைப்பப், பல்லவர் ஆர்ப்பக்
குறையா மைந்தர் கோள் எதிர் எடுத்த
நறை வலம் செய விடா இறுத்தன ஏறு.

அவ் ஏற்றின்
மேல்நிலை மிகல் இகலின், மிடை கழிபு இழிபு, மேல்சென்று
வேல் நுதி புரை விறல் திறன் நுதி மருப்பின் மாறு அஞ்சான்,
பால்நிற வெள்ளை எருத்தத்து பாய்ந்தானை
நோனாது குத்தும் இளம் காரித் தோற்றம் காண்,
பால் மதி சேர்ந்த அரவினைக் கோள் விடுக்கும்
நீல் நிற வண்ணனும் போன்ம்.
இரிபு எழுபு அதிர்பு அதிர்பு இகந்து உடன் பலர் நீங்க
அரிபு அரிபு இறுபு இறுபு குடர் சோரக் குத்தித், தன்
கோடு அழியக் கொண்டானை ஆட்டித் திரிபு உழக்கும்
வாடில் வெகுளி எழில் ஏறு கண்டை, இ∴து ஒன்று,
வெருவரு தூமம் எடுப்ப வெகுண்டு
திரிதரும் கொல் களிறும் போன்ம்.
தாள் எழு துணி பிணி இசை தவிர்பு இன்றித் தலைச் சென்று,
தோள் வலி துணி பிணி துறந்து இறந்து எய்தி மெய் சாய்ந்து,
கோள் வழுக்கித் தன் முன்னர் வீழ்ந்தான் மேல் செல்லாது
மீளும் புகர் ஏற்றுத் தேற்றம் காண், மண்டு அமருள்,
வாள் அகப்பட்டானை ஒவ்வான் எனப் பெயரும்
மீளி மறவனும் போன்ம்.
ஆங்க, செறுத்து அறுத்து உழக்கி ஏற்று எதிர் நிற்ப,
மறுத்து மறுத்து மைந்தர் சாரத்
தடி குறை இறுபு இறுபு தாயின் கிடப்ப,
இடி உறழ் இசையின் இயம் எழுந்து ஆர்ப்பப்,
பாடு ஏற்றுக் கொள்பவர் பாய்ந்து மேல் ஊர்பவர்
கோடு இடை நுழைபவர் கோள் சாற்றுபவரொடு,
புரிபு மேல் சென்ற நூற்றுவர் மடங்க,
வரிபுனை வல் வில் ஐவர் அட்ட,
பொரு களம் போலும் தொழூஉ.
தொழுவினுள் கொண்ட ஏறு எல்லாம் புலம் புகத் தண்டாச் சீர்
வாங்கு எழில் நல்லாரும் மைந்தரும், மல்லல் ஊர்
ஆங்கண் அயெர்வர் தழூஉ.

**தோழி அழைத்தல் :**

பாடுகம் வம்மின்! பொதுவன் கொலை ஏற்றுக்
கோடு குறி செய்த மார்பு.



**தலைவி :**

நெற்றிச் சிவலை நிறை அழித்தான் நீள் மார்பில்
செற்றார் கண் சாய யான் சாராது அமைகல்லேன்
பெற்றத்தார் கவ்வை எடுப்ப, அது பெரிது
உற்றீயாள் ஆயர்மகள்
தொழீஇஇ! ஒருக்கு நாம் ஆடும் குரவையுள், நம்மை

அருக்கினான் போல் நோக்கி அல்லல் நோய் செய்தல்,
குரூஉக் கண் கொலை ஏறு கொண்டேன் யான் என்னும்
தருக்கு அன்றோ ஆயர்மகன்?

**தோழி :**

நேர் இழாய்! கோள் அரிது ஆக நிறுத்த கொலை ஏற்றுக்
காரி கதன் அஞ்சான் பாய்ந்த பொதுவற்கே,
ஆர்வுற்று எமர் கொடை நேர்ந்தார், அல் எடுத்த
ஊராரை உச்சி மிதித்து,
ஆங்கு,
தொல் கதிர் திகிரியான் பரவுதும், ஒல்கா
உரும் உறழ் முரசின் தென்னவற்கு
ஒரு மொழிஅ கொள்க இவ்உலகு உடன் எனவே.

முற்காலத்தே கடலலைகள் மிக்குப் பொங்கி எழுந்தன. பாண்டியனின் நாட்டை விழுங்கின் அதனால் பாண்டியன் தளர்ந்துவிடவில்லை. தன் நாட்டை விரிவாக்கும் பொருட்டுத் தன்னுடன் பகைகொண்டிருந்த சேரசோழ நாடுகளை வென்று, அவற்றின் பகுதிகளைச் சேர்த்துப் புதிய பாண்டிய நாட்டைக் கண்டான். தான் வென்ற பகுதிகளிலிருந்த புலி, வில் கொடிகளைப் போக்கி, அங்கெல்லாம் கயற்கொடியினைப் பறக்கச் செய்தான். தன் ஆற்றலினால், இயற்கையின் கொடுமையையும் வென்றுவிட்ட வாடாத சீருடையவன் தென்னவனாகிய அப்பாண்டியன். அவனுடைய பழைய புகழை நிலைபெறுத்திய பல குடிகளோடு, தாமும் புகழுடன் விளங்கிய நல்ல இனத்தோர்கள் ஆயர்கள். அவர்கள் எல்லாரும் ஒரு நாள் ஒன்றாகக் கூடினர்.

பனைக் கொடியோனான பலராமனைப் போல வெள்ளை வெளேறென்றிருந்தது ஓர் எருது போர்க்கணம் மிகவும் உடையதான மற்றொன்று, திருமாலைப் போலக் கன்னங்கரேலென்றிருந்தது. மற்றொன்று, முக்கண்ணனான சிவபிரானுடைய மேனியைப்போலச் செக்கச் செவேலென்றிருந்தது. இன்னொன்று, கடல் கலங்கச் சென்று சூரனை வென்ற வேலேந்திய முருகனின் நிறம்போல இளஞ்சிவப்பு நிறமுடன் விளங்கிற்று. இப்படியாகப் பெருதற்குணம் உள்ளனவும் இல்லாதனவும்மான பல எருதுகளைகும், மேகங்கள் திரண்டெழுந்து முழங்குவன போல முக்காரமிட்டு அவை திரளும் படியாகத் தொழுவினள் போகவிட்டனர். அவ்விடத்திலே…

இஃது ஓர் வெள்ளை நிற எருது. இதன் கழுத்தை அணைத்து அடக்குபவன், முள் எயிற்று அழகியான இவளை மனைவியாகப் பெறுவான். கூரிய கொம்பினையுடைய கரிய ஏற்றினது சினத்துக்கும் அஞ்சாது, அதனைத் தழுவி அடக்குபவன், இந்த ஒள்ளிழையின் வாருதலுள்ள கூந்தலிலே துயிலுகின்ற பேற்றைப் பெறுவான். குரால் நிறத்தவாகிய

கண்களை உடைய கொலைக்குணமுடைய ஏற்றைத் தழுவுபவன், மான்பிணை நோக்குப் வேற் கண்களுடைய இந்த நல்லவளைப் பெறுவான். கொடிய வலிமையுடைய செவலை எருதை அஞ்சாது சென்று அடக்குபவன், வரி பொருந்திய குழையும், வேய் போன்ற தோளும் உடைய இவளுடன் துயில்தலைப் பெறுவான்.

என்று, நல்லாயர், தமக்குரிய முறைப்படி அறிவத்து, விண்மீன்கள் சூழ விளங்கும் மதிபோலத் தத்தம் மகளிரையும், தோழிப்பெண்கள் சூழப் பரண்களிலே ஒப்பித்து நிறுத்தினர்.

அப்பொழுது பறைகள் மிகுந்த ஓசையுடன் முழங்கின. பலரும் ஆரவார ஒலி செய்தனர் குறையாத வலியுடைய பொதுவர்கள், ஏறு தழுவிக் கொள்ள எதிராகக் காத்து நின்றனர். புகைவலம் விடப்பட்டு நின்ற ஏறுகள், கூக்குரல் பறை முழக்கம் முதலியவையாற் சினந்து, அப்பொதுவர்கள் மேலே சீறிப்பாய்ந்தன (இந்தக் காட்சியை ஒருத்தி தன் தோழிக்குக் காட்டி விளக்குகின்றாள்)

ஒரு மாட்டின் மீது தாவி ஏறிய ஒருவன், மேலே இருப்பது மிகவும் கடினமாயிருந்ததால், அங்கிருந்தும் இறங்கி, மேலும் சென்று, அந்த மாட்டின் கொம்புகள் வேல் நுனி பொலக் கூரியவாய் இருந்தும் அங்சாதவனாக, அந்த வெள்ளையின் கழுத்திலே பாய்ந்து அணைத்துத் தழுவினான். அவனை, அண்மையிலிருந்த இளங்காரி இடைவிடாது குத்தும் தோற்றத்தைப் பாராடீ! நிலவை விழுங்க முயன்ற பாம்பினை விடுவிக்கும் நீல நிற வண்ணனைப் போல் இருக்கின்றதன்றோ!

எழுந்தெழுந்து வந்த பலரும் அதிர்ந்ததிர்ந்து உடனே ஓடிப்போகுமாறு, எலும்புகள் முறியவும், குடர்கள் சரியவுமாகக் குத்திப் பின்னர் தன் கொம்பின் வலிமை அழியுமாறு தழுவிக் கொண்டிருந்தவனையும், அங்கு மிங்குமாக ஆட்டி, அலைத்துத் திரிந்து வருத்தும், சினங் குறையாத அந்த ஏற்றைப் பார்த்தாயோடீ! வெருவுதல் வருவதற்குக் காரணமான புகையைக் கையிலே எடுத்துவரக் கண்ட கொல்களிறு, அதன் வாடைக் குட்படாமல் வெகுண்டு விலகித் திரிவது போலிருக்கின்றதன்றோ?

ஏறு தழுவும் ஆற்றலும் ஆசையும் உடையவனாக இருந்தாலும் அந்த முறையறியாது சென்ற ஒருவன், புகர் நிற ஏற்றைத் தழுவ முயன்று, இயலாது சாய்ந்து நிலத்திலே வீழ்ந்தான். அவன் நிலையைக் கண்ட அந்த எருது, தன் முன்னே புண்பட்டு வீழ்ந்தவன் ஆதலின், அவன்மேற் செல்லாது திரும்பிவிடும் தோற்றம் காணடீ! மிகுந்த கொடும்போரிலே, வாள் எல்லையில் வந்து அகப்பட்ட ஒருவனைக்கூட, என் நிலைக்குத் தகுதியற்றவன் இவன். இவனைக் கொல்லேன் என விட்டச் செல்லும், மறவர் தலைவனைப் போன்றிருக்கின்றதல்லவோ?

கொம்பு, மார்பிலே படுதலை மார்பு கொடுத்து ஏற்றுக் கொள்பவர் சிலர். கொம்பின் மேலே பாய்ந்து ஏறுபவர் சிலர், கொம்பினிடையிலே புகுபவர் சிலர், ஏறு கொள்ள வல்லேன் என்று சாற்றுபவர் சிலர்.

குறிப்புகள்

இப்படியாகப் பொதுவர் பலரும் அங்கே விளங்கினர். ஏறுகளோடு பொருது, பின்பும் பொருதற்கு முயல்பவரைத் தடுத்து நிறுத்த முயல்வார் சிலர். அவரையும் விலக்கி விலக்கி அவர் சென்று தழுவுவர். ஏறு தழுவுதலினால் முறிந்து முறிந்து, அற்றுப் பறந்த தலைகள், எங்கும் பரவிக் கிடந்தன.

இடி முழக்கம் போன்று ஏறுகள் முக்காரமிட்டு முழங்கின. வாத்தியங்கள் ஆரவாரித்தன. இத்தன்மைகளால், அத்தொழு, துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும் இடையே நடந்த பாரதப் போர்க்களத்தைப் போலப் பயங்கரமாக விளங்கிற்று.

**தோழி** : தொழுவினுள் விட்ட ஏறுகள் எல்லாம் மேய்ச்சலுக்குப் போக, அமையாத சீரம் கண்கவரும் அழகும் உடைய ஆயர் மகளிரும் மைந்தரும், வளமிகுந்த ஓரிடத்தே சென்று தழுவிக் குரவையாடுவர். பொதுவனுடைய, பொல்லேற்றுக் கொம்பு வடுச் செய்த மார்பினைப் போற்றிப் பாடுவோம் வாருங்களடீ என்றாள் தலைவியிடம்.

**தலைவி** : நெற்றிச் செவலையின் ஆற்றலை அழித்தவனின் பரந்த மார்பிலே, முன்பு இகழ்ந்தவரின் கண்கள் சாயுமாறு, யான் தழுவாது அமைந்திருக்க மாட்டேன். ஆய்ச்சியர் அல் எடுக்கபட்டு? இந்த ஆயர் மகள் அதனை இனிப் பெரிதாக எண்ணவே மாட்டாள்.

தோழீ! நாமெல்லாரும் ஒருங்கே ஆடும் இக்குரவைக் கூத்தினுள், நம்மை அருக்கினான் போலப் பார்த்து, நமக்கு வருத்தமுறும் நோயைச் செய்தானே, அது கருங்கண்ணுடைய கொலை ஏற்றத்தைத தழுவி யான் உன்னைக் கைக் கொண்டேன் என்னும் தருக்கு அல்லவோ? பாரடீ அந்த ஆயர் மகனை!

**தோழி** : ஒத்த இழையினையுடையவளே! பிறராற் கொள்ளுதல் அரிதாக நின்றங கொல்லேறான காரியின் சினத்திற்கு அஞ்சாது பாய்ந்த பொதுவனுக்கே, ஆர்வமுடன் எம்மவரும் நின்னைக் கொடுக்க முடிவு செய்தனர். அலர் தூற்றிய ஊராரின் உச்சியிலே மித்தது போலல்லவோ செய்தனர்! இனி, ஏனடீ நீயும் வருந்துகிறாய்?

கெடாத உருமேற்றை(இடி)யும் விடப் பெரியது முழங்கும் முரசினையுடைய பாண்டியனுக்கே இவ்வுலகு சேர்வதாக!

அவனுடைய ஒரு மொழியையே அனைத்துலகும் கேட்பதாக! இவ்வாறு கூறுவோம் பழையதாகிய கதிரையுடைய சக்கரப் படையை உடைய திருமாலைப் போற்றுவேம். நீயம் வருக!

## 2.7.பாடல் : 05 : நெஞ்சம் சென்றதடீ!

**தோழி கூற்று :**

அரைசு படக் கடந்து அட்டு ஆற்றின் தந்த,
முரைசு கெழு முது குடி முரண் மிகு செல்வற்குச்,
சீர் மிகு சிறப்பினோன் தொல் குடிக்கு உரித்து எனப்
பார் வளர் முத்தமொடு படு கடல் பயந்த
ஆர்கலி உவகையர் ஒருங்கு உடன் கூடித்
தீது இன்று பொலிக என தெய்வக் கடி அயர்மார்,

வீவு இல் குடிப்பின் இருங்குடி ஆயரும்,
தாஇல் உள்ளமொடு துவன்றி ஆய்பு உடன்,
வள்உருள் நேமியான் வாய் வைத்த வளை போலத்
தெள்ளிதின் விளங்கும் சுரி நெற்றக் காரியும்,
ஒரு குழையவன் மார்பில் ஒள் தார் போல் ஒளி மிகப்
பொரு அறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்,
பெரும் பெயர் கணிச்சியோன் மணி மிடற்று அணி போல
இரும் பிணர் எருத்தின் ஏந்து இமில் குராலும்,
அணங்கு உடை வச்சிரத்தோன் ஆயிரம் கண் ஏய்க்கும்
கணம் கொள் பல் பொறிக் கடும் சினப் புகரும் ,
வேல்வலான் உடைத் தாழ்ந்த விளங்கு வெண்துகில் ஏற்ப்ப
வாலிது கிளர்ந்த வெண்கால் சேயுஉம்,
கால முன்பின் பிறவும் சால
மடங்கலும் கணிச்சியும் காலனும் கூற்றும்,
தொடர்ந்து செல் அமையத்து துவன்று உயிர் உணீஇய
இடங்கு கொட்பன போல் புகுத்தனர் தொழூஉ,
அவ்வழி,
கார் எதிர் கலி ஒலி கடி இடி உருமின் இயம் கறங்க,
ஊர்பு எழு கிளர்பு உளர் புயல் மங்குலின் நறை பொங்க
நேர் இதழ் நிரை நிரை நெறி வெறிக் கோதையர் அணி நிற்பச்,
சீர் கெழு சிலை நிலைச் செயிர் இகல் மிகுதியின், சினப் பொதுவர்
தூர்பு எழு துதை புதை துகள் விசும்பு உற எய்த,
ஆர்பு உடன் பாய்ந்தார் அகத்து,
மருப்பில் கொண்டும் மார்பு உற தழீஇயும்,
எருத்து இடை அடங்கியும் இமில் இறப் புல்லியும்,
தோள் இடைப் புகுதந்தும் துதைந்து பாடு ஏற்றும்,
நிரைபு மேல் சென்றாரை நீள் மருப்பு உறச் சாடிக்,
கொள இடம் கொள விடா நிறுத்தன ஏறு.
கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய் சாக் குத்திக்
கொள்வார் பெறாஅக் குரூஉச் செகில் காணிகா,
செயிரின் குறை நாளால் பின் சென்று சாடி
உயிர் உண்ணும் கூற்றமும் போன்ம்.
பாடு ஏற்றவரைப் படக் குத்திச் செங்காரிக்
கோடு எழுந்து ஆடும் கண மணி காணிகா
நகை சால் அவிழ் பதம் நோக்கி நறவின்
முகை சூழும் தும்பியும் போன்ம்.
இடைப் பாய்ந்து எருத்தத்துக் கொண்டானோடு எய்தி
மிடைப் பாயும் வெள் ஏறு கண்டைகா,
வாள்பொரு வானத்து அரவின் வாய் கோட்பட்டுப்
போதரும் பால் மதியும் போன்ம்.

ஆங்க ஏறும் பொதுவரும் மாறுற்று மாறா
இருபெரு வேந்தரும் இகலி கண்ணுற்ற
பொரு களம் போலும் தொழூஉ,

**தோழி தன் நெஞ்சோடே தலைவி விரும்பக் கூறியது :**

வெல் புகழ் உயர்நிலைத் தொல் இயல் துதை புதை துளங்கு இமில்
நல்ஏறு கொண்ட பொதுவன் முகன் நோக்கிப்
பாடு இல ஆயமகள் கண்.

**தலைவியை நோக்கித் தோழி கூறுதல் :**

நறு நுதால்! என் கொல் ஐங்கூந்தல் உளரச்,
சிறுமுல்லை நாறியதற்கு குறு மறுகி,
ஒல்லாது உடன்று எமர் செய்தார் அவன் கொண்ட
கொல் ஏறு போலும் கதம்?
நெட்டிரும் கூந்தலாய்! கண்டை, இஃது ஓர் சொல்
கோட்டு இனத்து ஆயர் மகனொடு யாம் பட்டதற்கு
எம் கண் எமரோ பொறுப்பர் பொறாதார்
தம் கண் பொடிவது எவன்?

**தலைவி கூற்று :**

ஒண்ணுதால்!
இன்ன உவகை பிறிது யாது யாய் என்னைக்
கண் உடைக் கோலள் அலைத்ததற்கு, என்னை
மலர் அணி கண்ணிப் பொதுவனோடு எண்ணி,
அல் செய்து விட்டது இவ் ஊர்?
ஒன்றிப் புகர் இனத்து ஆயமகற்கு, ஒள் இழாய்!
இன்று எவன் என்னை எமர் கொடுப்பது, அன்று அவன்
மிக்குத் தன் மேல் சென்ற செங்காரிக் கோட்டு இடைப்
புக்கக்கால் புக்கது என் நெஞ்சு?

**தோழி கூற்று :**

பாடு இமிழ் பரப்பு அகத்து அரவணை அசைஇய
ஆடு கொள் நேமியான் பரவுதும், நாடு கொண்டு
இன் இசை முரசின் பொருப்பின், மன்னி
அமைவரல் அருவி ஆர்க்கும்
இமையத்து உம்பர் உம் விளங்குக, எனவே.

மாற்றானின் அரசுகள் பட்டு வீழும்படியாக அவரைக் கொன்று, அரச நெறியாலே அவர்கள் செல்வங்களைக் கொண்டு வரும். தலைமை மிகுந்த சிறப்புக்களை உடையவன் பாண்டியன். அவனுடைய பழைதாகிய குடிக்கு உரியதென்று கூறப்படும் பாண்டி மண்டலத்து விளைவுகளும், கடல்தரும் முத்தும், பிறவும் என்றும் குறைவின்றிப் பெருக வேண்டும். முரண் மிகுந்த அரசர்களிடையே, சீர் மிகுந்த சிறப்பினோன் அவன். அவன் வாழ்க! என உள்ளத்திலே கொண்டு, தெய்வத்திற்குச் சிறப்புக்களைச் செய்து, ஆயர்கள்

வழிப்பட்டனர். புகழ்பெற்ற பாண்டிநாட்டுக் குடிகளுள் ஒருவரான ஆயர். அதன்பின், ஆர்வமுடன் ஏறு தழுவுதல் விழாவுக்கானவற்றையும் செய்தனர் .

திருமாலின் சங்கம் போல நெற்றியிலே சங்கு வெள்ளைச் சுட்டியுடன் விளங்கிய கரிய ஏறு ஒன்று, பலராமன் மார்பிலே சிவந்த மாலை விளங்குவது போலச் சிவப்பு மறு விளங்கும் வெள்ளை நிற ஏறு ஒன்று. சிவபிரானின் நீலமணிக் கழுத்துப் போலத் தன் கழுத்தும் கபில் நிறம் கொண்ட ஏறு ஒன்று, ஆயிரங்கண் இந்திரன் போலப் பல புள்ளிகளுடன் விளங்கிய புகர் நிறத்து எருது ஒன்று, முருகன் அணிந்த வெள்ளைத் துகில்போல் வெள்ளைக் கால்களையுடைய சிந்த ஏறு ஒன்று. இவற்றுடன், இவை பேலக்காலனது வலியுடைய பிறவும் ஒருங்கு சேரத், தொழுவுள் ஏறுகளைப் போகவிட்டனர். ஊழியிறுதியிலே, தீயும், கணிச்சியும், காலனும், கூற்றவனும் உயிர்களை வாங்கச் சுழன்று சுழன்று ஒன்றாகத் திரியுமாறு போல, அவை எல்லாம் தொழுவினுள் சுழன்று சுழன்று சுற்றிக்கொண்டிருந்தன.

அவ்வேளையிலே, மழைக்காலத்து இடிமுழக்குப் போன்று வாத்தியங்கள் சேர்ந்து ஒலித்தன. வானிலே மேகக்கூட்டம் செல்வனபோலப் புகைப்படலமும் எழுந்தது. மாலையணிந்த ஆயர் மகளிர் வந்து நிரைநிரையாக நின்றனர். பொதுவர்கள் போர்ச் சினம் மூளவரும் ஆரவாரத்தால் எழுந்த புழுதிப்படலம், வானை எழுந்து முட்டியது. அவர்கள் தொழுவினுள் சீறிப் பாய்ந்தனர்.

அங்ஙனம் பாய்ந்து, ஏற்றின் கொம்பைப் பற்றி மார்புடன் தழுவிக் கொண்டனர் சிலர். கழுத்திலே இறுகப் பற்றிக் கிடந்தனர் சிலர். திமில் முறியும்படி தழுவினர் சிலர், திமில் முறியும்படி தழுவினர் சிலர், தோளுக்குள் கழுத்தைப் புகவிட்டுப் பிடித்தனர் சிலர், கொம்புகள் தம் உடலின் மேல் படுவதை அஞ்சாது ஏற்றுக் கொண்டனர் சிலர். இவ்வாறு ஆயர் ஏறு தழுவுதலைத் தொடங்கியதும், ஏறுகளும் வாளாயிருக்கவில்லை. தம்மைப் பிடித்தவர்களை, ஒவ்வொன்றும் அலைத்தும் குத்தியும் வருத்திற்று. அந்த நிலையிலே, முதலிற் சென்றவனைக் குத்திக் கொன்றுவிட்டுப் பின்னும், யாவரும் அருகே செல்ல அஞ்சுமாறு செல்லும், செவலையைப் பாரடீ! சாவுவேளை நெருங்கியவரிடம் கூற்றம் நெருங்குவது போலல்லவோ அது ஆயரிளைஞரை நெருங்குவதும் தோன்றுகின்றது!

தன்னைத் தழுவியவனைச் சாவுமாறு குத்திய செங்காரியானது, தன் கொம்புகளின் மேலே அவனைத் தூக்கி வைத்து ஆடுகின்றது. அதன் கழுத்து மணிகளைப் பாரடீ! குருதியிலே தோய்ந்த அவற்றை, முகையவிழ்ந்த நறவம் பூவென வண்டினம் சென்று மொய்ப்பதையும் காணடீ!



இடையே பாய்ந்து கழுத்தைத் தழுவிக் கொண்டவனோடு, பரணின் மீதும் தாவிப் பாய்கின்ற வெள்ளையைப் பாரடீ! கரும்பாம்பினால் சிறிதே விழுங்கப்பட்ட சந்திரன், வானத்திலே செல்வது போன்று அது விளங்குவதையும் காணடீ!

இவ்வாறு ஏறுகளும் பொதுவரும் தம்முள் கலந்து போரிட, அத் தொழுவானது, இருபெரும் வேந்தர்கள் மாறுபட்டு எதிர்ப்பட்ட போர்க்களம் போலக் கொடியதாகக் காட்சியளித்தது.

(தோழி, இதுவரை தொழுவைக்காட்டிள நிகழ்ச்சயைக் கூறினாள். இதன்பின், தன் நெஞ்சுடன் சொல்வதுபோலத் தலைவி கேட்கக் கூறுகிறாள்)

கழுத்து முழுதையும் மறைக்கின்ற திமிலுடன் விளங்கும் நல்லேற்றைக் கொண்ட, பொதுவனின் முகத்தை நோக்கி நோக்கி, இந்த ஆயமகளின் கண்களும் இமையாதிருக்கின்றனவே!

நறுநுதலாளே! என் கூந்தலிலே கமழ்ந்த வெண்ணெய் மணம் ஒரு நாள் நீங்கி, முல்லை மணம் வீசுதலைக் கண்டதும், என் சுற்றத்தார் சினந்து எழுந்து கடிந்து கொண்டனரே! அஃது இக் கொல்லேற்றுச் சினம் போலிருந்ததடீ!

கறுத்து நீண்ட கூந்தலுடையவளே! இஃதோர் சொல். இதனையும் எண்ணுவாய், எருமை இனத்தையுடைய ஆயர் மகனோடு யாம் கூடியதற்கு எம் சுற்றத்தார்கூடப் பொறுப்பார்கள். பொறாத அயலார்களின் கண்கள் அனல் கக்குவது ஏனோடீ!

**தலைவி** : ஒள்ளிய நுதலாய்! என் அன்னை என்னைக் கண்ணை ஒஞுறுத்து நேறாக்கி வருந்தினாள். அதனைக் கண்ட இவ்வூர் மலரணி கண்ணிப் பொதுவனோடு தொடர்புடையேன் யான்' என்றெண்ணி, அல் செய்துவிட்டது. அது தான் ஏனோடி?

ஒள்ளிழாய்! அன்று, பசுத்திரளையுடைய ஆயர் மகனுக்கே நின்னைக் கொடுப்பேன் என்றனரே? இன்று என் சுற்றத்தார் என்னைக் கொடுப்பதற்கு என்னடீ இருக்கிறது! தன்மேலம் மிக்குச் சென்ற செங்காரிக் கொம்பிடையிலே அவன் புகுந்து தழுவினானே, அப்பொழுதே என் நெஞ்சமும் அவன்பாற் சென்றுவிட்டதேடீ!

"நீங்காத அருவிகள் முழங்கும் இமயத்திற்கு வடபால் உள்ள நாடுகளையும் வெற்றிகொண்டு, இன்னிசை முரசினனான நம் பாண்டியன், சிறப்புற்று விளங்குவானா" என்று முழங்குத் கடற்பரப்பிலே, அரவணையில் துயிலும் வெற்றிச் சக்கரத்தினை உடைய திருமாலைப் பாடிப் பாடி குரவையாடலாம் வாடீ!

## 2.8.பாடல் : 6 : முலை வேது ஒற்றுவோம்!

**ஏறு கோடல் :**

கழுவொடு சுடுபடை சுருக்கிய தோல் கண்,
இமிழ் இசைம ண்டை உறியொடு தூக்கி,
ஒழுகிய கொன்றைத் தீம் குழல் முரற்சியர்
வழூஉ சொல் கோவலர், தம் தம் இன நிரை
பொழுதொடு தோன்றிய கார் நனை வியன் புலத்தார்.
அவ்வழி,

குறிப்புகள்

நீறு எடுப்பவை நிலம் சாடுபவை,
மாமறு ஏற்றுச் சிலைப்பவை மண்டிப் பாய்பவையாய்த்,
துளங்கு இமில் நல் ஏற்று இனம் பல களம் புகும்
மள்ளர் வனப்பு ஒத்தன்
தாக்குபு தம் உள் பெயர்த்து ஒற்றி எவ்வாயும்
வைவயாய் மருப்பினால் மாறாது குத்தலின்
மெய் வார் குருதிய ஏறு எல்லாம் பெய் காலைக்
கொண்டல் நிரை ஒத்தன.
அவ் ஏற்றை,
பிரிவு கொண்டு இடைப் போக்கி, இனத்தோடு புனத்து ஏற்றி,
இரு திறனா நீக்கும் பொதுவர்,
உரு கெழு மா நிலம் இயற்றுவான்.
விரி திரை நீக்குவான் வியன் குறிப்பு ஒத்தனர்.
அவரைக் கழல உழக்கி எதிர் சென்று சாடி,
அழல்வாய் மருப்பினால் குத்தி, உழலை
மரத்தைப் போல் தொட்டன ஏறு.
தொட்ட தம் புண் வார் குருதியால் கை பிசைந்து மெய் திமிரித்,
தங்கார் பொதுவர், கடலுள் பரதவர்
அம்பி ஊர்ந்தாங்கு ஊர்ந்தார் ஏறு.
ஏறு தம் கோலம் செய் மருப்பினால் தோண்டிய வரிக்குடர்
ஞாலம் கொண்டு எழூஉம் பருந்தின் வாய் வழீஇ,
ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட
மாலை போல் தூங்கும் சினை.

**குரவை ஆடுதல் :**

ஆங்கு,
தம் புல ஏறு பரத்தர உய்த்த தம்
அன்பு உறு காதலர் கை பிணைந்து ஆய்ச்சியர்
இன்புற்று அயர்வர் தழூஉ.
முயங்கிப் பொதிவேம், முயங்கிப் பொதிவேம்,
முலை வேதின் ஒற்றி முயங்கிப் பொதிவேம்.
கொலை ஏறு சாடிய புண்ணை, எம் கேளே!
பல் ஊழ் தயிர் கடையத் தாஅய் புள்ளி மேல்
கொல் ஏறு கொண்டான் குருதி மயக்குறப்
புல்லல் எம் தோளிற்கு அணியோ, எம் கேளே!
ஆங்கு, போர் ஏற்று அருந்தலை அஞ்சலும், ஆய்ச்சியர்
காரிகை தோள் காமுறுதலும், இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ, எம் கேளே!
கொல் ஏறு கொண்டான் இவள் கேள்வன் என்று ஊரார்
சொல்லும் சொல் கேளா அளை மாறி யாம் வரும்
செல்வம் எம் கேள்வன் தருமோ? எம்கேளே!

**தென்னவன் வாழ்க எனக் கானத்தைப் பாடுதல் :**

ஆங்க,
அருந்தலை ஏற்றொடு காதலர்ப் பேணிச்
சுரும்பு இமிர் கானம் நாம் பாடினம் பரவுதும்
ஏற்றவர் புலங் கெடத் திறை கொண்டு
மாற்றாரைக் கடக்க, எம் மறங்கொழு கோவே.

கார் காலம் தொடங்கிற்று, நிலமெல்லாம் மழை பெய்தலால் நனைந்து பசுமையோடும் விளங்கிற்று. தம் நிரைகளை ஊருள் மடக்கியவராக் கோவலரும் தத்தம் சேரியிலே வந்து தங்கினர். தோற்பையிலே கழுவோடு சூட்டுக்கோலும் கொண்டவர்களாக செல்வராயினர் சிலர். புகழ் பெற்ற பாற் கலங்கள் பலவும் உறிகளிலே தொங்கின. கொன்றைத் தீங்குழலினை இசைத்து இன்புற்றிருந்தனர் சிலர்.

வளமான ஏறுகள் நிரையிலே அமைந்திருக்கவில்லை. கொழுத்த திமிலுடன் அந்த நல்லேறுகள் விளங்கின. முன்னர் காலத்திலே தரையைக் கிளறிப் புழுதிப்படலம் எழுப்பியவை, இப்போது ஈரமண்ணைக் கிளறின. ஒன்றுடனொன்று மாமறுகொண்டு, எப்போதும் சண்டையிட்டன. அவையெல்லாம், போர்களம் புகும் வீரமறவரைப் போன்று, பெரிதும் கம்பீரமாக விளங்கின.

ஒன்றுடன் ஒன்று தாக்கி, தம்முள் விட்டு நீங்கி, எப்புறத்தும் கூரிய முனையுடைய கொம்புகளால் மீண்டும் மீண்டும் குறி தவறாது குத்துதலால், அவற்றின் உடல் முழுதும் செங்குருதி வெள்ளமாகக் காணப்பட்டது. மழைக்காலத்துக் காலையிலே, செஞ்ஞாயிற்று ஒளியினிலே திகழும் வெண்மேகத்திரளைப் போல அவை தோன்றின.

அந்த ஏறுகளைப் பிரித்து, இடையிலே பிற மாடுகளைப் போக்கிப் புனத்திற் செலுத்தி, இரு திறனாக நீக்கும் பொதுவர்கள் எல்லாம். உலகைப் படைக்க எண்ணி முதல்வன், ஆதி நாளிலே விரிகடலை ஒதுக்கும் அதுபோலக் காணப்பட்டனர்.

அவரைக் கலங்கி ஓடுமாறு மிதித்தும், எதிர் சென்று சாடியும், சுடர்நுனி போன்ற கொம்பினாற் குத்தியும் புண்படுத்திய ஏறுகள், உழலை மரத்தைப்போல அவர்களின் உடல்களைத் தொளைத்தன.

தொளைபட்ட புண்களிலிருந்து வழியும் குருதி பட்டுக் கைவழுக்கவே, மணலால் கையைப் பிசைந்து, திமிரி எழுந்து சற்றும் தாழ்வாக நில்லாதவராகிப், பரதவர் சிறு தெப்பம் ஏறியதுபோல் ஏறுகளின்மேற் பாய்ந்து தழுவி அடக்கினர் பொதுவர்கள்.

ஏறுகளின் கொம்புகளிலே சிக்கி வீழ்ந்த பொதுவரின் குடர்களைப் பருந்துகள் எடுத்துகொண்டு, வானிற் பறந்தன. அவற்றின் வாய்க்குத் தப்பி ஆலமரத்தின் மேலும் கடப்ப மரத்தின் மேலும் வீழ்ந்த குடர்கள் எல்லாம், அவற்றின் கீழ் உறையும் தெய்வட்கு இட்டுப் பின் கழற்றி எறிந்த மாலைகளைப் போல அம்மரக்கிளைகளிலே தொங்கின.

அவ்வேளையிலே, ஆய்ச்சியர். மேயும் புலத்திலே பரவலாக மாடுகளைப் போகவிட்ட தம் அன்புறு காதலரோடு கை கோர்த்து இன்புற்றுத் தழுவியாடுங் குரவைக் கூத்தினையும் ஆடுவார்கள்.

தோழி! எம் காதலனைக் கொலையேறு சாடிக் குத்திச் செய்த புண்களை யெல்லாம், முலைவேதினாலா் ஒற்றி ஒற்றித் தழுவித் தழுவிப் பொதிவோமடி! நாம்!

தோழி! பலமுறை தயிர் கடையும்போது என் தோளிலே பாய்ந்த தயிர்ப்புள்ளிகளின் மேலே, கொல்லேற்றத்தைத் தழுவிப் புண்பட்டவனின் உடலிலிருந்து வடியுங் குருதி கலந்து மயங்குமாறு தழுவுதலால், என் தோளிற்கு அழகு மட்டுமோடீ! அதனினும் அது சிறந்ததல்லவோடீ!

எம் தோழியே! பொருகின்ற ஏற்றினது சேருதற்கரிய தலையைக் கண்டு அஞ்சுதலும், ஆய்ச்சியரின் அழகுமிக்க தோளினை விரும்புதலும், ஒன்றாகச் செல்லுதல் என்பது என்றுமே இல்லையடி!

இவள் கணவன் கொல்லேறும் கொண்டான் என்று ஊரார் சொல்லும் சொல்லினைக் கேட்டவாறே. யான் மோர் விற்று வருகின்ற இன்பத்தை, என் காதலனும் எனக்குத் தருவானோடீ! அரிய தலைமையுடைய ஏற்றையும், நம் காதலரையும் பேணிச், சுரும்பினம் ஒலிப்பது போன்ற கானத்தைப் பாடினோமாகத் திருமாலைப் போற்றுவோம், அதனோடு எதிர்த்தவர் நாடு அழிய அவரை வென்று திரை கொண்டு, மாற்றாரை என்றும் வெல்க எம் மறம் பொருந்திய பாண்டியன்! எனவும் பாடுவோம் வா!

## 2.9.பாடல் : 7 : தெய்வம் அல்லவா காட்டிற்று :

**தலைவி கூற்று :**

"எல்லா! இ∴து ஒன்று கூறு! குறும்பு இவர்
பல் இனத்தார்க்கும், குடம் சுட்டவர்க்கும், எம்
கொல் ஏறு கோடல் குறை எனக் கோவினத்தார்
பல்ஏறு பெய்தார் தொழூஉ.
தொழுவத்து,
சில்லைச் செவி மறைக் கொண்டவன் சென்னிக் குவி முல்லை
கோட்டம் காழ் கோட்டின் எடுத்துக்கொண்டு, ஆட்டிய
ஏழை இரும்புகர் பொங்க, அப் பூ வந்து என்
கூழையுள் வீழ்ந்தன்று மன்.
அதனைக் கெடுத்தது பெற்றார் போல் கொண்டு யான் முடித்தது.
கேட்டனள் என்பவோ யாய்?"

**தோழி கூற்று :**

"கேட்டால் எவன் செய்ய வேண்டுமோ? மற்றிகா
அவன் கண்ணி அன்றோ அது?"

**தலைவி கூற்று :**

"பெய் போது அறியாத் தன் கூழையுள் ஏதிலான்
கை புனை கண்ணி முடித்தாள் என்று யாய் கேட்பின்

செய்வது இல் ஆகுமோ மற்று?''

**தோழி கூற்று :**

''எல்லாத் தவறும் அறும்''

**தலைவி கூற்று :**

''ஓஒ அஃது அறும் ஆறுமாறு?''

**தோழியின் வினாவும் தலைவியின் பதிலும் :**

''ஆயர்மகன் ஆயின், ஆயமகள் நீ ஆயின்,
நின் வெய்யன் ஆயின், அவன் வெய்யை நீ ஆயின்,
அன்னை நோதக்கதோ இல்லை மன்'' ''நின் நெஞ்சம்
அன்னை நெஞ்சு ஆகப் பெறின்'',

**தோழி கூற்று :**

அன்னையோ!
ஆயர் மகளையும் காதலை கைம்மிக,
ஞாயையும் அஞ்சுதி ஆயின், அரிது அரோ,
நீ உற்ற நோய்க்கு மருந்து'',

**தலைவி கூற்று :** ''மருந்து இன்று யான் உற்ற துயர் ஆயின், எல்லா!
வருந்துவேன் அல்லனோ யான்?''

**தோழி :**

''வருந்தாதி!
மண்ணி மாசு அற்ற நின் கூழையுள் ஏறு அவன்,
கண்ணி தந்திட்டது எனக் கேட்டுத் 'திண்ணிதாகத்
தெய்வ மால் கட்டிற்று இவட்கு' என, நின்னை அப்
பொய் இல் பொதுவற்கு கொடை சூழ்ந்தார் தந்தையோடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு'',

**தலைவி :**

ஏடீ! இஃதொன்று அறிவாயோ? குறும்புகளிலே திரிகின்ற ஆட்டிடையர்க்கும், குடப்பால் சுரக்கும் பசு என்று சுட்டிக் கூறும் நல்லினத்து ஆயருக்கும், எமன் கொல்லேறு தழுவிக் கொள்ளுதல் செய்தற்குரியது? என்று அறிவித்துக், கோவினத்தார், பல ஏறுகளைத் தொழுவினுள் போக விட்டாரடீ!

அவ்விடத்திலே, பெரிய புகரேற்றைத் தழுவினவன் தலையிலிருந்த முல்லைக் கண்ணியை, அந்த ஏறு தன் கொம்பினால் அலைத்து எடுத்துத் துள்ளும்போது, அக்கண்ணி என் கூந்தலுள் வந்து விழுந்ததடீ!

அதனைக் கெடுத்தது ஒன்றை மீண்டும் பெற்றவளைப்போல் ஆர்வமுடன், நான் என் கூந்தலுள் கொண்டு முடித்ததை என் தாய் கேட்டுவிட்டாளோடி! இதற்கொரு பதில் சொல்லடீ!

**தோழி :**

கேட்டால் என்னடீ. செய்ய வேண்டுமென்கிறாய்? அ∴து நின் காதற்குரிய அவன் கண்ணிதானேடீ!

**தலைவி :**

என்ன பூ வைத்து முடிப்பதென்றே அறியாதவளோ இவள்? தன் கூந்தலுள் எவனோ ஒருவன் கையாற் புனைந்த கண்ணியை முடித்தாளே? என்று தாய் கேட்டால், நாம் செய்வதற்கு ஏதொன்றும் இல்லையோடீ?

**தோழி :**

எல்லாத் தவறுகளும் அப்போதே ஒழிந்துவிடும்.

**தலைவி :**

ஓஓ! அ∴து ஒழிவது தான் எப்படியோ?

**தோழி :**

அவனோர் ஆயர்மகன், நீயோ ஆயர்மகள். அவன் உன்னை விரும்புகிறான். நீயம் அவனை விரும்புகின்றாய். அன்னை நொந்து கொள்வதற்கு இதில் எதுவுமே இல்லையேடீ?

**தலைவி :**

உன் நெஞ்சமே என் அன்னையின் நெஞ்சமாகப் பெற்றால்தானே, அப்படி?

**தோழி :**

அம்மையோ! ஆயர்மகனையும் எல்லை இன்றி காதலிக்கிறாய், தாய்க்கும் பயப்படுகிறாய். இப்படியிருந்தால், நீ கொண்ட நோய்க்கு மருந்து வாய்ப்பதே அரிதுதான்.

**தலைவி :**

ஏடீ! யான் உற்ற காதல் நோய்க்கு மருந்தே இல்லையானால், யான் மிகவும் வருந்துவேன் அல்லவோ?

**தோழி :**

வருந்தாதே! மாசறக் கழுவப் பெற்ற நின் கூந்தலுள், ஏறு, அவன் கண்ணியை வீசிற்று எனக் கேட்டு, உறுதியாகத் தெய்வமல்லவோ இவன்தான் இவளுக்கு உரியவன் எனக் காட்டிற்று! என்று, உன் தந்தையோடு தமையன்மார் எல்லாரும், உன்னை அப்போதுவனுக்கே மணஞ் செய்து தர முடிவு செய்துவிட்டனரடீ!

## 2.10.பாடல் : 8 : காஞ்சிக்கீழ் வா! :

**தலைவன் கூற்று :**

“இகல் வேந்தன் சேனை இறுத்தவாய் போல,
அகல் அல்குல் தோள் கண் என மூவழிப் பெருகி,
நுதல் அடி நுசுப்பு என மூவழி சிறுகிக்
கவலையால் காமனும் படை விடு வனப்பினோடு,
அகல் ஆங்கண் அளை மாறி, மலமந்து, பெயருங்கால்,
நகை வல்லேன் யான் என்று என் உயிரோடு படை தொட்ட

குறிப்புகள்

இகலாட்டி, நின்னை எவன் பிழைத்தேன், எல்லா யான்?''

**தலைவி கூற்று :**

''அ.்.து அவலம் அன்று மன,
ஆயர் எமர் ஆனால் ஆய்த்தியேம் யாம் மிகக்
காயாம் பூம் கண்ணிக் கருந்துவர் ஆடையை
மேயும் நிரை முன்னர்க் கோல் ஊன்றி நின்றாய், ஓர்
ஆயனை அல்லை பிறவோ, அமரர் உள்
ஞாயிற்றுப் புத்தேள் மகன்?''

**தலைவன் கூற்று :**

''அதனால் வாய்வாளேன்,
முல்லை முகையும் முருந்தும் நிரைத்தன்ன
பல்லும் பணைத் தோளும், பேர் அமர் உண்கண்ணும்,
நல்லேன் யான் என்று நலம் தகை நம்பிய
சொல்லாட்டி, நின்னொடு சொல் ஆற்றுகிற்பார் யார்?''

**தலைவி கூற்று :**

''சொல்லாதி''

**போகாமல் உன்னை விலக்கினேன் என்ற தலைவனுக்குத் தலைவி கூறுதல்**

:''நின்னை தகைத்தனென்'' ''அல்லல் காண் மன்,
மண்டாத கூறி மழ குழக்கு ஆகின்றே,
கண்ட பொழுதே கடவரைப் பேல நீ
பண்டம் வினாய படிற்றால் தொடீஇய நின்
கொண்டது எவன் எல்லா யான்?''

**தலைவன் கூற்று**

கொண்டது,
அளை மாறிப் பெயர்தருவாய், அறிதியோ? அஞ்ஞான்று
தளவ மலர் ததைந்தது ஓர் கானச் சிற்றாற்று அயல்,
இள மாங்காய் போழ்ந்தன்ன கண்ணினால், என் நெஞ்சம்
களமாக் கொண்டு ஆண்டாய் ஓர் கள்வியை அல்லையோ?''

**தலைவி கூற்று :**

''நின் நெஞ்சம் களமாக் கொண்டு யாம் ஆளல் எமக்கு எவன் எளிது
ஆகும்?
புனத்து உளான் என் ஐக்குப் புகா உய்த்துக் கொடுப்பதோ?
இனத்து உளான் எந்தைக்குக் கலத்தொடு செல்வதோ?
தினைக் காலுள் யாய் விட்ட கன்று மேய்க்கிற்பதோ?''

**தலைவன் கூற்று :**

''அனைத்து ஆக,
வெண்ணெய்த் தெழி கேட்கும் அண்மையால் சேய்த்து அன்றி,
அண்ண அணித்து ஊர் ஆயின், நன்பகல் போழ்து ஆயின்,

கண் நோக்கு ஒழிக்கும் கவின் பெறு பெண் நீர்மை
மயில் எருத்து வண்ணத்து மாயோய்! உது காண்!
பிடி துஞ்சு அன்ன அறை மேல நுங்கின்
தடி கண் புரையும் குறுஞ் சுனை ஆடிப்
பனிப் பூம் தளவொடு முல்லை பறித்துத்
தனிக் காயாம் தண்பொழில் எம்மொடு வைகிப்,
பனிப்படச் செல்வாய் நும் ஊர்க்கு''

**தலைவி கூற்று :**

''இனிச் செல்வேம் யாம்,
மா மருண்டன்ன மழைக் கண் சிற்றாய்த்தியர்
நீ மருட்டும் சொற்கண் மருள்வார்க்கு உரை அவை,
ஆ முனியா ஏறு போல் வைகல் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாய் ஓர் கண் குத்தி கள்வனை,
நீ எவன் செய்தி பிறர்க்கு?
யாம் எவன் செய்தும் நினக்கு?''

**தலைவன் கூற்று :**

''கொலை உண்கண், கூர் எயிற்றுக் கொய் தளிர் மேனி,
இனை வனப்பின் மாயோய்! நின்னின் சிறந்தார்
நில உலகத்து இன்மை தெளி, நீ வருதி,
மலையொடு மார்பு அமைந்த செல்வன் அடியைத்
தலையினால் தொட்டு உற்றேன்'' ''சூள்,

**தலைவி கூற்று :**

ஆங்கு உணரார் நேர்ப அது பொய்ப்பாய் நீ ஆயின்,
தேம் கொள் பொருப்பன் சிறுகுடி எம் ஆயர்
வேந்து ஊட்டு அரவத்து நின் பெண்டிர் காணாமை,
காஞ்சித் தாது உக்கன்ன தாது எரு மன்றத்துத்
தூங்கும் குரவையுஉள் நின் பெண்டிர் கேளாமை,
ஆம்பல் குழலால் பயிர் பயிர் எம் படப்பைக்
காஞ்சிக் கீழ் செய்தேம் குறி''

**தலைவன் :**

ஏடி! யான் உனக்கு என்ன தவறு செய்தேன்? ஏன் இவ்வாறு பாராமுகமாயிருந்தாய்? பாண்டியனோடு மாறுபட்ட வேந்தர்களின் சேனைகள் அவன் தாக்குதலுக்கு ஆற்றாவாய் அழிந்துவிடும். அகன்ற அல்குல், தோள், கண் என மூன்றிடங்களும் பெருத்தவளே! நுதல், அடி, நுசுப்பு என மூன்றும் சிறுத்தவளே! மிகவும் கவலை கொண்டவனைப் போலக் காமனும் படை விடுகின்ற வனப்பினோடு, வேற்றூரிலே மோர் விற்று விட்டுக் களைப்புடன் நீ தளர்ந்து நடந்து வரும்போது, நகைத்தே கொல்லற்கு வல்லேன் யான் என இறுமாந்து, என் உயிரோடு படைதொட்டு என்னை வருத்துகின்றவளே! நான், நினக்குச் செய்த தவறுகள் தாம் யாவையோ?

**தலைவி :**

மோர் விற்று வருவதான அ∴தொன்றும் வருத்தம் அல்லவே! எங்களவர்கள் ஆயர். நாங்கள் ஆய்த்தியர். எங்கள் மரபுதானே அது. அது கிடக்க, காயாம்பூக் கண்ணியும், கருந்துவர் ஆடையும் உடையவனாக, மேய்ந்துகொண்டிருக்கும் ஆநிரையின் முன்னர்க் கோலூன்றி நிற்கின்றாயே! நீயோர் ஆயனன்றி? வேறு யாரோ? ஒருக்கால் தேவர்களுள், ஞாயிற்றுத் தேவனின் மகனோ(சனி)?

**தலைவன் :**

அதனால்தான் பேச வாய்வராமல் நிற்கின்றேன். முல்லை மொட்டும், மயிலிறகுக் குருத்தும் வரிசையாக வைத்தது போன்ற பல்லும், பணைத்த தோள்களும், பெரிதும் அமர் செய்யும் மை தீட்டிய கண்களும், நல்லவன் யானே என்று என்னுடைய நல்ல தன்மைகளையே நம்புகின்றன. இருந்தும் ஏதுமே அறியாதவனள் போலப் பேசுபவளே! உன்னோடு பேசிக் கொண்டே நிற்க இனியும் யாரால் முடியும்?

**தலைவி :**

அப்படியானால், நீ ஏதும் சொல்லல் வேண்டாம்.

**தலைவன் :**

உன்னைப் போகவிடாது தடுப்பேன்.

**தலைவி :**

என்ன அல்லல் பார்?

பொருந்தாதன கூறிப் பிடிவாதம் செய்யும் குழந்தையைப் போல் அல்லவோ இருக்கின்றது? கண்டபொழுதே, ஏதோ கடன் கொடுத்து வைத்தவனைப் போல, அது என்ன இது என்ன என்று, ஒவ்வொன்றாகக் கேட்கின்றாயே! உன்னிடம் நான் என்னதான் கொண்டு போய்விட்டேனோ?

**தலைவன் :**

கொண்டு போனதுவா? மோர் விற்றுத் திரும்பி வருபவளே! நீ அறியாயோ? முல்லை மலர் செறிந்த கானச் சிற்றாற்றின் அயலேயுள்ள இடத்திலே, மாவடுவைப் பிளந்தது போன்ற நின் கண்ணினால், என் நெஞ்சைக் கனவாடிக் கொண்டு, உன்னுடன் கொண்டுபோய் வைத்திருக்கிறாயே? நீயும் ஒரு கள்வியே அல்லையோ?

**தலைவி :**

உன் நெஞ்சை அடிமையாக் கொண்டு ஆட்சி செநய்தல் எனக்கு எப்படி எளிதாகும், அது, புனத்திலிருக்கிற என் தமையனுக்கு உணவு கொண்டு போகுமோ? ஆவினத்துடனிருக்கின்ற என் தந்தைக்குக் கறவைக் கலம் கொண்டு செல்லுமோ? தினையறுத்த வயலுள் என் தாய் விட்டிருக்கும் கன்றை மேய்த்துக் கொண்டிருக்குமோ? எனக்கேன் உன் நெஞ்சு?

**தலைவன் :**

அதுதான் அத்துணையும் செய்யும் !

சங்க இலக்கியம்

குறிப்புகள்

வெண்ணெய்த் தெழி கேட்கும் அண்மையிலிருக்கிற ஊர் தானே! பொழுதோ உச்சிப் பொழுதாயிருக்கிறது. உன்னைப் பார்த்த கண், வேறொன்றைப் பாராது ஒழிக்கும் கவின் பெற்றது, நின் பெண்தன்மை மயிற் கழுத்துப் போன்ற நிறமுடைய மாயவன் நீ! இந்த வெறியலோடே ஏன் விரைந்து போகின்றாய்? அதோ பார் பிடி தூங்குவது போன்ற பெரும் பாறை. அதற்கு மேலோக நுங்கின் கண்ணிலிருந்து வரும் இளநீர் போன்ற நீருடைய சிறு சுனையிருக்கிறது. அதில் நீராடி, செம்முல்லையும் வெண்முல்லையும் பறித்துத் தனியாக அப்பொழிலிலே என்னோடு சிறிது நேரம் இருந்துவிட்டுப் பொழுது சாய்ந்த குளிர்ந்த நேரத்திலே, உன் ஊருக்குச் செல்வாயாக!

**தலைவி :**

இவ்வளவுதானே? நான் இனிப் போகின்றேன் மான் மருண்டது போன்ற கருங்கண்களை உடைய சிற்றாய்த்தியராக, நீ மயக்கும் சொற்களிலே மயங்குவார்க்கு, அவை எல்லாம் சென்று சொல்வாயாக பசுக்களின் பின்னே திரியும் ஏற்றைப் போலர், ஒரு நாளில் பத்துப் பேரைக் காமுற்றுச் செல்பவனாயிற்றே நீ! கண்குத்திக் கள்வனே! பிறர்க்கு நீ என்னதான் இதுவரை செய்தாய்? அல்ல, நான்தான் உனக்கென்ன செய்ய வேண்டியது இருக்கிறது?

**தலைவன் :**

கொலை செய்யுங் கண், கூரிய எயிறு, கொணய் தளிர் மேணி, இத்தகைய வன்புடைய மாயோளே! நின்னிற் சிறந்தார் நிலவுலகத்திலேயே கிடையாது என்பதைத் தெரிந்து கொள். நீ என்னருகே வா! மலை போன்ற மார்பமைந்த திருமாலின் சேவடியை, என் தலையினால் தொட்டுச் சத்தியம் செய்கிறேன்.

**தலைவி :**

உன்னைப் பற்றி அறியாதவர் தாம் உன்னோடு வருவார். உன் வார்த்தைகளைப் பொய்க்குபவன் தானே நீ! ஆயின், தேங்கொள் பொருப்பானான பாண்டியனின் சிறு குடியிலே வாழும் எம் ஆயர் வேந்தூட்டுச் செய்யும் ஆரவாரப் பொழுதிலே, நின் பெண்டிர்கள் காணாமல், காஞ்சித் தாது உதிர்ந்தாற் போன்ற தாது எரு மன்றத்திலே ஆடுங் கரவையுள், நின் பெண்டிர் கேளாமல், ஆம்பற் குழலாலே இசைத்து எம்மைக் கூப்பிட்டு, அந்தக் காஞ்சி மரத்தின் கீழ் வந்து சேர்வாயாக!

## 2.11.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. ஏறுதழுவலில் வென்ற இளைஞரின் ஆரவாரங்கள் எவ்வாறு அமைந்தன?
2. தலைவியின் காதல் உறுதியாய் நிறைவேறும் என்பதற்கான தோழியின் கூற்றினை எடுத்துரைக்க.
3. ஏறு தழுவிய அழகினை தோழி காட்சிப்படுத்திய நயத்தினைச் சுட்டுக.
4. காஞ்சிக்கீழ் வா! சுட்டும் ஊடல் நாடகம் யாது?

*Self -Instructional Material*

குறிப்புகள்

**பெருவினா :**

5. ஏறுதழுவுதல் - சடங்கல்ல – வாழ்வியல் முறை என்பதனை உம்பாடப்பகுதிக் கொண்டு நிறுவுக.
6. கலித்தொகைச் சுட்டும் ஆற்றல் மிக்க எருதுகளின் அழகினை நயம்பட தொகுத்துரைக்க.
7. தோழியின் கண்கள் வழி தலைவி கண்டு மகிழ்ந்த ஏறு தழுவல் நிகழ்ச்சிகளை தொகுத்துரைக்க.

## 2.12.தொகுத்துக் காண்போம். :

முல்லை என்பது அந்த நிலத்தில் சிறப்பாக மலரும் மலரின் பெயர். இம் மலரின் பெயரினையே இந்நிலத்திற்கு சூட்டியுள்ளனர் என்பதனையும், முல்லை நிலம் காடும் காடு சார்ந்த பகுதியுமாகும் என்றும், ஏறு தழுவுதல், முல்லை நில மக்களின் மனவுறுதி, முல்லை நிலக் காளையரின் வீரம், பழந்தமிழ் மக்களின் பண்பாடு போன்றவற செய்திகளை இப்பாடத்தின் மூலம் தமிழர்களின் பண்பாட்டு கூறுகளை அறிந்து கொன்டீர்கள்.

## 2.13.மேலும் பயில்வதற்கான நூல்கள் :

- கலித்தொகை, உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- கலித்தொகை, முனைவர் அ. விசுவநாதன் குழுவினர், நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
- கலித்தொகை, புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.
- கலித்தொகை, தமிழ் அமுதன் உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.
- கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரை, கழகப்பதிப்பகம், திருநெல்வேலி.

*Self -Instructional Material*

# கூறு – 3- கலித்தொகை

## முல்லைக்கலி - 9 முதல் 17 வரையிலான பாடல்கள்

## பாடியவர் : சோழன் நல்லுருத்திரன்

### 3.1.முன்னுரை :

முல்லை என்பது அந்த நிலத்தில் சிறப்பாக மலரும் மலரின் பெயர். இம்மலரின் பெயரினையே இந்நிலத்திற்குச் சூட்டியுள்ளனர். முல்லை நிலம் : காடும் காடு சார்ந்த பகுதியாகும். கலித்தொகையில் அமைந்துள்ள செய்யுள்கள் அனைத்தும் ஏதோ புலவர்க்குப் பொழுது போகாமல் பாடிக் குவித்தவை அல்ல. தமிழ் மக்களின் வாழ்க்கையினது படப்பிடிப்புகள், திணை என்றாலே ஒழுக்கம் என்று பொருள். தமிழ் மக்களின் ஒழுக்கம் மிக்க வாழ்க்கையினது காட்சிகளே அவைகள். அவ்வகையில், பாலைக்கலியைப் பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக்கலியைக் கபிலரும், மருதக் கலியை மருதன் இளநாகனாரும், முல்லைக்கலியை நல்லுருத்திரனாரும், நெய்தற் கலியை நல்லந்துவனாரும் பாடியுள்ளனர். நமது பாடப்பகுதியாக சோழன் நல்லுருத்திரன் எழுதிய முல்லைக்கலியின் பாடல்கள் அமையப்பெற்றுள்ளன.

### 3.2.குறிக்கோள்கள் :

ஆதித்தமிழர்களின் பண்பாட்டு கூறுகளான ஏறு தழுவுதல், முல்லை நில மக்களின் மனவுறுதி, முல்லைநிலக் காளையரின் வீரம் ஆகியனவற்றை இன்றைய தமிழ் மாணவர்கள் அறிந்து கொள்ளவே இப்பாடப்பகுதி அமையப்பெற்றுள்ளது.

### 3.3.பாடல் : 09 : சொல்ல முடியாத வனப்பு :

கார் ஆரப் பெய்த கடி கொள் வியன் புலத்துப்
பேராது சென்று பெரும் பதவப் புல் மாந்தி,
நீர் ஆர் நிழல குடம் சுட்டு இனத்து உள்ளும்,
போர் ஆரா ஏற்றின் பொரு நாகு இள பாண்டில்
தேர் ஊரச் செம்மாந்தது போல் மதை இனள்,
பெரூரும் சிற்றூரும் கௌவை எடுப்பவள் போல்
மோரோடு வந்தாள் தகைக ண்டை, யாரோடும்
சொல்லியாள் அன்றே வனப்பு.
பண்ணித் தமர் தந்து ஒரு புறம் தைஇய
கண்ணி எடுக்கல்லாக் கோடு ஏந்து அகல் அல்குல்,
புண் இல்லார் புண் ஆக நோக்கும் முழு மெய்யும்
கண்ணளோ? ஆயமகள்
இவள் தான் திருத்தாச் சுமட்டினள் ஏனைத் தோள் வீசி,
வரிக்கூழ வட்டி தழீஇ, அரிக் குழை

ஆடல் தகையள், கழுத்தினும் வாலிது,
நுண்ணிதாத் தோன்றும், நுசும்ப்பு
இடை தெரியா ஏஎர் இருவரும் தம் தம்
உடை வனப்பு எல்லாம் இவட்கு ஈத்தார் கொலோ?
படை இடுவான் மன் கண்டீர், காமன் மடை அடும்
பாலொடு கோட்டம் புகின்
இவள் தான் வருந்த நோய் செய்து இறப்பின் அல்லால் மருந்து அல்லள்
யார்க்கும் அணங்கு ஆதல் சான்றாள் என்று, ஊர்ப் பெண்டிர்
மாங்காய் நறுங் காடி கூட்டுவேம் யாங்கும்
எழு நின் கிளையொடு போக என்று தம் தம்
கொழுநரைப் போகாமல் காத்து முழு நாளும்,
வாயில் அடைப்பவரும் .

பெருமழையும் நிலங்குளிரப் பெய்தது. மண்மணமும் எங்கணும் கமழ்ந்தது. அகன்ற புலத்திலே, அதைவிட்டுப் பிரியாது சென்று, பெரிதாயிருக்கின்ற அறுகம்புல்லை மேய்ந்து விட்டு, நீர் போன்ற குளிர்ந்த நிழலிடத்திலே கிடக்கும் குடப் பால் சுரக்கும் ஆவினத்துக்கும், போர்குணம் அமைந்த ஏற்றினுக்கும் பிறந்த இளைய எருதானது, வண்டியிலே பூட்டினாற் செம்மாந்து செல்வது போலச் செம்மாந்து வருகிறாளே! இவள் தாம் யாரோ? பேரூரும் சிற்றூரும் ஒருங்கே ஆரவாரம் எழச் செய்பவளைப்போல, மோரோடு வந்தவனின் தகைமையைக் கண்டாயோ? நெஞ்சமே! யாரோடும் சொல்லி ஒப்பிட முடியாததாக அன்றோ இருக்கிறது, இவளது பெருவனப்பு!

இவளை அழகுபண்ணித் தமர் தந்து ஒருபுறம் செருகி வைத்த கண்ணியைச் சுமக்க மாட்டாத, பக்கம் உயர்ந்த பரந்த அல்குல், காமவேட்கை அற்றவர்களையும் புண்படுமாறு பார்க்கின்றதே! இந்த ஆயமகள் மேனி முழுவதுமே கண்ணுடையவளோ?

இவன் தான் திருத்தமின்றி இருக்கும் அம்மையை உடையவள். மேலும், தோள்வீசி, வரிக்கூழ் வட்டியை ஒரு கையால் அணைத்துக் கொண்டே, காதில் குழையாட வருகின்றாளே! அத்தகையவள் கழுத்திலும், அழகாகவும் நுண்ணிதாகவும் தோன்றுகின்றதே அவள் இடை! இடை தெரியா அழகுடைய ஊர்வசி திரேலாத்தமை இருவரும் தத்தம்முடைய வனப்பை எல்லாம் இவளுக்குத் தந்து விட்டார்களோ? நைவேத்தியத்திற்கு பாலோடு இவள் காமகோட்டம் சென்றாளென்றால், அந்தக் காமனே இவளக் கண்டதும் மயங்கிப் படையைக் கைநழுவ விட்டுவிடுவானே?

இவள் தான், பிறர் வருந்த நோய் செய்து சாகச் செய்வானேயன்றி, நோய் தீர்க்கும் மருந்தாகுபவள் அல்லள். யார்க்கும் அணங்காகுதல் ஒத்தவள் என்று ஊர்ப் பெண்டிர் ஐயுற்றனர். புளிமாங்காய் கூட்டுவோம். எங்கும் இருக்கும் நின் கிளையோடும் இவ்வூரை விட்டுப் போய்விடம்மா! என்று தத்தம் கொழுநரை வெளியே விடாமல் காத்து, முழு நாளும்

வாயிலை அடைந்திருக்கச் செய்தனர். அவ்வாறு எவரையும் வருந்துபவளல்லளோ இவள்!

### 3.4.பாடல் : 10 : தேள் கடி மருந்தோ! :

**தலைவியை நோக்கித் தலைவன் உரைத்தல் :**

கடி கொள் இருங்காப்பில் புல்லினத்து ஆயர்
குடிதொறும் நல்லாரை வேண்டுதி! எல்லா!
இடு தேள் மருந்தோ நின் வேட்கை? தொடுதரத்
துன்னித் தந்தாங்கே நகை குறித்து எம்மைத்
திளைத்தற்கு எளியமாக் கண்டை அளைக்கு எளியாள்
வெண்ணெய்க்கும் அன்னள் எனக் கொண்டாய் ஒண்ணுதால்!
ஆங்கு நீ கூறின் அனைத்து ஆக நீங்குக
அச்சத்தான் மாறி அசைவினான் போத்தந்து
நிச்சம் தடுமாறும் மெல்லியல் ஆய்மகள்!
மத்தம் பிணித்த கயிறு போல் நின் நலம்
சுற்றிச் சுழலும் என் நெஞ்சு.
விடிந்த பொழுதினும் இல் வயின் போகாது,
கொடும் தொழுவினுள் பட்ட கன்றிற்குச் சூழும்
கடுஞ்சூல் ஆ நாகு போல், நின் கண்டு நாளும்
நடுங்கு அஞர் உற்றது என் நெஞ்சு.
எவ்வம் மிகுதர எம் திறத்து எஞ்ஞான்றும்,
நெய் கடை பாலின் பயன் யாதும் இன்று ஆகிக்,
கை தோயல் மாத்திரை அல்லது, செய்தி
அறியாது அளித்து என் உயிர்.

**தலைவி கூற்று :**

அன்னையோ! மன்றத்துக் கண்டாங்கே சான்றார் மகளிரை
இன்றி அமையேன் என்று இன்னவும் சொல்லுவாய்
நின்றாய் நீ சென்றீ! எமர்காண்பர்! நாளையும்
கன்றொடு சேறும் புலத்து.

**தலைவி :**

ஏடா! கடுமையான காவலுடையவர் ஆட்டிடையர். அவர் குடிதோறும் உள்ள மகளிரை எல்லாம் நீ விரும்புகின்றாயே? உன் வேட்கைதான் என்ன, தேட்கடி மருந்தோ? தொட்டுப் போகட்டுமே என்று நினைத்து இசைவு தந்தால், நகையாட நினைந்து, எம்மைக் கூடி மகிழ்தற்கும் எளியவள் என நினைத்தாயோ? மோர்தான் தந்தாளே, வெண்ணெயே வேண்டினாலும் அப்படித்தானே மாறாது தருவாள் என்று, நீயும் எண்ணிக் கொண்டாயோ?



**தலைவன் :**

ஒண்ணுதலாளே! அப்படி நீ கூறினால், அதுவே யாகுக. நீ என்னை நீங்கிப் போய்விடுக!

அச்சத்தால் மறுத்துரைத்து, தன் அசைவினால் என்னருகே வந்து, நித்தமும் தடுமாறும் மெல்லியலான ஆய் மகளே! மத்திலே பிணித்த

கயிறுபோல், நின் நலத்தையே சுற்றிச் சுற்றி என் நெஞ்சமும் சுழலுகின்றதேடி?

பொழுது விடிந்த பின்னும் வீட்டை விட்டு மேய்ச்சலுக்குப் போகாது, வளைந்த தொழுவினுள் கட்டியிருக்கும் தன் கன்றையே நினைந்து கொண்டிருக்கும் தலையீற்றுப் பசுப்போல, நின்னைக் கண்டு நாளும் நடுங்குகின்ற வருத்தத்தை உடையதாயிருக்கிறதேடீ. என் நெஞ்சி!



துயரம் மிகுதியாக, என்னிடத்திலே, நெய் கடைந்து எடுத்துவிட்ட பாலினைப்போலப் பயன் யாதும் இல்லாதாகி விட்டது. கையால் தழுவியது மட்டுமின்றி, உன் உள்ளத்து நினைவு அறியாமலும் தடுமாறுகின்றேன். எடுத்த என் உயிரையாவது என்னிடம் மீளவும் அளித்து விடுவாயடீ!

**தலைவி :**

அம்மையே! மன்றத்துப் பார்த்த உடனேயே, சான்றோர் மகளிரைப் பார்த்து, இன்றி அமையேன் என்று இப்படி எல்லாம் சொல்லுகின்றாயே! ஏன் நிற்கின்றாய்? போய்விடு. எம்மவர் பார்த்து விடுவார்கள். நாளைக்குக் கன்றோடு மேய்ச்சற் காட்டுக்கு வந்து சேருவேன்!

## 3.5.பாடல் : 11 : பேச்சுக்குப் பின் :

தீம் பால் கறந்த கலம் மாற்றக், கன்று எல்லாம்
தாம்பின் பிணித்து மனை நிறீஇ, யாய் தந்த
பூங்கரை நீலம் புடை தாழ மெய் அசைஇ, பாங்கரும்
முல்லையும் தாய பாட்டங்கால் தோழி, நம்
புல்லினத்து ஆயர் மகளிரோடு எல்லாம்
ஒருங்கு விளையாட, அவ்வழி வந்த
குருந்தம் பூங்கண்ணிப் பொதுவன் மற்று என்னை,
“முற்று இழை ஏஎர் மட நல்லாய்! நீ ஆடும்
சிற்றில் புனைகோ சிறிது?” என்றான் “எல்லா! நீ
பெற்றேம் யாம் என்று பிறர் செய்த இல் இருப்பாய்,
கற்றது இலை மன்ற காண்” என்றேன் முற்று இழாய்!
தாது சூழ் கூந்தல் தகைபெறத் தைஇய
கோதை புனைகோ நினக்கு?” என்றான் எல்லா! நீ
ஏதிலார் தந்த பூக் கொள்வாய் நனி மிகப்
பேதையை மன்ற பெரிது” என்றேன் “மாதராய்!
ஐய பிதிர்ந்த சுணங்கு அணி மென் முலை மேல்
தொய்யில் எழுதுகோ மற்று?” என்றான் “யாம் பிறர்
செய் புறம் நோக்கி இருத்துமோ நீ பெரிது
மையலை மாதோ விடுக” என்றேன் தையலாய்! சொல்லிய ஆறு எல்லாம்
மாறு மாறு யான் பெயர்ப்ப,
அல்லாந்தான் போலப் பெயர்ந்தான், அவனை நீ
ஆயர் மகளிர் இயல்பு உரைத்து, எந்தையும்
யாயும் அறிய உரைத்தீயின் யான் உற்ற

நோயும் களைகுவை மன்.

தோழி! இனிய பாலைக் கறந்த கலமெல்லாம் எடுத்து வைத்தேன். கன்றுகளை எல்லாம் தாம்பிலே பிணித்து வீட்டிற்குக் கொண்டு வந்து கட்டினேன். தாய் தந்த பூங்கரை இட்ட நீலச்சிற்றாடை இடையிலே தவழ, மெய்யை அசைத்துப் பாங்கரும் முல்லையும் பரந்த பாட்டங்காலிலே, ஆட்டினத்து ஆயர் மகளிரோடு சேர்ந்து, எல்லோருமாக விளையாடினோம். அந்த வழியே வந்தான் குருந்தம் பூக் கண்ணி சூடியிருந்தவனான பொதுவன் ஒருவன். அவன் முற்றவும் இழையணிந்த அழகிய மடப்பமுடைய பெண்ணே! நீ ஆடும் சிற்றிலையேனும் சிறிது புனையட்டுமோ? என்றான்.

ஏடா! நீ, பெற்றோம் யாம் என்று பிறர் செய்த வீட்டிலே இருக்கின்றவன். உனக்கென்று ஒரு வீடு கட்டக் கற்றதில்லை. அதனைக் காண்பாய்! என்றேன்.

முற்றிழாய்! தாதுசூழ் கூந்தல் தகைபெற முடித்துக் கோதையும் நினக்குப் புனைகின்றேனே! என்றேன்.

ஏடா! ஏதுமற்றவர் தந்த பூவானாற் கொள்வாய்! நீ மிகவும் பேதையன்று, அதனினும் பெரிது! என்றான்.

மாதராய்! தேமல் படர்ந்த நின் மென்முலைகளின் மேல் தொய்யில் எழுதட்டுமோ? என்றான்.

யாம் பிறர் செய்யும் அழகைப் பார்த்துக் கொண்டிருபோமோ! நீ பெரிதும் மையல் கொண்டுள்ளாய். என்னை விட்டு அகன்று போய்விடுக என்றேன்.

தையலே! அவன் சொன்னதற்கெல்லாம் எதிருக்கு எதிராக நான் திருப்பிச் சொல்லவும். அயர்வுடையவன் போல அங்கிருந்து அவனும் அகன்று சென்றான். அவனிடம் நீ சென்று, ஆயர் மகளின் இயல்பினை உரைத்து, என் தந்தையும் தாயும் அறிய மணம் பேசி வருமாறு சொன்னாயானால், நானுற்ற நோயினையும் களைந்து போக்கியவள் ஆவாயடீ!

## 3.6.பாடல் : 12 : தழுவாதே என்றாரோ? : தலைவி கூற்று :

யார் இவன் என்னை விலக்குவான்? நீர் உளர்
பூம் தாமரைப் போது தந்த விரவுத் தார்க்
கல்லாப் பொதுவனை நீ மாறு நின்னொடு
சொல்லல் ஓம்பு என்றார் எமர்.

**தலைவன் கூற்று :**

எல்லா! கடாஅய கண்ணால் கலைஇய நோய் செய்யும்
நடாஅக் கரும்பு அமன்ற தோளாரைக் காணின்
விடாஅல் ஓம்பு என்றார் எமர்.

**தலைவி கூற்று :**

கடாஅயார் நல்லாரைக் காணின் விலக்கி நயந்து அவர்
பல் இதழ் உண்கண்ணும் தோளும் புகழ் பாட
நல்லது கற்பித்தார் மன்ற நுமர், பெரிதும்

வல்லர் எமர் கண் செயல்.

**தலைவன் கூற்று :**

ஓஒ வழங்காப் பொழுது நீ கன்று மேய்ப்பாய் போல்
வழங்கல் அறிவார் உரையாரேல் எம்மை
இகழ்ந்தாரே அன்றோ எமர்?

**தலைவி கூற்று :**

ஒக்கும் அறிவல் யான் எல்லா விடு

**தலைவன் :**

விடேன் யான் என் நீ குறித்தது இருங்கூந்தால்
நின்னை என் முன் நின்று
சொல்லல் ஓம்பு என்றமை அன்றி அவனை நீ
புல்லல் ஓம்பு என்றது உடையரோ, மெல்ல
முயங்கு நின் முள் எயிறு உண்கும், எவன் கொலோ,
மாயப் பொதுவன் உரைத்த உரை எல்லாம்
வாய் ஆவது ஆயின், தலைப்பட்டாம் பொய் ஆயின்,
சாயல் இன் மார்பில் கமழ் தார் குழைத்த நின்
ஆய் இதழ் உண்கண் பசப்பத் தட மென் தோள்
சாயினும் ஏஎர் உடைத்து.

**தலைவி :**

யாரோடா இவன்? என்னை வழிமறிக்கின்றானே? நீரிலோ உள்ள பூந்தாமரையின் இதழ்களைத் தந்த, பல மலர் சேர்ந்த மாலையணிந்திருக்கும் முறைகல்லாத பொதுவனே! உன்னோடு பேசாமலிரு என்று என் சுற்றத்தார் சொல்லியுள்ளனர். என் வழியை விட்டு விலகி நின்றுவிடு.

**தலைவன் :**

ஏடீ! வேட்கை செலுத்திய கண்ணால் என் உள்ளம் நிலைகுலைய நோய் செய்கின்றவளே! நடாத கரும்பு போன்ற தோளாரைக் கண்டால், அவரைக் கைந்தழுவ விட்டு விடாதே! என்று என்னவர்கள் சொல்லியிருக்கிறார்களே! யான் என்னேடி செய்வேன்?

**தலைவி :**

அங்ஙனம் சொன்னார்களோ? பெண்களைக் கண்டால், வழிமறித்து, அவர்மேல் காமுற்று, அவர்கள் பல் இதழ் உண்கண்ணும் தோளும் புகழ்ந்து பாட நல்ல முறையைத் தான் கற்பித்திருக்கிறார்கள், உன் சுற்றத்தார்! வல்லவரானால், ஏன் என் பெற்றோரிடம் வந்து காட்டுவதுதானே!

**தலைவன் :**

ஓஒ! யாரும் வெளியே வராத இந்த உசிச வேளையிலே, நீ கன்று மேய்ப்பவளைப் போல வருவதை அறிந்தவர்கள், அப்படிச் சொல்லாவிட்டால், எம்மை இகழ்ச்சியாகக் கருதினவர்களாக அல்லவோ போய்விடுவர்?

**தலைவி :**

ஒக்கும். எல்லாம் யானும் அறிவேன். ஏடா! வழியை விட்டு விலகி நில்

**தலைவன் :**

விடமாட்டேன். கரிய கூந்தலை உடையவளே. நீ என்ன சொன்னாய்? நின்னை என்முன் நின்று சொல்லாடாது தவிர்க என்று நின்னவர் நினக்குச் சொன்னார்களேயன்றி, அவனை நீ தழுவுதல் கூடாது என்றும் சொன்னார்களோ? மெல்ல என்னைத் தழுவிக் கொள். நின் முள்ளெயிற்றில் ஊறிவரும் அமுதத்தை உண்கிறேன். வா.

**தலைவி :**

(நெஞ்சுடன் கூறுவாள் போல) என்ன சேய்வேனோ? மாயப் பொதுவன் உரைத்த உரை எல்லாம் உண்மையேயானால், அவனோட வாழ்க்கைப்பட்டோம். பொய்யாயிருந்தால் இனிய சாயலினை உடைய மார்பின் மணமாலையைக் கசக்கிய நின் அழகிய மையுண்ட கண்கள் பசலையால் நிறையும். அகன்ற மென் தோள்கள் தளரும். அதுவும் அழகுடையதுதான்! (இதனால், அவள் இசைகின்றாள் எனக்காட்ட, அவன் மகிழ்ந்தான்.)

**3.7.பாடல் : 13 : குற்றம் ஏதுமில்லை :**

**தலைவன் கூற்று :**

நலம் மிக நந்திய நயவரு தட மென் தோள்,
அலமரல் அமர் உண்கண், அம் நல்லாய்! நீ உறீஇ,
உலமரல் உயவு நோய்க்கு உய்யும் ஆறு உரைத்துச் செல்.

**தலைவி கூற்று :**

பேர் ஏமுற்றார் போல முன் நின்று விலக்குவாய்
யார்? எல்லா! நின்னை அறிந்ததூஉம் இல்வழி?

**தலைவன் கூற்று :**

தளிர் இயால்! என் அறிதல் வேண்டின், பகை அஞ்சாப்
புல்லினத்து ஆயர் மகனேன், மற்று யான்.

**தலைவி கூற்று :**

ஒக்கும் மன்.
புல்லினத்து ஆயனை நீ ஆயின், குடம் சுட்டு
நல் இனத்து ஆயர் எமர்.

**தலைவன் கூற்று :**

எல்லா!
நின்னொடு சொல்லின் ஏதமோ இல்லை மன்.
ஏதம் அன்று எல்லை வருவான் விடு.

**தலைவன் கூற்று :**

விடேன்.
உடம்பட்டு நீப்பார் கிளவி மடம் பட்டு,

மெல்லிய ஆதல் அறியினும், மெல்லியால்!
நின் மொழி கொண்டு யானோ விடுவேன், மற்று என் மொழி கொண்டு
என் நெஞ்சம் ஏவல் செயின்?

**தலைவி கூற்று :**

நெஞ்சு ஏவல் செய்யாது என நின்றாய்க்கு, எஞ்சிய
காதல் கொள் காமம் கலக்குற ஏதிலார்
பொய்ம் மொழி தேறுவது என்?

**தலைவன் கூற்று :**

தெளிந்தேன், தெரி இழாய் யான்!
பல்கால் யாம் கான் யாற்று அவிர் மணல் தண் பொழில்
அல்கல் அகல் அறை ஆயமொடு ஆடி,
முல்லை குருந்தொடு முச்சி வேய்ந்து எல்லை
இரவு உற்றது இன்னும் கழிப்பி, அரவு உற்று
உருமின் அதிரும் குரல் போல் பொரு முரண்
நல்ஏறு நாகு உடன் நின்றன்,
பல் ஆன் இன நிரை நாம் உடன் செலற்கே.

**தலைவன் :**

நன்மை மிகப்பெருகிய, விருப்பம் வருகின்ற, மென்மையான தோள்களையும், சுழல்கின்ற அமர்த்த கண்களையும், அழகையும் உடைய நல்லவளே! நீ எனக்குற்ற வருத்தும் நோய்க்கு, நான் பிழைக்குமாறு, உறுதியான நெறியை உரைத்துவிட்டுப் போவாயாக!

**தலைவி :**

பெரிதும் பித்தனைப்போல என் முன்னே வந்து நின்று வழி மறைக்கின்றாயே, ஏடா? யார் நீ? நின்னை நான் இதன் முன்னே அறிந்ததும் இல்லையேடா?

**தலைவன் :**

தளிரைப் போன்ற இயல்பினளே! என்னை யாவனென்று அவியர் வேண்டினார், பகைக்கு அஞ்சாத புல்லினத்து ஆயர் மகன் ஆவேன் யான் என்று அறிவாயாக.

**தலைவி :**

புல்லினத்து ஆயனோ நீ! ஆனால், குடப்பால் கறக்கும் நல்லினத்து ஆயரன்றோ எம்மவர்?

**தலைவன் :**

ஏடீ! உன்னோடு ஏதும் சொன்னால் குற்றமோ? இல்லையன்றோ?



**தலைவி :**

குற்றமேதும் இல்லை. நாளை வருகின்றேன். இவ்வேளை வழியை விட்டுவிடு.

**தலைவன் :**

விடேன்! உடன்படுவது போலப் பேசிப் பிரிபவரின் சொற்களைக் கேட்டு, மடம்பட்டு, மென்மையானவை என்று என் காதுகள் அறிகின்றன.

குறிப்புகள்

மெல்லியலே! என் மொழி கொண்டு உன் மொழியைக் கொள்ளாது, என் நெஞ்சம் என்னைத் தூண்டி விடுகின்றபோது, உன் வார்த்தையைக் கேட்டு நானும் உன்னைப் போகவிடுவேனோ?

**தலைவி :**

நெஞ்சுதான் ஏவல் செய்யவில்லை என்றுஞ நிற்கின்றாயே! அதன் பின் காதல் கொள்ளும் காமம் கலக்கத்தைச் செய்ய, உனக்கு உறவற்ற எனது வார்த்தையைப் பொய் மொழியாகத் தெளிவது மட்டும் ஏனோ?

**தலைவன் :**

தெரிஇழாய்! இப்போது நீ உண்மையைச் சொன்னாய் என அறிந்தேன்.

**தலைவி :**

முன்னர்ப் பலமுறை யாம் கானாற்று அவிர் மணல் படர்ந்த தண்மொழியிலேயுள்ள அகன்ற பாறையிலே ஆயத்தோடு மலர்களால் தலையை அலங்காரம் பண்ணியும் வருவதனால், பொழுதோ போயிற்று. இரவும் நெருங்குகின்றது. இன்னமும் நேரங் கடத்தாதே!

**தலைவன் :**

பாம்பு கடித்துக் கதறும் ஏற்றின் குரலைப் போல் அதிரும், பொருகின்ற முரண் கொண்ட நல்லேறுகள் பெண் எருமையுடன் சேர்ந்து நின்றன. நம்முடன் வீடு திரும்பப் பல ஆக்கள் கொண்ட நிரையும் புறப்படுகின்றன வா, நாமும் செல்வோம்.

## 3.8.பாடல் : 14 : இருமணம் இயல்பன்று! :

**தலைவி கூற்று :**

வாரி நெறிப்பட்டு இரும் புறம் தாஅழ்ந்த
ஓரிப் புதல்வன் அழுதனன் என்பவோ,
புதுவ மலர் தைஇ, எமர் என் பெயரால்,
வதுவை அயர்வாரை கண்டு? ‘‘மதி அறியா
ஏழையை’’ என்று அகல நக்கு வந்தீயாய் நீ
தோழி அவன் உழைச் சென்று.

**தோழி கூற்று :**

சென்று யான் அறிவேன் கூறுக மற்று இனி.

**தலைவி கூற்று :**

சொல் அறியாப் பேதை! ‘‘மட்வை! மற்று எல்லா!
நினக்கு ஒரூஉம் மற்று என்று அகல் அகலும் நீடு இன்று
நினக்கு வருவதாக் காண்பாய்’’, அனைத்து ஆகச்
சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு.
தருமணல் தாழப் பெய்து இல் பூவல் ஊட்டி,
எருமைப் பெடையோடு, எமர் ஈங்கு அயரும்
பெரு மணம் எல்லாம் தனித்தே ஒழிய,
வரி மணல் முன்துறைச் சிற்றில் புனைந்த

திரு நுதல் ஆயத்தார் தம்முள் புணர்ந்த
ஒரு மணம் தான் அறியும் ஆயின் எனைத்தும்
தெருமரல் கைவிட்டு இருக்கோ, அலர்ந்த
விரி நீர் உடுக்கை உலகம் பெறினும்,
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இரு மணம் கூடுதல் இல் இயல்பு அன்றே?

**தலைவி :**

தோழி! வாரி நெறிப்பட்டுப் பின்புறம் தாழ்ந்த கூந்தலினையுடைய தம் புதல்வன் அழுதனன் என்று சொல்லுகிறார்களோ, அவனைப் பெற்றோர்? ஏனடீ, அவன் இவ்வாறு என்னை மறந்தான்? அவனிடம் சென்று, புதுமலர் சூடி, என் சுற்றத்தார் என் வதுவையினை நிகழ்த்தப் போவதைக் கண்டும். புத்தியில்லாத கோழையோ நீ என்றுக் கேட்டுப் பெரிதும் நகையாடி வாராயோடி!

**தோழி :**

அவன்பாற் சென்று நான் அறிந்து வருகின்றேன். பிறவற்றை நீ இனிக் கூறுக.

**தலைவி :**

சொல்லினைச் சொல்லற்கும் அறியாத பேதாய்! மடவோய்! மற்று, ஏடா! நினக்கும் இதுதான் நேரும் என்று சொல்லி வந்துவிடு காலமோ அதிகமில்லை. உனக்கு வருவதாகக் காண்பாய் என்று சொல்வதை மட்டும் நன்கு விளக்கமாக அவன் புரியுமாறு கூறுவாயாக.

ஆற்று மணலைக் கீழெல்லாம் கொட்டி, வீட்டுக்குச் செம்மண் பூசி, பெட்டை எருமையோடு எம்மவர் இங்கே செய்கின்ற பெருமணம் எல்லாம், அவனின்றித் தனித்தே மகிழ்ச்சி தராதேயே ஒழிகின்றதே?

ஆற்று அறல் மணல் குவிந்த துறையிலே, சிற்றில் புனைந்த சிறுநுதல் ஆயத்தவர்களிடையிலே, தம் காதலனோடு கூடும் ஒரு மணந்தான் உண்டென்று அறிவானானால், எப்படியும் நான் வாடிய என்னைக் கைவிட்டிருப்பானோ? பரந்த திரை விரிகின்ற கடலை எடுத்திருக்கும் உலகமே கிடைக்கப் பெறினும், அருநெறி பேணுபவர் ஆயர் மகளிர். அவர்க்கு இருமணம் கூடுதல் என்பது என்றும் இல்லற நெறியல்லவே!

### 3.4.பாடல் : 15 : களவு வெளிப்பட்டது : தலைவி கூற்று :

தோழி! நாம் காணாமை உண்ட கடும் கள்ளை, மெய் கூர
நாணாது சென்று நடுங்க உரைத்தாங்குக்,
கரந்ததூஉம் கையொடு கோட்பட்டாம் கண்டாய், நம்
புல்லினத்து ஆயர் மகன் சூடி வந்தது ஓர்
முல்லை ஒரு காழும் கண்ணியும், மெல்லியால்!
கூந்தலுள் பெய்து முடித்தேன் மன் தோழி! யாய்
வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே
அன்னையும் அத்தனும் இல்லரா யாய் நாண,
அன்னை முன் வீழ்ந்தன்று அப்பூ

அதனை வினவலும் செய்யாள், சினவலும் செய்யாள்,
நெருப்புக் கை தொட்டவர் போல விதிர்த்திட்டு,
நீங்கிப் புறங்கடை போயினாள் யானும் என்
சாந்து உளர் கூழை முடியா நிலம் தாழ்ந்த
பூங்கரை நீலம் தழீஇத் தளர்பு ஒல்கிப்,
பாங்கரும் கானத்து ஒளித்தேன் …………

**தோழி கூற்று :**

………….. ……………. அதற்கு எல்லா!
ஈங்கு எவன் அஞ்சுவது?
அஞ்சல் அவன் கண்ணி நீ புனைந்தாய், ஆயின் நமரும்
அவன் கண் அடை சூழ்ந்தார் நின்னை அகல் கண்
வரைப்பில் மணல் தாழப் பெய்து, திரைப்பில்
வதுவையும் ஈங்கே அயர்ப் அதுவே யாம்
அல்கலும் சூழ்ந்த வினை.

**தலைவி :**

தோழி! பெற்றோர்களுள் மறைத்துக் கள்ளுண்ட ஒருவன், வெறியின் மிகுதியால் தன் மடல் கட்டுப்பாடற்றுப் போயின நிலையில், அவர்முன் செல்வதற்கும் நாணாது சென்று அவர் நடுங்குமாறு பேச்சைக் கொட்டுவானல்லுவோ? அவன் நிலைபோலவே ஆயிற்றடி என் நிலைமை! நாம் பெற்றோர் அறியாது மறைத்தோமே களவு வாழ்க்கை, அதுதான் இன்று கையோடு பிடிபட்டு விட்டதடீ?

**தோழி :** விளக்கிச் சொல்லடீ.

**தலைவி :**

நம் காதலனாகிய புல்லினத்து ஆயர் மகன் இருக்கிறானே அவன், ஒரு நாள் முல்லைச் சரமும் கண்ணியும் சூடியவனாக வந்தான். மெல்லியலே! அதனை வாங்கி நான் ஆர்வமுடன் என் கூந்தலுள் வைத்து முடித்துக் கொண்டேன். வீட்டிற்குச் சென்றதும், செவிலித்தாய் என்னைத் தலைவாரி முடிக்க அழைத்தாள், வெண்ணெய் தடவித் தலையை விரித்துக் கோதினாள். தலையினுள் இருந்த பூ அவள் முன்னே விழுந்தது. செவிலித்தாய் நம்மையும் அறியாது இ∴தெவ்வாறு வந்ததோ? என நினைத்து நாணினாள். என் அன்னையும் அத்தனும் அன்று வீட்டிலேயே இருந்தனர்.

செவிலித்தாய், என்னிடம் ஏதுமே கேட்கவில்லை. என்னைச் சினத்து கொள்ளவுமில்லை. நெருப்பினைக் கைதொட்டவர் போல விதிர் விதிர்த்து அந்த இடத்தைவிட்டு எழுந்து புறங்கடைக்குப் போய்விட்டாள். நான், என் கூந்தலை வாரி முடித்துக்கொண்டு தரையிலே வீழ்ந்த பூங்கரையிட்ட நீலச் சிற்றாடையைக் கையிலே பற்றிப் பிடித்துக்கொண்டு, மெல்ல மெல்ல நடந்து, வீட்டிற்கருகே இருந்த இக்குறுங்காட்டினுள்ளேயும் வந்து ஒளிந்து கொண்டேன்.

**தோழி :**

அதற்கு இங்கிருந்தே ஏனடீ. பயந்து நடுங்குகின்றாய்? அஞ்சாதே! அவன் கண்ணியை நீ சூடினாய், ஆதலால், நம்மவர் உன்னை அவனுக்கே மணஞ்செய்து தர முடிவு செய்தனர். நம் வீட்டு முற்றத்திலே புது மணலைப் பரப்புகின்றனர். பந்தரிட்டு அங்கே திருமணமும் நடத்துவர். அதுதானேடி நாம் நாள்தோறும் எண்ணிய செயல் அது இப்போது பலித்திருக்கிறது. நீ ஏனடி பதுங்கிக் கொண்டிருக்கின்றாய்?

## 3.10.பாடல் : 16 : அங்கே வருவாய்! : தலைவி கூற்று :

பாங்கு அரும் பாட்டங்கால் கன்றொடு செல்வேம் எம்
தாம்பின் ஒரு தலை பற்றினை, ஈங்கு எம்மை
முன்னை நின்று ஆங்கே விலக்கிய எல்லா! நீ
என்னை ஏமுற்றாய்! விடு!

**தலைவன் கூற்று :**

விடேஎன்! தொடீஇய செல்வார்த் துமித்து. எதிர் மண்டும்
கடு வய நாகு போல் நோக்கித் தொழு வாயில்
நீங்கிச் சினவுவாய் மற்று.

**தலைவி கூற்று :**

நீ நீங்கு! கன்று சேர்ந்தார்கண் கத ஈற்று ஆ சென்றாங்கு
வண்கண்ணள் ஆய்வரல் ஓம்பு.

**தலைவன் கூற்று :**

யாய் வருக ஒன்றோ பிறர் வருக, மற்று நின்
கோ வரினும் இங்கே வருக, தளரேன் யான்
நீ அருளி நல்க பெறின்.

**தலைவி கூற்று :**

நின்னை யான் சொல்லினவும் பேணாய் நினைஇ
கனை பெயல் ஏற்றின் தலை சாயத்து, எனையதூஉம்
மாறு எதிர் கூறி மயக்குப்படுகுவாய்!
கலத்தொடு யாம் செல்வுழி நாடிப் புலத்தும்
வருவையால் நாண் இலி நீ!

**தலைவி :**

ஊருக்குப் பக்கத்திலேயுள்ள தோட்டத்திற்குக் கன்றோடு செல்கின்றேன். என் தாம்புக் கயிற்றின் ஒரு முனையைப் பற்றினாய்! இங்கு, என்னை முன்னே வந்து நின்று தடுத்தும் நிறுத்துகின்றாய்! ஏடா! நீ என்ன பித்தம் பிடித்தவனோ? வழியை விடுவாயடா!

**தலைவன் :**

வழியை விடேன். தன்னைப் பிடிக்க வருவாரைக் கீழே தள்ளிவிட்டு எகிறி ஓடும் கொடிய பெண் எருமைக் கன்றைப் போல, வீட்டை விட்டு வெளியே வந்துள்ள நீ, என்னையும் பிடித்துத் தள்ளிவிட்டு, நின் வழியில் போகலாமே?

**தலைவி :**

வழியை விட்டு விலகி நில்லடா! தன் கன்றைத் தளைப்பவர் மீது, சினத்துடன் பாய்ந்து செல்லும் தலையீற்றுப் பசுவை போல, உன்னைத் தக்கபடி ஒறுப்பதற்கு என் தாயாரும் இங்கே வந்து விடுவாள், பாராய்!

**தலைவன் :**

தாய் வரினும் வருக. பிறர் எவர் வரினும் வருக! மற்று, நின் அரசனே வந்தாலும் வருக. நின்னால் அன்புசெய்யப் பெற்றேனானால் அவர், எவர் வந்தாலும் நான் அஞ்சித் தளர்ந்துவிட மாட்டேன்.

**தலைவி :**

உனக்கு, நான் என்னென்ன சொல்லியும், அவற்றை எல்லாம் பொருட்படுத்த மாட்டேன் என்கிறாயே! நினைத்துப்பார். பெருமழை பெய்யும் போது, அசையாமல் தலை சாய்த்து நிற்கின்ற ஏறுபோல, ஆடாது அசையாது நிற்கின்றாயே? என்ன சொல்லினும், மாறாக எதிர்த்து மற்றொன்று சொல்லிக் காம மயக்கத்திலேயே ஆழ்ந்து விடுகிறாயே! நாணங்கெட்டவனே! கறவைக் கலத்தோடு யாம் நாளைப் புலத்துக்குச் செல்லும்போது, அங்கேயும் வருவாயோ?

## 3.11.பாடல் : 17 : தெளியாது என் அறிவு! :

**தலைவன் கூற்று :**

மாண உருக்கிய நல் பொன் மணி உறீஇ,
பேணித் துடைத்தன்ன மேனியாய்! கோங்கின்
முதிரா இள முகை ஒப்ப எதிரிய
தொய்யில் பொறித்த வன முலையாய்! மற்று நின்
கையது எவன்? மற்று உரை!

**தலைவி கூற்று :**

கையதை சேரிக் கிழவன் மகளேன் யான் மற்று இ∴து ஓர்
மாதர்ப் புலைத்தி விலை ஆகச் செய்தது ஓர்
போழில் புனைந்த வரிப் புட்டில் - புட்டில் உள் என்? உள ?
காண்தக்காய் என் காட்டிக் காண்.

**தலைவி கூற்று :**

காண்! இனி தோட்டார் கதுப்பின் என் தோழி அவரொடு
காட்டுச் சார் கொய்த சிறு முல்லை மற்று இவை.

**தலைவன் கூற்று :**

முல்லை இவை ஆயின், முற்றிய கூழையாய்!
எல்லியற்றுப் போழ்து ஆயின் ஈதோளிக் கண்டேனால்
செல் என்று நின்னை விடுவேன் யான் மற்று எனக்கு
மெல்லியது ஓராது அறிவு.

**தலைவன் :** பசும்பொன்னை நன்றாக உருக்கி, அதன் நடுவே நீலமணியை வைத்து இழைத்து. நன்கு மெருகிட்டதைப் போன்ற, ஒளிமிகுந்த மேனியினை உடையவளே! கோங்கினது முதிராத இளமொட்டுப் போன்று புடைத்த, தொய்யில் எழுதிய அழகிய மார்பகங்களை

உடையவளே! உன் கையில் தான் என்ன இருக்கிறது? அதனைச் சொல்வாயாக!

**தலைவி :** யானோ, இவ்வூர்த் தலைவனுடைய மகளாவேன். இது, ஒரு புலைத்தி விலையாகச் செய்து தந்தது, பனை ஓலை நறுக்கினாலே பின்னி, வண்ணம் ஊட்டிய புட்டில். இது தான் என் கையிலிருப்பது.

குறிப்புகள்

**தலைவன் :** புட்டில் என்பதை யானும் அறிவேன். காணத் தகுந்த அழகியே! புட்டிலினுள் என்ன இருக்கிறது? அதனை நான் காணுமாறு காட்டுக.

**தலைவி :** பார்த்துக்கொள், என் தோழிகளோடு காட்டினுள் கொய்த சிறுமுல்லைப் பூக்கள் இவை.

**தலைவன் :** இவை முல்லையாய் இருக்கின்றன. நீண்டு வளர்ந்த கூந்தலை உடையாளே! பொழுதும் மாலைக் காலமாயிருக்கின்றது. இடமோ ஒருவரை ஒருவர் காணமுடியாத இருள் சூழ்ந்த இடம். செல் என்று நின்னை யான் போகவும் விடுவேன். ஆனால், எனக்கு அறிவு மிகவும் மென்மையானது. நல்லது தீது எதனையும் தெளியாதது, அதுவே உன்னை விரும்பும்போது நான்தான் என்ன செய்வேன்?

## 3.12.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. தன் காதலை ஏற்காத தலைவியைக் கண்டு தலைவன் மனம் வெதும்பி கூறியது யாது?
2. தன் மனக்காதலை தலைவனிடம் மறைத்து பின் தோழியினை தூது அனுப்பும் தலைவியின் மனவுணர்வினை முல்லைக்கலி வழி காட்சிப்படுத்துக.

**பெருவினா :**

3. களவு கற்பாக மலர உதவும் தோழியின் பங்களிப்பினை முல்லைக்கலி வழியாக நிறுவுக.
4. முல்லைக்கலி காட்சிப்படுத்தும் ஊடலின் அழகு நயங்களை விரித்துரைக்க

## 3.13.தொகுத்துக் காண்போம். :

காடும் காடு சார்ந்த இடமும் நிகழ்கின்ற களனாகக் கொண்டும், அவ்விடங்களிலே தம் வாழ்வியலை அமைத்து வாழ்ந்தவரான ஆயர் குடியினரின் அக வாழ்வினையும் ஏறுகோடலும், ஆயர் குலத்தினரின் மனவுறுதியினையும், ஆயர்குல இளைஞர்களின் அடரோலறு கொள்ளும் ஆற்றலையும் அறிந்ததோடு, இப்பகுதியில் அமைந்த ஒவ்வொரு கலிப்பாவும் ஓர் ஓரங்க நாடகமாக அமைந்திருப்பதனையும் அறிந்து கொண்டீர்கள்.

*Self -Instructional Material*

## 3.14.மேலும் பயில்வதற்கான நூல்கள் :

- கலித்தொகை, உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.

* கலித்தொகை, முனைவர் அ. விசுவநாதன் குழுவினர், நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
* கலித்தொகை, புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.
* கலித்தொகை, தமிழ் அமுதன் உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.
* கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரை, கழகப்பதிப்பகம், திருநெல்வேலி
* முல்லைக்கலி, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.

# கூறு-4-ஐங்குறுநூறு-மருதத் திணைப் பாடல்கள்

**பாடியவர் : ஓரம்போகியார்**

குறிப்புகள்

## 4.1.முன்னுரை :

எட்டுத்தொகை இலமக்கியங்களில் மூன்றாவதாக இடம்பெறுவது ஐங்குறுநூறு ஆகும். இந்நூல் அகவற்பாவால் பாடப்பட்டுள்ளது. இந்நூலின் பெருமை அதில் இடம்பெறும் உத்திமுறைகளே ஆகும். பண்டைய கால மக்களின் வாழ்வியல் முறைகளையும் தலைவன், தலைவி, தோழி மற்றும் அனைத்து உறவினர்களின் அகவாழ்வினை எடுத்தியம்புவதாக இருக்கின்றது. அவ்வகையில் மருதத்திணைப் பாடல்கள் இப்பாடப்பகுதியில் அமையப்பெற்றுள்ளது.

## 4.2.குறிக்கோள்கள் :

பழந்தமிழரின் பண்பாட்டினை அடையாளப்படுத்துவதன் நோக்கமாக ஐங்குறுநூற்றின் மருதத்திணைப் பாடல்கள் இருக்கின்றன. அதிலும் அவர்களின் இல்லறப் பண்பாக விளங்கும் விருந்தோம்பல், தலைவன் தலைவியின் காதர் ஒழுக்கம், கடமை மற்றும் பொருளீட்டல் போன்றவையும் அவர்களின் ஆடை அணிகலன்கள், நாகரிக பண்பாட்டையும் மாணவர்களுக்கு விளக்குவதே இப்பாடப்பகுதியின் குறிக்கோளாகும்.

## 4.3.வேட்கைப் பத்து :

### 4.3.1.பாடல் : 1 : தோழி தலைவனிடம் கூறியது :

வாழி ஆதன்! வாழி அவினி!
நெல் பல பொலிக, பொன் பெரிது சிறக்க,
என வேட்டோளே யாயே, யாமே,
நனைய காஞ்சிச் சினைய சிறு மீன்
யாணர் ஊரன் வாழ்க,
பாணனும் வாழ்க, என வேட்டேமே.

அரசன் காவற்பொருட்டு வாழ்வானாக. மேல் விருந்தாற்றுதற் பொருட்டு நெற்பல பொலிக. இரவல்க்கீற்று பொருட்டு பெண் உண்டாகுக. என யாம் இல்லறத்திற்கு வேண்டவன விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினந்திலள் அவள் இத்தன்மையளாக, நீ ஒழுகிய ஒழுக்கத்தால் நினக்கும் நின் ஒழுக்கத்திற்குத் துணையாகிய பாணனுக்கும் தீங்கு வருமென்றஞ்சி யாணரூரன் வாழ்க! பாணனும் வாழ்க! என விரும்பினேம் யாங்களென்றவாறு.

### 4.3.2.பாடல் : 2 : தோழி தலைவனிடம் கூறியது :

வாழி ஆதன்! வாழி அவினி!
விளைக வயலே, வருக இரவலர்.
என வேட்டோளே யாயே, யாமே,
பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்துறை ஊரன் கேண்மை,
வழிவழிச் சிறக்க, என வேட்டேமே.

*Self -Instructional Material*

தலைவி, அரசன் வாழ்வானாக. மேல், வயல் விளைவதாக, அதனால் இரவலர் இல்லாது போகுக என வாழ்ந்திருந்தாள், நாங்கள் பலவிதழ்களை உடைய காவி மலரோடு மாறுகொள்ளும் நெய்தல் மலர் பொருந்திய குளிர்ந்த துறைகள் பொருந்திய இவ்வூரனது உறவு மேலும் மேலும் வளர்வதாக என விரும்பினோம்

**4.3.3.பாடல் : 3 : தோழி தலைவனிடம் கூறியது :**

வாழி ஆதன்! வாழி அவினி!
பால் பல ஊறுக, பகடு பல சிறக்க,
என வேட்டோளே யாயே, யாமே,
வித்திய உழவர் நெல்லொடு பெயரும்
பூக்கஞல் ஊரன்,. தன் மனை
வாழ்க்கை பொலிக என வேட்டேமே.

அரசன் வாழ்வானாக! மேல், பால்மிக பெருக, பகடுகள் பலவாகச் சிறக்குக என்று விரும்பினாள் தலைவி. யாங்கள் வித்தைவித்திய உழவர் விளைந்த நெல்லைக் கொண்டுபோம் வளம் நெருங்கிய ஊரன் தனது மனை வாழ்க்கையித்துப் பொலிவானாக என விரும்பினேம்.

**4.3.4.பாடல் : 4 : தோழி தலைவனிடம் கூறியது :**

வாழி ஆதன்! வாழி அவினி!
பகைவர் புல் ஆர்க, பார்ப்பார் ஓதுக,
என வேட்டோளே யாயே, யாமே,
பூத்த கரும்பின், காய்த்த நெல்லின்
கழனி ஊரன் மார்பு
பழனம் ஆகற்க, என வேட்டேமே.

அரசன் வாழ்வானாக! மேலும், பகைவர் புல்லுணவை உண்பாராக, பார்ப்பார் ஓதுவாராக என்று விரும்பினாள் தலைவி. யாங்கள் பூத்த கரும்பையும் காய்ந்த நெல்லையும் உடைய கழனியையுடைய ஊரனது மார்பு சோலை அல்லவாகுக என்று விரும்பினேம்.

**4.3.5.பாடல் : 5 : தோழி தலைவனிடம் கூறியது :**

வாழி ஆதன்! வாழி அவினி!
பசியில் ஆகுக, பிணி சேண் நீங்குக,
என வேட்டோளே யாயே, யாமே,
முதலை போத்து முழு மீன் ஆரும்
தண்துறை ஊரன் தேர் எம்
முன்கடை நிற்க, என வேட்டேமே.

அரசன் வாழ்வானாக, பசியில்லாது போகுக. நோய் மிகத் தூரத்தே போவதாக என்ற விரும்பினாள் தலைவி. யாங்கள் முதலைப் போத்தானது முழு மீனையுண்ணும் குளிருந் துறையையுடைய ஊரன் ஊரானது பிற மகளிர் முன் கடை நிற்ற ஒழிந்து என்முன் கடை நிற்க என விரும்பினேம்.

**4.3.6.பாடல் : 6 : தோழி தலைவனிடம் கூறியது :**

வாழி ஆதன்! வாழி அவினி!

வேந்து பகை தணிக, யாண்டு பல நந்துக,
என வேட்டோளே யாயே, யாமே,
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்துறை ஊரன் வரைக,
எந்தையும் கொடுக்க, என வேட்டேமே.



நின்னை எதிர்ப்பட்ட அன்றே நீ வரைந்தாய் எனக்கொண்ட இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஆதன் வாழி, அவினி வழி, அரசன் பகை தணிவாளாக, யாண்டு பலவாகப் பெருகுக என ஒழுகினாள் தலைவி, யாங்கள் விரிந்த பொய்கையிடத்து முகிழ்ந்த தாமரையை உடைய தண்டுறை ஊரன் இவளை வரைவானாக. எந்தையும் கொடுப்பானாக என விரும்பினோம்.

**4.3.7.பாடல் : 7 : தோழி தலைவனிடம் கூறியது :**

வாழி ஆதன்! வாழி அவினி!
அறன் நனி சிறக்க, அல்லது கெடுக,
என வேட்டோளே யாயே, யாமே,
உளைப்பூ மருதத்துக் கிளைக் குருகு இருக்கும்
தண்துறை ஊரன், தன்னூர்க்
கொண்டனன் செல்க, என வேட்டேமே.

தலைவி! ஆதன் வாழ்க அவினி வாழ்க, தருமம் மென்மேலுஞ் சிறக்க. பாவங் கெடுவதாக என்ற விரும்பினாள். யாங்கள் அகவிதழ் அழகிய பூவையுடைய மருத்த மரத்தின்கண் நாரையினங்கள் இருக்கும் தண்டுறையூரன் தன்னூர்க்குக் கொண்டு செல்வானாக என விரும்பனேம்.

**4.3.8.பாடல் : 8 : தோழி தலைவனிடம் கூறியது :**

வாழி ஆதன்! வாழி அவினி!
அரசு முறை செய்க, களவு இல் ஆகுக,
என வேட்டோளே யாயே, யாமே,
அலங்கு சினை மாஅத்து அணி மயில் இருக்கும்
பூக்கஞல் ஊரன், சூள் இவண்
வாய்ப்பதாக, என வேட்டோமே.

ஆதன் வாழ்க! அவினி வாழ்க! அரசு முறை செய்க! களவில்லாது போவதாக என்று விரும்பி ஒழுகினாள் தலைவி. யாங்கள் அசையா நிற்கும் கொம்பர் பொருந்திய மாமரத்தின்கண் அழகிய மயிலானதிருக்கும் அழகு நிறைந்த ஊரன் கூறிய உண்மை வசனம் இவ்விடத்து வாய்ப்பதாக என விரும்பினேம்.



**4.3.9.பாடல் : 9 : தோழி தலைவனிடம் கூறியது :**

வாழி ஆதன்! வாழி அவினி!
நன்று பெரிது சிறக்க, தீது இல் ஆகுக,
என வேட்டோளே யாயே, யாமே,
கயல்ஆர் நாரை போர்வில் சேக்கும்
தண்துணை ஊரன் கேண்மை,

அம்பல் ஆகற்க, என வேட்டேமே.

தலைவி ஆதன் வாழ்க, அவினி வாழ்க, நன்மை மிகவம வளர்வதாக, தீமை சிறியதும் இல்லாது போவதாக என்று விரும்பியொழுகினாள். யாங்கள் கயலாகிய உணவை உண்கின்ற நாரை நெற்போரிடத்து இராநின்ற தண்டுறை ஊரனிடை நம்முறவு வெளிபடாமல் இருக்க வேண்டும் என விரும்னேம்.

**4.3.10.பாடல் : 10 : தோழி தலைவனிடம் கூறியது :**

வாழி ஆதன்! வாழி அவினி!
மார் வாய்க்க, வளம்நனி சிறக்க,
என வேட்டோளே யாயே, யாமே,
பூத்த மாஅத்துப் புலால் அம் சிறுமீன்
தண்துறை ஊரன், தன்னொடு
கொண்டனன் செல்க, என வேட்டேமே.

தலைவி, அரசனாகிய ஆதன் வாழி! அவினி வாழி! மழை தப்பாது பெய்வதாக, அதனால் வளங்கள் மிகப்பெருகுவதாக என்று விரும்பி ஒழுகினாள். யாங்கள் பூத்த மாவினையும் புலால் சிறுமீனையும் உடைய ஊரன் இங்க வரையானாயின் தன்னூர்க்குக் கொண்டு செல்வானாக என விரும்பினோம்.

## 4.4.வேழம் பத்து :

**4.4.1.பாடல் : 11 : தலைவி தோழியிடம் அல்லது பாணனிடம் கூறியது**

மனை நடு வயலை வேழம் சுற்றும்
துறை கேழ் ஊரன் கொடுமை நாணி,
நல்லன் என்றும் யாமே,
அல்லன் என்னும் தட மென்தோளே.

மனை நடுவில் நிற்கும் பசலைக் கொடியானது. மனைப்புறத்தில் நிற்குங் கொற்கையின்மேற் சென்று படருந்துறை பொருந்தியவூரன் நமக்குச் செய்யுங் கொடுமைக்கு நாணியும் யாம் நல்லனென்றே கூறுகின்றோம். யாமப் படியாகவும் பெருமை பொருந்திய மெல்லியவாகிய தோள்களானவை அல்லாதவனென்று கூறுகின்றன.

**4.4.2.பாடல் : 12 : தலைவி கூற்று :**

கரை சேர் வேழம் கரும்பின் பூக்கும்
துறைகேழ் ஊரன் கொடுமை நன்றும்
ஆற்றுக தில்ல யாமே.
தோற்க தில்ல, என் தட மென் தோளே.

கரைமருங்கு நிற்கின்ற வேழமானது, வயலகத்து நிற்குங் கரும்பு போலப் பொலிகின்ற துறை பொருந்திய ஊரன் செய்யுங் கொடுமை நன்றாயிருத்தலின் மாற்ற வேண்டும் விருப்பமுடையும் யாமப்படியாகவும், முயக்கத்தை விரும்பி மெலிவடையா நிற்கின்றன பெருமையுடைய மெல்லிய தோள்கள்.

**4.4.3.பாடல் : 13 : தலைவி தோழியிடம் கூறியது :**

பரியுடை நன்மான் பொங்குளையன்ன
அடைகரை வேழம் வெண்பூப் பகரும்,
தண்துறை ஊரன் பெண்டிர்,
துஞ்சு ஊர் யாமத்தும், துயில் அறியலரே.

தாய்குதலைத் தொழிலாகவுடைய பெருமை பொருந்திய குதிரையது தலையிலணியப்பட்ட பொலியவாகிய வெண் கவிரி போல் அடைகரைக்கண் நிற்கும் வேழம் வெண் பூவைக் கொடுக்குந் தண்டுரையூரனது பெண்டிர் இவ்வூரிலுள்ள யாருமொருசேரத் துயில்கின்ற யாமத்துங் தாங்கொண்ட காதலாற்றுயிலறியாராக, அவர் வருந்திறம் யாது?

**4.4.4.பாடல் : 14 : தலைவி தோழியிடம் கூறியது :**

கொடிப் பூ வேழம் தீண்டி அயல
வடுக்கொண் மாஅத்து வண் தளிர் நுடங்கும்
அணித்துறை ஊரன் மார்பே,
பனித் துயில் செய்யும் இன் சாயற்றே.

நீண்ட பூவினையுடைய வேழந் தீண்டப் பக்கத்தில் நிற்கு மாவினது வடுவமைந்த வளவிய தளிரசையும் அழகிய துறையூரனது மார்பே மனம் மகிழுமினிய துயிலைத் தாரா நின்ற மென்மையை உடையத்து அதனாலாற்றேனாகின்றேன்.

**4.4.5.பாடல் : 15 : தலைவி தோழியிடம் கூறியது :**

மணலாடு மலிர்நிறை விரும்பிய ஒண் தழைப்
புனல் ஆடு மகளிர்க்குப் புணர் துணை உதவும்,
வேழ மூதூர் ஊரன்,
ஊரன் ஆயினும், ஊரன் அல்லன்னே.

மணலைக் கரைத்துச் செல்லும் வெள்ளமாகிய புதுப் புனலிடத்து ஆடுதலை விரும்பிய மகளிர்க்குத் தழையை உடைய ஒள்ளிய வேழமானது புணர்ந்தார். தன்மையைச் செய்யும் பெரியவூரினையுடைய ஊரன் நின்னாற் சொல்லப்படும் பற்றுக்கோடுடையனாயினும். அவ்வாற்றான் என்னாற் கொள்ளப்படும் தன்மையிலன்.

**4.4.6.பாடல் : 16 : தோழி தூது வந்த பாணனிடம் கூறியது :**

ஓங்குபூ வேழத்துத் தூம்பு உடைத் திரள்கால்
சிறு தொழு மகளிர் அஞ்சனம் பெய்யும்
பூக்கஞல் ஊரனை உள்ளிப்,
பூப் போல் உண்கண் பொன் போர்த்தனவே.

உயர்ந்து தோன்றும் பூவையுடைய வேழத்தினது கட்டுளை பொருந்திய திரண்ட தண்டு சிறிய தொழில் மகளிர் அஞ்சன மையிட்டு வைத்தற்க அமையும் பொலிவு நிறைந்த ஊரனைப் பலகாலும் நினைத்து அழகிய மையுண்ட கண் பசலையான் மூடப்பட்டன. இனியவனடையும் பயனில்லை.

குறிப்புகள்

**4.4.7.பாடல் : 17 : தலைவி தோழியிடம் கூறியது :**

புதர் மிசை நுடங்கும் வேழ வெண்பூ
விசும்பு ஆடு குருகின் தோன்றும் ஊரன்,
புதுவோர் மேவலன் ஆகலின்,
வறிதாகின்று என் மடங்கெழு நெஞ்சே.

புதரினமே அசையா நின்ற வேழத்தினது வெள்ளிய பூ கரிய ஆகாயத்தின்கண் பறக்குங் குருகுபோலத் தோன்றகின்ற ஊரன் புறத்தொழுக்க உளதாகிய துணையே அன்றிக் கனவில் வந்து நாடோறும் வருத்துதலுடையனாதலால் என்னெஞ்சு பெருமையிழந்து வருந்துகின்றது.

**4.4.8.பாடல் : 18 : தலைவி தலைவனின் நண்பரிகளிடம் கூறியது :**

இருஞ்சாய் அன்ன செருந்தியொடு வேழம்
கரும்பின் அலமரும் கழனி ஊரன்,
பொருந்தும் மலரன்ன என் கண் அழப்
பிரிந்தனன் அல்லனோ, பிரியலென் என்றே?

கரிய தண்டான் கோரை போலும் பஞ்சாயக் கோரையோடு வேழமானது கரும்பு போலச் சுழலும் வயலூரன் பொருந்திய மலர்போலும் எனது கண் நீரைச்சொரியப் பிரிந்தானல்லனோ, இனியொருபோதுமினிப் பிரியேனென்று தெளிவித்து

**4.4.9.பாடல் : 19 : தலைவி தோழியிடம் கூறியது :**

எக்கர் மாஅத்துப் புதுப் பூம் பெருஞ்சினை
புணர்ந்தோர் மெய்ம் மணங்கமழும் தண் பொழில்,
வேழ வெண்பு வெள்ளுளை சீக்கும்
ஊரன் ஆகலின், கலங்கி,
மாரி மலரின் கண் பனி உகுமே.

நீரிட்ட மணற்றிடற் கண்ணேயுள்ள மாமரத்தினது பெரிய புதுப்பூவினை உடைய சினையானது வதுவை மகளிர் மெய்மணம் கமழக் கடவ பொழிலை அப்பூ அரும்பாகிய பருவத்தே வேழத்தின் பூவானது துடைக்குமுரனாதலின், கலக்கமுற்று மாரிக்காலத்து மலர் நீரைச் சிந்துந் தன்மை போல என் கண்களாயின நீர்த்துளியைச் சிந்தாது நிற்கும்.

**4.4.10.பாடல் : 20 : தலைவி தோழியிடம் கூறியது :**

அறுசில் கால அஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும்
காம்பு கண்டன்ன தூம்பு உடை வேழத்துத்
துறை நணி ஊரனை உள்ளி, என்
இறை ஏர் எல் வளை நெகிழ்பு ஓடும்மே.



ஆறு சிலவாய கால்களை உடைய அழகிய சிறகுகளை உடைய வண்டினது நூறாகிய விதழ்களையுடைய தாமரைப் பூவின்கண்ணுள்ள முட்டைகளைக் கெடுக்கும் மூங்கில் போலுமுள்ளீடு பொருந்திய வேழங்களமைந்த துறையையுடைய ஊரனை நினைத்தலின் என் கையிலணியப்பட்ட அழகிய வளையல்கள் நெகிழ்ந்து கழலாமல் நிற்கும்.

## 4.5.கள்வன் பத்து (களவன் பத்து) :

**4.5.1.பாடல் : 21 : தோழி தலைவியிடம் கூறியது :**

முள்ளி நீடிய முதுநீர் அடைகரைப்
புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்.
தண்துறை ஊரன் தெளிப்பவும்,
உண்கண் பசப்பது, எவன் கொல் அன்னாய்?

முள்ளிச்செடி வளர்ந்து நீண்ட முதுநீரடை கரைக்கண் வாழும் வரிகளையுடை நண்டு சென்று ஆம்பலை அறுக்கின்ற தண்டுறையும் ஊரன் தெளிவிக்கவும் மை தீட்டிய கண்கள் பசபர்படைவது யாது கொல்லோ.

**4.5.2.பாடல் : 22 : தலைவி தோழியிடம் கூறியது :**

அள்ளல் ஆடிய புள்ளிக் களவன்,
முள்ளி வேரளைச் செல்லும் ஊரன்,
நல்ல சொல்லி மணந்து, இனி
நீயேன் என்றது, எவன் கொல் அன்னாய்?

சேற்றில் மூழ்கிய வரிகளை உடைய நண்டானது முள்ளி வேர் செறின் அளையிடத்தே சென்றடைகின்ற ஊரை உடையவன் எமக்கின்பம் பயக்கும் சூளுரைத்து வரைந்து கொண்டு இப்பொழுது முற்கூறிய நீயேன் என்றது யாது கொல்லோ?

**4.5.3.பாடல் : 23 : தலைவி தோழியிடம் கூறியது :**

முள்ளி வேர் அளைக் களவன் ஆட்டிப்
பூக்குற்று எய்திய புனல் அணி ஊரன்,
தேற்றம் செய்து நப்புணர்ந்து, இனித்
தாக்கணங்கு ஆவது, எவன் கொல் அன்னாய்?

தன்னூரின்கண் வாழும் விளையாட்டு மகளிர் முள்ளிவேர் நெருங்கிய வளைக்கண் வாழும் நண்டையலைத்துப் பூக்குற்று விளையாடும் புனலணிந்தவூரின் நம்மனம் தெளியும்படி செய்து நம்மைக் கலந்து இப்பொழுது வருத்துவது யாது கொல்லோ?

**4.5.4.பாடல் : 24 : தோழி தலைவியிடம் கூறியது :**

தாய் சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு,
பிள்ளை தின்னும் முதலைத்து அவனூர்,
எய்தினன் ஆகின்று கொல்லோ? மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலங்கொண்டு துறப்பது, எவன்கொல் அன்னாய்?

தாய் சாதற்கேதுவாகத் தோன்றும் நண்டோடு பிள்ளையைத் தின்னு முதலையை உடையது அவனூர். அவற்றைத் தானடைந்தானாகின்றது கொல்லோ! மகிழ்நன் பொன்னினாய வளையல்கள் ஒலிப்பக்கூடி, அக்கூடியவர்களது அழகைக் கவர்ந்து நீங்குவது என்னை கொல்லோ! தலைவியே, அதனை அறியேமே.

**4.5.5.பாடல் : 25 : தோழி தலைவியிடம் கூறியது :**

அயல் புறந்தந்த புனிற்று வளர் பைங்காய்
வயலைச் செங்கொடி களவன் அறுக்கும்,
கழனி ஊரன் மார்பு, பலர்க்கு
இழை நெகிழ் செல்லல் ஆகும் அன்னாய்.

புறத்தே பாதுகாத்த இளமையாகிய வளரும் பசிய காய்களை உடைய வயலையாகிய செவ்விய கொடியை நண்ட அறுக்குங் கழனி ஊரனது மார்பு பரத்தையர் பலர்க்கும் இழை நெகிழும்படியாகிய துன்பத்தை உடையதாகும் தலைவியே!

**4.5.6.பாடல் : 26 : தோழி தலைவியிடம் கூறியது :**

கரந்தை அம் செறுவில் துணை துறந்து. களவன்
வள்ளை மென் கால் அறுக்கும் ஊரன்,
எம்மும் பிறரும் அறியான்,
இன்னன் ஆவது, எவன் கொல் அன்னாய்?

கரந்தை செறிந்த வயலிலேயுள்ள தனது பெண்ணைப் பிரிந்த நண்டானது வள்ளையினது மெல்லிய தண்டை அறுக்கின்ற ஊரன் எம்மையும் பிறரையும் வருத்துகின்றதை அறியான். அவ்வாறாயினான் துன்பத்தைச் செய்பவனாதல் எங்ஙனம் கொல்லோ? தலைவியே.

**4.5.7.பாடல் : 27 : தோழி தலைவியிடம் கூறியது :**

செந்நெல் அம் செறுவில் கதிர் கொண்டு, களவன்
தண் அக மண் அளைச் செல்லும் ஊரற்கு,
எல் வளை நெகிழச் சாஅய்
அல்லல் உழப்பது, எவன்கொல் அன்னாய்?

செந்நெல்லை உடைய அழகு பொருந்திய வயலின் கண்ணுள்ள கதிரைக் கவர்ந்து கொண்ட நண்டானது தண்ணிய உள்ளிடத்தை உடைய அளையின் கண்ணே செல்லுகின்ற ஊரற்கப் புறத்தொழுக்கம் உண்டென நினைந்து ஒளியை உடைய வளை கழலும்படி மெலிந்து வருத்தம் அடைவது யாது கொல்லோ?

**4.5.8.பாடல் : 28 : தோழி செவிலித்தாயிடம் கூறியது :**

உண் துறை அணங்கிவள் உறை நோய் ஆயின்,
தண் சேறு களவன் வரிக்கும் ஊரற்கு,
ஒண்தொடி நெகிழச் சாஅய்
மென் தோள் பசப்பது, எவன் கொல் அன்னாய்?

உண்ணப்படும் நீர்துறைக் கண்ணேயுறையுந் தெய்வத்தினாலும் உண்டாகிய நோயிவடகாயின் குளிர்ந்த சேற்றின்கண் நண்ட கோலஞ் செய்யும் ஊரன் பொருட்டு ஒள்ளிய தொடி கழலும்படி மெலிந்து மெல்லிய தோள்கள் பசப்பது யாது கொல்லோ அன்னையே.

**4.5.9.பாடல் : 29 : தோழி செவிலித்தாயிடம் கூறியது :**

மாரி கடி கொளக் காவலர் கடுக,
வித்திய வெண்முளை களவன் அறுக்கும்,

கழனி ஊரன் மார்புற மரீஇத்
திதலை அல்குல் நின் மகள்
பசலை கொள்வது, எவன் கொல் அன்னாய்?

குறிப்புகள்

மழை மிகுதியாகப் பெய்யவும், காவலர் விரைந்த செல்லவும், விதைத்த வெண்மையை உடைய நெல் முளைகளை நண்டானது சென்று அறுக்குங் கழனியை உடைய ஊரனது மார்பைப் பொருந்தித் தேமலை உடைய அல்குலையுடைய நினது மகள் பசத்தலைக் கொள்வதியாது கொல்லோ? அன்னையே.

**4.5.10.பாடல் : 30 : தோழி செவிலித்தாயிடம் கூறியது :**

வேப்பு நனை அன்ன நெடுங்கண் களவன்,
தண் அக மண் அளை நிறைய நெல்லின்
இரும் பூ உறைக்கும் ஊரற்கு, இவள்
பெருங்கவின் இழப்பது, எவன் கொல் அன்னாய்?

வேம்பின் அரும்பு போல நீண்ட கண்ணை உடைய நண்டினது தண்ணிய மண்ணளைக்கண் நிறைய நெல்லினது பெருமை உடைய பூவுதிரும் ஊரற்க இவள் பெரிய அழகிழப்பது யாது கொல்லோ? அன்னையே.

## 4.6.தோழி உரைத்த பத்து :

**4.6.1.பாடல் : 31 : தலைவி தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! மகிழ்நன்
கடன் அன்று என்னும் கொல்லோ,
நம் ஊர் முட முதிர் மருதத்துப் பெருந்துறை
உடனாடு ஆயமோடு உற்ற சூளே?

தோழி கேட்பாயாக! மகிழ்நன் நம்மூரின் மிக்க முடத்தை உடைய திருமருதந்துரையிடத்து நம்மோடு உடனாடிய வாயத்தாரோடு நமக்கரைத்த சூளுரை இப்போது செய்தற்குரியது என்றென்னும் கொல்லோ?

**4.6.2.பாடல் : 32 : தலைவி தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! மகிழ்நன்
ஒரு நாள் நம் இல் வந்ததற்கு, எழு நாள்
அழுப என்ப அவன் பெண்டிர்,
தீ உறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே.

தோழி! ஊரன் ஒரு ஞான்று நம்மில்லின்கண் வந்ததற்கு அவன் பெண்டிர் எழுநாள் தீயின் கணிட்ட மெழுகைப்போல விரைந்து மெலிந்து அழுபவென்று கூறுவர். ஆதலினவர் வருதல் கூடாது.

**4.6.3.பாடல் : 33 : தலைவி தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! மகிழ்நன்
மருது உயர்ந்து ஓங்கிய விரி பூம் பெருந்துறைப்
பெண்டிரோடு ஆடும் என்ப, தன்
தண் தார்அகலம் தலைத்தலைக் கொளவே.

தோழி! மருது மிகவுமுயர்ந்த விரிந்த பூவை உடைய பெரிய துறைக்கண் ஊரன் தனது பெண்டிர் குளிர்ந்த மாலையை உடைய மார்பைத் தாந்தாம் பெற்றுக் கொள்ள அவர்களோடும் விளையாட வா என்று கூறுவார். ஆதலின் வாரான்.

**4.6.4.பாடல் : 34 : தலைவி தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! நம் ஊர்ப்
பொய்கைப் பூத்த புழைக்கால் ஆம்பல்
தாது ஏர் வண்ணம் கொண்டன,
ஏதிலாளற்குப் பசந்த என் கண்ணே.

தோழி! நம்மூரின் பொய்கைக்கண் பூத்த துளை உடைய காலையுடைய வாம்பலினது தாது போன்ற அழகை அடைந்தன அயலாராகிய ஊரற்குப் பசப்ப அடைந்த எனது கண்கள்.

**4.6.5.பாடல் : 35 : தலைவி தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! நம் ஊர்ப்
பொய்கை ஆம்பல் நார் உரிமென் கால்
நிறத்தினும் நிழற்றுதல் மன்னே,
இனிப் பசந்தன்று, என் மாமைக் கவினே.

தோழி! நமதூரின் பொய்கைக்கண்ணுள்ள ஆம்பலினது நாருரித்த மெல்லிய தண்டினது அழகினுமழகைச் செய்தல் இனிமேல் இன்றாய் இப்பொழுது எனது மாமைக்கவின் பசந்தது. வந்ததிற் பயனின்று.

**4.6.6.பாடல் : 36 : தலைவி தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! ஊரன்
நம் மறந்து அமைகுவன் ஆயின், நாம் மறந்து
உள்ளாது அமைதலும் அமைகுவம் மன்னே,
கயல் எனக் கருதிய உண்கண்,
பயலைக்கு ஒல்கா ஆகுதல் பெறினே.

தோழி! ஊரன் நம்மை மறந்திருத்தலைப் பொருந்துவனாயின் நாமும் மறந்து நினையாதிருத்தலும் பெறுவோம். அ∴தெற்றானெனி, கயல் மீன் என்று பிறரால் கருதப்படும் மை தீட்டிய கண் பசலையைக் கொண்டு தளராத தன்மை பெற்றால்.

**4.6.7.பாடல் : 37 : பரத்தை தன் தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பசந்து பனி மல்க
வல்லன் வல்லன், பொய்த்தல்
தேற்றான் உற்ற சூள் வாய்த்தல்லே.

தோழி! ஊரன் தன்மீது அன்பினையுடைய மகளிர் மைதீட்டிய கண்கள் பசப்படைந்த நீர் நிறையப் பொய்த்தலைச் செய்ய வல்லமையிலனாகான். தேறுதல் காரணமாக தன்னால் சூ;ற்ற சூள் உண்மையாதலைச் செய்யவல்லவன் அவன்.

குறிப்புகள்

**4.6.8.பாடல் : 38 : பரத்தை தன் தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! மகிழ்நன்
தன்சொல் உணர்ந்தோர் அறியலன் என்றும்,
தண்தளிர் வெளவும் மேனி,
ஒண்தொடி முன் கை யாம், அழப் பிரிந்தே.

தோழி! ஊரன் தண்ணிய மாந்தளிரினது அழகைக் கெடுக்கும் மேனிலையையடைய ஒள்ளிய தொடியை அணிந்த முன்கையை உடைய யாம் அழும்படி பிரிந்து தனது வார்த்தையைத் தெளிந்தோரிடத்துச் செல்லுதலை எக்காலத்தும் அறியான்.

**4.6.9.பாடல் : 39 : பரத்தை தன் தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! ஊரன்
வெம்முலை அடைய முயங்கி நம் வயின்
திருந்திழைப் பணைத்தோள் ஞெகிழப்
பிரிந்தனன் ஆயினும், பிரியலன் மன்னே.

தோழி! ஊரன் தன் மார்போடு வெய்யவாய தனங்கள் அழுந்தத் தழுவிப்பின் பிறருடைய திருத்தமுற்ற இழை அணியப்பட்ட பருத்த தோள் மெலியப் பிரிந்தான் ஆயினம் நம்மிடத்து அவ்விதம் பிரிதலைச் செய்யான்.

**4.6.10.பாடல் : 40 : பரத்தை தன் தோழியிடம் கூறியது :**

அம்ம வாழி தோழி! மகிழ்நன்
ஒண்தொடி முன் கை யாம் அழப் பிரிந்து, தன்
பெண்டிர் ஊர் இறை கொண்டனன் என்ப,
கெண்டை பாய்தர அவிழ்ந்த
வண்டு பிணி ஆம்பல் நாடு கிழவோனே.

தோழி! மகிழ்நன் ஒள்ளிய தொடியணிந்த முன் கையை உடைய யாழும் வண்ணம் பிரிந்த தனது பெண்டிரது ஊரின் கண்ணே உறைகின்றன என்று கூறுகின்றார்கள். அவனோ கெண்டை மீன் பாய்தலின் முறுக்கு அவிழ்ந்து வண்டைப் பிணிக்கும் தேன் நிறைந்த ஆம்பல் பொருந்திய நாட்டை உடையவன் .

## 4.7.புலவிப் பத்து :

**4.7.1.பாடல் : 41 : தலைவி பாணனிடமும் தலைவனின் நண்பர்களிடமும் கூறியது :**

தன் பார்ப்புத் தின்னும் அன்பு இல் முதலையொடு
வெண்பூம் பொய்கைத்து அவன் ஊர் என்ப,
அதனால்
தன் சொல் உணர்ந்தோர் மேனி
பொன் போல் செய்யும் ஊர் கிழவோனே.

தனது பார்ப்பைத் தினுகின்ற அன்பில்லா முதலையோடு வெள்ளிய பூவையுடைய பொய்கையை உடைத்து அவனது ஊர் என்று கூறுவர். அதனாலே தனது சொல்லை உண்மை என்று நம்பி அவரது மேனியைப் பொன் பொலச் செய்யும் ஊரன்

குறிப்புகள்

**4.7.2.பாடல் : 42 : தலைவி தலைவனிடம் பரத்தையைப் பற்றிக் கூறியது :**

மகிழ் மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ
யாணர் ஊர, நின் மாண் இழை அரிவை?
காவிரி மலிர் நிறை அன்ன நின்
மார்பு நனி விலக்கல் தொடங்கியோளே.

யாண ஊரனே! நினது மாட்சிமைப்பட்ட ஆபரணத்தை உடைய அரிவையானவள் மகிழ்மிகவும் சிறத்தலினால் மயக்கமடைந்தாள் கொல்லோ! காவிரி ஆற்றின் நீரை ஒத்த நினது மார்பை மிகவும் தடுத்தற்குத் தொடங்கினாள்

**4.7.3.பாடல் : 43 : தலைவி தலைவனிடம் கூறியது :**

அம்பணத்து அன்ன யாமை ஏறிச்,
செம்பின் அன்ன பார்ப்புப் பல துஞ்சும்
யாணர் ஊர! நின்னினும்
பாணன் பொய்யன், பல்சூளினனே.

மரக்காலை ஒத்த ஆமையது முகின்கண் செம்மை ஒத்த பல பார்ப்புகள் ஏறித் துயில்கின்ற அழகிய ஊரனே! நின்னினம் பாணனோ பொய்யனல்லன். அவன் பல சூளினையுடையன்.

**4.7.4.பாடல் : 44 : தோழி தலைவனிடம் கூறியது :**

தீம் பெரும் பொய்கை யாமை இளம் பார்ப்புத்,
தாய் முகம் நோக்கி வளர்ந்திசினாஅங்கு,
அதுவே ஐய நின் மார்பே,
அறிந்தனை ஒழுகுமதி, அறனுமார் அதுவே.

இனிய நீரை உடைய பெரிய பொய்கையின் கண்ணுள்ள யாமையின் பார்ப்பானது தாயது முகத்தை நோக்கி வளருந்தன்மைபோல, ஐயனே! நின்மார்பு அத்தன்மைத்தே, அதனை அறிந்தனையாய் ஒழுகுமதி, நிறைந்த தருமமும் அதுவேயாம்.

**4.7.5.பாடல் : 45 : தோழி தலைவனிடம் சொன்னது, தலைவி கூறுவதைப் போல் :**

கூதிர் ஆயின் மணி நிறம் கொள்ளும்
யாறு அணிந்தன்று நின் ஊரே!
பசப்பு அணிந்தனவால் மகிழ்ந என் கண்ணே.

கூதிர் காலமாயில் கலங்கி வேனிற் காலமாயிற் றெனிதலைக் கொள்ளும் ஆற்றை அணிந்தது நின்னர் மகிழ்ந! என்னுடைய கண்கள் எக்காலத்தும் பசப்படைந்தன் வாயிருக்கின்றன.



**4.7.6.பாடல் : 46 : தோழி தலைவனிடம் கூறியது : தலைவி கூறுவதைப் போல் :**

நினக்கே அன்று அஃது எமக்குமார் இனிதே,
நின் மார்பு நயந்த நன்னுதல் அரிவை
வேண்டிய குறிப்பினை ஆகி,
ஈண்டு நீ அருளாது, ஆண்டு உறைதல்லே.

மகிழ்ந! உன்னுடைய மார்பு விரும்பிய அழகிய நுதலை உடைய பெண்ணானவள், விரும்பிய குறிப்பினை உடையையாகி ஈண்டு வருதலாகிய அருளைச் செய்யும் தன்மையல்லையாய் ஆண்டு உறைதலாகியவருளைச் செய்யாத தன்மையல்லையா இருத்தல் நினக்கேயல்லாமல் அது எமக்கம் இனிதாதலையுடையது.

**4.7.7.பாடல் : 47 : தலைவி தலைவனிடமும் பாணனிடமும் கூறியது :**

முள்ளெயிற்றுப் பாண் மகள் இன் கெடிறு சொரிந்த
அகன் பெரு வட்டி நிறைய, மனையோள்
அரிகால் பெரும் பயறு நிறைக்கும் ஊர!
மாண் இழை ஆயம் அறியும், நின்
பாணன் போலப் பல பொய்த்தல்லே.

கூரிய பற்களை உடைய வலைப்பாண்மகள் இனிமை உடையத்தென்று கொள்ளப்படும் கெடிற்று மீனைச் சொரிந்த அகன்ற பெட்டி நிறையப் பண்டமாற்றாக மனையோன் இருவியஞ்செய்யின் விளைந்த பெரும்பயற்றை நிறைக்கம் ஊர! அழகிய ஆபரணத்தை உடைய ஆயத்தார் உன் பாணன் போல நீயும் பலவாகப் பொய்த்தலையறிவர்.

**4.7.8.பாடல் : 48 : தலைவி தலைவனிடமும் பாணனிடமும் கூறியது :**

வலை வல் பாண்மகன் வால் எயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள், மனையோள்
யாண்டு கழி வெண்ணெல் நிறைக்கும் ஊர!
வேண்டேம் பெரும, நின் பரத்தை
யாண்டுச் செய் குறியோடு, ஈண்டு நீ வரலே.

வலையை உடைய வலிய பாண் மகனது மடகளானவள் வாரன்மீன் சொரிந்த பெட்டியுள் மனையோளானவள் ஓர் ஆண்டு கழிந்த வெண்ணெல்லைச் சொரிந்து நிறைகின்ற ஊரனே! பெரும! நினது பரத்தை ஆனவள் அவிவடத்திற்க செய்குறியோடு நீ ஈண்டு வருதலை விரும்போம்.

**4.7.9.பாடல் : 49 : தலைவி தலைவனிடமும் பாணனிடமும் கூறியது :**

அம்சில் ஓதி அசை நடைப் பாண்மகள்,
சில்மீன் சொரிந்து, பல் நெல் பெறூஉம்
யாணர் ஊர! நின் பாண்மகன்
யார் நலம் சிதையப் பொய்க்குமோ இனியே?

அழகிய சிலவாய ஒதியையுடைய அசைந்த நடையை உடைய பாண் மகள் சில மீனைக் கொடுத்துப் பல நெல்லைப்பெறும் அழகிய ஊரனே! நினது பாணன் இனி எவரினது அழகு கெடும் வண்ணம் பொய்த்து விடுவானோ?

**4.7.10.பாடல் : 50 : தோழி தலைவனிடம் கூறியது :**

துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும்,
வஞ்சி ஓங்கிய யாணர் ஊர!
தஞ்சம் அருளாய் நீயே, நின்
நெஞ்சம் பெற்ற இவளுமார் அழுமே.

குறிப்புகள்

வஞ்சி மரம் பெருமை பெற்ற அழகிய ஊரனே! துணையோர் செல்வமும் நாங்களும் வருந்துகின்றோம். உன்னுடைய மார்பைத் தனக்குப் பற்றுக்கோடாகப் பெற்ற இவளும் பெறாமையின் அழுகின்றாள், ஆதலின் நீயே அவற்றுக்கெல்லாம் காரணனாகையான் அவற்றைப் பெற அருளுவாய்.

## 4.8.தோழி கூற்றுப் பத்து :

**4.8.1.பாடல் : 51 : தோழி தலைவனிடம் கூறியது :**

நீர் உறை கோழி பேடை நீலச் சேவல்
கூர் உகிர்ப் பேடை வயாஅம் ஊர!
புளிங்காய் வேட்கைத்தன்று நின்
மலர்ந்த மார்பு, இவள் வயாஅ நோய்க்கே.

நீரினிடத்துத் தங்கம் நீல நிறத்தை உடைய கோழிச் சேவலைக் கூரிய நகத்தை உடைய பேடானது நினைந்து தனது வயா நோய் தீரும் ஊரனே! நினது விரிந்த மார்பானது இவளது வேட்கை நோய்க்குப் புளியங்காயின் தன்மையாயிருக்கும்.

**4.8.2.பாடல் : 52 : தோழி தலைவனிடம் நகையாடிக் கூறியது :**

வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச்,
செவ்விரல் சிவந்த, சேய் அரி மழைக்கண்,
செவ்வாய்க் குறுமகள் இனைய,
எவ்வாய் முன்னின்று மகிழ்ந, நின் தேரே?

பசலையது சிவந்த பொடியாலாய மாலையைத் தொடுத்தலின் சிவந்த விரல்கள் மிகவும் சிவப்படைந்த விகளை உடைய மழைக்கண்ணையும் சிவந்த வாயை உடைய சிறிவிப் பெண் வருந்த எந்த வாயின் முன்னர் நின்றது மகிழ்ந! நினது தேரானது.

**4.8.3.பாடல் :53: தலைவி தலைவனிடம் கூறியது அல்லது தோழி தலைவனிடம் கூறியது :**

துறை எவன் அணங்கும் யாம் உற்ற நோயே?
சிறை அழி புதுப் புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
கழனித் தாமரை மலரும்
பழன ஊர, நீ உற்ற சூளே!

சிறையை அழித்துச்செல்லும் புதுப்புனல் பாய்ந்த அளவில்கலங்கிக் கழனிக் கட்டாமரை மலருகின்ற பழனத்தை உடைய ஊரனே! துறைதா னெவ்வாற்றாணும் வருத்துவதில்லை. பின்னை யாமுற்ற நோய் யாதானெனின் நீ பிறரோடு ஆடேனெனக் கூறிய வார்த்தையால் உண்டானது.

**4.8.4.பாடல் : 54 : தோழி வாயில் மறுத்து தலைவனிடம் கூறியது :**

திண் தேர்த் தென்னவன் நல் நாட்டு உள்ளதை
வேனில் ஆயினும் தண் புனல் ஒழுகும்
தேனூர் அன்ன இவள் தெரி வளை நெகிழ,
ஊரின் ஊரனை, நீ தர வந்த
பஞ்சாய்க் கோதை மகளிர்க்கு
அஞ்சுவல் அம்ம, அம்முறை வரினே.

வலிய தேரை உடைய பாண்டியனது நல்ல நாட்டின் உள்ளதாகிய னெிற்காலமாயினும் குளிர்ந்த நீரைச் சொரியாது நிற்கும் தேனூரை ஒத்த இவளினுடைய ஆராய்ந்து அணிந்த வளையல் கழலச் சென்றால் ஊரனாகவும் உள்ளாய் உன்னால் கொடுக்கப் பொற்ற தண்டான் கோரையால் ஆகிய மலலையை உடைய மகளிருக்குப் பயப்படுவேன் அவர்க்குச் செய்த முறையோடு இவ்விடத்தில் வரின்.

**4.8.5.பாடல் : 55 : தோழி தலைவனிடம் கூறியது :**

கரும்பின் எந்திரம் களிற்று எதிர் பிளிற்றும்
தேர் வண் கோமான் தேனூர் அன்ன இவள்
நல்அணி நயந்து நீ துறத்தலின்,
பல்லோர் அறியப் பசந்தன்று நுதலே.

கரும்பை நெரிக்கும் ஆலையானது யானைக்கு எதிராகப் பிளிற்றுகின்ற தேர் வளத்தையுடைய பாண்டியனது தேனூரை ஒத்த இவளது நல்ல அழகை நீ விரும்பியப்பின் துறத்தலால் பலரும் அறியப் பசந்தது இவள் நுதல்.

**4.8.6.பாடல் : 56 : தோழி தலைவனிடம் கூறியது :**

பகல் கொள் விளக்கோடு இரா நாள் அறியா
வெல்போர்ச் சோழர் ஆமூர் அன்னே இவள்
நலம் பெறு சுடர்நுதல் தேம்ப,
எவன் பயம் செய்யும் நீ தேற்றிய மொழியே?

ஒளி பொருந்திய விளக்கோடு இரவு நாளை அறியாத பகைவரை வெல்லுகின்ற போரை உடைய சோழனத ஆமூரை ஒத்த இவளது இன்பம் பெறுதற்கு ஏதுவாகிய ஒளியை உடைய நுதலானது வாட, நீ தெறித்த சொல்லானது யாதோர் பயனையும் செய்யமாடடாது.

**4.8.7.பாடல் : 57 : தோழி தலைவனிடம் கூறியது :**

பகலின் தோன்றும் பல் கதிர்த் தீயின்
ஆம்பல் அம் செறுவின் தேனூர் அன்ன
இவள் நலம் புலம்பப் பிரிய,
அனை நலம் உடையளோ மகிழ்ந, நின் பெண்டே?

பகல்போல விளங்கம் பல ஒளியை உடைய தீயினையும் ஆம்பல் பொருந்திய வயலையும் உடைய தேனூரை ஒத்த இவளினுடைய அழகு கெடும்படியாக நீ பிரிய அத்தன்மை ஆகிய அழகை உடையயாளோ மகிழ்நனே! நினது பெண்ணானவள்.

**4.8.8.பாடல் : 58 : தோழி தலைவனிடம் சொன்னது :**

விண்டு அன்ன வெண்ணெல் போர்வின்
கைவண் விராஅன் இருப்பை அன்ன
இவள் அணங்கு உற்றனை போறி,
பிறர்க்கும் அனையையால் வாழி நீயே.

மலையை ஒத்த வெண்ணெற்போரை உடைய கொடைத் தொழிலால் சிறப்புற்ற விரான் என்பவனது இருப்பை என்னம் ஊரை ஒத்த இவளைத்

துயரமைடையச் செய்தவனைப் போல்கின்றாய். நீ பிறருக்கும் அவ்வாறாந் தன்மையை ஆதலின் வாழ்வாயாக.

**4.8.9.பாடல் : 59 : தோழி தலைவனிடம் கூறியது :**

கேட்டிசின் வாழியோ மகிழ்ந! ஆற்றுற
மையல் நெஞ்சிற்கு எவ்வம் தீர
நினக்கு மருந்தாகிய யான், இனி
இவட்கு மருந்து அன்மை, நோம் என் நெஞ்சே.

கேட்டிசின் வாழியோ மகிழ்நனே! நினது மயக்கம் பொருந்திய மனத்திற்கு வருத்தந்தீர மருந்தாக இருந்த நான் இவ்பொழுது இவளது மனத்தின் நோயை ஆற்றுதற்க மருந்து இல்லாமையினால் என் மனம் வருந்துகின்றது.

**4.8.10.பாடல் : 60 : தோழி தலைவனிடம் கூறியது :**

பழனக் கம்புள் பயிர்ப் பெடை அகவும்
கழனி ஊர! நின் மொழிவல் என்றும்
துஞ்சு மனை நெடு நகர் வருதி,
அஞ்சாயோ இவள் தந்தை கை வேலே?

வயலின் கண்ணுள்ள சம்பங்கோழிச் சேவலானது ஒருவித ஒலியால் தனது பெடையை அழைக்கும் கழனி ஊரனே! உனக்கு ஒன்றனைக் கூறுவேன். எந்நாளும் மனைக் கண்ணுள்ளார் நித்திரை செய்யும் இரவு காலத்தின் வருகின்றாய், இவளது தந்தை கையின் வேலுக்குஅஞ்சாயோ! நாம் அஞ்சுகின்றோம்.

## 4.9.கிழத்திக் கூற்றுப் பத்து :

**4.9.1.பாடல் : 61 : தலைவி தலைவனிடம் கூறியது :**

நறுவடி மாஅத்து விளைந்து உகு தீம்பழம்
நெடு நீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்,
கைவண் மத்தி கழாஅர் அன்ன,
நல்லோர் நல்லோர் நாடி,
வதுவை அயர விரும்புதி நீயே.

நறிய பிஞ்சை உடைய மாவினது முற்றி மூக்கூழ்த்து விழும் இனிய பழம் நிறைந்த நீரை உடைய பொய்கையிடத்துத் துடும் என்னும் ஓசையோடு விழுகின்ற கை வண்மையை உடைய மத்தியினுடைய கழார் என்னும் ஊரை ஒத்த நல்ல பெண்களைத் தேடி வதுவை முடித்தற்கு நீ விரும்புவாய்.

**4.9.2.பாடல் : 62 : தலைவி தலைவனிடம் கூறியது :**

இந்திர விழவின் பூவின் அன்ன,
புன்தலைப் பேடை வரி நிழல் அகவும்,
இவ்வூர் மங்கையர்த் தொகுத்து, இனி
எவ்வூர் நின்றன்று மகிழ்ந நின் தேரே?

இந்திரனது விழாக் கால்தததிலுள்ள பூப்போலும் புல்லிய தலையை உடைய பறவையின் பேடு அழகிய மரநீழலிடத்தில் இருந்த ஒலிக்கும்

இவ்வூரன்கணுள்ள பெண்களைக் கூட்டிவிட்டு இனி எவ்வூரிடத்து நின்றது மகிழ்நனே! நினது தேர் தான்.

**4.9.3.பாடல் : 63 : தலைவி தலைவனிடம் கூறியது :**

பொய்கைப் பள்ளிப் புலவு நாறு நீர்நாய்,
வாளை நாள் இரை பெறூஉம் ஊர!
எம் நலம் தொலைவது ஆயினும்,
துன்னலம் பெரும, பிறர்த் தோய்ந்த மார்பே.

பொய்கையைத் தனக்குப் படுக்கை இடமாகப் பொ்ருந்திய புலால் மணம் கமழும் நீர் நாயானது, வாளை மீன் நாள்தோறும் இரையாகப் பெறுகின்ற ஊரனே! எம்மிடத்துள்ள எவ்வகையாகிய அழகு கெடினும் பரத்தையருடன் சேர்ந்த மார்பை யாமொருபோதும் சேரமாட்டேம்.

**4.9.4.பாடல் : 64 : தலைவி தலைவனிடம் கூறியது :**

அலமரல் ஆயமோடு அமர் துணை தழீஇ,
நல மிகு புதுப் புனல் ஆடக் கண்டோர்,
ஒருவரும் இருவரும் அல்லர்,
பலரே தெய்ய, எம் மறையாதீமே!

கழன்று திரியுமாயத்தோடு பொருந்திய பெண்ணோடு கூடி நன்மை மிகந்த புதிய புனலை நீயாடக் கண்டவர் சிலர் அன்று பலரே. ஆதலின் எமக்க மறையாதி.

**4.9.5.பாடல் : 65 : தலைவி தலைவனிடம் கூறியது :**

கரும்பு நடு பாத்தியில் கலித்த ஆம்பல்
சுரும்பு பசி களையும் பெரும் புனல் ஊர!
புதல்வனை ஈன்ற எம்மேனி
முயங்கன்மோ, தெய்ய, நின் மார்பு சிதைப்பதுவே.

கரும்பு நட்ட பாத்தியில் தானே தோன்றி வளர்ந்த ஆம்பலானது, வண்டினத பசியை நீக்குகின்ற பெரிய நீரை உடைய ஊரனே! புதல்வனைப் பெற்ற எனது மேனியை முயங்காதே! அம்முயக்கம் நினது மார்பினது அழகைச் சிதைப்பதாக இருக்கின்றது.

**4.9.6.பாடல் : 66 : தலைவி தலைவனிடம் கூறியது :**

உடலினென் அல்லேன், பொய்யாது உரைமோ,
யார் அவள் மகிழ்ந, தானே தேரொடு,
தளர் நடைப் புதல்வனை உள்ளி, நின்
வள மனை வருதலும், வௌவியோளே?

உன் செயல் காரணமாகப் பகைத்தேன் அல்லன். பொய் சொல்லாது உண்மையை உரை. மகிழ்ந! தளர்ந்த நடையை உடைய பதல்வனை நினைத்து நினது வளத்தை உடைய மனைக்குத் தேரொடும் வருதலைத் தடுத்தவள் யார் தான்.

**4.9.7.பாடல் : 67 : தலைவி தலைவனிடம் கூறியது :**

மடவள் அம்ம நீ இனிக் கொண்டோளே,
தன்னொடு நிகரா என்னொடு நிகரிப்



குறிப்புகள்

பெரு நலம் தருக்கும் என்ப, விரி மலர்த்
தாது உண் வண்டினும் பலரே,
ஓதி ஒண்ணுதல் பசப்பித்தோரே.

தலைவனே! நீ இப்பொழுது வரைந்து கொண்டவள் மிக மடவள், யாதனாலெனின், தன்னோடு ஒப்பாகாத என்னையம் தன்னோடு ஒப்பித்துத் தன் பெரிய நலத்தாலே மாறுபடும் என்று கூறுவர். நீ தெளித்துப் பின் ஒளியை உடைய நுதலைப் பசப்பித்தவர்கள் வண்டு தாதை உண்ட மலர்களினும் பார்க்க மிகப்பலர். இதனை அறியாள் போலும்.

**4.9.8.பாடல் : 68 : தலைவி தலைவனிடம் கூறியது :**

கன்னி விடியல் கணைக் கால் ஆம்பல்,
தாமரை போல மலரும் ஊர!
பேணாளோ நின் பெண்டே,
யான் தன் அடங்கவும், தான் அடங்கலளே.

இருள் முழுதும் கெடாத விடியல் காலத்தே திரண்ட தண்டை உடைய ஆம்பல் தாமரையைப் போல் மலர்ந்திருக்கின்ற ஊரனே! நினத பெண்ணானவள் இதனை விரும்பி உட்கொள்ளாளோ, அது யாதெனின், நாம் அடங்க வேணடும் தன்னைப் போன்று அடங்குவம் தான் அடங்குகின்றாள் இல்லை.

**4.9.9.பாடல் : 69 : தலைவி தலைவனிடம் கூறியது :**

கண்டனெம் அல்லமோ மகிழ்ந, நின் பெண்டே,
பலர் ஆடு பெருந்துறை மலரொடு வந்த
தண் புனல் வண்டல் உய்த்தென,
உண்கண் சிவப்ப, அழுத நின்றோளே.

மகிழ்நனே! நின் பெண்டைக்காணாதிருந்தேம் அல்லேம் அவள்யார் என்றால். பலரும் வந்து நீராடுகின்ற பெருந்துறைக்கண்மலரோடு பெருகி வந்த தண்ணிய நீர் வண்டல் மனையைச் சிதைத்ததாக மையூட்டிய கண்கள் விப்படைய அழுது நின்றாள்

**4.9.10.பாடல் : 70 : தலைவி தலைவனிடம் கூறியது :**

பழனப் பன் மீன் அருந்த நாலைர,
கழனி மருதின் சென்னிச் சேக்கும்,
மா நீர்ப் பொய்கை யாணர் ஊர!
தூயர் நறியர் நின் பெண்டிர்,
பேஎய் அனையம் யாம், சேய் பயந்தனமே.

வயலிடத்தள்ள வலவாய மீன்களை உண்ணுதற்க நாரையானது கழனி இடத்துள்ள மருத மரத்தின் கண்ணே தங்குகின்ற நீர் பொருந்திய பெரிய பொய்கையை உடைய புது வருவாயை உடைய ஊரனே! நினது பெண்டிரோவெனின் அழுக்கற்றவரும் நல்ல வாசனையை உடையவரும் ஆவர். யாமோ பேயைங ஒத்தேம். அன்றிக் குழந்தையையும் பெற்றுக் கொண்டேம், ஆனதால் நின்றலையளியெம் மாட்டு இவ்வளவில் அமையும்.

குறிப்புகள்

## 4.10.புனலாட்டுப் பத்து :

**4.10.1.பாடல் : 71 : தலைவி தலைவனிடம் கூறியது :**

சூது ஆர் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து,
நின் வெங்காதலி தழீஇ, நெருநை
ஆடினை என்ப புனரே, அலரே
மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந,
புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்றது ஒளியே?

சூதார்ந்த குறிய தொடி அணிந்த கையையும் கண்டோர் அஞ்சும் அசைந்த நடையையும் உடைய நினது விருப்பத்தை உடைய பரத்தையுடனே கூடி முன்னை நாளிற் புனலை ஆடினான் என்று கூறுவர். அவ்வலர் நின்னால் மறைத்தல் கூடுமோ மகிழ்நனே! சூரியன் ஒளியை மறைத்தல் கூடாதது போல.

**4.10.2.பாடல் : 72 : தலைவன் தோழியிடம் கூறியது :**

வயல் மலர் ஆம்பல் கயில் அமை நுடங்கு தழைத்
திதலை அல்குல், துயல் வரும் கூந்தல்,
குவளை உண்கண். ஏஎர் மெல்லியல்,
மலர் ஆர் மலிர் நிறை வந்தெனப்,
புனலாடு புணர் துணை ஆயினள் எமக்கே.

வயலிடத்தில் அலருகின்ற ஆம்பல் பூப் போன்ற மூட்டு வாயையுடைய ஆபரணத்தையும் அசைகின்ற தழையை அணிந்த வல்குலையும் அசைகின்ற கூநத்தலையும் குவளைப் பூப்போலும் மையுண்ட கண்ணையும் அழகையும் உடைய இம்மெல்லியல், அக்காலத்தில் பெருக்கினை உடைய பெரு வெள்ளம் வர, அதனிடத்து ஆடுகின்றவர்களோடு கூடிய நாயகிகளைப் போன்று எமக்கு இருந்தாள்.

**4.10.3.பாடல் : 73 : தலைவன் தோழியிடம் கூறியது :**

வண்ண ஒண் தழை நுடங்க, வால் இழை,
ஒண்ணுதல் அரிவை, பண்ணை பாய்ந்தெனக்,
கள் நறுங்குவளை நாறித்
தண் என்றிசினே, பெருந்துறைப் புனலே.

அழகை உடைய ஒள்ளிய தழை அசைய ஒளியுடைய ஆபரணம் அணிந்த ஒள்ளிய நெற்றியை உடைய பெண்ணானவள் அக்காலத்தில் ஒருகால் விளையாட்டாகப் பாய, தேன் பொருந்திய நல்ல குவளை மணத்தை உடைத்தாகக் குளிர்ச்சியை உடைத்தாயிரருந்தது நமக்கம் பெரும் துறைக்கண் உள்ள நீரானது.

*Self -Instructional Material*

**4.10.4.பாடல் : 74 : தலைவன் தோழியிடம் கூறியது**

விசும்பு இழி தோகைச் சீர் போன்றிசினே,
பசும்பொன் அவிர் இழை பைய நிழற்றக்,
கரைசேர் மருதம் ஏறிப்
பண்ணை பாய்வோள், தண் நறும் கதுப்பே.

குறிப்புகள்

விசும்பினின் வீழ்கின்ற மயிலினது சிறப்புப் போலாய் இருந்தது. பசிய பொன்னாலாய விளங்குகின்ற ஆபரணமானது மெலலவாய நிழலைச் செய்யக் கரைக்கணுள்ள மருத மரத்திலேறி விளையாட்டாகப் பாய்கின்ற அவளது குளிர்ச்சியைத் தரும் வாசனையை உடைய கூந்தலானது.

**4.10.5.பாடல் : 75 : தோழி தலைவனிடம் கூறியது :**

பலர் இவண் ஒவ்வாய் மகிழ்ந, அதனால்
அல் தொடங்கின்றால் ஊரே, மலர
தொன்னிலை மருதத்துப் பெருந்துறை
நின்னொடு ஆடினள் தண் புனல் அதுவே.

மகிழ்ந! நின்னோடு, பழைய நிலையுடைய மலர் பொருந்திய மருத்ததுறைக்கணே உள்ள தண்ணிய புனலிடத்து நீராடினவள் பலர். ஊராரும் அலர் கூறத் தொடங்காது நின்றார். அதனால் நீ நமக்குப் பொருந்துதல் உடையது இல்லை.

**4.10.6.பாடல் : 76 : தோழி தலைவனிடம் கூறியது :**

பஞ்சாய்க் கூந்தல், பசு மலர்ச் சுணங்கின்,
தண் புனல் ஆடித் தன் நலம் மேம்பட்டனள்,
ஒண்தொடி மடவரல், நின்னோடு,
அந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றெ.

பஞ்சாய்ப் போலும் உள்ள கூந்தலையும் பசிய மலர் பேலும் சுணங்கையும் உடைய ஒள்ளிய தொடி அணிந்த பெண்ணானவள், நின்னோடு தண்ணிய புனலாடி அமர மாதர்க்குத் தெய்வமும் போலாய் அழக பெருமை அடையப் பெற்றாள்.

**4.10.7.பாடல் : 77 : பரத்தை தலைவனிடம் கூறியது :**

அம்ம வாழியோ, மகிழ்ந! நின் மொழிவல்!
பேரூர் அல் எழ நீரலைக் கலங்கி,
நின்னொடு தண் புனல் ஆடுதும்,
எம்மொடு சென்மோ, செல்லல் நின் மனையே.

மகிழ்நனே, நினக்கு ஒன்ற கூறுவேன். பெரிய ஊரிடத்தே அலர் உண்டாக நீரிடத்து அலைபோலக் கலக்கமுற்று நின்னோடு தண்ணிய புனலாடுவேம். நின் மனையிடத்துச் செல்லாயாய் எம்மோடு செல்வாயாக.

**4.10.8.பாடல் : 78 : பரத்தை தலைவனிடம் கூறியது :**

கதிர் இலை நெடு வேல் கடு மான் கிள்ளி
மதில் கொல் யானையின், கதழ்பு நெறி வந்த
சிறை அழி புதுப் புனல் ஆடுகம்,
எம்மொடு கொண்மோ, எம் தோள் புரை புணையே.

ஒளியை உடைய தகட்டு வடிவு உடைய நீண்ட வேலையும் உடைய கடுமான் கிள்ளயத மதிலைக் கெடுக்கும் யானையைப் போல வழிக்கொண்டு விரைந்து வந்த கரையை அழிக்கும் புப்புனலிடத்து ஆடுதற்கு எமது தோள் போலும் தெப்பத்தை எம்மோடு பொருந்துவாயாக.

**4.10.9.பாடல் : 79 : பரத்தையின் தோழி தலைவனிடம் கூறியது :**

புதுப்புனல் ஆடி அமர்த்த கண்ணள்,
யார் மகள் இவளெனப் பற்றிய மகிழ்ந!
யார் மகள் ஆயினும் அறியாய்,
நீ யார் மகனை, எம் பற்றியோயே?

புதுப்பனலாடிப் போர் செய்தலை உடைய கண்களைப் போன்ற இவள் யார் மகள் என்று வினாவிக் கையைப்பிடித்த மகிழ்நனே! நீ யாரது மகளானாலும் அறியமாட்டாய், எம்மைப் பற்றிய நீ யார் மகனோ? சொல்லுவாயாக.

**4.10.10.பாடல் : 80 : தலைவி தலைவனிடம் கூறியது :**

புலக்குவெம் அல்லேம், பொய்யாது உரைமோ,
நலத்தகு மகளிர்க்குத் தோள் துணை ஆகித்,
தலைப் பெயல் செம்புனல் ஆடித்
தவ நனி சிவந்தன மகிழ்ந, நின் கண்ணே.

யாம் நின்னோடு புலக்கின்றோம் அல்லேம், பொய்த்தலின்றிச் சொல்லுவாயாக. அழகு தகும் பெண்கள் இன்பமுறுதற்க அவர் தோள்களுக்குத் துணையாய் முதற் பெயலால் வருகின்ற சிவந்த புனலின்கண் ஆடி, மகிழ்நனே! நினது கண்கள் மிகதியும் சிவப்படைந்தன.

## 4.11.புலவி விராய பத்து :

**4.11.1.பாடல் : 81 : பரத்தை தலைவனிடம் கூறியது :**

குருகு உடைத்து உண்ட வெள் அகட்டு யாமை,
அரிப் பறை வினைஞர் அல்கு மிசைக் கூட்டும்,
மலர் அணி வாயில் பொய்கை ஊர! நீ
என்னை நயந்தனென் என்றி நின்
மனையோள் கேட்கின், வருந்துவள் பெரிதே.

நாரையால் உடைத்து உண்ணப்பட்டு எஞ்சிய வெள்ளிய வயிற்றை உடைய ஆமையது தசையை அரித்ததெழும் ஓசையைப் பொருந்திய பறையை உடைய வினையாளர் தினந்தோறும ் உணவிற்குச்சேர்க்கும் மலானது அழகுபெறும் வழியமைந்த பொய்கை ஊரனே! தனிபோலம் பிறர் யாரையும் விரும்பேன் என்கிறாய். ஆயின் இதனை நினத மனைவியானவள் கேட்பாளாயின் மிகவும் வருந்துவாள் அன்றோ.

**4.11.2.பாடல் : 82 : தலைவி பாணனிடம் கூறியது :**

வெகுண்டனள் என்ப பாண, நின் தலைமகள்,
மகிழ்நன் மார்பின் அவிழ் இணர் நறும் தார்த்
தாது உண் பறவை வந்து, எம்
போது ஆர் கூந்தல் இரந்தன எனவே.



பாணனே! நினது தலைவியானவள் ஊரனது மார்பில் பொருந்திய விரிந்த இணர்போலும் மணந்தங்கிய மாலையில் உள்ள தாதை உண்கின்ற வண்டானது வந்து எமது பூக்கள் நிறைந்த கூந்தலில் தங்கின என்று

கூறும்போது கோபம் அடைந்தாள் என்று கூறுவர். அதுவும் பொறாதாள் நீ ஈண்டு வருதல் பொறாள், ஆயிற் கடிது செல்வாய்.

**4.11.3.பாடல் : 83 : தலைவி தலைவனிடம் கூறியது :**

மணந்தனை அருளாய் ஆயினும், பைபையத்
தணந்தனை ஆகி உய்ம்மோ நும் ஊர்,
ஒண்தொடி முன் கை ஆயமும்,
தண்துறை ஊரன் பெண்டு எனப்படற்கே.

எம்மை வரைந்தும் எமக்கு அருளைச் செய்யாயினும் மெல்ல மெல்லப் பிரிந்தனையாகியுய்வாய். எதற்கெனின் உமது ஊரிலுள்ள ஒள்ளிய தொடி அணிந்த முன் கையை உடைய மகளிர் கூட்டம் எல்லாம் குளிர்ந்த துறையை உடைய ஊரனது பெண் என்ற பிறரால் கூறப்படுதற்கு.

**4.11.4.பாடல் : 84 : தோழி தலைவனிடம் கூறியது :**

செவியின் கேட்பினும் சொல் இறந்து வெகுள்வோள்,
கண்ணிற் காணின் என்னாகுவள் கொல்,
நறு வீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண் கயம் போலப்
பலர் படிந்து உண்ணு, நின் பரத்தை மார்பே?

நறுமலரை அணிந்த ஐந்து வகையாக முடிக்கப்படும் கூந்தலினை உடைய மகளிர் தைத்திங்களில் விரும்பி ஆடுகின்ற குறிர்ந்த தடாகத்தைப் போல, பலர் தோய்ந்து அனுபவிக்கின்ற பரத்தைமையை உடைய நின்னுடைய மார்பை இத்தன்மைத்து என்று பிறர் சொல்லக் கேட்பினும் அளவைக் கடந்து வெகுள்பவள் தான் தேரே காண்பாளாயின் எவ்வாறு ஆவாளோ! ஆதலின் இதனைத தவிர்வாயாக.

**4.11.5.பாடல் : 85 : தலைவி தலைவனிடம் கூறியது :**

வெண் நுதல் கம்புள் அரிக்குரல் பேடை,
தண் நறும் பழனத்துக் கிளையோடு ஆலும்,
மறுஇல் யாணர் மலி கேழ் ஊர! நீ
சிறுவரின் இணைய செய்தி,
நகாரோ பெரும, நின் கண்டிசினோரே?

வெண்ணிறம் பொருந்திய நெற்றியை உடைய சம்பங்கோழியது இனிய குரலை உடைய பேடு, குளிர்ந்த நறிய யலிடத்துத் தனது கூட்டத்தோடும் ஒலிக்கின்ற குறைவின்றி நிறைந்த புது வருவாய் பொருந்துதலும் உடைய ஊரனே! நீ சிறுவரைப் போன்று தகாத செயலைச் செய்கின்றாய் பெருமா! நின்னைக் கண்டோர் நகுவாரன்றே. இவ்வாறு செய்யற்க.



**4.11.6.பாடல் : 86 : பரத்தை தலைவனிடம் கூறியது :**

வெண்தலைக் குருகின் மென்பறை விளிக் குரல்,
நீள் வயல் நண்ணி இமிழும் ஊர!
எம் இவண் நல்குதல் அரிது,
நும் மனை மடந்தையொடு தலைப் பெய்தீமே.

வெண்மை பொருந்திய தலையை உடைய குருகினது பார்ப்பின் அழைக்கும் குரல் நீண்ட வயல் இடத்துப் பொருந்தி ஒலிக்கின்ற ஊரனே! இவ்விடத்தே எம்மைப் பாதுகாத்தல் அரிது. நும்மனையாகிய மடந்தையோடு சேர்வாயாக.

**4.11.7.பாடல் : 87 : பரத்தை தலைவனிடம் கூறியது :**

பகன்றைக் கண்ணிப் பல் ஆன் கோவலர்,
கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்
யாணர் ஊர! நின் மனையோள்
யாரையும் புலக்கும், எம்மை மற்று எவனோ?

கிலுகிலுப்பைப் பூமாலையை உடைய பல பசுக்களை உடைய இடையர் கரும்பைக் கநற்தடியாகக் கொண்ட எறிந்து மாங்கனியை வீழ்த்துகின்ற புத வருவாயை உடைய ஊரனே! நினது மனைவியானவள் எவர்களையும் புலப்பாள். எம்மை வேறியாது செய்வாள்.

**4.11.8.பாடல் : 88 : பரத்தை தலைவியின் தோழியர் கேட்கும்படி கூறியது :**

வண்டு உறை நயவரும் வள மலர்ப் பொய்கைத்
தண்துறை ஊரனை, எவ்வை, எம் வயின்
வருதல், வேண்டுதும் என்ப,
ஒல்லேம் போல் யாம் அது வேண்டுதுமே.

வள்ளிய துறைகளின் கண்ணே எல்லாரும் கொள்ளம் வண்ணம் நயந்து பூக்கின்ற மலர்களை உடைய பொய்கைத் தண்டுறை ஊரனை எவ்வையாயினாள் எம்மிடத்து அவன் வருதலை யாம் விரும்புகின்றோம் என்று கூறுகின்றாள் என்பர். இவ்வாறு எம்மைக் கூறுதல் தவிராளாயின், அத்தன்மையை உடையேம் போலாய் அதனை முடியச் செய்த விடுகின்றோம்.

**4.11.9.பாடல் : 89 : பரத்தை பாணனிடம் தலைவியின் தோழியர் கேட்கும்படி கூறியது :**

அம்ம வாழி பாண! எவ்வைக்கு
எவன் பெரிது அளிக்கும் என்ப, பழனத்து
வண்டு தாது ஊதும் ஊரன்
பெண்டென விரும்பின்று அவள் தன் பண்பே.

பாணனே வாழ்வாயாக! சோலைக் கண்ணுள்ள பூந்தாதுகளை வண்டகள் உண்ணும் ஊரன் எம் தங்கைக்கு மிக அன்ப செய்து ஒழுகுவான் என்பர். அவளை விரும்பத்தக்காள் என்று விரும்பியது யாதானெனின் அவள் குணமல்லது பிறிதில்லை

**4.11.10.பாடல் : 90 : பரத்தை, தலைவியின் தோழியரும் தலைவனும் கேட்கும்படியாக கூறியது :**

மகிழ்நன் மாண் குணம் வண்டு கொண்டன கொல்?
வண்டின் மாண் குணம் மகிழ்நன் கொண்டான் கொல்?
அன்னதாகலும் அறியாள்,
எம்மொடு புலக்கும் அவன் புதல்வன் தாயே.

குறிப்புகள்

மகிழ்நனது மாட்சிமை உடைய குணத்தை வண்டு வாங்கிக் கொண்டன கொல்லோ! அன்றி வண்டினது மாட்சிமை பொருந்திய குணத்தை மகிழ்நன் வாங்கிக் கொண்டான் கொல்லோ! அது ஆகலையும் அறியாளாய ஊரனுடைய மனைவி எம்மோடு புலப்பாள்.

## 4.12.எருமைப் பத்து :

**4.12.1.பாடல் : 91 : தோழி தலைவனிடம் கூறியது :**

நெறி மருப்பு எருமை நீல இரும் போத்து,
வெறி மலர்ப் பொய்கை ஆம்பல் மயக்கும்,
கழனி ஊரன் மகள் இவள்,
பழன வெதிரின் கொடிப் பிணையலளே.

திருகிய கொம்பை உடைய நீலம் போலும் கரியதாய எருமைக் கடா பொய்கைக் கண்ணுள்ள நறு நாற்றம் அமைந்த மலரை உடைய வாம்பலைக் கொடுக்கம் கழனியுரன் அவனுடைய மகளாய இவளுமோ கரும்பின் பூவால் செய்யப்பட்ட நெடிய மாலையை உடையாள்.

**4.12.2.பாடல் : 92 : தலைவன் தலைவியிடம் கூறியது :**

கருங்கோட்டு எருமைச் செங்கண் புனிற்று ஆக்
காதல் குழவிக்கு ஊறு முலை மடுக்கும்,
நுந்தை நும் ஊர் வருதும்,
ஒண்தொடி மடந்தை, நின்னை யாம் பெறினே.

கரிதாய கோட்டைப் பொருந்திய செங்கண்ணை உடைய வீன்றணிணிய எருமை ஆவானது தனது விருப்பம் பொருந்திய கன்றுக்குப் பாலூறிச் சொரியும் முலையை உண்பிப்பும் உன் பிரிவினுடைய நுமது ஊரினிடத்து ஒள்ளிய தொடியை அணிந்த பெண்ணே! வரைவு மாட்சிமைப்படுமாயின் நான் விரைய வருவேன்.

**4.12.3.பாடல் : 93 : தோழி செவிலித்தாயிடம் சிறைப்புறத்தே உள்ள தலைவன் கேட்கும்படியாக கூறியது :**

எருமை நல் ஏற்று இனம் மேயல் அருந்தெனப்
பசு மோரோடமோடு ஆம்பல் ஒல்லா
செய்த வினைய, மன்ற பல் பொழில்
தாது உண் வெறுக்கைய ஆகிய, இவள்
போத அவிழ் முச்சி ஊதும் வண்டே.

எருமை நல்லேற்றினமானவை மேயலாகிய உணவென்று பசுமோரோடமோடு ஆம்பலை அலர் முதலிய இல்லாவாய்க் கெடுத்த நெருங்கிய பல சோலையிலுள்ள தாதை உண்ணும் விருப்பத்தை விட்டனவாய், இவளுடைய விரிந்த போதினை உடைய உச்சியில் வந்து படிந்து உண்ணாமல் நிற்கம் வண்டுகள்.

**4.12.4.பாடல் : 94 : தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது :**

மள்ளர் ˙அன்ன தடங்கோட்டு எருமை
மகளிர் அன்ன துணையோடு வதியும்
நிழல் முதிர் இலஞ்சிப் பழனத்ததுவே

கழனித் தாமரை மலரும்,

கவின் பெறு சுடர்நுதல் தந்தை ஊரே.

மள்ளரை ஒத்த வளைந்த கொம்பை உடைய எருமையானது, அவர் மகளிரை ஒத்த நாகெருமையோடு தங்குகின்ற நிழல் நிறைந்த பொய்கையை உடைய வயல்களை உடையது. கழனியிடத்தே தாமரைகள் அலருகின்ற அழகு பெற்ற ஒளி பொருந்திய நுதலை உடையாளது தந்தையின் ஊர்.

**4.12.5.பாடல் : 95 : தலைவி தலைவனைப் பற்றிக் கூறியது :**

கருங்கோட்டு எருமை கயிறு பரிந்து அசைஇ

நெடுங்கதிர் நெல்லின் நாள் மேயல் ஆரும்,

புனல் முற்று ஊரன், பகலும்

படர் மலி அரு நோய் செய்தனன், எமக்கே.

கருங்கோட்டு எருமையானது, கட்டிய கயிற்றை அறுத்துச் சென்று நீண்ட கதிரை உடைய நெல்லாகிய நாண் மேயலை உண்ணுகின்ற நீர்நிறைந்த ஊரன். எமக்கு இரவுக் காலத்திலன்றிப் பகல் காலத்திலும் துன்பம் நிறைந்த பிறரால் நீக்குதற்கரிய நோயைச் செய்தான்.

**4.12.6.பாடல் :96:தலைவனின் தோழர்கள் தலைவியைப் பற்றிக் கூறியது :**

அணி நடை எருமை ஆடிய அள்ளல்

மணி நிற நெய்தல் ஆம்பலொடு கலிக்கும்,

கழனி ஊரன் மகள் இவள்,.

பழன ஊரன் பாயல் இன் துணையே.

அழகிய நடையை உடைய எருமைகள்உழக்கிய சேற்றிடத்தே நீலமணிபோலும் நிறம் விளங்கம் பூக்களை உடைய நெய்தல் ஆம்பலோடு வளருகின்ற கழனிகளை உடைய ஊரன் மகளாகிய இவள் பழன ஊரனுக்கு இனிய பாயலின் துணையாகும்.

**4.12.7.பாடல் : 97 : தலைவன் தலைவியைப் பற்றிக் கூறியது :**

பகன்றை வான் மலர் மிடைந்த கோட்டைக்

கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்,

பொய்கை ஊரன் மகள் இவள்,

பொய்கைப் பூவினும் நறுந் தண்ணியளே.

சிறந்த பகன்றை மலர் பொருந்திய தாயினது கொம்பைக் கண்டு வலிய கால்களை உடைய எருமைக் கன்று அஞ்சுகின்ற பொய்கையை உடைய ஊரன் மகளாகிய இவள் பொய்கைக்கண் மலரும் பூவினுங் காட்டி நல்ல சாயலை உடையவள்.

**4.12.8.பாடல் : 98 : தோழி தலைவனிடம் கூறியது :**

தண் புனல் ஆடும் தடங்கோட்டு எருமை,

திண் பிணி அம்பியின் தோன்றும் ஊர!

ஒண்தொடி மடமகள் இவளினும்,

நுந்தையும் யாயும் கடியரோ நின்னே?

குறிப்புகள்

குளிர்ந்த புனலாடும் வளைந்த கோட்டை உடைய எருமை, வலிய கட்டினை உடைய தோணி போலத் தோன்றுகின்ற ஊரனே ஒள்ளிய தொடியையுடைய மடக்குணத்தினளாய் இவளினும் நும் தந்தையம் தாயும் நின்னிடத்துக் குற்றம் கண்டவழிக் கழறிக் கூறும் இயல்பினர் அன்றே.

**4.12.9.பாடல் : 99 : தலைவன் தலைவியைப் பற்றிச் சொன்னது :**

பழனப் பாகல் முயிறு மூசு குடம்பை
கழனி எருமை கதிரொடு மயக்கும்,
பூக்குஞல் ஊரன் மகள் இவள்,
நோய்க்கு மருந்தாகிய பணைத் தோளோளே.

பழனப்பாகலின் கண்ணுள்ள முசுற்றெறும்பு மொய்தத கூட்டைக் கழனியிடத்து எருமை நெற்கதிரோடு கெடுக்கும் அழக செறியும் ஊரனுடைய மகளாகிய இவள் தானடைந்த மருந்தில் நோய்க்கும் மருந்தாம் தன்மையவாய பணைபோலும் தோளை உடையவள்.

**4.12.10.பாடல் : 100 : தோழி தலைவனிடம் கூறியது :**

புனல் ஆடு மகளிர் இட்ட ஒள்ளிழை,
மணல் ஆடு சிமையத்து எருமை கிளைக்கும்
யாணர் ஊரன் மகள் இவள்,
பாணர் நரம்பினும் இன் கிளவியளே.

புனலாடுகின்ற பெண்கள் மணல் திட்டின் மேல் வைக்கப்பட்ட ஒள்ளி ஆபரணம் மறைந்திருப்பதனை எருமைகள் கொம்பால் கிழித்துத் தோன்றச் செய்யும் புதுமையை உடைய ஊரனது மகளாய இவள். இசைப் பாணரது கைக்கண்ணுள்ள யாழ் நரம்பினும் காட்டி இனிமை அமைந்த சொல்லை உடையவள்.

## 4.13.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. வேட்கைப்பத்து உணர்த்தும் தலைவியின் பண்பு நலன்களை கூறுக.
2. தோழி கூற்றுப் பத்தாக அமைந்த மருதப்பாடல்கள் உணர்த்தும் மாண்புகள் யாவை?
3. பிற பெண்கள் தம்மை எவ்வாறு கூற வேண்டுமென்று தலைவி கூறினாள்?

**பெருவினா :**

4. மருதப்பாடல்களில் தலைவி, தோழி, கிழத்தி,. கூற்றுப்பாடல்கள் வழியாக அறியலாகும் அகவாழ்வின் சிறப்புகளை எடுத்துரைக்க.
5. ஐங்குறுநூற்றின் மருதப்பாடல்களில் பயின்று வரும் உவமை நலன் குறித்து கட்டுரை வரைக.
6. மருதப்பாடல்களில் எவையேனும் இரு பத்துகளின் பாடல் கருத்தினை தலைப்புடன் பொருத்தி உரைக்க.

*Self -Instructional Material*

## 4.14.தொகுத்துக் காண்போம். :

பழந்தமிழரின் பண்பாட்டினை அடையாளப்படுத்துவதன் நோக்கமாக ஐங்குறுநூற்றின் மருதத்திணைப் பாடல்கள் இருக்கின்றன. அதிலும் அவர்களின் இல்லற பண்பாக விளங்கும் விருந்தோம்பல், தலைவன் தலைவியின் காதர் ஒழுக்கம், கடமை மற்றும் பொருளீட்டல் போன்றவையும் அவர்களின் ஆடை அணிகலன்கள், நாகரிக பண்பாட்டையும் இப்பாடப்பகுதியின் மூலம் அறியலாகிறது.

குறிப்புகள்

## 4.15.மேலும் பயில்வதற்கான நூல்கள் :

- ஐங்குறுநூறு மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- ஐங்குறுநூறு மூலமும் உரையும், தி. சதாசிவ ஐயர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-117.
- ஐங்குறுநூறு மூலமும் உரையும், புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.
- ஐங்குறுநூறு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், நூல் நிலையம் சென்னை-90
- ஐங்குறுநூறு மூலமும் உரையும், முனைவர் அ. தட்சிணாமூர்த்தி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98

குறிப்புகள்

# கூறு: 5-அகநானூறு- நெய்தல் திணைப் பாடல்கள் - 10 முதல் 200 வரை

## 5.1.முன்னுரை :

எட்டுத்தொகை நூல்களுள் அகநூலாக அமையும் பெருமை உடையது அகநானூறு. குறிஞ்சி, முல்லை, மரும், நெய்தால், பாலை என்னும் ஐந்திணைகளில் நானூறு பாக்களைக் கொண்டிருக்கிறது. இந்நூலைத் தொகுத்தவர் உப்பூரிக்கிழார் மகனார் உருத்திரசன்மனார். தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவடுழுதி. அகநானூறு, களிற்றியானை நிரை – 1 முதல் 120 பாடல்கள், மணிமிடைப்பவளம் 121 முதல் 300 வரையிலான பாடல்கள், நித்திலக்கோவை 301 முதல் 400 வரையிலான பாடல்களைக் கொண்ட முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. நம் பாடப்பகுதியல் ஐந்திணைகளில் நெய்தல் திணைப் பாடல்கள் மட்டும் இடம்பெற்றுள்ளன.

## 5.2.குறிக்கோள்கள் :

அகநானூற்றில் இடம்பெற்றுள்ள நெய்தல் திணைப்பாடல்கள் முறையே 10, 20, 30… என்ற வரிசையில் பாடப்பட்டுள்ளது. மேலும் நெய்தல் திணை என்பது கடலும் கடல் சார்ந்த நிலத்தைக் குறிப்பதோடு அங்கு இருக்கும் மக்களின் வாழ்வியலை உணர்த்தும் அகநூலாக அகநானூறு திகழ்கின்றது. இதனை இன்றைய இளைய தமிழ் சமூகத்தினர் அறிந்து கொள்ளுவதையே குறிக்கோளாகக் கொண்டு இப்பாடப்பகுதியில் 1 முதல் 200 வரையிலான பாடல்கள் மட்டும் அமையப் பெற்றுள்ளன.

## 5.3.பாடல் : 1 (10) : தோழி தலைவனிடம் கூறியது

**பாடியவர் : அம்மூவனார்**

**துறை : இரவுக்குறி வந்து தலைமகளை கண்ணொற்று நீங்கும் தலைவனை எதிர்நின்று தோழி கூறியது**

வான் கடல் பரப்பில் தூவற்கு எதிரிய
மீன் கண்டன்ன மெல்லரும்பு ஊழ்த்த,
முடவு முதிர் புன்னைத் தடவு நிலை மாச்சினை,
புள் இறை கூரும் மெல்லம்புலம்ப!
நெய்தல் உண்கண் பைதல கலுழப்
பிரிதல் எண்ணினை ஆயின், நன்றும்
அரிது துற்றனையால் பெரும! உரிதினின்
கொண்டு ஆங்?குப் பெயர்தல் வேண்டும், கொண்டலொடு
குரூஉத் திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந்திமில் கொன்ற புது வலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கொண்டி,
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி அன்ன இவள் நலனே.

*Self -Instructional Material*

பெரிய கடற்பரப்பிலே எழுகின்ற அலைகளின் திவலைகளை எதிரேற்றுக்காண்ட, வானத்து மீன்களைக் கண்டாற் போன்ற, மென்மையான அரும்புகளை ஈன்றன முடம்பட்ட முதிர்ந்த புன்னை மரங்கள். அவற்றின், பெரிய நிலையினையுடைய கரிய கிளைகளிலே, கடற்பறவைகள் தங்கியிருக்கும். அத்தகைய மென்னிலமாகிய கடற்கரைப்பகுதியின் தலைவனே! நெய்தல் பூவினைப் போன்றன மையுண்ட எம் தோழியின் கண்கள். அவை வருத்தமுற்றனவாகக் கலங்குமாறு, நீ அவைளப் பிரிந்து செல்வதையும் எணண்னையோ? அங்ஙனம் எண்ணினையானால், மிக்க நஉ்மையானதும், மிக்க அருமையானதுமான ஒன்றினை மேற்கொள்வாயாகுக! பெருமானே! இவளை நினக்கே உரிமையுடையவளாக மணந்து கொண்டு, விரைவாக நின்னூர்க்கே இவளையுதம் நின்னுடன் அழைத்துப் போய் விடுவதனை உடனே செய்வாயாக.

கீழ்க்காற்றினால் விளக்கம் பொருந்திய கடலலைகள் மோதி உடைக்கும், மணல் மேட்டில் கிடக்கும் பழைமையாகிப் போன படகுகளைச் செப்பனிட்டுப் புதுக்கியிருந்தனர். புதிய வலையினையுடைய பரதவர்கள். உயர்ந்த மணலை உடைய அடை கரையிலே, அலைகளால் ஒதுக்கப்பட்டு வந்து கிடக்கும் சுறாமீனின் கொள்ளையினை அவர்கள் கண்டனர். மணம் நாறுகின்ற பாக்கதின்கண் உள்ள பிறருக்கும் அவற்றை அவர்கள் பகுத்துக் கொடுத்தனர். அத்தகைய கடல்வளம் மலிந்தது தொண்டி என்னும் கடற்கரைப் பட்டினம். அதைப் போன்று சிறப்புடன் விளங்குவத இவளுடைய பேரழும் ஆகும். அது, நின் பிரிவினால் நலிதலுக்கு உட்படாமற் காப்பாயாக!

## 5.4.பாடல் : 2(20) : தோழி தலைவியிடம் சிறைப்புறத்தே இருந்த தலைவன் கேட்கும்படியாக கூறியது :

**பாடியவர் : உலோச்சனார்**

**துறை : பகற்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாக தோழி தலைவிக்கு தலைவன் கேட்க சொல்லியது.**

பெருநீர் அழுவத்து எந்தை தந்த
கொழு மீன் உணங்கல் படுபுள் ஓப்பி,
எக்கர்ப் புன்னை இன் நிழல் அசைஇ
செக்கர் ஞெண்டின் குண்டு அளை கெண்டி,
ஞாழல் ஓங்கு சினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ் கயிற்று ஊசல் தூங்கிக்,
கொண்டல் இடு மணல் குரவை முனையின்
வெண்தலைப் புணரி ஆயமொடு ஆடி,
மணிப்பூம் பைந்தழை தைஇ, அணித்தகப்
பல் பூங்கானல் அல்கினம் வருதல்
கவ்வை நல் அணங்கு உற்ற இவ்வூர்
கொடிது அறி பெண்டிர் சொல் கொண்டு அன்னை
கடி கொண்டனளே தோழி, பெருந்துறை

குறிப்புகள்

எல்லையும் இரவும் என்னாது, கல்லென
வலவன் ஆய்ந்த வண் பரி
நிலவு மணல் கொட்கும் ஓர் தேர் உண்டு எனவே.

தோழி! கடற்கரை மணல்மேட்டிலே உள்ள புன்னை மரத்தின் இனிமையான நிழலிலே தங்கியிருப்போம். கடற் பரப்பினின்றும் நம் தந்தை கொணர்ந்து தந்த , கொழுமையான மீனின் வற்றலைக் கவரவரும் பறவைகளை ஓட்டியிருப்போம். சிவந்த நண்டின் ஆழமான வளைகளைத் தோண்டுவோம். புலி நகக் கொன்றையின் உயர்ந்த கிளையிலே, கயிற்றிலே கட்டித் தொங்கவிடப்பெற்ற ஊசலில் அமர்ந்து ஆடுவோம். கீழ்காற்றுக் கொணர்ந்து குவித்த மணலிலே, ஆயத்தாருடன் கூடிக் குரவையாடுவோம். இவையும் வெறுத்தால், வெண்மையான மேற்பரப்பினையுடைய கடல் நீரிலே நம் தோழியருடன் கூடிக் கடல் நீராடுவோம். அழகிய பூக்களுடன் மேவிய, பசுமையான தழை உடையினை அழகு பொருந்த உடுத்துக் கொள்வோம். பலகானல் பூக்களையும் உடைய கடற்கரைச் சோலைக்கு இப்படி நாம் அடிக்கடி விளையாட வருதலைப்பற்றி, இவ்வூரிலே அலர் கூறுதல் ஒன்றினையே அறிந்தவரான பெண்டிர்களுள் சிலர் கூறும் சொற்களை, நம் அன்னையும் கேட்டனளே!

கேட்டுப் பகலும் இரவும் என்றில்லாது, பாகன் ஆராய்ந்து கொ்ணட அழகிய குதிரைகள் பூட்டப்பெற்று, நிலவொளி போன்ற வெண்மணலில் ‘கல்’ என்னும் ஒலியுடனனே சுழன்று வரும் தேர் ஒன்றும் உண்டு எனவும் எண்ணினளே! நம் வீட்டினிடத்தே காவலையும் மிகுதிப்படுத்தினளே! இனி, என் செய்வோம்? எப்படி வந்து நம் காதலனைச் சந்திப்போம்?

## 5.5.பாடல் : 3 (30) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்.**

**துறை : பகற்குறி வந்த தலைமகனுக்கு தோழிச் சொல்லியது**

நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை
கடல் பாடு அழிய இன மீன் முகந்து,
துணை புணர் உவகையர் பரத மாக்கள்,
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி,
உப்பு ஒய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன் பகடு ஒப்பக் குழீஇ,
அயிர் திணி அடைகரை ஒலிப்ப வாய்கிப்
பெருங்களம் தொகுத்த உழவர் போல,
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசி,
பாடு பல அமைத்துக் கொள்ளை சாற்றிக்,
கோடு உயர் திணி மணல் துஞ்சும் துறைவ!
பெருமை என்பது கெடுமோ, ஒரு நாள்
மண்ணா முத்தம் அரும்பிய புன்னைத்
தண் நறுங்கானல் வந்து, நும்

வண்ணம் எவனோ என்றனிர் செலினே?

அழகான வலைகள், நெடிதான கயிறு கட்டப்பெற்றுக், குறுகலான கண்களையும் உடையன, கடலின் பெருமை குயையுமாறு, அவ்வலைகளிலே, மீன் இனங்களை முகந்து பரதவர் கொணர்வர். தம் துணைவியருடன் கூடியவராகவும், மகிழ்ச்சியினை உடையவராகவும், அவர்கள், இளைஞர்களும்முதியவர்களுமாகக் குழுமி ஒன்று சேர்வர். உப்பு விற்கும் வாணிகர்கள், அதிய கடற்றுரைகளிலே ஓட்டி வரும் வண்டிகளிலே பூட்டப்பெற்றிருக்கும் வலிமை உடைய கடாக்களைப் போல்அவர்கள் செருக்குடன் கூடுவர். நுண்மணல் செறிந்த அடை கரையிலே, ஒலிமுழக்கத்துடன், மீன் நிறைந்த வலைகளை இழுத்துக் கொணர்வர். பெரிய களத்திலே தம் செயல்களின் விளை பயனான நெல்லைத் தெதாகுத்த உழவர்களைப் போலத் தம்மிடம் வந்து இரந்தவர்களுடைய வறிய கலங்கள் எல்லாம் நிறையுமாறு மீன்களை வாரி வாரிச் சொரிவர். எஞ்சியவற்றைப் பலபல கூறுகளாக்குவர். அந்தக் கூறுகளை விலை கூறி விற்பர். அதன் பின்னர், கரை உயர்ந்த திண்மையான மணற் பரப்பிலே கிடந்து உறங்குவர். அத்தகைய நாட்டுத் துறைவனே! கேளாய்!

ஒருநாள், தூய்மை செய்யப்பெறாத முத்துக்கள் போல அரும்புகள் அரும்பியிருக்கும் புன்னை மரங்களை உடைய குளிர்ச்சியான நறிய கானற் சோலையிலே நீயும் வந்து, நுங்கள் மேனியின் வண்ணம் எத்தகையதோ? என, எங்களை அவ்விடத்தே வினவிவிட்டுச் சென்றாயானால், நின் பெருமைதான் என்ன கெட்டுவிடுமோ!

## 5.6.பாடல் : 4 (40) : தலைவி தோழியிடம் கூறியது :

**பாடியவர் : குன்றியனார்.**

**துறை : தலைமகன் பொருள்வயிற் பிரிந்தமையை கிழத்தி தோழிக்குச் சொல்லியது**

கானல் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீல் நிறப் பெருங்கடல் பாடு எழுந்து ஒலிப்ப,
மீன் ஆர் குருகின் மென் பறைத் தொழுதி
குவை இரும் புன்னைக் கும்பை சேர,
அசை வண்டு ஆர்க்கும் அல்குறு காலைத்
தாழை தளரத் தூக்கி மாலை
அழிதக வந்த கொண்டலொடு கழி படர்க்
காமர் நெஞ்சம் கையறுபு இணையத்.
துயரம் செய்து நம் அருளார் ஆயினும்
அறாஅலியரோ அவருடைக் கேண்மை,
அளி இன்மையின் அவண் உறை முனைஇ
வாரற்க தில்ல தோழி, கழனி
வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்பும்
தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை
செறி மடை வயிரின் பிளிற்றிப் பெண்ணை

அக மடர் சேக்கும் துறைவன்
இன் துயில் மார்பில் சென்ற என் நெஞ்சே.

தோழி! மாலை வேளை, கானற் சோலையிலே உள்ள கழிகளிலே நெய்தல் பூக்கள் கவிந்தன. நீல நிறத்தை உடைய பெரிய கடலானது பேரொலியுடன் ஒலித்தது மீனை உண்ணும் மெல்லிய சிறகினை உடைய கடற்பறவை இனம். திரட்சி பொருந்திய பெரிய புன்னை மரத்திலேயுள்ள கூடுகளில் சேர்ந்தன, அசைகின்ற வண்டுகள் ஒலிக்கின்றன. இவ்வாறு, எல்லாமே ஓய்வுகொள்ளும் காலமாகிய மாலை வேளையிலே, தாழைகள் தளருமாறு அசைந்து, பிரிந்திருப்பவர்கள் வருந்துமாறு வந்த கீழ்க்காற்றினால், மிகவும் துன்பங் கொண்ட அழகிய நெஞ்சம் செயலற்று வருந்த, நமக்குப் பிரிதலாகிய துன்பத்தினைச் செய்தனர். மீண்டும் வந்து அவர் நமக்கு அருளார் ஆயினும், அவருடைய நட்பானது நமக்கு என்றும ஒழியாதிருப்பதாக!

வயல்களிலே வெண்நெல்லை அரிவோரது பின்பக்கமாக நின்று ஒலிக்கப்படும் பறை ஒலியினைக் கேட்டு, நீண்ட கால்களை உடைய நாரையானது அஞ்சும். செறிந்த மூட்டு வாயினையுடைய கொம்பினைப் போன்ற ஒலித்தவாறே சென்று, பனைமரத்தின் அகமடலிலே சென்று தங்கும். அத்தகைய கடல்துறையினை உடையவன் நம் தலைவன். அவனது இனியதும், யாம் துயிலுதற்கு உரியதுமான மார்பின் பொருட்டாக, என்நெஞ்சமானது அவனிடத்தே சென்றது. அவன் அளி செய்திலன் என்று, அங்கே தங்கியிருத்தலை விடுத்து, அது இவ்விடத்தே வாராதிருப்பதாக!

## 5.7.பாடல் : 5(50) : தோழி பாணனிடம் கூறியது :

**பாடியவர் : கருவூர் பூதஞ்சாத்தனார்.**

**துறை : தோழி பாணனனுக்குச் சொல்லியது**

கடல் பாடு அவிந்து தோணி நீங்கி,
நெடுநீர் இருங்கழிக் கடு மீன் கலிப்பினும்,
வெவ்வாய்ப் பெண்டிர் கெளவை தூற்றினும்,
மாண் இழை நெடுந்தேர் பாணி நிற்பப்,
பகலும் நம் வயின் அகலான் ஆகிப்
பயின்று வரும் மன்னே, பனி நீர்ச் சேர்ப்பன்,
இனியே மணப்பு அருங்காமம் தணப்ப நீந்தி,
“வாராதோர் நமக்கு யாஅர்” என்னாது,
மல்லல் மூதூர் மறையினை சென்று
சொல்லின் எவனோ பாண? “எல்லி
மனை சேர் பெண்ணை மடிவாய் அன்றில்
துணை ஒன்று பிரியினும் துஞ்சா காண்” எனக்
கண் நிறை நீர்கொடு கரக்கும்
ஒண்ணுதல் அரிவை, யான் என் செய்கோ எனவே?

கடல் ஒலியவிந்து கிடந்தாலும், தோணிகள் கடலில் இல்லாதிருப்பினும், மிகுந்த நீருடைய பெரிய கழியிலே சுறா முதலிய கொடிய மீன்கள் செருக்கித் திரிந்தாலும், கொடிய வாயினரான பெண்கள் அலர் எடுத்துத் தூற்றினாலும், மாட்சியுடைய இழையினைக் கொண்ட தன்னுடைய நெடுந்தேரானது தாழ்த்து நிற்க. பகற்காலத்துங்கூட நம்மிடத்தே நின்றும் அகலாதவனாகி, அடுத்தடுத்து நம் தலைவன் முன்னரெல்லாம் வந்து கொண்டிருந்தனன், இப்போது, அஃதெல்லாமும் கழிந்ததே!

களவுக் காத்துக் கூடுதற்கு அரிய காமவேட்கையானது நீங்குதலால், தாம் சென்றிருக்கும் இடத்தினின்று இடை வழியைக் கடந்து இங்கு வராதவரான அவர், நமக்கு என்ன உறவினரோ? என்று சொல்லாது, ஒள்ளிய நெற்றியினை உடைய நின் தலைவியானவள், இரவிலே, மனையைச் சார்ந்துள்ள பனைமரத்திலே, தம்முள் ஒன்று துணையாகக் கூடியிருப்பதனின்று பிரிந்தாலும், வளைந்த வாயினை உடைய அன்றில்கள் உறங்காதனவாதலைக் காண்பாயாக என்று, கண் நிறைந்த நீர்கொண்டு நின் பழியை மறப்பாள். இதற்கு யான் என் செய்வேன் என்று வளம் பொருந்திய பழைமையான அவனுடைய ஊரினிடத்து, மறைந்து சென்று, பாணனே! நீ நம் தலைவனுக்குச் சொன்னால் தான் என்னவோ?

சங்க இலக்கியம்

குறிப்புகள்

## 5.8.பாடல் : 6 (60) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : குடவாயில் கீரத்தனார்.**

**துறை : தலைமகற்கு தோழி செறிப்பறிவுறுத்தி வரைவு கடாதல் :**

பெருங்கடலர் பரப்பில் சேயிறா நடுங்கக்
கொடுந்தொழின் முகந்த செங்கோல் அவ் வலை
நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு,
உப்பு நொடை நெல்லின் மூளரல் வெண்சோறு
அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து,
கொழு மீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்
திண்தேர்ப் பொறையன் தொண்டி அன்ன எம்
ஒண்தொடி ஞெமுக்காதீமோ தெய்ய,
ஊதை ஈட்டிய உயர்மணல் அடைகரை
கோதை ஆயமொடு வண்டல் தைஇ,
ஓரை ஆடினும் உயங்கும் நின் ஒளி எனக்
கொன்னும் சிவப்போள் காணின் வென்வேல்
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடு தரு நிதியினுஞ்செறிய
அருங்கடிப் படுக்குவள், அறன் இல் யாயே.

*Self -Instructional Material*

தலைவனே! பெரிய கடற்பரப்பிலே இருந்த சிவந்த இறால் மீன்களும் அஞ்சி நடுங்குமாறு, மீன்களை முகக்கும் கொடிய தொழிலை உடைய நேரிய கோலையுடைய அழகிய வலையினைக் கைக்கொண்டவாறு, நீண்ட படகிலிருந்து மீன்படிக்கும் தொழிலிலே இறங்கிய தன் தந்தைக்கு, உப்பனை விற்றுக் கொண்ட நெல்லினால்

சமைத்த மூரலாகிய வெண்சோற்றை, அயிரை மீனையிட்டு ஆக்கிய அழகிய புளிக்கறியினைச் சொரிந்து, கொழுத்த மீன் கருவாட்டுடன் அவனுடைய இளைய மகள் கொடுத்துக் கொண்டிருப்பாள். அத்தகைய இடமாகிய, திண்ணிய தேரினையுடைய சேரனது தொண்டியைப் போன்ற, எம்முடைய ஒள்ளிய வளையலைத் தழும்பு உண்டாகும்படியாக அழுததாது இருப்பாயாக.

வாடைக்காற்றுக் குவித்த உயர்ந்த மணல்மேடாகிய அடைகரையிலே, கோதைகள் சூடிய ஆயத்தாராகிய நின் தோழியரோடு வண்டலிழைத்து விளையாடினாலும், நின் ஒளி மேனி வாடிவிடுமே என்று, எக்காரணமின்றியும் எம்மைச் சினந்து கொள்பவள் அறங்கருதாத எமது தாய். அவரள், எம்பால் வளையல் அழுத்திய தழும்புகளைக் கண்டால், வெல்லும் வேலினை உடைய வெற்றி பொருந்திய சோழர்கள் குடந்தைக்கண்ணே பாதுகாவலுடன் சேமித்து வைத்த, பகைவரின் நாடுகள் திறையாகக் கொடுத்த பெரு நிதிக் குவையைக் காட்டினும், காவல் அதிகமாயிருக்குமாறு, எம்மை அரிய காவற்கு உடபடுத்தி விடுவள் கண்டாய்!

## 5.9.பாடல் : 7(70) : தோழி தலைவியிடம் கூறியது :

**பாடியவர் : மதுரைத் தமிழ் கூத்தனார்.**

**துறை : தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைவிக்குச் சொல்லியது**

கொடுந்தியில்ல பரதவர் வேட்டம் வாய்த்தென,
இரு புலாக் கமழும் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங்கண் அவ் வலைப் பயம் பாராட்டி
கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன்
நம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே
அல்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்றப்,
பலரும் ஆங்கு அறிந்தனர் மன்னே் இனியே
வதுவை கூடிய பின்றைப் புதுவது
பொன் வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்,
கானல் அம் பெருந்துறைக் கழனி மா நீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவு அணி மகளிர் தழை அணிக் கூட்டும்
வென்வேல் கவுரியர் தொல் முது கோடி
முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன்துறை,
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல் வீழ் ஆலம் போல,,
ஒலி அவிந்தன்று இவ் அழுங்கால் ஊரே.

வளைந்த படகினை உடையவர் பரதவர். அவர்க்கு மீன்வேட்டை நன்கு வாய்த்தது. பெரிய புலால் நாற்றம கமழும் சிறிய குடிமக்களை உடைய தம்பாக்கத்திலே குறுகிய கண்களை உடைய அவ்வலையின் பயனைப் பாராட்டிப் பேசினார்கள். கொழுவிய கண்களை உடைய அயிலை

மீனை யாவர்க்கும் பகுத்துக் கொண்டு மகிழ்ந்தனர். அத்தகைய கடற்கரைப் பகுதியின் தலைவன் நம் காதலன். அவன், நம்முடன் சேர்ந்த காதல் உறவானது, முன்னர் அலர் கூறுதலே வாயின் பயனாக உடைய பெண்டிர்கள் அம்பலாக்கித் தூற்ற, அவ்விடத்தே பலரும் அறிந்த ஒன்றாகவும் ஆகியது. அதுவும், இப்பொழுது மணம் கூடிய பின்னர், கழிந்தது.

புலிநகக் கொன்றையின் புதிய பொன்னிறப் பூக்களுடன் புன்னையின் பூக்களும் உதிர்ந்து, தலையிலே ஓவியம் வரைந்தாற் போல அழகுடன் கிடக்கும். கடற்கரைச் சோலையினை உடைய அழகிய பெருந்துறைகள். கழிகளிலுள்ள கரிய நீரிலே, பசிய இலைகளை உடையதாகித் தழைத்த திரண்ட தண்டினை உடைய நெய்தல் பூக்களை விழாவிற்கு ஒப்பனை செய்யும் மகளிர் தங்கள் தழை உடைக்கு அழகு செய்யச் சேர்ததுக் கொண்டு இருப்பர். வெற்றி வேலினை உடைய பாண்டியரது, மிக்க பழமையினை உடைய திருவணைக்கரையின் அருகிலே, மூழங்கும் பெருங்கடல் ஒலிக்கின்ற துறைமுற்றத்திலே, போரிலே வெற்றிபெறும் ஆற்றலுடைய இராமன், இலங்கையிற் படையெடுத்தல் பற்றிய மறைகளை ஆராயும் பொருட்டாகப் புள்ளொலிகள் இல்லையாகச் செய்த, பல விழுதுகளைக் கொண்ட ஆலமரம்போல, ஆராவாரமுடைய அவ்வூரும் ஒலியடங்கப் பெற்றது.

## 5.10.பாடல் : 8 (80) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : மருங்கூர் கிழார் பெருங்கண்ணணார்.**

**துறை : இரவுக்குறி வந்த தலைவனுக்குத் தோழி சொல்லியது**

கொடுந்தாள் முதலையொடு கோட்டு மீன் வழங்கும்
இருங்கழி இட்டுச் சுரம் நீந்தி, இரவின்
வந்தொய் மன்ற, .தண்கடல் சேர்ப்ப!
நினக்கு எவன் அரியமோ யாமே? எந்தை
புணர் திரைப் பரப்பபம் துழைஇத் தந்த
பல் மீன் உணங்கல் படுபுள் ஓப்புதும்,
முண்டகம் கலித்த முதுநீர் அடைகரை,
ஒண் பன் மலரக் கவட்டு இலை அடும்பின்
செங்கேழ் மென் கொடி ஆழி அறுப்ப,
இன மணிப் புரவி நெடுந்தேர் கடைஇ,
மின் இலைப் பொலிந்த விளங்கு இணர் அவிழ் பொன்
தண் நறும் பைந்தாது உறைக்கும்
புன்னை அம் கானல் பகல் வந்தீமே.

குளிர்ந்த கடற்கரையினை உடைய தலைவனே! வளைந்த காலினை உடைய முதலைகளோடு, கொம்பினை உடைய சுறாமீன்களும் இயங்கும், உப்பங்கழிகள் நெருங்கிக்கிடக்கும், அரிய வழியினைக் கடந்து, இந்த இரவு ரேத்திலேயும் நீ வந்துள்ளனை! நீர் முள்ளிகள் தழைத்துக் கிடக்கும் கடலின் அடைகரையிலேயுள்ள, ஒள்ளிய பலவாகிய மலர்களை உடைய.

கவடு பட்ட இலைகளை உடைய அடம்பினது சிவந்த நிறமுடைய மெல்லிய கொடிகளை, நின் தேருருள்கள் அறுத்துக் கொண்டே வரும். ஒரே இனமாக விளங்கும் மணிகள் பூண்ட குதரைகள் பூட்டிய நின் நெடுந்தேரினை, அங்ஙனம் செலுத்தியவனாக, ஒளிரும் இலைகளால் அழகுற்று விளங்கம் மலர்ந்த பூங்கொத்துக்கள், பொன்போலும் தன்மையான நறும்பூந் தாதுக்களைத் தம் கட்டவிழ்ந்துசொரியும், புன்னை மரங்கள் செறிந்த அழகிய கானற்சோலையிலே, இனிப் பகல் வேளையிலேயே வருவாயாக!

எம் தந்தை, பொருந்தும் அலைகளை உடைய கடல் அகத்தேயிருந்து துழாவிக் கொணர்ந்த, பலவகை மீன்களின் வற்றலிலே வந்து படியும் புட்டகளை, யாம் அவ்வேளை அங்கே ஒட்டியிருப்போம். ஆகலின், யாங்கள் நினக்கு எங்ஙனம் கூடுதற்கு அரியவர்களாவோம்?

## 5.11.பாடல் : 9 (90) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : மதுரை மருதன் இளநாகனார்.**

**துறை : பகற்குறி வந்து நீங்கும் தலைவனை எதிர்பட்டு தோழி இற்செறிப்பு அறிவுறுத்தியது :**

மூத்தோர் அன்ன வெண்தலைப் புணரி
இளையோர் ஆடும் வரி மனை சிதைக்கும்
தளை அவிழ் தாழைக் கானல் அம் பெருந்துறை,
சில் செவித்து ஆகிய புணர்ச்சி அல் எழ,
இல் வயின் செறித்தமை அறியாய் பன்னாள்
வருமுலை வருத்தா அம் பகட்டு மார்பின்,
தெருமரல் உள்ளமொடு வருந்தும் நின் வயின்
நீங்குக என்று யான் யாங்ஙனம் மொழிகோ?
அருந்திறள் கடவுள் செல்லூர்க் குணாஅது,
பெருங்கடல் முழக்கிற்று ஆகி யாணர்
இரும்பு இடம்படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கண் கோசர் நியமம் ஆயினும்,
உறும் எனக் கொள்குநர் அல்லர்
நறுநுதல் அரிவை பாசிழை விலையே.

கட்டவிழ்ந்த மடங்கள் பொருந்திய தாழைகள் செறிந்த கானற் சோலையை அடுத்த, பெருந்துறையினிடத்தே, முதியவர்களைப் போல வெண்மையான தலையினை உடைய கடல் அலையானது, அக்கடற்கரையிலே, இளையவரான பெண்கள் இழைத்தாடும் வரிமனயினைச் சிதைக்கும். உங்கள் களவுக்கூட்டம், சிலர் செவிப்பட்ட மாத்திரத்தானே, அலராகி, ஊர் முழுவதும் பரவிற்று. அதனால், தாய, நின் காதலியை இல்லிடத்தே செறித்து விட்டதனையும் நீ அறிந்நாயில்லை! பல நாளும், நின் அழகிய பெருமை உடைய மார்பகம், வளரும் முலையினை உடைய எம் தலையியினால் முயங்கி வருத்தப்பெறாததனால். கலங்கும் உள்ளத்தோடு

வருந்தும் நின்னிடத்தே. அவளை மறந்துவிட்டுப் போய்விடுவாயாக என்று, யானுந்தான் எவ்வாறு நினைக்கச் சொல்லுவேன்?

நறுநுதலினளான இவளுடைய பசிய அணிகட்கு சிலையாக, அரிய வலிகொண்ட தெய்வங்களை உடைய செல்லூரின் கீழ்ப்பாலினதாகப், பெருங்கடல் முழக்கத்தினை உடைத்தாகிய படைக்கலம் இடம்படச் செய்திட்ட வடுக்களை உடைய முகத்தினரான, அஞ்சாமையை உடைய கோசர்களது, புதுவருவாயினை உடையதாகிய நியமம் என்னும் ஊரினையே கொடுத்தாலும், அ∴து அமையும் எனக் கொள்பவர் அலலரே, இவளுடைய பெற்றோர்!

## 5.12.பாடல் : 10(100) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : உலோச்சனார்**

**துறை : தோழி வரைவு கடாதல்**

அரையுற்று அமைந்த ஆரம் நீவிப்
புரையப் பூண்ட கோதை மார்பினை,
நல்அகம் வடுக் கொள முயங்கி நீ வந்து
எல்லினில் பெயர்தல் எனக்குமார் இனிதே,
பெருந்திரை முழக்கமொடு இயக்கு அவிந்திருந்த
கொண்டல் இரவின் இருங்கடல் மடுத்த
கொழு மீன் கொள்பவர் இருள் நீங்கு ஒண் சுடர்
ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை,
ஆடு இயல் யானை அணி முகத்து அசைத்த
ஓடை ஒண் சுடர் ஒப்பத் தோன்றும்
பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்,
பரியுடை நல் தேர்ப் பெரியன் விரி இணர்ப்
புன்னை அம் கானல் புறந்தை முன்துறை
வம்ப நாரை இனன் ஒலித்தன்ன
அம்பல் வாய்த்த தெய்ய தண் புலர்
வைகுறு விடியல் போகிய எருமை
நெய்தல் அம் புது மலர் மாந்தும்
கைதை அம் படப்பை எம் அழுங்கல் ஊரே.

நறுமணம் கூட்டி அரைக்கப்பெற்று அமைந்த சந்தனத்தைப் பூசி, உயர்வறமாலையினனைப் பூண்ட மார்பினை உடையவனாக, நீ இரவினிலே வந்து,நினது நல்ல மார்பகம் வடுக்கொள்ளுமாறு எம் தலைவியை முயங்கிப், பின்னர்ப் பயெர்ந்து போகுதல், எமக்கும் மிக இனிதேயாகம். ஆனால், பெரிய கடலானது, தனது முழக்கத்துடன் அலைகளின் அசைவும் ஓய்ந்து கிடந்த, மேகம் சூழ்ந்த இரவிலே, கரிய கடலிலே மடுத்த கொழுவிய மீனைக் கொணர்பவர், தம் படகு முனையிலே கட்டியிருக்கும் இருள் நீங்குதற்குக் காரணமாகிய ஒளிபொருந்திய விளக்கம், புறமுதுகிடாத மேற்கோளினை உடைய வேந்தனின் பாசறைவிடத்தேயுள்ள, அடுதல் வல்ல யானையின் முகத்திலே பிணித்த ஓடையினது, ஒள்ளிய

குறிப்புகள்

சுடர்போலத் தோன்றும். அத்தகைய இடமாகிய, பாடி வருவாரைத் தன்னிடத்தேயே வளைத்துக் கொள்ளும், கைவண்மை வாய்ந்த கோமானாகிய, குதிரைகள் பூண்ட நல்ல தேர்களை உடைய பெரியன் என்பானது, மலர் விரிந்த பூங்கொத்துகள் நிரம்பிய புன்னை மரங்களை உடைய, அழகிய சோலை சூழ்ந்த புறையாற்றின் கடற்றுரையின் கண்ணுள்ள, புதிய நாரைக் கூட்டம் ஒலித்தாற் போல, ஊரலரும்எழுந்ததே.

'தண்ணென்று' பொழுது புலர்ந்திடும். இருள் தங்கிய விடியற் காலத்திலே வெளிச்சென்ற எருமையானது, நெய்தலின் புது மலர்களைத் தின்னும், தாழை வேலிகளை உடைய அழகிய தோட்டங்களை உடைய, எமது ஆரவாரமிக்க ஊரின்கண்ணே, அலரும் அங்ஙனம் எழுந்தனவே!.

## 5.13.பாடல் : 11(110) : தோழி செவிலித் தாயிடம் கூறியது :

**பாடியவர் : போந்தைப் பசலையார்**

**துறை : தோழி செவிலித்தாய்க்கு தாய்க்கு அறத்தொடு நிற்றல்**

அன்னை அறியினும் அறிக, அல்வாய்
அம்மென் சேரி கேட்பினும் கேட்க,
பிறிது ஒன்று இன்மை அறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவன் நினக்கே, கானல்
தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும்,
சிற்றில் இழைத்தும், சிறு சோறு குவை இயும்,
வருந்திய வருத்தம் தீர யாம் சிறிது
இருந்தனமாக, எய்த வந்து
"தட மென் பணைத்தோள் மட நல்லீரே!
எல்லும் எல்லின்று, அசைவு மிக உடையேன்,
மெல் இலைப் பரப்பின் விருந்து உண்டு, யானும் இக்
கல்லென் சிறுகுடித் தங்கனி மற்று எவனோ?"
என மொழிந்தனனே ஒருவன், அவன் கண்டு,
இறைஞ்சிய முகத்தெம், புறம் சேர்பு பொருந்தி,
"இவை நுமக்கு உரிய அல்ல, இழிந்த
கொழு மீன் வல்சி" என்றனம், இழுமென
நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணாமோ எனக் காலின் சிதையா,
நில்லாது பெயர்ந்த பல்லோர் உள்ளும்,
என்னே குறித்த நோக்கமொடு, "நன்னுதால்!
ஒழிகோ யான்" என அழிதகக் கூறி,
யான் "பெயர்க" என்ன நோக்கித் தான் தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றும் என் கட்கே.

மாலைபோன்று நெருங்கிய தோழியரோடு, கடலஜலே ஒருங்கு சேர்ந்து விளையாடியும், கடற்கானலிலே சிற்றில் இழைத்தும், சிறுசோறு ஆக்கிக் குவித்தும், வருந்திய களைப்புத் தீர, யாம் சிறிதே இளைப்பாறி இருந்தோம். ஒருவன் எம்மருகே வந்தான். பெரிய மென்மையான மூங்கில் போலும் தோள்களையும், மடப்பத்தையும் உடைய நல்ல பெண்களே! பகலும் ஒளியிழந்தது. மிகவும் தளர்ச்சி உடையேன். மெல்லிய இலைப்பரப்பிலே நீங்கள்இடும் விருநதினை யானும் உண்டு, கல்லென்ற ஆராவாரமுடைய இந்தச் சிறுகுடியிலே தங்கிச் சென்றால் என்னவோ? என்றும் சொன்னான். அவனைக் கண்டு, தலைகவிழ்ந்த முகத்தினர்களாக, ஒருவர் முதுகுப்பின் மற்றொருவராக ஒளிந்து கொண்டோம். இழும் என்னம மெல்லிய குரலிலே, இவை நுமக்க உரியன அல்ல இழிந்த கொழு மீனாலாகிய உணவு என்றோம். நீண்ட கொடிகள் அசைந்து பறக்குமட் நாவாய்கள் தோன்றுகின்றன. அவற்றைக் காண்போமா? என்று கூறி., எம் சிற்றிலைக் காலாற் சிதைத்துபிட்டு, அங்க நீல்லாது ஓடிப்பெயர்ந்தவன், பலருள்ளும், என்னையெ குறிப்பிட்டுப் பார்க்கும் பார்வையோடு, நலல நுதலினை உடையவளே! யான் போகின்றேன் என்று, என் நெஞ்சம் அழிந்திடக் கூறினான்.

யானும், நீ போவாயாக என்றேன். என்னலும், என்னை நோக்கியவனாகத், தனது தேரின் கொடுஞ்சியினைப் பற்றிக் கொண்டவனாக, அவனம் நின்றான். இன்றும் என் கண்ணுள், அவன் அன்று நின்ற நிலை நிற்பது போலிருக்கிறதே! இதனை அன்னை அறியினும் அறிவாளாக! அலர் கூறும் இம் மெல்லிய சேரியினர் கேட்பினும் கேட்பாராக! இ∴தன்றிப் பிறிதொன்றும் இல்லாததனை நீ அறியுமாறு கூறிக் கொடுஞ்சுழிகள் மேவிய புகாரிடத்துள்ள தெய்வத்தை நோக்கி, நினக்குக் கூடிய சூளும் யான் செய்து தருவேன்!

## 5.14.பாடல் : 12(120) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : நக்கீரனார்.**

**துறை : தோழி பகற்குறிக்கண் தலைமகளை இடத்து உய்த்து வந்த தலைமகனுக்கு எதிர்பட்டு நின்று சொல்லியது**

நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானம் தீண்டி, மீன் அருந்தும்
பைங்கால் கொக்கு இனம் நிரை பறை உகப்ப,
எல்லை பைப்பய கழிப்பிக் குடவயின்
கல் சேர்ந்தன்றே பல் கதிர் ஞாயிறு,
மதர் எழில் மழைக் கண் கலுழ, இவளே,
பெரு நாண் அணிந்த நறு மென் சாயல்
மாண் நலம் சிதைய ஏங்கி, ஆனாது
அழல் தொடங்கினளே பெரும, அதனால்
கழிச்சுறா எறிந்த புண் தாள் அத்திரி
நெடுநீர் இருங்கழி பரி மெலிந்து அசைஇ,

குறிப்புகள்

வல்வில் இளையரொடு எல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவது உண்டோ,
பெண்ணை ஓங்கிய வெண்மணல் படப்பை
அன்றில் அகவும் ஆங்கண்,
சிறுகுரல் நெய்தல் எம் பெருங்கழி நாட்டே?

முருகக் கடவுளின் மார்பினிடத்தே விளங்கம் ஆரத்தைப் போலச் செவ்வானத்திலே பொருந்தி மீனை அருந்தும் பசிய கால்களை உடைய கொக்கினமம், வரிசையாகப் பறத்தலை விருமபி மேலெழுந்திடப் பகற்பொழுதை மெல்ல மெல்லக் கழித்துப்பல்கதிர் ஞாயிறும் மேற்றிசையிலே மலைவாயிலிற் சென்று சேர்ந்து விட்து. பெருநாணத்தை அயியாகக் கொண்ட சிறு மென்சாயலுடைய இவள், தனது மாட்சிமை உடைய நலம் சிதையுமாறு, ஏக்கமற்று, மதர்த்த அழகினை உடைய குளிர்ந்த கண்கள் கலுழ, ஓயாத அழுதலையும் தொடங்கிவிட்டாள். பொருமானே! உப்பங் கழியிலே உள்ள சுறாமீன் தாக்குதலால் உள்ள புண்பட்ட காலினை உடைய கோவேறு கழுதை. நீண்ட நீரினை உடைய கரிய கழிழயிலே செல்லுதற்கு இயலாது மெலிந்தது. ஆகவே. வலிய வில்லினரான நின் இளையரோடு, இவ்விரவிலே செல்லாது, இளைப்பாறப் பனைமரங்கள் ஓங்கிய வெண்மணல் செறிந்த தோட்டங்களிலே, அன்றில்கள் அகவிக் கொண்டிருக்கும். அவ்விடத்திலே சிறிய பூங்கொத்தினை உடைய எம் பெருங்கழி நாட்டின்கண் வந்தனையாய், நீதான் சிறிது பொழுது தங்கிச் சென்றால் சிதைகுவதுதாம் யாமுமுண்டே?

## 5.15.பாடல் : 13 (130) : தலைவன் தன் நண்பனிடம் கூறியது :

**பாடியவர் : வெண்கண்ணனார்.**

**துறை : கழறிய பாங்கற்கு தலைமகன் கழற்செறி மறுத்தல்**

அம்ம வாழி, கேளிர்! முன் நின்று
கண்டனிர் ஆயின், கழறலிர் மன்னோ,
நுண் தாது பொதிந்த செங்கால் கொழுமுகை
முண்டகம் கெழீஇய மோட்டு மணல் அடைகரைப்
பேஎய்த் தலைய பிணர் அழைரதைத் தாழை
எயிறுடை நெடுந்தோடு காப்பப் பலவுடன்
வயிறுடைப் போது வாலிதின் விரீஇப்,
புலவுப் பொருது அழித்த பூ நாறு பரப்பின்
இவர் திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர் நடைப் புரவிக் கால் வடுத் தபுக்கும்
நற்தேர் வழுதி கொற்கை முன்துறை
வண்டு வாய் திறந்த வாங்கு கழி நெய்தல்
போது புறங்கொடுத்த உண்கண்
மாதர் வாண் முகம் மதைஇய நோக்கே.

நுண்ணிய தாது மூடிய சிறந்தத காமபினையும, பொழுவிய மொட்டினையுமுடைய கழிமுள்ளி பொருந்திய மேடிட்ட மணலடைந்த

கரையின்கண்ணே, பேய்போன்ற தலையை உடைய சருச்சரை பொருந்திய அரையினை உடைய தாழையினது, முள்ளாகிய பற்களை உடைய நெடிய மடல்கள் ஒரு சேர காப்ப, நடுவிடத்தைப் பிறப்பிடமாக உடைய மொட்டுக்களன் தூய்மையாக விரிந்து, புலால் நாற்றத்தனைப் பொருது வென்று அழித்தனால், பூமணமே கமழும் கடற்பரப்பினிடத்தே, பரக்கின்ற தலைகள் கரையிலே தந்த குளிர்ந்த கதிர்களை உடைய முத்தங்கள், விரும்பிய நடையை உடைய குதிரையின் காலை வடுப்படுத்து முடம் செய்யும், நல்ல தேரை உடைய வழுதியின் கொற்கைப் பட்டினத்து, முதன்மையான கடல் துறையின் கண்ணே. வண்டினால் வாய் விரிக்கப்பெற்ற வளைந்த கழியிடத்துள்ள நெய்தற்போது, அழகினுக்குத் தோற்றுப் புறம் கொடுத்து, ஒளிபொருந்திய முகத்தின் கண்ணுள்ள மையுண்ட கண்ணின் காதலொடு பொருந்திய வனப்பு மிகுந்த பார்வையினை எதிர் நின்று நீர் கண்டீராயின் இவ்வாறு என்னை இடித்துக் கூறவே மாட்டீர், அத காணவில்லையாதலால், எம்மை இடித்துக் கூறுவீராயினீர். என்று பாங்கற்கு தலைமகன் கழற்றெதிர் மறுத்தான் என்க.

## 5.16.பாடல் : 14(140) : தலைவன் தோழனிடம் கூறியது :

**பாடியவர் : அம்மூவனார்.**

**துறை : இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைவமகன் பாங்கனுக்கு கூறியது**

பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழி செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி,
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ் கோல் உமணர் காதல் மட மகள்
சில் கோல் எல் வளை தெளிர்ப்ப வீசி,
நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்
சேரி விலைமாறு கூறலின், மனைய
விளி அறி ஞமலி குரைப்ப வெரீஇய
மதர் கயல் மலைப்பின் அன்ன கண் எமக்கு,
இதை முயல் புனவன் புகை நிழல் கடுக்கும்
மா மூதள்ளல் அழுந்திய சாகாட்டு
எவ்வம் தீர வாங்குந்த தந்தை
கை பூண் பகட்டின் வருந்தி,
வெய்ய உயிர்க்கும் நோய் ஆகின்றே.

பெரிய கடலிடத்து மீன்பிடி வேட்டத்தைச் செய்கின்ற சிறுகுடிலிலே வாழும் பரதவர்கள், பெரிய உப்பங் கழியாகிய வயலிலே உழாமலே விளைவித்து வெள்ளிய கல்லுப்பினோடு கோடையாற் பிறந்த கன் முழைகளை உடைய குன்ற வழிகளிலே, தங்களிற் கூடுதலைச் சாற்றிச் செல்லும் விரைகின்ற கோலினை உடைய உப்பு வாணிகரது. காதலையும் உடைய மகள். கோற்றொழில் அமைந்த இலங்ககின்ற சிலவாகிய

வளைகள் ஒலிப்பத் தன் கையை வீசி, வெள்ளிய கல்லுப்பு நெல்லினுக்கு ஒத்த அளவே என்று, சேரிகளிலே விலை மாற்றுக் கூறுவதனாலே. மனையின் கண்ணுள்ள நாய் இது வேற்றுக் குரலெனக் குரைத்துவர, அதனைக் கண்ட வெருவிய. போரிடும் இயல்புடைய மதர்த்த கயல்கள் இரண்டினைப் போன்ற அவன் கண்கள். எமக்கு. புதுப்பனமாக்கும் பொருட்டாக முயல்கின்ற புனமுடையானாகிய குறவன். பழம்புனத்தைச் சுட்டு எரித்ததனால் உண்டாக்கிய புகையின் நிழலை ஒக்கும் கரிய பழஞ்சேற்றிலே அழுந்திய உப்பு வண்டியின் துன்பம் நீங்க. வருந்தி வலிக்கின்ற தந்தையின் புறத்துப் பூண்ட கடாவின் நோய் போல, எமது விருப்பம் மிக்க உயிருக்கு நோய் ஆயிற்று என்று இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் பாங்கற்கு உரைத்தான் என்க.

## 5.17.பாடல் : 15(150) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர்: குறுவழுதியார்**

**துறை : பகற்குறி வந்து கண்ணொற்று நீங்கும் தலைமகனைத் தோழி தலைமகளை இடத்துய்த்து வந்து செறிப்பறிவுறியி வரைவு கடாதல்**

பின்னு விட நெறித்த கூந்தலும், பொன்னென
ஆகத்து அரும்பிய சுணங்கும். வம்பு விடக்
கண் உருத்து எழுதரு முலையும் நோக்கி,
எல்லினை பெரிது எனப் பன் மாண் கூறிப்
பெருந்தோள் அடைய முயங்கி நீடு நினைந்து
அருங்கடிப் படுத்தனள் யாயே, கடுஞ்செலல்
வாள் சுறா வழங்கும் வளை மேய் பெருந்துறைக்
கனைத்த நெய்தல் கண் போல் மாமலர்
நனைத்த செருந்திப் போது வாய் அவிழ,
மாலை மணி இதழ் கூம்பக் காலைக்
கள் நாறு காவியொடு தண்ணென மலரும்
கழியும் கானலும் காண்தொறும் பல புலந்து,
வாரார் கொல் எனப் பருவரும்,
தார் ஆர் மார்ப, நீ தணந்த ஞான்றே.

மாலைகள் விளங்குகின்ற மார்பினை உடையவனே! நின்னைப் பிரிந்த பொழுதிலேயே, விரைந்த செல்லும் இயல்பனை உயை வாட் சுறா மீன்கள் திரியும் சங்கினம் மேய்கின்ற பெரிய துறையினிடத்தே, தழைத்த நெய்தலது கண்போன்ற பெரிய மலரானது மாலைப்போதிலே தன் அழகிய இதழ்களைக் குவித்துக் கொள்ளக் காலையிலே செருந்தியின் அரும்பிய போதுகள் இதழ் விரியத் தேன்மணம் வீசுகின்ற காவிமலரோடு சேர்ந்து தானும ˙தண்ணென்று மலரும் அவ்வேளையிலே, கழியையும் கானற்சோலையும் காணும் போதெல்லாம் பலவும் நினைந்து நினைந்து வெறுப்புற்று, அவர் வரமாட்டார் போலும், வரமாட்டார் போலும் என வருந்துபவள் உன் காதலி.

அவள் அன்னையானவள். பின்னலிடும்படியாக வளர்ந்த நெறித்தலையுடைய அவள் கூந்தலையும், பொன்போல மார்பிலே தோன்றிய தேமலையும் கச்சுக் கிழியுமாறு கண்கள் உருப்பெற்று எழுந்த முலையினையம் நோக்கினள், பெரிதும் அழகு பெற்றனை மகளே! எனப் பலபல மாட்சி உடைய சொற்களைச் சொல்லிப் பெரிய தோள்கள் முற்றும் பொருந்துமாறு தழுவிக்கொண்ட, நெடுநேரம் நினைவிலே ஆழ்ந்து, அவளை அரிய காவலுக்கும் உட்படுத்தினள்.

## 5.18.பாடல் : 16 (160) : தோழி தலைவியிடம் கூறியது :

**பாடியவர் : குமிழி ஞாழலார் நப்பசலையார்**

**துறை : தோழி வரைவு மலிந்து சொல்லியது**

ஒடுங்கீர் ஓதி நினக்கும் அற்றோ?
நடுங்கின்று அளித்தென் நிறைஇல் நெஞ்சம்,
அடும்பு கொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக்
குப்பை வெண்மணல் பக்கம் சேர்த்தி
நிறைச்சூல் யாமை மறைத்து ஈன்று, புதைத்த
கோட்டு வட்டு உருவின் புலவு நாறு முட்டைப்
பார்ப்பிடன் ஆகும் அளவை பகுவாய்க்
கணவன் ஓம்பும் கானலஞ்சேர்ப்பன்,
முள்ளுறின் சிறத்தல் அஞ்சி மெல்ல
வாவு உடைமையின் வள்பின் காட்டி,
ஏத்தொழில் நவின்ற எழில் நடைப்புரவி
செழு நீர்த் தண்கழி நீந்தலின், ஆழி
நுதி முகங்கறைந்த பொதி முகிழ் நெய்தல்,
பாம்பு உயர் தலையின் சாம்புவன நிவப்ப,
இர வந்தன்றால் திண்தேர், கரவாது
ஒல்லென ஒலிக்கும் இளையரொடு வல்வாய்
அரவச் சீறூர் காணப்
பகல் வந்தன்றால் பாய் பரி சிறந்தே.

நிறைந்த சூலினை உயைதான ஆமையானது. மணல் மேட்டிலே மறைவாக ஈன்று புதைத்ததும் யானைக் காம்பினாலே செய்தத வட்டினைப் போன்ற உருவுடன் விளங்குவதும் புலால் நாற்றம் பொண்டிருப்பதுமான ம்டையினை அதன் இடத்திலேயிருந்தும் குஞ்சு வெளிப்படுகின்ற வரையிலும், திறந்த வாயினை உடைய அந்த ஆடையின் கணவனானது பேணிக் கொண்டிருக்கிற கானற் சோலைககு உரியவன் நம் தலைவனாகிய சேர்ப்பன். அவனுடைய திண்மையினையுடைய தேரானது, தாற்றுக் கோலின் முள்ளால் குத்தப்பட்டால் குதிரைகள் வேகமாக ஓடிப்பலரும் அறியச் செய்துவிடலும் கூடு மென அஞ்சிக் கடிவாள வாயினை இழுத்து மெல்லச் செலுத்தப்பட்டு, அம்பின் விரைவினைப் போலச் செல்லும் தொழிலிலே சிறப்புடைய அழகிய நடையினை உடைய அக்குதிரைகள். செழுமையான நீரினை உடைய தண்மையான கழியினை நீந்துதலால், அத்தேர்

உருளைகளின் கூர்மையான முனையால் அறுக்கப்பெற்றுப் பொதிந்த அரும்புகளை உடைய நெய்தலானது பாம்பின் உயரே தூக்கிய தலையினைப் போல வாடி மேலே எழ இதுகாறும் இரவு வேளையிலேயே வந்துகொண்டிருந்தது. இப்போதோ, அடும்பின் பொடிகள் சிதையுமாறு அவற்றை வலித்து இழுத்துக் கொணர்ந்த. வளைந்த கழியிடத்து உயர்நத வெண்மையான மணல்மேட்டின் பக்கமாகச் சேர்த்தவாறே, கொஞ்சமும் தன் வருகையை ஒளியாது ஒல்லென ஒலிசெய்யும் சிறுவர்களோடு வலிய வாயினாலே அலர் உரைத்துக் கொண்டிருக்கும் நம்முடைய சிற்றூர் அனைத்தும் காணப் பாய்ந்து செல்லும் குதிரைகளின் வேகத்தால் சிறப்புற்றதாகப் பகல் வேளையிலேயே வந்து கொண்டிருக்கிறதே! அதனைக் கண்டதும் நிறையில்லாத என்னுடைய நெஞ்சம் நடுங்கியது. அது இரங்குதற்கு உரியது! ஒடுங்கிய கருமையான கூந்தலை உடையவளே! நினக்கும் அப்படித்தான் இருந்ததோ? என்று . தோழி வரைவு மலிந்து சொன்னாள் என்க.

## 5.19.பாடல் : 17 (170) : தலைவி நண்டிடம் கூறியது :

**பாடியவர் : மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்.**

**துறை : தலைமகள் காமம் மிக்க கழிபடர் கிளவியால் கூறியது**

கானலும் கழறாது கழியும் கூறாது,
தேன் இமிர் நறு மலர்ப் புன்னையும் மொழியாது
ஒரு நின் அல்லது பிறறிது யாதும் இலனே,
இருங்கழி மலர்ந்த கண் போல் நெய்தல்
கமழ் இதழ் நாற்றம் அமிழ்து என நசைஇத்,
தண் தாது ஊதிய வண்டினம் களி சிறந்து
பறைஇய தளரும் துறைவனை, நீயே,
சொல்லல் வேண்டுமால் அலவ பல் கால்
கைதையம் படுசினை எவ்வமொடு அசாஅம்
கடல் சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டு மீன் வழங்கும் வேட்ட மடி பரப்பின்
வெள்ளிறாக் கனவும் நள்ளென் யாமத்து,
நின்னுறு விழுமம் களைந்தோள்
தன்னுறு விழுமம் நீந்துமோ எனவே.

கரிய கழிக்கானலிலே கண்களைப் போன்றவான நெய்தற் பூக்கள் மலர்ந்திருக்கும். மணங்கமழும் அவற்றின் இதழ் நாற்றத்தினைத் தமக்கு அமிழ்தாகக் கருதி, வண்டினங்கள் விருப்பமுடன் அவற்றை நாடிச் செல்லும். அப்படி அவைசென்று, அப்பூவினுள்ளே இருக்கும் தண்மையான பூந்தாதினை உண்டு. அதனால் ஏற்பட்ட களிவெறி அதிகமாகிவிடப் பறத்தற்கும் இயலாது. அவ்விடத்திலயே தளர்ந்து கிடக்கம். அத்தகைய துறைக்கு உரியவன் அவன்! அவனிடத்தே என் வருத்தத்தைச் சென்று, கானற் சோலையும் கூறாது, உப்பங்கழியும் சொல்லாது. வண்டினம் மொய்க்கின்ற நறுமலர்களை உடைய புன்னையம் புலாது. ஆனால், ஒப்பற்ற நின்னையே

அல்லாமல் வேறு ஒரு துணை எதுவும் இல்லாதவளாயுள்ளேன். ஆகவே, சிறிய உருவினவான கடற் காக்கைகள். தாழை மரத்தின் தாழ்ந்த கிளைகளிலே. விருப்பமிக்க தம்முடைய பெடைகளோடும். இரவின் குளிராலான வருத்தத்துடன் தங்கியிருந்தவாறு சுறாமீன்கள் இயங்கதலை உடைய மீன் வேட்டையாடுதல் இல்லாத பரந்த இடத்தேயுள்ள, வெண்மையான இறால் மீனைப்பற்றி உண்பதாகக் கணவு கண்டுபொண்டிருக்கும். அத்தகைய நள் எனும் ஒளியினை உடைய இருள் செறிந்த நள்ளிரவு வேளையிலே வந்து, பலகாலும் நினக்குற்ற காம நோயாகிய துயரினைக் களைந்தவள் நின் காதலி. அவள். இப்போ, நின் பிரிவினால் தானுற்ற துயரத்தினையம் நீந்திக் கடப்பாளோ? என்று அலவனே! நீதான் அவனிடம் சென்று சொல்லுதல் வேண்டும். என்று தலைமகள் காம மிக்க கழிபடர்கிளவியால், கூறினாள் என்க.

## 5.20.பாடல் : 18 (180) : தோழி தலைவியிடம் கூறியது :

**பாடியவர் : கருவூர்க் கண்ணம்பாளனார்.**

**துறை : தலைவி தோழியிடம் சிறைப்புறத்தானாக இருந்த தலைவன் கேட்கும்படியாக கூறியது :**

நகை நனி உடைத்தால் தோழி! தகை மிக
கோதை ஆயமொடு குவவு மணல் ஏறி
வீ ததை கானல் வண்டல் அயர,
கதழ் பரித் திண் தேர் கடைஇ வந்து
தண் கயத்து அமன்ற ஒண் பூங்குவளை
அரும்பு அலைத்து இயற்றிய சுரும்பு ஆர் கண்ணி
பின்னுப்புறம் தாழக் கொன்னே சூட்டி,
நல்வரல் இளமுலை நோக்கி நெடிது நினைந்து
நில்லாது பெயர்ந்தனன் ஒருவன், அதற்கே
புலவு நாறு இருங்கழி துழைஇப் பல உடன்
புள் இறை கொண்ட முள்ளுடை நெடுந்தோட்டுத்
தாழை மணந்து ஞாழலொடு கெழீஇப்,
படப்பை நின்ற முடத்தாள் புன்னைப்
பொன நேர் நுண் தாது நோக்கி,
என்னும் நோக்கும் இவ் அழுங்கல் ஊரே.

தகைமை மிகுந்த தலைமாலைகளைச் சூடியரான தோழிமாருடன். திரண்ட மணல்மேட்டின் மீது யானும் ஏறினேன். மலர்கள் நிரம்பிய கானற் சோலையிலே வண்டலிழைத்து யாம் விளையாடியிருந்தோம். அவ்விடத்தே விரிவாகச் செல்லும் குதிரைகளைக் கொண்ட வலியதேரினைச் செலுத்தியவனாக ஒருவன் வந்தான். குளிர்ச்சியான குளத்திலே நிறைந்திருக்கிற ஒள்ளிய பூக்களை உடைய குவளையின் அரும்புகளை விரித்துக் கட்டியவ ண்டு மொய்க்கின்ற கண்ணியினை, எனது பின்னலைக் கொண்ட முதுகுப்புறத்திலே தாழ்ந்து தொங்கும்படியாக யான் வேண்டாமலேயே வீணே சூட்டினான். நல்ல வளர்ச்சியினை நெடுக

நினைந்தவனாக நின்றான். பின் அவ்விடத்தே மேலும் நில்லாமற் சென்றும் விட்டான். அந்த அளவிற்கே. இந்த ஆரவாரம் மிகுந்த ஊரானது, புலால் நாற்றமுடைய பெரிய கழியினைத் துழாவியவாறே, பலவகையான நீர்ப் பறவைகளும் தங்கிக் கொண்டிருக்கும் முட்களை உடைய நெடுந்தோடுகளைக் கொண்ட தாழையினைச் சார்ந்து. புலிநகக் கொன்றையுடன் பொருந்தித் தொட்டதில் நிற்கும் வளைந்த அடிமரதினையம் பார்த்து என்னையும் பார்த்துக்கொண்டிருக்குமே! தோழி! இது மிகவும் நகைப்பைத் தருவதாகும்! என்று இரந்த பின்னிற் தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளைக் குறைநயப்பக் கூறினாள் என்க.

## 5.21.பாடல் : 19 (190) : தோழி செவிலித்தாயிடம் கூறியது :

**பாடியவர் : உலோச்சனார்**

**துறை : செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்றல்**

திரை உழந்து அசைஇய நிரைவளை ஆயமொடு
உப்பின் குப்பை ஏறி எல்பட,
வருதிமில் எண்ணும் துறைவனொடு ஊரே,
ஒருதன் கொடுமையின் அல் பாடும்மே,
அலமரல் மழைக் கண் அமர்ந்து நோக்காள்
அலையல், வாழி வேண்டு அன்னை, உயர் சிமைப்
பொதும்பில் புன்னைச் சினை சேர்பு இருந்த
வம்ப நாரை இரிய, ஒரு நாள்
பொங்குவரல் ஊதையொடு புணரி அலைப்பவும்
உழைக்கடல் வழங்கலும் உரியன், அதன்தலை
இருங்கழி புகாஅர் பொருந்தத் தாக்கி
வயச் சுறா எறிந்தென, வலவன் அழிப்ப
எழில் பயம் குன்றிய சிறை அழி தொழில்
நிரை மணிப் புரவி விரை நடை தவிர,
இழுமென் கானல் விழு மணல் அசைஇ
ஆய்ந்த பரியன் வந்து. இவண்
மான்ற மாலைச் சேர்ந்தன்றே இலனே.

வாழ்க அன்னையே! யான் சொல்வதையும் விரும்பிக் கேட்பாயாக! ஒருநாள் பொங்குதலுடன் வருகின்ற ஊதைக்காற்றோடு அலைகளும் வந்த கரையிலே மோதிக்கொண்டிருந்தன. உயர்ந்த உச்சியையுடைய கடற்கரைச் சோலையிலேயுள்ள புன்னை மரத்தின் கிளையிலே வந்து தங்கியிருந்த புதிய நாரை ஒன்று அஞ்சிப் போகுமாறு தலைவன் ஒருவன் கடலோரத்திலே தேரூர்ந்ந்த வருவதற்கும் உரியவனானான். அதன்மேலும், பெரிய கழியினை உடைய ஆற்றின் புகமிடத்தே, அவன் தேர்ப்பாகன் தேரின் செலவை நிறுத்தினான். எழுச்சியும் பயனும் குன்றியனவும் பூட்டு அவிழ்ந்த நிலையினை உடையனவுமாக நிரைத்த மணிமாலைகள் பூண்ட குதிரைகளும் விரைந்த செல்லும் தம் நடை ஓய்ந்தவயாத் தங்கின. இழும் எனும் ஒலியினை உடைய கானலிடத்தேத சிறந்த மணிலிலே

அத்தலைவன் வந்து தங்கினான். அவ்வளவேயன்றி, அவன் சிறந்த குதிரைகளை உடையவனாக இவ்விடத்தே வந்து மயங்கிய மாலை வேளையிலே தலைவியுடன் கூடிச் சேர்நதிருந்தவன் அல்லன்.

அன்று அவ்வாறு வந்திருந்த அவனை நின் மகள் சுழலும் தன் குளிர்ந்த கண்களால் விருப்பமுடன் பார்த்தவளுங்கூட அல்லள்! அங்ஙனமாகவும். அலைகளிலே நீந்தி விளையாடினமையால் தளர்ச்சியுற்ற நிறைந்த வளையினை உடைய மகளிர் கூட்டத்தினை உப்பு மேட்டிலே ஏறி நின்று இருட்படரும் வேளையிலே கரை நோக்கி வரும் படகுகளை எண்ணும துறைவனான அவனோடும் சார்த்தி இந்த ஊரானது ஒற்ற தன் கொடுமைக் குணத்தின் காரணமாக அலர் கூறித் தூற்றும். அதனை மெய்யெனக் கொண்டு. அவளை நீயும் வருத்தாதிருப்பாயாக! என்று தோழி செவிலித்தாய்க்கு எடுத்துக் கூறி அறத்தொடு நின்றனள் என்க.

## 5.22.பாடல் : 20(200) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : உலோச்சனார்**

**துறை : தலைமகன் குறிப்பறிந்த தோழி தலைமகற்கு குறை நயப்பக் கூறியது**

நிலாவின் இலங்கு மணல் மலி மறுகில்,.
புலால் அம்சேரிப் புல்வேய் குரம்பை,
ஊர் என உணராச் சிறுமையொடு, நீர் உடுத்து
இன்னா உறையுட்டு ஆயினும், இன்பம்
ஒரு நாள் உறைந்திசினோர்க்கும், வழிநாள்
தம்பதி மறக்கும் பண்பின் எம்பதி
வந்தனை சென்மோ, வளை மேய் பரப்ப!
பொம்மல் படுதிரை கம்மென உடைதரும்
மரன் ஓங்கு ஒரு சிறை பல பாராட்டி,
எல்லை எம்மொடு கழிப்பி, எல்உற
நல்தேர் பூட்டலும் உரியீர், அற்றன்று
சேந்தனிர் செல்குவிர் ஆயின், யாமும்
எம்வரை அளவையின் பெட்குவம்
நும் ஒப்பதுவோ? உரைத்திசின் எமக்கே

சங்கினங்கள் மேய்ந்து கொண்டிருக்கின்ற கடற் பரப்பினுக்கு உரியவனான தலைவனே! நிலாவினைப்போல வெண்மையுடன் விளங்கும் மணல் மிகுந்த தெருக்களை உடையத எம் ஊர். அத்தெருக்களிலே. புலால் வேயப்பெற்ற குடிசைகளை உடையதாயிருக்கும் புலால் நாற்றமுடைய சேரியே அது. ஓர் ஊர் என்று உணர்வதற்கும் ஆகாத சிறுமையுடனே, நீர் சூழப்பெற்றதாகத் துன்பமிகுந்த உறையுளை உடையதும் அது ஆனாலும் அதன் கண் பெறும் இன்பமோ, ஒரு நாள் தங்கியிருந்தவர்க்கும் பிற்றைநாள் தம்முடைய ஊரினையே மறக்கச் செய்யும் பண்பினை உடையதாகும். அதனால், எம் ஊருக்கு நீயும் வந்து போவாயாக, பொலிவுற்று ஒலிக்கும் அலைகள் விரைந்த உடைந்து

குறிப்புகள்

சிதறுகின்ற மரன் ஓங்கியிருக்கின்ற ஒரு பக்கத்திலே, பலப்பல வகையம் பாராட்டியவனாகப் பகல் வேளையெல்லாம் எம்முடனே கழிபாயாக. இரவு உறுங்காலத்தே, நின்னது நல்ல தேரினைப்பூட்டிச் செல்வதற்கும் உரியையாகுக. அங்ஙனமின்றி இரவிலும் எம் ஊரிலே தங்கிச் செல்வாயானால் யாமும் எம் வரையிலும் இயன்ற அளவுக்கு நின்னைப் பேணுவோம். நின்னுடைய மனத்திற்கு ஒப்பது எதுவோ? அதனை எமக்கும் உரைப்பாயாக என்று தலைமகள் குறிப்பறிந்த தோழி தலைமகற்குக் குறை நயப்பக் கூறினாள் என்க.

## 5.23.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. சிறைப்புறம் இருந்த தலைவனின் செவியில் விழும்படியாக தோழி தலைவியிடம் யாது கூறினாள்?
2. தோழி பாணனிடம் யாது கூறி வேண்டி நின்றாள்?
3. இரவுக்குறி விரும்பிய தலைவனை பகற்குறி வரும்படி தோழி கூற காரணம் யாது?

**பெருவினா :**

4. தோழி தலைவனிடம் எங்ஙனம் வரைவு வேண்டினாள் என்பதை உம்பாடப்பகுதி கொண்டு விளக்கி உரைக்க.
5. தலைவியின் கூற்று வழி புலனாகும் அவளது மனவுணர்வுகளை அகநானூறு எவ்வாறு காட்சிப்படுத்துகின்றது?
6. இயற்கை அழகினை அகநானூற்று நெய்தல் திணைப்பாடல்கள் வழியாக விரித்துரைக்கவும்.

## 5.24.தொகுத்துக் காண்போம். :

அகநானூற்றில் இடம்பெற்றுள்ள நெய்தல் திணைப்பாடல்களில் கடலும் கடல் சார்ந்த நிலத்தில் வாழும் மக்களின் வாழ்வியலையும், அவர்கள் தினந்தோறும் கடலுக்குள் சென்று மீன்பிடித் தொழிலை பல்வேறு சிரமங்களிடையே மேற்கொள்கின்றனர் என்பதனையும், ஆடவர்கள் மீன் பிடிக்க செல்லும் தருவாயில் அவர்களுக்காக இரங்கி காத்திருக்கும் இல்லத் தலைவிகளின் துயர நிலைகளையும் மீன்களின் வைகளையும் பண்பாட்டு கூறுகளையும் அறிந்துக் கொண்டோம்.

## 5.25.மேலும் பயில்வதற்கான நூல்கள் :


- அகநானூறு மூலமும் உரையும், ந.மு.வேங்கடசாமி நாட்டார், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- அகநானூறு மூலமும் உரையும், புலியூர்கேசின் உரை, பாரி நிலையம், சென்னை-1.
- அகநானூறு மூலமும் உரையும், முனைவர் இரா. ஜெயபால், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98

- அகநானூறு மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.

குறிப்புகள்

# கூறு :6 - அகநானூறு - நெய்தல் திணைப் பாடல்கள்

## 6.1.முன்னுரை :

எட்டுத்தொகை நூல்களுள் அகநூலாக அமையும் அகநானூற்றில் அடுத்த நிலையில் உள்ள 210 முதல் 400 வரையிலான 20 பாடல்கள் மட்டும் இப்பாடப்பகுதியல் இடம்பெற்றுள்ளது.

## 6.2.குறிக்கோள்கள் :

கடல் சார்ந்து வாழும் பரதவ மக்களின் (மீனவர்களின்) வாழ்வியலை உணர்த்தும் அகநூலாக விளங்குகின்றது. மணலும் மணல் சார்ந்த நிலப்பகுதிகளை உள்ளடக்கிய தமிழ் சமூகத்தினர் வாழ்வியலையும் காதலையும், பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொள்ளுவதையே குறிக்கோளாகக் கொண்டு இந்தப் பகுதியில் அமையபெற்றுள்ளது.

## 6.3.பாடல் : 21 (210) : தோழி தலைவியிடம் சிறைப்புறத்தே இருந்த தலைவன் கேட்கும்படி கூறியது :

**பாடியவர் : உலோச்சனார்**

**துறை : தோழி தலைவியிடம் சிறைப்புறத்தே இருந்த தலைவன் கேட்கும்படி கூறியது**

குறி இறைக் குரம்பைக் ˙கொலை வெம் பரதவர்
எறி உளி பொருத ஏமுறு பெருமீன்
புண் உமிழ் குருதி புலவுக் கடல் மறுப்பட,
விசும்பு அணி வில்லின் போகி, பசும் பிசிர்த்
திரை பயில் அழுவம் உழக்கி உரன் அழிந்து
நிரை திமில் மருங்கில் படர்தரும் துறைவன்,
பானாள் இரவில் நம் பணைத்தோள் உள்ளி,
தான் இவண் வந்த காலை நம் ஊர்க்
கானலம் பெருந்தறைக் கவின் பாராட்டி,
ஆனாது புகழ்ந்திசினோனே இனித் தன்
சாயல் மார்பின் பாயல் மாற்றிக்
கைதை அம் படுசினைக் கடும் தேர் விலங்கச்
செலவு அரிது என்னும் என்பது
பல கேட்டனமால் தோழி, நாமே.

கொலைத் தொழிலினை உடையவரான கொடிய பரதவர்கள் குறுகிய இறைப்பினையுடைய குடிசையிலே வாழ்பவர்கள். அவர்களால் எறியப்பட்ட உளியினால் தாக்கப்பட்ட களிப்புப் பொருந்திய பெரிய மன், வானத்தை அழகு செய்யும் வானவில்லைப் பபோல உயரே தாவித் துள்ளும். அதன் புண்ணினின்றும˙ ஒழுகும் குதியினால் புலால் நாற்றமுடைய கடலின் நிறமும் செந்நிறமாக மாறுபடும். திவலைகளை உடைய அலைகள் செறிந்த கடற்பரப்பை எல்லாம் அம்மீன் கலக்கிவிட்டுப் பின் தன்னுடைய வலியனைத்தும் அழிந்து போக, வரிசையாக இருக்கும் படகுகளின்

பக்கதிலே வந்து சேரும். அத்தகைய துறையினை உடையவன் நம் தலைவன். நள்ளிரவிலே. நம்முடைய பணைத்த தோள்களைகத் தழுவுதலை நினைத்து இவ்விடத்தே வந்த அந்நாளிலே, அவன் நம் ஊர்க் கானற் சோலையினை உடைய பெருந்துயையின் அழகினைப் பாராட்டி, அளவில்லாமல் புகழ்ந்தனன். இப்பொழுதோ, தன்னுடைய வனப்புடைய மார்பிலே யாம் கண்துயிலும் அந்த உறவினை அவன் மாற்றிவிட்டான். தாழைகள் தாழ்ந்தகிடக்க அதன் கிளைகள் தேரின் செலவைத் தடுக்க நாம் அவ்விடத்தே செல்வதும் அரிது என்றும் சொல்லுகிறான் என்பார்கள் அதனை நாமும் பலமுறை கேட்டுவிட்டோம். என்று தோழி தலைமகன் சிறைப்புறமாக இருக்கத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொன்னாள் என்க.

## 6.4.பாடல் : 22 (220) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : மதுரை மருதன் இளநாகனார்.**

**துறை : இரவுக்குறி வந்து நீங்கி தலைமகனுக்கு தோழி சொல்லியது**

ஊருஞ்சேரியும் உடன் இயைந்து அல் எழத்,
தேரொடு மறுகியும், பணி மொழி பயிற்றியும்,
கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க்,
கடாஅ யானைக் குழூஉச் சமம் ததைய
மன் மருங்கு அறுத்த முழுவாள் நெடியோன்
முன் முயன்று அரிதினின் முடித்த வேள்வி,
கயிறு அரை யாத்த காண்தகு வனப்பின்,
அருங்கடி நெடுந்தூண் போல யாவரும்
காணலாகா மாண் எழில் ஆகம்
உள்ளுதொறும் பனிக்கும் நெஞ்சினை, நீயே
நெடும் புற நிலையினை வருந்தினை ஆயின்,
முழங்கு கடல் ஓதம் காலைக் கொட்கும்,
பழம் பல் நெல்லின் ஊணூர் ஆங்கண்,
நோலா இரும்புள் போல நெஞ்சு அமர்ந்து,
காதல் மாறாக் காமர் புணர்ச்சியின்
இருங்கழி முகந்த செங்கோல் அவ்வலை
முடங்கு புற இறவொடு இன மீன் செறிக்கும்
நெடுங்கதிர்க் கழனித் தண் சாய்க்கானத்து,
யாணர்த் தண் பணை உறும் எனக் கானல்
ஆயம் ஆய்ந்த சாய் இறைப் பணைத்தோள்
நல் எழில் சிதையா ஏமம்
சொல் இனித் தெய்ய யாம் தெளியுமாறே.

ஊரும் சேரியும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு. பழிச்சொற்கள் மேலெழுந்து நிற்குமாறு தேரோடுவந்து சுற்றியும், பணிவான சொற்கள் பலவற்றைக் கூறியும் வருகின்றனை தலைவனே! என்றும் அவியாத வேள்வித் தீயினை உடையத அழக விளங்கும ்செல்லூர். அதன்கண் மதம்

பொருந்திய யானையின் கூட்டம் எல்லாம் போர் முனையிலே அழியுமாறு, மன்னர்களின் பரம்பரைகளையே வேருடன் அறுத்த பரசாகிய வாளனை உடைய பரசுராமன் முன் காலத்திலே முயற்சிடன் அரிதான முயையிலே செய்து முடித்த வேள்வியினிடத்தே. கயிற்றனை அரையிலே கட்டியிருந்த காணத் தகந்த வனப்பினை உடைய அதிய காவலைக் கொண்ட உயரமான வேள்வித தூணைப் போல யாவரும் காண்பதற்கும் இயலாத மாண்புற்ற எழிலினை உடைய எம் தலைவியின் மார்பினை நினையுந்தோறும் நடுங்கும் உள்ளம் உடையவனாகிய நீயும் நினது நெடிதான புறநிலையினைக் கருதி வருநதினையானால், முழக்கமிடும் கடலின் ஓதமானது, காலை வேளையிலேயும் அலைந்து கொண்டிருக்கும் மிகுதியான பழைய நெல்லையுடைய ஊணூர் என்னும் அவ்விடத்திலே, ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிந்த இருத்தலைப் பெறாது கூடியே இருக்கும் பெரிய பறவையாகிய மகன்றிலைப் போல நெஞ்சம் பொருந்தி என்றும் காதல் மாறாத விருப்பமுடைய புணர்ச்சியினாலே பெரிய கழியிலே இருந்தும் முகந்த நேரிய கோல்களை உடைய அழகிய வலையானது. வளைந்த புறத்தினை உடைய இறாமீனுடன் ஏனைய மீனினங்களையும் குவித்துக் கொண்டிருக்கும். நீண்ட கதிர்களை உடைய வயல்கள் நிறைந்த தண்ணிய சாய்க்கானம் என்னும் இடத்திலயுள்ள அழகிய குளிர்ந்த மூங்கிலை ஒப்பாகும் என்று கடற்கோலையிலே தோழிமார்கள் ஆராய்ந்து பாராட்டிய வளைந்த முன் கையினை உடைய இவளது பணைத்த தோள்களின் நல்ல அழகானது சிதையாதிருப்பதற்குரிய அரணாகிய ஒரு செய்தியை, யாம் தெளிவு கொள்ளுமாறு இனிச் சொல்வாயாக. என்று இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனை எதிர்ப்பட்டுத் தோழி சொன்னாள் என்க.

## 6.5.பாடல் : 23 (230) : தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது :

**பாடியவர் : மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

**துறை : தலைமகளை கண்டு நீங்கிய தலைவன் தன் நெஞ்சிற்கு சொல்லியது**

உறுகழி மருங்கின் ஓதமொடு மலர்ந்த
சிறு கரு நெய்தல் கண் போல் மா மலர்ப்
பெருந்தண் மாத்தழை இருந்த அல்குல்,
ஐய அரும்பிய சுணங்கின், வை எயிற்று,
மை ஈர் ஓதி வாணுதல் குறுமகள்!
விளையாட்டு ஆயமொடு வெண்மணல் உதிர்த்த
புன்னை நுண் தாது பொன்னின் நொண்டு
மனை புறந்தருதி ஆயின் எனையதூஉம்
இம்மனைக் கிழமை எம்மொடு புணரின்,
தீதும் உண்டோ மாதராய்? எனக்
கடும் பரி நல் மான் கொடிஞ்சி நெடுந்தேர்
கை வல் பாகன் பையென இயக்க,

குறிப்புகள்

யாம் தற்குறுகினமாக ஏந்து எழில்
அரிவேய் உண்கண் பனிவரல் ஒடுக்கிச்
சிறிய இறைஞ்சினள் தலையே,
பெரிய எவ்வம் யாம் இவண் உறவே.

பெரிய உப்பங்கழியின் பக்கங்களிலே நீர்ப்பசையுடன் மலர்ந்துள்ள சிறிய நெய்தலின் கரிய மலர்கள் பெரிய தண்ணிய சிறந்தத தழையுடையிலே பொருந்தியிருக்க அதனை அணிந்திருக்கும் அல்குல் தடத்தை உடையவளே! மென்மையாக அரும்பிய சுணங்கினையும் கூர்மையான பற்களையும் கருமையான நீண்ட கூந்தலையும் ஒளியுடைய நெற்றியையும் கொண்டவளே! இளம் பெண்ணே! மாதரசியே! நின்னுடைய விளையாட:டுத்தோழியர்களுடனே புன்னை மரமானது வெண்மணலிலே உதிர்த்துள்ள நுண்மையான பூந்தாதினைப் பொன்னாகப் பாவித்துக் கொண்டு முகந்து வழங்கி நீ இலலறம் நடததுவாயானால், அந்தத இல்லறக் கிழமை எம்மடனும் கூடி எவ்வளவம் சேர்ந்த நடப்பதாயின் அதனால் எத்தகைய தீதும் நினக்கு உண்டாகுமோ? என்றேன்.

கடுமையாகச் செல்லும் நல்ல குதிரைகள் பூட்டிய நணிட தேர் மொட்டுக்களை உடைய நெடுந்தேரினைச் செலுத்துவதிலே வல்லவனான பாகன் மெல்லென நடத்திச் செல்ல யான் அவ்வாறு சொல்லிக்கொண்டே அவளை நெருங்கினேன். அப்போது, யான் இவ்விடத்தே காமநோயினாலே பெரிய வருத்தத்தை அடையுமாறு, அழகு மிகுந்த செவ்வரிகள் படர்ந்த மையுண்ட தன் கண்களிலே துளர்த்த கண்ணீர் வெளிப்பட்டு வருதலையும் மறைத்துத் தன் தலையினைச் சிறளிதோ கவிழ்த்துக் கொண்டனனள் அவள் என்று தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொன்னான் என்க.

## 6.6.பாடல் : 24 (240) : தோழி தலைவனிடம் கூறியது : :

**பாடியவர் : எழூஉப்பன்றி நாகன் குமரனார்.**

**துறை : இரவுக்குறி வந்த தலைவனை தோழி பகற்குறி நேர்ந்தது**

செவ்வீ ஞாழல் கருங்கோட்டு இருஞ்சினைத்
தனிப் பார்ப்பு உள்ளிய தண் பறை நாரை
மணிப்பூ நெய்தல் மாக் கழி நிவப்ப,
இனிப் புல்பின்றே கானலும், நளி கடல்
திரைச் சுரம் உழந்த திண் திமில் விளக்கில்
பன்மீன் கூட்டம் என் ஐயர் காட்டிய
எந்தையும் செல்லுமார் இரவேல, அந்தில்
அணங்குடைப் பனித் துறை கைதொழுது ஏத்தி,
யாயும் ஆயமோடு அயரும், நீயும்
தேம் பாய் ஓதி திருநுதல் நீவிக்,
கோங்கு முகைத்தன்ன குவி முலை ஆகத்து
இன்துயில் அமர்ந்தனை ஆயின். வண்டு பட
விரிந்த செருந்தி வெண்மணல் முடுக்கர்ப்

Self -Instructional Material

பூ வேய் புன்னை அம் தண் பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே.

சிவந்த பூவினை உடைய கொன்றையின் கருமையான கிளையிலேயுள்ள பெரிய கொம்பிலே, தனித்திருக்கும் தன்னுடைய குஞ்சினை நனைத்துக்கொண்ட தணிவாகப் பறத்தலையுடைய நாரையானது. நீலமணிபோலும் நெய்தல் மலர்களை உடைய பெரிய கழியினின்றும் மேலே எழுந்த பறந்து போகக் கடற்கரைச் சோலையும் இப்போது தனிமை உடையதாயிற்று. செறிந்த கடலின் அலைகளாகிய சுரத்த்திலே சிக்கி வருந்திய திண்ணிய படகின் விளக்கொளியிலே பிடித்து பலவாகிய மீன் கூட்டங்களை என் அண்ணமன்மார் தமக்குக் காட்டுவதற்காக என் தந்தையம் இரவிலே கடற்கரைக்குச் செல்வாராயினர். என் தாயும் ஆயமளிருடன் தெய்வத்தை உடைய குளிர்ந்த நீர்த்துறையிலே அத்தெய்வத்தைக் கைகுவித்து வணங்கிப் புறெ்றி அதற்கச்சிறப்பும செய்தவளாயிருப்பாள். நீயும் தேனொழுகும் கூந்தலையுடைய தலைவினினத அழகிய நெற்றியைத் தடவி விட:க்கோங்கு அரும்பினாற் பொன்று குவிந்திருக்கும் முலைகளை உடைய மார்பகத்தே. இனிய தயில் கொள்ளுதலை விரும்பினாயானால், அவளை மணந்து கூடிச் செல்லுதற்கு வண்டு மொய்க்க விரிந்த செருந்திப் பூக்களை உடைய வெண்மணலிடதது முடுக்கரிடத்தே பூக்கள் நிறைந்திருக்கும் புன்னை மரங்கைளையுடைய அழகியகுளிர்ந்த பொழிலினிடத்தே இனிய பகற்போதிலேயே வருவாயாக, என்று இரவுக் குறி வந்த தலைமகற்குத் தோழி பகற்குறி நேர்ந்தனள் என்க.

## 6.7.பாடல் : 25 (250) : தோழி தலைவியிடம் கூறியது :

**பாடியவர் : செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங்கொற்ற**னார்.

துறை : தலைமகற்கு குறை நேர்ந்த தோழி தலைமகற்கு குறை நயப்ப கூறியது

எவன் கொல் வாழி தோழி மயங்கு பிசிர்
மல்கு திரை உழந்த ஒல்கு நிலைப் புன்னை
வண்டு இமிர் இணர நுண் தாது வரிப்ப
மணம் கமழ் இளமணல் எக்கர்க் காண்வரக்
கணம் கொள் ஆயமொடு புணர்ந்து விளையாடக்
கொடுஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கித்
தாரன் கண்ணியன் சேர வந்து ஒருவன்
வரி மனை புகழ்ந்த கிளவியன் யாவதும்
மறுமொழி பெறாஅன் பெயர்நதனன் அதற்கொண்டு
அரும்படர் எவ்வமொடு பெருந்தோள் சாஅய்
அவ்வலைப் பரதவர் கானல் அம் சிறுகுடி
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வையின் கலங்கி
இறை வளை நெகிழ்ந்த நம்மொடு
துறையும் துஞ்சாது கங்குலானே.

தோழி! நீ வாழ்க! மிகுந்த அலைகளினின்றும் தெறிக்கும் நெருங்கிய நீர்த்துளிகளால் வருந்திய உயர்ந்த நிலையினை உடைய புன்னையின் வண்டினம் மொய்க்கின்ற பூங்கொத்துக் களிலீருந்து நுண்மையான பொடிகள் உதிர்ந்து அழகு செய்ய அதன் மணம் கமழ்ந்து கொண்டிருக்கின்ற மென்மையான மணல்மேட்டிலே சூட்டமான ஆயத்தாரோடும் கலந்து யாம் அழகுபொருந்த ஒருநாள் விளையாடியிருந்தோம் அவ்வேளையிலே. மொட்டியினை உடைய நீண்ட தேரினை ஏவலிளையரோடு நீக்கி நிறுத்திவிட்டு மார்பிலே தரும் தலையிலே கண்ணியும் உடையனாக ஒருவன் எம் அருகே வண்டல் மனையைப் புகழ்ந்தும் பேசனான். எவ்விதமான மறுமொழியும் எம்மிடமிருந்த பெறாதவனாகப் போயும் விட்டமான் . அது முதற்கொண்டு அதிதாகப் படர்கின்ற துன்பத்தோடு பெரிதான தோள்களும் மெலிய அழகிய வலைகளை உடையவரான பரதவர்களது கானற்சோலையிலே உள்ள அழகிய சிற்றூரிலே இருக்கும் கொடிய வாயினரான பெண்களின் பழச்சொற்களாலும் கலங்கி முன்கை வளைகளும் கழன்றனம் ஆயினோம் யாம். நமமுடனே இரவுப்பொழுதிலே, இக்டற்றுறையும்உறங்காதிருக்கின்றதே! அதுதான் என்ன காரணமோ? என்று தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி, தலைமகட்குக் குறைநயப்பக் கூறினாள் என்க.



### 6.8.பாடல் : 26 (260) : தோழியும் தலைவியும் சிறைப்புறத்தே உள்ள தலைவன் கேட்கும்படியாக கூறியது :

**பாடியவர் : மோசி கரையனார்**

**துறை : தலைவன் சிறைப்புறத்தானாக தலைவி கூறியது**

மண்டிலம் மழுக மலை நிறம் கிளர,
வண்டு இனம் மலர் பாய்ந்து ஊத, மீமிசைக்
கண்டல் கானல் குருகினம் ஒலிப்பக் ,
கரை ஆடு அலவன் அளைவயின் செறியத்,
திரை பாடு அவியத் திமில் தொழில் மறப்பச்,
செக்கர் தோன்றத் துணை புணர் அன்றில்
எக்கர்ப் பெண்ணை அக மடல் சேரக்,
கழி மலர் கமழ் முகம் கரப்பப் பொழில் மனைப்
புன்னை நறு வீ பொன் நிறம் கொளாஆ,
எல்லை பைப்பய கழிப்பி, எல்உற
யாங்கு ஆகுவள் கொல்தானே? நீங்காது
முது மரத்து உறையும் முரவுவாய் முது புள்
கதுமெனக் குழறும் கழுது வழங்கு அரை நாள்
நெஞ்சு நெகிழ் பருவரல் செய்த,
அன்பிலாளன் அறிவு நயந்தேனே.

மலைகள் நிறம் பெற்றன. வண்டினம் மலர்களிலே பாய்ந்து ஊதிக்கொண்டிருக்கின்றன. சோலையிலுள்ள தாழைகளின் மேலேயிருந்து நாரையின்ங்க்ள ஒலிக்கின்றன. கரையோரத்தில் வியைாடும் நண்டு

குறிப்புகள்

வளையினுள்ளே செல்கின்றது. கடல் அலைகள் தமமுடைய முழக்கத்தைக் கைவிட்டன. மீன்பிடி படகுகள் தம் தொழிலை மறந்து கரையிலேயே கிடந்தன. துணையைப் பிரியாது சேர்ந்திருக்கின்ற அன்றில் பறவையானது, மணல்மேட்டிலே உள்ள பனையினது உள்மடலிலே சென்று அடைந்தது. கழியிலேயுள்ள பூக்கள் மணங்கமழும் இதழ்கள் குவியப் பெற்றனவாக விளங்கின. பொழிலிலேயுள்ள வீட்டுப் புன்னையின் நறுமலர்கள், பொன்னிறத்தைக் கொண்டனவாகத் தம் இதழ்கள் விரிந்தன. பகல் நேரத்தைப் பையப் பையக் கழியச் செய்து, ஞாயிற்று மண்டிலமும் தன் ஒளி மழுங்கி மேற்றிசையிலே சென்று சேர்ந்தது. இனி, இரவும் வந்தவிடத்து இவள் எந்த நிலையினை அடைவாளோ?

முதுமரப் பொந்தினை விட்டு நீங்காது இருந்து வருகின்ற முழங்கும் வாயினை உடைய முமையுற்ற பேராந்தையானது கதுமெனத் தன் குரலெடுத்துக் குழறும். பேய்கள் நடமாடுமும் அத்தகைய நள்ளிரவு வேளையிலே நெஞ்சத்தை நெகிழ்விக்கின்ற துன்பத்தை நமக்குச் செய்த அந்த அன்பில்லாதவனுடைய அறிவுடைமையை உண்மையென எண்ணி, யானும் அன்று விதும்பினேனே! என்று இரவுக்ககுறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொன்னாள் என்க.

## 6.9.பாடல் : 27 (270) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : சாகலாசனார்**

**துறை : பகற்குறிக்கன் வந்து நீங்கிய தலைமகனை தோழி வரைவு கடாதல்**

இருங்கழி மலர்ந்த வள் இதழ் நீலம்,
புலாஅல் மறுகின் சிறுகுடிப் பாக்கத்து
இன மீன் வேட்டுவர், ஞாழரெலாடு மிலையும்
மெல்லம் புலம்ப! நெகிழ்ந்தன தோளே,
சேயிறாத் துழந்த நுரை பிதிர்ப்படு திரை
பராஅரைப் புன்னை வாங்கு சினைத் தோயும்
கானல் பெருந்துறை நோக்கி இவளே,
கொய் சுவல் புரவிக் கைவண் கோமான்
நல் தேர்க் குட்டுவன் கழுமலத்து அன்ன
அம் மா மேனி தொல் நலம் தொலைய,
துஞ்சாக் கண்ணள் அலமரும், நீயே
கடவுள் மரத்த முள் மிடை குடம்பைச்
சேவலொடு புணராச் சிறு கரும் பேடை
இன்னாது உயங்கும் கங்குலும்
நும் ஊர் உள்ளுவை, நோகோ யானே.

சிறிய குடியிருப்புக்களை உடையது பாக்கம் . அங்குப் புலால் நாற்றமும் நிறைந்திருக்கும். அங்குள்ள மீனினத்தை வேட்டையாடுவோரான பரதவர்கள் பெரிய உப்பங்கழியிலே மலர்ந்திருக்கும் வளம் வாய்ந்த

இதழ்களை உடைய நீலப்பூக்களைப் புலிநகக் கொன்றையின் பூக்ளுடனே கலந்து சூட்டிக் கொண்டிருப்பார்கள். அத்தகைய னெ்னிலத்திற்கு உரியவனான தலைவன! இவளுடைய தோள்களோ மெலிந்தன! சிவந்த இறாமீன் கலக்கிய பிதிர்பட்டு மோதும் அலைகளின் நுரைகள் பெரிய அடிமரத்தினை உடைய புன்னையின் வளைந்த கிளைகளிலே தங்கியிருக்கும் கானற்சோலையயை அடுத்துள்ள அழகிய பெரிய துறையினையே இவள் நோக்கவாளாயினள். கொய்யப் பெற்ற பிடரி மயிரினை உடைய குதிரைகளை உடையவனும் கை வண்மை உடையவனம் பெரிய தலைவனுமாகிய நல்ல தேனினை உடைய குட்டுவனது கழுமலத்தைப் போன்ற தன் மேனியின் சிறந்த நலம் எல்லாம் அழிந்து போகுமாறு, உறக்கமற்ற கண்ணிளாகவும் கலங்கியிருப்பாள். நீயோ வென்றால், கடவுள் ததைத்தினை உடைய முள்ளால் மிடையப் பெற்றிருக்கின்ற கூட்டிலே தன் சேவலோடுங் கூடற் வாயாத சிறிய கரிய அன்றிற் பேடையானது. துன்பமுற்றுக் கிடந்து வருந்துகின்ற இரவுவேளையும் நின்னுடைய ஊருக்குப் போய்விடவே எண்ணுகின்றனை யான்தான் இங்கே நோக்கின்றேன்! என்று பகற்குறிக்கண் வந்து நிற்கும் தலைமகனைத் தோழி வரைவு கடாயினாள் என்க.

## 6.10.பாடல் : 28(280) : தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது :

**பாடியவர் : அம்மூவனார்.**

**துறை : தலைமகளைக் கண்டு சென்ற தலைமகன் தன் நெஞ்சிற்கு சொல்லியது**

பொன் அடர்ந்தன்ன ஒள் இணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம் பெறு கோதையள்,
திணி மணல் அடைகரை அலவன் ஆட்டி
அசையினள் இருந்த ஆய் தொடிக் குறுமகள்,
நலஞ்சால் விழுப் பொருள் கலம் நிறை கொடுப்பினும்,
பெறல் அருங்கரையள் ஆயின், அறம் தெரிந்து,
நாம் உறை தேஎம் மரூஉப் பெயர்ந்து, அவனொடு
இர நீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழுதும்
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்,
படுத்தனம் பணிந்தனம், அடுத்தனம் இருப்பின்
தருகுவன் கொல்லோ தானே, விரி திரைக்
கண் திரள் முத்தம் கொண்டு. ஞாங்கர்த்
தேன் இமிர் அகன் கரைப் பகுக்கும்
கானலம் பெருந்துறைப் பரதவன் எமக்கே?

நெஞ்சமே! பொன் அடர்ந்திருப்பது போன்ற ஒளியுடைய கொத்துக்களாக விளங்கம் செருந்தியின் வலவான பூக்களைச் சூடியுள்ள, அழகு பொருந்திய கூந்தலை உயைவள். மணல் செறிந்துள்ள கடற்கரையிலேயுள்ள நண்டினைஓட்டி விளையாடி அதனால் களைத்தவளாக இளைப்பாறி இருப்பவள் ஆய்ந்த தொடியினை அணிந்தள்ள இளையவள்.

நலம் மிகுந்த சிறந்த பொருள்களை எலலாம் மரக்கலம் நிறையக் கொணர்ந்து முலைவிலையாக நாம் கொடுத்தாலும் கூட நம்மால் அடையப் பெறுவதற்கு அவள் அரியவளே! விரிந்த கடலின் கண்ணே இருந்து திரண்ட முத்துக்களை எடுத்துக்கொண்டு வந்து தேனுண்ணும் வண்டினம் ஒலித்துக் கொண்டிருக்கும் அகன்ற கரையினிடத்தே அவற்றைப் பகுத்துக் கொண்டிருக்கும் அழகிய கானற் சோலைகளையுடைய பெருந்துறைக்கு உரியவனாகிய தலைவன் அவளுடைய தந்தை. நாம் வாழ்ந்திருக்கும் நாட்டினைவிட்டு நீங்கி இவ்விடத்தே வந்து அவளொடும் கூடி பெரிய கடற்கரையின் இடத்தேயுள்ள உப்பு பாத்திகளிலே அவனுக்காகப் பணிசெய்து வருந்தியும் பெருங்கடலினிடத்தே ஆழத்தில் புணையோடு புகுந்தும் அவன் வயமாகியும் அவனைப் பணிந்தனமாகியும் அவனைச் சார்ந்தனமாகியும் இருப்போமானால் ஒருவேளை அவன் அறத்தின் கூறுபாடுகளைத் தெரிந்தவனாக அவனாகவே அவளை எமக்கு மணம் செய்த தருவானோ? என்று தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொன்னான் என்க.

## 6.11.பாடல் : 29 (290) : தலைவி தோழியிடம் சிறைப்புறத்தே உள்ள தலைவன் கேட்கும்படியாக கூறியது :

**பாடியவர் : நக்கீரர்**

**துறை : இரவுக்குறியில் தலைமகன் சிறைப்புறத்தானாக தோழிக்கு தலைவி கூறியது**

குடுமிக் கொக்கின் பைங்கால் பேடை,
இருஞ்சேற்று அள்ளல் நாள் புலம் போகிய
கொழு மீன் வல்சிப் புன்தலைச் சிறாஅர்
நுண் ஞாண் அவ் வலைச் சேவல் பட்டென,
அல்குறு பொழுதின் மெல்கு இரை மிசையாது,
பைதல் பிள்ளை தழீஇ, ஒய்யென
அம் கண் பெண்ணை அன்புற நரலும்
சிறுபல் தொல் குடிப் பெருநீர்ச் சேர்ப்பன்.
கழி சேர் புன்னை அழி பூங்கானல்
தணவா நெஞ்சமொடு தமியன் வந்து, நம்
மணவா முன்னும் எவனோ தோழி,
வெண்கோட்டு யானை விறல் போர்க் குட்டுவன்
தென் திரைப் பரப்பின் தொண்டி முன்துறைச்
சுரும்பு உண மலர்ந்த பெருந்தண் நெய்தல்
மணி ஏர் மாண் நலம் ஒரீஇப்,
பொன் நேர் வண்ணம் கொண்ட என் கண்ணே?

தோழி! கருமையான சேற்றுக் குழமபினைக் கொண்ட வயலினிடத்தே, நாள் காலையிலே சென்ற கொழுமீன் உணவைக் கொண்டவராகிய புற்கென்ற தலைமயிரை உடைய சிறுவர்களின் நுண்ணிய கறிற்றினாலாகிய அழகிய வலையிலே தன் சேவல் அகப்பட்டதாகத்

தலைரயிற் கொண்டையினை உடைய அக் கொக்கின் பசுமையான கால்களை உடைய பேடையானது தனித்துத் தான் மிகவும் வருந்தும். அப்படி அது வருந்தும் பொழுதிலே மெல்லும் இரையினையும் தின்னாது தன்புறும் தன் குஞ்சினைத் தழுவியவாறே, ஒய் என்று அழகிய இடத்தை உடைய பனை மரத்தின்கண் சென்று அமர்ந்து தன் அன்பு தோன்ற ஒலித்துக்கொண்டே இருக்கும் அத்தகைய சிறிய பலவாகிய பழங்குயினர்களைக் கொண்ட கடற்கரை நாட்டின் தலைவன் நம் காதலன் அவன்.

கழியினைச் சேர்ந்துள்ள புன்னையின் உதிர்ந்த பூக்களை உடைய கானற் சோலையிலே, அன்பு நீங்காத நெஞ்சத்துடனே. தனிமையாளனாக வந்து நம்மைக் கூடி இன்றுத்தாதற்கு முன்பாகவும் என் கண்கள். வெண்மையான கொம்புகளை உடைய யானையினைப் போன் போர் வெற்றினை உடைய குட்டுவனது. தெளிந்த அலைகள் பொருந்திய பரப்பினிடத்தே உள்ள தொண்டியின் முன் துறையிலே வண்டு உண்ணலால் மலர்ந்த பெரிய குளிர்ச்சியான நெய்தல் பூவின் நீலமணி போன்ற அழகு மாட்சிமையினை உடைய நல்லதினைக் கைவிட்டுப் பொன்போலும் நிறத்தினைக் கொண்டனவே! இ∴து என்னவோ? என்று இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொன்னாள் என்க.

## 6.12.பாடல் : 30 (300) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : உலோச்சனார்**

**துறை : பகற்குறி வந்து நீங்கும் தலைவனுக்கு தோழி சொல்லியது**

நாள் வலைமுகந்த கோள் வல் பரவர்
நுணங்கு மணல் ஆங்கண் உணங்கப் பெய்ம்மார்,
பறி கொள் கொள்ளையர், மறுக உக்க
மீன் ஆர் குருகின் கானலம் பெருந்துறை,
எல்லை தண் பொழில் சென்றெனச், செலீஇயர்,
தேர் பூட்டு அயர ஏஎய் வார்கொல்
செறி தொடி திருத்திப் பாறு மயிர் நீவிச்
“செல் இனி மடந்தை, நின் தோழியொடு மனை” எனச்
சொல்லிய அளவை, தான் பெரிது கலுழ்ந்து
தீங்கு ஆயினள் இவள் ஆயின் தாங்காது
நொதுமலர் போலப் பிரியின் கதுமெனப்
பிறிது ஒன்று ஆகலும் அஞ்சுவல், அதனால்
சேணின் வருநர் போலப் பேணாய்
இருங்கலி யாணர் எம் சிறுகுடித் தோன்றின்,
வல்லெதிர் கொண்டு மெல்லிதின் வினைஇத்
“துறையும் மான்றன்று பொழுதே, சுறவும்
ஓதம் மல்கலின் மாறு ஆயினவே,

குறிப்புகள்

எல்லின்று தோன்றல், செல்லாதீம்” என
எமர் குறை கூறத் தங்கி ஏமுற
இளையரும் புரவியும் இன்புற, நீயும்
இல் உறை நல் விருந்து அயர்தல்
ஒல்லுதும் பெரும, நீ நல்குதல் பெறினே.

நாள் காலையிலேயே வலையால் மீனை முகந்துகொணர்ந்து கொள்ளும் தொழிலிலே வல்லவரான பரதவர்கள். பின் பறியினாலே கொண்ட கொள்ளையினையும் உடையவராகி, நுண்ணிய மணல் செறிந்துள்ள இடத்திலே அந்த மீன்கொள்ளை காயுமாறு அவற்றைப் பெய்திருப்பார்கள். அவர்கள் வருந்துமாறு மீன்கைத் தின்னும் பறவையினம் வந்து வீழும். அத்தகைய கானற் சோலையினை உடையது கடற்றுரை. அதன் கண் குறிர்சிசியான சோலையிடத்திலே பகற்பொழுதும் கழிந்ததாக, நின் ஊருக்குச் செல்வாயாகத் தேரினைப் பூட்டுமாறு ஏவியவனாயினை! நின் தலைவியின் மிகுந்த கோற்றொழிலினை உடைய வளைகளைத் திருதியவனாகவும் சிதறிக் கலைந்த கூந்தலைத் தடவி ஒழுங்கு செய்தவனாகவும் மடந்தையே! நின் தோழியோடும் இனி நின் மனைக்குச் செல்வாயாக! என்றனை. அப்படி நீ சொல்லிய அளவானே. இவள் பெரிதும் கலங்கியவளாகத் தீங்குற்றனள் என்றால், அதனைத் தாங்கி அவளைப் பேணி நிற்காது, ஏதிலார் போல நீயும் பிரிந்து செல்வாயாயானால் அதனால் திடுமெனப் பிரிதொன்று நிகழ்வதனைக் கருதியும் யான் அச்சம் கொள்வேன். அதனால், நீயும் என் பெச்சைக் கேட்டு அருளுதலாகிய எண்ணம் கொண்டனையானால், தொலைவினின்றும் வரும் ஏதிலார் போல, எம்மோடு உறவில்லாதவனாகக் காட்டிக் கொண்டு, எதனையும் கருதாயாக. மிக்க ஆரவாரத்தை உடைய அழகிய எம்மடைய சிற்றூரிடத்தே நீயாக வருவது போல வந்து சேர்வாயாக வந்தால், எங்கள் சுற்றத்தார் விரைவிலே நின்னை எதிர்காள்வர். நின் வருகை பற்றியும் மெல்லென வினவுவர். பொழுதும் மயங்கிவிட்டது. நீர்த்துறையும் அவை மிகதியாகி ஏறுதலால் செல்வதற்கு அவ்விடத்தே கிடக்கும் சுறாமீன்களும் செல்வார்க்கு மிகவும பகையாயிருப்பன. இரவும் வந்தது. இளைஞனே! நீ இவ்வேளையிற் செல்லுதல் வேண்டா எனக் குறையிரந்து, நின்னைத் தங்கிச் செல:லுமாறும் வேண்டுவர். அப்போது, நின் ஏவலரும் குதிரைகளும் நீயும அங்கே தங்கி மிகுதியான இன்பத்தினை அடையுமாறு எம் இல்லத்திலே நின்னை நல்ல விருந்தாக ஏற்றுப் பேணுதலையும் நாங்கள் செய்வோம். என்று பகற்கறி வந்து நீங்கும் தலைமகற்குத தோழி சொன்னாள் என்க.



## 6.13.பாடல் : 31 (310) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : நக்கீரனார்**

**துறை : தலைமகற்கு குறை நேர்ந்த தோழி சொல்லியது**

கடுந்தேர் இளையரொடு நீக்கி, நின்ற
நெடுந்தகை நீர்மையை அன்றி, நீயும்

தொழுதகு மெய்யை அழிவு முந்துறுத்துப்
பன்னாள் வந்து பணி மொழி பயிற்றலின்.
குவளை உண்கண் கலுழ நின் மாட்டு
இவளும் பெரும் பேதுற்றனள், ஓரும்
தாயடை நெடு நகர்த் தமர் பாராட்டக்
காதலின் வளர்ந்த மாதர் ஆகலின், ஷ
பெருமடம் உடையரோ சிறதே அதனால்,
குன்றின் தோன்றும் குவவு மணல் சேர்ப்ப!
இன்று இவண் விரும்பாதீமோ! சென்றப்
பூவிரி புன்னை மீது தோன்று பெண்ணைக்
கூஉம் கண்ண.ஃதே தெய்ய, ஆங்கண்
உப்பு ஒய் உமணர் ஒழுகையொடு வந்த
இளைப்படு பேடை இரியக் குரைத்து எழுந்து
உருமிசைப் புணரி உடைதரும்
பெருநீர் வேலி எம் சிறு நல் ஊரே.

விரையச் செல்லுகின்ற நின் தேரினை நின் ஏவலாளருடனே விடுவிட்டுத் தனியனாக இவன் வந்து நின்ற பெருறந்தகையாளனே! நீ நல்ல ஒழுக்கத்தினை உடையை! அன்றியும் கண்டவர் தொழுது போற்றக்கருதும் உடலழகுடிபற்வனும் சநீ ஆவாய்! நீ மனச்சிதைவை முற்பப்பெற்றவனாகப் பல நாளும் வந்து பணிவான சொற்களையும் பேசுகின்றனை! அதனால் குவளை மலர்போலும் மையுண்ட தன் கண்கள் கலங்க இவளும் நின்னிடத்தே பெரிதும் மயக்கம் பொண்டவளாயினாள். மனமறித்து பேணும் தாயினைக் கொண்டிருக்கும் பெரிய மனையிலே சுற்றத்தவர் அனைவரும் பாராட்டுமாறு அன்பின் பெருக்கிலே வளர்ந்த அழகியாள் இவள். அதனாலே, சிறிதளவு பெரிதான மடத்தினையும் இவள் கொண்டிருப்பவள் ஆவாள்! அதனால், குன்றுபோலத் தோன்றும் திரண்ட மணல் மேட்டினை உடைய கடற்கரை நாடனே! இன்று இவளை இவ்விடத்தேயே அடைய விரும்பாது நீயும் சென்று வருவாயாக. பூக்கள் விரிந்து கிடக்கத் தோன்றும் புன்னைக்கு மேலாக் காணப்படும் அப் பனைமரத்தருகே சென்றால், அதனின்றும் கூப்பிடு தூரத்தில் உள்ளதே எங்கள் ஊராகும். உப்பு விலை கூறி விற்கும் உமணரது வண்டியோடு வந்த ஈன்று காவற்பட்ட பேடையானது அஞ்சும்படியாக எழுந்த இடிமுழக்கம்போல ஒலிசெய்து வரும் அலைகள் உடைந்து சிதறுகின்ற கடற்கரையின் எல்லையிலே உள்ளதே எம்மடைய நல்ல சிற்றூராகும்.

## 6.14.பாடல் : 32 (320) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்**

**துறை : பகற்குறியில் வந்த தலைவனை தோழி வரைவு கடாதல்**

ஓங்கு திரைப் பரப்பின் வாங்கு விசைக் கொளீஇத்
திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்,
தழை அணி அல்குல் செல்வத் தங்கையர்,

விழவு அயர் மறுகின் விலை எனப் பகரும்
கானல் அம் சிறுகுடிப் பெருநீர்ச் சேர்ப்ப!
மலர் ஏர் உண்கண் எம் தொழி எவ்வம்
அல்வாய் நீங்க, நீ அருளாய் பொப்பினும்
நெடுங்கழி துழைஇய குறுங்கால் அன்னம்
அடும்பு அமர் எக்கர் அம் சிறை உளரும்
தடவு நிலைப் புன்னைத் தாது அணி பெருந்துறை,
நடுங்கு அயிர் போழ்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்
வண்டல் பாவை சிதைய வந்து, நீ
தோள் புதிது உண்ட ஞான்றைச்
சூளும் பொய்யோ, கடல் அறிகரியே?

உயர்ந்த அலைகளை உடைய கடற்பரப்பிலே சென்று மீன் பிடிக்கும் படகினையுடையவரான தமையன்மார் விசைத்து வலையினை இழுத்துப் பிடித்துக்கொணர்ந்த ஆற்றலுடைய வலிய மீன்களைத் தழை அணிந்த அல்குலை உடையவரான அவர்தம் செல்வம் மிக்க நங்கைமார் விழாக்கள் நிகழுகின்ற ஊர்த்தெருக்களிலே கொண்டு இன்ன விலை எனக்கூறி விற்கின்ற கானற் சோலையிடத்தான சிற்றூர்களையுடை ய கடற்கரை நாட்டுத் தலைவனே! நீலமலரினை ஒத்த அழகிய மையுண்ட கண்களை உடையவள் என் தோழி. அவள் துயரமம் அலருரைக்கும் வாயினரின் பேச்சும் நீங்குமாறு நீ விரைந்து வந்து எமக்கு அருள்செய்க. அருள் செய்யாது பொய்த்தனை ஆனாலும், நெடிதான உப்பங்கழியினிடத்தே துழாவி மீன்பிடித்து உண்ணும் தன்மை உடைய குறுகிய கால்களை உடைய அன்னப் பறவையானது அடும்பங்கொடிகள் செறிந்துள்ள மணல் மேட்டினிடத்தே அமர்ந்து தம் அழகிய சிறகினை உலர்த்திக் கொண்டிருக்கும் வளைந்த நிலையினை உடைய புன்னையின தாதுகள் வீழ்ந்து அழகு செய்திருக்கும். அப்பெரிய துறையினிடத்தே நெகிழும் நுண்மணலைப் பிளந்து வரும் தேர் மொட்டினை உடைய நின் நெடிய தேரிலே. யாங்கள் புனைந்தாடிய வண்டற்பாவை சிதையுமாறு ஊர்ந்து வந்து இவள் தோள் நலத்தினைப்புதுவதாக உண்ட அந்தச் சமயத்தில் கடல் தெய்வமே அறிகின்ற சான்றாக வைத்து னரைத்தனையே. அந்தச் சூளுரையும் பொய்தானோ?

## 6.14.பாடல் : 33 (330) : தோழி தலைவியிடம் கூறியது :

**பாடியவர் : உலோச்சனார்**

**துறை : தலைமகற்கு குறை நேர்ந்த தோழி குறை நயப்ப கூறியது**

கழிப்பூக் குற்றும். கானல் அல்கியும்
வண்டல் பாவை வரி மணல் அயர்ந்தும்
இன்புறப் புணர்ந்தும், இளி வரப் பணிந்தும்,
தன் துயர் வெளிப்பட தவறு இல் நம் துயர்
அறியாமையின் அயர்ந்த நெஞ்சமொடு
செல்லும் அன்னோ மெல்லம் புலம்பன்,

செல்வோன் பெயர் புறத்து இரங்கி முன்னின்று
தகைஇய சென்ற என் நிறை இல் நெஞ்சம்
எய்தின்று கொல்லோ தானே? எய்தியும்
காமம் செப்ப நாணின்று கொல்லோ?
உதுவ காண் அவர் ஊர்ந்த தேரே!
குப்பை வெண்மணல் குவவு மிசையானும்,
எக்கர்த் தாழை மடல் வயினானும்,
ஆய் கொடிப் பாசடும்பு அரிய ஊர்பு இழிபு,
சிறுகுடிப் பரதவர் பெருங்கடல் மடுத்த
கடுஞ்செலல் கொடுந்தியில் போல,
நிவந்து படு தோற்றமொடு இகந்து மாயும்மே.

தோழி! மென்னிலமாகிய நெய்தலை உடையவன் நம் தலைவன் அவன் கழியிலுள்ள பூக்களைப் பறித்துத் தந்தும், கானற் சோலையிலே சேர்ந்திருந்தும், வரிப்பட்ட மணலிடத்தே வண்டற் பாவை சமைத்து விளையாடியும் நாம் இன்புறப் பலகாலும் நம்முடன் கூடியிருநமதும் சிறுமை தோன்ற நம்மைப் பணிந்து நின்றும் குற்றமற்ற நம் துயரினை அறியாமையினாலே, தான் தளர்வுற்ற நெஞ்சமுடையவனாகித் தன் துயரம் வெளிப்பட்டுத் தோன்றுமாறு காட்டி, மீண்டும் செல்லுகின்றான். அந்தோ! அங்ஙனம் செல்பவன் செல்லும் திசையிலேயே அவன் பால் இரக்கம் உடையதாகி அவனுக்கு முற்பச் சென்று நின்று? அவனைப் போகாது தடைசெய்யச் சென்ற என் நிறையற்ற நெஞ்சமானது. அவனிடத்தே சென்றடைய வில்லையோ? அன்றி, அடைந்தும் நம் காமத்தினை அவன் பால் எடுத்துச் சொல்லுதற்கு நாணி நின்றுவிட்டதோ? அவன் ஏறிச் சென்ற தேரும் அங்கே தோன்றுதலைக் காண்பாயாக. திரண்ட வெண்மணற் குவியல்களில் மேலும், மணல் மேட்டிடைத் தோன்றும் தாழை மடல்களிடத்தும், படர்ந்துள்ள அழகிய கொடிகளை உடைய பசுமையான அடுப்பங் கொடிகள் அரிபடுமாறு ஏறியும் இறங்கியும் அது செல்லுகின்றது. சிறுகுடி வாழவினரான பரதவர் மாக்கள், பெரிதான கடலிலே செலுத்திய கபதாகச் செல்லுதலை உடைய வளைவான மீன்பிடி படகினைக்போல உயர்ந்து மறையும் தோற்றத்துடனே அது தொலைவில் சென்று மறைவதனையும் காண்பாயாக.

## 6.15.பாடல் : 34 (340) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : நக்கீரனார்**

**துறை : பகற்குறியே தோழி தலைமகற்கு சொல்லியது**

பன்னாள் எவ்வம் தீரப் பகல் வந்து,
புன்னை அம் பொதும்பின் இன் நிழல் கழிப்பி,
மாலை மால் கொள நோக்கிப் பண் ஆய்ந்து,
வலவன் வண் தேர் இயக்க, நீயும்
செலவு விருப்புறுதல் ஒழிக தில் அம்ம,
செல்ல ாநல்லிசைப் பொலம் பூண் திரையன்

குறிப்புகள்

பல் பூங்கானல் பவத்திரி அனவிவவள்
நல் எழில் இள நலம் தொலைய, ஒல்லெனக்
கழியே ஓதம் மல்கின்று வழியே
எள் எயிற்று அரவொடு வய மீன் கொட்கும்,
சென்றோர் மன் மான்றன்று பொழுது, டின
நின் திறத்து அவலம் வீட இன்று இவண்
சேப்பின் எவனோ, பூக்கேழ் புலம்ப!
பசு மீன் நொடுத்த வெண்ணெல் மாஅத்
தயிர் மிதி மிதவை ஆர்த்துவம் நினக்கே,
வடவர் தந்த வான் கேழ் வட்டம்
குட புல உறுப்பின் கூட்டுபு நிகழ்த்திய
வண்டு இமிர் நறும் சாந்து அணிகுவம், திண் திமில்
எல்லுத் தொழின் மடுத்த வல் வினைப் பரதவர்
கூர் வளிக்கடு விசை மண்டலின் பாய்புடன்
கோட் சுறாக் கிழித்த கொடு முடி நெடு வலை
தண் கடல் அசை வளி எறிதொறும் வினை விட்டு
முன்றில் தாழைத் தூங்கும்,
தெண் கடல் பரப்பின் எம் உறைவின் ஊர்க்கே.

நெய்தல் பூக்கள் பொருந்தி இருக்கும் கடற்கரைக்கு உரிய தலைவனே! பொன்னால் செய்த பூண்களை உடையோனாகிய திரையன் என்பவன் என்றும் கெடாத நல்ல புகழினை உடையவன். பல்வேறு பூக்களையும் கொண்ட கானற் சோலையினிடத்து அவனுக்கு உரிய பவத்திரி என்னும் ஊராகும். அவ்வூரைப் போன்று நலன் நிரம்பியவள் எதம் தலைவியாகிய இவள் வழியிடையே உள்ள கழிகள் ஒல்லென்னும் ஒலியுடனே நீர பெருகப் பெற்றுள்ளன. கூரிய பற்களை உடைய பாம்பனோடு சுறாமீன்களும் திரியப்பெறுகின்றனவாயின. பொழுதும் ஒருதலையாக மயங்கிவிட்டடது. இங்ஙனமாகவும் நம் தலைவர் சென்றனரே? என்று கூறியவளாக. நின் திறத்துத் துயரம் கொள்வாள் இவள். இதனால் இவளுடைய நல்லழகு வாய்ந்த இளமைச் செவ்வியும் நீங்கிப் போவதாகும். அது நேராது இவள் துயர் நீங்கும்படியாக திண்மையான படகுகளுடன் பகலிற் கடற்மேற்சென்று மீன்பிடிக்கும் தொழிலினை மேற்கொண்டு வலிய செயலினைச் செய்பவர் பரதவர்கள். அவர்க்ள அங்ஙனம் சென்றக்கால் கடுமையான காற்றானது மிக்க விசையுடனே வந்து மோதுதலினாலும் கொலைத் தொழிலினை உடைய சுறாமீன்கள் ஒருங்கே பாய்ந்து கிழித்தலினாலும். வளைந்த முடிகளைக் கொண்ட நெடிான சிதைவுற்ற வலைகள், குளிர்ந்த கடற்காற்று வீசும் தோறும், மனைமுற்றங்களிலேயே தாழை மரங்களில் கிடந்து அசைந்து கொண்டிருக்கும். தெளிந்த கடற்பரப்கினை உடைய அத்தகையதான தங்குதற்கு இனிய எம்முடைய ஊர்க்கு, இன்று இங்கேயே தங்கிச்செல்லுமாறு, நீ வந்தால் என்னவோ? பசுமையான மீனுக்கு விலைமாறிய வெண்ணெல்லின் மாவினைத் தயிரிட்டுப்

குறிப்புகள்

பிசைந்த ஆக்கிய கூழினை, நினக்கு உண்ணுதற்கு உரியதாக யாம் தருவோம். வடநாட்டவர் கொண்டு தந்த வெண்ணிறம் அமைந்த வட்டக்கல்லிலே குடமலையாகிய பொதியிலின் சந்தனக் கட்டையினைத் தேய்த்துப் பிற மணப்பொருள்களையும் கூட்டி உண்டாக்கிய வண்டுகள் ஆரவாரிக்கும் மணச்சாந்தினையம் நினக்கு அணிவிப்போம்.

பல நாளும் நின் வருத்தம் நீங்கப் பகற்பொழுதிலே வந்து புன்னை மரங்களை உடைய அழகிய சோலையின் இனிதான நிடலில்பொழுதைக் கழிழத்துக்கொண்டு மாலைப்பொழுது வந்து சேர, அதனை நோக்கியதும், நின் பாகன் குதிரைகளைப் பபூட்டுதலை ஆராய்ந்தவனாக வளவிய நின் தெரினைச் செலுத்த நீயும் மீண்டு நின்னூர்க்குச் செல்லுதலை விரும்புதலை இனியேனும் கைவிடுவாயாக!

## 6.16.பாடல் : 35 (350) : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : சேந்தங்கண்ணனார்**

**துறை : பகற்குறி வந்த தலைமகற்கு தோழி சொல்லியது**

கழியே சிறுகுரல் நெய்தலொடு காவி கூம்ப,
எறி திரை ஓதம் தரல் ஆனாதே,
துறையே மருங்கின் போகிய மாக்கவை மருப்பின்
இருஞ்சேற்று ஈர் அளை அலவன் நீப்ப,
வழங்குநர் இன்மையின் பாடு ஆன்றன்றே,
கொடு நுகம் நுழைந்த கணைக் கால் அத்திரி
வடிமணி நெடுந்தேர் பூண ஏவாது,
ஏந்து எழில் மழைக் கண் இவள் குறையாகச்
சேந்தனை சென்மோ பெருநீர்ச் சேர்ப்ப!
இலங்கு இரும் பரப்பின் எறி சுறா நீக்கி,
வலம்புரி மூழ்கிய வான் திமில் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்,
கலி கெழு கொற்கை எதிர் கொள, இழிதரும்
குவவு மணல் நெடுங்கோட்டு ஆங்கண்
உவக்காண் தோன்றும் எம் சிறு நல் ஊரே.

கழியிடத்தே விளங்கும் சிறுத்த பூங்கொ்ததுகளை உடைய நெய்தலுடனே. செங்கழுநீர்ப்பூவும தம்முடைய இதழ்கள் குவியப் பெற்றுள்ளன. வநத: மோதுகின்ற அலைகள் அமைதலற்ற நிலையிலே, கடலோதமும் நிலையாக விளங்குனிறது. துயிடத்தே பக்கத்தே நீண்ட பெரிய கவர்த்த கோடடினை உடைய கரும் சேற்றிலள்ள ஈரமான வளையிலியருககும் நண்டும் மேலே வந்துவிட்டது இப்படியாகக் கடற்றுறையும் செல்வோர் இல்லாமையினிலே ஒலியடங்கியதாயிற்று. விளங்கும் பெரிதான கடற்பரப்பிலே கொல்லும் தன்மை உடைய சுறாமீன்களை ஒதுக்கியவராக வலம்புரியின் முத்தினை எடுப்பதற்காகக் கடலுள் மூழ்கிய, பெரிய படகினை உடையயோரான பரதவர்கள். ஒலியினைத் தம்பா்ல் உடைய சங்குகள் கல்லென ஆரவாரிக்க

குறிப்புகள்

ஆரவாரத்தை உடைய கொற்கைப்பட்டினத்தோர் தம்மை எதிர்கொண்ணட வவேற்குமாறு படகுகளிலே வந்து கரையிறங்குவர். மணல் திரண்டு கிடக்கும் நெடிய கரையான அவ்விடத்தே எம்முடைய சிறிய நல்ல ஊரானது. அதோ தோன்றுவதனைப் பாராய்!

வளைந்த நுகத்திலே பூட்டியிரக்கப் பெற்றிருக்கின்ற திரண்ட மணியினை உடைய குதிரைகளை, நெடிய தேரிலே பூட்டும்படியாகப் பாகனை ஏவுதல் வேண்டா. உயரிய எழில் கொண்ட குளிர்ச்சியான கண்களை உடைய இவளின் பொருட்டாக இன்றிரவு எம் ஊரிலே தங்கியிருந்து செல்வாயாக!

## 6.17.பாடல் : 360 : தோழி தலைவனிடம் கூறியது :

**பாடியவர் : மதுரைக் கண்ணத்தனார்.**

**துறை : பகற்குறிக்கன் வந்த தலைமகற்கு ˙தோழி பகற்குறி மறுத்து இரவுக்குறி நேர்ந்தது**

பல் பூந்தண் பொழில் பகல் உடன் கழிப்பி,
ஒரு கால் ஊர்திப் பருதி அம் செல்வன்
குடவயின் மா மலை மறையக், கொடுங்கழித்
தண் சேற்று அடைஇய கணைக் கால் நெய்தல்
நுண் தாது உண்டு வண்டினம் துறப்ப,
வெருவரு கடுந்திறல் இரு பெரும் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல,
அந்தி வானமொடு கடல் அணி கொளாஅ
வந்த மாலை பெயரின் மற்றிவள்
பெரும் புலம்பினளே தெய்ய அதனால்
பாணி பிழையா மாண் வினைக் கலிமா
துஞ்சு ஊர் யாமத்துத் தெவிட்டல் ஓம்பி,
நெடுந்தேர் அகல நீக்கிப் பையெனக்
குன்று இழி களிற்றின் குவவு மணல் நீந்தி,
இரவின் வம்மோ உரவு நீர்ச் சேர்ப்ப!
இனமீன் அருந்த நாரையொடு பனை மிசை
அன்றில் சேக்கும் முன்றில், பொன்னென
நன்மலர் நறுவீ தாஅம்
புன்னை நறும் பொழில் செய்த நம் குறியே.

பலவாகிய பூக்களை உடைய குளிர்ச்சியான பொழினிடத்தே பகற்போதெல்லாம் தலைவி உடனே கூடியிருந்து கழிதனை. ஒற்றைச்சக்கரத்தினைக் கொண்ட தேரினை உடையவன் ஞாயிறாகிய அழகிய செல்வன், அவன் மேற்றிசை கண்ணதாகிய பெரிய மலையில் சென்று மறைந்தனன். வளைந்த கழியயிலேயுள்ள தண்ணிய சேற்றிலே செறிந்தள்ள திரண்ட தண்டினை உடைய நெய்தல பூவின் நுண்ணிய தாதினை உண்ட வண்டினங்களும் அதனைவிட்டு நீங்கின. அஞ்சத்துகும். மிக்க வலிமையினை உடைய இரண்டு பெருந் தெங்கங்களான சிவமும்

சக்தியும் ஓர் உருவத்தே உடன் பொருந்திச் சிவசக்தியாக விளங்குகின்ற தோற்றத்தைப் போல அந்திச் சிவசக்தியாக விளங்குகின்ற தோற்றத்தைப் போல, அந்திச் செவ்வானத்துடன் நீலக்கடலும் இணைந்து அழகு கொ்ண்டது இங்ஙனமாக வந்த மாலைக் காலத்திலே நீயும் நீங்கிச் சென்றனையானால், இவள் பெரிதும் தனிமை கொண்டவளாகி வருந்துவாள்.

அதனால், தாளத்தை ஒத்து நடத்தவினின்றும் பிழைபடாத மாண்புற்ற செல்லும் தொழிலிலே வல்ல செருக்குடைய குதிரையானது, ஊர் துயிலும் யாமத்தினும் கனைத்தலைப் பாதுகாத்து நெடிய நின் தேரினைச் சேய்மையிடத்தேயே நீக்கி நிறுத்தி, மெல்லெனக் குன்றிடத்திருந்து இறங்கிச் செல்லும் களிற்றியானையினைப் போலத் திரண்ட மல்மேட்டினைக் கடநது வருக. மீனினங்களை அருந்தும் நாரையொடு பனைமரத்தின் மேல் அன்றில்களும் தங்கியிருக்கும் மனையின் முற்றத்திலே பொன்னென்னும்படியாக நல்ல மரமாகிய நறும் பூக்கள் உதிர்ந்து பரவும் புன்னை மரங்களுள் நறிய பொழிவிடத்தெ செய்த நம்முடைய குறியிடத்திற்கு இரவின்கண் நீயும் வருவாயாக.

## 6.18.பாடல் : 37 (370) : தோழி தலைவியிடம் சிறைப்புறத்தே உள்ள தலைவன் கேட்கும்படி கூறியது :

**பாடியவர் : அம்மூவனார்**

**துறை : பகலே சிறைப்புறமாக இருந்த தலைவனுக்கு தோழி கூறியது**

வளைவாய்க் கோதையர் வண்டல் தைஇ
இளையோர் செல்ப, எல்லும் எல்லின்று,
அகல்இடைப் புன்னைப் புகர் இல் நீழல்,
பகலே எம்மொடு ஆடி, இரவே
காயல் வேய்ந்த தேயா நல் இல்
நோயொடு வைகுதி ஆயின், நுந்தை
அருங்கடிப் படுவலும் என்றி மற்று
ஷசெல்லல் என்றலும் ஆற்றாய், “செலினே
வாழலென்” என்றி ஆயின் ஞாழல்
வண்டு படத் ததைந்த கண்ணி நெய்தல்
தண் அரும் பைந்தார் துயல்வர அந்திக்
கடல்கெழு செல்வி கரை நின்றாங்கு
நீயே கானல் ஒழிய, யானே
வெறிகொள் பாவையின் பொலிந்த என் அணி துறந்து,
ஆடுமகள் போலப் பெயர்தல்
ஆற்றேன் தெய்ய, அலர்க இவ்வூரே.



தோழி! வளைவான கோதையினை உடைய இள மகளிர்கள். வண்டல் வளையாட்டினை ஆடிய பின், வீடு திரும்புதற்கான பகற்போது ஒளிமழுங்கிய மாலைப்போதம் வந்துள்ளது. அகன்ற இலைகளை உடைய புன்னை மரத்தின் புள்ளியற்ற நிழலினிடத்தே, பகல்வேலையில் எம்முடன் விளையாடிவிட்டு இரவுப் போதில், காய்ந்த புல்லினாலே வேய்ந்தள்ள

குறிப்புகள்

வளமை குறையாத நல்லநம் வீட்டடின்கண் இவைனப் பிரிந்த காம நோயுடன் தோன்றினையாயின். நின் தந்தையின் அரிய காவலுக்கு உட்படுத்துவதாகவும் சொல்லுகின்றாய். அன்றியும் நீ போகாதே என்று அவன்பால் சொல்லுதற்கும் ஆற்றாாதவளாக உள்ளனை. அவன் சென்றாலோ, உயிர் வாழ்ந்திரேன் என்கின்றனை. அங்ஙனமாயின் ஞாழலின் வண்டு மொய்க்கும் புதுமலர்களால் கட்டிய கண்ணியினைச்சூடியவனாக, நெய்தலின் குளிர்ச்சியான அரிய பசுமை உள்ள மாலை மார்பிடத்திலே கிடந்து அசைந்தாட அந்திப் போதிலே, கடற்கன்னியானவள் கரையிடத்தே வந்து நிள்ஙால் போல, நீ இக்கானற் சோலையிடத்தேயே தனித்து நிற்க, யான் வெறியாட்டத்தை மேற்கொண்ட பாவையினைப் போல்வதாகிய என் அழகினைத் துறந்து ஆடுமகளைப் போல மீண்டு செல்லுதற்கும் இயலாதவளாக உள்ளேன். அதனால் இவ்வூர் அவர் கூறினும் கூறுக.

## 6.19.பாடல் : 38 (380) : தோழி தலைவியிடம் கூறியது :

**மதுரை மருதன் இளநாகனார்,**

**துறை : பின்னின்ற தலைமகற்கு குறை நேர்ந்த தோழி குறை நயப்ப கூறியது**

தேர் சேண் நீக்கித் தமியன் வந்து, "நும்
ஊர் யாது?" என்ன நணி நணி ஒதுங்கி
முன்னாள் போகிய துறைவன், நெருநை
அகல் இலை நாவல் உண் துறை உதிர்த்த
கனி கவின் சிதைய வாங்கிக் கொண்டு, தன்
தாழை வேர் அளை வீழ் துணைக்கு இடூஉம்
அலவன் காட்டி 'நற்பாற்று இது என'
நினைந்த நெஞ்சமொடு நெடிது பெயர்ந்தோனே
உதுக்காண் தோன்றும் தேரே இன்றும்
நாம் எதிர்கொள்ளாம் ஆயின், தான் அது
துணிகுவன் போலாம் நாணுமிக உடையன்,
வெண்மணல் நெடுங்கோட்டு மறைகோ?
அம்ம தோழி கூறுமதி. நீயே.

தோழி! தன் தேரினைத் தொலைவிலேயே நிறுத்திவிட்டுத் தனியனாக வந்து, நும் ஊர்யாது? என்று நாம் கேட்கக் குறுகக் குறுக நடந்து முன்னாளிற் சென்றனன் துறைவன். நேற்று அகன்ற இலைகளை உடைய நாவன் மரமானது நீருண்ணும் துறைக்கண்ணே உதிர்த்த கனியினை, அதன் அழகு கெடுமாறு இழுத்துக்கொண்டு சென்று, தாழையின் வேர்ப்பக்கத்துள்ள அளையிலேயிருக்கும் தான் விரும்பிய தன் துணைக்கு இடுகின்ற நண்டினைக்காட்டி, இதுநல்ல பான்மையினை உடையது என்று கூறி நின்னை நினைந்து நெஞ்சத்தோடு நெடிது பெயர்ந்தும் சென்றனன். இன்றும் அதோ பார் அவனுடைய தேர் தோன்றுகின்றது. நாம் அவனை எதிர் கொண்டு ஏற்காமலிருந்தால் நாணம் மிகவும் உடையவனாதலின் அதனை ஒதுக்கித்

தானே அதனைச் சொல்லத் துணிகின்றவன் போலும் உள்ளனன். அதனால், வெண்மையான மணலை உடைய நெடிய மணல் மேட்டில் சென்று மறைந்து கொள்வோமோ? என் செய்வாமெனக் கூறுவாயாக!

குறிப்புகள்

## 6.20.பாடல் : 39 (390) : தலைவன் நெஞ்சிடம் அல்லது தன் நண்பனிடம் கூறியது :

**பாடியவர் : அம்மூவனார்**

**துறை : தலைமகன் பாங்கற்கு சொல்லியது**

உவர் விளை உப்பின் கொள்ளை சாற்றி,
அதர்படு பூமிய சேண் புலம் படரும்
ததர் கோல் உமணர் பதி போகும் நெடு நெறிக்
கண நிரை வாழ்க்கை தான் நன்று கொல்லோ?
வணர் சுரி முச்சி முழுதும் மன் புரள,
ஐது அகல் அல்குல் கவின் பெறப் புனைந்த
பல் குழைத் தொடலை ஒல்கு வயின் ஒல்கி,
“நெல்லும் உப்பும் நேரே ஊரீர்!
கொள்ளீரோ?” எனச் சேரிதொறும் நுவலும்,
“அவ் வாங்கு உந்தி அமைத் தோளாய்! நின்
மெய் வாழ் உப்பின் விலை எய்யாம்?” எனச்
சிறிய விலங்கினமாகப், பெரிய தன்
அரி வேய் உண்கண் அமர்த்தனள் நோக்கி,
“யாரீரோ எம் விலங்கியீர்?” என
மூரல் முறுவலள் பேர்வனள் நின்ற
சில் நிரை வால் வளைப் பொலிந்த
பல்மாண் பேதைக்கு ஒழிந்தது, என் நெஞ்சே.

பாங்கனே! உவர் நிலத்தே விளைந்த உப்பினை விலை கூறியவராக, வழிகளிலே படுகின்ற புழுதியினை உடைய நெடுந்தொலைவு உள்ள .இடங்களுக்குச் செல்லும் செறிந்த கோல்களைக் கொண்ட உமணர்கள் போகும் நெடிய நெறிகளிலே அந்தக் கூட்டத்துடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை நன்மை தருவது போலும்! வளைந்த சுருட்டை கொண்ட கூந்தலின் முடி முழுவதும் பெரிதும் புரண்டு கொண்டிருக்க, மெல்லிய அகன்ற அல்குலில் அழகுபெப் புனைந்த பல தளிருடன் கூடிய தழை உடையானது அவள் அசையும் இடத்துத் தானும் அசைந்தாட நடந்து ஊரீரே! நெலலும் உப்பும் நேருக்கு நேரோயாகும். வாங்கிக் கொள்ளீரோ என்று சேரிதோறும் கூவி விற்கும் ஒருத்தியைக் கண்டேம். அழகிய வளைந்த உந்தியினையும், மூங்கில் போன்ற தோள்களையும் உடையவளே! நின் மெய்யிடத்தே உளதாகும் உப்பினை விலையினை அறிந்திலமே? என்று கூறி, யாம் சிறிது அவளைத் தடுத்தும் நிறுத்தினேம். பெரிய அரி படர்ந்த தன் கண்களால் மாறுப்பட்னள் போல எம்மை நோக்கி, எம்மைத் தடுப்பீர், நீர் யாவிரோ? என்று சொல்லி, இளநகை உடையவளாகச் சிறிது

குறிப்புகள்

பெயர்ந்து நின்றாள் அவள். சிலவாகி நிரைத்த வெண்மையான வளையல்கள் அழகு செய்த, பலவாய மாண்புடைய அப்பேதைமை உடையானின் பொருட்டு, என் நெஞ்சம் தன் வலிமையினை இழந்துவிட்டதே!

## 6.21.பாடல் : 40 (400) : தோழி தலைவியிடம் கூறியது :

**பாடியவர் : உலோச்சனார்**

**துறை : தலைமகன் வரைந்து எய்தியப்பின் தோழி தலைமகற்கு சொல்லியது :**

நகை நன்று அம்ம தானே, அவனொடு
மனை இறந்து அல்கினும் அல் என நயந்து,
கானல் அல்கிய நம் களளவு அகல
பல்புரிந்து இயறல் உற்ற நல் வினை
நூல் அமை பிறப்பின், நீல உத்திக்
கொய்ம் மயிர் எருத்தம் பிணர் படப் பெருகி,
நெய்ம் மிதி முனைஇய கொழுஞ்சோற்று ஆர்கை
நிரல் இயைந்து ஒன்றிய செலவின், செந்தினைக்
குரல் வார்ந்தன்ன குவவுத்தலை நந் நான்கு
வீங்கு சுவல் மொசியத் தாங்கு நுகம் தழீஇப்
பூம்பொறிப் பல்படை ஒலிப்பப் பூட்டி,
மதியுடைய வலவன் ஏவலின் இகுதுறைப்
புனல் பாய்ந்தன்ன வாமான் திண் தேர்க்
கணை கழிந்தன்ன நோன் கால் வண் பரிப்
பால் கண்டன்ன ஊதை வெண்மணல்
கால் கண்டன்ன வழிபடப் போகி,
அயிர்ச் சேற்று அள்ளல் அழுவத்து ஆங்கண்,
இருள் நீர் இட்டுச்சுரம் நீந்தித் துறை கெழு
மெல்லம் புலம்பன் வந்த ஞான்றை
பூ மலி இருங்கழித் துயல்வரும் அடையொடு
நேமி தந்த நெடு நீர் நெய்தல்
விளையா இளம் கள் நாறப் பலவுடன்
பொதி அவிழ் தண் மலர் கண்டும், நன்றும்
புதுவது ஆகின்று அம்ம, பழ விறல்
பாடு எழுந்து இரங்கு முந்நீர்
நீடு இரும் பெண்ணை நம் அழுங்கல் ஊரே.

தோழி! இல்லத்தினக்கடந்து சென்று சற்றே தங்கினாலும் அலராகும் என்ற நிலையிலும் அவனுடனே விருப்புற்றுக் கானற் சோலையிலே தங்கிய நம் களவு ஒழுக்கம் நீங்குமாறு பல தன்மைகளும் புரிந்து இயற்றலுற்ற நல்வினையின் பயனும் வந்து வாய்ப்பதாயிற்று. அசுவ சாத்திரம் கூறும் இலக்கணம் அமைந்த பிறப்பினையும் நீலமணியாகிய நெற்றிச் சுட்டியினையும், கொய்யப்பெற்ற மயிர் பொருந்திய பிடரியினையும்

உடையவும் நெய் பெய்து மிதித்து ஆக்கிய கவளத்தை வெறுத்துக் கொழுமையான சோற்றை உண்ணுதலை உடையவும், வரிசையாகப் பொருந்தி ஒன்றுபட்டுச் செல்லுதலை உடையவும் வரிசையாக்ப் பொருந்தி ஒன்றுபட்டடுச் செல்லுதலை உடையவும் செவ்விய தினைக்கதிர் நீண்டு வளைந்தாற்போன்ற வளைந்த தலையினை உடையவும் ஆகிய நன்றான குதகைளைத் தாங்கும் நுகமானது பருத்த திமிலிலே பொருந்தியதாகப் பொருந்தியிருக்க அழகிய பொறிகளை உடைய பலவடங்கள் ஒளிக்குமாறு பூட்டி, தேர் செலுத்தும் அறிவுடைய பாகன் தேரினைச் செலுத்தலினாலே தாழ்வான துறையிடத்தே நீர் பாயந்து சென்றாலொத்த, திண்மையான தேரிற் பூட்டிய தாவிச்செல்லும் குதிரைகளின் அம்பு பாய்நதாற்போன்று விரையச் செல்லும் வலிய கால்களின் செலவு பாலைக் கண்டாற் போல் விளங்கும். காற்றால் திரட்டப்பெற்றுக் கிடக்கும் வெண்மணலிடத்தே வாய்க்காலைக் கண்டாற்போல் வழிபடுமாறு சென்று, நுண்ணிய சேற்றுக் குழம்பின் பரப்பினை உடைய அவ்விடத்து, இருண்ட தன்மையினை உடைய குறுகிய கரத்தையும் கடந்து துறைபொருந்திய கடற்கரையினை உடைய நம் தலைவனும் வந்தனன்.

வந்த பொழுதிலே, பூக்கள் மலர்ந்த அரிய கழியிடத்தே அசைந்து பொண்டிருக்கும் இலைகளோடு, கடல் தந்த நெடிய தன்மையினை உடைய நெய்தலின் முதிராத இனங்கள் நாறும்படியாகப் பொதியவிழ்ந்த தண்ணிய மலர்களை, ஏனைப் பூக்கள் பலவற்றுடனும் அவன் சூடிவருதலைக்கண்டு பழைய பெருமையினை உடைய ஆரவாரம் மிகுதியாக விளங்கும் கடற்கரைக் கண்ணிடத்துள்ள, நீண்ட கரிய பனைமரங்களை உடைய ஆரவாரங்கொண்ட நம்முடைய ஊரானது, அலரினை விடுத்து மிகவும் புதிய தன்மையினை உடையதும் ஆகின்றது. இது பெரிதும் நகையினை உடையதாகும்.

## 6.22.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. தலைவன் தன் நெஞ்சிற்கு கூறியது யாது?
2. தலைவியின் கலங்கிய கண்கள் குறித்து தோழி தலைவனிடம் வேண்டியது யாது?
3. உலோச்சனார் பாடல் வழி தோழி தலைவிக்கு கூறியது யாது?
4. தலைவனை யாது கூறி தங்கிச் செல்ல வேண்டுகிறாள் தோழி?

**பெருவினா :**

5. அம்மூவனாரின் பாடல் சிறப்பை உம்பாடப்பகுதி வழி சான்று காட்டி நிறுவுக.
6. தோழி சிறைப்புறத்து இருந்த தலைவன் கேட்க கூறியவற்றை விரித்துரைக்க.

## 6.23.தொகுத்துக் காண்போம். :

கடல் சார்ந்து வாழும் பரதவ மக்களின் (மீனவர்களின்) வாழ்வியலை மதுரை போன்ற இளநாகனார், அம்மூவனார், உலோச்சனார், முடங்கி கிடந்த நெடுஞ்செழியன், முதுரைத் தமிழ் கூத்தனார் போன்ற புலவர்களின் மூலமாக நாம் அறிந்து கொண்டோம். மேலும் அவர்களின் காதலையும், பண்பாட்டு விழுமியங்கள், போன்றவற்றையும் இப்பாடப் பகுதியின் மூலமாக அறியலாகின்றது.

## 6.24.மேலும் பயில்வதற்கான நூல்கள் :

- அகநானூறு மூலமும் உரையும், ந.மு.வேங்கடசாமி நாட்டார், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- அகநானூறு மூலமும் உரையும், புலியூர்கேசின் உரை, பாரி நிலையம், சென்னை-1.
- அகநானூறு மூலமும் உரையும், முனைவர் இரா. ஜெயபால், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98
- அகநானூறு மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.

குறிப்புகள்

# கூறு- 7-குறுந்தொகை-பாலைத் திணைப் பாடல்கள் - 1 முதல் 50 வரை

## 7.1முன்னுரை :

கடைச் சங்க காலத்தில் தோன்றிய தொகை நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகை நூனூறு அகவற்பாவால் அமைந்த ஓர் அகப்பொருள் நூலாகும். இந்நூலின் பாடல்கள், நான்கடிச் சிற்றெல்லையையும், எட்டடிப் பேரெல்லையையும் உடையவை. ஆனால் ஒன்பதடியில் உள்ள 307, 391 ஆகி யஇரு பாடல்களும் இத்தொகையில் இடம்பெற்றுள்ளன. 'நல்ல குறுந்தொகை' என்ற அடையுடன் இந்நூல் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. தொகை நூல்களில் முதலாவதாகத் தொகுக்கப்பெற்றதாக இந்நூல் கூறப்படுகின்றது. இந்நூலின் பாடல்கள் பல, பல உரையாசிரியர்களால் பல்வேறு உரை விளக்கங்களில் மேற்கோளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்நூலின் 165 செய்யுட்களே மேற்கோளாகப் பயன்படுத்தப் பெறாதவை. இறையனார் களவியல் உரையாசிரியர், குறுந்தொகை நானூறு என்று இந்நூலைக் குறிப்பிடுகின்றார். ஆனால் கடவுள் வாழ்த்து நீங்கலாக இந்நூலில் 401 பாடல்கள் இடம்பெற்றுள்ள. இத்தொகை நூலைத் தொகுத்தவர் பெயர் பூரிக்கோ என்றும், இத்தொகை பாடியோர் இருநூற்றைவர் என்றும் பழங்குறிப்பு ஒன்று காணப்படுகின்றது. இந்நூலில் உள்ள பத்துப் பாடல்களின் ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை. குறுந்தொகையின் 380 பாடல்களுக்குப் பேராசிரியர் உரை வகுத்தார் என்றும், எஞ்சிய இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை வழங்கினார் என்றும் நசசினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரத்தால் அறியமுடிகின்றது. ஆனால் அவ்விருவர் உரையும் இன்றுவரை நமக்குக் கிடைக்கவில்லை. இயற்றியவர் பெயர் அறியப்படாத சில பாடல்கள், அப்பாடல்களில் அமைந்துள்ள தொடர்களால் குறித்து அழைக்கப்பெற்றனர். நம் பாடப்பகுதியல் பாலைப் பற்றிய பாடல்கள் மட்டும் அமையபெற்றுள்ளது.

## 7.2.குறிக்கோள்கள் :

குறுந்தொகையில் இடம்பெற்றிருக்கும் பாலைத்திணைக்குரிய பாடல்களில் 1 முதல் 50 வரையிலான பாடல்கள் மட்டும் முதற்பகுதியல் பாடமாக இடம்பெற்றுள்ளது. இப்பாடல்களில் வறண்ட பாலை நிலத்தின் வழியே தலைவன் செலவு செல்லுதல், அவனைப் பிரிந்து தலைவி வாடுதல், தலைவனுடன் தலைவி உடன்போக்கு செல்லுதல் பேன்ற செய்திகளை கூறுவதோடு அவற்றின் வாயிலாக மாணவர்களுக்கு தலைவன் தலைவியின் மனவலிமையையும், இல்லற வாழ்வின் முக்கியத்துவத்தையும் அறியச் செய்வதே இப்பாடப்பகுதியின் குறிக்கோளாகும்.



## 7.3.பாடல் : 1(7) : கண்டோர் கூற்று பாடியவர் : பெரும்பதுமனார்

வில்லேன் காலன கழலே, தொயோள்

குறிப்புகள்

மெல்லடி மேலவும் சிலம்பே, நல்லோர்
யார் கொல் அளியர் தாமே, ஆரியர்
கயிறாடு பறையின் கால் பொரக் கலங்கி
வாகை வெண் நெற்று ஒலிக்கும்
வேய் பயில் அழுவம் முன்னியோரே?

கழைக் கூத்தர்கள், மூங்கிலின் மேல் கட்டிய கயிற்றின் மேல் ஏறிநின்று ஆடும்போது அடிக்கப்படும் பறை ஒலியைப் போல, மேல்காற்று வீசும்போது நிலை கலங்கி, வாகை மரத்தின் வெண்ணிற நெற்றுக்கள் ஒலி எழுப்பும். அத்தகைய மூங்கில் செறிந்த பாலை நிலப் பரப்பில் கடந்து செல்ல நினைத்து வருபவர்களுள், கையில் வில்லை ஏந்திய இவ்வாடவன் கால்களில் வீரக்கழல்கள் உள்ளன. வளையணிந்த கைகளையுடைய இம்மகளின் மெல்லிய அடிகளின் மேல் சிலம்புகள் உள்ளன. இந்நல்லோர் யாவரோ? இவர்கள் அளிக்கத்தக்கவர்.

## 7.4.பாடல் : 2(11) : தலைவி தன் நெஞ்சிடம் தோழி கேட்கும்படியாக கூறியது :

**பாடியவர் : மாமூலனார்.**

கோடு ஈர் இலங்கு வளை ஞெகிழ நாடொறும்
பாடில கலிழும் கண்ணொடு புலம்பி
ஈங்கு இவண் உறைதலும் உய்குவம் ஆங்கே,
எழு இனி வாழி என் நெஞ்சே, முனாது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேல் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்தர் ஆயினும்,
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே.

சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட, முன் கையில் விளங்கும் வளையல்கள், உடல் மெலிவினால் நெகிழுமாறு. தலைவன் வரைவிடை(திருமணம் செய்துக்கொள்வேன் என்று கூறி சென்ற) வைத்துச் சென்ற ஒவ்வொரு நாளும் உறக்கமில்லாமல் கலங்கி அழும் கண்ணொடு, தனிமைத் துயரால் நாம் இங்கு வருந்தாமல் இருப்போம். என் நெஞ்சே! நீ வாழவாயாக! நீ அவனுடைய நாட்டிற்குச் செல்ல இப்பொழுதே முற்பட்டு எழுவாயாக! கஞ்சங் குல்லையைத தலைமாலையாக அணிந்த வடுகருடைய பகைப்புலம், வலிமையான வேற்படையையுடைய கட்டி என்பவனுடைய நல்ல நாட்டிற்கு அப்பால் உள்ளது. நம் மொழி பேசாது வேற்று மொழி பேசப்படும். அந்நாட்டில் தலைவன் இருப்பினும், அவனை நாடிச் செல்லும் உன்னைத் தொடர்ந்து வருதலை நான் துணிந்துள்ளேன்.



## 7.5.பாடல் : 3(12) : தலைவி தோழியிடம் கூறியது :

**பாடியவர் : ஓதலாந்தையார்**

எறும்பி அளையின் குறும் பல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறிக்

கொடு வில் எயினர் பகழி மாய்க்கும்
கவலைத்து என்ப அவர் சென்ற ஆறே.
அது மற்று அவலம் கொள்ளாது,
நொதுமல் கழறும் இவ்வழுங்கல் ஊரே.

குறிப்புகள்

எறும்புப் புற்றுக்களைப் போன்ற, குறுகிய, பலவாகிய கனைகளையுடைய பாறைகள் உள்ளன. அப்பாறைகள், கொல்லனது உலைக் கூடத்திலுள்ள பட்டடைக் கல்லைப் போல வெம்மையுடையவை. வளைந்த வில்லினை ஏந்திய வேட்டுவர், அப்பாறையின் மேல் ஏறித் தங்உள் அம்புகளைத் தேய்த்துக் கூர்மையாக்குவர். தலைவனுடைய தேர் சென்ற வழி, இத்தகைய பாலை நிலத்தில் கவர்த்த பல வழிகளையுடையது. என்போல அவ்வழியைப் பற்றித் துயரம் கொள்ளாமல், இந்த ஆரவாரத்தினையுடைய ஊரானது என்னை அயலாகக் கருதி இடித்துரைக்கும்.

## 7.6.பாடல் : 4(15) : செவிலித்தாய் தலைவியின் தாயிடம் சொன்னது :

**பாடியவர் : ஔவையார்**

பறை படப் பணிலம் ஆர்ப்ப, இறை கொள்பு
தொன்மூது ஆலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன் மொழி போல
வாயாகின்றே தோழி, ஆய் கழல்
சேயிலை வெள் வேல் விடலையொடு
தொகு வளை முன் கை மடந்தை நட்பே

பழைய ஆலமரத்தின் அடியில், மக்கள் கூடும் பொதுமன்றத்திலே, தாம் சொன்ன சொல் பிழையாமல், நான்கு ஊர்களைச் சார்ந்த கோசர் என்ற குடியினர் வந்தனர். அவர்களுடைய பிழையாத வாய்மொழி போல, காலில் ஆய்ந்து கட்டிய கழலினையும், செம்மையாகிய இலை போன்ற வடிவுடைய வெள்ளிய வேலினையும் ஏந்திய தலைவனொடு, பலவாகத் தொக்க வளையல்களை அணிந்த முன்கையையுடைய மடந்தை, ஒரு மனையில் தங்கியதால் அவர்களிடையே உள்ள நட்பு உண்மையாயிற்று.

## 7.7.பாடல் : 5(16) : தோழி கூற்று :

**பாடியவர் : சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ :**

உள்ளார் கொல்லோ தோழி, கள்வர்
பொன் புனை பகழி செப்பங்கொண்மார்
உகிர் நுதி புரட்டும் ஓசை போலச்
செங்கால் பல்லி தன் துணை பயிரும்
அம் கால் கள்ளியங்காடு இறந்தோரே?



ஆறலை கள்வர், இரும்பைத் தலையிடத்தே கொண்ட தங்கள் அம்புகளின் கூர்மையை அறிய நகத்தால் அவற்றின் நுனியை நெருடுவர். அவ்வோசையைப் போல, செவ்விய கால்களையுடைய ஆண்பல்லி, தனக்குத் துணையாகிய பெண்பல்லியை அழைக்கும் ஒலி விளங்கும். இத்தகைய பல்லிகள் தங்கியுள்ள, அழகிய அடிப்பகுதியைக் கொண்ட

குறிப்புகள்

கள்ளிச் செடிகள் மிகுந்த காட்டினைக் கடந்து சென்ற நம் காதலர் நம்மை நினைக்காமல் இருக்க மாட்டான்.

## 7.8.பாடல் : 6(20) : தலைவி தோழியிடம் கூறியது :

**பாடியவர் : கோப்பெருஞ்சோழன்**

அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து,
பொருள்வயின் பிரிவோர் உரவோர் ஆயின்,
உரவோர் உரவோர் ஆக,
மடவம் ஆக மடந்தை நாமே.

தோழியே! நமக்குத் தொடர்பில்லாதவர்களிடையே தோன்றும் அருளையும், அன்பையும் துறந்து, பொருள் தேடும் நோக்கம் ஒன்றே உடையராக நம்மைப் பிரிந்து செல்லும் காதலர், அறிவுடையவராயினும் அத்தகைய ஆற்றலையுடைய அவர், அறிவுடையவரே ஆகுக. அவரைப் பிரிந்திருப்பதற்கு உரிய ஆற்றலில்லாத நமக்கு அறிவில்லாமல் ஆகுக.

## 7.9.பாடல் : 7 (22) : தோழி தலைவியிடம் கூறியது :

**பாடியவர் : சேரமானெந்தை**

நீர் வார் கண்ணை நீ இவண் ஒழிய,
யாரோ பிரிகிற்பவரே? சாரல்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனில் அம்சினை கமழும்
தேம் ஊர் ஒண்ணுதல் நின்னொடுஞ் செலவே

பிரிவுத் துன்பத்தால், இடைவிடாது ஒழுகும் கண்ணீரை உடையவளாய், நீ இங்கு தங்கியிருக்க, உன்னைப் பிரிந்து செல்லும் ஆற்றல் உடையவர் யார் உளர்? மலைப் பக்கம். தனக்கு அழகாகக் கொண்ட, வலமாகச் சுரிந்து விளங்கும் வெண்கடம்பின் மலர்கள் வேனில் காலத்தில் மலர்ந்து மணம் வீசும். அம்மலரின் மணம் கமழும், ஒளி பொருந்திய நெற்றியை உடையவளே, தலைவன் செலவு நின்னொடு உடன்போக்கில் செல்வதாகவே அமையும்.

## 7.10.பாடல் : 8(27) : தலைவி தோழியிடம் கூறியது :

**பாடியவர் : வெள்ளிவீதியார்**

கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது,
நல்ஆன் தீம்பால் நிலத்து உக்காஅங்கு,
எனக்கும் ஆகாது, என் ஐக்கும் உதவாது,
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல் என் மாமைக் கவினே.

நல்ல பசுவின் இனிய பாலை கன்றும் உண்ணாமருலும், அதனைப் பராமரிக்கும் உடையவரும் தன் பாத்திரத்தில் கறக்காமலும் பயனின்றி மண்ணில் சிந்தி அழிவதைப் போல் படர்ந்த அல்குலையுடைய என்னுடைய, மாமையாகிய பேரழகு, எனக்கு அழகு தருவதாகவோ, என் தலைவனுக்கு இன்பம் பயப்பதாகவோ இல்லாமல், பசலையால் விரும்பி உண்ணப்படுகின்றது.

குறிப்புகள்

## 7.11.பாடல் : 9(28) : தலைவி தோழியிடம் கூறியது :

**பாடியவர் : ஔவையார்**

முட்டுவேன் கொல், தாக்குவேன் கொல்,
ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவுவேன் கொல்,
அலமரல் அசை வளி அலைப்ப, என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே?

சுழன்று அசைந்து வீசும் தென்றல் காற்று என்னை வருத்துகின்றது. என் துன்பத்திற்குக் காரணமாகிய காமநோயின் கொடுமையை உணராமல் இவ்வூராரும் கவலையின்றித் தூங்குகின்றனர், அவர்கட்கு என் நிலையை அறிவிப்பதற்காக, யான் முட்டுவேனா? தாக்குவேனா? ஏதோ ஒரு காரணத்தை மேலிட்டுக் கொண்டு 'ஆ' என்றும் 'ஒல்' என்றும் ஒலி எழுப்பிக் கூப்பிடுவேனா? எதைச் செய்வது என்று அறியேன்.

## 7.12.பாடல் : 10(30) : தலைவி கூற்று :

**பாடியவர் : கச்சிப்பேட்டு நன்னாகையார்**

கேட்டிசின் வாழி தோழி, அல்கல்
பொய்வலாளன் மெய்யுறல் மரீஇய
வாய்த்தகைப் பொய்க் கனா மருட்ட ஏற்று எழுந்து
அமளி தைவந்தனனே குவளை
வண்டுபடு மலரின் சாஅய்த்
தமியேன் மன்ற, அளியேன் யானே.

தோழி! கேட்பாயாக பொய்யை மெய்போலக் கூறுவதில் வல்லவன் என்னுடைய உடம்பின் ஊற்றின்பத்தைப் பெறுவதற்காக, இரவுக் காலத்தில் பொய்யாகிய கனவில் வந்து மயக்கியதை உண்மை நிகழ்ச்சி போல் நினைத்தேன். என் மயக்கம் நீங்கித் துயிலெழுந்து, சேக்கையில் அவன் இருப்பதைக் கையால் தடவிப் பார்த்தேன், வண்டுகளால் தேன் உறிஞ்சப்பட்ட குவளை மலரைப் போல நிலைகுலைந்த நான், அவரைக் காணாது, தனித்தவளாய் ஆயினேன், உறுதியாக நான் ஒருத்தியே இரங்கத் தக்கவள்.

## 7.13.பாடல் : 11(37) : தோழி தலைவியிடம் கூறியது :

**பாடியவர் : சேர மன்னன் பாலை பாடிய பெருங்கடுங்கோ**

நசை பெரிது உடையர், நல்கலும் நல்குவர்,
பிடி பசி களைஇய பெருங்கை வேழம்
மென் சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி, அவர் சென்ற ஆறே.

தோழி! தலைவன் உன்னிடத்தில் மிகுந்த விருப்பம் உடையவர். அவர், உன்னிடத்தில் நிறைந்த அன்பையும் காட்டக் கூடியவர். அவர் உன்னைப் பிரிந்து சென்ற நெறிகள், பெண் யானையின் பசியை நீக்குவதற்காகப் பெரிய கையையுடைய ஆண்யானையானது, மெல்லிய

குறிப்புகள்

கிளைகளையுடைய யா மரத்தின் பட்டையை உரித்து, அதன் நீரை பெண் யானை பருகச் செய்யும் காட்சிகளை உடைய வழியே தலைவன் சென்றுள்ளான்.

## 7.14.பாடல் : 12(39) : தலைவி தோழியிடம் கூறியது :

**பாடியவர் : ஔவையார்**

வெந்திறல் கடு வளி பொங்கர் போந்தென
நெற்று விளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை அருஞ்சுரம் என்ப, நம்
முலை இடை முனிநகர் சென்ற ஆறே.

தோழி நம் முலையிடைக் கிடந்து துயிலும் தூக்கத்தை வெறுத்தவர், பிரிந்து சென்ற வழியானது, வெம்மையான, வலிமையுடைய விரைவான காற்று, மரக்கிளைகளில் வீசுவதால், வாகை மரத்தின், நெற்றுக்களின் முற்றிய வற்றல்கள் ஒலித்தற்கு இடனாக உள்ள மலைகளையுடைய சுரமாகும் என்று கூறுவர்.

## 7.15.பாடல் : 13(41) : தலைவி தோழியிடம் கூறியது :

**பாடியவர் : அணிலாடு முன்றிலார்**

காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து
சாறு கொள் ஊரின் புகல்வேன் மன்ற,
அத்த நண்ணிய அம் குடிச் சீறூர்
மக்கள் போகிய அணில் ஆடு முன்றில்
புலம்பில் போலப் புல்லென்று
அலப்பெண் தோழி, அவர் அகன்ற ஞான்றே.

(பிரிவிடை வேறுபாடு கண்டு கூறிய தோழிக்கு தலைவி உரைத்தது)

தோழி! காதலர் நம் பக்கத்தில் உள்ளபோது, மிகவும் மகிழ்ச்சியுற்று, விழாக் கொண்ட பேரூர் போல மிகவும் விருப்பத்தையுடையவளாக விளங்குவேன். பாலை நிலத்தில் காணப்படும் அழகிய வீடுகளையுடைய சிற்றூரில், உறைவோர் அனைவரும், அவ்வூரைவிட்டு நீங்கிச் சென்ற போது அங்குள்ள, அணில் விளையாடும் முற்றத்தையுடைய தனிமை பொருந்திய வீட்டினைப் போல, அவர் என்னைப் பிரிந்த அன்றே வருந்துவேன்.

## 7.16.பாடல் : 14(43) : தலைவி தோழியிடம் கூறியது :

**பாடியவர் : ஔவையார்**

செல்வார் அல்லர் என்று யான் இகழ்ந்தனனே,
ஒல்வாள் அல்லள் என்று அவர் இகழ்ந்தனரே,
ஆயிடை இரு பேர் ஆண்மை செய்த பூசல்
நல்அராக் கதுவியாங்கு, என்
அல்லல் நெஞ்சம் அலமலக்குறுமே.

(பிரிவிடையால் மெலிந்த (இளைத்த) கிழத்தி(தலைவி) கூறியது.)

தோழி! தலைவர் நம்பைப் பிரிந்து செல்லமாட்டார் எனக் கருதி, நான் அவர் செலவினை விலக்காமல் சோர்ந்திருந்தேன். அவர், நம்

பிரிவினை இவளுக்கு அறிவித்தால், அதற்கு உடன்படமாட்டாள் எனக் கருதி, என்னிடம் சொல்லாமல் சோர்ந்திருந்தார். இருவர் தங்களுடைய பேராற்றலை வெளிப்படுத்தச் செய்யும் போர் நிகழும் அவ்விடத்தில், ஒருவரை நல்ல பாம்பு தீண்டினாற்போல, என் நெஞ்சத்தைப் பிரிவுத் துன்பம், மிகவும் கலக்கமுறச் செய்தது.



## 7.17.பாடல் : 15(44) : செவிலித்தாய் கூற்று :

**பாடியவர் : வெள்ளிவீதியார்**

காலே பரி தப்பினவே, கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே
அகல் இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற, இவ் உலகத்துப் பிறரே.

(இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது)

இருகால்களும் நடந்து, நடந்து செலவு தடுமாறின. இரு கண்களும், தேடிப் பார்த்துத் தனக்குரிய புலமாகிய ஒளியை இழந்தன. அகன்ற, பெரிய ஆகாயத்தின்கண் விளங்கும் விண்மீன்களைக் காட்டிலும் பலராய ஆடவர் இவ்வுலகத்தில் உள்ளனர்.

## 7.18.பாடல் : 16(48) : தோழி கூற்று :

**பாடியவர் : பூங்கணுத்திரையார்**

தாதின் செய்த தண் பனிப் பாவை
காலை வருந்தும் கையாறு ஓம்பு என
ஓரை ஆயம் கூறக் கேட்டும்,
இன்ன பண்பினினை பெரிது உழக்கும்
நன்னுதல் பசலை நீங்கவன்ன,
நசையாகு பண்பின் ஒரு சொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே?

(பகற்குறிக்கண் காணும் பொழுதிலும் காணாப் பொழுத பெரிதாகலின், வேறுபட்ட தலைவினது வேறுபாடு கண்டு, தொழி உரைத்தது)

பூந்தாது முதலிய பொடிகளால் செய்யப்பட்டு, மிக்க குளிர்ச்சியையுடைய பனியில், தூங்கவிடப்பட்ட விளையாட்டுப் பாவையானது, காலை வெயிலில் கிடந்து வருந்தும் நிலைகண்டு, நீ செயலற்றுக் கிடக்கும் நிலையை நீக்குக எனத் தன்னுடன் விளையாடும் மகளிர் கூறுவர். அதனைக் கேட்ட பின்னரும், இவ்வாறு பெரிதும் துன்புற்று வருந்தும், நல்ல நுதலையுடைவளது (நெற்றியை) பசலை நீங்கும்படி, அப்பசலைதான், தலைவனிடம் இவளுக்கு விருப்பமாகும் ஒரு சொல்லைக் கூறுதற்கு உடன்படாதோ.



## 7.19.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. தலைவி நெஞ்சிடம் யாது குறிப்பிட நின்றாள்?
2. பெரும்பதுமனார் கண்டோர் கூற்றாக கூறும் கருத்து யாது?

சங்க இலக்கியம்

குறிப்புகள்

3. செவிலித்தாய் உணர்ந்து கூறியது யாது?

**பெருவினா :**

4. தலைவியின் கூற்று வழி புலனாகும் அன்பின் உயர்வையும் பிரிவின் துயரையும் சான்றுகள் வழி நிறுவுக
5. பாலைத் திணைப் பாடல்கள் வழி புலனாகும் பாலை நிலக்காட்சிகளைத் தொகுத்து உரைக்க

## 7.20.தொகுத்துக் காண்போம். :

வறண்ட பாலை நிலத்தின் வழியே தலைவன் செலவு மேற்கொள்ளுதல், அவனைப் பிரிந்து தலைவி வாடுதல், தலைவனுடன் தலைவி உடன்போக்கு செல்லுதல் பேன்ற செய்திகளை மாணவர்கள் தலைவன் தலைவியின் மனவலிமையையும், இல்லற வாழ்வின் முக்கியத்துவத்தையும் இப்பாடப்பகுதியின் மூலம் அறியலாகின்றது.

## 7.21. மேலும் பயில்வதற்கான நூல்கள் :


- குறுந்தொகை விளக்கம், மகாவித்வான் ரா.ராகவையங்கார், அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலை நகர்,
- குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா. உ.வே.சா நூல் நிலையம்,. சென்னை-90.
- குறுந்தொகை மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- குறுந்தொகை மூலமும் உரையும், புலியூர்கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- குறுந்தொகை மூலமும் உரையும், புலவர் வி.நாகராசன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை98.

குறிப்புகள்

# கூறு8-குறுந்தொகை-பாலைத் திணைப்பாடல்கள் - 51 முதல் 93 வரை

## 8.1.முன்னுரை :

சிறிய அளவிலான 400 பாடல்களைக் கொண்டு அமைந்த இலக்கியம் குறுந்தொகை. இந்நூலின் 4 முதல் 8 அடி வரையில் உள்ள பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலினைத் தொகுத்தவர் உப்பூரிக்குடிகிழார் ஆவார். இந்நூலினைத் தொகுக்கச் செய்தவர் பூரிக்கோ. இந்நூலின் பாடல்கள் அகவற்பாடல்களால் ஆனது. இந்நூலின் பாலைத் திணைப்பாடல்கள் மட்டும் நம் பாடப்பகுதியாக அமையப்பெற்றுள்ளது.

## 8.2.குறிக்கோள்கள் :

வறண்ட பாலை நிலத்தின் தன்மையையும், அங்கு காணப்படும் கொடிய விலங்குளின் தன்மையையும், அவற்றினுள்ளே காணப்படும் காதல் குறியீடுகளையும், தலைவன் தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய் போன்ற வாயில்களின் வழியே மாணவர்களுக்கு உணர்த்துவதாக அமையவிருக்கின்றது.

## 8.3.பாடல் : 1(56) : தலைவன் கூற்று :

**பாடியவர் : சிறைக்குடி ஆந்தையார்**

(தலைமகன் உடன்போக்கிற்கு இசையாமல் மறுத்துத் தானே போகின்ற இடைச் சுரத்தின் வழிப்பற்றி கூறியது)

வேட்டச் செந்நாய் கிளைத்து ஊண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகல் சில் நீர்
வளை உடைக் கையள் எம்மொடு உணீஇயர்
வருகதில் அம்ம தானே
அளியளோ அளியல், என் நெஞ்சு
அமர்ந்தோளே

வேட்டை மேற்கொண்டு சென்ற செந்தாய், தன் கால்களால் நிலத்தைத் தோண்டி, உண்டு, எஞ்சியதாகிய, காட்டு மல்லிகையின் சருகுகளால் மூடப்பட்ட, அழுகல் நாற்றத்தையுடைய சிலவாகிய நீரை, வளையணிந்த கையையுடையவளாய், எம்மொடு சேர்ந்து உண்பதற்கு என்னுடன் வருவாளாகுக. அவ்வாறு உடன் வந்தால் என் நெஞ்சத்தில் விரும்பித் தங்கியுள்ள அத்தலைவி, மிகவும் இரங்கத்தக்கவள்.

## 8.4.பாடல் : 2 (59) : தோழி தலைவியிடம் கூறியது :

**பாடியவர் : மோசிகீரனார்**

(தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவிக்கு தோழி ஆறுதல் கூறியது)

பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அரலைக் குன்றத்து அகல்வாய்க் குண்டு
சுனைக்
குவளையொடு பொதிந்த குளவி நாறு நின்

*Self -Instructional Material*

குறிப்புகள்

நறுநுதல் மறப்பரோ மற்றே முயலவும்,
சுரம் பல விலங்கிய அரும் பொருள்
நிரம்பா ஆகலின் நீடலோ இன்றே.

ஒரு கண் மரக்கிணையை இயக்குகின்ற, தாளத்தையுமடைய, பாணர் முதலிய இரவலர்களைப் பாதுகாக்கின்ற அரசனின் அதலை என்னும் குன்றத்தின்கண, அகன்ற வாயினையுடைய ஆழமான சுனைகளில் பூத்த குவளை மலர்களோடு சேர்த்துக் கட்டிய காட்டு மல்லிகையின் மணம் வீசுகின்ற உன்னுடைய நல்ல நெற்றியைத் தலைவல் மறப்பாரோ!. பலநாள் வருந்தி முயன்றாலும், பாலை நிலங்கள் பல குறுக்கிட, அவற்றைக் கடந்து தேடும் கிடைத்தற்கரிய பொருள், முற்றவும் கைகூடாது, எனவே அப்பொருள்களைப் பெற்றே மீண்டு வருவேன் எனக் கருதி தலைவன் அந்நாட்டில் நீண்டநாள் தங்கமாட்டார்.

## 8.5.பாடல் : 3(63) : தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது :

**பாடியவர் : உகாய்க்குடிகிழார்**

(பொருள் தேட முயலும் தலைவன் தன் நெஞ்சிடம் கூறுவது)

ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்லெனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி
அவ்வினைக்கு
அம் மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே.

அறம் பெற ஈதலும், இன்பம் பெறத் துய்த்தலும், ஆகிய காரியங்கள், அவற்றின் காரணமாகிய பொருள் இல்லாத வறியவனிடம் காணப்படுவதில்லை. ஆதலின், பொருள் தேடுவதற்குரிய செயல்களை, ஏனைய தொழில்களை விடச் சிறப்புடையதாக நீ மிகவும் நினைத்தனை, அதனைத் தேடுவதற்குத் துணையாக அழகிய மாமை நிறத்தையுடைய, நம் காதலியும் உடன் வருவாளோ? அவளின்றித் தனியாக என்னைச் செல்லவிடுவாயோ? நெஞ்சே! யாது நின் கருத்து எனக் கூறுக.

## 8.6.பாடல் : 4(67) : தலைவி கூற்று : தலைவனின் பிரிவால் வருந்துதல் :

**பாடியவர் : அள்;ர் நன்முல்லையார்**

உள்ளார் கொல்லோ தோழி, கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண் பழம்
புது நாண் நுழைப்பான் நுதி மாண் வள்
உகிர்ப்
பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்,
நிலங்கரி கள்ளியங் காடு இறந்தோரே?

தோழி! கிளி தன்னுடைய வளைந்த அலகிடத்தே பற்றிக் கொண்டுள்ள, வேம்பினது ஒள்ளிய பழம், புதிய நூலை நுழைக்கும் பொருட்டு, மகளிர் தங்கள் விரல் நுனிகளில் அழகாக விளங்கும் கூர்மையான நகங்களுக்கிடையே வைக்கப்பட்டுள்ள பொற்காசு போலக்

காட்சியளிக்கும், நிலம் கரிந்துள்ள, கள்ளிச் செடிகள் மிகுந்துள்ள இத்தகைய காட்டினைக் கடந்து சென்ற நம் காதலர், நம்மை நினைப்பாரோ?.



## 8.7.பாடல் : 5 (71) : தலைவன் கூற்று :

**பாடியவர் : கருவூர் ஓதஞானியார்**

(பொருள் தேடச் சென்ற தலைவன் தன் நெஞ்சிற்கு உரைத்தது)

மருந்தெனின் மருந்தே, வைப்பெனின் வைப்பே,
அரும்பிய சுணங்கின் அம் பகட்டு இள
முலைப்ப
பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்
கல் கெழு கானவர் நல்குறு மகளே.

மார்பில் தோன்றிய சுணங்கினையும், அழகிய பருத்த இளமையுடைய முலையினையும், பெரிய தோளினையும் நுண்ணிய இடையையும் உடைய, கற்கள் பொருந்திய கானவர் நல்கிய மகள், பிரிந்து போய்த் தேடிய பொருளால் அறம் செய்து, அவ்வுலகில் இன்பமாக இருப்பது மருந்து என்றால் இவளே அம்மருந்து ஆவாள். அப்பொருளினால் இவ்வுலகில் இன்பமாக அனுபவப்பதற்குரியச் செல்வம் என்றால், இவளே அச்செல்வம் ஆவாள்.

## 8.8.பாடல் : 6 (77) : தலைவி தோழியிடம் கூறியது :

**பாடியவர் : மதுரை மருதன் இளநாகனார்**

பிரிவின் கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்கு உரைத்தது,

அம்ம வாழி தோழி, யாவதும்
தவறு எனின் தவறோவிலவே, வெஞ்சுரத்து
உலந்த வம்பலர் உவல் இடு பதுக்கை
நெடு நல் யானைக்கு இடு நிழலாகும்
அரிய கானம் சென்றோர்க்கு
எளியவாகிய, தட மென் தோளே.

தோழி! நீ வாழ்க! ஒன்று கூறுவேன். கேட்பாயாக. கொடிய பாலை நிலத்து வழியல் இறந்த வழிப்போக்கருடைய உடல்களை மறைத்துத் தழையால் மூடப்பட்டுள்ள கற்குவியலானது, உயர்ந்த நல்ல யானைக்கு, அமைக்கப்பட்ட நிழலாகப் பயன்படும். இத்தகைய கடத்தற்கரிய பாலை நிலத்தில் என்னைப் பிரிந்து சென்ற தலைவன் திறத்து மெலரிந்தனவாகிய என்னுடைய பெரிய மெல்லிய தோள்களை தவறு உடையன என்று நீ கூறினால் சிறிதும் தவறு இல்லையாகும்.



## 8.9.பாடல் : 7(79) : தலைவி கூற்று :

**பாடியவர் : குடவாயில் கீரனக்கனார்**

பொருள் தேடுவதற்காக பிரிந்த தலைமகனை நினைத்து தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கான யானை தோல் நயந்து உண்ட
பொரி தாள் ஓடை வளி பொரு நெஞ்சினை

அலங்கல் உலவை ஏறி ஒய்யெனப்
புலம்புதரு குரல புறவுப் பெடை பயிரும்
அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்ச்
சேந்தனர் கொல்லோ, தாமே யாம் தமக்கு
ஒல்லேம் என்ற தப்பற்குச்
சொல்லாது அகறல் வல்லுவோரே?

நாம் தலைவன் பிரிவினைத் தாங்கமாட்டோம் என்று கூறிய தவறால், அவர் நம்மிடம் சொல்லாமல் நீங்குதலில் உறுதியுடையவராய் விளங்கினார். பொரிந்த அடிமரத்தையுடைய ஓமை மரத்தின் பட்டைகளைக் காட்டு யானைகள் விரும்பித் தின்னும். காற்று மோதுகின்ற அம்மரத்தின் நெடிய கிளைகளில் உள்ள அசைகின்ற வற்றிய கொம்பில் ஏறி, ஒய்யென, தனிமையையும், வருத்தத்தையும் வெளிப்படுத்தும் குரலை உடையனவாய், ஆண்புறாக்கள், பெண்புறாக்களை அழைக்கும். இத்தகைய பாலை நிலத்தில் அமைந்த அழகிய குடிகளையுடைய சிற்றூரில் அவர் தங்கினாரே.

## 8.10.பாடல் : 8(84) : செவிலித்தாய் கூறியது :

**பாடியவர் : மோசிகீரனார்**

பெயர்த்தனென் முயங்க யான் வியர்த்தனென்
என்றனள்,
இனி அறிந்தேன் அது துனி ஆகுதலே,
கழல் தொடி ஆய் மழை தவழ் பொதியில்
வேங்கையும் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே.

கழலுமாறு அணிந்துள்ள தோள் வளையினை உடையவன் ஆய் என்ற வள்ளர் ஆவன். அவனுடைய மலை, மேகங்கள் தவழும் பொதியில் மலை ஆகும். ஆண்டு வளர்ந்துள்ள வேங்கையின் மலர், காந்தளின் மலர் ஆகியவற்றின் மணத்தை உடையவளாய், ஆம்பல் மலரைவிட குளிர்ச்சியுடையவளாய் விளங்குபவள் தலைவி, அவளை நான் ஒருமுறை தழுவியதோடு அமையாமல், மீண்டும் தழுவும்போது, அதற்கு உடன்படாது அவள் 'நான் வியர்ந்தேன்' என்றாள். நான் அங்ஙனம் தழுவியபோது அவளுக்கு வெறுப்பு உண்டாதற்குக் காரணமாயிற்று என்பதை, அவள் உரைத்த போது உணரவில்லை. ஆனால், அவள் உடன்போக்கில் சென்ற இப்பொழுது அறிந்துகொண்டேன்.

## 8.11.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. குறுந்தொகையில் தலைவனின் பிரிவில் வருந்திய தலைவிக்கு தோழி கூறிய ஆறுதல் மொழி யாது?
2. தலைவன் மீது தவறில்லை என்ற தலைவியின் வாதம் யாது?

**பெருவினா :**

3. தலைவன் கூற்றில் புலனாகும் அன்பின் உயர்வினை சான்று காட்டி குறுந்தொகைப் பாடல் வழி நிறுவுக.

## 8.12.தொகுத்துக் காண்போம். :

வறண்ட பாலை நிலத்தின் தன்மையையும், அங்கு காணப்படும் கொடிய விலங்குளின் தன்மையையும், அவற்றினுள்ளே காணப்படும் காதல் குறியீடுகளையும், தலைவன் தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய் போன்ற வாயில்களின் வழியே இப்பகுதியின் மூலம் அறியலாகின்றது.

குறிப்புகள்

## 8.13.மேலும் பயில்வதற்கான நூல்கள் :


- குறுந்தொகை விளக்கம், மகாவித்வான் ரா.ராகவையங்கார், அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலை நகர்,
- குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா. உ.வே.சா நூல் நிலையம்,. சென்னை-90.
- குறுந்தொகை மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- குறுந்தொகை மூலமும் உரையும், புலியூர்கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- குறுந்தொகை மூலமும் உரையும், புலவர் வி.நாகராசன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை98.

# கூறு – 9-நற்றிணை-முதல் இருபது பாடல்கள்

## 9.1.முன்னுரை :

எட்டுத்தொகை நூல்களை அறிமுகம் செய்திடக்கூடிய வெண்பாவில் குறிப்பிடும் முதல் நூல் இந்த நற்றிணையே ஆகும். இந்நூலில் 9 முதல் 12 வரையில் அடி வரையறையுள்ள 400 பாடல்கள் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. இவற்றின் பாடல்கள் 275 புலவர்களால் பாடப்பட்டுள்ளது. இந்நூலினைத் தொகுத்தவர் பெயர் அறியபடவில்லை. ஆனால் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டின் மாறன் வழுதி ஆவான். நம் பாடப்பகுதியில் முதல் இருபது பாடல்கள் மட்டும் முதற்பாதியில் வைக்கப்பட்டுள்ளது.

## 9.2.குறிக்கோள்கள் :

சங்க கால மக்களின் பழக்க வழக்கங்கள் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, கொடைத் திறம், மக்களின் அறவாழ்வு போன்ற பல செய்திகளைத் தெளிவாக நமக்கு எடுத்துரைக்கின்ற ஆழ்ந்த அன்பின் நிலைகளையும் கண்டு உணர்வதே இப்பகுதியின் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## 9.3.பாடல் : 1 : தலைவி தோழியிடம் கூறியது :

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : கபிலர்

நின்ற சொல்லர், நீடு தோறு இனியஓர்,
என்றும் என்தோள் பிரிபு அறியலரே,
தாமரைத் தண் தாது ஊதி மீமிசைச்
சாந்தில் கொடுத்த தீம் தேன் போலப்
புடைய மன்ற, புரையோர் கேண்மை,
நீர் இன்று அமையா உலகம் போலத்
தம் இன்று அமையா நம் நயந்து அருளி,
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே.

நம் காதலர் நிலைத்த செல்லையுடையவர். நீண்ட நாள் இனிமை இருக்கச் செய்பவர். என் தோளை என்றும் பிரிய அறியாதவர். தாமரையின் குளிர்ந்த தாதினை வண்டு ஊதி, மலை மேலுள்ள சந்த மரத்தில் இனிய தேனைச் சேர்த்து வைக்கும். அத்தேன்போல் அவ்வுயர்ந்தோர் நட்பு உறுதியாக உயர்வுடையது. நீர் இல்லாமல் உலகம் வாழ் முடியாது. அதுபோல அவர் இல்லாமல் நாம் வாழ முடியாது. அவ்வாறாய நம்மை அவர் விரும்பி அருள்செய்து நமது நறிய நெற்றியில் பசவலை படர்தலைக் கண்டு அஞ்சுவர். செய்வதை அறியாதவராய் உள்ளார். அவர் என்னைப் பிரிந்து சிறுமை அடைவாரோ? மாட்டார்.

துறை விளக்கம் :

தலைவன் பிரிவான் என்பதை அறிந்த தோழி தலைவியிடம் கூற அவள் தலைவனைப் புகழ்ந்தது.

குறிப்புகள்

## 9.4.பாடல் : 2 : கண்டோர் கூற்று :

**திணை : பாலைத் திணை** **பாடியவர் : பெரும்பதுமனார்**

அழுந்து பட வீழ்ந்த பெருந்தண் குன்றத்து,
ஒலி வல் ஈந்தின் உலவையங்காட்டு
ஆறு செல் மாக்கள் சென்னி எறிந்த
ம்மறுத் தலைய, நெய்த்தோர் வாய,
வல்லியப் பெருந்தலைக் குருளை, மாலை,
மடரல் நோக்கு இண்டு இவர் ஈங்கைய சுரணே
வை எயிற்று ஐயள் மடந்தை முன் உற்ற
எல் இடை நீங்கும் இளையோன் உள்ளம்,
காலொடு பட்ட மாரி
மால் வரை மிளிர்க்கும் உருமினும் கொடிதே

நெடுங்காலம் வழங்கி வந்தது பெரிய குளிர்ந்த மலை. அதில் தழைத்த வலிய ஈந்து மரத்தின் கிளைகள் விளங்கம். அழகிய அக்காட்டு வழியில் நடந்து செல்லும் மக்களின் தலையைப் புலிக்குட்டிகள் மோதும். தலை, சிவந்த மறுப்பட்டதலை, குருதி படிந்த வாய். பெரிய தலை இவற்றையுடையனவாய் விளங்கம். மாலைக் காலத்தில் பதுங்கியிருக்கும் மரலின் தூறுகளை நிமிர்ந்து நோக்கும், அங்கே இண்டங்கொடி படர்ந்திருக்கும், ஈங்கை மரமுள்ள காடு உள்ளது. அக்காட்டு வழியல். கூர்மையான பற்களைக் கொண்ட, தலைமையுடைய மடந்தையை முன்னே நடக்கச் செய்து, பின்னேநடந்து செல்கிறான் தலைவன். ஞாயிறு தோன்றி நிலம் தெளிந்த நேரத்தில் ஊரை விட்டு நீங்கிக் கொண்டிருக்கிறான். இந்தத் தலைவன். இவன் உள்ளம் கடியது. காற்றோடு சேர்ந்த மழையிடத்துத் தோன்றிய பெரிய மலையைப் புரட்டும் இடியைக்காட்டிலும் அது கடியது.

துறை விளக்கம் :

களவொழுக்கத்தில் சிறந்த தலைவன், தலைவியருள் சிலர் மணம் செய்து கொள்ளத் தலைவன் ஊருக்கு உடன்போவார். அவரை வழியின் நடுவே கண்டார் கூறியது.

## 9.5.பாடல் : 3 : தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது :

**திணை : பாலைத் திணை** **பாடியவர் : இளங்கீரனார்**

ஈன் பருந்து உயவும் வான் பொரு நெடுஞ்சினைப்
பொரி அரை வேம்பின் புள்ளி நீழல்,
கட்டளை அன்ன இட்டு அரங்கு இழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டு ஆடும்,
வில்ஏல் உழவர் வெம்முனைச் சீறூர்ச்
சுரன் முதல் வந்த உரன் மாய் மாலை
உள்ளினென் அல்லலெனோ யானே, உள்ளிய
வினை முடித்தன்ன இனியோள்
மனை மாண் சுடரொடு படர் பொழுது எனவே?

நெஞ்சே! ஈன்ற பருந்து அடைகாக்க உட்கார்ந்து வரும்தும்படியானதும், வானத்தைத் தொடும் உயர்ந்த கிளைகளையுடையதும், பொரிந்த அடிமரத்தையுடையது மான வேப்ப மரத்தின் புள்ளிகளை உடைய நிழலிலே, பொன்னை உரைக்கும் கல்லைப் போல வடடமான அரங்கு அமைத்து, தம் தொழில் கல்லாத சிறுவர்கள் நெல்லிக்காயை விளையாட்டுக் கருவியாகக் கொண்டு ஆடுவர். அங்கே வில்லை ஏராகக் கொண்டு உழும் உழவர் உள்ளனர். அவர் வழிப்பறி செய்வோர். அவரது வெயய் குடியிருப்பினையுடைய சீறூர் உண்டு. அந்த காட்டின் வழியாக முன்னொரு சமயம் யான் சென்றபோது என் வலிமையைத் தொலைத்த மாலைக் காலத்திலே யான் நினைத்த செயல் ஒன்றுண்டு. கருதிய செயல் முடிந்தபோது ஏற்படும் இன்பம் போன்றவளான இனிய என் காதலி, மனையில் மாட்சிமைப்பட்ட விளக்கை ஏற்றி வைத்து அன்போடு என்னை நினைக்கும் மாலைக்காலம் இது – என்று நினைத்தேன் அல்லவா? அதனால் நெஞ்சே! இப்போது நான் வாரேன்.

துறை விளக்கம் :

முன்னொரு காலத்தில் பொருள் தேடப்பிரிந்த தலைவன் பின்னும் பொருள் தேட நினைத்த நெஞ்சிற்குச் சொல்லியது.

## 9.6.பாடல் : 4 : தலைவி கூற்று

**திணை : நெய்தல்** **பாடியவர் : அம்மூவனார்**

கானலஞ் சிறுகுடிக் கடல் மம் பரதவர்
நீல் நிறப் புன்னைக் கொழு நிழல் அசைஇத்
தண் பெரும் பரப்பின் ஒண் பதம் நோக்கி,
அம் கண் அரில் வலை உணக்கும் துறைவனொடு,
அலரே அன்னை அறியின் இவண் உறை வாழ்க்கை
அரிய ஆகும் நமக்கு எனக் கூறின்
கொண்டும் செல்வர் கொளல் தோழி, உமணர்
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்
கண நிரை கிளர்க்கும் நெடு நெறிச் சகடம்
மணல் மடுத்து உரறும் ஓசை கழனிக்
கருங்கால் வெண்குருகு வெரூஉம்
இருங்கழிச் சேர்ப்பின் தம் உறைவின் ஊர்க்கே?

தோழி! கடற்கரையிலுள்ள அழகிய சிறுகுடியில் வாழும் பரதவர் கடல் மேற்சென்று மீன்பிடித்து வாழ்க்கை நடத்தும் இயல்பினர். நீலநிறப் புன்னை மரத்தின் கொழுவிய நிழலிலே தங்கியிருப்பர். அந்நேரத்தில் அழகிய கண்களையுடைய முறுக்குள்ள கயிற்றால் பின்னிய வலையை உலர்த்திக் கொண்டிருப்பர்.

அவ்வாறாய துறைவனிடம், 'ஊரில் எழுந்த அலரை அன்னை அறிந்துவிட்டால் இங்கே வாழும் இன்பவாழ்க்கை நமக்கு இல்லாமற்

போகும்' என்று எடுத்துரைத்தால் அவர் நம்மை அழைத்துக் கொண்டு சென்றாலும் செல்வார்.

உப்பு வணிகர் வெண்கல் போன்ற உப்பை விலைபேசிப் பெறுவர். தம் நீண்ட தொடர் வண்டிகளில் ஏற்றி விற்க ஓட்டிச் செல்வர். அப்போது வழியில் படுத்திருக்கும் கூட்டமான ஆநிரையை விலக்க ஓசை எழுப்புவர். மணல் வழியில் செலுத்தி முழக்கமிடுவர். இந்த ஓசைகளை வயல்களிலிருக்கும் கரிய கால் வெள்ளை நாரைகள் கேட்டு அஞ்சும். அவ்வாறாய கடற்கரையிலிருக்கும் தாம் வாழும் ஊர்க்கே நம்மை அழைத்துச் செல்வர்.

குறிப்புகள்

துறை விளக்கம் :

தலைவன் சிறைப்புறமாக இருந்தான். தோழி அலர் அச்சம் தோன்றச் சொல்லி வரைவு கடாயது

## 9.7.பாடல் : 5 : தோழி கூற்று :

**திணை : குறிஞ்சித் திணை** **பாடியவர் : கபிலர்**

நிலம் நீர் ஆரக், குன்றம் குழைப்ப,
அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர் கால்யாப்பக் ,
குறவர் கொன்ற குறைக் கொடி நறைப் பவர்
நறுங்காழ் ஆரம் சுற்றுவன அைப்பப்
பெரும் பெயல் பொழிந்த தொழில எழிலி
தெற்கு ஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்
அரிதே, காதலர்ப் பிரிதல் இன்று செல்
இகுபெயல் தருஉம் வாடையொடு
மயங்கு இதழ் மழைக் கண் பயந்த தூதே.

நிலத்தில் நீர் நிரம்பவும், மலையானது மரம் செடிகளால் தழைப்பவும், அகன்ற வாயையுடைய பசிய சுனையை அடுத்த இடங்களில் பயிர்கள் முளைத்து வெளியே வரவும், குறவர்கள் வெட்டிக் குறைத்த வாசனைக் கொடிகள் நறிய வயிரம் பொருந்திய சந்தன மரங்களைத் தழைக்கவும் பெரும் பெயல் பொழிந்த தொழிலையுடைய மேகம் தென்திசையில் எழுந்து சென்றது.

இந்த முன்பனிக்காலத்தில் காதலரைப் பிரிந்து வாழ்தல் அரிதே ஆகும். இன்னுங்கேள்! வாடையால் வருந்திய இமைகளை உடைய உன் கண்கள் உண்டாக்கிய நீர்த் துணிகளாகிய தூதே இன்றும் செல்லும் இளைஞரைப் போகாது தடுத்து திரும்பும்படி செய்யும். ஆதலால், கவலை விடுக.

*Self -Instructional Material*

துறை விளக்கம் : தலைவன் பிரிந்து செல்லவிருக்கும் குறிப்பை அறிந்து வெறுப்பட்ட தலைவிக்குத் தோழி சொல்லியது. மேகம் பெரும் பெயல் பொழ்ந்ததனால் ஏற்பட்ட பயன்கள் சொல்லப்படுகின்றன.

குறிப்புகள்

## 9.8.பாடல் : 6 : தலைவன் தன் நெஞ்சிடம் தோழி கேட்கும்படி கூறியது :

**திணை : குறிஞ்சித் திணை** **பாடியவர் : பரணர்**

நீர் வளர் ஆம்பல் தூம்புடைத் திரள் கால்
நார் உரித்தன்ன மதன் இல் மாமைக்
குவளை அன்ன ஏந்து எழில் மழைக் கண்
திதலை அல்குல், பெருந்தோள் குறுமகட்கு,
எய்தச் சென்று செப்புநர்ப் பெறினே,
இவர் யார்? என்குவள் அல்லள், முனாஅது
அத்தக் குமிழின் கொடு மூக்கு விளை கனி
எறிமட மாற்கு வல்சி ஆகும்ஷ
வல்வில் ஓரி கானம் நாறி,
இரும் பல் ஒலிவரும் கூந்தல்
பெரும் பேதுறுவள் யாம் வந்தனம் எனவே.

நீரிலே வளரும் ஆம்பலின் (அல்லியின்) உள் துளையுடைய திரண்ட தண்டுகளின் நார் உரித்தது போன்ற அழகு குறைந்த மாமையை (மாந்தளிர் நிறத்தை)யம், குவளை மலர் போன்ற மிக்க அழகுள்ள குளிர்ந்த கண்களையும், தேமலுள்ள அல்குலையும், பெரிய தோள்களையும் உடைய என் காதலியாகிய இளை மகளுக்கு, அவள் இருக்குமிடம் பொருந்தச் சென்று என்னைப் பற்றிச் சொல்லுவார் உண்டானால், இவர் யார் என்று கேட்கமாட்டாள். வெறுத்திருப்பாள். காட்டிலிருக்கும் குமிழ மரத்தின் வளைந்த மூக்குடைய விளைந்த பழங்கள், துள்ளிக் குதித்து விளையாடும் இளைய மானுக்கு உணவாகும். வலிய வில்லை உடைய ஓரி என்பானின் அக்காடு மணக்கும். அம்மணத்தோம் கருமையோடும் கூடிய பலவாகத் தழைத்த கூந்தலை உடையவள் என் காதலி. அவள், நான் வந்துள்ளேன் என்பதை எண்ணி, மகிழ்ச்சியால் பெரும் மயக்கம் அடைவாள்.

துறை விளக்கம் :

களவொழுக்கத்தின் போது இரவில் குறித்தவிடத்தில் தலைவன் தலைவியைகச் சந்திக்க செல்லுதல். அங்கே தலைவியைக்காண முடியாத தலைவன் ஆற்றானாய்த் தோழி கேட்கும்படி தன் நெஞ்சிற்குச் சொல்வது உண்டு.

வல்வில் ஓரி என்பான் ஏழு வள்ளல்களில் ஒருவன். அவன் கானத்தில் குமிழப் பழம் மானுக்கு உணவாகும்.

## 9.9.பாடல் : 7 : தோழி தலைவியிடம் கூறுதல் :

**திணை : பாலைத் திணை** **பாடியவர் : நல்வெள்ளியார்**

குருடை நனந்தலைச் சுனை நீர் மல்கப்
பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்
கல் அலைத்து இழிதரும் கடுவரல் கான் யாற்றுக்
கழை மாய் நீத்தம் காடு அலை ஆர்ப்பத்

தழங்கு குரல் ஏறொடு முழங்கி வானம்
இன்னே பெய்ய மின்னுமால் தோழி
வெண்ணெல் அருந்திய வரி நுதல் யானை
தண் நறுஞ்சிலம்பில் துஞ்சும்
சிறியிலைச் சந்தின் வாடு பெருங்காட்டே.

வெண்மையான மூங்கிலின் நெல்லை உண்ட, வரிகளை உடைய நெற்றியைக் கொண்ட யானைகள் குளிர்ந்த நறிய மலையில் தூங்கும். சிறிய இலைகளையுடைய சந்தன மரங்கள் வெப்பத்தால் வாடும்படியான பெரிய காட்டில், அச்சமுள்ள, அகன்ற இடத்திலுள்ள சுனையில் நீர் நிறையவும், பெருமலையின் வரிசைகளில் அருவிகள் ஒலிக்கவும், கற்களை உருட்டிக் கொண்டு இறங்கிக் கடுமையாக வரும் காட்டாற்றில் மிதந்து வரும் மூங்கில்களை ஒடிக்கும் வெள்ளம் காடுகளை அலைத்து ஓசையிடவும், முழங்கும் ஓசை உடைய இடியோடு முழங்கி மேகம் இப்பொழுதே மழை பெய்ய மின்னுவதைப் பார்.

துறை விளக்கம் :

களவுக்குப்பின், திருமணம் செய்யப்பொருள் தேடப் பிரிந்தான் தலைவன். அப்பிரிவிற்கு ஆற்றாதவளாய் இருந்த தலைவிக்கு தோழி உரைத்தது.

பெருங்காட்டில், நீர் மல்க, அருவி ஆர்ப்ப, நீத்தம் காடு அலைப்ப, மழை பெய்ய, மேகம் முழங்கும்.

## 9.10. பாடல் : 8 : தலைவன் கூற்று :

**திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : பெயர் கிடைக்கப்பெறவில்லை**

அல்கு படர் உழந்த அரி மதர் மழைக்கண்,
பல்பூம் பகைத் தழை நுடங்கும் அல்குல்
திரு மணி புரையும் மேனி மடவோள்
யார் மகள் கொல்? இவள் தந்தை வாழியர்!
துயரம் உறீஇயினள் எம்மே அகல்வயல்
அரிவனர் அரிந்தும் தருவனர்ப் பெற்றும்
தண்சேறு தாஅய் மதனுடை நோன் தாள்
கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும்
திண் தேர்ப் பொறையன் தொண்டி
தன் திறம் பெறுக இவள் ஈன்ற தாயே.

நிலையாகத் துன்புறுத்தும்படியான, செவ்வரி பரந்த, செழித்த, குளிர்ந்த கண்கள், பல பூக்களால் மாறுபத் தொடுக்கப்பட்ட தழையை உடைய பூண்ட அல்குல், அழகிய நீலமணி போன்ற மேனி, இவற்றையும் மடப்பத்தையும் உடைய இப்பெண் என்னைத் துயரம் அடையும்படி செய்தாள். இவள் யார் மகளோ? இவள் தந்தை வாழ்க. திண்ணிய தேரை உடைய பொறையன் என்பானின் தொண்டி என்னும் ஊரின் அகன்ற வயல்களில் மகளிர் கண்கள் போலப் பூப்பூக்கும் நெய்தலின் அழகிய வலிய தண்டுகளையும் சேர்த்துக் கதிர்ப் போராகக் கட்டிக்கொண்டு வந்து

குறிப்புகள்

சேர்ப்பவர் சேர்ப்பர். அக்கதிர்ப் போரில் நெய்தல் பூ கண் போலப் பூத்திருக்கும். அத்தொண்டி மூதூர் எல்லா வளமும் பெற்றுத் திகழ்வது போல இவளைப் பெற்றெடுத்த தாயும் பெறுவாளாக.

துறை விளக்கம் :

முதல் சந்திப்பின் இறுதியில் தலைவி தன் கூட்டத்தோடு சேர்ந்ததைக் கண்ட தலைவன் சொல்லியது.

## 9.11.பாடல் : 9 : தலைவன் தலைவியிடம் கூறியது :

திணை : பாலைத் திணை பாடியவர் : சேரன் பாலைப் பாடிய பெருங்கடுங்கோ

அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண் கண்டாஅங்கு
அலமரல் வருத்தம் தீர, யாழ நின்
நலமென் பணைத்தோள் எய்தினம் ஆகலின்
பொரிப்பூம் புன்கின் அழல் தகை ஒண் முறி
சுணங்கு அணி வனமுலை அணங்கு கொளத் திமிரி,
நிழல் காண்தோறும் நெடிய வைகி,
மணல் காண்தோறும் வண்டல் தைஇ,
வருந்தாது ஏகுமதி வால் எயிற்றோயே,
மா நனை கொழுதி மகிழ் குயில் ஆலும்
நறுந்தண் பொழில் கானம்
குறும் பல் ஊர, யாம் செல்லும் ஆறே.

வெண்மையான பற்களை உடையவளே! நிலைத்த நற்செயல்களை முயன்று செய்து முடிக்கும் ஆர்வமுள்ள மக்கள் தாம் வழிபடும் தெய்வத்தைக் கண்ணெதிரே கண்டது போல என் மனச்சுழற்சித் துன்பம் நீங்க உனது அழகிய மெல்லிய பருத்த தோள்களை அடைந்துவிட்டேன். ஆகையால் பொரி போன்ற பூக்களை உடைய புன்க மரத்தின் அழல் போன்ற ஒள்ளிய தளிர்களை உன் தேமல் படர்ந்த அழகிய கொங்கைகளில் அழகு உண்டாகும்படி பூச்க் கொள்க. நிழலைக்காணும் தோறும் நீண்ட நேரம் நின்று தங்கி வருக. மணலைக் காணும் தோறும் சிற்றில் இழைத்து விளையாடி வருக. இவ்வாறு செயல்பட்டு வருந்தாது என்னோடு வருக. மாமரத்தின் அரும்புகளைக் கோதிமகிழும் குயில்கள். அவை கூவும் நறிய குளிர்ந்த பொழில்களை உடைய கானகத்தில் யாம் இருவரும் செல்வோம். அவ்வழியில் சிறிய ஊர்கள் பல உள்ளன.

துறை விளக்கம் :

உடன்போக்கு என்பது தலைவன் தன் ஊருக்குத் தலைவியைக் கொண்டு செல்லுதல்.



## 9.12.பாடல் : 10 : தோழி தலைவனிடம் சொன்னது :

திணை : பாலைத் திணை பாடியவர் : பெயர் கிடைக்கவில்லை

அண்ணாந்து ஏந்திய எவன முலை தளரினும்,
பொன்நேர் மேனி மணியின் தாழ்ந்த

குறிப்புகள்

நல் நெடுங்கூந்தல் நரையொடு முடிப்பினும்,
நீத்தல் ஓம்புமதி, பூக்கேழ் ஊர!
இன் கடுங்கள்ளின் இழை அணி நெடுந்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட்டு யானைப் போஒர் கிழவோன்
பழையன் வேல் வாய்த்தன்ன, நின்
பிழையா நல் மொழி தேறிய இவட்கே.

பூக்களின் ஒளிமயமான ஊரனே! குடிப்பதற்கு இனிமையும் குடித்த பின் வெறியூட்டும் கடுமையும் உடைய கள்ளினையும் அணிகள் அணிந்த நெடிய தேர்களையும் உடையவர் வெற்றிச் சோழர். அவர் கொங்கர் என்பாரை அடக்கி வைக்க விரும்பினர். வெண்மையான கொம்பானைகளை உடையவனும் 'போஒர்' என்னும் ஊருக்கு உரியவனுமான பழையன் என்னும் தானைத் தலைவனிடம் தெரிவித்தனர். பழையனின் வேல் தப்பாது வாய்க்கும் தன்மையுடையது. அவ்வேல் போன்ற உன் பிழையாத நல்ல சொற்கை நம்பித் தெளிந்தவள் இவள். இவளது அண்ணாந்து நிமிர்ந்துள்ள அழகிய கொங்கைகள் தளர்ந்து சாய்ந்த காலத்திலும், பொன் போன்ற இவளது மேனியிலே கருமணி பொலத் தாழ்ந்து தொங்கம் நல்ல நீண்ட கூந்தல் நரையோடு முடிக்கப்படும் முதுமைக் காலத்திலும் இவளைக் கைவிடாது காப்பாயாக.

துறை விளக்கம் :

உடன்போக்கில் தலைவனுடன் அனுப்பி வைக்கும் தோழி அவன் கையில் தலைவியை ஒப்படைத்துக் கூறியது.

## 9.13.பாடல் : 11 : தோழி கூற்று :

திணை : நெய்தல் திணை பாடியவர் : உலோச்சனார்

பெய்யாது வைகிய கோதை போல
மெய் சாயினை, அவர் செய் குறி பிழைப்ப
உள்ளி நொதுமலர் நேர்பு உரை தெள்ளிதின்
வாரார் என்னும் புலவி உட்கொளல்,
ஒழிக மாள நின் நெஞ்சத்தானே
புணரி பொருத பூ மணல் அடைகரை
ஆழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பு ஆய்ந்து ஊர,
நிலவு விரிந்தன்றால் கானலானே.

தலைவியே ! தலைவர் செய்த இரவுக்குறி தவறிப் போக, அணியாமலிருந்த பூமாலை போல நீ உடல் மெலிந்தாய். அயலார், உறுதியாக அவர் வாரார் என்று சொன்ன உரையை நினைத்து உனத நெஞ்சத்தில் வெறுப்புக் கொள்ளுதலை விடுக. அலை மோதிய, இள மணல் பரந்த கரையினை உடைய கடலின் பக்கத்தில் திரியும் நண்டுகள் தேராழியால் நசுங்கிப் போகாமல் பாதுகாத்துத் தேர்ப்பாகன் கடிவாள

வாரைப் பிடித்துக் கவனித்து ஊர்ந்து வரக் கானலில் நிலவு விரிந்தது காண்பாயாக.

துறை விளக்கம் :

காவல் மிகுதியால் தடைகள் ஏற்பட்ட போது துயரம் தாங்காத தலைவிக்கு தோழி, தலைவன் அருகில் மறைவாயிருந்த நேரத்தில் கூறியது.

## 9.14.பாடல் : 12 : தோழி தலைவனிடம் கூறியது :

திணை : பாலைத் திணை பாடியவர் : கயமனார்

விளம்பழம் கமழும் கமஞ்சூல் குழிசிப்
பாசம் தின்ற தேய் கால் மத்தம்
நெய் தெரி இயக்கம் வெளில் முதல் முழங்கும்
வைகு புலர் விடியல் மெய் கரந்து, தன் கால்
அரி அமை சிலம்பு கழீஇ, பல் மாண்
வரி புனை பந்தொடு வைஇய செல்வோள்
இவை காண்தோறும் நோவர் மாதோ
அளியரோ அளியர் என் ஆயத்தோர் என
நும்மொடு வரவு தான் அயரவும்
தன் வரைத்து அன்றியும் கலுழ்ந்தன கண்ணே.

நிறைந்த கருப்பம் காணப்படும் வயிறு போன்ற தாழிப் பானையில் விளாம்பழம் கமழும். அத்தாழியில் தயிர் கடைய மத்திட்டு எதிரே வெளில் என்னும் தூணில் தேய்வு காணப்படும். வெண்ணெய் தெரியும் இயக்கத்தின் போது முழக்கம் கேட்கும். இது, வைகறைப் பொழுது புலர்ந்து கொண்டிருக்கும் விடியல் காலை ஆகும். இந்த நேரத்தில் தலைவனோடு உடன்போக்கில் செல்ல விரும்பிய தலைவி தன்னைப் பிறர் பார்த்துவிடாதபடி மறைத்துத் தன் காலில் அணிந்திருந்த பரலொடு சேர்ந்த சிலம்பைக் கழற்றிப் பல மாட்சிமைப்பட்ட வரிகள் செய்த பந்தொடு சேர்த்து வீட்டின் ஓரிடத்தில் வைத்து வரச் சென்றவள் நினைத்து விட்டாள். நான் பிரிந்தால் என்னை நினைத்து வருந்துவர். அவர் இரக்கப்படத தகுந்தவர். அவர் வருந்தும்படியான செயல் என்னால் செய்ய முடியாது’ என்று தீர்மானித்தாள். அவள் கண்கள் கண்ணீர் விட்டன. ஆதலால் தலைவ! உன்னோடு உடன்வர அவள் விரும்பியும் தன் அளவில் நில்லாமல் ஆயத்தார் வருத்தத்தை நினைத்து அவள் கண்கள் கலங்கின.

துறை விளக்கம் :

தலைவி உடன்போக்கிற்கு உடன்பட்டாலும் அவள் நிலைகளால் தடுக்கப்படுகிறாள். ஆகவே திருமணம் செய்து அழைத்துச் செல்லுதலே மேலானது என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.



## 9.15.பாடல் : 13 : தோழி தலைவியிடம் கூறியது :

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : கபிலர்

எழாஅ ஆகலின் எழில் நலம் தொலைய
அழாஅதீமோ, நொதுமலர் தலையே!

குறிப்புகள்

ஏனல் காவலர் மா வீழ்த்துப் பறித்த
பகழி அன்ன சேயரி மழைக் கண்
நல்ல பெருந்தோளோயே! கொல்லன்
எறி பொன் பிதிரின் சிறு பல தாஅய்
வேங்கை வீ உகும் ஓங்கு மலைக் கட்சி
மயில் அறிபு அறியா மன்னோ,
பயில் குரல் கவரும் பைம்புறக் கிளியே.

தினைப்புனம் காவல் செய்வோர் விலங்குகளை எய்து வீழ்த்திப்பிடுங்கி எடுக்கும் அம்பு போன்ற சிவந்த அரிபடர்ந்த குளிர்ந்த கண்களையும் நல்ல பெரிய தோள்களையும் உடையவளே! கொல்லன் உலைக் களத்தில் அடிக்கும் இரும்பின் பொறிகளைப் போலச் சிறிய பலவாகப் பரந்த வேங்கை மரத்தின் மலர்கள் உதிரும்படியான பெரிய மலையிலுள்ள கூட்டிலிருக்கும் மயில் அறியவும், தினையின் விளைந்த கதிர்களைப் பசிய முதுகையுடைய கிளிகள் பிற உயிர்கள் அறியா என்று தின்னும். அது கண்டும் நீ எழுந்து கிளிகளை விரட்டாமலிருந்தாய். ஆயினும் அயலவர் இருக்கும் இடத்திலிருந்து உன் அழகின் நலம் தொலைந்து போக அழாமல் இருப்பாயாக.

துறை விளக்கம் :

முதல் சந்திப்பின் பிற்றை ஞான்று தலைவி தலைவன் நினைவாகவே இருந்ததால் உடல் வேறுபட்டிருக்கிறாள். தினைக்கதிர்களைக் கிளிகள் கவர்ந்து செல்வதையும் கவனியாமலிருந்தாள். ஆனால் அழுது கொண்டிருந்தாள். அது கண்ட தோழி, அழுகையைக் கண்டால் அயலார் ஐயுறுவர். எனவே அழாமல் இருக்கும்படி எடுத்துச் சொன்னாள்.

## 9.16.பாடல் : 14 : தலைவி தோழியிடம் கூறியது :

திணை : பாலைத் திணை பாடியவர் : மாமூலனார்

தொல்கவின் தொலைய, தோள் நலம் சாஅய்
நல்கார் நீத்தனர் ஆயினும் நல்குவர்
நட்டனர் வாழி தோழி, குட்டுவன்
அகப்பா அழிய நூறி செம்பியன்
பகல் தீ வேட்ட ஞாட்பினும் மிகப் பெரிது
அல் எழச் சென்றனர் ஆயினும், மலர் கவிழ்ந்து
மா மடல் அவிந்த காந்தள் அம் சாரல்
இனம் சால் வயக் களிறு பாந்தள் பட்டென,
துஞ்சாத் துயரத்து அஞ்சு பிடிப் பூசல்
நெடு வரை விடரகத்து இயம்பும்
கடு மான் புல்லிய காடு இறந்தோரே

தோழி! என் பழைய அழகு தொலையவும் என் தோள் நலம் கெடவும் இப்போது அருள்செய்யாது என் தலைவர் கைவிட்டாரெனினும், அவர் அருள் செய்வார் என்பது உறுதி. குட்டுவனது மதில் அழியும் படி இடித்தொடித்துப் பகலில் தீ வைத்துப் போர் செய்தவன் செம்பியன். மலர்

குறிப்புகள்

தலை கவிழ்ந்து பெரிய இதழ் விரிந்த காந்தள் மணக்கும் அழகிய மலைச்சாரலில் தன் இனம் அமைந்த வலிய ஆண்யானை பெரும் மலைப்பாம்பின் வாய்ப்பட்டது. அதனையறிந்த பெண்யானை நீங்காத துயரொடு அச்சம் கொண்டு ஒலிக்கும் பேரொலி நீண்ட மலையின் பிளப்புகளில் எதிரொலிக்கும். அவ்வாறானதும் கடிய விலங்குகள் பொருத்தியதுமான காட்டைக் கடந்து சென்றவர் (அன்பராதலால் அவர் குறித்த பருவத்து வருவர்) அவர் வாழ்க.

துறை விளக்கம் :

தலைவின் இயல்பைப் பழித்துக் கூறினாள் தோழி. அதுகேட்ட தலைவி, தலைவர் தலையளி செய்து நல்குவர் என்று அவரது நல்ல இயல்புகளை எடுத்துக் கூறினாள்.

## 9.17.பாடல் : 15 : தோழி தலைவனிடம் கூறியது :

திணை : நெய்தல் திணை பாடியவர் : பாண்டிய மன்னன் அறிவுடை நம்பி

முழங்கு திரை கொழீஇய மூரி எக்கர்
நுணங்கு துகில் நுடக்கம் போல கணம் கொள
ஊதை தூற்றும் உரைவு நீர்ச் சேர்ப்ப!
பூவின் அன்ன நலம் புதிது உண்டு
நீ புணர்ந்த அனையேம் அன்மையின் யாமே
நேர்புடை நெஞ்சம் தாங்கத் தாங்கி
மாசு இல் கற்பின் மடவோள் குழவி
பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு
சேணும் எம்மொடு வந்த
நாணும் விட்டேம் அலர்க இவ் ஊரே.

முழங்கும் அலைகள் ஒன்று சேர்த்த பெரிய மணல் மேட்டில் நுண்ணிய ஆடையின் அசைவு போல, கூட்டமான மாலை வாடைக்காற்று தூற்றும்படியான கடற்கரைத் தலைவனே! பூவை ஒத்த புதிய எம் நலத்தை நீ உண்டாய். ஆனால் நீ ஒன்றிய நட்புக் கொண்டாய் இல்லை. யாம், நேர்மையான நெஞ்சத்தால் துயரத்தைத் தாங்கிக் கொண்டு இருக்கின்றோம். குற்றமற்ற கற்புடைய பெண் ஒருத்தி தன் குழந்தையைப் பேய் கவர்ந்து கொண்டு போகக் கைவிட்டு இருப்பது போல் நெடுங்காலமாக எம்மோடு உள்ள நாணத்தையும் யாம் கைவிட்டு விடுகிறோம். இவ்வூரில் அலர் பரவுவதாக.

துறை விளக்கம் :

திருமணம் செய்தல் நீட்டித்தபோது தோழி திருமணம் செய்து கொள்ளத் தூண்டியது.



## 9.18.பாடல் : 16 : தலைவன் கூற்று :

திணை : பாலைத் திணை பாடியவர் : சிறைக்குடி ஆந்தையார்

புணரின் புணராது பொருளே, பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே, ஆயிடைச்

செல்லினும், செல்லாய் ஆயினும், நல்லதற்கு
உரியை வாழி என் நெஞ்சே! பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடு மீன் வழியின் கெடுவ் யானே
விழுநீர் வியல் அகம் தூணி ஆக
எழு மாண் அளக்கும் விழுநிதி பெறினும்,
கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக் கண்
அமர்ந்து, இனிது நோக்கமொடு செகுத்தன
எனைய ஆகுக! வாழிய பொருளே!

பொருள், காதலியோடு இருந்தால் வந்தடையாது. பொருள் வயின் பிரிந்தால் காதலியோடிருக்கும் இன்பம் கிடையாது. என் நெஞ்சே பொருளுக்குச்செல்வதும் செல்லாதிருப்பதுமாகிய இரண்டில் ஒன்றை – நல்லதை – தேர்ந்தெடுத்தற்கு நீ உரிமையுடையவை ஆதலால் வாழ்க. பொருள்களோ, வாடாத பூக்கடைளயுடைய பொய்கையின் நடுவில் ஓடும் மீனின் வழி மறைந்து அழிவது போல இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகும். யானோ, சிறந்த கடல் சூழ்ந்த அகன்ற உலகமே அளக்கும் கருவியாகக் கொண்டு ஏழுமுறை அளக்கத்தக்க சிறந்த செல்வத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தாலும் அதனை விரும்பேன். இக்கனங்குழையாகிய என் காதலியின் மாறுப்ட்ட செவ்வரி பரந்த குளிர்ந்த கண்கள்பொருந்தி இனிதாகப் பார்க்கும் பார்வையால் யான் ஆற்றலழிந்தேன். ஆதலால், பொருளே! நீ எத்தன்மையானாலும் ஆகுக. நீ வாழ்க.

துறை விளக்கம் :

பொருள் தேடப்போதல் என்று முடிவு செய்த நெஞ்சினை நோக்கிச் சொல்லித் தலைவன் தலைவியை விட்டுப் பிரிதலைத் தவிர்த்தல்.

## 9.19.பாடல் : 17 : தலைவி தோழியிடம் சிறைப்புறத்தே இருந்த தலைவன் கேட்கும்படி கூறியது :

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : நொச்சி நியமங்கிழார்

நாள் மழை தலைஇய நல் நெடுங்குன்றத்து
மால் கடல் திரையின் இழிதரும் அருவி
அகல் இருங்கானத்து அல்கு அணி நோக்கித்
தாங்கவும் தகைவரை நில்லா நீர் சுழல்பு
ஏந்து எழில் மழைக் கண் கலுழ்தலின், அன்னை,
எவன் செய்தனையோ? நின் இலங்கு எயிறு உண்கு
என
மெல்லிய இனிய கூறலின் வல் விரைந்து
உயிரினும் சிறந்த நாணும் நனி மறந்து
உரைத்தல் உய்ந்தனனே தோழி! சாரல்
காந்தள் ஊதிய மணி நிறத் தும்பி
தீம் தொடை நரம்பின் இமிரும்
வான் தோய் வெற்பன் மார்பு அணங்கு எனவே

குறிப்புகள்

காலையில் மழை பெய்தது. நல்ல நெடிய மலையில் சேர்ந்த நீர்பெரிய கடலின் அலைபோல அருவியாக வீழ்ந்தது. அகன்ற பெரிய காட்டில் அது தங்கி ஓடிச் செல்லும் அழகை நோக்கிக் கொண்டிருந்தேன். அப்போது எனக்குப் பழைய நினைவுகள் வந்தன. முதன் முதல் யான் அவரைச் சந்தித்த இடம் அதுதான். அதனால் தாங்கிக் கொள்ளவும் தடுத்து நிறுததவும் நில்லாத என் கண்ணீர் கலங்கி அழகு மிக்க குளிர்ந்த கண்கள் அழுதன. அதைக் கண்ட என் தாய், 'என்ன செய்தாய் அழாதே! உன்னை முத்தம் கொள்வேன்' என்று மென்மையான இனிய சொற்களால் கூறினாள். அப்போது, தோழி! யான் மிக விரைந்து உயிரினும் சிறந்த நாணினையும் மிக மறந்து உண்மையைச் சொல்லவிருந்தேன். ஆனால் சாரலிலுள்ள காந்தள் மலரின் தேனை உண்ட அழகிய நிறத்தை உடைய தும்பி வண்டு யாழில் கட்டிய இனிய நரம்புபோல ஒலிக்கும் படியான வான் அளாவிய வெற்பன் மார்பால் வந்த துன்பம் இது என்று சொல்லத் தோன்றியதை எப்படியோ சொல்லாமல் தவிர்த்து விட்டேன்.

துறை விளக்கம் :

பகற்குறியில் தலைவன் வந்து மறைவாக இருந்தபோது, அவன் வந்துள்ளதை அறிந்து கொண்ட தலைவியோ தோழியோ அவன் கேட்டுக் கொள்ளும்படி தாங்கள் இருவரும் பேசிக் கொள்ளுதலை முன்னிலைப் புறமொழி என்பர். அருவியைப் பார்த்து நின்ற இடம் தான், அவர்ள காதலனைக் கண்டு மயங்கிய இடம். அந்த நினைவு வரவே அவள் கண்கள் கலங்கின. உண்மையைச் சொல்லவிருந்த அவள் எப்படியோ சொல்லாமல் தவிர்த்தாள்.

## 9.20.பாடல் : 18 : தோழி தலைவியிடம் கூறியது :

திணை : பாலைத் திணை பாடியவர் : பொய்கையார்

பருவரல் நெஞ்சமொடு பல் படர் அகல
வருவர், வாழி தோழி, மூவன்
முழு வலி முள் எயிறு அழுத்திய கதவின்
கானல் அம் தொண்டிப் பொருநன், வென்வேல்
தெறல் அருந்தானைப் பொறையன் பாசறை
நெஞ்சம் நடுக்குறூஉம் துஞ்சா மறவர்
திரை தபு கடலின் இனிது கண்படுப்ப
கடாஅம் கழீஇய கதன் அடங்கு யானைத்
தடாஅ நிலை ஒரு கோட்டன்ன
ஒன்று இலங்கு அருவிய குன்று இறந்தோரே

தோழி! வருத்தம் நிறைந்த நெஞ்சத்தோடு பல நினைவாலும் ஏற்பட்ட உன் துன்பங்கள் யாவும் நீங்கத் தலைவன் வருவர். நீ வாழ்வாயாக! மூவன் என்பவன் முழு வலிமையையும் தொலைத்து அவனது முள் பொன்ற பல்லைப் பிடுங்கிப் பதித்த கதவையுடைய – கடற்கரைச் சோலையுடைய – அழகிய தொண்டி நகரின் தலைவனும், வெற்றி தரும் வேற்படையை

குறிப்புகள்

உயைவனும், பகைவரால் வெல்ல முடியாத தானையை உடையவனுமான பொறையன் என்பானின் பாசறையில், யானை ஒன்றால் நெஞ்சம் நடுங்குற்றுத் தூங்காத வீரர்கள், அது மதம் நீங்கிச் சினம் அடங்கியதால், அலை அடங்கிய கடல்போல இனிமையாகக் கண்மூடி உறங்கினர். அதன் பெரியதான நிலையிலுள்ள ஒற்றைக் கொம்பு போல ஒன்றாகி விளங்கும் அருவியை உடைய குன்றைக் கடந்து சென்றவர் வருவர். நீ வருந்தாதே.

துறை விளக்கம் :

தலைவி பிரிவிடை தாங்காமல் இருப்பதனைக் கண்டு தோழி அவளை ஆற்றுப்படுத்தல்.

## 9.21.பாடல் : 19 : தோழி தலைவனிடம் கூறியது :

திணை : நெய்தல் திணை பாடியவர் : நக்கண்ணையார்

இறவுப் புறத்து அன்ன பிணர்படு தடவு முதல்
சுறவுக் கோட்டன்ன முள் இலைத் தாழை,
பெருங்களிற்று மருப்பின் அன்ன அரும்பு முதிர்பு
நன்மான் உழையின் வேறுபடத் தோன்றி,
விழவுக் களம் கமழும் உரவு நீர்ச் சேர்ப்ப!
இன மணி நெடுந்தேர் பாகன் இயக்கச்
செலீஇய சேறி ஆயின், இவளே
வருவை ஆகிய சில்நாள்
வாழாள், ஆதல் நற்கு அறிந்தனை சென்மே.

தாழையானது இறா மீனின் முதுகு போன்ற சருச்சரை பொருந்திய பெரிய அடியையுடையது.. சுறா மீனின் கொம்பு போன்ற விளிம்பில் முள்ளைக் கொண்ட இலையை உடையது. பெரிய ஆண்யானையின் மருப்புப் போன்ற அரும்புகளை உடையது. அந்த அரும்புகள் முதிர்ந்து நல்ல குதிரையின் பிடரி மயிர் போல வேறுபடத் தோன்றி, விழாவின் களம் எங்கும் கமழும். இவ்வளத்தோடு நீர்ப்பெருக்குள்ள சேர்ப்பனே! பலமணிகளை உடைய நெடிய தேரை, பாகன் செலுத்த உன் உர் திரும்பும் நினைப்பொடு புறப்படுவாயானால், இவள் நீ திரும்பி வரும் எல்லையாகிய சில நாள்கள் கூட வாழமாட்டாள். அதனை நீ நன்றாக அறிந்து கொண்டு செல்வாயாக.

துறை விளக்கம் :

வரைவு கடாயத என்பது தோழி தலைவனிடம் தலைவியை மணம் செய்து கொள்ளத் தூண்டியது.. புணர்ந்து நீங்கிய தலைமகன் என்பது தலைவியோடு பேசி அளவளாவித் திரும்பச் செல்லும் தலைமகனைக் குறிக்கும்.

*Self -Instructional Material*

## 9.22.பாடல் : 20 : தலைவி தலைவனிடம் கூறியது :

திணை : மருதம் திணை பாடியவர் : ஓரம்போகியார்

ஐய! குறுமகள் கண்டிகும் வைகி
மகிழ்நன் மார்பில் துஞ்சி, அவிழ் இணர்த்
தேம் பாய் மராஅம் கமழும் கூந்தல்

குறிப்புகள்

துளங்கு இயல் அசைவர, கலிங்கம் துயல் வரச்
செறி தொடி தெளிர்ப்ப வீசி, மறுகில்
பூப்போல் உண்கண் பெயர்ப்ப நோக்கிச்
சென்றனள், வாழிய மடந்தை! நுண் பல்
சுணங்கு அணிவுற்ற விளங்கு பூணள்,
மார்புறு முயக்கடை ஞெமிர்ந்த சோர் குழைப்
பழம் பிணி வைகிய தோள் இணைக்
குழைந்த கோதை கொடி முயங்கலளே.

ஐய! ஒரு இளைய மகளைக் கண்டேம். அவள் மருத நிலத்தலைவனாகிய உன்னிடம் தங்கி, உன் மார்பில் துயின்று எழுந்து வண்கள் பாய்ந்த மராமரத்தின் அவிழ்ந்த பூங்கொத்துகள் மணக்கும் கூந்தல் அசையும் இயல்போடு அசைந்துவர, ஆடை அசைய, செறிந்த வளையல்கள் ஒலிக்கக் கைவீசி, மலர் போன்ற மையுண்ட கண்களால் உலாவிப் பார்த்து நேற்றுத் தெருவில் சென்றனள். அம்மடந்தை வாழ்க! அவள் நுண்ணிய பலவாகிய தேமல் அழகு செய்யப்பெற்றவள். விளங்கிய அணிகளை உடையவள். உன் மார்பு உற்ற முயக்கத்தினிடையே நெரிந்த காதணியையும், பழைய வருத்தம் தங்கிய இரு தோள்களையும், துவண்ட மாலையை உடைய அவள். கொடிபோல் உன் முயக்கமில்லாது இன்று தெருவில் சென்றனள்.

துறை விளக்கம் :

பரத்தையிடமிருந்து பிரிந்த வந்த தலைவனைப் பார்த்து வினவியபோது, அவன் பரத்தையர் யாரையும் யான் அறியேன் என்றான். அதற்குப் பதில் கூறுவது போல இப்பாட்டு அமைந்துள்ளது.

## 9.23.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. கண்டோர் கூற்றுக்குரியவர் யார்யார்?
2. தலைவனின் உயர்ந்த அன்பை தலைவியின் கூற்று வழி சுட்டுக.
3. உப்பு வணிகரின் செயல் எதற்கு உள்ளுறை ஆக்கப்பட்டது?
4. சேயரிமழைக்கண் குறிப்பு வரைக.

**பெருவினா :**

5. தோழியின் அறத்தொடு பண்பினை எடுத்துரைக்க.
6. தோழியின் அறிவுக்கூர்மையினையும் தலைவியின் மீதுகொண்ட அன்பினையும் உம்பாடப்பகுதி வழி நிறுவுக.
7. நற்றிணைப் பாடல்களில் தலைவியின் மாண்பினை சான்றான்மைக் கூறி நிறுவுக.



## 9.24.தொகுத்துக் காண்போம். :

சங்க கால மக்களின் பழக்க வழக்கங்கள் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, கொடைத் திறம், மக்களின் அறவாழ்வு போன்ற பல செய்திகளைத் தெளிவாக நமக்கு எடுத்துரைப்பதோடு அவர்களின் ஆழ்ந்த அன்பின்

நிலைகளையும், தலைவன் தலைவியின் அறநிலையினை இப்பகுதியின் மூலம் அறியலாகின்றது.



## 9.25.மேலும் பயில்வதற்கான நூல்கள் :




- நற்றிணை மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- நற்றிணை மூலமும் உரையும், அவ்வை துரைசாமிபிள்ளை உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- நற்றிணை, புலவர் ந. இராமையாபிள்ளை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- நற்றிணை, முனைவர் கு.வே. பாலசுப்பிரமணியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை98
- நற்றிணை, அ.ப. பாலையன், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5

# கூறு- 10-நற்றிணை-அடுத்த இருபது பாடல்கள்

## 10.1.முன்னுரை :

'நல்' என்ற அடைமொழியினை உடைய திணையை உடையது இந்த நற்றிணை நூலாகும். இதற்கு நூல் அறிமுகத்தை முன்னரே அறியப்பட்டுள்ளது.

## 10.2.குறிக்கோள்கள் :

இந்த நற்றிணையின் அடுத்த இருபது பாடல்களின் கருத்துகளை மாணவர்களின் மனதில் பதியச் செய்வதோடு நம் முன்னோர்களின் செம்மையான அகவாழ்வை அறியச் செய்வதே இப்பகுதியின் முக்கிய நோக்கமாகும்.

## 10.3.பாடல் : 21 : தலைவன் தேர்ப்பாகனிடம் கூறியது :

விரைப் பரி வருந்திய வீங்கு செலல் இளையர்
அரைச் செறி கச்சை யாப்பு அழித்து அசைஇ,
வேண்டு அமர் நடையர் மென்மெல வருக
தீண்டா வை முள் தீண்டி நாம் செலற்கு
ஏமதி வலவ தேரே! உதுக்காண்!
உருக்குறு நறு நெய் பால் விதிர்த்தன்ன,
அரிக்குரல் மிடற்ற அம் நுண் பல் பொறிக்
காமரு தகைய கான வாரணம்
பெயல் நீர் போகிய வியல் நெடும் புறவில்
புலரா ஈர் மணல் மலிரக் கெண்டி,
நாள் இரை கவர மாட்டித் தன்
பேடை நோக்கிய பெருந்தகு நிலையே!

திணை : முல்லைத் திணை பாடியவர் : மருதன் இளநாகனார்

தேர்பபாக! விரைவாக நடத்தற்கு வருந்திய நீண்ட பயணத்தையுடையநம் வீரர்கள் தம் இடுப்பில் கட்டிய கட்டை அவிழ்த்து ஆங்காங்குத் தங்கி வேண்டியபடி இளைபப்பாறி நடந்து மெல்ல மெல்ல வருவாராக. நாம் முன்னே செல்ல இதுவரையில் தீண்டாமல் வைத்திருந்த கூரிய தாற்றுக்கோலால் குரையைத் தீண்டி தேரைச் செலுத்துக. ஏனென்றால் உருக்கிய நல்ல நெய்யைப் பாலில் சிதறினாற் போல ஒலி நிரம்பாத ஓசையை உடைய கழுத்தினையும், அழகிய நுண்ணிய பல புள்ளிகளையும், விரும்பத் தகுந்த அழகையும் உடைய காட்டுக்கோழி, மழை நீர் ஓடிய அகன்ற நெடிய முல்லைக் காட்டிலே உலராத ஈர மணலை நன்கு கிளறி அன்றைய இரையைக் கவர்ந்து வைத்துக் கொண்டு, தன் பெட்டையை நோக்கி அழைக்கும் பெருமை தங்கிய நிலையை அதோ பார்!

துறை விளக்கம் : தலைவன் சென்ற வேலை வெற்றிகரமாக முடிந்தது. மகிழ்ச்சியோடு திரும்பினான். தன் தேர்ப்பாகனைப் பார்த்து விரைவாகத் தேரை ஓட்டும்படி கூறினான்.

## 10.4.பாடல் : 22 : தோழி தலைவியிடம் கூறியது :

கொடிச்சி காக்கும் அடுக்கல் பைந்தினை
முந்து விளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை ஏறி,
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்ட தன்
திரை அணல் கொடுங்கவுள் நிறைய முக்கி,
வான் பெயல் நனைந்த புறத்த நோன்பியர்
கைஊண் இருக்கையின் தோன்றும் நாடன்
வந்தனன், வாழி தோழி, உலகம்
கயம்கண் அற்ற பைது அறு காலைப்
பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்ளென் யாமத்து மழை பொழிந்தாங்கே

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : பெயர் கிடைக்கவில்லை

தோழி! மலைவாழ் கொடிச்சியற் காக்கப்படும் வரிசையான செவ்விய தினைகளில் முன்னே விளைந்த பெரிய கதிர்களைக் கைக்கொண்டது மந்தி. தன் தொழில் தவிரப் பிற கல்லாத ஆண்குரங்கோடு அது நல்ல மலையில் ஏறி அகங்கை நிறையக் கசக்கிக் கொண்டு தனது வளைவான தாடியையுடைய வளைந்த கன்னம் நிறைய வாயிலிட்டுத் தின்றது. மழையின் பெயலால் நனைந்த முதுகை உடையதாய் இருந்தது. இது நீரில் குளீத்த நோன்புடையார் நீர் துளிர்க்கக் கையிலுள்ள உணவை ஏந்தி உண்பது பொலத் தோன்றிது. அவ்வாறாய நாடன், உலகத்துக் குளங்கள் வரண்டு, ஈரமற்று பொழுது, இளங்கதிரோடு கூடிய உலர்ந்த நெல்லிற்கு நடு யாமத்து மழை பொழிந்தது போல, நம்மிடம் வரைவொடு வந்தனன், அவன் வாழ்க!

துறை விளக்கம் :

வரைவு மலிதல் என்பது திருமணம் செய்து கொள்வதற்காகத் தலைவன் வரக் கண்ட தோழி, தலைவியிடம் சென்று இப்பொழுது வந்தனன் என்று கூறி மகிழ்வது.

## 10.5.பாடல் : 23 : தோழி தலைவனிடம் கூறியது :

தொடி பழி மறைத்தலின் தோள் உய்ந்தனவே
வடிக்கொள் கூழை ஆயமோடு ஆடலின்
இடிப்பு மெய்யது ஒன்று உடைத்தே கடிக் கொள
அன்னை காக்கும் தொல் நலம் சிதையக்,
காண்தொறும் கலுழ்தல் அன்றியும், ஈண்டு நீர்
முத்துப்படு பரப்பின் கொற்கை முன்துறைச்
சிறு பாசடைய செப்பு ஊர் நெய்தல்
தெண் நீர் மலரின் தொலைந்த
கண்ணே காமம் கரப்பு அரயவ்வே.

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : கணக்காயனார்

குறிப்புகள்

வாரி முடித்தலைக் கொண்ட கூந்தலையுடைய தலைவி, வளையல்களைக் கழன்று விழாமல் வைத்துக் கொள்வதினாலே அவள் தோள்கள் வாட்டம் தெரிவதாயின. அவள் தோழிகளோடு விளையாடுதலாலே உடற்களைப்பு அதனால் ஏற்பட்டதாகக் கருதப்பட்டது. மிக்க காவலையுடைய அன்னை காக்கும் பழைய நலம் சிதையத் தலைவனையோ, தன்னையோ பார்க்குந்தோறும் அவள் அழும், நெருங்கிய நீர் மிக்க முத்துக்கள் விளையும் கடற் பரப்பையுடைய கொற்கை நகரத்தின் முன் துறையிலுள்ள சிறிய பசிய இலைகளை உடைய அழகு மிக்க நெய்தலின் தெளிந்த நீரிலுள்ள மலலைரப் போன்றன அவள் கண்கள். அவற்றின் அழகு கெட்டுப் போயின. ஆனால், அவை காமத்தை மறைக்க முடியாதனவாய் உள்ளன.

துறை விளக்கம் : தலைவியின் நலம் சிதைய, அவள் ஆற்றாளாய் இருக்கும் நிலை அறிந்த தோழி தலைவனிடம் வரைந்து கொள்ள வற்புறுத்தியது.

## 10.6.பாடல் : 24 தலைவி கூற்று :

பார் பக வீழ்ந்த வேருடை விழுக் கோட்டு
உடும்பு அடைந்தன்ன நெடும் பொரி விளவின்
ஆட்டு ஒழி பந்தின் கோட்டு மூக்கு இறுபு,
கம்பலத்து அன்ன பைம் பயிர்த் தாஅம்
வெள்ளில் வல்சி வேற்று நாட்டு ஆர் இடைச்
சேறும் நாம் எனச் சொல்ல சேயிழை,
நன்று எனப் புரிந்தோய், நன்று செய்தனையே்
செயல்படு மனத்தர் செய் பொருட்கு
அகல்வர் ஆடவர், அது அதன் பண்பே.

திணை : பாலைத் திணை பாடியவர் : பெயர் கிடைக்கவில்லை

சேயிழை! நிலம் பிளவுபட இறங்கிய வேர், பெரிய கிளை, உடும்பு பிடித்திருப்பது போன்ற அடிமரம், இவற்றையுடைய நெடிய விளாமரத்தின் கிளைகளில் மூக்கு ஊழ்த்து விழுந்த பழங்கள், கம்பளம் விரித்தாற் போன்ற பசிய பயிரில், விளையாட்டடொழிந்த பந்துகள் கிடப்பன போலப் பரவிக் கிடக்கும். அவ்விளாம் பழங்களை உணவாக் கொண்டு வேற்று நாட்டிற்கு அரிய வழிகளில் யாம் சேறும் என்று தலைவர் கூறலும், அது நன்று என விருப்பத்தோடு நீ கூறினாய். அவ்வாறு கூறியதனால் நீ நன்று ஒன்றைச் செய்தாய். ஆடவர் செயல்படும் மனத்தர். ஆகவே பொருள் ஈட்ட அகல்வர். பொருள் ஆடவரைக் கவர்வது அதன் பண்பாகும்.

துறை விளக்கம் :

செய்பொருட்கு 'யாம் செல்வோம்' என்றான் தலைவன். 'செல்க' என்றாள் தோழி. இதனை 'நன்று' என்றான் தலைவன். இது உவந்து கூறியது.

### 10.27.பாடல் : 25 தோழி தலைவியிடம் கூறியது :

அவ் வளை வெரிநின் அரக்கு ஈர்த்தன்ன
செவ்வரி இதழ சேண் நாறு பிடவின்
நறுந்தாது ஆடிய தும்பி பசுங்கேழ்ப்
பொன் உரை கல்லின் நல் நிறம் பெறூஉம்
வளமலை நாடன் நெருநல் நம்மொடு
கிளை மலி சிறு தினைக் கிளி கடிந்து அசைஇச்,
சொல்லிடம் பெறாஅன் பெயர்ந்தனன், பெயர்ந்தது
அல்லல் அன்று அது காதல் அம் தோழி,
தாது உண் வேட்கையின் போது தெரிந்து ஊதா
வண்டு ஓரன்ன அவன் தண்டாக் காட்சி
கண்டும், கழல் தொடி வலித்த என்
பண்பு இல் செய்தி நினைப்பு ஆகின்றே.

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : பேரி சாத்தனார்

அன்புமிக்க தோழி! அழகிய சங்கின் முகில் அரக்கை எழுதியது போலச் சிவந்த வரியுள்ள இதழைக் கொண்டது நெடுந்தூரம் கமழும் பிடவத்தின் பூ. அதன் நறுந்தாதை நுகர்ந்த வண்டு. பசுமையான நிறத்தையுடைய பொன்னை உரைக்கும் கல்லைப் போல நல்ல நிறம் பெறும். அவ்வளம் பெற்ற மலைநாடன், நேற்று நம்மோடு சேர்ந்து கிளைத்தல் மிக்க சிறிய தினையில் வீழ்ந்த கிளிகளை விரட்டித் தங்கியிருந்த போது தன் குறையைச் சொல்ல இடம் பெறாது போயினன். அவன் பெயர்ந்து போன வருத்தம் குறித்து நான் உன்னிடம் வரவில்லை. தேனை உண்ணும் விருப்பத்தாலே பூவைத் தெரிந்து ஊதாத வண்டின் தன்மையை ஒத்த அவன் தோற்றத்தை பார்த்ததும் கழலும் வளையல்களைக் செறிததுக்கொண்ட எனது பண்பில்லாத செயல் நினைவுக்கு வருகிறது.

துறை விளக்கம் : தலைவியை நோக்கித் தோழி, தலைவனின் வருத்தத்தைக் கூறி அவன் தலைவியை விரும்புவதையும் ்குறிப்பால் கூறுதல் குறை நயப்பாகும்.

அவன், வண்டு போன்றவன். யான் செல்லும் செய்தி பண்பில் செய்தி என என் உள்ளம்் கருதுகிறது என்றாள் தோழி.

### 10.8.பாடல் : 26 தோழி தலைவனிடம் கூறியது :

நோகோ யானே, நெகிழ்ந்தன வளையே,
செவ்வி சேர்ந்த புள்ளி வெள் அரை
விண்டுப் புரையும் புணர் நிலை நெடுங்கூட்டுப்
பிண்ட நெல்லின் தாய் மனை ஒழியச்,
சுடர் முழுது எறிப்பத் திரங்கிச் செழுங்காய்
முடமுதிர் பலவின் அத்தம் நும்மொடு
கெடு துணை ஆகிய தவறோ, வை எயிற்றுப்
பொன் பொதிந்தன்ன சுணங்கின்

குறிப்புகள்

இருஞ்சூழ் ஓதிப் பெருந்தோளாட்கே?

திணை : பாலைத் திணை பாடியவர் : சாத்தந்தையார்

தலைவ! உம் பிரிவு உணர்ந்து தலைவியன் வளையல்கள் கழன்றன. அதற்கு வருந்துகிறேன். அழகு சேர்ந்த அடியையுடைய, மலை போன்ற, தொடர்ந்த நிலையிலுள்ள, நெடிய நெறி கூட்டில் போட்டு வைக்கப்பட்ட தொகுதியான நெல்லை உடையது தாய்வீடு. அந்தச் செழிப்பை விட்டு, ஞாயிறு தன் வெயிலை முழுதும் வீச, செழித்த பலாக் காய்கள் வாட, முடம்பட்ட முதிர்ந்த பலா மரங்களுடைய காட்டில் உம்மோடு வந்தாள். அவள் உடன்போக்கில் கெடு துணையாகி உம்மோடு வந்த தவறோ? அவள் வளையல்கள் கழன்றன. கூர்மையான பற்கள், பொன் பொதிந்தது பொன்ற சுணங்குகள். கருமை சூழ்ந்த கூந்தல், பெரிய தோள்கள் இவற்றையுடைய தலைவிக்குக் கைவளையல்கள் நெகிழ்ந்தன. நான் வருந்துகிறேன்.

துறை விளக்கம் :

தலைவின் பிரிந்து போவான் என்று உணர்ந்து தலைவி வேறுபட்டிருப்பதைத் தலைவனுக்குச் சொல்லித் தோழி பயணம் தவிர்த்தது.

## 10.9.பாடல் : 27 : தோழி தலைவியிடம் சிறைப்புறமிருக்கும் தலைவனுக்கு கேட்கும்படி கூறியது :

நீயும் யானும், உரைக்கும் வண்டினம் ஓப்பி,
ஒழிதிரை வரித்த வெண்மணல் அடைகரைக்
கழிசூழ் கானல் ஆடியது அன்றிக்
கரந்து நாம் செய்தது ஒன்று இல்லை, உண்டு
எனின்
பரந்து பிறர் அறிந்தன்றும் இலரே, நன்றும்
எவன் குறித்தனள் கொல் அன்னை, கயந்தோறு
இறஆர் இனக் குறுகு ஒலிப்ப சுறவம்
கழிசேர் மருங்கின் கணைக்கால் நீடிக்
கண் போல் பூத்தமை கண்டு நுண் பல
சிறு பாசடைய நெய்தல்
குறுமோ சென்று எனக் கூறாதோளே?

திணை : நெய்தல் திணை பாடியவர் : குடவாயிற் கீரத்தனார்

தோழி! நீயும், நானும் நேற்று பூவின் நுண்ணிய தாதுக்களில் வீழும் வண்ணடுகளை ஓட்டி, ஓய்ந்து போன அலைகள் அழகுபடுத்திய வெண்மணல் நிறைந்த கரையில் உப்பங்கழி சூழ்ந்த சோலையில் விளையாடியது தவிர மறைத்து நாம் செய்தது ஒன்றுமில்லை. ஒரு கால் ஏதேனும் உண்டு எனின், அது வெளிப்பட்டுப் பிறர் அறிந்ததுமம் இல்லை.. அப்படியிருக்க, பொய்கைதோறும் இறா மீனைத் தின்னும் குருகுக் கூட்டம் ஒலிப்பச் சுறா மீன் கழி சேர்ந்த இடத்தில் திரண்ட நண்டு நீண்டு, நுண்ணிய பலவாகிய சிறிய பசிய இலைகளை உடைய நெய்தல், கண்போலப் பூத்திருப்பதைக் கண்டும், அன்னை நம்மை நோக்கி, சென்று

குறிப்புகள்

அவற்றைப் பறித்துச் சூடுக! என்று கூறாதவள் என்ன கருதியோ? தெரியவில்லையே.

துறை விளக்கம் :

புறமாகத் தோழி செறிப்பறிவுறீயது பகற் குறியில் தலைவன் வந்து மறைந்திருந்ததைக் குறிப்பால் அறிந்த தோழி, தலைவியை இல்லத்தில் அடைந்திருபப்தைத் தலைவனுக்குத் தெரியும்படி சொல்வது.

நெய்தல் கண்போல் பூத்தது கண்டும் சென்று பறித்துச் சூடுங்கள் என்று அன்னை நம்மைப் பார்த்துக் கூறாதது ஏனோ என்ற கேள்வி மூலம் அன்னையின் சினத்தைக் குறித்தாள் தோழி.

## 10.10.பாடல் : 28 : தலைவிக்குத் தோழி கூறியது :

என் கைக் கொண்டு தன் கண் ஒற்றியும்,
தன் கைக் கொண்டு என் நன்னுதல் நீவியும்,
அன்னை போல இனிய கூறியும்,
கள்வர் போலக் கொடியன் மாதோ,
மணி என இழிதரும் அருவி பொன் என
வேங்கை தாய ஓங்கு மலை அடுக்கத்து
ஆடு கழை நிவந்த பைங்கண் மூங்கில்
ஓடு மழை கிழிக்கும் சென்னிக்
கோடு உயர் பிறங்கல் மலை கிழவோனே.

திணை : பாலைத் திணை பாடியவர் : முதுகூற்றனார்

என் கையைக் கொண்டு தன் கண்ணை ஒற்றியும், தன் கையைக் கொண்டு என் நல்ல நெற்றியைத் தடவியும், தாய் போல இனிய சொற்களைக் கூறியும் தலைவர் களவுக் காலத்தில் தலையளி செய்தார். இப்போது கள்வர் போலக் கொடியவராய் உள்ளார். நீலமணி போலவீழும் அருவியுடைய மலையில் பொன்போல வேங்கை மாலர் பரவிக் கிடக்கும். உயர்ந்த மலைத்தொடர்ச்சியில் ஆடும் மூங்கில், தண்டுயர்ந்த பசிய கணுக்களையுடைய மூங்கில், வானில் ஓடும் மேகத்தைக் கிழிக்கும். மலைச் சிகரத்தால் உயர்ந்த மலைக்கு உரிமையுடைய. மலை கிழவோனே அக்கொடியவர் ஆவார்.

துறை விளக்கம் :

பிரிவில் ஆற்றாத தலைவிக்குத் தோழி சொல்லியது. ஒற்றுதலும், நீவுதலும், இனிய கூறுதலும் தலைவனின் தலையளிச் செயல்கள். தலைவியின் நலத்தைக் கைப்பற்றிச் சென்றதால் தலைவன் கள்வன் ஆகிறான்.



## 10.11.பாடல் : 29 : நற்றாய் கூறியது : (தலைவியின் தாய்)

நின்ற வேனில் உலந்த காந்தள்
அழல் அவிர் நீள் இடை நிழலிடம் பெறாஅது,
ஈன்று கான் மடிந்த பிணவுப் பசி கூர்ந்தென,
மான்ற மாலை வழங்குநர்ச் செகீஇய
புலி பார்த்து உறையும் புல் அதர்ச் சிறுநெறி

யாங்கு வல்லுநநள் கொல் தானே? யான் தன்
வனைந்து ஏந்து இளமுலை நோவ கொல்? என
நினைந்து கைந்நெகிழ்ந்த அனைத்தற்குத் தான் தன்
பேர் அமர் மழைக் கண் ஈரிய கலுழ,
வெய்ய உயிர்க்கும் சாயல்,
மை ஈர் ஓதி பெரு மடத்தகையே.

திணை : பாலைத் திணை பாடியவர் : பூதனார்

நிலைத்த வேனிற் காலத்தில் வாடிய காந்தளுடைய. அழல் வீசும் நீண்ட வழியல், நிழலிருக்குமிடம் கிடைக்காமல் குட்டிகளை ஈன்று அவற்றோடு கிடந்த பெண்புலி மிகவும் பசித்ததென்று மயங்கின மாலை வேளையில் வழிப்போவாரைக் கொல்லும் பொருட்டு ஆண்புலி வழியைப் பார்த்துத் தங்கியிருக்கும் புல்லிய வழியாகிய சிறிய பாதையில் எப்படி அவள் போக முடிந்தவளாய் இருப்பாளோ? அவள் யாரெனில் என் மகள். அழகிய நிமிர்ந்த இளைய கொங்கை வருந்துமோ என்று நினைத்து யான் படுக்கையில் அணைத்திருந்த கை நெகிழ்ந்துவிட்ட அதற்கே அவள் தனது பெரிய அமர்ந்த குளிர்ந்த கண்கள் நீர் வடிய அழுது வெய்ய பெருமூச்சு விடுவாள். அவள் மென்மையோடு கரிய கூந்தலையும் பெரிய மடப்பத்தையும் உடைய தகுதி நிறைந்தவள்.

துறை விளக்கம் : தலைவனம் தலைவியும் உடன்போக்கில் போயினர். இவ்வாறு தன் மகளைப் போக்கிய தாய் தன் மகளுக்கு இரங்கிக் கூறியது.

## 10.12.பாடல் : 30 : தோழி தலைவனிடம் கூறியது :

கண்டனென் மகிழ்ந! கண்டு எவன் செய்கோ?
பாணன் கையது பண்புடைச் சீறியாழ்
யாணர் வண்டின் இம்மென இமிரும்
ஏர்தரு தெருவின், எதிர்ச்சி நோக்கி நின்
மார்பு தலைக்கொண்ட மாணிழை மகளிர்,
கவல் ஏமுற்ற வெய்து வீழ் அரிப் பனி
கால் ஏமுற்ற பைதரு காலைக்
கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கி உடன் வீழ்பு
பலர் கொள் பலகை போல,
வாங்க வாங்க நின்று ஊங்கு அஞர் நிலையே

திணை : மருதம் திணை பாடியவர் : கொற்றனார்

மகிழ்ந! பாணன் கையிலிருக்கும் மிக நல்ல சீறி யாழ் புதுவண்டு போல இம் என ஒலிக்கும். அழகிய தெருவில் எதிர்பார்த்து உன் மார்பைத் தமக்கிடமாக்கிக் கொண்டனர் மாட்சி மிக்க அணிகலன்களை உடைய பரத்தையர். அவர் ஆசையால் இன்புற்று, நீ பிரிந்த போது வெய்யதாகக் கண்ணீர் வடித்தனர். கடலில் புயல்காற்று வீசியதால் கப்பல் கவிழ்ந்து விட்டது, துன்புற்ற காலமாகிய அப்போது கலக்கமடைந்த கப்பலோடு வீழ்ந்த பலரும் அங்கு மிதந்த பலகை ஒன்றைப் பிடித்துக் கொண்டனர். அப்பலகையை ஒவ்வொருவரும் தனித்தனி இழுப்பது போலப் பரத்தையர்

குறிப்புகள்

ஒவ்வொருவரும் உன்னை இழுக்க, இழுக்க, உன் செறிந்த துன்பத்தின் நிலையை யான் கண்டேன். கண்டு என் செய்ய வல்லேன்?

துறை விளக்கம் : பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனைப் பார்த்து வினவியபோது.அவன் பரத்தையர் யாரையும் யான் அறியேன் என்றான். அதற்குப் பதில் கூறுவது போல இப்பாட்டு அமைந்துள்ளது.

## 10.13.பாடல் : 31 : தலைவி தோழியிடம் சிறைப்புறமாக இருந்த தலைவன் கேட்கும்படி கூறியது :

மா இரும் பரப்பு அகம் துணிய நோக்கிச்
சேயிறா எறிந்த சிறுவெண் காக்கை
பாய் இரும் பனிக் கழி துழைஇ, பைங்கால்
தான் வீழ் பெடைக்குப் பயிரிடூஉ, சுரக்கும்
சிறுவீ ஞாழல் துறையுமார் இனிதே
பெரும் புலம்பு உற்ற நெஞ்சமொடு பல நினைந்து,
யானும் இனையேன் ஆயின், ஆனாது
வேறு பல் நாட்டில் கால் தரவ ந்த
பல உறு பண்ணியம் இழிதரு நிலவு மணல்
நெடுஞ்சினை புன்னை கடுஞ்சூல் வெண்குருகு
உலவுத் திரை ஓதம் வெரூஉம்
உரவு நீர்ச் சேர்ப்பனொடு மணவா ஊங்கே

திணை : நெய்தல் திணை பாடியவர் : நக்கீரனார்.

வேறு பல நாட்டிலிருந்து ஓயாமல் மரக்கலங்கள் காற்றால் செலுத்தப்பட்டு வந்து, பலவகைப் பண்டங்களும் இறங்கம் நிலாப்போன்ற மணற் பரப்பிலேயுள்ள நெடிய புன்னை மரக்கிளையிலிருக்கும் முதிர்ந்த கருவையுடைய வெள்ளையான குருகு, உலவும் அலைவெள்ளத்திற்கு அஞ்சும்படியான வலிய நீர்ப்பரப்பையுடைய சேர்ப்பனோடு நட்புக் கொள்வதற்கு முன்பு மிகப்பெரிய நீர்ப்பரப்பில் தெளிவாகப் பார்த்து வெவ்விய இறாமீனைக் கவ்விய சிறு வெண்காக்கை இரையைக் கொண்டு வந்து, பரவிய பெரிய குளிர்ந்த உப்பங்கழியில் துழாவி தான் விரும்பும் பசிய காலையுடைய தன் பெடையை அழைத்து அதற்குக் கொடுக்கும்படியான சிறிய பூவையுடைய ஞாழல் துறையும் எனக்கு இனிமையாய் இருந்தது. ஆனால் சேர்ப்பன் கைவிட்ட பின் அத்துறையும் இனிமையற்றதாயிற்று. பெரிய வருத்தமடைந்த நெஞ்சத்தோடு பல பல நினைந்து யானும் இவ்வாறு ஆயினேன்.

துறை விளக்கம் : தலைவன் மறைவாக இருந்தபோது தலைவி தோழியின் வற்புறுத்தலுக்கு மாறாக வருந்தியது.



## 10.14.பாடல் : 32 : தோழி தலைவியிடம் சொன்னது :

மாயோன் அன்ன மால் வரைக் கவாஅன்,
வாலியோன் அன்ன வயங்கு வெள் அருவி,
அம்மலை கிழவோன் நம் நயந்து என்றும்
வருந்தினன் என்பது ஓர் வாய்ச் சொல் தேறாய்,

நீயும் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவு அறிந்து அளவல் வேண்டும் மறுத்தரற்கு
அரிய, வாழி தோழி, பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார் நம் ஒட்டியோர் திறத்தே.

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : கபிலர்

திருமால் போன்ற பெரிய மலை. அம்மலைப் பக்கத்தில் பலதேவன் போன்ற வெண்மையான அருவி வீழ்ந்தது. அந்த மலைக்கு உரியவன் தலைவன். அவன் நம்மைப் பெரிதும் விரும்பி எப்போதம் வருந்துகிறான். இந்த உண்மையை நான் சொலலுகிறேன். என் வாய்ச் சொல்லை நீ நம்பாது, தெளிவடையாது உள்ளாய். ஆனால் ஒன்று செய். நீயும் எண்ணிப்பார். என்னைத் தவிர உனக்கு வேண்டிய தோழிமாரோடும் எண்ணிப்பார் அறிவால் ஆராய்ந்து அறிந்து கொண்ட பின்னரே ஒருவரோடு அளவளாவுதல் வேண்டும். தலைவன் வேண்டுகோள்கள் மறுத்தற்கு அரியனவாய் உள்ளன. (பெரியோர் நம்மிடத்து யாராவது அன்பு கொண்டு ஒட்டிக்கொள்ள வந்தால், வந்தவர் பண்புகளை ஆய்ந்தே நட்புக்கொள்வர். அப்படித் செய்வதைத் தவிர நட்புக் கொண்டுவிட்டு, வந்தவர் குணங்களைப் பின்பு ஆராய்ந்து கொண்டிருக்க மாட்டார்.)

## 10.15.பாடல் : 33 : தோழீ தலைவனிடம் கூறியது :

படுசுடர் அடைந்த பகுவாய் நெடு வரை,
முரம்பு சேர் சிறுகுடி பரந்த மாலை,
புலம்பு கூட்டுண்ணும் புல்லென் மன்றத்துக்
கல்லுடை படுவில் கலுழி தந்து,
நிறை பெயல் அறியாக் குறை ஊண் அல்லில்,
துவர்செய் ஆடை செந்ரொடை மறவர்
அதர் பார்த்து அல்கும் அஞ்சுவரு நெறியிடை,
இறப்ப எண்ணுவர் அவர் எனின், மறுத்தல்
வல்லுவம் கொல்லோ, மெல்லியல் நாம்? என
விம்முறு கிளவியள் என் முகம் நோக்கி,
நல்அக வன முலைக் கரை சேர்பு
மல்கு புனல் பரந்த மலர் ஏர் கண்ணே.

திணை : பாலைத் திணை பாடியவர் : இளவேட்டனார்

தலைவ! இறங்கும் ஞாயிறு சேர்ந்த பிளந்த வாயையுடைய உயர்ந்த மலையில் மேட்டு நிலத்திலுள்ள சிறிய குடியிலே பரந்த மாலை நேரத்தில் தனிமை சேர்ந்திருக்கும் பொலிவிழந்த மன்றத்திலே கல்லையுடைய மடுவிலே ஊறிய கலங்கல் நீரைக் கொண்டு வந்து தந்து நிறைந்த மழையை அறியாத குறைந்த உணவையுடைய இரவு நேரத்தில், துவர் நிறம் செய்த ஆடையையும் செவ்விய அம்புத்தொடையும் உடைய மறவர் (வழிப்பறி செய்வோர்) வழிபார்த்துத் தங்கியிருக்கும் அச்சம் தோன்றும் பாதையில் செல்ல எண்ணுவாரென்றால் நாம் மறுத்தல் செய்ய

முடிந்தவர்களாய் உள்ளோமா? மெல்லியல் சொல் என்று கேட்டாள் அப்போது, விம்முற்ற சொல்லையுடையவளாய்என் முகதர்தைப் பாரத்த போது அவளது மலர்போன்ற கண்களிலிருந்து நல்ல மார்பிலுள்ள அழகிய கொங்கையின் முகட்டில் விழுந்து பரக்கும்படி நிறைந்த கண்ணீர் பரந்தன.

துறை விளக்கம் :

பிரிவு உணர்த்தப்பட்டது. அப்போது தலைவியின் குறிப.்.பு எவ்வாறு இருந்தது என்று தோழி அறிந்தாள். அறிந்ததைத் தோழி தலைவனுக்குச் சொல்லியது.

## 10.16.பாடல் : 34 : தோழி முருகனிடம் சிறைப்புறமாக இருந்த தலைவன் கேட்கும்படி கூறியது :

கடவுட் கற்களை அடை இறந்து அவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்
குருதி ஒண்பூ உரு கெழக் கட்டிப்
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன் இயத்து ஆடும் நாடன்
மார்புதர வந்த படர் மலி அரு நோய்,
நின் அணங்கு அன்மை அறிந்தும், அண்ணாந்து
கார் நறுங்கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவுள் ஆயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே!

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : பிரமசாரி

முருகனே! கடவுள் தன்மையுடைய மலைச்சுனையில் உள்ள இலைகளைக் கடந்து மலர்ந்த, பறியாத குவளை மலரோடு குருதி போன்ற ஒள்ளிய மலராகிய காந்தளையும் சேர்த்து அழகுப்படக் கட்டி, பெரிய மலைப்பக்கத்தில் அழகுறச் சூடிக்கொண்டு சூர்மகள், மலையருவியாகிய இனிய கருவிக்குத் தகுந்த முறையில் ஆடுவாள். அச்சிறந்த மலைநாடனது மார்பு தரவ ந்த நினைத்து வருந்தும் மிகுந்த துன்பமாகிய அரிய நோய் இது. உன்னால் வந்த நோய் அன்று . இதை நீ நன்கு அறிந்திருந்தும கார்காலத்து மலரும் நறிய கடம்பின் மலர்க்கண்ணியைச் சூடிக்கொண்டு ஆடும் வேலன் வேண்டிக் கொள்ள வெறியோடு களத்திற்கு நீ தலை நிமிர்ந்து வந்தோய். நீ கடவுள் ஆயினும் ஆகுக. நீ உறுதியாய் அறியாமை உடையாய், வாழிய.

துறை விளக்கம் :

வெறியாடல் களவுக்காலத்தில் பிரிவினால் வேறுபட்ட தலைவியை நோக்கி இது முருகனால் ஆயதோ என முருகனுக்குப் பலி, பூசனை செய்வதை வெறியாட்டு என்பர்.



## 10.17.பாடல் : 35 : தோழி தலைவனிடம் கூறியது :

பொங்கு திரை பொருத வார் மணல் அடைகரைப்
புன்கால் நாவல் பொதிப் புற இருங்கனி

குறிப்புகள்

கிளை செத்து மொய்த்த தும்பி பழம் செத்துப்
பல்கால் அலவன் கொண்ட கோட்கு அசாந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரை ரே் நாரை எய்தி விடுக்கும்
துறை கெழு மரந்தை அன்ன இவள் நலம்,
பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய்
உழையின் போகாது அளிப்பினும் சிறிய
ஞெகிழ்ந்த கவின் நலம் கொல்லோ, மகிழ்ந்தோர்
கள் களி செருக்கத்து அன்ன
காமம் கொல் இவள் கண் பசந்ததுவே?

திணை : நெய்தல் திணை பாடியவர் : அம்மூவனார்

மேலெழும் அலைகள் தாக்கிய, நீண்ட மணல் பரந்த கரையிலே புல்லிய காம்புடைய நாவலின் கரியகனி, களிபொதிந்த மேற்புறமுள்ளதொன்று உதிர்ந்தது, அதைத் தும்பி வண்டுகள் தம் இனம் எனக் கருதி மொய்த்தன. பல கால்களையுடைய அலவன் என்னும் நண்டு அதனைப் பழம் எனக் கருதிக் கைக் கொள்ளச் சென்றது. அக்கொள்கைக்கு வண்டுகள் வருந்தி கைக்கொள்ள விடாமல் யாழ் நரம்பிசை போல மிக்கு ஒலித்தன. அந்த ஆரவாரத்தை அங்கே இரைதேடும் நாரை கேட்டு கனி கிடக்குமிடம் அடைந்து பூசலைத் தீர்த்தது. அவ்வாறாய கடற்றுறை மிக்க மரந்தை என்னும் ஊர் போன்ற இவள் நலம் பண்டும் இவ்வாறே இருந்தது. நீ காண்பாயாக. பக்கத்திலிருந்து விலகிப்போகாமல் நீ தலையளி செய்தாலும், இவள்கண் பசந்தது. சிறிது நெகிழ்ந்த அழகின் மிகுதியோ? கள் உண்டார்க்குக் கள்ளின் களிப்பால் ஏற்படும் மயக்கம் போன்ற காமமமோ? தெரியவில்லை.

துறை விளக்கம் :

திருமணம் நடந்த பின் தலைவி கணவன் இல்லம் சென்றாள். சில நாள் சென்ற பின் தோழி, தலைவின் இல்லத்தைப் பார்த்துவரப் போனாள். அங்கு தலைவன், தன் இல்லத் தலைவியைக் களவுக் காலத்து ஆறுதல் கூறி நன்கு ஆற்றுவித்தாய் என்று புகழ்ந்து கூறினான். அப்போது தோழி சொல்லியது.

## 10.18.பாடல் : 36 : தோழி தலைவியிடம் சிறைப்புறமாக இருந்த தலைவன் கேட்கும்படி கூறியது :

குறுங்கை இரும்புலக் கோள் வல் ஏற்றை
பூ நுதல் இரும் பிடி புலம்ப தாக்கித்
தாழ் நீர் நனந்தலை பெருங்களிறு அடூஉம்
கல்லக வெற்பன் சொல்லின் தேறி,
யாம் எம் நலன் இழந்தனமே யாமத்து
அல்வாய்ப் பெண்டிர்அம்பலொடு ஒன்றிப்
புரைஇல் தீமொழி பயிற்றிய உரை எடுத்து
ஆனா கௌவைத்து ஆகத்

தான் என் இழந்தது, இல் அழுங்கல் ஊரே?

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : சீத்தலைச் சாத்தனார்

குறுகிய முன் கால்களையுடைய – பாய்தலில் வல்ல – பெரிய ஆண்புலி, அழகிய நுதலையுடைய கரி பெண்யானை வருந்துமாறு தாழ்ந்த நீருள்ள அகன்ற இடத்திலே பெரிய ஆண்யானையைத் தாக்கிக் கொல்லும். அம்மலையிடத்தை உடைய வெற்பன் சொல்ல, தெளிந்து யாம் எமது நலத்தை இழந்தோம். யாமத்திலும் துயிலாது பழிமொழி கூறும் வாயையுடைய பெண்கள் சிலர் அறியும் அம்பலோடு ஒன்று சேர்ந்துரு மேன்மையற்ற தீயமொழி சேர்ந்த உரையை எடுத்து அமையாத பழமொழியாகக் (அலராக) கூறுவர். இந்த ஆராவாரமிக்க ஊர்தான் என்ன இழந்தது? இப்படி அலர் தூற்றுகின்றதே!

துறை விளக்கம் :

சிறைப்புறமாக இருத்தல் என்பது ஒரு மறைவான இடத்தில் இருத்தலாகும். ஆண்யானையைப் புலி தாக்கிக் கொல்லும் மலை வழி இரவில் தலைவன் வரக்கூடாது என்பது குறிப்பு. ஊரில் பழிமொழி பரவியதால் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பு.

## 10.19.பாடல் : 37 : தோழி தலைவனிடம் கூறியது :

பிணங்கு அரில் வாடிய பழவிறல் நனந்தலை
உணங்கு ஊண் ஆயத்து ஓர் ஆன் தெள் மணி
பைபய இசைக்கும் அத்தம், வை எயிற்று
இவளொடும் செலினோ நன்றே குவளை
நீர் சூழ் மா மலர் அன்ன கண் அழக்
கலை ஒழி பிணையின் கலங்கி மாறி
அன்பு இலிர் அகறிர் ஆயின், என் பரம்
ஆகுவது அன்று இவள் அவலம் நாகத்து
அணங்குடை அருந்தலை உடலி, வலன் ஏர்பு
ஆர்கலி நல் ஏறு திரிதரும்
கார் செய் மாலை வரூஉம் போழ்தே.

திணை : பாலைத் திணை பாடியவர் : பேரி சாத்தனார்.

பின்னிய சிறுகாடு வாட்டமடைந்தது. ஆனால் பழைமையான சிறப்புடையது. அகன்ற இடத்தையுடையது. உலர்ந்த புல் உணவு பெற்ற ஒரு கூட்டத்தில் ஓர் ஆவின் தெளிந்த மணியோசை மெல்ல ஒலிக்கும். அந்தக் காட்டு வழியில் கூரிய பற்கையுடைய இவளோடும் செல்வீரானால் நன்று. அவ்வாறன்றி, நீர் அன்பில்லாது பிரிந்து செல்வீராயின், கலைமானால் ஒழிக்கப்பட்ட பெண்மான் போன்று இவள் கலக்கமடைந்து நீர் சூழ்ந்த சிறந்த குவளை மலர்போன்ற இவள் கண்களிலிருந்து நீர் வடிய அழுவாள். இன்னும் கேளும், பாம்பின் அச்சமுடைய அரிய தலை துணிந்து விழும்படி சினந்து வலப்பக்கமாக எழுந்து ஆரவாரமிக்க நல்ல இடியேறு திரியும்.

குறிப்புகள்

மழைபெய்த மாலைக் காலம் வரும் பொழுது இவள் அவலம் பெரிதாகும். அப்போது அவைளக் காப்பது என் பொறுப்பு ஆகாது.

துறை விளக்கம் : திருமணத்தை இடையிலே வைத்துப் பொருளுக்காகப் பிரியும் காலை, தோழி கூறியது.

**10.20.பாடல் : 38 : தலைவி தோழியிடம் கூறியது :**

வேட்டம் பொய்யாது வலை வளம் சிறப்ப
பாட்டம் பொய்யாது பரதவர் பகர,
இரும் பனந்தீம் பிழி உண்போர் மகிழும்
ஆர்கலி யாணர்த்து ஆயினும், தேர் கெழு
மெல்லம்புலம்பன் பிரியின், புல்லெனப்
புலம்பு ஆகின்றே தோழி! கலங்கு நீர்க்
கழி சூழ் படப்பை காண்டவாயில்
ஒலி கா ஓலை முள் மிடை வேலி
பெண்ணை இவரும் ஆங்கண்,
வெள் மணல் படப்பை எம் அழுங்கல் ஊரே

திணை : நெய்தல் திணை பாடியவர் : உலோச்சனார்

தோழி! கலங்கிய நீரையுடைய கழிகள் சூழ்ந்த கொல்லைகளையுடைய தாழைத்துறையில் தழைத்து வளர்ந்த முற்றிய பனை ஓலையோடு முட்களையும் சேர்த்துக் கட்எடிஎய வேலியின் பக்கத்தில் பனைமரங்கள் வளர்ந்திருக்கும். அவ்விடத்தில் வெள்ளை நிறமான மணற் கொல்லைகளையுடைய ஆரவாரமிக்க நம்ஊரில், மீன் வேட்டை பொய்யாது, வலைவளம் சிறப்பாக உள்ளது. மேகம் பொய்யாது என்று பரதவர் பகர்கின்றனர். கரிய பனையின் இனிய கள்ளை உண்போர் மகிழ்கின்றனர். இவ்வாறு ஆரவாரதிக்க புது வருவாயை உடையதெனினும், தேர்மிக்க நெய்தல் நிலத் தலைவன் நம்மை விட்டுப் பிரியின் பொலி விழுந்தாற்போலக் காணப்பட்டு வருத்தம் தருகின்றது.

துறை விளக்கம் : திருமணத்தை இடையிலே வைத்துப் பொருளுக்காகப் பிரியும் காலை, தோழி கூறியது.

**10.21.பாடல் : 39 : தலைவன் தலைவியிடம் கூறியது :**

சொல்லின் சொல் எதிர் கொள்ளாய், யாழ நின்
திரு முகம் இறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ?
கொங்கேழ் இரும் புறம் நடுங்கக் குத்திப்
புலி விளையாடிய புலவு நாறு வேழத்தின்
தலை மருப்பு ஏய்ப்ப, கடைமணி சிவந்த நின்
கண்ணே கதவ அல்ல் நண்ணார்
அரண்தலை மதிலர் ஆகவும், முரசு கொண்டு,
ஓம்பு அரண் கடந்த அடு போர் செழியன்
பெரும் பெயர்க் கூடல் அன்ன நின்
கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே.

திணை : குறிஞ்சித் திணை பாடியவர் : மருதன் இளநாகனார்

பெண்ணே! என் இனிய சொல்லிற்கு எதிர்ச்சொல் சொல்லாமலிருக்கின்றாய். ஆனால், உன் அழகிய முகம் கவிழ நின்று விரைவாக நாணம் கொள்கிறாய். காமம் கைகடந்து போனால் காத்துக் கொள்ளுதல் எளிதாகுமோ? புலியின் வளைந்த வரிகளையுடைய பெரிய முதுகில் நடுங்கும்படி குத்தி விளையாடிய யானையின் புலால் நாறும் கொம்பின் நுனி பொலக் கடைமணி சிவந்த உன் கண்கள் சினத்தையுடையன. அவை மட்டுமல்ல. பகைவர் பாதுகாப்பான இடமாகிய கோட்டைச் சுவரின் உள்ளே இருப்பவராகவும் அவர் பாதுகாப்பான அரணை வென்று முரசைக் கைக்கொண்டு அடும்போரைச் செய்யும் செழியனின் பெரும்புகழையுடைய கூடல் நகரம் போன்ற உன் கரும்பு எழுதப்பட்ட தோள்களும் என்னை வருத்தம் செய்ய உள்ளனவே.

துறை விளக்கம் :

இரண்டாம் நாள் சந்திப்பில் எதிர்ப்பட்ட போது தலைவன் சொல்லியது. உன் கண்ணும் தோளும் என்னை வருத்தின. என் சொல்லிற்கு எதிர்ச்சொல் சொல்லாது உள்ளாய்.

## 10.22.பாடல் : 40 : பரத்தைக் கூறியது :

நெடு நா ஒள் மணி கடி மனை இரட்ட,
குரை இலைப் போகிய விரவு மணல் பந்தர்ப்
பெரும்பாண் காவல் பூண்டென ஒரு சார்த்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப,
வெறி உற விரிந்த அறுவை மெல் அணைப்
புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச,
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்
பசு நெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈர் இமை பொருந்த,
நள்ளென் கங்குல் கள்வன் போல,
அகல்துறை ஊரனும் வந்தனன்,
சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே

திணை : மருதம் திணை பாடியவர் :கோண்மா நெடுங்கோட்டனார்

சிறப்புமிக்க தலைவன் இல்லத்தில் நீண்ட நாவையுடைய ஒள்ளிய மணி ஒலிக்கும். ஒலிக்கும் ஓலைகளால் வேயப்பட்ட பந்தர் மணல் பரப்பில் இருக்கும். பெரிய பாணன் காவல் பூண்டது போல ஒரு பக்கம் இருப்பான். திருந்திய அணிகலன்கள் அணிந்த பெண்கள் நன்னிமித்தம் எதிர்பார்த்து நிற்பர். நறுமணம் உண்டாக விரித்திருந்த நூலாடையுடைய மெல்லிய படுக்கையில் அண்மையிற் பிறந்த புதல்வன் செவிலியருகில் உறங்குகிறான். சிறப்பு மிக்க தலைவி வெண் சிறுகடுகு அணிந்த நெய்யாட்டு நிறைவேறிய அணிமைக் காலத்தில் பசிய நெய் விளங்கும் மெல்லிய உடம்போடு இரு இமைகளும் பொருந்த தூங்கிக் கிடந்தாள். இருள் செறிந்த இரவிலே அகன்ற நீர்த்துறையை உடைய ஊரனாகிய தலைவனும் கள்வன் போலப்

குறிப்புகள்

புகுந்தான். சிறந்த தன் தந்தையின் பெயரைச் சூட்டிக் கொள்ளப் போகும் மகன் பிறந்தான் என்ற காரணத்தால் தலைவன் தன் இல்லம் போந்தான்.
துறை விளக்கம் : தலைவிக்கு வேண்டி தோழி சொல்லியது.

## 10.23.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. வினை முற்றி மீண்ட தலைவனின் கூற்று யாது?
2. ஆடவர் பொருவயிற் பிரிதலின் சிறப்பை உணர்த்தும் பாடல் வழி தலைவியின் பண்பை எடுத்துரைக்க
3. தலைவன் கொடியவன் என்று தோழி கூற காரணம் யாது?
4. நல்ல நட்பின் இலக்கணத்தினை தோழியின் கூற்று வழி நிறுவுக.

**பெருவினா :**

5. தலைவியின் உறுப்பு நலன் அழிதல் குறித்த உவமைகளை உம்பாடப்பகுதி வழி எடுத்துரைக்க.
6. சங்க கால மக்களின் அகவாழ்வின் உயர்பண்புகளின் நற்றிணைப் பாடப்பகுதி வழி நீவீர் அறிவன யாவை?
7. தலைவியின் கூற்றுகளின் வழி அறியலாகும் தலைமக்கள் பண்பு நலன்களை உம்பாடப்பகுதியின் வழி விரித்துரைக்க.

## 10.24.தொகுத்துக் காண்போம். :

இந்த நற்றிணையின் அடுத்த இருபது பாடல்களின் கருத்துகளை மாணவர்களின் மனதில் பதியச் செய்வதோடு நம் முன்னோர்களின் செம்மையான அகவாழ்வையும் இப்பகுதியின் மூலம் அறியலாகின்றது.

## 10.25.மேலும் பயில்வதற்கான நூல்கள் :


- நற்றிணை மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- நற்றிணை மூலமும் உரையும், அவ்வை துரைசாமிபிள்ளை உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- நற்றிணை, புலவர் ந. இராமையாபிள்ளை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- நற்றிணை, முனைவர் கு.வே. பாலசுப்பிரமணியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை98
- நற்றிணை, அ.ப. பாலையன், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-

# கூறு - 11 - பரிபாடல்- வையைப் பாடல்கள்

## 11.1.முன்னுரை :

பரிந்து செல்லும் ஓசையுடைய பாடல்களால் அமைந்ததனால் பரிபாடல் எனப் பெயர்பெற்றது. 25 முதல் 400 அடிகள் வரையிலலான பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் 13 ஆசரியர்களால் பாடப்பட்டுளளன. இந்நூலில் 70 பாடல்கள் இருந்ததாகச் செய்தி உள்ளது. ஆனால் இன்று நமக்குக் கிடைத்துள்ளவை 22 பாடல்கள் மட்டுமே ஆகும். அதில் வையை ஆற்றைப் பற்றிய பாடல்கள் மட்டும் நமது பாடப்பகுதியாக வைக்கப்பட்டுள்ளது.

## 11.2.குறிக்கோள்கள் :

பரிபாடல் நூலில் வையை ஆற்றைப் பற்றி எட்டுப் பாடல்கள் உள்ளன. வையை ஆற்றின் சிறப்பு,. அக்கால உணவு, உடை, அணிகலன்கள், கடவுளர்கள், வழிபாட்டு முறைகள், விழாக்கள், விளையாட்டுகள், புதுப்புனலின் வருகை ஆகியவற்றை உணர்த்துவதே இப்பகுதியின் குறிக்கோளாகும்.

11.3.பாடல் : 1 (6) :

பாடியவர் : நல்லந்துவனார் பண் அமைத்தவர்:நல்லச்சுதனார் பண் : பாலை யாழ்

துறை : வையை நீர் விழவணியிற் காதற்பரத்தை, இற்பரத்தையுடன் நீராடினன் தலைமகன் எனக் கேட்டுப் புலந்தாளைப்புலவி நீக்கிப் புணர்ந்தான் எனக் கேட்ட மலைமகள், வாயிலாகப் புக்க விறலிக்கு அவ்வையையிடம் விழவணியும் ஆய்குப்பட்ட செய்தியும் கூறி வாயில் மறுத்தது.

**வைகையில் பெரு வெள்ளம் :**

நிறை கடல் முகந்து உராய், நிறைந்து நீர் துளும்பும் தம்
பொறை தவிர்பு அசைவிடப் பொழிந்தன்று வானம்
நிலம் மறைவது போல் மலிர் புனல் தலைத் தலைஇ,
மலைய இனம் கலங்க மலைய மயில் அகவ
மலை மாசு கழியக் கதழும் அருவி இழியும்

மலி நீர் அதர் பல பெழுவு தாழ் வரை
மாசு இல் பனுவற் புலவர் புகழ் புல
நாவின் புனைந்த நன் கவிதை மாறாமை,
மேவிப் பரந்து விரைந்து வினை நந்தத்
தாயிற்றே தண் அம் புனல் .

**புதுப் புனலாட முற்படும் மகளிரது செயல் :**

புகை, பூ, அவி, ஆராதனை, அழல், பல ஏந்தி,
நகை அமர் காதலரை நாளணிக் கூட்டும்
வகை சாலும் வையை வரவு.

தொடி தோள் செறிப்பத், தோள் வளை இயங்கக்,
கொடி சேரா திருக் கோவை காழ் கொளத்,

**வையையின் கரை உடைதல் :**

தொகு கதிர் முத்துத் தொடை கலிழ்பு மழுக,
உகிரும் கொடிறும் உண்ட செம்பஞ்சியும்,
நகில் அணி அளறு நனி வண்டல் மண்ட,
இலையும் மயிரும் ஈர்ஞ் சாந்து நிழத்த,
முலையும் மார்பும் முயங்கு அணி மயங்க,

விருப்பு ஒன்றுபட்டவர் உளம் நிறை உடைத்தென,
“வரைச்சிறை உடைத்ததை வையை வையைத்
திரைச்சிறை உடைத்தன்று கரைச்சிறைந் அறைக” எனும்
உரைச்சிறைப் பறை எழ ஊர் ஒலித்தன்று
அன்று, போர் அணியின் புகர் முகம் சிறந்தென,

**மைந்தரும் மகளிரும் நீராடச் செல்லல் :**

நீரணி அணியின் நிரை நிரை பிடி செல்
ஏரணி அணியின் இகல் மிக நவின்று,
தணி புனல் ஆடும் தகை மிகு போர்க்கண்
துணி புனல் ஆக துறை வேண்டும் மைந்தின்,

அணி அணி ஆகிய தாரர் கருவியர்,
அடு புனலது செல அவற்றை அழிவர்,
கைம்மான் எருத்தர், கலி மட மாவினர்,
நெய்ம் மாண் சிவிறியர், நீர் மணக் கோட்டினர்.
வெண்கிடை மிதவையர், நன் கிடைத் தேரினர்.

**ஆற்றினது நீரோட்டம் :**

சாரிகை மறுத்துத் தண்டா உண்டிகை
ஓர் இயவு உறுத்தர ஊர் ஊர்பு இடம் திரீஇச்,
சேரி இளையர் செல அரு நிலையர்
வலியர் அல்லோர் துறை துறை அயர,
மெலியர் அல்லோர் விருந்து புனல் அயர,

**அந்தணர்கள் கொண்ட கலக்கம் :**

சாறும் சேறும் நெய்யும் மலரும்
நாறுபு நிகழும், யாறு வரலாறு
நாறுபு நிகழும் யாறு கண்டு, அழிந்து,
வேறுபடு புனல் என, விரை மண்ணுக் கலிழை
புலம் புரி அந்தணர் கலங்கினர் மருண்டு.

**பிறரும் சேறு கலந்த புனல் கண்ட நீங்குதல் :**

மாறு மென்மலரும். தாரும், கோதையும்,
வேரும், தூரும், காயும், கிழங்கும்.
பூரிய மாக்கள் உண்பது மண்டி
நார் அரி நறவம் உகுப்ப 'நலன் அழிந்து
வேறாகின்று இவ் விரி புனல் வரவு' என,

**புனலது செலவு :**

சேறு ஆடு புனலது செலவு
வரை அழி வால் அருவி வா தாலாட்ட,
கரை அழி வால் அருவிக் கால் பாராட்ட,
'இரவில் புணந்தோர் இடை முலை அல்கல்
புரைவது பூந்தாரான் குன்று' எனக் கூடார்க்கு
உரையொடு இழிந்து உராய், ஊரிடை ஓடிச்,
சலப்படையான் இரவில் தாக்கியது எல்லாம்
புலப்படப் புன் அம் புலரியின் நிலப்படத்
தான் மலர்ந்தன்றே,
தமிழ் வையைத் தண்ணம் புனல்.

**காதற் பரத்தையின் ஐயம் :**

"விளியா விருந்து விழுவார்க்குக் கொய்தோய்"
"தளிர் அறிந்தாய் தாம் இவை"
"பணிபு ஒசி பண்ப! பண்டெல்லாம் நனி உருவத்து
என்னோ துவள் கண்டீ?
எய்தும் களவு இனி நின் மார்பின் தார் வாடக்

கொய்ததும் வாயாளோ? கொய் தழை கை பற்றிச்
செய்ததும் வாயாளோ? செப்பு!"
"புனை புனை ஏறத் தாழ்த்ததை தளிர். இவை
நீரின் துவண்ட சேஎய் குன்றம் காமர்
பெருக்கு அன்றோ வையை வரவு?"
"ஆம் ஆம் அது ஒக்கும் காதல் அம் காமம்
ஒருக்க ஒரு தன்மை நிற்குமோ? ஒல்லைச்
சுருக்கமும் ஆக்கமும் சூள் உறல்! வையைப்
பெருக்கு அன்றோ பெற்றாய் பிழை,
அருகு பதியாக அம்பியில் தாழ்ப்பிக்கும்,

குருகு இரை தேரக் கிடக்கும் பொழி காரில்,
இன் இளவேனில் இது அன்றோ வையை? நின்
வையை வயமாக வை.

செல் யாற்றுத் தீம் புனலில் செல் மரம் போல,
வவ்வு வல்லார் புணை ஆகிய மார்பினை

என்னும் பனியாய் இரவெல்லாம் வைகினை
வையை உடைந்த மடை அடைத்தக் கண்ணும்
பின்னும் மலிரும் பிசிர் போல, இன்னும்
அனற்றினை துன்பு அவிய நீ அடைந்தக் கண்ணும்,
பனித்துப் பனி வாரும் கண்ணவர் நெஞ்சம்

கனற்றுபு காத்தி வரவு!"
"நல்லாள்! கரை நிற்ப நான் குளித்த பைந்தடத்து
நில்லாள் திரை மூழ்கி நீங்கி எழுந்து, என் மேல்
அல்லா விழுந்தாளை எய்தி எழுந்து, ஏற்று யான்
கொள்ளா அளவை எழும் தேற்றாள் கோதையின்

உள் அழுத்தியாள் எவளோ? தோய்ந்தது யாது?" என
"தேறித் தெரிய உணர் நீ! பிறிதும் ஓர்
யாறு உண்டோ இவ் வையை யாறு?"
"இவ் வையை யாறு என்ற மாறு என்னை? கையால்
தலை தொட்டேன் தண் பரங்குன்று!"

**அவள் இல்லத்தின் முதுபெண்டிர் கூறியது :**

"சினவல்! நின் உண்கண் சிவப்பு அஞ்சுவாற்குத்
துனி நீங்கி, ஆடல் தொடங்கு் துனி நனி
கன்றிடின் காமம் கெடுஉம் மகள் இவன்
அல்லா நெஞ்சம்உறப் பூட்டக் காய்ந்தே
வல் இருள் நீயல் அது பிழையாகும்" என

**தலைவி விறலியிடம் கூறுதல் :**

இல்லவர் ஆட, இரந்து பரந்து உழந்து
வல்லவர் ஊடல் உணர்த்தர, நல்லாய்
களிப்பர் குளிப்பர் காமம் கொடி விட,
அளிப்ப துனிப்ப ஆங்காங்கு ஆடுப்
ஆடுவார் நெஞ்சத்து அல்ந்து அமைந்த காமம்
வாடற்க, வையை நினக்கு



(1-10) : மேகங்கள் நீர் நிறைந்த கடலில்இருக்கும் நீரை முகந்து கொண்டு வானில் எங்கும் பரவி, நீர் நிறைதலால் துளும்பும் த் பாரம் தீர்ந்து இளைப்பாறும் பருெட்டுப் பெய்பவை போலா்மழை பொழிந்தன. அதனால் மிக்க நீர் ஊழிக்காலத்தில் நிலத்தை மூடப் பெருகுவது பொன்று

பெருகி, இடந்தோறும் கூடி, மலையில் வாழும் மான் கூட்டம் முதலிய உயிரினம் கலங்குமாறும, மயில்கள் களித்து அகவவும், மலைகள் மீது பந்துள்ள அழுக்குகள் நீங்கும்படி விரையும் அருவியாய் விழுகின்றது வெள்ளம். அது ஓடுதற்குரிய வழிகள் பற்பல பொருந்திய மலைச் ாசரலில் குளிர்ந்த அழகிய அந்நீர், குற்றம் இல்லாத நூற் கேள்வியையுடைய நல்லிசைப்புலவர்கள் புகழும் அறிவையடைய தம் நாவால் பாடிய நல்ல செய்யுள்கள் பொய்படாமல் நிலைநிற்கச்செய்ய எங்கும் போய்ப் பரவி உழவு முதலிய தொழில்கள் பெருகும்படி தாவிச் சென்றது.

(11-13) : அந்த வெள்ள நீர் வையையாற்றில் வந்த வருகையில் புதுநீரில் ஆடுவதற்கு விரும்பினர் மகளிர். தம் கூந்தலைப் புலரச் செய்வதற்குரிய அகில் மரம் முதலிய புகைப்பதற்குரியவையும், அணிந்து கொள்வதற்குரிய மலர்களும் வையை ஆற்றுக்கு ஆராதனை செய்வதற்கு உரியவையம் தீயும் என்பனவற்றையும் பொன்மீன், பொன் நண்டு முதலிய பற்பல பொருள்களையும் எடுத்துக்கொண்டனர். தம் மகிழ்ச்சி பொருந்திய கணவன் மாரைத் திருநாளுக்கு உரிய அணிகள் ஆடைகள் ஆகியவற்றை அணியச் செய்யும் இம்முறை பொருந்தியது.

(14-24) : மகிழ்ச்சியால் மகளிர்க்கு உடல் பூரித்தலால் தொடிகள் தோளில் அழுந்த, தோளில் இட்ட வளையம் முன் கையில் வந்து மோதும். எழுதப்பட்ட தொய்யில் கொடிகள் ஒன்றுடன் ஒன்று கூடிக் கலந்து அழியும். மகளிரின் மேகலை வடங்கள் அற்று உதிர்ந்து அதனது நூல் வெளிப்பட்டுத் தோன்றும். திரண்ட ஒளியை உடைய முத்து மாலை கலங்கிச் சந்தனம் முதலிய பூசப்பட்டதால் ஒளி மழுங்கும். நகத்திலும் கபோலத்திலும் ஊட்டப்பட்ட செம்பஞ்சுக் குழம்பு அழியும். முலையில் பூசப்பட்ட குங்குமக் குழம்பு வண்டல் போல் படிந்து தோன்றும். தளிர் கொண்டு கட்டப்பட்ட படலைமாலையும் கூந்தலும் குளிர்ந்த சந்தனத்தை அழிக்கும். மங்கையர் மார்பிலும் ஆடவர் மார்பிலும் பொருந்திய அணிகலன்கள் தம்முன் கலந்து விளங்கும். மகளிரும் மைந்தரும் அழகிய அவ்விருவர் தம் உள்ளமம் அன்பால் ஒன்றுபட்டு அவர் தம் நிறையை உடைக்கும். அவை போல் வெள்ளம் மலை போன்ற அணைகளை உடைத்தழித்தது. அந்த ஆற்றின் சிறகுகளான அலைகளோ வையையாற்றின் கரையான காவலை உடைத்தது. அக்கரையை அடைத்தற்கு ஆட்கள் வருக என்று காவலர் உரைத்தனர். அவர் தம் சொல்லாகிய காவல் ஒலியுடன் பறையொலித்தது. அவ்வொலியுடன் கிளர்நதது எழும் ஊராரின் ஆரவாரமும் எழுந்தது.

(25-37)அங்ஙனம் ஊரார் கிளர்ந்து ஆராவாரம் செய்த அன்று. பொர் செய்வதற்கு அணி வகுக்கப்பட்ட அணியில் களிற்றி யானைகள் அணி அணியாய்ச் செல்வதைப் போல், இந்த நீராட்டு விழாவின் பொருட்டு வகுக்கப்பட்ட அணியில், வரிசை வரிசையாகப்பெண் யானைகள் சிறந்து செல்லலால், அழகிய அணி அணிந்த அணிகலன்களையும் இளைய ஆடவரும் அவருக்கு இளையரான மகளிரும். கரை முதலியவற்றை

இடிக்கம் அந்த வையை யாற்றின் வெள்ளத்தினூடு புகுவதற்காக அணிகலன்களை நீக்கி நீராடத் தக்க அணிகளுடனே யானையின் பிடரியிலும் மெல்லிய நடையுடைய குதிரையின் மீதும் விளையாட்டுப் போரைப் பெரிதும் விரும்பினராய்நீராட்டு விழாவுக்குரிய தகுதி மிக்க தெளிந்த வையை நீரே விளையாட்டுப்போரை நிகழ்த்துதற்குரிய போர்க்களமாய்க் குகுறித்தனர். தமக்கு ஏற்ற துறையைத் தேர்ந்து கொள்ளும் விருப்புடன் ஒருவருக்கு ஒருவர் முற்பட்டுக் கூட்டம் கூட்டமான தூசிப்படை போல் விளங்கிச் சென்றனர். உள்ளெ இடப்பட்ட புழுகு நெய்யால் சிறந்த துருத்தியை (நீர் பாய்ச்சும் கருவி) உடையவராய்ச்சென்றனர். உள்ளே இடப்பட்ட பனிநீரால் மணம் மிக்க கொம்புகளை உடையவராய்ச் சொன்றனர். அவர்கள் வெண்மையான நெட்டிகளால் செய்யப்பட்ட தெப்பங்ளை உடையவராய், சென்றனர். செலவு தவிராத யானைக் கூட்டமும் குதிரைக் கூட்டமும் தம் தம் கதியில் செல்வதை ஒழிந்து அந்த ஒரே வழியில் செல்பவரை நெருக்கும்படியாய் மக்கள் சென்றனர்.

(38-45) : மேற்கண்ட வண்ணம் மதுரை மக்கள் ஆற்றங்கரையில்திரிந்தனர். இதனால் புறஞ்சேரியில் இருந்த இளைஞர் தாம் வெளியே செல்வதற்கும் அரிய நிலையை உடையவர் ஆயினர். எல்லாரும் ஒருவரை ஒருவர் முற்படச்சென்றனர். சென்று துறைகளில் இடம் பிடிக்க முயன்றனர். வலிமை அற்றவர் ஆற்று நீரில் குதித்தாட அஞ்சினர். துறைதுறையாய்த் துறை அருகில் நின்ற நீராடலாயினர். மெலியவர் அல்லாதார் புதிய நீரில் குதித்து நீர் விளையாட்டு ஆடலாயினர். அதனால் அவர்கள் அணிந்திருந்த பத்துத் துவர் முதலியன ஊறின நீரும் சந்தனம் முதலியவற்றின் குழம்பும் நறுமண எண்ணெயும் சூடியிருந்த மலர்களும் மணக்குமாற இந்த வையையாறு விளங்கம். இதனால் வேதத்தை விரும்பும் அந்தணர் இப்படிப் பல்வேறு மணம் மணக்க ஓடும் ஆற்றின் தன்மையை உணர்ந்து மங்கையரும் ஆடவரும் பூசிய மணப்பொருள்கைளக் கழுவி யஅக்கலங்கல் நீரை இது தூய்மை இழந்து விட்டது என எண்ணி மருட்சி அடைந்தனர். நீடுதலும் ஆசமனம் செய்தலும் செய்யாதவராய்க் கலக்கம் அடைந்தனர்.

(46-51) ˙ சூடிக் கழித்ததால் தம் நிறம், மணம் மாறிய மென்மையான மலரும், ஆடவர் அணிந்த மாலைகளும், மங்கையர் அணிந்த மாலைகளும். கரையை இடித்து வருதலாலர் அந்தக் கரையில் உள்ள மரம் செடி கொடிகளின் வேர், தூர். காய் கிழங்குகள் ஆகியவற்றுடன் கீழ் மக்கள் குடித்து மிஞ்சிய பன்னாடையால் வடித்த கள்ளை வார்த்தலால் அதனையும் மேற்கொண்டு இந்த விரிந்த நீரின் வருகை நலம் கெட்டு மாறுபட்டது என்று அந்த அந்தணரே அல்லாமல் மற்றவரும் அவ்வையை ஆற்றை நீங்கிச் சென்றனர். அக்குழம்பிய நீரின் வரவு இத்தகைய தன்மை உடையது.

(52-60) : எல்லை கடந்து இழிகின் வெண்மையான அருவி தாலாட்டவும் தடையில்லாமல் செல்லும் தூய்மையானதும் உருவம் அற்றதும் ஆன தென்றற்காற்று பாராட்டவும் இரவுக்குறியில்தலைவியைக் கண்டு கூடிய தலைவர் அத்தலைவியின் முலையிடைக் கிடந்து இன்துயில் கொள்வதற்குக் கடப்ப மாலையை அணிந்த முருகப்பெருமானின் திருப்பரங்குன்றம் பொருத்தமானது என்று இவ்வாறு எண்ணி அங்குச் செல்லாத மாந்தரக்குக் கூறும் தொழிலுடன். இழிந்து பரவி மதுரைத் தெருக்களின் இடையே ஓடி வஞ்சனை செய்யும் மல்ர அம்புகளையுடைய காமன் இரவ நேரத்தில் மகளிரையம் மைந்தரையும் மோதியவை எல்லாம் புலனாகும்படி மகளிர் ஊடல் கொண்டு அறுத்து எறிந்த மாலை முதலியவற்றை வாரிக் கொணர்வதால் யாவார்க்கும் புலப்படச் செய்து பொலிவற்ற வைகறைப்பொழுதில் தெருக்கள் யாவும் வறுநிலமாகும்படி பரந்தது. தமிழையுடைய வையை ஆற்றில் வந்த அழகிய புதுநீர் இத்தன்மை உடையது என்று அந்நீரில் ஆடிய தலைவன் தன் காதல் பரத்தைக்குச் சொன்னான்.

(61-70) : மேற்கண்டவாறு தலைவன் காதற் பரத்தையிடத்துக் கூறினான். காதற்பரத்தை அதைக் கேட்டு ஊடல் கொண்டு அவனைப் பழித்து ஊடல் கொண்டாள். அவரன் அவளது ஊடலைத் தீர்க்க முயன்றான். இதனை விளக்குவது இது.

'நீ அழைக்கப்படாத விருந்தினனாய்ச் சென்றாய். நின்னை விரும்பும் மகளிர்க்காகவே இத்தளிரைக் கொய்தாய். எனக்காக அத்தளிரைக் கொய்யவில்லை" என்ற காதற் பரத்தை உரைத்தாள். அதைக் கேட்டத் தலைவன், "நீ நன்கு அறிந்தாய், இவை பிற மங்கையர்க்குக் கொய்தவை! உண்மையே! என்றான் அவன். அதைக் கேட்ட காதற் பரத்தை "பணிவான சொற்களைச் சொல்வாயேனும்முறிந்த அன்பை உடையவனே! இச்செயலால் இப்போது நின் களவொழுக்கம் எனக்குப் புலப்படுகின்றது. முன்பு எனக்க்கொய்து வந்த தளிர் எல்லாம் விரைவில் நீ வருதலால் அத்தளிரின் உருவம் துவளாது. ஆனால் அத்தளிரோ மிகவும் துவண்டுள்ளது. பார்! இதற்குக் காரணம் நீ இது பிறிது ஒருத்திக்குக் கொய்து கொண்டு போய் அவளுக்குத் தர அவள் அதனை மறுக்க அதனால் காலம் நீட்டித்தமையே ! அதில்லையேல் வேறு என்ன? கூறுக!

"இனி அந்தப்பதியவள் தான் நின் மார்பில் அணிந்த மாலை வாடும்படி நெடிது நின்று அத்தளிரைக் கொய்வதற்கேனும் நினக்கு இசைய வில்லையோ! இவ்வாறு பறிக்கப்பட்ட இந்தத் தழையைக் கையுறையாக் கொண்டு போய் அவளடியில் வீழ்ந்து வணங்கியிருப்பாயே! அதற்காகவேனும் அவள் நினக்கு இசையவில்லையோ! ஏன் விழிக்கின்றாய்? சொல்!" என்றாள்.

அதைக் கேட்ட அத்தலைவன், “வையை ஆற்றில் புதுப்புனல் வருகை அழகான பெருக்கன்றோ, அதனால் அழக கட்டு மரத்தில் ஏறி ஆற்றைக்கடத்தற்குக் காலம் தாழ்ந்தது. ஆதலால் அந்த வையை நீர் காரணமாக இவை துவண்டன. யான் முருகப்பெருமானின் திருப்பரங்குன்றத்தின் மீது ஆணையாக இதைச் சொல்கின்றேன்” என்றான்.

(71-74) : ஆம்! ஆம்! நீ கூறுவதும் பொருந்தும். காதலையுடைய அழகிய காமமும் ஒருமிக்க ஒரே தன்மை கொண்டதாய் இருத்தல் உண்டோ! சிலரிடம் விரையச் சுருங்கும். சிலரிடம் பெருகும். அதனால் இந்த வையை ஆற்றினது நீர்ப் பெருக்கை அக்காமம் ஒத்ததாய் உள்ளது. நீ தேவையற்றுச் சூள் கூறிப் பிழை செய்தாள். இனி இத்தகைய சூள் உரைக்காதே.

(75-78) : “வானம் பெய்யும் கார்காலத்தில எம் ஊர் உம் ஊர்க்கு அருகாயிருக்க, தெப்பம் காரணமாக நின்னைத் தாழ்ப்பிக்கும் இன்னிளவேனில் குருகுகள் இரை தேடும் அளவில் நீர் வற்றிக் கிடக்கும் இத்தகைய இயல்பு கொண்டது அன்றோ வையை ஆறு? அதனால் நின் காமத்தையும் வையை ஆறு அழித்ததாக எண்ணுவாய்! என்றாள்.

(79-80) : “தனக்கு என இயக்கம் இல்லாது இனிய புனலில் அந்நீர் ஓடும் மரம் போல் நின்னைக் கவர்ந்து கொள்வதில் வல்ல மங்கையர் இயக்கிய வழியே இயங்கினை. அம்மங்கையர் நீராடும் தெப்பமான மார்பையும் உடையை! அவ்வாறு இருத்தற்கு ஒரு சிறிதும் அஞ்சாமலும் இரவுப் பொழுதெல்லாம் அவளோடு தங்கினாய்! இந்த வையை ஆற்றில் உடைந்த மடையை அடைந்த போதும் மீண்டும் ஒழுகும் ஓற்று நீர். அதுபோல் முன்னே உண்டான துன்பம் நீங்கும்படி நீ அவரிடம் தங்கியிருந்தாய். என்றாலும் நினது பிரிவால நீர் ஒழுகும் கண்ணை உடைய அம்மங்கையர் நெஞ்சத்தைப் பின்னரும் வருந்தும் படியாகச்செய்து இப்படி என்னிடம் வந்தனை, இனி இங்ஙனம் வரவேண்டா!” இப்படிக் காதற் பரத்தை சொன்னாள்.

(87-91) : ஏடி! நான் ஒரு நீர்நிலையில் நீராடினேன். அந்நீரிநிலையின் கரையில் அழகியவள் நின்றிருந்தாள். அங்ஙனம் நின்றிருந்தவள் தன் அறியாமையால் தரையிலேயே நில்லாதவளாய் அக்குளத்தில் பாய்ந்து ஆழ்ந்தாள். பின்பு மேலேஎழுந்தாள். எழுந்தவள் மயங்கி என் மீது விழுந்தாள். விழுந்தவளை நான் என் கையில் எடுத்துக் காக்க முயன்றேன். என்னை விட்டு எழுந்தாள். அதனால்அவள் காம நுகர்வு அறியாத இளமையுடையவள் என அறிந்து கொள்வாய். அவளையெ அல்லாமல் என்மார்பில் மாலை போல என் மார்பில் முயங்க முனைந்தவரள் யாவள்? நான் அவளைத் தழுவிய ஆறுதான் எதுவோ?” என்று கூறினான். அதன்மேல் பரத்தை உரைக்கத் தொடங்கினாள்.

(92-93) : "அதை நான் சொல்வேன். சொன்ன பின்பு நீயே நன்கு உணர்ந்துகொள். நீ அவளுடன் ஆடுதற்கு ஏற்ற ஆறு மற்றொன்று உண்டோ! நீ நீராடியது இந்த வையை ஆறுதான்" இவ்வாறு காதற் பரத்தை சொன்னாள்.

(94-95) : அவள் கூறியதைக் கேடடான் அத்லைவன். யான் குளம் ஒன்றில் குறித்தேன். அவங்ஙஉமிருக்க நீ இந்த வையையாற்றில் தான் ஆடினாய் என்று மாறுபட்ட பேசுகின்றாய். என்ன காரணமோ! இதன் மேலும் நீ ஐயம் பொள்வாயாயின் முன்னகம் சூள் உரைத்தது போல் மீண்டும் திருப்பரங்குன்றின் தலையைத் தொட்டுக் கூறுகின்றேன் என்று சொன்னான்.

தலைவனும் காதலர் பரத்தையும் .ங்ஙனம் முரண்பட்டுப் பேசிக் கொண்டதைக் காதல் பரத்தை வீட்டில் இருந்த முதிய பெண்டிரில் ஒருத்தி காதற் பரத்தை ஊடியதைக் கடிந்த உரைத்துத் ததணியச்செய்தாள். தலைவன் அக்காதற் பரத்தையைக் கூடிக் களித்தான்.

இச்செய்தியை எல்லாம் தலைவி அறிந்தாள். ஆதலால் தலைவன் பொருட்டாகத் தன்னிடம் தூதாய் வந்த விறலியிடம் கூறி இத்தையவனை இனிமேல் தான் ஏற்க இயலாது என்று மறுத்துக் கூறினாள்.

(96-104) : இவ்வாறு ஊடி நின்ற காதற் பரத்தையின் வீட்டில் உள்ள முதுபெண்டிர் அவளை நோக்கி, "நீ இப்படிச் சினம் கொள்ளாதே! தலைவனோ நின் மை பூசப்பட்ட கண் சினந்தாலே அதற்குப் பெரிதும் அஞ்சுகின்றான். அவ்வாறு அஞ்சுபவனிடம் நீ ஊடல் நீங்கி அவனுடன் விளையாடுவதைத் தொடங்குவாயாக! அவ்வாறின்றி நீ தலைவனின் இயல்பை உணராமல் ஊடலில் மிகவாயின் அவன் காம இன்பம் பதனழிந்து கெடும். நீயோ பெண் மகள். இத்தலைவனின் சுழலும் நெஞ்சம் இறுக்கமாகப் பூட்டிக்கொள்ளும்படி சினந்து நின்னை விட்டுப் பிரிந்து நீங்குவது உறுதியாம். பின்பு இவனைத் தேடிக்கொண்டு இருள் மிக்க இரவில் செல்ல நேரும். ஆகவே நீ அவ்வாறு செல்வதை ஒழிவாய். அங்ஙனம் இருளில் செல்வது இடம் அறிந்து ஊடி இனிதாய் உணரும் ஒழுக்கத்துக்குப் பிழையாகும்" என்று கூறித் தேற்றுதலானும் ஊடல் உணர்த்தவல்ல வாயில்களும் இரந்து சொல்லியும் அந்த இருவரும் கூடும்படி ஊடலைத் தணித்தலானும் விறலியே அந்த இருவரும் கள்ளுண்ட களிப்பர். வையை ஆற்றில் நீராடுவர். காம இன்பம் மிகம்படி ஊடிக் கொள்வர். ஊடல் சிறிது மிக்கவுடன் அது தணிந்து கூடுவர். அங்கங்கே போய் விளையாடுவர்.

(105-106) : வையை ஆறே! நீ நின்னிடம் நீராடுபவரின் மனத்தில் பெருகிப் பொருந்திய இத்தகைய காமத்தை உண்டாக்குகின்ற தன்மை நின்னிடம் என்றும் குறையாதாகுக.

## 11.4.பாடல் : 7

பாடியவர் : மையோடக் கோவனார். பண் அமைத்தவர் : பித்தாமத்தர்

**வையைப் புனலின் வருகை :**

திரை இரும் பனிப் பெளவம் செவ்விதா அற முகந்து,
உர உரும் உடன்று ஆர்ப்ப, ஊர் பொறை கொள்ளாது,
கரை உடை குளமெனக் கழன்று, வான் வயிறு அழிபு,
வரை வரை தொடுத்த வயங்கு வெள் அருவி?
இரவு இருள் பகலாக,˙இடம் அரிது செலவு என்னாது,

வலன் இரங்கு முரசின் தென்னவர் உள்ளிய
நிலன் உற நிமிர் தானை நெடு நிரை நிவப்பு அன்ன,
பெயலான் பொலிந்து பெரும் புனல் பல நந்த,
நலன் நந்த நாடு அணி நந்தப் புலன் நந்த
வந்தன்று வையைப் புனல்.

**புனலின் செயல் :**

நளி இருஞ் சோலை நரந்தம் தாஅய்,
ஒளிர் சினை வேங்கை விரிந்த இணர் உதிரலொடு
துளியின் உழந்த தோய்வு அருஞ் சிமைதொறும்
வளி வாங்கு சினைய மா மரம் வேர் கீண்டு.
உய்ர்ந்துழி உள்ளன் பயனம்பிடைப் பரப்பி

உழவர் களி தூங்க முழவு பணை முரல,
ஆடல் அறியா அரிவை போலவும்,
ஊடல் அறியா உவகையள் போலவும்
வேண்டுவழி நடந்து தாங்கு தடை பொருது
விதி ஆற்றான் ஆக்கிய மெய்க் கலவை போலப்

**வெள்ளப் பெருக்கைக் கண்ட மக்களின் செயல் :**

பொது நாற்றம் உள்உள் கரந்து புது நாற்றம்
செய்கின்றே செம்பூம் புனல்.
“கவிழ்ந்த புனலின் கயம் தண் கழுநீர்
அவிழ்ந்த மலர் மீது உற்றென” ஒரு சார்
“மாதர் மடநல்லார் மணலின் எழுதிய



பாவை சிதைத்தது என அழ” ஒரு சார்
“அகவயல் இள நெல் அரிகால் சூடு
தொகு புனல் பரந்தெனத் துடி பட” ஒரு சார்
ஓதம் சுற்றியது ஊர்” என ஒரு சார்

"கார் தூம்பு அற்றது வான்" என ஒரு சார்

"பாடுவார் பாக்கம் கொண்டென",
"ஆடுவார் சேரி அடைந்தென",
"கழனி வந்து கால் கோத்தென",
"பழன வாளை பாளை உண்டென",
"வித்து இடு புலம் மேடு ஆயிற்றென",

உணர்த்த உணரா ஒள்ளிழை மாதரைப்
புணர்த்திய இச்சத்துப் பெருக்கத்தின் துனைந்து,
சினை வளர் வாளையின் கிளையொடு கெழீஇ
பழன உழவர் பாய் புனல் பரத்தந்து.

**வையைப் புனலின் வனப்பு :**

இறு வரை புரையுமாறு இரு கரை ஏமத்து,
வரை புரை உருவின் நுரை பல சுமந்து,
பூ வேய்ந்து, பொழில் பரந்து,
துனைந்து ஆடுவார் ஆய் கோதையர்
அல் தண் தாரவர், காதில்
தளிர் செரீஇ கண்ணி பறித்து

கை வளை, ஆழி, தொய்யகம், புனை துகில்,
மேகலை, காஞ்சி, வாகுவலயம்,
எல்லம் கவரும் இயல்பிற்றாய் தென்னவன்
ஒன்னார் உடை புலம் புக்கற்றால் மாறு அட்ட
தானையான் வையை வனப்பு

புரிந்த தகையினான் யாறு ஆடுவாருள்
துரந்து புனல் தூவ, தூ மலர்க் கண்கள்
அமைந்தன் ஆங்கண் அவருள் ஒருத்தி,
கை புதை இயவளை
ஏக்கழுத்து நாணான் கரும்பின் அணை மென்தோள்

போக்கிச் சிறைப் பிடித்தாள் ஓர் பொன் அம் கொம்பு பரிந்து அவளைக்
கைப் பிணை நீக்குவான் பாய்வாள்
இரும்பு ஈர் வடி ஒத்து மை விளங்கும் கண் ஒளியால்
செம்மைப் புதுப் புனல் சென்று இருளாயிற்றே
வையைப் பெருக்கு வடிவு.

குறிப்புகள்

விரும்பிய ஈரணி மெய் ஈரம் தீர,
சுரும்பு ஆர்க்கும் சூர் நறா ஏந்தினாள் கண் நெய்தல்
பேர் மகிழ் செய்யும் பெரு நறாப் பேணியவே
கூர் நறா ஆர்ந்தவள் கண்,
கண் இயல் கண்டு ஏத்தி காரிகை நீர் நோக்கினைப்

பாண் ஆதரித்துப் பல பாட, அப் பாட்டுப்
பேணாது ஒருத்தி பேதுற, ஆயிடை
என்னை வருவது எனக்கு என்று இனையா,
நன் ஞெமர் மார்பன் நடுக்குற நண்ணி,
சிகை கிடந்த ஊடலின் செங் கண் சேப்பு ஊர,

வகை தொடர்ந்த ஆடலுள் நல்லவர் தம்முள்
பகை தொடர்ந்து கோதை பரியூஉ, நனி வெகுண்டு,
யாறு ஆடு மேனி அணி கண்ட தன் அன்பன்
சேறு ஆடு மேனி திருநிலத்து உய்ப்ப, சிரம் மிதித்து,
தீர்வு இலதாகச் செருவுற்றாள், செம் புனல்,

ஊருடன் ஆடுங்கடை
புரி நரம்பு இன் கொளைப் புகல் பாலை ஏழும்
எழுஉப் புணர் யாழும், இசையும் கூட,
குழல் அளந்து நிற்ப, முழவு எழுந்து ஆர்ப்ப,
மன் மகளிர், சென்னியர், ஆடல் தொடங்க,

பொருது இழிவார் புனல் பொற்பு, அ.்.து
உரும் இடி சேர்ந்த முழக்கம் புரையும்
திருமருதமுன்துறை சேர் புனற்கண் துய்ப்பார்
தாமம் தலைபுனை பேஎம் நீர் வையை
நின் பயம் பாடி விடிவுற்று ஏமாக்க,
நின் படிந்து நீங்காமை இன்று புணர்ந்தெனவே.

விளக்கவுரை :

(1-10) : மேகங்கள், அலைகளையம் குளிர்ச்சியையும் உடைய கரிய கடல் வற்றுமாறு நன்கு நீரை மொண்டு வன்மையுடைய இடியானதது ஆரவாரம் செய்ய, தம் மீது ஏறி யபாரம் தாங் கமாட்டாமல் தம் வயிறு கிழிந்ததால் கரை உடையும் குளம் போல சைய மலையின் சிகரங்கள் தோறும் தொடுக்கப்பட்டு விளங்கும் அருவி நீர், அது மழையால் பொலிவு அடைந்த மற்ற நீருடன் கூடி வையை ஆற்றில் நீர் பெருகி வெள்ளமாக உயிரகளுக்கு எல்லாம் மிகுமாறும் மருதநிலைதம் அழகுறுமாறும், குறிஞ்சி முதலிய வன்புலங்கள் வளம் பெருகுமாநும் ஓடி வந்தது. மன்னர்வெற்றி கொள்ள எண்ணி நாட்டை அடைதற்கு நிமிர்நது போகும் பாண்டியரின்

குறிப்புகள்

படையது பெரிய அணியின் எழுச்சி போல் அவ்வாறு செல்கின்றது. அது யான் போகும் இடம் அடைவதற்கு அரியது என எண்ணுவதில்லை. இரவு பகல் என்று கருதாமலும் அ.்.து ஓடி வந்தது.

(11-15) : அந்த ஆற்று வெள்ளம் கருமையான சோலைகளில் உள்ள நரந்தம் புற்களின் மேலே பரவியது. விளங்கம் கிளைகளையுடைய வேங்கை மரத்தின் மலர்ந்த பூங்கொத்தினின்றும் உதிர்ந்த மலர்களுடன் கூடி மழையில் அலைக்கப்பட்ட அடைவதற்கு அரிய மலையுச்சிகள் தொறும் உள்ளனவாய்க் காற்றால் வளைக்கப்பட்டு முறிந்த கொம்புகளை உடைய பெருமரங்களை வேருடன் அகழ்ந்து தள்ளி உருட்டிக் கொண்டு வந்து, குறிஞ்சி நிலத்திலும் முல்லை நிலத்திலும் உள்ள பொருள்களை வாரிக்கொண்டு வந்து மருத நிலத்திலும் நெய்தல் நிலத்திலும் பரப்பியது.

(16-22) : உழவுத் தொழில் செய்பவர் மகிழ்ச்சி அடைய, முழவுகளும் பெரும்பறைகளும் ஒலிக்க, கூத்தின் இயல்பை அறியாத ஆடல் மகள் தாறுமாறாக நடப்பது போலவும், இடம் அறிந்து ஊடல் கொண்டு இனிதின் உணர்வதான ஊடல் இயல்பை அறியாத உவகையள் செருக்காக நடப்பது போலவும் தான் வேண்டிய இம் எல்லாம் சென்றது, தடை செய்கின்ற அணையை உடைத்துக் கொண்டு போனது. நூல் விதிப்படி செய்யப்பட்ட உடம்பில் பூசுவதற்கான கலவையின் நறுமணம் போல் நறுமணப்பொருள்கள் பலவற்றைக் கூடியதால் பொதுவாய் மணக்கும் மணத்தை உள்ளே வைத்துக் கொண்டு அந்தச் செம்மை நிறம் உடைய வெள்ள நீர் தன் மீது புதிய நறுமணத்தைப் பெற்றது.

(23-30) : ஒரு பக்கத்தில் குளம் வெள்ள நீர் பாய்ந்து புகுந்த நீரால்பெருகிச்செங்கழுநீரின் மலர்ந்த மலர்கள் முழுகி விடும்படி பெருகி வந்தது என்று சிலர் கூறினர். ஒரு பக்கத்தில இளைய பெண்கள் தாம் மணல் மீது செய்த பாவையை நீர் அழித்து விடடது என்று கூறி அழுதனர். ஒரு பக்கத்தில வயலில் விளைந்து முற்றிய இள நெல்மீதும் அரிந்து குவித்து வைத்த குவியல் மீதும், வெள்ளம் பெருகிப் பாய்ந்தது என்று அவற்ளைப் பாதுகாக்கும் பொருட்டு துடிகள் முழக்கினர்.

ஒரு பக்கத்தில் கடலே பெருகி வந்து ஊரை வளைந்து கொண்டது என்று மக்கள் ஆரவாரம் செய்தனர். ஒரு பக்கத்தில் மேகம் துளிப்பதற்குரிய சிறிய துளைகள் உடைந்து பெரிய ஓட்டை ஆயிற்றோ! என்று சிலர் கூறினர். இவ்வாறு நிகழ,

(31-39) : ஒரு பக்கத்தில் பாணர்கள் குடியிருந்த பாக்கத்தை வெள்ளம் கவர்ந்து கொண்டது எனக் கூக்குரல்எழுந்தது. ஒரு பக்கத்தில் கூத்தர் குடியிருந்த சேரியை வெள்ள நீர் வளைந்து கொண்டது என்று ஒரு பக்கத்தில் ஆரவாரம் எழுந்தது. ஒரு பக்கத்தில் வெள்ளநீர் கமுகு தென்னை ஆகியவற்றின் கழுத்தை முட்டப் பெருகியது அதனால் வயல்களில் வாழும் வாளைமீன் அவற்றின் பாளையைத் தின்னுகின்றன என்ற வியந்த உரைத்தனர். ஒரு பக்கத்தில் உழவர் எம் நாற்றங்கால் வெள்ளத்தால் வண்டலிடப்பட்டு மேடாயிற்றே! என்று வருந்தினர். ஊடலைத்

*Self -Instructional Material*

தாம் நீக்க முயல நீஙாத மகளிரைக் கூட்டுவித்தற்கு முயலும் கணவரின் ஆசை வெள்ளத்தைப் போல், பெருகி விரைந்த பாய்ந்த நீரில், வயல் தொழிலையுடைய வேளாளர், கரு முதிர்ச்சி அடைந்த வாளை மீனைப் போல், விலாப் பருக்கவுண்டு தம் சுற்றத்தாரோடும் கூடித் தம் தொழிலைச் செய்யும் பொருட்டுப் பரவிச் சென்றனர்.

(40-50) : நீரால் மாதுண்டு அடிப்பக்கம் இடிந்த மலைகளைப் போல் விளங்குவன இருகரைகள். வெள்ளிப பனிமலையின் சிகரங்களைப் போன்ற வடிவம் கொண்டு நுரை பலவற்றையம் சுமந்து கொண்ட வெள்ளம் ஓடியது. மலரால் மூடப்பட்டுச் சோலைகளின் இடையே பரவி ஓடியது. ஓடிய வெள்ளநீரானது தன்னிடத்தில் ஆராய்ந்து தொடுத்த மாலையை உடைய மகளிரின் காதுகளில் தளிரைச் செருகியது. மலர்ந்த குளிர்ந்த மாலை அணிந்த ஆடவரின் தலையில் சூடிய மாலைகளைப் பறித்தது. மங்கையரின் கையில் அணிந்த வளையல்களும் தலையில் அணிந்த தலைப்பாளை என்னும் அணியும் உடுத்த ஆடையும் அந்த ஆடையின் உள்ளே அணியப்படும் மேகலை என்ற அணிகலனும் ஆடையின் வெளியே அணியப்படும் காஞ்சி என்னும் அணிகலனும் மைந்தர் உடுத்த ஆமைடயும் அணிந்த மோதிரங்களும் தோள் வலயங்களும் ஆகியவற்றைக் கவர்ந்து கொண்ட தன்மை உடையதாய் விளங்கியது. பகைவரைக் கொன்ற படையை உடைய பாண்டி மன்னனின் வையை ஆற்றில் வந்த புதிய வெள்ளத்தின் இயல்பு, பாண்டிய மன்னன் பகைவரின் தோற்றத்திற்குரிய நிலத்தில் புகுந்த இயல்பைப் போல் விளங்கியது.

(51-60) : மகளிர் சிலர் யாவராலும் விரும்பப்படும் அழகை உடைய பாண்டிய மன்னனின் வையை ஆற்றில் நீராடினர். அம்மகளிருள் சிலர் நீரைத் தூவும் துருத்தி, சிவிறி கொண்டு மற்றவர் மேல் நீரைப் பாய்ச்சினர், மற்றப் பெண்கள் தூய மலர் போன்ற கண்கள் எல்லாம் அந்த நீரைர ஏற்று இமைக்காமல் விளங்கினர். அப்போது அவ்விளையாட்டில் தோற்றுத் தன் கண்களைப் புதைத்தாள் ஒருத்தி. அவ்வாறு கண் புதைத்தவள் வெற்றியால் களித்துத் தன் கழுத்தில் அணிந்த பொன் நாணால் தொய்யில் கரும்பு எழுதப்பட்ட அணை போன்ற மென்மையான தோள்களைக் கட்டிச் சிறைப் பிடித்தாள். கட்டிப்பிடித்தாள். அதைப் பார்த்தாள். பொற்கொடி போன்ற ஒருத்தி, அப்படி அங்குச் சிறைப்பட்டவளுக்கு இரக்கம் கொண்டு அவளைக் கையால் கட்டினின்றம் விலக்கும் பொருட்டுப் பாய்ந்தாள். அப்படிப் பாய்ந்தவளது மாவடுவைப் போன்று மையால் அழுகுபெற்று விளங்கும் கண் பாய்ந்து வருத்துதலால் புதிய அந்நீரின் சிவந்த நிறம் போய் நீல நிறமாக ஆயிற்று. வையை ஆற்றின் புது நீர் வெள்ளத்தின் அழகு இத்தகைய இயல்பு உடையது.

(61-64) : இவ்வாறு விரும்பிய நீராடலுக்கு ஏற்ற ஈர அணியை உடைய உடல் ஈரம் நீங்கி உலர்ந்து வெப்பம் உடையதாகும் பொருட்டு. தலைவி வண்டுகள் மொய்ந்து ஆரவாரித்தற்குக் காரணமான கடுப்புடைய கள்ளைக் குடிப்பதற்குக் கையில் எடுத்தாள். அவள் அப்படி எடுத்த போது

அவளுடைய கண் நெய்தல் மலரைப் போன்று கறுத்து விளங்கின. மிக்க களிப்பை உடைய கள்ளை அருந்திய பின்பு அவளுடைய கண்கள் சிவந்தன. அவை பார்ப்பவர்க்கு மகிழ்ச்சியை ஊட்டும் பெரிய நறவ மலரைப் போல் விளங்கின.

(65-69) : அவ்வாறு சிவந்த கண்ணின் அழகைக் கண்டு பாராட்டி அந்தக் கண்களின் அழகிய தன்மையை உடைய நோக்கங்களை இசைப்பாட்டில் அமைத்துப்பாட விரும்பித் தலைவன் பற்பல பாடல்களையும் பாட, அப்பாடல்களைக் கேட்ட ஒருத்தி அப்பாடல்கள் பாடுபவன் தன் காதலியைப்பாடும் பாடல்கள் என்பதை அறியாமல் தன்னை விரும்பிப் பாடுகின்ற பாடல் என்று எண்ணி அவனைச் சேரும் கருத்தால் துன்பம் அடைந்தாள். அடைய, அவளது எண்ணத்தை உணர்ந்த விரிந்த மார்பையுடைய தலைவன். இந்நிகழ்வைத் தலைவி அறிந்தாளாயின் எனக்கு எவ்வகைப்பட்ட துன்பம் வருமோ அறியேன் என மனம்வருந்தினான். அவ்விடத்திினின்று அகன்று தலைவியை நெருங்கி அச்சத்தால் உடல் நடுங்கி நின்றான். அங்ஙனம் நிற்ப.

(70-76) : முன்னமே குறை பொருந்திளய ஊடல் காரணமாகச் சிவந்துள்ள கண்கள் இந்நிகழ்வால் பெரிதும் சிவக்க, வகுப்புப் பொருந்திய அந்நீராட்டில் வந்த மகளிருள்முன்பு பாடல் போற்றாது துன்பம் கொண்ட அவளுடன் தலைவி பகை கொண்டாள். மிகவும் சினந்து தன் மாலையினை அறுத்து எறிந்தாள். அச்சமயத்தில் நீராட்டினால் பொலிவுள்ள தலையின் மேனியது அழகைக் கூர்ந்து நோக்கி நின்ற அவளுடைய காதலன் அவ்வாறு சினந்த தலைவிக்கு அஞ்சினான். சந்தனம் பூசப்பட்ட தனது மேனியை அழகிய நிலத்தில் கிடத்தி வணங்கினான். அதனாலும் அவளது சினம் தீரவில்லை. அத்தலைவனின் தலையில் உதைத்தாள். ஊடல் கொண்டாள். இவ்வாறு ஊரவருடன் கூடி நீராடல் நிகழ்ந்தது. அப்போது.

(77-86) : விருப்புக்குரிய பாலைப்பண் ஏழினையும் புணர்த்தற்கரிய முறுக்குண்ட நரம்பில் இனியதான அறுதியைத் தரும் யாழ் இசையும் மிடற்றுப்பாடலும் தமக்குள் பொருந்த அவற்றின் சுதியை வங்கியம் அளந்து நின்றது. முழவு ஓசை எழுந்த முழங்கியது. அரசனால் தலைக்கோல் என்ற பட்டத்தைப் பெற்ற மகளிரும் பாணரும் கூத்தாடத் தொடங்கினர். இவற்றால் முழக்கம் மிக்கது. அதனுடன் ஓடும் நீர் கரைகளை இடித்து ஒழுகுதலால் எழுந்த ஒலியும் சேர்ந்து ஆரவாரித்தது, அத்தன்மை உரும் ஏறாகிய இடியுடன் சேர்ந்த முகில் முழக்கத்தைப் போல் விள்ங்கியது. இத்தகைய திரு மருத முன்துறை என்ற பெயர் உடைய துறையை அடைந்து ஆடி இன்பம் அடைபவர் மலர் மாலைகளை வாங்கி, நின் தலையிடத்தே சூட்டி மகிழ்வதற்குக் காரணமான அச்சம் தரும் ஆழமான நீரையுடைய வையை ஆறே! யாம் இன்று நின்னிடம் நீராடி நீங்காத இவ்வின்பத்தை, அடைந்தாற்போல் என்றும் நின்னிடம் நீராடி நின்னால் பெறும் இன்பத்தைப் பாடி விடிவு எய்தி மகிழ்ச்சி அடைவோமாக!

11.5.பாடல் : 10 :

பாடியவர் : கரும்பிள்ளை பூதனார்
பண் அமைத்தவர் : மருதன் நல்லச்சுதனார்
மலைவரை மாலை அழி பெயல் காலை,
செல வரை காணாக் கடல்தலைக் கூட
நில வரை அல்லல் நிழத்த, விரிந்த
பலவுறு போர்வைப் பரு மணல் மூஉய்,
வரி அரி யாணு முகிழ் விரி சினைய
மாந்தீம் தளிரொடு வாழையிலை மயக்கி,
ஆய்ந்து அளவா ஓசை அறையூ, உப்பறை அறையப்
போந்தது வையைப் புனல்.
புனல் மண்டி ஆடல் புரிவான், சனம் மண்டி,
தாளித நொய்ந் நூல் சரணத்தர், மேகலை
ஏணிப்படுகால் இறுகிறுகத் தாள் இடீஇ,
நெய்த்தோர் நிற அரக்கின் நீரொக்கி யாவையும்
முத்து நீர்ச் சாந்து அடைந்த மூஉய்த் தத்தி,
புக அரும் பொங்கு உளைப் புள் இயல் மாவும்,
மிக வரினும் மீது இனிய வேழப் பிணவும்.
அகவு அரும் பாண்டியும், அத்திரியும், ஆய் மாச்
சகடமும், தண்டு ஆர் சிவிகையும் பண்ணி
வகை வகை ஊழ் ஊழ் கதழ்பு மூழ்த்து ஏறி
முதியர், இளையர், முகைப் பருவத்தர்,
வதி மண வம்பு அலர் அவிழ்ந்தன்னார்.
இரு திற மாந்தரும் இன்னினியோரும்,
விரவு நரையோரும் வெறு நரையோரும்,
பதிவத மாதர், பரத்தையர், பாங்கர்,
அதிர் குரல் வித்தகர் ஆக்கிய தாள
விதி கூட்டிய இய மென்னடை போல,
பதி எதிர் சென்று, பரூஉக் கரை நண்ணி
நீர் அணி காண்போர் நிரை மாடம் ஊர்குவோர்
பேர் அணி நிற்போர் பெரும் பூசல் தாக்குவோர்
மா மலி ஊர்வோர் வயப் பிடி உந்துவோர்
வீ மலி கான் யாற்றின் துருத்தி குறுகி,
தாம் வீழ்வார் ஆகம் தழுவுவோர் தழுவு எதிராது
யாமக் குறை ஊடல் இன் நசைத் தேன் நுகர்வோர்
காமக் கணிச்சியால் கையறவு வட்டித்து.
சேமத் திரை வீழ்த்து சென்று அமளி சேர்குவோர்
தாம் வேண்டு காதற் கணவர் எதிர்ப்பட,
பூ மேம்பாடு உற்ற புனை சுரும்பின். சேம
மட நடைப் பாட்டியர்த் தப்பி, தடை இறந்து,
தாம் வேண்டும் பட்டினம் எய்திக் கரை சேரும்

குறிப்புகள்

ஏமுறு நாவாய் வரவு எதிர்கொள்வார் போல,
யாம் வேண்டும் வையைப் புனல் எதிர்கொள் கூடல்.

**களிறு பிடியின் அன்பு :**

ஆங்க அணி நிலை மாடத்து அணி நின்ற பாங்கு ஆம்
மடப்பிடி கண்டு. வயக் கரி மால் உற்று,
நடத்த நடவாது நிற்ப் மடப் பிடி
அன்னம் அனையாரோடு ஆயா நடை, கரி மேல் ஷ
செல் மனம் மால் உறுப்ப, சென்று எழில் மாடத்துக்
கை புனை கிளர் வேங்கை காணிய வெருவுற்று,
மை புரை மடப் பிடி, மட நல்லார் விதிர்ப்புற,
செய் தொழில் கொள்ளாது மதி செத்துச் சிதைதர
கூம் கை மத மாக் கொடுந் தோட்டி கைந்நீவி
நீங்கும் பதத்தால், உருமுப் பெயர்த்தந்து
வாங்கி முயங்கி வயப் பிடி கால் கோத்து,
சிறந்தார் நடுக்கம் சிறந்தார் களையல்
இதையும் கயிறும் பிணையும் இரியச்
சிதையும் கலத்தைப் பயினான் திருத்தும்
திசை அறி நீகானும்போன்ம்.

**மகளிர் மைந்தர் இவர்கள் செயல் :**

பருக் கோட்டு யாழ்ப் பக்கம் பாடலொடு ஆடல்
அருப்பம் அழிப்ப, அழிந்த மனக் கோட்டையர்,
ஒன்றோடு இரண்டா முன் தேறார், வென்றியின்,
பல் சனம் நாணிப் பதை பதைப்பு, மன்னவர்
தண்டம் இரண்டும் தலைஇத் தாக்கி நின்றவை
ஒன்றியும் உடம்பாடு ஒலி எழுதற்கு அஞ்சி,
நின்ற நிகழ்ச்சியும் போன்ம்,
காமம் கனைந்து எழ, கண்ணின் களி எழ,
ஊர் மன்னும் அஞ்சி ஒளிப்பார் அவர் நிலை
கள்ளின் களி எழக் காத்தாங்கு, அலர் அஞ்சி,

உள்ளம் உளை எழ, ஊக்கத்தான் உள் உள்
பரப்பி மதர் நடுக்கிப் பார் அல் தூற்றக்
கரப்பார், களி மதரும் போன்ம்.
கள்ளொடு காமம் கலந்து, கரை வாங்கும்
வெள்ளம் தரும் இப்புனல்.

**மகளிரது நீர் விளையாட்டு :**

புனல் பொருது மெலிந்தார் திமில் விட,
கனல் பொருத அகிலின் ஆவி காஎழ,
நகில் முகடு மெழுகிய அளறு மடை திறந்து
திகை முழுது கமழ, முகில் அகடு கழி மதியின்

உறை கழி வள்ளத்து உறு நறவு வாக்குநர்
அரவு செறி உவவு மதியென அங்கையில் தாங்கி,
மகர வலயம் அணி திகழ் நுதலியர்,
மதி உண் அரமகளென, ஆம்பல் வாய் மடுப்ப,
மீப்பால் வெண்துகில் போர்க்குநர் பூப்பால்
வெண்துகில் சூழ்ப்பக் குழல் முறுக்குநர்
செங்குங்குமச் செழுஞ் சேறு,
பங்கம் செய் அகில் பல பளிதம்,
மறுகுபட அறை புரை அறு குழவியின்
அவி அமர் அழலென அரைக்குநர்
நத்தொடு, நள்ளி, நடை இறவு, வய வாளை
வித்தி அலையில் “விளைக! பொலிக!” என்பார்
இல்லது நோக்கி, இளிவரவு கூறாமுன்,
நல்லது வெ.ஃ.கி, வினை செய்வார்
மண் ஆர் மணியின் வணர் குரல் வண்டு ஆர்ப்ப,
தண் அம் துவர் பல ஊட்டிச் சலம் குடைவார்
எண்ணெய் கழல இழை துகள் பிசைவார்
மாலையும் சாந்தும் மதமும் இழைகளும்,
கோலம் கொள நீர்க்குக் கூட்டுவார் அப் புனல்
உண்ணா நறவினை ஊட்டுவார் ஒண்தொடியார்
வண்ணம் தெளிர, முகமும் வளர் முலைக்

கண்ணுங் கழியச் சிவந்தன வண்ண வகை
ஆட்டு அயர்ந்து, அரி படும் ஐ விரை மாண் பகழி
அரம் தின் வாய் போன்ம் போன்ம் போன்ம்,
பின்னும் மலர்க் கண் புனல்.

**புனல் விளையாட்டால் மெலியாத மைந்தர் :**

தண்டித் தண்டின் தாய்ச் செல்வாரும்,
கண்டல் தண் தாது திரை நுரை தூவாரும்,
வெய்ய திமிலின் விரை புனலொடு ஒய்வாரும்,
மெய்யது உழவின் எதிர் புனல் மாறு ஆடிப்
பைய விளையாடுவாரும், மென் பாவையர்
செய்த பூஞ் சிற்றடிசில் இட்டு உண்ண ஏற்பார்.
இடுவார் மறுப்பார் சிறுகு இடையார்
பந்தும் கழங்கும் பல களவு கொண்டு ஓடி,
அம் தண் கரை நின்று பாய் வாராய் மைந்தர்
ஒளிறு இலங்கு எ.ஃ.கொடு வாள் மாறு உழக்கி,
களிறு போர் உற்ற களம் போல, நாளும்
தெளிவு இன்று தீம் நீர்ப் புனல்.

**புனலாடி மீண்டவாறு :**

மதி மாலை மால் இருள் கால் சீப்ப, கூடல்
வதி மாலை, மாறும் தொழிலான், புது மாலை
நாள் அணி, நீக்கி, நகை மாலைப் பூ வேய்ந்து
தோடு அணி, தோடு சுடர் இழை, நித்திலம்:
பாடுவார் பாடல். பரவல், பழிச்சுதல்,
ஆடுவார் ஆடல் அமர்ந்த சீரப் பாணி,
நல்ல கமழ் தேன் அளி வழக்கம், எல்லாமும்,
பண் தொடர் வண்டு பரிய எதிர் வந்து ஊத,
கொண்டிய வண்டு கதுப்பின் குரல் ஊத,
தென் திசை நோக்கித் திரிதர்வாய் மண்டு கால் சார்வா,
நளிர் மலைப் பூங்கொடித் தங்குபு உகக்கும்
பனி வளர் ஆவியும் போன்ம் மணி மாடத்து
உள் நின்று தூய பனி நீருடன் கலந்து,
கால் திரிய ஆர்க்கும் புகை.

**வையையை வாழ்த்துதல் :**

இலம்படு புலவர் ஏற்ற கை ஞெமரப்
பொலம் சொரி வழுதியின், புனல் இறை பரப்பி,
செய்யில் பொலம் பரப்பும் செய் வினை ஓயற்க,
வருந்தாது, வரும் புனல் விருந்து அயர் கூடல்,
அருங் கறை அறை இசை வயிரியர், உரிமை
ஒருங்கு அமர் ஆயமொடு ஏத்தினர் தொழவே.

தெளிவுரை :

(1-8) : மாலைப் போதில் மலையில் பெய்த மழையால் மறுநாள் காலையில் வையை ஆற்றிலே நீர் பெருகியது. பெருகிய அந்நீர் நில எல்லைக்குள், பசி முதலிய துன்பங்கள் குறைய, மலர்ந்த பல்வேறு மலர்கள் நெருங்கிய போர்வையுடன், ஆற்றில் முன் பண்டு நீர் இல்லாமையால் வறண்டு கிடந்த பெரிய மணற் பரப்பை மூடிக்கொண்டு, வரிகளையுடைய வண்டுகள்மொய்க்கப்பட்டு, அழகிய அரும்புகள் மலர்ந்த மாமரதின் காண்பதற்கு இனிய தளிருடன் வாழையின் இலைகளையும் மயக்கி, அளவிட இயலாத பல்வேறு ஓசைகள் ஒலிக்கவும். கரைக் காவலரை அழைக்கும் பறைகள் முழக்கும் படியும் போய் எல்லையற்ற கடலை அடைவதற்கு வந்தது.

(9-18) : அங்ஙனம் வரும் புதிய நீரில் மக்கள் புகுந்து ஆடதற்குச் செல்லலாயினர். நீராடை உடுத்த சரணத்தை உடையவராய் ஆயினர். மேகலையிான ஏணிப்படி காலை மிக இறுக்கமாகத் தாளிட்டுக் கொண்டனர். குருதியைப் பொன்ற செல்வரக்கின் நீரை வீசும் கருவிகள் மதலிய பலவற்றயும் கைக்கொண்டனர். முத்தைப் போன்ற நிறத்தை உடைய பனி நீருடன் கூடிய சந்தனத்துடனே பெட்டியில்ல மூடி எடுத்தனர். தாவுதலால் மேற்கொள்வதற்குரிய மிக்க பிடரி மயிரையும் உடைய பறவை பொன்று

விரையும் செலவையும் உடைய குதிரையையம், மிக விரைவாக நடந்தாலும் மேல் அமர்ந்திருக்க இனிதாக விளங்கும் பெண் யானைனையும், பெயர் சொலலி அழைக்கப்படுகின்ற அரிய எருதைப் பூண்ட வண்டியையும் கோவேறு கழுதையையும், ஆராய்ந்து பூட்டப்பட்ட குதிரை வண்டியையும், சுமத்தற்குத் தண்டு பொருந்திய பல்லக்கையும் அழகுபடுத்தினர். முறைமுறையாய் வந்து கூடி விரைந்து அவற்றின் மீது அமர்ந்தனர்.

(19-26) : மலரும் பருவத்தையுடைய மொட்டைப் போன்ற இயல்பு உடையவரும். நறுமணம் தங்குதற்க இடமான புதிய மல் வாய் விரிந்தாற் போன்ற பருவம் உடையவரும் ஆகிய இளைய மகளிரும், நரை கலந்து விளங்கும் வயதினரும், முழுவதும் நரைத்த முதுமை மகளிரும் என்ஃனம் கற்புடை மகளிரும் பரத்தையரும் ஆகிய முப்பருவத்து மகளிரும், இவர்க்குத் தோழியரான சிலரும், இசைப் புலமையில் வல்ல புலவரால் ஆக்கப்பட்ட தாள விதியால் கூட்டப்பட்ட ஒலிக்கும் குரலையுடைய பல்வேறுஇசைககருவிகளின் இசையும் மெல்லிய நடையில் சென்றாற் போல் ஊரிலே வாழும் பிற மக்களுடன் கூடி ஆற்றின் எதிரே மெல்லப் போய்ப் பெரிய கடையை அடைந்தனர்.

(27-34) : அங்ஙனம் வந்தவருள் சிலர் அந்த வையை ஆற்றில் பெருகி ஓடி வரும் புதுநீரின் அழகைக் கண்டு நின்றனர். சிலர் வரிசையில் உள்ள நீரணி மாடம் என்னும் ஓடங்களில் ஏறி அவறறைச் செலுத்தினர். சிலர் நீரில் ஆடவருடன் செய்யும் போருக்கு அணிவகுத்து நின்றனர். சில்ர் அப்பெரிய நீராடல் போரில் தூசிப்படையாய்ச் சென்று தாக்கினர். சில்ர் குதிரைகளில் ஏறி அவற்றை நீருள் செலுத்தினர். சிலர் வலிய பெண் யானைகளின மீது ஏறி அவற்றை நீருள் செலுத்தினர். சிலர் குதிரைக் கூட்டத்தில் ஏறி அவற்றை நீரள் செலுத்தினர். மற்றும் சிலர் நறுமணப் பூக்கள் மிகுந்த ஆற்றிடைக் குறையை அடைந்து அங்குத் தம்மால் விரும்பப் பட்ட தம் தலைவர் தம் உடலைத் தழுவ அதனை ஏற்றுக் கொள்ளாது. முதல் நாள் இரவில் ஊடல் கொண்டிட, அந்த ஊடல் குறையாக நின்றதால் அதையே தொடர்ந்து ஊடி, அதனால் விளையும் இனிய விருப்பமான தேனதைத் துய்த்தனர். மற்றும் சிலர் தாங்கள் ஊடியிருந்தும் காமம் என்ற கோடரி தம் நிறை என்னும் கதவை உடைத்ததால் மேலும் ஊடல் கொள்வதற்கு வன்மை அற்றவராய்த ம் ஊடலை அகற்றி விட்டுத் தங்கள் கணவரை எதிர் கொண்டு காவலாகிய திரையை இறக்கி விட்டு உட்சென்று அங்குப்படுக்கையில் கிடந்தனர்.

(35-40) : சூடுதற்குரிய மலரின் மேம்பாட்டை, விரும்பி அதில் வந்து பொருந்தும் வண்டினைப் போல், முகைப்பருவத்துப் பெண்கள் எல்லாம் தாம் விரும்பும் காதலையுடைய கணவர் தம்மை விரும்பி வந்து எதிர் சென்று புணரும் பொருட்டுத் தமக்குக் காவலாக இருந்த பாட்டியரிடமிருந்து தப்பி, அவர் தடுப்பதையும் கடந்து மீறிச் சென்றனர். தம்மால் விரும்பப்பட்ட துறைமுகப்பட்டினத்தை அடைந்து அங்கிருந்து மீண்டும் கரையை அடையும் தாம் இன்பம் அடைவதற்குக் காரணமான மரக்கல வருகையை விரும்பி

எதிர்கொள்ளும வணிகரைப் போன்று, அம்மகளிர் வையை ஆற்றினது நீரை எதிர் கொள்வதற்கு இடமானது மதுரை. அதில்.

(41-48) : அழகிய நிலைகளையுடைய மாடம். அதன் அண்மையில் நின்ற ஒரு வலிய ஆண் யானை, அத தனக்குப் பக்கத்தே உள்ள இளமை உடைய பெண் யானையைக் கண்டு காமத்தால் மயக்கம் அடைந்தது. அது தன் மீது இருந்த பாகன் செலுத்தவும் செல்லாது நின்றது. நிற்ப, அந்த இளமையுடைய பெண் யானையும் அந்த ஆண் யானை மீது சென்ற தன் மனம் மயங்கி நின்றது. தன் மீது இருந்த அன்னப்பறவையை ஒத்த மகளுடன் தன் நடை சுருங்கி அந்த யானை நின்ற இடத்தில் போய் அங்குள்ள அழகிய புலி மாடத்தில் பண்ணி வைத்த பாயும் நிலையில் உள்ள வேங்கையின் வடிவத்தைக் கண்டது. அவ்வளவில் அதனை உண்மையான வேங்கை என்றும் அப்பலி தன் காதல் யானை மீது பாயும் என்றும் எண்ணி மேகத்தைப் போன்ற அந்த பெண் யானை, தன் மீது அமர்ந்திருந்த மடப்பம் உடைய மகளிர் நடுங்கும்படி பாகர் செய்யும் தொழிலை ஏற்றுக் கொள்ளாமல் கட்டுக்கடங்காமல் நின்றது.

(49-55) : அவ்வாறு பெண் யானை சிதைந்து நின்றமை பொறக்காமல் பிளிறுகின்ற மதக் களிப்பையடைய அந்த ஆண் யானை, வளைந்த அங்குசத்துக்கு அடங்காமல் போய்ச் சிதையம் அளவில, தன் மீது இருந்த பாகுத் தொழில் வல்ல பாகர். இடி போன்ற அதன் முழக்கம் ஒழியும்படி அதைப் புலி மாடத்தினின்று நீக்கி. அந்தப் பெண் யானை சிதையாதபடி அதைத அணைவித்து அப்பிடியின் மெல் இருந்த மங்கையரின் நடுக்கத்தைக் களைதல், பாயும் கயிறும் மரக்கூட்டமும் கெட்டொழியக் காற்றால் அலைப்புண்டு ஓடும்படியான நாவாயைப் பாயினால் சீரிதிருத்தி அதன் உள்ளே இருப்பவர் நடுக்கத்தைப் போக்கும் திக்கினை அறிந்து செலுத்த வல்ல பீகாமனின் செயலை ஒத்ததாகும்.

(56-62) : பருத்த தண்டை உயை யாழ் இசையும் கண்டத்துப் பாடலுதம் ஆடலும் என்பன நிகழ. அவை ஆடவர் மைந்திரின் மனத்திண்மையை அழித்தன. அதனால் அழிந்த நெஞ்சமான அரணத்தை உடைய அவர்கள் ஊடலில் வெற்றி அடைய வேண்டாம் என்ற காரணத்தினால் ஒருவரை ஒருவர் முற்பட வேண்டும் என எண்ணாது நாணிக் கூடாமல் உள்ளம் துடித்து நின்றனர். தமக்குள் பகை கொண்டு எழுந்த மன்னவரின் படைகள் இரண்டும் தங்களுக்குள் போர் செய்து வருந்தி நின்றன. அப்போரைக் கைவிட்டுத் தம்முள் உடம்பாடு பெற்றுப் போவதற்கு மனம் பொண்டிருந்தும் உலகத்தில் உள்ள பல்வேறு மாந்திடையேயும் இம்மன்னன் படை முன்னால் உடம்பட்டுப் போனது என்று எழுகின்ற சொல்லுக்கு அஞ்சிப் பின்னும போர் செய்யும் துன்பத்துடன் நின்ற செயலைப் போன்றதாகும்.

(63-68) : மனத்தில் காமம் மிகப்பெற்று எழ, அதனால் தம் கண்கிளில் அக்காமக் களிப்பு வெியார்க்குப்புலம்படும்படி எழ, அதைக் கண்டு ஊரார் அல் தூற்றுவரே என்ற அச்சம் கொண்டு, அக்காமத்தைப்

பிறர் அறியாமல் மறைப்பர். அவர் தம் நிலைமை, கள்உண்டவர் தம்மிடம் அந்தக் கள்ளின் களிப்புப் புறத்தார்க்குப் புலப்படுமாறு வெளிபபட, தம் மனம் துன்பம் அடையுமாறு ஊரார் அலர் தூற்றுவதற்கு அஞ்சி, அது பிறர் அறியாமல் முயலும் முயசியினால், அர்தம் களிப்பதைத் தாமே எல்லாரும் அறியும்படி தாமே பரப்பிப் பின்பு, உலகம் பழி தூற்றுவதைக் கேட்டுத் தமக்குள் நடுங்கி, மேலும் கள்ளால் உண்டான களிப்பபைப் புறத்தார்க்குத் தெரியாத வண்ணம் காத்து மறைப்பவரின் நிலைமையைப் போன்றதாகும்

(69-78) : இப்படிக் கள்ளையும் காமத்தையும் பொருந்துதலாலர் அளவற்ற இன்ப வெள்ளத்தைத் தந்தது. வையை ஆற்றில் பெருகிய இந்தப்புதிய நீரு, ஆளை எறிந்து கொல்லும் தன்மையுடைய மகர மீனின் வடிவுடையதாய்ச்செய்யப்பட்ட மகர வலயம் என்ற தலைக்கோலத்தால் அழகு மேலும் விளங்கும் நெற்றியை உடைய மங்கையர் இந்த வையையின் புதிய நீரில்ஆடி இளைத்தனர். பின்பு தம் புணைகளைக் கைவிட்டுக் கரையேறினர். அவ்வளவில் தம்மால் உண்டாக்கப்பட்ட தீயால் சுடப்பட்ட அகிலினின்று எழுந்த நறுமணப்புகை அக்கரையகத்திருந்த சோலையில் எல்லாம் மணம் கமழுமாறு எழுந்தது. அந்தப்புகையில் ஈரம் புலர்த்திக் கொண்டு தம் கொங்கை முகட்டில் மெழுகப்பட்ட கலவைக் குழம்பு மடை திறந்தாற் போல் நான்கு திக்குகளிலும் கமழ்ந்தது. முகிலின் வயிற்றினின்றும் புறப்பட்டுத் திகழும் வெள்ளிக் கிண்ணத்திலே வெப்பம் மிக்க மதுவை வார்த்தனர். பாம்பினால் விழுங்கப்பட்ட முழுத் திங்கள் தோன்றும் படி அந்தக் கிண்ணத்தைத் தம் அழகிய கையில் எடுத்தனர். திங்களின் ஒளியைப் பருகும் தேவ மகளிரைப் போன்று அக்கிண்ணத்தை செவ்வாம்பல் போன்ற வாயில் வைத்து அருந்தினர்.

(79-86) : சில மகளிர் தம் உடலின் மேலித்தல் வெண்மையான மெல்லிய ஆடையைப் போர்தினர் சில மகளிர் பூத்தொழில் பொருந்திய வெண்மையான ஆடையை த்தம் கூந்தில்ன மேல் போர்த்தினர். சில மகளிர் அதை முறுக்கினர்.சில் சிவந்த குங்குமக் குழம்பையும் சேறாக்கப்பட்ட அகில் குடல்பையும் பல கருப்பூரங்களையும் சாந்து அம்மியில் இட்டு அவை ஒன்றாய் ஆகும்படி குழவியால் யாக குண்டத்தில் எழும் தீயினது நிறம் உண்டாகும்படி அரைத்தனர். மற்றும் சிலர் அந்தப் புதிய நீரில் தாம் கொண்ட வந்த பொன்னால் செய்யப்பட்ட நத்தை, நண்டு, காலையுடைய இறா, வன்மை உடைய வாளைமீன் ஆகியவற்றை இட்டு நாடு விளைவதாக, உலகம் பொலிவதாகுக என்று வாழ்த்தினர்.

(87-99) : வேறு சிலர் இரப்பவின் வறுமையை அவரது மெய்ப்பாட்டால் உணர்ந்து அவர் ஈயுங்கள் என்று தம்மை இரந்து கூறுவதற்கு முன்னமேயே. அறம் கருதி, அவர் வேண்டுவனவற்றை அளித்தனர். மற்றும் சிலர் தூய்மை செய்யப் பெற்ற நீலமணி போன்ற நிறம் வாய்ந்த வளைந்த தம் கூந்தல்மீது மொய்த்துள்ள வணடுகள் ஆரவாரம் செய்ய அக்கூந்தல் மீது பத்து வகைத் துவர்களையும் தேய்த்துக் கொண்டு நீரில் முழுகினர். வேறு சில மகளிர் தம் தலையில் எண்ணெயை இட்டு

அந்த எண்ணெய் நீங்கும்படி நுண்ணிய அரைப்புத் தூளை இட்டுப் பிசைந்தனர். மற்றும் சிலர் மலர் மாலைகளையும் அணிகலன்களையும் அந்த வையை நீரில் இட்டனர். வேறு சில மகளிர் அந்நீர் உண்ண இயலாத மதுவையும் அதில் வார்த்து அதை உண்ணச் செய்தனர். இங்ஙனம் நீர் விளையாடிய மகளிர். நீரில் ஆடியதால் மேலும் ஒளி பெற்றுள்ளனர். அவர் தம் முகமும் முலைகளும் நீரால் புடையுண்டு மிகவம் சிவந்தன. அத்தன்மை கொண்ட நீராடலைத் தம் காதலரோடு ஆடியிருந்தும் பின்னும் அந்நீரினை ஆடும் விருப்பத்தால் வண்டுகள் மொய்க்கும் மணத்தால் சிறந்த ஐந்து காம அம்பினது அரத்தால் கூர்மை செய்யப்பட்ட வாயைப் பெரிதும் ஒத்த விளங்கின.

(100-11) : மகளிர் இவ்வாறு நீராடினர். அப்போது நீராடாத மைந்தர் சிலர் நீராடலை விரும்பினர். வாழைத தண்டை தழுவிக் கொண்ட தாவித் தாவிச் சென்றனர். மேலும் சில் அந்நீரின் அலை மேலும் நுரையின் மேலும் தாழம்பூவின் குளிர்ந்த தாதினைத் தூவினர். சிலர் விரவைாக ஓடம் ஓடத்தில் ஏறி, விரைவாக ஓடும் நீர் ஓட்டத்துடனே ஒருசேரச் செலுத்தினர். சிலர் விரைவாய் ஓடும் நீரின் எதிரே அதற்கு மாறாக எதிர் சென்று ஆடித் தம் உடலில் தோன்றிய களைப்பினால் அவ்வாறு எதிர்த்துச் செல்வதை விட்டு நீரோட்டத்தினோடு சேர்ந்து மெல்ல மெல்ல விளையாடினர். மற்றும் சிலர் மெல்லியரான மங்கையர் கட்டிய அழகிய தம் சிற்றில்லில் சமைத்த சிறிய சோற்றை இட, அதை உண்பதற்குக் கரையில்ல ஏறி ஏற்றனர். மற்றும் சிலர் தம்முடன் விளையாடச் சிறிய இடையை உடைய மகளிரின் பந்துகளையும் கழங்குகளையும் இத்தகைய பிற பொருள்களையும் அவர்கள் அறியாத வண்ணம் கவர்ந்து ஓடிச்சென்று நீர அருகில் நின்றனர். அதை அறிந்த மகளிர் அவரைத் தொடர்ந்து வாங்கச் சென்றபோது அழகிய கரையினின்று மகளிர் கைக்குச் சிக்காமல் நீருக்குள் பாய்ந்தனர். இவ்வாறு ஆடுதல் நிகழ்ந்தது. அதனால் வையை ஆற்றின் இனிய தன்மை கொண்ட புதிய நீர் . ஒளி விடலால், வேலாலும் வாளாலும் வீரர் தம் பகைவருடன் மாறுபட்டு நின்று போர் செய்தலாலும் யானைகள் போர் செய்தலாலும் கலங்கி விளங்கும் போர்க்களத்தைப் போல் இருத்தலால் தெளிவற்றதாய் விளங்கியது.

(112-125) : திங்கள் தோன்றி மாலைக் காலத்தில் ஏற்பட்டிருந்த இருளைப் போக்கியது. மதுலைரயில் தங்கும் இயல்பை எண்ணி. எலலாரும் அவ்விடத்தினின்று திரும்பிச் செல்லும், செயலால் புதிய இயல்பு வாய்ந்த அத்திரு நாள் கருதி அணிந்த ஆடை அணிகளை அகற்றினர். அந்த மாலைக் காலத்தில் மலர்ந்த முல்லை முதலிய மலர்களை அணிந்தனர். தோளில் அணியம் பொடியும் தோடும் ஒளி மிக்க அணியாக முத்து வடமம் ஆகிய இத்தகைய அணிகலன்களையும் அணிந்து கொண்டனர். அவர்களுள் பாடும் இயல்புடையார் பாடும் பாடலும், ஆடும் இயல்புடையார் ஆடும் ஆடலும், அந்த ஆடலுக்கு உரிய சீருடன் கூடிய தாளமும் மகளிர் கூந்தலில் ஆரவாரம் செய்கின்ற நறுமணம் கமழ்கின்ற தேனைச் செய்யும்

வண்டுகள் வழங்கும் வழக்கமும் என்னும் இவற்றால் எழுந்த ஓசையுடன் பாடும் பண் ஒலியைக் கேட்டுத் தம் இனம் என எண்ணி ஊரினின்று வண்டுகள் வந்தன. அவை பாடுபவர் வருந்துமாறு அவர் எதிரே மொய்த்துப் பாடின. மகளிர் கூற்தலில் அவர் எதிரே மொய்த்துப் பாடின. மகளிர் கூந்தலில் முன்னம் மலர்ந்த மலர்த் தேனை உண்டு வண்டுகளும் மேற் கூறப்பட்ட வண்டுடன் கூடி இனிய குரலுடன் ஆரவாரித்தன. இப்படி எலலாரும் தென் திசையை நோக்கி மீண்டனர். அப்போது மதுரைலயில் உள்ள அழகிய மேனியை மாடங்களின் உள்ளெ இருந்து மங்கையர் தூவிய பனிநீர் மணத்துடன் கலந்து ன்றற் காற்று மணமுடையதாய் மாறுதற்கு அம்மங்கையர் அம்மாடத்தில் அகில் முதலியவற்றைத் தீயிலிட்டு எழுப்பும் நறுமணப் புகை செறிந்த மலயைில் உள்ள பூங்கொடிகளில் பொருந்திப் பின்பு காற்றுடன் கூடி வானில் ஏறிச் செல்லும் பனியாகிய ஆவியைப் போன்றதாய் விளங்கும்.

## 11.6.பாடல் : 11

பாடியவர் : நல்லந்துவனார் பண் அமைத்தவர் : நாகனார்

பண் : பாலை யாழ்

**மழை பொழிய வையையில் நீர் பெருகி ஓடுதல் :**

விரி கதிர மதியமொடு, வியல் விசும்பு புணர்ப்ப,
எரி, சடை, எழில் வேழம், தலையெனக் கீழ் இருந்து,
தெரு இடைப்படுத்த மூன்று ஒன்பதிற்று இருக்கையுள்,
உருகெழு வெள்ளி வந்து ஏற்றியல் சேர,
வருடையைப் படிமகன் வாய்ப்ப, பொருள் தெரி
புந்தி மிதுனம் பொருந்த, புலவர் விடியல்
அங்கி உயர் நிற்ப அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்கு உப்பால் எய்த, இறை யமன்
வில்லின் கடை மகரம் மேவ பாம்பு ஒல்லை
மதியம் மறையவரு நாளில், வாய்ந்த
பொதியில் முனிவன் புரை வரைக்கீறி
மிதுனம் அடைய, விரி கதிர் வேனில்
எதிர் வரவு மாரி இயைக என இவ் ஆற்றால்
புரை கெழு சையம் பொழி மழை தாழ,
நெரிதரூஉம் வையைப் புனல்.

**திருமதத் துறையின் சிறப்பு :**

வரையன புன்னாகமும்,
கரையன சுரபுன்னையும்,
வண்டு அறைஇய சண்பக நிரை, தண் பதம்
மனை மாமரம் வாள்வீரம்,
சினை வளர் வேங்கை, கணவிரி காந்தள்,
தாய தோன்ற தீயென மலரா,
ஊதை அவிழ்த்த உடை இதழ் ஒள் நீலம்,

வேய் பயில் சோலை அருவி தூர்த்தரப்
பாய் திரை உந்தித் தருதலான், ஆய் கோல்
வயவர் அரி மலர்த் துறை என்கோ?
அரி மலர் மீப் போர்வை, ஆரம் தாழ் மார்பின்,
திரை நுரை மென் பொகுட்டுத் தேம் மணச் சாந்தின்
அரிவையது தானை என்கோ? கள் உண்ணூஉப்
பருகு படி மிடறு என்கோ, பெரிய
திருமருத நீர்ப் பூந்துறை?

**கண்டோர் கூற்று :**

ஆம் நாள் நிறை மதி அலர்தரு பக்கம் போல்,
நாளின் நாளின் நளி வரைச் சிலம்பு தொட்டு,
நிலவுப் பரந்தாங்கு, நீர் நிலம் பரப்பி,
உலகு பயம் பகர் ஓம்பு பெரும் பக்கம்
வழியது பக்கத்து அமரர் உண்டி
மதி நிறைவு அழிவதின் வரவு சுருங்க்
எண் மதி நிறை உவா இருள் மதி போல
நாள் குறைபடுதல் காணுநர் யாரே?
சேண் இகந்து கல் ஊர்ந்த மாண் இழை வையை
வயத் தணிந்து ஏகு நின் யாணர் இறு நாள் பெற!
மா மயில் அன்னார் மறையில் புணர் மைந்தர்,
காமம் கள விட்டு கைகொள் கற்பு உற்றென,
மல்லல் புனல் வையை மா மலை விட்டு,. இருத்தல்
இல்லத்து நீ தனிச் சேறல் இளிவரல்
என ஆங்கு,
கடை அழிய நீண்டு அகன்ற கண்ணாளைக் காளை
படையொடுங் கொண்டு பெயர்வானைச் சுற்றம்
இடை நெறித் தாக்குற்றது ஏய்ப்ப, அடல் மதுரை
ஆடற்கு நீர் அமைந்தது யாறு.

**வையை போர்க்களத்தை ஒத்தல் :**

ஆற்று அணி, வெள்வாள் விதிர்ப்போர், மிளிர் குந்தம் ஏந்துவோர்,
கொள்வார் கோல் கொள்ளக் கொடித் திண் தேர் ஏறுவோர்,
புள் ஏர் புரவி பொலம் படைக் கைம்மாவை
வெள்ள நீர் நீத்தத்துள் ஊர்பு ஊர்பு உழக்குநரும்
கண் ஆரும் சாயற் கழித் துரப் போரை
வண்ண நீர் கரந்த வட்டு விட்டு எறிவோரும்,
மணம்வரு மாலையின் வட்டிப் போரைத்
துணி பிணர் மருப்பின் நீர் எக்குவோரும்,
தெரி கோதை நல்லார் தம் கேளிர்த் திளைக்கும்
உருகெழு தோற்றம் உரைக்குங்கால், நாளும்
பொரு களம் போலும் தகைத்தே பரி கவரும்

குறிப்புகள்

பாய் தேரான் வையை அகம்.
நீர் அணி வெறி செறி மலர் உறு கமழ் தண்
தார் வரை அகலத்து, அவ் ஏர் அணி நேர் இழை
ஒளி திகழ் தகை வகை செறி பொறி
புனை வினைப் பொலங் கோதையவரொடு,
பாகர் இறை வழை மது நுகர்பு களி பரந்து,
நாகரின் நல் வள வினை வயவு ஏற நளி புணர்மார்,
காரிகை மது ஒருவரின் ஒருவர் கண்ணின் கவர்புற,
சீர் அமை பாடற் பயத்தால் கிளர் செவி தெவி,
உம்பர் உறையும் ஒளி கிளர் வான் ஊர்பு ஆடும்
அம்பி கரவா வழக்கிற்றே, ஆங்கு அதை
கார் ஒவ்வா வேனில் கலங்கித் தெளிவரல்,
நீர் ஒவ்வா வையை நினக்கு.
கனைக்கும் அதிகுரல் கார் வானம் நீங்க,
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து,
ஞாயிறு காயா நளி மாரிப் பின் குளத்து,
மா இருந் திங்கள் மறு நிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க,
புரி நூல் அந்தணர் பொலம் கலம் ஏற்ப,
வெம்பாதாக வியல் நில வரைப்பு என
அம்பா ஆடலின் ஆய் தொடிக் கன்னியர்,
முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட,
பனிப் புலர்பு ஆடி, பருமணல் அருவியின்
ஊதை ஊர்தர, உறை சிறை வேதியர்
நெறி நிமிர் நுடங்கு அழல் பேணிய சிறப்பின்,
தையல் மகளிர் ஈர் அணி புலர்த்தர,
வையை நினக்கு மடை வாத்தன்று
மையாடல் ஆடல் மழ புலவர் மாறு எழுந்து,
பொய் ஆடல் ஆடும் புணர்ப்பின் அவர், அவர்
தீ எரிப் பாலும் செறி தவம் முன் பற்றியோ,
தாய் அருகா நின்று தவத் தைந் நீராடுதல்?
நீ உரைத்தி வையை நதி!

**மகளிர் செயல்கள் :**

ஆயிடை, மா இதழ் கொண்டு,. ஓர் மட மாதர் நோக்கினாள்,
வேய் எழில் வென்று வெறுத்த தோள் நோக்கி,
சாய் குழை பிண்டித் தளிர் காதில் தையினாள்
பாய் குழை நீலம் பகலாகத் தையினாள்
குவளைக் குழைக்காதின் கோலச் செவியின்
இவள் செரீஇநான்கு விழி படைத்தாள் என்று
நெற்றி விழியா நிறை திலகம் இட்டாளே,

கொற்றவை கோலம் கொண்டு, ஓர் பெண்
பவள வளை செறித்தாள் கண்டு அணிந்தாள், பச்சைக்
குவளைப் பசுந் தண்டு கொண்டு
கல்லகாரப் பூவால் கண்ணி தொடுத்தாளை,
நில்லிகா என்பாள் போல், நெய்தல் தொடுத்தாளே,
மல்லிகா மாலை வளாய்.
தண்டு தழுவா, தாவு நீர் வையையுள்,
கண்ட பொழுதில் கடும் புனல் கை வாங்க,
நெஞ்சம் அவள் வாங்க நீடு புணை வாங்க,
நேரிழை நின்றுழிக் கண் நிற்ப, நீர் அவன்
தாழ்வுழி உய்யாது தான் வேண்டும் ஆறு உய்ப்ப்
ஆயத்துடன் நில்லாள் ஆங்கு அவன் பின் தொரூஉ,
தாய் அத் திறம் அறியாள், தாங்கி தனிச்சேறல்
ஆயத்தில் கூடு என்று அரற்று எடுப்பத் தாக்கிற்றே,
சேய் உற்ற கார் நீர் வரவு.
“நீ தக்காய் தைந் நீர்! நிறம் தெளிந்தாய்!” என்மாரும்
“கழுத்து அமை கை வாங்காக் காதலர்ப் புல்ல
விழுத் தகை பெறுக!” என வேண்டுதும் என்மாரும்,
பூ வீழ் அரியின் புலம்பப் போகாது,
யாம் வீழ்வார் ஏமம் எய்துக என் மாரும்
கிழவர் கிழவியர் என்னாது, ஏழ்காறும்
மழ ஈன்று மல்லல் கேள் மன்னுக” என்மாரும்,
கண்டார்க்குத் தாக்கு அணங்கு இக் காரிகை காண்மின்
பண்டாரம் காமன் படை உவள் கண் காண்மின்
நீல் நெய் தாழ் கோதையவர் விலக்க நில்லாது
பூ ஊது வண்டினம் யாழ் கொண்ட கொளை கேண்மின்
கொளைப் பொருள் தெரிதரக் கொளுத்தாமல் குரல் கொண்ட கிளைக்கு
உற்ற உழைச் சுரும்பின் கேழ் கெழு பாலை இசை
ஓர்மின் பண் கண்டு திறன் எய்தாப் பண் தாளம் பெறப் பாடிகொண்ட இன்
இசைத் தாளம் கொளை சீர்க்கும் விரித்து ஆடும்
தண் தும்பியினம் காண்மின் தான் வீழ் பூ நெரித்தாளை
முனை கெழு சின நெஞ்சின் முன் எறிந்து பின்னும்,
கனை வரல் ஒரு தும்பி காய் சினத்து இயல் காண்மின்
என ஆங்கு,

**வையை ஆற்றை புகழ்தல் :**

இன்ன பண்பின் நின் தைந்நீராடல்,
மின் இழை நறுநுதல் மகள் மேம்பட்ட
கன்னிமை கனியாக் கைக்கிளைக் காம
இன் இயல் மாண் தேர்ச்சி இசை பரிபாடல்,

முன் முறை செய் தவத்தின் இம்முறை இயைந்தேம்
மறுமுறை அமையத்தும் இயைக!
நறுநீர் வையை நயத்தகு நிறையே! 140

தெளிவுரை :

(1-15) : அகன்ற வானில் பரவும் ஒளியுடைய திங்களுடன் கூட்டப்படம் கார்த்திகையும் திருவாதிரையும் பரணியும் நாள்கள் முதலாய் அமைய , இவற்றின் பெயரால் இடபவீதி, மிதுனவீதி, மேடவீதி என வேறுபடுத்தப்பட்டுக் ககூறப்படும். அம்மூவகை வீதியுள்ளும் ஓர் ஒன் றஒன்பது நாள்களைக்கொண்ட மூவகை இராசிகள். அவற்றுள் வெள்ளிக் கோள் இடபராசியைச் சேர, செவ்வாய்க் கோள் டேராசியைச்சேர, பொருள்களை ஆராய்ந்து அறியும் புந்தி என்ற பெயர் கொண்ட மிதுனராசியில் நிற்க, கார்த்திகை நாள் உச்சமாக இருள் புலர்கின்ற விடியற்காலை உண்டாக, வியாழன் கோள் சனியின் இரட்டை இல்லங்களாகிய மகர கும்பங்களுக்கு மேலே உள்ள மீனராசியைச் சேர, இயமனைத் தமையனாக உடைய சனிக்கோள் தனுராசியின் பின் உள்ள மகர ராசியில் நிற்க, இராகு, தி மழையும் வருகின்ற நாளில் அகத்தியன் என்ற மீன் தன் இடத்தைக் கடந்த மிதுனராசியைச் சேர. மதுவேனில் பருவத்துக்குப் பரின் வருகின்ற கார்காலத்தில் மழை பொழியம் என்று நூலில ் கூறப்பட்டுள்ள இந்த விதியால் உயர்ந்த சைய மலை மீத பெய்த மழை மிகுதிப்பட்டது. பட, வையை ஆற்றில் நீர் பெருகி வந்து கரைகளை நெரித்தது.

(16-22) : மலையில் வளர்ந்துள்ள புன்னை மரமும் ஆற்றின் கரையில் உள்ள சுரபுன்னை மரமும், வண்டுகள் இசைபாடுகின்ற சண்பக மரக்கூட்டமும் குளிர்ந்த தன்மையுடைய தேற்றா மரமும் வாள் வீரமரமும் கொம்புகள் தழைத்து வளரும் வேங்கை மரமும் செவ்வலரி, காந்தளும், தீயைப் போன்று மலரும் தழைத்த தோன்றியும், காற்றால் மலர்த்தப்பட்ட இதழ்களையுடைய நீலமும் ஆகியவற்றின் மலர்களை.

(23-30) : மேற் சொல்லப்பட்ட மரங்களை மூங்கில் வளரும் மலைச் சாரலில் சோலையில் அருவி நீர் கொண்டு வந்த குவித்தது. அவற்றைப் பாய்கின்ற வையை ஆற்று நீர் தள்ளிக் கொண்டு வந்த அகன்ற திருமருதத்துறை என்னும் நீராடுதற்கு உரிய அழகிய துறையில் தந்தது, அங்ஙனம் தருதலால் அந்த மருதத்துறையை ஆராய்ந்த மலர் பறித்தற்குரிய சோலையுடைய வெலிய குடிகள் தாங்கள் பறித்த நிறம் உடைய மால்களைக் கொணர்ந்த குவித்து வைக்கும் மண்டபமாகும் எனச்சொல்வேனோ! மலராகிய போர்வையும் மலையில் உள்ள முத்துகள் பொருந்திய மார்பையும் அலையையும் நுரையையும் மென்மையான குமிழிகளையும் நல்ல நறுமணம் உடைய சந்தனச் சாந்தினையும் உடைய வையை என்ற மங்கையின் ஆடையினது முன் தான எனக் கூறுவேனோ கள்ளை வாயில் கொண்டு பருகும ்நில மகளின் மிடறு என்று

சொல்லவேனோ! இந்த உவமைகளுள் எதனை எடுத்துத் தேர்ந்து எடுத்துச் சொல்வேன்?

(31-40) : பிறை தோன்றிய நாள் தொடங்கி வளர்கின்ற வளர் பாக்கம் போல், நாளுக்கு நாள் பெருகி அதன் ஒளி எங்கும் பரந்ததைப் போன்று, மலைச் சாரல் தொடங்கி நிலம் முழுவதம் நீரைப்பரப்பி உலகத்துக்கருப் பயனை விளையச்செய்த காத்தனை, பின் தெய்பிறைப் பக்கத்தில் தேவர்க்கு உணவாகிய அம்மதியம் நாள்தோறும் ஒரு கலை அழியும் அதைப் போன்று நின் நீர் வருவாய் சுருங்குதலால் நாளுக்கு நாள் சிறது சிறிது வற்றி வரும் போதும் எட்டாம் திங்களின் அளவாதலன்றி அமாவாசை நாளில் திங்கள் முற்றும் தேய்ந்த ஒழிவத போல் நின்னிடம் நீர் முற்றும் வற்றிப் போய்விட்ட அத்தகைய நாளை இவ்வுலகில் யார் கண்டவர், (எவரும் இலர்) அதனால் நெடுந்தொலைவைக்கடந்து மலைகளிலே ஊர்ந்து வந்த மாட்சிமை உடைய அணிகலன்களை உடைய வையை மகளே! நீ பெருகி வந்த நாளின் வருவாயே அன்றி நின் வற்றிய நாளின் வருவாயையும் இந்த உலகம் அடையும் பொருட்டாக வலி குறைந்து மெல்லச் செல்வாய்!

(41-49) : களவில் புணர்கின்ற காதலரையுடைய சிறந்த மயில் போன்ற மகளிர், அவர்கள் காம இன்பச் சிறப்புடைய களவொழுக்கத்தைக் கைவிட்டு இழிந்த கற்பொழுக்கத்தை மேற்கொண்டு அக்கணவனின் இல்லத்தில் போய் அடங்கும். செய்கையைப் போல், நீரான செல்வப் பெருக்கையுடைய வையை மகளே! நீ தோன்றிய பெரிய மலையைவிட்டு நின் தலைவனின் இருப்பிடமான இல்லத்துக்கருத் தனியே செல்லுதல் இழிவானதாகும். ஆதலால் அங்குச் செல்லாதே! என்று பார்த்தவர் உரைப்ப, எல்லையற்ற நீண்டு அகன்ற கண்ணை உடைய தலைவியைத் தலைவன் உடன் அழைத்துக் கொண்ட படைகலங்களுடன் செல்ல, அவனை, அத்தலைவியின் சுற்றத்தார் அச்செயலை அறிந்து இடைச் சுரத்தில் போய் அவனுடன் போரிட்டு தடை செய்தாற் பொன்று வெற்றியை உடைய மதுரையில் உள்ள மாந்தர் இடையில் புகுந்து தடை செய்து நீராடுதற்கு ஏற்றது வையை ஆறு.

(50-61) : இனி அவ் வையை ஆற்றில் அணி அணியாய் நின்று நெட்டியாற் செய்த வெண்மையான வாளைச் சிலர் சுடற்றினர். சிலர் நெட்டியால் ஆன குந்தப் படையைக் கையில் கொண்டு நின்றனர். மகளிர் அமர்ந்த தேர்க்கு மகளிர் கோலைக் கைக்கொண்டு நின்றனர். மைந்தர் அமைந்த தேர்க்கு மைந்தர் கையில் கோலைக் கொண்டு நின்றனர். கொடியை உடைய திண்ணிய தேரில் ஏறியிருந்தனர் சிலர். பறவை பறப்பதைப் போல் விரைந்து போகும் இயல்புடைய குதிரைகளையும் பொன்னால் ஆன பட்டத்தை உடைய பறவைகளையும் ஏறி அவற்றை வையை நீந்துதற்குரிய வெள்ள நீரில் செலுத்திச்செலுத்திக் கலக்கினர். சிலர் கண்ணுக்கு நிறைந்த அழகையுடைய மூங்கில் குழாயில் நீரை எடுத்துத் தம்மீது செலுத்துபவர்களை அரக்கு நீரை வட்டால் எறிந்தனர்

சிலர். தம்மை நல்ல மணம் உடைய மலர் மாலையால் சுழற்றிப் புடைப்ப, அறுக்கப்பட்ட சருச்சரையை உடைய கொம்பில் அடக்கப்பட்ட மண நீரைச் சிலர் வீசினர். ஆராய்ந்து தொடுக்கப்பட்ட மாலையை உடைய மகளிர் தம் காதலருடன் நாள்தோறும் ஆடி மகழ்ந்தனர். அழுகுடைய தோற்றத்தை உவமை காட்டிக் கூறும்போது பகைவரின் குதிரைகளை வென்று கவர்ந்து கொள்ளும் விரைந்து ஓடும் தேரையுடைய பாண்டிய மன்னரின் வையை ஆற்றின் உள் இடம் போர்க்களம் போன்ற தன்மை உடையது எனலாம்.

(62-71) : நீராடுவதற்கு ஏற்ற அணிகலன்களுடன் மலர்களால் கட்டப்பட்ட மாலையைச் சூடிய மாலை போன்ற மார்பிடத்தேத அந்த அழகிய ஒப்பனையும் அதற்கு ஏற்ற பிற அணிகலன்களையும் ஒளி விளங்கக் கட்டப்பட்டு அமைந்த பொன்னரி மாலை சூடிய மகளிருடன் பாகு தங்கிய இளங்கள்ளைப் பருகிக் களிப்பு மிக விளங்கினர். நல்ல செல்வத்தை உடைய அறவினையைச் செய்த நாகர்களைப் போன்று விருப்பம் மிக இடை விடாது புணர்தற்கு, தாளம் பொருந்திய கிளர்ச்சியை உடைய செவியை நிறைத்ததுக் கொண்டு, ஆடவரும் மகளிரும் அழகு என்ற கள்ளைக் கண்ணால் பருகியபடி விளங்கினர். வானத்தில் வாழும் தேவரின் ஒளிமிக்க வைமானிகர் ஊர்ந்து செல்லும் விமானத்தைத் தெளிவாக வையை நீர் காட்டியது.

(72-79) : வையையே! கார் காலத்தில் கலங்கி வேனிற் காலத்தில் தெளிவதாலல் உனக்கு இத்தன்மை எப்போதும் ஒத்திருப்பதில்லை. கார் கால மேகங்கள் முழுங்கும் திசைகள் அதிர்வதற்குக் காரணமான இடி ஒலி நீகிப் பனி மிகும். அதனால் குளிர் நடுங்கும் முன்பனிப் பருவத்தில் ஞாயிறு சுடாத இறுதி மழையை உடைய மார்கழி மாதம். அம் மாதத்தில், மிகப்பெரிய திங்கள் மண்டிலம் வளர்ந்து நிறைந்த திருவாதிரை நாளில் விரிந்த மெய்ந்நூல்களை உடைய அறவோர் திருவாதிரைக்குத் தெய்வமான சிவபெருமானுக்குத் திருவிழாவைத் தொடங்குவர். தொடங்க, முப்புரி பூணூலை உடைய பார்ப்பனர் அந்த விழாவில் இறைவனுக்குப் பலிப் பொருள் இட்ட பொன் கலங்களையும் பிறவற்றையும் ஏந்துகின்றனர்.

(80-87) : அகன்ற இந்த உலகம் கதிரவனின் வருகையால் வெப்பமடையாமல் மழையால் குளிர்வதாகுக என வாழ்த்தி அம்பா ஆடல் ஆடும் கன்னி மங்கையர். சடங்கினை முதிய பார்ப்பனியர் நோன்பு செய்யும முறையை அறிவிக்க, பனியை உடைய விடியற் காலையில் நீரில் ஆடி. பருத்த மணலில் ஓடும் நீரில் குளிர் வாடை தவழ்ந்து வருதலால் நின் நீர் உராய்ந்து சென்ற கரையில் வாழ்கின்ற அந்தணரின் வேத நெறிப்படி வளர்க்கப்பட்ட வளைவாய் எரியும் தீயை வளர்த்துச் சிறப்புடன், ஒப்பனையுடைய அக்கன்னியர் போய், அத்தீயில் தம் ஈர ஆடையை உலர்த்துவர். வையையே! அத்தீயில் கொடுக்கம் அவி நினக்குப் பொருத்தமானதே!

(88-92) : மையோலை பிடித்த இளம் புலவரதுத விளையாட்டுக்கு மாறாய்க் காமக்குறிப்புணர்வு இல்லாத விளையாடும் ஆயத்தையுடைய

அக்கன்னியர், அவரவர் அன்னையர் பக்கத்தில் நின்று நோன்புடைய இத் தைந் நீராடலை உன்னிமத்தே பெற்றது. இவ்வாறு நீரில் நின்றன்றி எரியும் தீயின் பக்கத்தில் நின்று பொறி புலன்களை அடக்கிச் செய்தற்கான தவத்தை முன் பிறவிகளில் மேற்கொண்டு செய்ததாலோ, வையையே! இப்பேற்றுக்குரிய காரணத்தை நீயே உரைப்பாயாக!

(93-105) : இப்படி அம்மங்கையர் நீராடுங்கால். மூங்கிலின் அழகை வென்று மிகுந்த தோள் அழகையுடையவள் ஒருத்தி, தன் காதில் நீலமலரைச்செருகிக் கொண்ட பக்கத்தில் நின்ற ஒருதிணை நோக்கினாள். அவளது குறிப்பை அறிந்த அப்போது அந்த மங்கை அசோகம் தளிரைத் தன் காதில் செருகிக் கொண்டாள். தான் சூடிய இளந்தளிர்ச் செம்மையால் நீலமலர் மீது இளவெயில் படர்நதாற் போன்று ஆகும் படி செய்தான் அதைக் கண்ட பின்னவள் முதலாமவளைச் சுட்டிக் குழையணிந்த காதினையுடை யஇவள் தன் செவிகளில் நீல மலர் அணிந்த இப்போது நான்கு விழிகளை உடையவளாக விளங்கினாள் என்று அவள் அழகைப் பாராட்ட, அது கண்ட மற்றொருத்தி மேலும் அழகுக்கு அழகு செய்பவளாய், அந்த அழகி கொற்றவை போல் தோன்ற வேண்டும் என எண்ணி, நெற்றிக் கண் போல் தோன்ற வேண்டும் என எண்ணி, நெற்றிக்கண் பொல் தோன்றும் படி அவளது நெற்றியில் ஒரு திலகத்தை இட்டாள். ஒருத்தி பவள வளையல் அணிந்த ஒருத்தியைப்பார்ததுத் தன் கையில் மரகத மணி போன்ற நிறஞ் உடைய குவளை மலரின் பசுமையான தண்டினை வளையலாய்ச் செய்து அணிந்த கொண்டாள். ஒருத்தி குளிரிப் பூவால் மாலை தொடுத்தாள், அங்ஙனம் தொடுத்தவளை நி இப்படி மாலை தொடுப்பதை நிறுத்துக எனத் தடையைச் செய்பவளைப் போன்று மற்றொருத்தி அவள் காணுமாறு மல்லிகை மாலையின் இடை இடையே நெய்தல் மலலைக் கலந்து தொடுத்தாள்.

(106-114) : முன்னம் வாழை மரத் துண்டைத் தழுவி நீரில் பாய்ந்து ஆடினான் ஒருவன். அப்போது அங்கு ஆயத்தாருள் நின்ற ஒருத்தியை அவன் கண்டான். அப்பொழுதில், அவன் மனம் அழிந்தது. அதனால்விரைந்து ஓடும் வையைநீர் அவனது கையைத் தன் ஓட்டப்போக்கில் இழுத்துக் கொண்டு சென்றது. அவனது நெஞ்சத்தை இத்மகளிரின் அழகு வலிந்து இழுக்க, அவள் நிற்கும் நிலையிலேயே அவளது கண்கள் நிலை பெற்று நின்றன. நீரோ அவன் விரும்பிய அவளிடத்தில் இழுத்துச்செல்லாமல் தான் விரும்பிய வழியே இழுத்துச் சென்றது. அதைக் கண்ட அம்மங்கை அவன் பிரிவை ஆற்றாதவளாய்த் தன்னுடன் உள்ள மகளிருடன் நில்லாமல் அவன் பின்னே தொடர்நதாள். அவள் அங்ஙனம் செல்வதற்குக் காரணமான அன்பின் தன்மையை அவள் தாய் அறியவில்லை. அவளைத் தடுத்து, ஏடி, நீ தனியெ செல்லாதே! மீண்டம் நின் தோழியருட்ன போய்க் கூடுக! எனக் கூறி விலக்கினாள். அதனால் அப்பெண் அழுதாள். அங்ஙனம் ஆக, கரையினை மோதி வந்தது பார்ப்பருவத்துச்சிவந்து விளங்கிய வையையின் வடிவு.

குறிப்புகள்

(115-121) : கார் காலத்தில் வரும் நீரைப்போல அன்றி தைந்நீரை, நீ குளிக்கும் அளவு உடையயையாய் விளங்குகிறாய். நிறமும் தெளிந்து விளங்குகிறாய். ஆதலால் நீயே தக்கயர்! எனச் சிலர் பாராட்டினார். எம் கணவர் எம் கழுத்தில்அமைத்துத் தழுவிய கைகளை அகற்றாமல் எம்மைத் தழுவ, அதனால் யாம் வீறு பெறுக என்று நின்னை வேண்டுகின்றோம் எனச் சிலர் உரைத்தனர். எம்மால் விரும்பப்பட்ட தலைவர் மொய்க்கும் வண்டைப் போன்று யாங்கள் தனியாய் இருந்து வருந்தும்படி அஎம்மைவிட்டு நீங்காமல் எம்முடனே இருத்தலால் யாம் இன்பம் அடையம்படி அரள்வாயாக! என்று வேண்டிக் கொண்டனர். எம் கணவரும் யாமும் கிழவர் கிழவியர் என உலகத்தவரால் கூறப்படாமல், எம் ஏழாம் பருத்திற்குரிய ஆண்டு அடையும் வரையிலும் இளமையை இத் தைந்நீர்த்தவம் தர யாம் செல்வத்தோடும் உறவினரோடும் நலை பெறுமாறு அருள் செய்வாயாக! என்று வேண்டினர் சிலர்.

(122-133) : இம்மங்கை கண்டவரைத் தாக்கி வருத்தும் தெய்வம் ஆவாள். அத்தகையவளை நீங்களும் பாருங்கள். இவளது கண் காமனின் கருவூலமும் படைக்கலங்களும் ஆகும். நீல நிறத்தை உடைய தேன் பொருந்தி யமலர் மாலையை உடைய அம்மகளிர் ஓச்சித தடை செய்யவும் நில்லாமல் அம்மாலையில் தேனை ஊதும் வண்டுகள் யாழ் பொல் பாடுகின்றன. அவற்றைக் கேளுங்கள். பாடலின் பொருள் விளங்கும்படி பாடாதிருக்கவும். குரல் கொண்ட கிளையான இளிக்குக் கிளையாகப் பொருந்தி யஅரும்பாலைப் பண்ணில் தோன்றிய மருதப்பண் என்ற இசையைக் கேளுங்கள். விளரிப்பாலையில் தோன்றும் யாம் யாழினைத் தாளத்துக்கும் கொளைச் சீர்க்கும் அப்பண்ணின் சீர்க்கும ˙ஏற்றபடி தம் சிறகுகளை விரித்து ஆடும் குளிர்ந்த இசையை இசைக்கும் தும்பியின் கூட்டத்தைக் காணுங்கள். ஒரு தும்பி தான் பொருந்தி யமலரினை நெரித்தவளான ஒருத்தியைச் சினம் கொண்ட நெஞ்சுடனே முன்னரும் தாக்கிப் பின்னரும் தாக்குவதற்கு விரைந்து வருவதற்குக் காரணமான அதன் சிநத்தின் தன்மையைக்காணுங்கள் என்று இப்படி அங்கே நிழ்ந்த நிகழ்சிசிகளை மைந்தர் ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டி நின்றனர்.

(134-140) : இனிய தன்மையில் மும்பாடு அடைந்த தேர்ச்சியை உடைய இசையுடன் பொருந்திய பரிபாடலால் வாழ்த்தபடும் நீரையுடைய வையையெ! ஒளிரும் அணிகலன்களையும் நறுமண நெற்றியையும் உடைய மகள் தன்மை மேம்பட்ட கன்னிமைத் தன்மை முதிராத மகளிடத்தில் மேற் கூறியபடி கைக்கிளைக் காமத்தைத் தரும் யாம் முந்தைய பிறவியிலே ஆற்றிய தவத்தால் இப்பிறவியில் நின்னிடம் இந்தத் தைந் நீராடலான தவத்தைப் பெற்றோம். அத்தவத்தை எல்லாரும் விரும்பத் தக்க நின் நீர் நிறைவில் மறு பிறவியிலும் யாம் பெற வேண்டும் அருள்க!

## 11.7.பாடல் : 12

பாடியவர் : நல்வழுத்தியார் பண் அமைத்தவர் : நன்னாகனார்

பண் : பாலை யாழ்

குறிப்புகள்

**வையையில் நீர் பெருகி வருதல் :**

வளி பொரு மின்னொடு வான் இருள் பரப்பி,
விளிவு இன்று கிளையொடு மேன் மலை முற்றி.
தளி பொழி சாரல் ததர் மலர் தாஅய்
ஒளி திகழ் உத்தி உருகெழு நாகம்,
அகரு, வழை, ஞெமை, ஆரம் இனைய்
தகரமும், ஞாழலும் தாரமும் தாங்கி
நளி கடல் முன்னியது போலும், தீம் நீர்
வளிவரல் வையை வரவு.

**புனல் வரவு காண மகளிர் சென்ற வகை :**

வந்து மதுரை மதில் பொரூஉம், வான் மலர் தாஅய்,
அம் தண் புனல் வையை யாறு எனக் கேட்டு
மின் அவிர் ஒளி இழை வேயுமோரும்,
பொன் அடர்ப் பூம் புனை திருத்துவோரும்,
அகில் கெழு சாந்தம் மாற்றி ஆற்றப்
புகை கெழு சாந்தம் பூசுவோரும்,
கார் கொள் கூந்தல் கதுப்பு அமைப்போரும்,
வேர் பிணி பல் மலர் வேயுமோரும்,
புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்,
கட்டிய கயில் அணி காழ் கொள்வோரும்
வாச நறு நெய் ஆடிவான் துகள்
மாசு அறக் கண்ணாடி வயக்கி வண்ணமும்
தேசும் ஒளியும் திகழ நோக்கி,
வாச மணத் துவர்வாய்க் கொள்வோரும்
இடு புணர் வளையொடு தொடு தோள் வளையர்,
கட்டு வடக் கழலினர் மட்டு மாலையர்,.
ஓசனை கமழும் வாச மேனியர்
மட மா மிசையோர்,
பிடிமேல் அன்னப் பெரும் பெடை அனையோர்

**நீர் வரவு காணச் சென்ற மைந்தர் செயல் :**

கடு மா கடவுவோரும் களிறு மேல் கொள்வோரும்,
வடி மணி நெடுந் தேர் மா முள் பாய்க்குநரும்,
விரைபு விரைபு மிகை மிகை ஈண்டி,
ஆடல் தலைத்தலை சிறப்ப கூடல்
உரைதர வந்தன்று வையை நீர் வையைக்
கரைதர வந்தன்று, காண்பவர் ஈட்டம்
நிவந்தது நீத்தம் கரை மேலா் நீத்தம்
கவர்ந்தது போலும் காண்பவர் காதல்.
முன்துறை நிறை அணி நின்றவர் மொழி மொழி
ஒன்று அல பல பல உடன் எழுந்தன்று அவை

குறிப்புகள்

எல்லாம் தெரியக் கேட்குநர் யார் அவை
கில்லா கேள்வி கேட்டன சில சில்
ஒத்த குழலின் ஒலி எழ முழவு இமிழ்,
மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி,
ஒத்து அளந்து, சீர் தூக்கி, ஒருவர் பிற்படார்,
நித்தம் திகழும் நேர் இறை முன்கையால்
அத்தக அரிவையார் அளத்தல் காண்மின்.

**கேட்டன கூறல் :**

நாணாள் கொல், தோழி! “நயன் இல் பரததையின்
தோள் நலம் உண்டு துறந்தான்” என, ஒருத்தி
யாணர் மலி புனல் நீத்தத்து இரும் பிடி
சேண வெரிநின் சிறந்தானோடு ஏறினாள்,
நாணுக் குறைவு இலள் நங்கை மற்று? என்மரும்
“கோட்டியுள் கொம்பர் குவி முலை நோக்குவோன்
ஓட்டை மனவன் உரம் இலி” என்மரும்,
“சொறிந்ததூஉம் சொற்றதூஉம் பற்றாள் நிறம் திரிந்தாள்
நெஞ்சத்தை நீத்தாள், நெறி செல்வான் பின் நிறை
அஞ்சிக் கழியாமோ, அன்பு உற்றால்?” என்மரும்,
“பூண் ஆரம் நோக்கிப் புணர் முலை பார்த்தான் உவன்

நாணாள் அவனை இந் நாரிகை” என்மரும்.

**அங்கு நிகழ்ந்தவை :**

அமிர்து அன நோக்கத்து அணங்கு ஒருத்தி பார்ப்பு,
கமழ் கோதை கோலாப் புடைத்து, தன் மார்பில்
இழையினைக் கை யாத்து இறுகிறுக்கி வாங்கி,
பிழையினை என்ன, பிழை ஒன்றும் காணான்,

தொழுது பிழை கேட்கும் தூயவனைக் காண்மின்.
“பார்த்தாள் ஒருத்தி நினை” என, “பார்த்தவளைப்
பொய்ச் சூளாள் என்பத அறியேன் யான்” என்று இரந்து
மெய்ச் சூள் உறுவானை, மெல்லியல், பொய்ச் சூள் என்று,
ஒல்லுவ சொல்லாது, உரை வழுவச் சொல்
உறைத்தும் செறுத்தும் உணர்த்துவானைப்
புல்லாது ஊடிப் புலந்து நின்றவள்
பூ எழில் வண்ண நீர் பூரித்த வட்டு எறிய,
வேல் எழில் உண்கண் எறி நோக்கம் பட்ட புண்
பாய் குருதி சோர பகை இன்று உளம் சோர,
நில்லாது நீங்கி நிலம் சோர் அல்லாந்து

மல் ஆர் அகலம் வடு அஞ்சி, மம்மர் கூர்ந்து,
எல்லாத் துனியும் இறப்ப, தன் காதலன்
நல் ஏர் எழில் ஆகம் சேர்வித்தல், எஞ்ஞான்றும்
வல்லதால் வையைப் புனல்
என ஆங்கு,
மல்லிகை மௌவல் மணம் கமழ் சண்பகம்
அல்லி, கழுநீர், அரவிந்தம், ஆம்பல்,
குல்லை, வகுளம், குருக்கத்தி, பாதிரி,
நல்இணர் நாகம் நறவம் சுரபுன்னை
எல்லாம் கமழும் இரு சார் கரை கவிழ்
தேறித் தெளிந்து செறி இருள் மால் மாலை
பாறைப் பரப்பில் பரந்த சிறை நின்று
துறக்கத் தொழிலைத் தன் நீர் நிழல் காட்டும்
கார் அடு காலை கலிழ் செங் குருதித்தே

போர் அடு தானையான் யாறு
சுடு நீர் வினைக் குழையின் ஞாலச் சிவந்த
கடி மலர்ப் பிண்டி தன் காதில் செரீஇ,
விடு மலர்ப் பூங்கொடி போல நுடங்கி,
அடிமேல் அடிமேல் ஒதுங்கி தொடி முன் கைக்
காரிகை ஆகத் தன் கண்ணி திருத்தினாள்,
நேர் இறை முன் கை நல்லவள் கேள் காண்மின்.
துகில் சேர் மலர் போல், மணி நீர் நிறைந்தன்று
புனல் என மூதூர் மலிந்தன்று அவர் உரை
உரையின் உயர்ந்தன்று கவின்.
போர் ஏற்றன்று நவின்று தகரம்
மார்பு அழி சாந்தின் மணல் அளறு பட்டன்று
துகில் பொசி புனலின் கரை கார் ஏற்றன்று
விசும்பு கடி விட்டன்று விழவுப் புனல் ஆங்க.

**வையையை வாழ்த்துதல் :**

இன்பமும் கவினும் அழுங்கல் மூதூர்
நன் பல நன் பல நன் பல வையை!
நின் புகழ் கொள்ளாது இம் மலர்தலை உலகே.

தெளிவுரை :

(1-8) : காற்றினால் மோதப்பட் டமேகம் மின்னலையும இருளையும மாறி மாறிப் பரப்பித் தன் இனத்துடன் போய் சைய மலையை அடைந்து அதனைச் சூழ்ந்து. இடைவிடாமல் மழை பெய்தது. அப்புயலால் காட்சிக்கு இனி யஅந்நீர் மலைச் சாரலில் காற்றால் உதிர்ந்த பூக்கள் தன் மீத பரவி விளங்க. ஒளி விளங்கும் பொறியை உடையதம் கண்டவர் அஞ்சுவதுமான நாகப் பாம்பினது பெயரை உடைய அமமலைச் சாரலில் உள்ள நாக

மரம், அகில் மரம், சுரபுன்னை மரம், ஞெமை மரம். சந்தன மரம் ஆகிய இவை ருந்தும் படி செய்து, தகர மரம் ஞாழல் மரம் தேவதார மரம் என்பனவற்சைச்சாய்த்துத் தன்னுள் கொண்டு காற்றைப் போன்று விரைவாய் வரும் வருகை ஒரு பெருங்கடல் பொங்கி வருவதைப் போல் விளங்கியது.

(9-18) : அழகுடைய குளிர்ந்த நீரை உடைய வையை ஆறு முல் உரைத்ததைப் போன்று மலர் பரக்கப்பட்டு வந்து மதுரையின் மதிலை மோதும் என்று கண்டோர் உரைத்தனர். அதைக் ர்கட்டனர் அந்நகர மக்கள். அவர்கள் மின்னலைப் போல் விளங்கும் அணிகலன்களை அணிந்து கொண்டனர். பொன் தகட்டால் ஆன பூவான அணிகளை அணிந்து கொண்டனர். சந்தனச் சாந்தை மாற்றி அகிற்புகையினாலாகிய சாந்தைத் தம் உடம்பில் மிகுதியாய்ப் பூசிக் கொண்டனர். முகில் போன்ற தம் கூந்தலைக் குழலாக முடித்தனர். அந்தக் கூந்தலில் வெட்டி வேரும் விலாமிச்ச வேரும் ஆகிய இரண்டுடன் கட்டப்பட்ட பல மலர் மாலையச் சூடிக் கொண்டனர். நீராடுதற்குப் பொருத்தமான புடைவைகளை உடுத்திக் கொண்டனர். கட்டப்பட்ட கோக்கு வாயானே அழகுடையதாகிய வடங்களைப் பூண்டனர்.

(19-27) : மகளிர் சிலர் கண்ணாடியின் அழுக்குப் போக நறுமண நெய்யைப்பூசிக் கற்பொடியிட்டுத் துலக்கினர். அக்கண்ணாடியில் தம் இயற்கையழகும் செயற்கை அழகும் ஆடவரைப் புணர்ந்ததால் உண்டான ஒளியும் விளங்க அவற்றைக் கண்டு களித்தனர். பஞ்ச வாசத்தோடு கூட்டி இடித்த பாக்கினை வாயில் இட்டு மெல்பவர், ஆணி இடும் இர்டடை வளையலுடன் செறிக்கப்படும் தோள் வளையை உடையவர. கட்டு வடத்துடன் கால் மோதிரம் அணிந்தவர். தேன்சிந்தும ˙மாலையை உடையவர் ஓர் ஓசனை மொலைவு மணம் கமழும் மேனியர். இத்தகைய இயல்புடையவராய் விளங்கிய அம்மகளிருள் சிலர் மெல்லிய நடையை உடைய குதிரையின் மீது ஏறினர். பெரிய பெண் அன்னம் போன்ற சிலர் பெண் யானையின் மீது ஏறினர் .

(28-39) : ஆடவருள் சிலர் விரைவான நடையை உடைய குதிரை மீத ஏறிச் செலுத்தபவரும். மற்றும் சிலர் யானை மீது ஏறிச்செலுத்துபவரும் சிலர் தெளிந்த ஓசையை உடைய மணிகள் கட்டப்பட்ட பெரிய தேரில் பூட்டி யகுதிரைகளை முட்கோலால் குத்திச் செலுத்துபவரும் ஆகி, விரைந்து விரைந்த மிக மிக நெருங்கிச் சென்றனர். வையை நீராடல் இடந்தோறும் இடந்தோறும் சிறக்குமாறும் மதுரையில் உள்ள மக்கள் எல்லாலம் தன்னைப் புகழவும் வையை வந்தது. அந்த வையை வெள்ளத்தைக்க காண வந்த மக்கட் கூட்டம் வையையின் இரண்டு பக்கத்தும் அதன் கரையை ஒப்ப வந்து கூடியத. அந்நீர் வெள்ளம் கரைக்கு மேலே உயர்ந்தது. அந்நீர் தன்னைக் காணவந்த மக்களின் ஆசை வெள்ளத்தையும் கவர்ந்து கொண்டு பெருகியது போல் பெருகிற்று. அப்போது அந்த வையை ஆற்றில் நீராடும் துறையின் முன் நிறைந்த அணி அணியாக நின்ற மக்கள் பேசும் மொழிகள் ஒன்றுடன் ஒன்று பொருந்தாமல்

பல பல ஒரே காலத்தில் எழுந்தன. யார் அம்மொழிகளை எல்லாம் பொருள் விளங்கக் கேட்க வல்லவர்! அவற்றைக் கேட்டால் இயலாது. எம்மால் கேட்கப்பட்டவை சிலவே ஆகும்.

(40-45) : தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் பிற்படாதவராய்க் கூத்தாடுதலில் அழகு பொருந்தத் தம்முள் ஒத்து விளங்கும் ஆடல் மகளிர். இசைக்கருவியினின்று இசை எழ, முழவு, மத்திரி, தடாரி, தண்ணுடை, மகுளி என்னும் இக்கருவிகளின் ஓசையை உடைய தாளத்தை அளந்து தம் நேரிய முன் கையால் தாளக்கை அளத்தலைக் காணுங்கள்.

(45-56) : தோழியே! கேட்பாயாக! ஒருத்தி நாணத்தில் குறையில்லாதவளாய் இருந்தும் தனக்குச் சிறந்தவனான கணவன் நன்மையற்ற பரத்தையர் இலலத்துக்குப் போண் அவரது தோளின் அழகை அனுபவிக்கும் பெர்ருட்டுத் தன்னை நீங்கிச் சென்றான் என்று அவனுடன் ஊடியிருந்தவள் புதுவருவாயை உடைய வையை வெள்ளத்தில் அந்த ஊடலையம் மறந்து பெரிய பெண் யானையின் முதுகின் மீது நீராடம் விருப்பத்துடன் தன் கணவனடன் உயர் ஏறினாள். அவர்ள நாயம் உடையவளோ என் சிலர் கூறினார்கள். கூட்டத்தில் நின்றே ஒருவன் பூங்கொம்பைப் போன்ற ஒருத்தியின் குவிந்த முலைகளைக் கூர்ந்து பார்க்கின்றான். அவன் இளகிய நெஞ்சன். திண்மை இல்லாதவன் என்று சிலர் இகழ்ந்தனர். இவன் இவட்குப் பண்டு மலர் முதலியனவற்றைக் கையுறையாகத் தந்தம் இலலை. காதல் மொழி பேசியதும் இல்லை. அங்ஙனமாகவும் வழியில் போகும் அயலான் ஒருவன் பின்னே தன் மனத்தைச் செலுத்தி மேனி பசலையூர் நின்றாள். யாம் காதல் கொண்டவிடத்தும் நிறையழிவதற்கு அஞ்சி அதைக் கைவிட வேண்டாவோ! இவன் மங்கை அணிந்துள்ள முத்தாரத்தின் அழகை நோக்குபவன் போல் இவளடைய நெருங்கிய முலைகளைப் பார்தான். இவன் அங்ஙனம் பார்ப்பதனால் இவளும் நாணம் கொள்ளவில்லை எனக் கூறினர்.

(57-66) : ஒருத்தி தன் கணவனை அமிழ்தம் போன்ற பார்வையால் பார்தாள். அவள் பொறுக்காது தன் மார்பில் அணிந்திருந்த மலர் மாலையை எடுத்து அதையே கோலாகக் கொண்ட தன் கணவனைப் புடைத்துத் தன் மார்பில் உள்ள வடத்தை எடுத்து அவனுடைய கைகளைக் கட்டினாள். இறுக்கி இறுக்கிப் பார்த்தாள் நீ குற்றம் உடையாய்!" என்றாள் அவள் அவ்வாறு தன்னைக் கட்டியதற்குத் தன்னிடம் குற்றம் ஒன்றும் இல்லாமையால், அவன் அவளை வணங்கினான். நல்லாய் யான் செய்த குற்றம் யாது? என்று வினவினான். அவனைக் காணுங்கள்.ஏடா! நின்னை ஒருத்தி நோக்கினாள். அவ்வாறு நோக்கியவள் நின்னால் சூள் பொய்க்கப்பட்டவளாக இருக்க வேண்டும் என்று அவனது பிழையை எடுத்துக் காட்டினாள். காட்ட, அவன், நலலாய், என்னைப் பார்த்தவளை அறியேன். அவள் சூள் பொய்க்கப்பட்டவள் என்பதையும் அறியேன்! என்று சொல்லி பணிந்த சொற்களைச் சொல்லி பணிந்த சொற்களைச் சொல்லி

இரைந்து உண்மையாகவே ஆணையிட்டான். அதைக் கேட்ட மெல்லிய சாயலை உடையவள் பொறுக்கக் கூடிய சொற்களைச் சொல்லாமல், ஏடா, நீ இப்போது செய்யும் சூள்தான் என்ன? இதுவும் பொய்யான சூளே! என்று கூறினாள். அதைக் கேட்ட அவன் மீண்டும் சூளில் மிக்கும், சினந்தும் அவளது ஊடலைப் போக்க முயன்றான்.

(67-76) : இவ்வாற ஊடல் தீர்ந்த போதும் கூடாமல் ஊடி நின்றவள் அந்த நிலையினின்றம் புலவி நிலைமையில் நின்ஃறு மலின் மணத்தையும் அழகையுமுடைய அரக்கு நீர் நிறைந்த வட்டினை அவனது மார்பில் எறிந்தாள். அந்த அரக்குநீர் அவளது அழகிய மையுண்ட கண்ணான வேல்பட்ட புண்ணினின்றும் குருதி சொரிவதைப் போல் சொரிந்தது. அவன் அந்நிலையைப் பொறுக்கவில்லை. அவளிடம் பகைமை இலல்லாதவனாய்த் தன் நெஞ்சம் நெகிழ்தலால் அவள் முன் நில்லாமல் அவ்விடத்தினின்ற நீங்கி நிலத்தில் வீந்தவனைக் கண்ட அவள், அவனது மற்போருக்குப் பெருந்திய மார்பில் தான் வீசிய வட்டால் புண்பட்டு வீழ்ந்தான் எனக்கருதி அஞ்சி மயங்கி முன்னம் தான் கொண்ட எல்லாப் புலவியும் நீங்கிடத் தன் காதலானான அவனுடைய நல்ல மார்பினைத் தழுவிக் கொண்டாள். இங்ஙனம் புலவி கொண்டவரைப் புலவி நீக்கிக் கூடச் செய்தலில், இந்த வையை நீர் இன்றெ அல்லாது எக்காலத்தும் வன்மை உடையது. இந்நிகழ்சியையும் காணுங்கள் என்று காட்டினர்.

(77-86) : போரில் பகைவரை வெல்லும் படையை உடைய பாண்டியனின் இந்த வையை ஆறு, மல்லிகை மலர், சண்பக மல்ர், முல்லை மலர், தாமரை மலர், வெள்ளல்லி, செங்கழுநீர் மலர், அரக்காம்பல் , கஞ்சங் குல்லை, மகிழம் பூ, குருக்கத்தி, பாதிரி, நல்ல பூங்கொத்துக் களை உடைய நாகமா மலர், நறவ மலர், சுரபுன்னை மலர் என்ற இந்த எல்லா மலரும் மணம் வீசுவதற் கஇடமான இரு பக்கத்தும் உள்ள கரையை மோதிக் கலங்கியது. பின்பு பாறைக் கலலையுடைய நிலம் போன்று அடையாத பரந்த கல்லணையால் தடையுண்டு தேங்கி நின்று இருள் மிக்க மாலையில் மிகவும் தெறிந்து வான் உலகத்தில நிகழும் தொழிலைத் தன் நீர் நிழல் காட்டும். அந்த இருளை ஓட்டும் காலைப் போதில் கலங்கிய சிவந்த குருதியின் தன்மை உடையதாகும்.

(87-92) : நேரிய இறையான முன் கையை உடைய இம்மங்கை. அசோகின் சிவந்த பது மலரைத் தீயில் இட்டுச் சுட்டமையாலம் ஒளிமிக்க இபல்படைய தொழிற் சிற்ப்புடைய காதணி பொல் தூங்கும் படியாய்த ் தன் செவியில் செருகிக் கொண்டு மலர் மலர்ந்த பூங்கொடி பேதால் ஒல்கி, ஒருவன் இட்டுச் சென்று போனவள் ஒரு பக்கம் ஒதுங்கி வளையல் அணிந்த தனது முன் கையால் தன் தலையில் சூடியள்ள மாலைய அழகாகத் திருதினாள். ஆகவே அவன் அவளுடைய காதலனே ஆக வேண்டும். இந்தக் காட்சியையும் காணுங்கள் என்று இப்படித் தாம் விரும்பியவற்றைக் காட்டினார்.

(93-99) : நீராடிய மகளிர் அணிகளிலிருந்து உதிர்ந்த நீரோட்டத்தை உடைய மனிகள் அவர் ஆடையில் செய்யபட்ட புத்தொழிலைப் போல் நிறைந்த காணப்பட்டன என்று இவ்வாறு நீராடியவர் பலவாய்க் கூறியவை மதுரையில் சென்று மிக்கது. நீராடியவர் சொல்லைவிட அவர் நீராடியதால் எய்திய அழக மிக்கது. அங்ஙனம் மிக்க அந்த அழக பிறர் அழகுடன் மாறுபட்டது. நீராடிய மகளிரின் மார்பினின்றும் வழிந்து வீழ்ந்த தகரச் சாந்தினால்ல வையை ஆற்றின் மணல் சேறாகும் தன்மையை அடைந்தது. அந்த ஆற்றின் கரைகள் நீராடிக் கரைசேர்ந்தாரின் ஆடையினின்றும் ஒழுகும் நீரால் கார் காலத் தன்மை பெற்றத. இந்நீராட்டு விழா இம்மதுரையில் நடத்தலால் வானுலகம் சிறப்பு ஒழிந்தது.

(100-102) : வையையே! இவ்வாரவாரம் உடைய பழையதாகிய மதுரையில் வாழும் மக்களுக்கு நின்னால் இன்பமும் அழகும் பல நல்லவை உள்ளன ஆயின. ஆதலாலல் இம்மண்ணுலகம் அகன்ற இடம் உடையது என்றாலுதம் நின் புகழ் மிக விரிந்தது. அதலால் நின் புகழைத் தன்னடம் அடக்க மாட்டாது.

## 11.8.பாடல் : 16

பாடியவர் : நல்லழிசியார் பண் அமைத்தவர் : நல்லச்சுதனார்

பண் : நோதிறம்

வையையில் நீர் வரவு :

கரையே, கைவண் தோன்றல் ஈகை போன்ம் என,
மைபடு சிலம்பின் கறியொடும், சாந்தொடும்,
நெய் குடை தயிரின் நுரையொடும், பிறவொடும், எவ் வயினானும், மீதுமீது அழியும்,
துறையே, முத்து நேர்பு புணர் காழ், மத்தக நித்திலம்,
பொலம் புனை அவிர்இழை, கலங்கல் அம் புனல் மணி
வலம் சுழி உந்திய, திணை பிரி புதல்வர்
கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇ,
தம் தம் துணையோடு ஒருங்கு உடன் ஆடும்
தத்து அரிக் கண்ணார் தலைத்தலை வருமே.
செறுவே, விடு மலர் சுமந்து, பூ நீர் நிறைதலின்
படுகண் இமிழ் கொளை பயின்றனர் ஆடும்,
களி நாள் அரங்கின் அணி நலம் புரையும்,
காவே, சுரும்பு இமிர் தாதொடு தலைத்தலை மிகூஉம்
நரந்த நறு மலர் நன்கு அளிக்கும்மே.
கரைபு ஒழுகு தீம் புனற்கு எதிர் விருந்து அயர்வ போல்,
கானலங் காவும், கயமும், துருத்தியும், தேன்
தேன் உண்டு பாடத் திசை திசைப் பூ நலம்
பூத்தன்று வையை வரவு.
சுருங்கையின் ஆயத்தார் சுற்றும் எறிந்து.
குரும்பை முலைப் பட்ட பூ நீர் துடையாள்,

பெருந்தகை மீளி வருவானக் கண்டே,
இருந்துகில் தானையின் ஒற்றி, “பொருந்தலை
பூத்தனள், நீங்கு” எனப் பொய் ஆற்றால், தோழியர்,
தோற்றம் ஓர் ஒத்த மலர் கமழ் தண் சாந்தின்
நாற்றத்தின் போற்றி நகையொடும் போத்தந்து,
இருங் கடற்கு ஊங்கு இவரும் யாறு எனத் தங்கான்,
மகிழ களிப் பட்ட தேன் தேறல் மாற்றி,
குருதி துடையாக் குறுகி மருவினியர்,.
“பூத்தனள் நங்கை பொலிக!” என நாணுதல்

**வையை வானக் கங்கையை ஒத்து விளங்குதல் :**

மலையின் இழி அருவி மல்கு இணர்ச் சார்ச் சார்க்
கரை மரம் சேர்ந்து கவினி மடவார்
நனை சேர் கதுப்பினுள் தண் போது மைந்தர்
மலர் மார்பின் சோர்ந்த மலர் இதழ் தாஅய்
மீன் ஆரம் பூத்த வியன் கங்கை நந்திய
வானம் பெயர்ந்த மருங்கு ஒத்தல், எஞ்ஞான்றும்,
தேன் இமிர் வையைக்கு இயல்பு.

**வையைக்கு உரிய இயல்பு :**

கள்ளே புனலே புலவி இம் மூன்றினும்,
ஒள் ஒளி சேய்தா ஒளி கிளர் உண்கண் கெண்டை,
பல் வரி வண்டினம் வாய் சூழ் கவினொடும்,
செல் நீர் வீவயின் தேன் சோர, பல்நீர்
அடுத்து அடுத்து ஆடுவார்ப் புல்ல, குழைந்து
வடுப்படு மான்மதச் சாந்து ஆர் அகலத்தான்,
எடுத்த வேய் எக்கி நூக்கு உயர்பு தாக்கத்
தொடுத்த தேன் சோரும் வரை போலும் தோற்றம்,
கொடித் தேரான் வையைக்கு இயல்பு.
வரை ஆர்க்கும் புயல் கரை
திரை ஆர்க்கும் இத் தீம் புனல்
கண்ணியர் தாரர், கமழ் நறுங் கோதையர்,
பண்ணிய ஈகைப் பயன் கொள்வான், ஆடலால்
நாள் நாள், உறையும், நறுஞ் சாந்தும் கோதையும்,
பூத்த புகையும் அவியும் புலராமை
மறாஅற்க, வானம் மலி தந்து நீத்தம்
வறாஅற்க, வைகை நினக்கு!

தெளிவுரை :

(1-10) : வையை ஆற்றில் வெள்ளமானத பெருகி வரும் வருகையால் மேகங்கள் பொருந்தும் மலையிடம் உள்ள மிளகினோடும் சந்தன மரத்தினோடும், வெண்ணெய் உண்டாதற் பொருட்டுக் கடைவதற்குக்

காரணமான தயிர் போல் விளங்கும் நுரையுடனும், மலர் பொன் மணி முதலிய மற்றப் பொருள்களோடும் அந்த நீர் பெருகியது. வையைக் கரையில் எங்கும், அப்பொருள்களை இச்செய்கை பாண்டியனின் கொடைத் தன்மையப் போன்றது என்று கண்டோர் சொல்லும்படி, மேன்மேலும் வாரி வாரித் தன் அலைக் கரங்களால் வீசிக் கரையை அழிக்கும். இனிப் பிற நீராடும் துறைகள் தோறும் வலமாகச் சுழித்துப் பாயும் கலங்கலையுடைய அழகிய அந்நீர். ஆண்டுதோறும் நீராடுபவரின் தம்முள் ஒத்து முத்துச் சேர்ந்த வடம், தலைக்கோல முத்து, பொன்னால் இயற்றிய விளக்கமுடைய அணிகலன்கள் மணி முதலிய தன்னால் கொண்ட வரப்பட்டவற்றை, தம் இல்லிடத்தினின்றும் பிரிந். தமியராய் நீராடிய சிறுவர்களின் மென்மையான தலை முக்கியிடம் உள்ள முஞ்சம் என்னும் அணிகலனோடு சேரக் கொண்டு செவ்வரிகளுடன் கூடிய கண்களையுடைய மங்கையர் தம் தம் காதல் துணைவருடன் ஒருங்கு கூடி நீராடுகின்ற மதுரையிடத்து நீர்த்துறையில் எல்லாம் வரும்.

(11-19) : மருத நில வயல்கள். மலர்களைச் சுமந்து பொலிந்த வையை நீர் புகுந்த நிறைதலால், மசை தோன்றுவதற்க இடமான முழவு முதலிய இசைக் கருவிகளில் எழும் ஒலியையும் பாட்டையும் கற்ற ஆடு மகளிர் கூத்தாடும் மகிழ்தற்குரிய நாளில் அமைக்கப்பட்ட கூத்தரங்கின் ஒப்பனை செய்யப்பட்ட அழகைப் போன்று விளங்கும். பூம் பொழிகள் தமக்கு விருந்து அளித்த இனிய வையை நீருக்குக் கைம்மாறாக எதிர் விருந்து அளிப்பவை போல் மேலும் மெலும் நெருங்கிய வண்டகள் ஒலிப்பதற்கக் காரணமான பூந்தாதுகளுடன் நரந்தம் போல் மணம் கமழும் மலர்களை மிகவும் வழங்கும்.நறுமணம் பொருந்திய பூம்பொழில்களிலும் குளங்களிலம் ஆற்றிடைக் குறைகளிலும் வண்டுகள் கள் உண்டு களித்து இசை பாடும்படி. மலர்களால் ஆகிய அழகான திக்குகளில் எல்லாம் விளங்கியது.

(20-31) : வையை ஆற்றின் வெள்ள வருகை மேலும் நீராடக்கரையை அடைந்த மகளிர்களுள் தோழியர் ஒரு காதல் பரத்தையைச் சூழ்ந்து நின்று மூங்கிலால் ஆன துருத்தியினால் அரக்கு நீரை வீசினர். அப்பரத்தை தன் தெங்கிளங்காயைப் போன்ற முலைகளின் மீது பட்ட அதனைத் துடையாதவளாய் விள்ங்கினாள். தன் பெரிய ஆடையின் முன்தானையில் ஒற்றினாள். அவ்வமயத்தே அக்காதல் பரத்தையிடம் தலைவன் வந்தனன். அவனை அந்தத் தோழியர் கண்டனர்.. அவர்கள் பொய்யாய் அத்த தலைவனை நோக்கி, யைனே! இவள் பூப்பு எய்தினாள். ஆதலால் அவளை அணுகாதத! நீங்கு என்றனர். ஆயினும் தோழியர் செய்த விளையாட்டால் தோன்றி நடைப்புடனே அவ்விடத்தினின்றும் நீகிப் பெரிய கடலில் புகுதற்கு விரையும் வையை ஆற்று நீர் போல். விரைந்து அப்பரத்தையுடன் இல்லலதில் கூடி மகிழும்படி சென்றான். அவளது மார்பில் பட்ட குருதி நறம் உடைய அரக்கு நீரை நன்க துடைத்தான். அவளைத் தழுவினான். அத்தோழியர் இல்லத்திலா

உன்ன முதிய பரத்தையர்க்கு அந்த விளையாட்டைக் கூறினர். நகைத்தலுக்காக தம் நங்கை பூப்பு எய்தினாள் அவள் பொலிவுடையவள் ஆகுக என வாழ்த்தினர். அதைக் கேட்ட காதற் பரத்தைக்கு நாணம் உண்டாகியது.

(32-38) : சைய மலையினின்றும் இழிந்த அரவி போந்து வையாற்றின் இர கரைதோறும் உள்ள மலர்க்கொத்துகள் நிறைந்த மரத்தைச் சேர்ந்து அவற்றின் மல் உதிர்ந்தமையாலே அழகை அடைந்தது. மேலும் தேன் சேர்ந்த குளிர்ந்த மலர்களும் ஆடவர் அகன்ற மார்பிலிருந்து சேர்ந்த மலர்களும் இதழ்களும் பொருந்தப்பெற்றது. முத்தைப் பொன்று விளங்கும் மீன்களை உடைய வானத்தில் உள்ள பெருகிய அகன்ற கங்கை ஒழுகும் கூற்றை ஒத்தல் வண்டுகள் இசைபாடும் இயல்பு இவ்வையை ஆற்றுக்கு எக்காலத்திற்கும் பொருந்தும்.

(39-47) : மங்கையரின் மை பூசப்பெற்ற கண் என்னும் கெண்டை மீகள் உண்ணல், நீரில்ஆடுதல், காதலருடன் ஊடும் என்னும் மூன்று காரணங்களாலும் ஏற்கனவே சிவந்த நிறம் மேலும் சிவக்கும். வண்டுக்கூட்டம் தன் வாயில் சூழ்ந்து மொய்க்கும், கூந்தலில் உள்ள பூவில் இருந்து தேன் துளிக்கவும். ஒரு தலைவன் நீரில் ஆடும் பரத்தையரை மீண்டும் தழுவுவான். பனியால் வளைந்து உலர்ந்தபின் நிமிர்ந்த மூங்கில் காற்றால் தள்ளுதலால் உயர்ந்து தாக்குதலால் தன்னிடத்தே உள்ள தேன் ஒழுகும் மலையினது தோற்றம் போல் விளங்கும். இவ்வாறு தோன்றச் செய்தல் பாண்டியது வையை ஆறின் இயல்பாகும்.

(48-49) : மேகம் மலையில் முழங்கும் அவ்வளவிலேயேயிவ்வில்புடைய வையை ஆற்றில் பெருகும் இனிய நீரின் அலைகள் கரையில் மோதி ஆரவாரம் செய்யும்.

(50-53) : வையையாறே! தலையில் மார்பில் மாலையுடையவராய் ஆடவரும் மகளிரும் பெருள்களைத் தானம் பண்ணி, அதன் பயனான போகத்தை அனுபவிக்க வேண்டி நாள்தோறும் தன்னிடம் நீராடுபவர். ஆதலால் அவர் உனக்குக் கொணரும் பொருளான பொன்மீன் சந்தனக்குழம்பு எழுப்பும் அகிற் புகையும் நினக்குத் ரும் உண்டியும் குறையாமல் மழை நிரம்பப் பெய்ய, நினக்கு அம்மழையினால் ஏற்படும் வெள்ளம் பெருகி எக்காலத்தும் வற்றாது நிறைவதாகுக.

11.9.பாடல் : 20

பாடியவர் : நல்லந்துவனார் பண் அமைத்தவர் : நல்லச்சுதனார்

பண் : காந்தாரம்

கடல் குறைபடுத்த நீர் கல் குறைபட எறிந்து,
உடல் ஏறு உருமினம் ஆர்ப்ப, மலை மாலை
முற்றுபு முற்றுபு, பெய்து சூல் முதிர் முகில்
பொருது இகல் புலி போழ்ந்த பூ நுதல் எழில் யானைக்
குருதி கோட்டு அழி கறை தெளி பெறக் கழீஇயின்று,
காலைக் கடல் படிந்து காய் கதிரோன் போய வழி

குறிப்புகள்

மாலை மலை மணந்து மண் துயின்ற கங்குலான்
வான் ஆற்றும் மழை தலைஇ மரன் ஆற்றும் மலர் நாற்றம்,
தேன் ஆற்றும் மலர் நாற்றம், செறு வெயில் உறு கால
கான் ஆற்றும் கார் நாற்றம் கொம்பு உதிர்த்த கனி நாற்றம்
தான் நாற்றம் கலந்து உடன் தழீஇ வந்து தரூஉம் வையை.
தன் நாற்றம் மீது, தடம் பொழில் தான், யாற்று
வெந்நாற்று வெசனை நாற்றம் குதுகுதுப்ப,
ஊர் ஊர் பறை ஒலி கொண்டன்று உயர் மதிலில்
நீர் ஊர் அரவத்தால் துயில் உணர்பு எழீஇ,
திண் தேர்ப் புரவி வங்கம் பூட்டவும்,
வங்கப் பாண்டியில் திண் தேர் ஊரவும்,
வயமாப் பண்ணுந மதமாப் பண்ணவும்,
கயமாப் பேணிக் கலவாது ஊரவும்,
மகளிர் கோதை மைந்தர் புனையவும்,
மைந்தர் தண் தார் மகளிர் பெய்யவும்,
முந்துறல் விருப்பொடு முறை மறந்து அணிந்தவர்,
ஆடுவார் பொய்தல் அணி வண்டு இமிர் மணல்
கோடு ஏறு எருத்தத்து இரும் புனலில் குறுகி,
மாட மறுகின் மருவி மறுகுற,
கூடல் விழையும் தகைத்து தகை வையை
புகை வகை தைஇயினார் பூங்கோதை நல்லார்,
தகை வகை தைஇயினார் தார்
வகைவகை தைஇயினார் மாலை மிக மிகச்
சூட்டும் கண்ணியும் மொட்டு வலையமும்
இயல் அணி அணி நிற்ப ஏறி அமர் பரப்பின்
அயல் அயல் அணி நோக்கி ஆங்கு ஆங்கு வருபவர்
இடு வளை ஆரமோடு ஈத்தான் உடனாக,
கெடு வளை பூண்டவள் மேனியில் கண்டு
நொந்து “அவள் மாற்றாள் இவள்” என நோக்க,
“தந்த கள்வன் சமழ்ப்பு முகம் காண்மின்
செருச் செய்த வாளி சீற்றத்தவை அன்ன
நேர் இதழ் உண்கணார் நிரை காடாக,
ஓடி ஒறித்து ஒய்யப் போவாள் நிலை காண்மின்”
என ஆங்கு,
ஒய்யப் போவாளை. “உறழ்ந்தோள் இவ் வாணுதல்”
வையை மடுத்தால் கடல் எனத் தெய்ய,
நெறி மணல் நேடினர் செல்ல, சொல் ஏற்று
செறி நிரைப் பெண் வல் உறழ்பு “யாது தொடர்பு?” என்ன
மறலினாள் மாற்றாள் மகள்.

வாய் வாளா நின்றாள்,
செறி நகை சித்தம் திகைத்து,
ஆயத்து ஒருத்தி, அவளை, “அமர் காமம்
மாயப் பொய் கூட்டி மயக்கும் விலைக் கணிகை!
பெண்மைப் பொதுமைப் பிணையிலி! ஐம்புலத்தைத்
துற்றவ துற்றும் துணை இதழ் வாய்த் தொட்டி!
முற்றா நறு நறா மொய் புனல்ஆட்டி,
காரிகை நீர் ஏர், வயல் காமக் களி நாஞ்சில்,
மூரி தவிர முடுக்கு முது சாடி
மட மதர் உண்கண் கயிறாக வைத்துத்
தட மென் தோள் தொட்டு தகைத்து, மட விரலால்
இட்டார்க்கு யாழ் ஆர்த்தும் பாணியில், எம் இழையைத்
தொட்டு, ஆர்த்தும் இன்பத் துறைப் பொதுவி! கெட்டதைப்
பொய்தல் மகளிர் கண் காண இகுத்தந்து, இவ்
வையைத் தொழுவத்துத் தந்து, வடித்து இடித்து
மத்திகை மாலையா மோதி, அவையத்துத்
தொடர்ந்தேம் எருது தொழில் செய்யாது ஓட
விடும் கடன் வேளாளர்க்கு இன்று படர்ந்து, யாம்,
தன் மார்பும் தண்டம் தரும் ஆரத்தாள் மார்பும்
நின் மார்பும் ஓர் ஒத்த நீர்மைய கொல்?” என்னாமுன்,
தேடினாள் ஏச, சில மகளிர் மற்று அதற்கு
ஊடினார், வையை யகத்து,
“சிந்திக்க தீரும் பிணியாட் செறேற்க்
மைந்து உற்றாய் வெஞ்சொல் மட மயிற் சாயலை
வந்திக்க வார்” என, மனத் தக்க நோய் இது

“வேற்றாரை வேற்றார் தொழுதல் இளிவரவு
போற்றாய் காண் அன்னை! புரையோய்! புரை இன்று
மாற்றாளை மாற்றாள் வரவு”
“அ……. சொல் நல்லவை நாணாமல்
தந்து முழவின் வருவாய் நீ வாய்வாள்
எந்தை எனக்கு ஈத்த இடு வளை, ஆரப் பூண்
வந்த வழி நின்பால் மாயக் களவு அன்றேல்,
தந்தானைத் தந்தே தருக்கு”.
“மாலை அணிய விலை தந்தான் மாதர் நின்
கால சிலம்பும் கழற்றுவான் சால
அதிரல் அம் கண்ணி! நீ அன்பன் எதற்கு அன்பன்
கதுவாய் அவன் கள்வன் கள்வி நான் அல்லேன்”.

என ஆங்கு,
“வச்சிய மானே! மறலினை மாற்று உமக்கு
நச்சினார் ஈபவை நாடு அறிய நும்மவே”
“சேக்கை இனியார் பால் செல்வான் மனையாளால்
காக்கை கடிந்து ஒழுகல் கூடுமோ? கூடா்
தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்
இகழினும் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவார்
நிகழ்வது அறியாது நில்லு நீ, நல்லாய்
மகளிரை மைந்துற்று அமர்பு உற்ற மைந்தர்
அகலம் கடிகுவேம் என்பவை யார்க்காணும்
முடி பொருள் அன்று முனியல் முனியல்!
கடவரை நிற்குமோ காமம்? கொடி இயலாய்”
என ஆங்கு,
இன்ன துனியும் புலவியும் ஏற்பிக்கும்
தென்னவன் வையைச் சிறப்பு
கொடி இயலார் கை போல் குவிந்த முகை,
அரவு உடன்றவை போல் விரிந்த குலை,
குடை விரிந்தவை போலக் கோலும் மலர்.
சுனை கழிந்து தூங்குவன நீரின் மலர்
சினை விரிந்து உதிர்ந்த வீ, புதல் விரி போதொடும்,
அருவி சொரிந்த திரையின் துரந்து,
நெடு மால் சுருங்கை நடுவழிப் போந்து.
கடு மா களிறு அணத்துக் கை விடு நீர் போலும்

நெடு நீர் மலி புனல், நீள் மாடக் கூடல்
கடி மதில் பெய்யும் பொழுது.
நாம் அமர் ஊடலுரும் நட்பும் தணப்பும்,.
காமமும் கள்ளும் கலந்து உடன் பாராட்ட,
தாம் அமர் காதலரொடு ஆடப் புணர்வித்தல்,
பூ மலி வையைக்கு இயல்பு.

தெளிவுரை :

(1-5) : சூல் முதிர்ந்த மேகம், மலை ஒழுங்கைச் சூழ்ந்து சினம் கொள்ளும் இடியேற்றுக் கூட்டம் ஆராவரிக்கும் படி கடல் வற்றிப்போக முகந்து கொண்டு வந்த நீரை அம்மலையின்து கற்கள் துண்டாகும்படி வீசிப் பெய்து தன்னுடன் போரிட்டு மாறுப்ட்ட புலியைக் குத்திப் பிளந்த பொலிவுடைய நெற்றியை உடைய கொம்பில் உள்ள குருதியால் மிக்க களங்கத்தை அக்கோடு தெளிவு பெறுமாறு கழுவியது.

(6-11) : வையை ஆறு மேகமானது காலையில் கடலில் படிந்து அது குறையுமாறு மொண்ட நீருடன், காயும் ஞாயிறு போனவழியே மேற்குத்

சங்க இலக்கியம்

குறிப்புகள்

திசைக்குப் போய், மாலை நேரத்தில் மலையை அடைந்து வாழும் உயிர் எல்லாம் உறங்கும் இரவில் தான் உறங்காமல் மழை பெய்தலால் அந்நீருடன் மரங்கள் தரும் மலரின் மணமும், மலர்கள் தரும் தேனின் மணமும், சினந்து சுடும் வெயிலையும் மிக்க காற்றையும் உடைய காடுகள் அளிக்கும் வெங்கார் மணமும், மரத்தின் கொம்புகள் கனிகளின் மணமும் ஆகிய இம் மணங்களை ஒருசேரக் கலந்து கொண்டு வந்து பிறர்க்குத் தரும்.

(12-32) : வையை ஆற்றின் இரண்டு கரைகளிலுதம் உள்ள சோலையின் மணத்துக்கு மேலாக அந்த வையையின் வெம்மையால் தோன்றும் வெங்கார் மணத்தை அனுபவித்துக் ஊர்கள் தோறும் அந்த புதுநீர் வருகையை மக்களுக்கு உணர்துவதற்காகப் பறை ஒலித்தது. மதுரை நகரத்ல் உள்ள மக்கள் உயர்ந்த மதிலிடத்தில் உள்ள சுருங்கையில் புகுந்து ஓடியது. அப்போது ஏற்பட்ட ஒலியால் உறக்கம் நீங்கி எழுந்தனர். திண்ணிய தேரில் வேண்டிய குதிரையை பூட்டி அதில் ஏற முயன்றனர். பள்ளியோட வண்டியில் ஏற எண்ணுபர் எருதுகளைத் தேரில் பூட்டி அதில் ஏறிச் செலுத்தினர். வலிய குதிரைகளை அலங்கரித்தற்குரிய கலனை யானைகளுக்கு ஒப்பனை செய்தனர். சிலர் இவற்றை ஒப்பனை செய்யாமல் ஏறிச்செலுத்தினர். பெண்டிர் அணியும் அணியை ஆடவர் அணிந்தனர். ஆடவர் அணியும் அணியை பெண்டிர் அணிந்தனர். இப்படிப் புதுநீர் வருகையை ஆசையால் ஊரும் மரபும் அணியும் மரபும் மறந்துவிட்டனர் மக்கள் எல்லாம்.

(23-36) : விளையாடும் மகளிர் இழைத்த சிற்றில் வண்டுகள் மொய்க்கும். முன்பு உரைத்தப்படி முறை மறந்து அணிந்து கொண்டு முன்னால் சென்றவர் போக மற்ற மதுரை மக்கள் மாடங்கள் உள்ள தெருவில் வந்தனர். போக முடியாமல் வருந்தினர். பூமாலை மணம் பெறுதற்குப் புகை ஊட்டிய வகையால் சூடிய மகளிரும் மலர் மாலைகளை அணிந்து கொண்ட மைந்தரும். பலவகையான மாலைகளை அணிந்து உச்சிச் சூட்டும் கண்ணியும் பெரிய வளையமுமாய் ஆன அணிகளை உடைய கூட்டம் மேலும் கரைப் பரப்பில் ஏறினர். அவ்வாறு நின்றவருள் சிலர் மற்றவர் அணிந்துள்ள அணிகளை சுற்றி வந்து பார்த்தனர். அவர்களுள் ஒரு தலைவன் தலைவிக்குரிய அணிகளை ஒரு பரத்தைக்கு தன் தலைவி அறியாமல் தந்திருந்தான். ஆனால் காணமால் போனதாகச் சொல்லப்பட்ட தலைவியின் அணிகளை தோழிகள் பரத்தையிடத்தே கண்டனர். அதைச்சுட்டிக்காட்டி தம்முள் உரையாடினர். இதோ இந்த அணிகலன்களைத் திருடி இவளுக்குக்கொடுத்த கள்வனின் முகத்தையும் பாருங்கள்! இவை நம் தலைவியின் அணிகலன்களே! ஐயம் இல்லை! என்றனர்.

(37-47) : மேற்கண்ட தலைவனின் நிலை பற்றத் தோழியர் பேசிக் கொண்டிருக்கும் போதே. அதை அறிந்த பரத்தை அம்பு போன்ற கண்களை உடைய மங்கையர் கூட்டத்துடன் தான் மறைந்து பொள்வதற்குரிய காடாக்

கருதி புகுந்தாள். ஆனால் தோழியர், அப்பரத்தையின் நிலைமையையும் காணுங்கள், அவள் அணிந்துள்ள அணிகள் நம் தலைவியினுடையதே! என்று கூறினர். அவ்விடத்தில், வையை யாறு கடலில் சென்று புகுந்தது போல் செறிந்த அம்மங்கையர் கூட்டத்துள் நுழைந்த பரத்தையே தலைவிக்கு மாற்றாள் என்று ஐயம் தெளிந்தனர். தோழியர் பின் தொடர்வதைக் கண்ட பரத்தை துணிவுடன் பேச முனைந்தாள். அவளின் துணிவானப் பேச்சைக் கேட்ட தலைவி உள்ளம் திகைத்து நின்றாள்.

(48-54) : அவ்வாறு எதிர்த்தபோது ஒரு தோழி, அப்பரத்தையை விரும்பும் காம இன்பத்தைப் பெரிய பொய்யுடன் கலந்து அதைக் கொள்ள வரும் காமுகரை மயக்கம் விலைத் தொழிலை உடைய கணிகையே! நின் பெண் இன்பம் பலருக்கம் பொதுவுடையது. ஆதலால் ஒருவராலும் பேணப்படாதவளே! ஐந்து பொறிகளால் அனுபவிக்கப்படும் ஐந்து புலன்களை மட்டுமே நுகரும் இயல்பு கொண்ட காமப்பன்றிகள் நுகர்தற்குரிய இரண்டு உதடுகளை உடைய தொட்டி போன்றவளே காம நெறியான கலப்பையைக் கட்டி எம் எருது சோம்பிக் கிடக்காமல் உழும் படைச்சாலே!

(55-63) : மடப்பம் பொருந்திய மதர்த்த மை பூசப்பட்ட கண்களைக் கயிறாகக் கொண்டு தறியில் கட்டித் தடுத்து நிறைய பொருள் தந்தவர்க்குக் காம இன்பத்தைத ஊட்டடும் போதே, எம் அணிகளை அணிந்து கொண்டு ஆன அழகையும் காமுகர்க்கு ஊட்டும் இன்பம் அளித்தலில் இந்த வையைத் துறையைப் போல்ல பொதுவானவளே! ஏடி!தீய எண்ணம் உடைய எருதைத் தேடிக் கண்டுபிடித்து இந்த விளையாட்டு மகளிர் கண்கள் காணும்படி அதனை வணங்கி கொணர்ந்த இந்த வையை ஆறு உரப்பி. மாலையினையே சம்மட்டியாய்க் கொண்டு அடித்து, இந்த வழக்கை உரைத்தற்குரிய அறங்கூறு அவையத்தில் உள்ளவர் எல்லாம் அ.்.து எம் எருது என்பதை அறியும்படி செய்ய யாம் நின்னைத் தொடர்ந்து வந்தோம். ஏனென்றால் வேளாளார்க்குத் தம்தம் எருதைத் தொழில் செய்யாது பிறரிடம் போய் தொழில் செய்யும்படி ஓடவிடுவது முறை அன்று.

(64-73) : தனக்குரிய தலைவன் மார்பை நினக்குத் தண்டமாகத் தரும் முத்துமாலையை உடைய எதம் தலைவியின் மார்பும் அவனது முத்துமாலையைக் களவினால் அணிந்து கொண்டிருக்கும் நின் மார்பும் ஒத்த தன்மை கொண்டனவோ? என்று தோழி ஒருத்தி கூறினாள். அவள் அப்படிக் கூறுவதற்கு முன்பு, அத்தோழியால் தேடப்பட்ட பரத்தை அவளது வசையைப் பொறுக்காமல் தலைவியின் மேல் வசைப்பாடினாள். அப்போத அந்தத உரையாடலைக் கேட்டபடி நின்ற முது மகளிருள் சிலர், பரததையை வெறுத்தவராய் ஏடி, கற்புடைமையால் எண்ணிய அளவில் பாவரம் நீங்கம் தன்மை கொண்ட குலமகளை இங்ஙனம் சினவாதே! நீ கொடிய சொல்லைச் சொல்லிப் பேதைமை ஆயினாய். இந்தப் பாவம் நீங்கும் பொருட்டு மடப்பம் உடைய மயில் போன்ற தலைவியை வணங்க செய்வாய்! என்றாள். அப்பரத்தை இது என்றைக்கும் நிலைத் துன்பமாய்

முடிந்தது எனத் தனக்குள் கூறினாள். பின்னர், அம்முது மகளிருள் ஒருத்தியை நோக்கி, அன்னையே! பகைவரைப் பகைவர் வணங்குதல் இழிந்த செயலாகம். அப்படியே மாற்றாளை மாற்றாள் வணங்குதல் பெருமையற்ற செயலே ஆகும். என்றாள்.

(74-83) : ஏடி! வெட்கம் ஒன்றும் இல்லாது அவையில் சொல்லிக் கூத்தாடுதற்கு மத்தளத்துடனே வரும் தன்மை உடையாய் நீ! நின் பெருமையை எடுத்துக் கூற வேண்டா! எமக்குச் சீதனமாக வந்த அணிகள் உமக்குத் வந்த முறையினை கூறு. மேலும் உனக்குத் தந்தவன் ஒருவன் இருக்க வேண்டுமன்றோ! அவனை எமக்குக் கூறிப் பின்பு நீ மேம்பாடு உடைய ஆயின் ஆகுக! என்றாள் தலைவி. அழகிய மோசி மல்லிகை மாலையை அணிந்த மங்கையே! நீ பெரிதும் அன்பு பூண்டவன் என்னிடம் அன்பு கொண்டவன். ஆதலால் இவ்வளையலையும் முத்துமலையையும் புணர்ச்சிக்கு விலையாய் எனக்குத் தந்தான். அழகுடையவளே! நான் கள்வி அல்லேன். அறிவாய்! நின் காலில் உன்ன சிலம்புகளையும் எனக்குத் தரும் பொருட்டுக் கழற்றும் தன்மை உடையவன் அவனே கள்வன். நீ அவனை பிடிப்பாயாக! என்று பரத்தை உரைத்தாள்.

(84-97) : ஆடவரை வசியப்படுத்தும் மான் போன்றவளே நீ எதிர்த்தலைக் கைவிடுவாய். உம்மை விரும்பிய காமுகர் உமக்குத் தந்த பொருள்க்ள உமக்கு உரியவே ஆகும் என்று பரத்தையிடம் ஒருத்தி ஒரைத்தாள். நங்கையே! உலக இயல்பை அறியாமல் பரத்தையை சினவாதே! ஆடவரின் காமம் நிற்கக்கூடிய இடத்திலேயே நிற்கக் கூடியது இல்லை. புணர்ச்சி இனிமை மிக்க பரத்தையிடமே செல்வர். தாம் காமத்தால் மயக்கம் அடைந்து பரத்தையரை விரும்பி அவரைச் சேர்ந்த ஆடவரின் மார்பை இனித் தழுவோம் என இருத்தல் குலமகளிர் எவர்க்கும் முடியக் கூடிய செயல் அன்று, என்று அவள் தலைவியை ஆற்றுவித்தாள். இவ்வில்புடைய துனியையும் ஊடலையும் பாண்டினின் வையை ஆற ஏற்க செய்யும சிறப்புக்கொண்டதாகும்.

(98-108) : பூங்கொடி போன்ற அழகையுடைய மகளிரின் குவிந்த கை போன்ற காந்தள் அரும்புகளும், பாம்ப சினந்து படம் விரித்தாற் போல் இதழ் விரிந்த காந்தள் மலரும். குடை விரித்தாற்போல் விரிநித காந்தள் மலரால் சுனைகளினின்றும் கழிந்து கீழே விழுவனவாய நீர்ப்புக்களும், மரக் கொம்புகளில் மலர்ந்த உதிர்ந்த பூக்களும். புதர்களில் மலர்ந்து மல்களும் ஆகிய மலையினின்றும் வீழும் அருவி கொணர்ந்து தன்னம் சொரிந்த மல்லகளை வையை ஆறு மதுரைக்கு காப்பாய் உள்ள மதிலில் உள்ள பெரிய சுருங்கையூட வந்து மிக்க நீரைச் சொரியம் போது அந்த நீர் கடிய விலங்காகிய யானை தன் கையை உயரத் தூக்கிக் கீழே விடும் நீரை ஒத்து விளங்கியது.

(108-111) : ஊடலும் கூடலும் தலைவியன் அச்சம் தங்குவதற்கு இடமான பிரிவும் ஆகியவற்றைக் காமத்தையும் கள்ளையும் யாவரும் பாராட்டும்படி தாம் விரும்பின காதலரோடு அன்பால் நீராடும்படி முன்பு

பிரிந்தவரைக் கூட்டுதல், மலர்கள் மிக்க இந்த வையை ஆற்றுக்கு இயல்பாகும்.

குறிப்புகள்

## 11.10.பாடல் : 22

பாடியவர் மற்றும் பண் அமைத்தவர் பெயர் அறியப்படவில்லை

ஒளிறு வாட் பொருப்பன் உடல் சமத்து இறுத்த
களிறு நிரைத் தவைபோல் கொண்மூ நெரிதர,
அரசு படக் கடந்த ஆனாச் சீற்றத்தவன்
முரசு அதிர்பவை போல் முழங்கு இடி பயிற்றி,
ஒடுங்கார் உடன்றவன் தானை வில்விசை
விடும் கணை ஒப்பின் கதழ் உறை சிதறூஉ
கண் ஒளிர் எ.்.கின் கடிய மின்னி, அவன்
வண்மைபோல் வானம் பொழிந்த நிரு மண் மிசை
ஆனாது வந்து தொகுபு ஈண்டி மற்று அவன்
தானையின் ஊழி தாவூக்கத்தின்

போன நிலம் எல்லாம் போர் ஆர் வயல் புகுத
…………. நீக்கிப் பு ………………
கான மலைத்தரை கொன்று மணல் பினறி
வான மலைத்த…..வ.
……………. லைத்தவ மண முரசு எறிதர,
தானைத் தலைத்தலை வந்து மைந்து உற்று
பொறிவி யாற்றுறி, துவர், புகை, சாந்தம்
எறிவன எக்குவ ஈரணிக்கு ஏற்ற
நறவு அணி பூந்துகில் நன் பல ஏந்தி,
பிற தொழின…ம் பின் பின் தொடர
செறி வினைப் பொலிந்த செம் பூங் கண்ணியர்,
ஈர் அமை வெட்சி இதழ் புனை கோதையர்,
தார் ஆர் முடியர், தகைகெழு மார்பினர்,
மாவும் களிறும் மணி அணி வேசரி
காவு நிறையக் கரை நெரிபு ஈண்டி

வேல் ஆற்றும் மொய்ம்பனின் விரை மலர் அம்பினோன்
போல் ஆற்று முன்பின் புனை கழல் மைந்தரொடு
தார் அணி மைந்தர் தவப் பயன் சான்ம் எனக்
கார் அணி கூந்தல், கயற்கண், கவிர் இதழ்,
வார் அணி கொம்மை, வகை அமை மேகலை,
ஏர் அணி இலங்கு எயிற்று இன்னகையவர்,
சீர் அணி வையைக்கு அணி கொல்லோ? வையை தன்
நீர் அணி நீத்தம் இவர்க்கு அணி கொல்? எனத்

தேருநர் தேருங்கால், தேர்தற்கு அரிது காண்
தீரமும் வையையும் சேர்கின்ற கண் கவின்.
மண் கணை முழவின் இன் கண் இமிழ்விற்கு
எதிர்வ பொருவி…ம் ஏறு மாறு இமிழ்ப்ப,
கவர் தொடை நல் யாழ் இமிழ, காவில்
புகர் வரி வண்டினம் பூஞ்சினை இமிர,
ஊது சீர்த் தீம் குழல் இயம்ப மலர் மிசைத்
தாது ஊது தும்பி தவிர்பு அல இயம்ப,
துடிச் சீர் நடத்த வளி நடன்
மெல் இணர்ப் பூங்கொடி மேவர நுடங்க,
ஆங்கு அவை தத்தம் தொழில் மாறு கொள்ளும்,
தீம் புனல் வையைத் திருமருதமுந்துறையால்,
கோடுளர் குரல் பொலி ஒலி துயல் இருங்கூந்தல்,
புரை தீர் நெடு மென்
தோள் தாழ்பு தழை மலர் துவளா வல்லியின்,
நீள் தாழ்ப தோக்கை, நித்தில வரிச் சிலம்பு,

தெளிவுரை :

(1-11) : வெற்றி வாளையுடைய பாண்டிய மன்னன் பகைவர் இறைப் பொருளாகத் தந்த களிற்று யானைகளை வரிசையாய் நிறுத்தியதைப் போல் மேகம் வானில் நெருங்கும். அம்மேகங்கள், சினம் உடைய பாண்டியனின் வெற்றி முரசுகள் போல் முழங்கம். பாண்டியனின் வில்லினின்றும் விசையுடன் செல்லும் அம்புக்கு ஒப்பாகும்படி நீர்த் துளிகளை அம்மேகங்கள் சிதறும். அவன் ஏந்திய வேல்போன்று மின்னும், அவன் கொடைத் தன்மையைப் போல் வானித்தினின்று பெய்த மழை நீரை உள்ளத்து எழுச்சியால் பகைவர் நாட்டில் போர் முறைமையால் சென்ற அப்பாண்டியனின் படைகளைப் போன்று பாண்டிய நாட்டில் மேன்மேலும் வந்து கூடிப்பெருகி அந்நாட்டு வயல்களில் உள்ள நிலம் எங்கம் வைக்கோற் போர்வை போன்று கழனிகளில் புகும்.

(12ஆம் அடி முதல் 17 ஆம் அடியின் முதல் இரண்டு சீர் வரையுள்ள சொற்க்ள பெரிதும் சிதைந்தும் காணப்பட்டுள்ளதால் அவற்றிற்கு உரை இல்லை)

(17-25) பத்து வகைப்பட்ட துவரால் ஆக்கப்பட்ட நீர், அகில் முதலிய நறுமணப் புகைக்கு ஏற்ற பொருள்கள். சந்தனம் குங்கும் முதலியவற்றின் குழம்ப என்னும் மணப்பொருள்கள், சீசத் தக்கவையும் ஆன நீராடுதற்க ஏற்ற கருவிகள், நல்ல பல மற்றப்பொருள்கள், கள்ளும் அணிகலன்களும் பூத்தெதாழில் அமைந்த ஆடைகள் என்ற இவற்றை ஆடவரும் பெண்டிரும் கைக் கொண்டனராகப் பின்னே வர, மலரைச் செறிய வைத்துத் தொடுத்த செயலால் அழகுடைய சிவந்த மலர் மாலைகளை அணிந்தவரும், குளிர்ந்த வெட்சி மலரால் தொடுக்கப்படட மாலையையும்.

அழகு பொருந்திய மார்பை உடையவர் ஆகிய மதுரையில் உள்ள ஆடவரும் பெண்டிரும் மணியால் அலங்காரம் செய்யப்பட்ட குதிரை யானை கோவேறு கழுதை முதலிய ஊர்த்திகளில் ஏறி ஊர்ந்து வையை கரையானது நெறியும்படி வந்து சோலைகளில் புகுந்து நிரம்பின.

(26-35) : வேற்போரைச்செய்யும் தோளை உடைய முருகப்பெருமானைப் போல் வலியையும் வீரக்கழலையும் கட்டிய கால்களையும் உடைய ஆடவரும், பூக்களை அம்பாக் கொண்டு காமனைப் போன்று மாலையை உடைய ஆடவரும், மேகத்தின் அழகைக் கொண்ட கூந்தலையும் கயல்மீன போன்ற கண்ணையும் முருக்கம் பூப்போன்ற சிவந்த உதடுகளையும் கச்சினை அணிந்த கொங்கைகளையும் பல வகையானம கோத்த மேகலையையம் வரிசையாய் அமைந்த பற்கைளும் இனிய புன்முறுவலையும் உடைய மகளிரும் இயற்றிய தவத்தின் பயன் பெரிது எனப்பார்த்தவர் சொல்ல. இவ்வையை ஆற்றின் நீரால்ஆழகுற்ற வெள்ளம் இவர்க்கு அழகினை அளித்ததோ? என்ற ஐயம் கொண்டு தெளிவ கொள்ள முயல்பவர் ஆராயுங்கால் இரண்டடில் ஒன்றைத் தெளிநத: கொள்வதற்கு அரியதாகும்.

(36-45) : இனிய நீரையுடைய வையை ஆற்றில் உன்ள திருமருத முன்றுறையில் மண்ணாலாகிய திரண்ட குடமுழாவினது இனிய கண்ணில் எழும் ஒலிக்கு எதிர்வது போன்று முழங்கியது. கேட்பவரின் உள்ளம் கவரும் இயல்பை உடைய பாலைப் பண் கோவையையுடைய யாழ் இசைத்திட அந்த இசைக்கு மாறாகப் பூத்த கிளைகளில் புள்ளி வரி என்பனவற்றை உடைய வண்டுக் கூட்டங்கள் இசைக்கும். இசை வாணர்களால் எழுப்பப்படும் இனிய இசையையுடைய வேய்ங்குழல் ஒலிக்க, அதற்கு மாயறாக மல்களில் உள்ள தாதினைப்பாடும் தும்பிகள் இடைவிடாமல் ஒலிக்கும். ஆடும் மகளிரின் தாளத்துக்கு ஏற்பக் கூத்தாடுவதை நிகழ்த்த, அதற்க மாறாகக் காற்று என்ற கூத்தன் மென்மையான கொத்துக்களை உடைய மலர்க்கொடியைக் கண்டவர்க்கு விருப்பம் ஊற்பட ஆடும் . அங்குள்ள அக்கலைகள் ஒவ்வொன்றும் தத்தம் தொழிலுக்கு மாறான ஒவ்வொன்று கொண்ணட விளங்கும்.

(46-49) : மரத்தினது கொம்பில் தோன்றி அசையும் மலர்க்கொத்துகளால் பொலிந்து தழைத்த அசையும் கருமையான கூந்தலையுடைய குற்றம் இல்லாத தோளில் தாழ்ந்து தளிரும் பூவும் பொருந்திய ஆடும் கொடியைப் போன்று நீண்டு தாழ்ந்த தொங்கலுடன முத்தாகிய பரலை உடைய சிலம்பு…

## 11.11.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. மையோடக்கோவனார் பாடல் வழி தலைவியின் நீராடல் சிறப்பினை எடுத்துரைக்க.

2. கரும்பிள்ளைபூதனார் பாடல் எடுத்துரைக்கும் மகளிர் செயல்கள் யாவை?
3. வாயில் மறுத்த தலைவிக்கு தோழி அறிவுறுத்தியது யாது?
4. பாணன் தலைமகனுக்கு எடுத்துரைத்த செய்தி யாது?

**பெருவினா :**

5. வையை ஆற்றில் கரைபுரண்ட வெள்ளக் காட்சிகளை பரிபாடல் வழி நிறுவுக.
6. பரிபாடலில் உம்பாடப்பகுதியில் காணலாகும் இசைக்குறிப்புகளை தொகுத்துரைக்க.
7. பரிபாடலில் காணலாகும் உவமை நலன்களை சான்று காட்டி நிறுவுக.
8. பரிபாடல் பாடப்பகுதி வழியாக உணரலாகும் மகளிர் சிறப்புகள் யாவை?

## 11.12.தொகுத்துக் காண்போம். :

பரிபாடல் நூலில் வையை ஆற்றைப் பற்றி எட்டுப் பாடல்கள் உள்ளன. வையை ஆற்றின் சிறப்பு,. அக்கால உணவு, உடை, அணிகலன்கள், கடவுளர்கள், வழிபாட்டு முறைகள், விழாக்கள், விளையாட்டுகள், புதுப்புனலின் வருகை ஆகியவற்றை இப்பகுதியினால் அறியலாகின்றது.

## 11.13.மேலும் பயில்வதற்கான நூல்கள் :


- பரிபாடல் மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- பரிபாடல், புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- பரிபாடல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை-98

குறிப்புகள்

# கூறு-12-புறநானூறு- 151 முதல் 200 வரையிலான பாடல்கள்

## 12.1.முன்னுரை :

புறப்பொருள் தொடர்பான 400 பாடல்களால் அமைந்த நூல் புறநானூறு. 4 முதல் 40 அடி வரையிலான பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை 158 புலவர்களால் பாடப்பட்டுள்ளன. இந்நூலினைத் தொகுத்தவர் மற்றும் தொகுத்தோன் பற்றிய செய்தி கிடைக்கவில்லை. 160 பாடல்களை எழுதிய புலவர்களின் பெயர்கள் கிடைக்கவில்லை. 267, 268 ஆகிய பாடலகள் முழுமையாகக் கிடைக்கவில்லை. நம் பாடப்பகுதியில் 151 முதல் 200 வரையிலான பாடல்கள் மட்டும் இடம்பெற்றுள்ளன.

## 12.2.குறிக்கோள்கள் :

பழந்தமிழ் மக்களின் வீரவாழ்க்கையினையும், பண்பாட்டினக் உயர்வனையும் விளக்குகின்ற உயர்ந்த ஆவணமாகப் புறநானூறு திகழ்கின்றது. பழங்காலத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள், நடைபெற்ற போர்கள், அவைகள் நிகழ்ந்த இடங்கள், மன்னர்களின் ஈகை குணம். உலகத்தின் நிலையாமை போன்ற பல்வேறு கருத்துகள் அடங்கிய கருத்துப்பேழையை மாணவர்களுக்கு அறியச் செய்வதே இப்பகுதியின் முக்கிய குறிக்கோளாகும்.

## 12.3.பாடல் : 151

பாடியவர் : பெருந்தலைச் சாத்தனார் பாடப்பட்டோன் : இளவிச்சிக்கோ

திணை : பாடாண் துறை : இயன்மொழி வாழ்த்து

விச்சி என்பது நாடு. இளவிச்சிக்கோ என்பவன் அந்நாட்டின் அரசன். இவனும் இளங்கண்டீரக் கோவும் ஒருகால் ஒன்றாய் இருந்தனர். அப்போது அங்குப் வந்த புலவர் சாத்தனார் இளங்கண்டீரக்கோவை மட்டும் தழுவிக்கொண்டார். இந்நிகழ்வை அடிப்படையாகக் கொண்டது இச்செய்யுள்.

பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப,
வின்தோய் சிமைய விறல் வரைக் கவாஅன்
கிழவன் சேண் புலம் படரின், இழை அணிந்து,
புன்தலை மடபப்பிடி பரிசிலாகப்,
பெண்டிரும் தம் பதம் கொடுக்கும் வண் புகழ்க்
கண்டீரக்கோன் ஆகலின், நன்றும்
முயங்கல் ஆன்றிசின் யானே, பொலந்தேர்
நன்னன் மருகன் அன்றியும் நீயும்
முயங்கற்கு ஒத்தனை மன்னே, வயங்கு மொழிப்
பாடுநர்க்கு அடைத்த கதவின் ஆடு மழை
அணங்கு சால் அடுக்கம் பொழியும் நும்

*Self -Instructional Material*

மணங்கமழ் மால் வரை வரைந்தனர் எமரே.

முன்னெல்லாம் பாடும் புலவர் விரும்ப வானை அளாவிய உச்சியுடைய சிறந்த மலைப்பக்கத்தில், தம் கணவன் நெடுந்தொலை சென்றிருந்தால், அணியை அணிந்து புன்மையான தலையையுடைய மென்மையான பெண் யானையைப் பெரிசிலாக்க் கொண்டு மகளிரும் தம் தரத்தில் பரிசிலைத் தருவர். இத்தகைய வளமான் புகழ் பெருந்தியவன் காண்டீரக்கோ. பொன்னாலே செய்ப்பட்ட தேரையுடைய நன்னனின் மரபில் வந்தவன் நீ, இத்தகைய நீயும் தழுவிக் கொள்வதற்குப் பெருத்தமானவனே! ஆயினும் விளங்கும் மொழியுடைய பாடும் புலவர்க்கு அடைத்த கதவுடையது உன் நாடு.. அக்காரணத்தாலே, இயங்கம் மேகத்தையும் தெய்வத்தையும் உடைய பக்க மலையில், சொரியும் மணம் கமழும் உயர்ந்த மலையை எம் போன்ற புலவர் பாடாது விலகினார். எனவே உன்னை நான் தழுவவில்லை!

## 12.4.பாடல் : 152

பாடியவர் : வன்பரணர் பாடப்பட்டோன் : வல்வில் ஓரி

திணை : பாடாண் துறை : பரிசில் விடை

வல்வில் ஓரி என்பவன் வள்ளல்களுள் ஒருவன். கொல்லி மலைக்கும் அதனைச் சார்ந்த பகுதிக்கும் தலைவன். இவன்பெயர் ஆதன் ஓரி எனவும் வழங்கம். இவனது கொல்லி மலை சேர நாட்டில் நாமக்கல்லைச் சார்ந்த சேந்தமங்கலத்துக்கு அருகில் உள்ளது. இப்பாடலில் ஓரியின் வில்லாற்றலும் கொடைத் திறமும் புலவரால் பாடப்பட்டுள்ளது.

வேழம் வீழ்த்த விழத் தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும் பிறிது உறீஇப்,
புழல்தலை புகர்க் கலை உருட்டி, உரல் தலைக்
கேழல் பன்றி வீழ, அயலது
ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத்திருந்தோன்,
புகழ் சால் சிறப்பின் அம்பு மிகத் திளைக்கும்
கொலைவன் யார் கொலோ? கொலைவன் மற்று இவன்
விலைவன் போலான் வெறுக்கை நன்கு உடையன்
ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பின்,
சாரல் அருவிப் பய மலைக் கிழவன்
ஓரி கொல்லோ? அல்லன் கொல்லோ?
பாடுவல் விறலி! ஓர் வண்ணம் நீரும்
மண் முழா அமைமின்! பண் யாழ் நிறுமின்!
கண் விடு தூம்பின் களிற்று உயிர் தொடுமின்!
எல்லரி தொடுமின் ஆகுளி தொடுமின்!
பதலை ஒருகண் பையொன இயக்குமின்

மதலை மாக்கோல் கைவலம் தமின்! என்று
இறைவன் ஆகலின், சொல்லுபு குறுகி
மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பிக்,
கோவெனப் பெயரிய காலை, ஆங்கு அது
தன் பெயர் ஆகலின் நாணி மற்று யாம்
நாட்டிடன் நாட்டிடன் வருதும், ஈங்கு ஓர்
வேட்டுவர் இல்லை நின் ஒப்போர் என,
வேட்டது மொழியவும் விடாஅன், வேட்டத்தில்
தான் உயிர் செகுத்த மான் நிணப் புழுக்கோடு,
ஆன் உருக்கு அன்ன வேரியை நல்கித்
தன் மலைப் பிறந்த தாஇல் நன் பொன்,
பன் மணிக்குவை யொடும் விரைஇக் கொணம், எனச்
சுரத்து இடை நல்கியோனே, விடர்ச் சிமை
ஓங்கு இருங்கொல்லிப் பொருநன்,
ஓம்பா ஈகை விறல் வெய்யோனே.

யானையைக் கொன்று வீழ்த்திய சிறந்த அம்பு, பெரிய வாயை உடைய புலியை இறக்கச் செய்தது. பின் துளையுடைய கொம்பு பொருந்திய தலையைக் கொண்ட புள்ளி மான் கலையை உருட்டியது. அதன் பின் உரல் போன்ற தலையைக் கொண்ட பன்றியை விழச்செய்தது. பின்னும் அதற்குப் பக்கதில் இருந்த ஆழமான வலிய வில்லலல் உணடான வேளட்டையைச் செய்திருப்பவன். புகழ் பொருந்திய சிறப்புடைய அம்புத் தொழில்ல் மிகச் சிறப்புடையவன் யாரோ? அந்தக் கொலையில் வல்லவன் விலை காரணமாகக் கொன்றவன் இல்லை. அவன் மிக்க செல்வத்தை உடையவன் ஆவான். சந்தனம் பூசி உலர்ந்த அழகிய மார்பை உடையவன். விறலியே ! நான் பாடுவேன். ஒரு வண்ணம் நீங்களும் முழாவின் ஒரு பக்கத்தை டித்து வாசியுங்கள். யாழில் பண்ணை நிறுத்துங்கள். கண் திறக்கப்பட்ட தூம்பான ஆண்யானையின் கை போன்ற பெருவங்கியத்தை முழக்குங்கள். எல்லரி வாசியுங்கள். சிறு பறையை அடியுங்கள். பதலை எடின்ற வாத்தியத்தில் ஒரு பக்கத்தை மெல்லத் தட்டுங்கள், பிறப்புணர்த்தும் நம் கரிய கோலைக் கையில் கொடுங்கள், என்று இப்படிச் சொல்லி, (பாடப்படும் அவன்) தலைவனாதலால், இருபத்தோரு பாடல் துறையையும் பாடி முடித்துப்பின் கோவே உச்சிகளைக் கொண்ட உயர்ந்த கொல்லி மலைக்குத் தலைவனான பாதுகாவாத கொடைக் குணம் உடைய வெற்றியை விரும்பும் அந்த ஓரி, நாங்கள் உரைத்த பெயர் தன்னுடையதாதலால் நாணம் அடைந்தான். பின்பு நாங்கள் நாட்டின் இடந்தோறும் சென்று வருவோம். உன்னைப் போன்ற வேட்டுவர் ஒருவர் இங்கு எங்கும் இல்லை என்று நாங்கள் விரும்பியதைச் சொன்னோம். அதற்கு அவன் காலம் தாராதவனாய் வேட்டையில் தான் அடைந்த மானின் நிணத்துடன் கூடிய தசையின் புழுக்குடனே, பசு நெய்யை உருக்கியதைரப் போன்2 மதுவைத் தந்து, தன் மலையில் பிறந்த

குற்றமற்ற நல்ல பொன்னைப் பல மணிக் கூட்டத்துடன் கலந்து இவற்றைப் பெற்று கொள்ளுங்கள் எனக் கூறி கரத்தில் எங்களுக்குத் தந்தான்.



## 12.5.பாடல் : 153

குறிப்புகள்

பாடியவர் : வன்பரணர் பாடப்பட்டோன் : வல்வில் ஓரி

திணை : பாடாண் துறை : இயன்மொழி

மழை அணி குன்றத்துக் கிழவன், நாளும்
இழை அணி யானை இரப்போர்க்க ஈயும்,
சுடர்விடு பசும்பூண் சூர்ப்பு அமை முன் கை
அடு போர் ஆனா ஆதன் ஓரி
மாரி வண் கொடை காணிய, நன்றும்
சென்றது மன் எம் கண்ணுளங் கடும்பே,
பனி நீர்ப் பூவா மணிமிடை குவளை
வால் நார்த் தொடுத்த கண்ணியும் கலனும்
யானை இனத்தொடு பெற்றனர், நீங்கிப்
பசியார்ஆகல் மாறு கொல், விசி பிணிக்
கூடு கொள் இன் இயம் கறங்க,
ஆடலும் ஒல்லார் தம் பாடலும் மறந்தே?

மேகம் தவழும் மலைக்குத் தலைவன் நாற்தோறும் பட்டம் முதலிய அணிகளை அணிந்த யானையை இரப்பவர்க்கு அளிக்கும் கதிர் வீசும் பசிய பொன்னால் ஆன அணியையும் கடகம் சூடிய முன் கையையும் உடைய கொல்லும் போரையுடைய ஆதன் ஓரியினது, மழை போன்ற கொடையைக் காண்பதற்கு என் கூத்தர் சுற்றம் சென்றது. சென்ற பின்பு குளிர்ந்த நீரிலே பூவாத மணிகள் பதிக்கப் பெற்ற குவளைப் பூவை வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொன்னரி மாலையையும் மற்ற அணிகளையும் யானை அணிகளுடனே பெற்று நீங்கினர். பசவியாதவர் ஆயினர். ஆதலால், வாரால் வலித்துக் கட்டப்பட்ட பல இசைக் கருவிகளின் தொகுதி கொண்ட இனிய இயங்கள் ஒலிக்க, ஆடுதயையும் பாடுதலையும் செய்யாதவரானார். பாடுதலையும் மறந்தார்.

## 12.6.பாடல் : 154

பாடியவர் : மோசிகீரனார், பாடப்பட்டோன் : கொண்கானங்கிழான்

திணை : பாடாண் துறை : பரிசில் துறை

திரை பொரு முந்நீர்க் கரை நணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்தர், அதுபோல்
அரசர் உழையராகவும். புரைதபு
வள்ளியோர்ப் படர்குவர் புலவர், அதனால்,
“யானும் பெற்றது ஊதியம் பேறு யாது?” என்னேன்,
உற்றனென் ஆதலின் உள்ளி வந்தனனே
ஈயென இரத்தலோ அரிதே நீ அது
நல்கினும் நல்காய் ஆயினும் வெல்போர்

எறி படைக்கு ஓடா ஆண்மை அறுவைத்
தூ விரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண் பல இழிதரும் அருவி நின்
கொண்டு பெருங்கானம் பாடல் எனக்கு எளிதே.

அலைகள் அலைகின்ற கடலின் கலையில் சென்றாலும் (நீர் உள்ள இடத்தை) அறிந்தவரைக் கண்டால்,, நீர் வேட்கையைத்தணிக்கும் சிறியள நீரையே மக்கள் கேட்பர், அதுபோல, அறிவுடையார், வேந்தரிடத்தில் பகப்கத்தில் இருப்பவராயினும் குற்றம் அற்ற கொடைத் தன்மை கொண்டவரையே நாடிக்செல்வர். அதனால்ல, நானும் பெற்றதைப் பயனாக் கொண்டு, பெற்ற பொருள் சிறியதாக இருந்தாலுரும் இவலன் கொடுத்தது என்ன? என்று இகழ்ந்து பேசமாட்டேன். வறுமை அடைந்ததால் உன்னை நினைத்து வந்தேன். நீ அப்பரிசிலைத் தந்தாலும் தாராது போயினும்., எனக்குத் தருவாயாக என இரப்பது அரியதாகுமட∴. வெல்லும் போரில் எறியும் வடைக்கலத்துக்குப் புறங்கொடுத்து ஓடாத ஆண்மையையும் தூய் துகிலை விரித்தாற் போன்று நெருங்கி உச்சியினின்று பலவாக இறங்கும் குளிர்ந்த அருவியையுமுடைய நின் கொண்கானத்தைப் பாடுதல் எனக்கு எளியதாகும்.

## 12.7.பாடல் : 155

பாடியவர் : மோசிகீரனார் பாடப்பட்டோன் : கொண்கானங்கிழான்

திணை : பாடாண் துறை : பாணாற்றுப்படை

வணர் கோட்டுச் சீறியாழ் வாடு புடைத் தழீஇ
உணர்வோர் யார் என் இடும்பை தீர்க்க எனக்,
கிளக்கும் பாண! கேள் இனி! நயத்தின்
பாழ் ஊர் நெருஞ்சிப் பசலை வான் பூ
ஏர்தரு சுடரின் எதிர் கொண்டாஅங்கு,
இாலம்படு புலவர் மண்டை விளங்கு புகழ்க்
கொண்பெருங்காலத்துக் கிழவன்
தண் தார் அகலம் நோக்கின மலர்ந்தே.

வளைந்த கொம்பினையுடைய சிறிய யாழை உலர்ந்த இடைப்பக்கத்தில் வைத்துக் கொண்டு, ˙என் துன்பத்தைப் போக்க அறிபவர் யார் என்று நயமாகக் கூறும் பாணனே! நான் சொல்வதைக் கேள். பாழான ஊரில் நெருஞ்சியின் பொன் போன்ற நிறமுடைய பூ. தோன்றி வரும் ஞாயிற்றை எதிர் கொண்டதுபோல். வறுமையுடைய யாழ்ப்புலவரின் கையில் உள்ள ஏற்கும் பாத்திரம். விளங்கும் புகழினை உடைய மார்பை மலர்ந்து பார்த்தன.

## 12.8.பாடல் : 156

பாடியவர் : மோசிகீரனார் பாடப்பட்டோன் : கொண்கானங்கிழான்

திணை : பாடாண் துறை : இயன்மொழி

ஒன்று நன்குடைய பிறர் குன்றம் என்றும்
இரண்டு நன்கு உடைத்தே கொண்பெருங்கானம்

நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்து உணக் கிடப்பினும் கிடக்கும் அஃதான்று
நிறை அருந் தானை வேந்தரைத்
திறை கொண்டு பெயர்க்குஞ் செம்மலும் உடைத்தே.

மற்றவரின் மலைகள் கொடைத்தன்மை அல்லது விமை என்ற இரண்டில் ஒன்றினை உடையன. ஆனால், காண்கான மலை இரண்டு நன்மையை உடையது. அது, தன்னிடம் பரிசிலை விரும்பிப் போன இரப்பவர் காரணமாகத் தான் முன்பு அவர்க்குக் கடன் கொடுத்தாராலே வளைத்துக் டிகொள்ளப்பட்டுக் கிடந்தாலுர்ம் கிடக்கும். (இரவலர்க்கு கடன் தந்தவர், இரவலர் பரிசிலர் பெற்றதும் அதைத் தாம் பெற்றுச் செல்வதன் பொருட்டாகச் சூழ்ந்திருப்பர்.) அதுவே அல்லாது தடுத்து நிறத்துவதற்கரிய படையையுடைய மன்னரிடமிருந்து திறையைப் பெற்றுக் கொண்டு அவரைத் திரும்பிச் செல்லவிடுக்கும் தலைமையையும் உடையது.

## 12.9.பாடல் : 157

**பாடியவர் : குறமகள் இளவெயினி** **பாடப்பட்டோன் : ஏறைக்கோன்**

**திணை : பாடாண்** **துறை : இயன்மொழி**

‘ஏழற’ எனவும் இவன் வழங்கப்பெறுவான். இப்பெயர் இயற்பெயர் என்பர். இவன் குறிஞ்சி நிலத்துக்குத் தலைவன். காந்தள் மலர் மாலை சூடுதல் இவனுக்கு இயல்பு. குறவர்களுக்குத் தலைவன்.

தமர் தன் தப்பின் அது நோன்றல்லும்,
பிறர் கையறவு தான் நாணுதலும்,
படைப்பழி தாரா மைந்தினன் ஆகலும்,
வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்,
நம்மோர்க்குத் தகுவன அல்ல் எம்மோன்,
சிலை செல மலர்ந்த மார்பின், கொலை வேல்
கோடல் கண்ணிக் குறவர் பெருமகன்,
ஆடு ழை தவிர்க்கும் பயங்கெழு மீமிசை,
எல்படு பொழுதின் இனம் தலைமயங்கிக்
கட்சி காணாக் கட மான் நல் ஏறு
மட மான் நாகு பிணை பயிரின், விடர் முழை
இரும்புலிப் புகர்ப் போத்து ஓர்க்கும்
பெருங்கல் நாடன் எம் ஏறைக்குத் தகுமே.

தனக்கு நெருங்கியவர் பிழையைத் தனக்குச் செய்தால் அதைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிறரது வறுமைக்குத் தான் நாணம் கொள்ளுதலும் படையில் பிறரால் பழித்துக் கூறப்படாத வன்மை உடையவனாதலும், மன்னர் கூடிய அவைக் களத்தில் மேம்பட நடத்தலும்ம, உம்மால் மதிக்கப்படும் தலைவர்க்குத் தக்கவை அல்ல. எம் தலைவன், அம்பு எய்யவில்லை வளைத்தலால் அகன்றுள்ள மார்பையும், கொல்லும் வேலையும் காந்தள் மலரால் ஆன மாலையையும் கொண்ட குறவர்க்குத்

தலைவன். திரியும் மேகத்தைத் தன் உயரத்தால் தடுக்கும் பயன் மிக்பக மலை உச்சியில் கதிரவன் மறையும் மாமலைப் போதில், தன் இனத்தினின்று பிரிந்து போய்த் திரும்பத் தான் சேரும் இடத்தைக் காணாத காட்டில், ஆண் மான் இளமையுடைய தன் பெண் மானை அழைத்தால், அந்த ஓசையை மலைக்குகையில் இருக்கும் பெரும்புலியான புகர் நிறத்தையுடைய ஆண்புலி தன் காதுகளைத் தாழ்த்துக் கேட்கும். இத்தகைய இயல்புடைய பெரிய மலை நாடனான ஏறைக்கோனுக்கு அந்த இயல்புகள் பொருந்துவனவாகும்.

## 12.10.பாடல் : 158

**பாடியவர் : பெருஞ்சித்திரனார் பாடப்பட்டோன் : குமணன்**

**திணை : பாடாண் துறை : வாழ்த்தியியல், பரிசில், கடாநிலை**

குமணன் வள்ளல், முதிர மலையின் தலைவன். குறுநில மன்னன். முதிர மலை என்பது பழனி மலைத் தொடருள் ஒன்று. உடுமலைப்பேட்டையைத் தன்னகத்தே கொண்டது இந்நாடு. இவனைப் பெருஞ்சித்திரனார் பாடியுள்ளார். இப்பாடலில் பாரி முதலான வள்ளல்கள் எழுவர்க்குப் பின்பு கொடை பூண்டவனாக உள்ளான் குமணன் என்று பாராட்டியுள்ளார்.

முரசு கடிப்பு இகுப்பவும் வால் வளை துவைப்பவும்,
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்,
கறங்கு வெள் அருவி கல் அலைத்து ஒழுகும்
பறம்பின் கோமான் பாரியும், பிறங்கு மிசைக்
கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்,
காரி ஊர்ந்து பேர் அமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையனும்,
ஊராது ஏந்திய குதிரைக் கூர் வேல்
கூவிளங்கண்ணிக் கொடும் பூண் எழினியம்,
ஈர்ந்தண் சிலம்பின் இருள் தூங்கும் நளி முழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர் சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும், திருந்து மொழி
மோசி பாடிய ஆயும், ஆர்வமுற்று
உள்ளி வருநர் உவைல நனி தீரத்,
தள்ளாது ஈயும் தகை சால் வண்மைக்,
கொள்ளார் ஓட்டிய நள்ளியும், என ஆங்கு
எழுவர் மாய்ந்த பின்றை அழி வரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கு என விரைந்து, இவண்
உள்ளி வந்தனென் யானே, விசும்புறக்
கழை வளர் சிலம்பின் வழையொடு நீடி,
ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று,
முள் புற முது கனி பெற்ற கடுவன்

துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்,
அதிரா யாணர் முதிரத்துக் கிழவ!
இவண் விளங்கு சிறப்பின் இயல் தேர்க் குமண!
இசை மேந் தோன்றிய வண்மையொடு
பகை மேம்படுக, நீ ஏந்திய வேலே.

முரசு அடிக்கப்படசுவம், வெண்மையான சங்கு ஒலிக்கவும், மன்னருடனே போரிட்ட தலைமையுடைய பெரிய மலையில் ஒலிக்கும் வெண்மையான அருவி கல்லை உருட்டி ஓடுகின்ற பறம்பு மலைக்குத் தலைவனான பாரியும், உயரமான மலையுச்சியையுடைய கொல்லி மலையை ஆண்ட வலிய வில்லை உடைய ஓரியும், காரி என்ற பெயருடைய குதிரையைச் செலுத்திப் பெரிய போரை வென்ற மேகத் போன்ற கொடைத் தன்மையையும் மிக்க போரையுமுடைய மலையனும், செலுத்தப்படாத குதிரை என்னும் மலையையும் கூர்மையான வேலையும் வில்வ மாலையையும் வளைவான மாலையையுடைய எழினி அதியமானும், மிகக் குளிர்ந்த மலையில் இருள் மிக்க குகையையும் அரிய வலிமையையும் உடைய தெய்வத்தால் காக்கப்படும் உயர்ந்த உச்சிகளையுடைய பெரிய மலை நாடனான பேகனும், தமிருந்திய மொழியை உடைய மோசி கீரனாரால் பாடப்பட்ட ஆய் என்பவனும், ஆசை கொண்டு தன்னை நினைத்து வருபவரின் வறுமையானது நீங்கத் தவறாது கொடுக்கும் இயல்ப கொண்ட கொடைத் தன்மையையுடைய பகைவரை ஓட்டிய நள்ளியும், என்று கூறப்பட்ட எழுவலரும் இறந்த பின்பு, நான் கண்டவலர்க்கு இரக்கம் வரப் பாடி வருபவரும் மற்றவரும் கூடி இரந்தவரின் துன்பத்தைத் தீர்க்கக் கடவேன் என்று நீ உள்ளாய். ஆதலால், நான், விரைவாக உன்னை நினைத்துப் பரிசில் பெற வந்தேன். வானத்தை அளாவி மூங்கில் வளர்ந்த மலையில் சுரபுன்னையுடன் ஓங்கி ஆசினியொடு அழகு பெற்ற பலாவினை ஆசைப்பட்டு, முள்ளை வெளியே கொண்ட முதிர்ந்த பலாப்பழத்தைப் பெற்ற ஆண் குரங்கு, பஞ்சி போல மயிரை உடைய தலையையுடைய பெண் குரங்கைக் கையால் குறிசெய்து அழைக்கின்ற தளர்ச்சியற்ற புதிய வருவாயைக் கொண்ட முதிர மலையின் தலைவ! உலகம் முழுவதும் விளங்கும் தலைமையையும் இயற்றப்பட்ட தேரையும் உடைய குமணனே! புகழ் மேம்பட்ட கொடைத் தன்மையுடனே பகையிடத்து நீ எடுத்த வேல் உயர்வதாகுக.

## 12.11.பாடல் : 159

பாடியவர் : பெருஞ்சித்திரனார் பாடப்பட்டோன் : குமணன்

திணை : பாடாண் துறை : பரிசில், கடாநிலை

“வாழும் நாளோடு யாண்டு பல உண்மையின்,
தீர்தல் செல்லாது என் உயிர்” எனப்பல புலந்து,
கோல் கால் ஆகக் குறும் பல ஒதுங்கி,
நூல் விரித்தன்ன கதுப்பினள் கண் துயின்று

முன்றில் போகா முதுர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படர்அட வருந்தி
மருங்கில் கொண்ட பல் குறுமாக்கள்
பிசைந்து தின வாடிய முலையள், பெரிது அழிந்து,
குப்பைக்கீரைக் கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்து கொண்டு உப்பு இன்று,
நீர் உலையாக ஏற்றி மோர் இன்று,
அவிழ் பதம் மறந்து பாசடகு மிசைந்து,
மாசொடு குறைந்த உடுக்கையள் அறம் பழியாத்
துவ்வாள் ஆகிய என் வெய்யோளும்,
என்றாங்கு இருவர் நெஞ்சமும் உவப்பக் கானவர்
கரி புனம் மயக்கிய அகன் கண் கொல்லை
ஐவனம் வித்தி மையுறக் கவினி,
ஈனல் செல்லா ஏனற்கு இழுமெனக்
கருவி வானம் தலைஇ யாங்கும்,
ஈத்த நின் புகழ் ஏத்தித் தொக்க என்
பசி தினத் திரங்கிய ஒக்கலும் உவப்ப,
உயர்ந்து ஏந்து மருப்பின் கொல் களிறு பெறினும்
தவிர்ந்து விடு பரிசில் கொள்ளலென் உவந்து, நீ
இன்புற விடுதியாயின், சிறிது
குன்றியும் கொள்வல் கூர் வேல் குமண!
அதற்பட அருளல் வேண்டுவல் விறல் புகழ்
வசையில் விழுத்திணைப் பிறந்த
இசை மேந்தோன்றல், நிற் பாடிய யானே.

கூர்மையான லேயுடைய குமணனே! வெற்றியால் உண்டான புகழை உடைய குற்றம் இல்லாத சிறந்த குடியில் தோன்றிய புகழ் மிக்கு விளங்கும் அண்ணலே! உன்னைப் பாடிய நான் மேல் நோக்கிய கொம்பை உடைய கொல்ர்லும் தன்மையையுடைய யானையைப் பரிசிலாகத் தந்தாலும் முகம் மாறித் தரும் பரிசிலைக் கொள்ளேன். என் தாய், ஆண்டுகள் பல கழிந்துவிட்டால் வயது முரிர்ந்து, என் உயிர் இன்னும் போகவில்லையே! என்று கூறிக் கொண்டு தன் உயிர் வாழும் நாளைப் பலவாறு வெறுப்பவள். தான் கையில் பிடித்த கோலையே வைத்து நடப்பவள். வெண்மையான நூலை விரித்தாற் போன்ற நரைமயிரை உடையவள். கண் ஒளி குறைந்தவள், முற்றத்துக்குக் கூட செல்ல இயலாத முதுமை உடையவள். என் மனைவி, வெளிறிய மேனியுடன் நினைவு வருத்த வருந்தி இடையில் வைத்துக் கொண்டுள்ள இளம்பிள்ளைகள் பிசைந்து மெல்லுவதனால் வாட்டம் கொண்ட முலையையுடையவள், மிகவும் பவசியால் வருந்தியவள், குப்பையில் தானே முறைத்த கீரையில் முன்னம் கிள்ளிய கணுக்களில் தளிர்த்த கீரையின் இளந்தளிரைப் பறித்து வலந்து உப்பில்லாமல் நீரையே உலையாய்

வைத்துவிட்டு மோர் இல்லாமலும் சோறு இல்லாமலும் அந்தக் கீரையாகிய உணவை உண்பவலள், அறக்கடவுளைப் பழித்து நொந்து கொள்பவள், உண்ணாது இருப்பவள். இந்த இருவர் உள்ளங்களும் மகிழும்படியும், வேடர் மரங்களைச் சுட்டதனால் கரிந்த புனத்தை நன்கு உழுத அகன்ற இடத்தை உடைய கொல்லையில், ஐவன நெல் உடன் விதைத்து, இருளின் நிறம் பொருந்த அழகு பெற்று, வெப்பத்தார் கதிரை ஈனாத தினைப் பயிர்க்கு, இழும் என்ற ஓசையுடன் மின்னல் இடி முதலான தொகுதியைக் கொண்ட மேகம் மழைத் துளியைச் சொரிந்தாற்போல் பரிசிலர்க்கு வழங்கிய உன் புகழை என் உறவினர் வாழ்த்துவர். அவர்கள் பசி தின்னுதலால் வருந்தி உள்ளனர். இவர்கள் மகிழும்படியும், நீ உவந்த, நான் இன்பம் அடைய எனக்குப் பரிசிலைத் தந்து அனுப்பினாயானால் அப்பரிசிலானது குன்றிமணி அளவு சிறியதாயினும் விருப்பத்துடனே ஏற்றுக்கொள்வேன். எனவே, அவ்வாறு இன்பம் அடைய அருள் செய்ய வேண்டும்.

## 12.12.பாடல் : 160

**பாடியவர் : பெருஞ்சித்திரனார்  பாடப்பட்டோன் : குமணன்**

**திணை : பாடாண்  துறை : பரிசில், கடாநிலை**

"உருகெழு ஞாயிற்று ஒண் கதிர் மிசைந்த
முளி புல் கானம் குழைப்பக் கல்லென
அதிர் குரல் ஏறோடு துளி சொரிந்தாங்குப்,
பசி தினத் திரங்கிய கசிவுடை யாக்கை
அவிழ் புகுவு அறியாதாகலின், வாடிய
நெறி கொள் வரிக் குடர் குளிப்பத் தண்ணெனக்,
குய் கொள் கொழுந்துவை நெய்யுடை அடிசில்,
மதி சேர் நாள்மீன் போல, நவின்ற
சிறு பொன் நன் கலஞ் சுற்ற இரீஇக்
கேடின்றாக பாடுநர் கடும்பு என,
அரிது பெறு பொலங்கலம் எளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத்தோனே,
செல்குவையாயின் நல்குவன் பெரிது" எனப்
பல் புகழ் நுவலுநர் கூற, வல் விரைந்து
உள்ளம் துரப்ப வந்தனென், எள் உற்று
இல் உணாத் துறத்தலின் இல் மறந்து உறையும்
புல் உளைக் குடுமிப் புதல்வன் பன் மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்,
கூழும் சோறும் கடைஇ, ஊழின்
உள்இல் வருங்கலம் திறந்து அழக் கண்டு,
மறப் புலி உரைத்தும் மதியம் காட்டியும்,

நொந்தனள் ஆகி நுந்தையை உள்ளிப்
பொடிந்த நின் செவ்வி காட்டு எனப் பலவும்
வினவல் ஆனாளாகி, நனவின்
அல்லல் உழப்போள் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வம் மிகுத்தனை, வல்லே
விடுதல் வேண்டுவல் அத்தை படுதிரை
நீர் சூழ் நில வரை உயர, நின்
சீர் கெழு விழுப் புகழ் ஏத்துகம் பலவே.

வெம்மையால் அச்சத்தைதத் தரும் கதிரவனின் ஒளிக்கதிரால் தின்னப்பட்ட உலர்ந்த புல் பொருந்திய காடானது தளிர்க்கும் படி கல் என்ற ஓசை உண்டாக நடுக்கத்தைத் தரும் ஒலியுடன் கூடிய பேரிடியுடன் மேகம் மழைத்துளியை பொழிந்தது போல, தாளிக்கப்பட்ட கொழுமையான துவையலுடன் கூடிய நெய் கலந்த உணவை , சந்திரனைச் சுற்றியுள்ள நட்சத்திரங்களைப் போல விளங்கும் பொன்னால் ஆன சிறிய நல்ல வட்டில்களைச் சுற்றிலும் பரப்பி வைத்து, பசியால் வாடியதும் வேர்வையைக் கொண்டதுமான உடல், சோறு உண்பதை அறியாததால் வாடி முடங்கியுள்ள பல வரிகளையுடைய குடரில் மூழ்குமாறு உண்ணச் செய்து, நம்மைப் பாடுகின்ற பாணர் சுற்றம் கேடின்றி வாழ்க என்று சொல்லி, பொன்னால் ஆன அணிகலன்களை எளிதாகத் தந்து, தன் நண்பர்களைவிட எம்முடன் மிக்க நட்புடைய புகழ் பொருந்திய குமணன், கள் மிக்க தெருக்களையுடைய முதிய மலையில் உள்ளான்! நீ அவனிடம் செல்வாயனால், உனக்கு அவன் மிக்க செல்வங்களை அளிப்பான் என்று உன் புகழ் பலவற்றையும் புகழ்ந்து சொல்பவர் என்னிடம் உரைத்தனர். அதைக் கேட்டு, என் மனம், உன்னிடம் விரைவாகச் செலுத்துவதால் நான் இங்கு வந்தேன். என் வீட்டிஎல் உண்தற்குரியது எதுவும் இல்லாததால், அந்த வீட்டை இகழ்ந்து, அதை நினைக்காமல் இருக்கின்ற குதிரையின் தலையாட்டத்தைப் போன்ற மயிர் பொருந்திய குடுமியை உடைய என் மகன், பால் இல்லாததால், வற்றிய தன் தாயின் மார்பைப் பல முறையும் சுவைத்துப் பார்த்துப் பாலைப் பெறாதவனானான், கூழையோ சோற்றையோ உண்ண விரும்பி விரைந்து சென்று முறை முறையே உணவுக் கலங்களைத் திறந்து பார்த்தும் அவற்றில் ஒன்றும் இல்லாததால் அழுதான். அழ, அதைக் கண்டு மறத்தை உடைய புலி வருகின்றது என்று அச்சுறுத்தியும் வானத்தில் உள்ள சந்திரனைக் காட்டியும் மகனின் அழுகையை நிறுத்த இயலவில்லை. ஆதலால் வருந்தி உன் தந்தையை நினைந்து வெறுத்த நின் அழகைக் காட்டு எனக் கூறினாள். அதனுடன் நில்லாது நனவிலும் துன்பம் அடையும் என் மனைவியின் வளப்பம் மிகுமாறு அழிவில்லாத செல்வத்தை மிகுதியாக விரைவாகத் தந்து அனுப்புவதை நான் விரும்புகின்றேன். ஒலிக்கும் அலைகள் பொருந்திய நீரால் சூழப்பட்ட இந்த நிலவெல்லையில் ஓங்கும்படி உன் சிறப்பையுடைய மேலான புகழைப் பலவாக யாம் வாழ்த்துவோம்!

## 12.13.பாடல் : 161

**பாடியவர்˙ பெருஞ்சித்திரனார் பாடப்பட்டோன் : குமணன்**

**திணை : பாடாண் துறை : பரிசில்**

நீண்டொலி அழுவம் குறைய முகந்து கொண்டு
ஈண்டு செலல் கொண்மூ வேண்டு வயின் குழீஇப்,
பெரு மலையன்ன தோன்றல் சூன் முதிர்பு,
உரும் உரறு கருவியொடு, பெயல் கடன் இறுத்து,
வள மழை மாறிய என்றூழ்க் காலை,
மன்பதை யெல்லாம் சென்று உண கங்கைக்
கரை பொரு மலி நீர் நிறைந்து தோன்றியாங்கு
எமக்கும் பிறர்க்கும் செம்மலையாகலின்
அன்பு இல் ஆடவர் கொன்று, ஆறு கவரச்,
சென்று தலைவருந அல்ல அன்பின்று
வன் கலை தெவிட்டும், அருஞ்சுரம் இறந்தோர்க்கு,
இற்றை நாளொடும் யாண்டு தலைப் பெயர எனக்
கண்பொறி போகிய கசிவொடு உரன் அழிந்து,
அருந்துயர் உழக்கம் என் பெருந் துன்புறுவி நின்
தாள் படு செல்வம் காண்டொறும் மருளப் ,
உயர் மருப்பு ஏந்திய வரை மருள் நோன் பகடு
ஒளி திகழ் ஓடை பொலிய, மருங்கில்
படுமணி இரட்ட ஏறிச் செம்மாந்து,
செலல் நசைஇ உற்றனென் விறல் மிக குருசில்!
இன்மை துரப்ப இசை தர வந்து, நின்
வண்மையில் தொடுத்த என் நயந்தனை கேண்மதி!
வல்லினும் வல்லேன் ஆயினும், வல்லே,
என் அளந்து அறிந்தனை நோக்காது, சிறந்த
நின் அளந்து அறிமதி பெரும! என்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன் சாந்தருந்திப்
பல் பொறிக் கொண்ட ஏந்து எழில் அகலம்
மாண் இழை மகளிர் புல்லுதொறும் புகல,
நாள்முரசு இரங்கும் இடனடை வரைப்பின் நின்
தாள் நிழல் வாழ்நர் நன் கலம் மிகுப்ப,
வாள் அமர் உயர்ந்த நின் தானையும்
சீர் மிகு செல்வமும் ஏந்துகம் பலவே.



வெற்றி மிக்க மன்ன! மிக்கு ஒலிக்கின்ற கடல் குறையுமாறு நீரை மொண்டு கொண்டு விரைவாகப் போகும் மேகங்கள் வேண்டிய இடத்தில் திரண்டு கூடிப் பரிய மலை போன்ற தோற்றம் உடையதாகி நீர் மிகுதியாகக் கருக்கொண்டு இடி மின்னல் முதலியவற்றுடன் கூடி மழை பெய்தலைச் செய்து வானத்தை அளிக்கும் மழை நீங்கப்பெற்றுக் கதிரவன் வெப்பம் மிக்க கோடை காலத்தில், ஊயிர்க்கூட்டங்கள் எல்லாம் போய்

நீரைக் குடிப்பதற்குக் கங்கையாற்றின் கரையை மோதுகின்ற மிக்க நீர் நிறைந்து தோன்றுவதைப் போல நீ எங்களுக்கும் மற்றவர்க்கும் உதவி செய்கின்ற தலைவனாக உள்ளாய். ஆதலால், எவரிடத்தும் அன்பு இல்லாத கொன்று அவரது பொருளைப் பறித்துக் கொள்வதால் வலிய கலை மான்கள் அசை போட்டுக் கொண்டிருப்பதும். வலிய கலை மக்கள் நடந்து போவதற்கு அரியதும் ஆன அந்தப் பாலைநிலம் அன்பின்றிப் பிரிந்து சென்றவருக்குப் போய் முடியக் கூடிய இயல்பு கொண்டதன்று. அத்தகைய அரிய சுரத்தில் சென்றவர்க்கு இன்றைய நாளடன் கூடி யாண்டு கழிக என்று சொல்லி என் பிரிவுக்கு ஆற்றாது கண் ஒளி மங்கிய இரக்கத்துடனே வலிமை குன்றிப் பொறுக்க இயலாத துன்பத்துள் வருந்துபவன் மிக்க வறுமையுற்ற என் மனைவி, உன் முயற்சியால் உண்டான செல்வத்தைப் பார்க்குந்தோறும் வியக்குமாறு பனை போன்ற துதிக்கையுடனே முத்துக்கள் உண்டாகுமாறு முதிர்ந்த தந்தங்களையடைய யானை மீது ஒளிமிகும் அதன் நெற்றிப்பட்டம் ˙விளங்கும்படியாக, இரண்டு பக்கங்களிலும் உள்ள மணிகள் ஒன்றுடன் ஒன்று மாறி மாறி ஒலிக்கும்படி ஏறித் தலைமை விளங்க அமர்ந்து என் ஊருக்குப் போவதை நான் விரும்பினேன். என் வறுமை பின்னே இருந்து என்னைத் துரத்த, உன் புகழானது என்னை அழைத்துக்கொண்டு வர, நான் உன்னிடம் வந்தேன். வந்த. உன் கொடைப் பண்பில் சிலவற்றைப் புகழ்ந்து கூறினேன். என் சொற்களை விரும்பிக் கேட்பாயாக! உன் கொடை இயல்புகளுள் சிலவற்றைச் சொல்ல அறிவேனாயினும் அறியேனாயினும். விரைவாக என் கல்வியறிவை அறிந்து கொண்டவனாய், என் தகுதிக்கு ஏற்ற பரிசிலை அளித்தலைப் பற்றி ஆராயாது, சிறந்த நின் தகுதியையே ஆராய்வாயாக. பெருமானே! என்றும் என் பரிசுப் பெருள் மிகுதியைக் கண்டு அரசர் நாணும்படி திரும்பிச் செல்வேன். சாந்து பூசப்பட்டுப் பல நல்ல இலக்கணம் உடைய மார்பை அணிகள் அணிந்த மகளிர் தழுவுந்தோறும் விருபவும், நாட்காலையில் முரசு ஒலிக்கும்படியான இடத்தை உடைய எல்லையில், உன் அடி நிழலில் வாழ்பவர் நல்ல அணிகளை மிகுதியாக்கவும், வாளால் செய்யும் போரில் வருந்தி உன் படையையும், உன் சிப்புடைய செல்வத்தையும் யாம் பலவாறு புகழ்வோம்.

## 12.14.பாடல் : 162

பாடியவர் : பெருஞ்சித்திரனார் பாடப்பட்டுடோன் : இளவெளிமான்

திணை : பாடாண் துறை : பரிசில் விடை

இரவலர் பாவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்
இரவலர் உண்மையம் காண் இனி! இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண் இனி! நின் ஊர்க்
கடி மரம் வருந்தத் தந்து யாம் பிணித்த
நெடுநல் யானை எம் பரிசில்,
கடுமான் தோன்றல்! செல்வல் யானே.

குறிப்புகள்

விரைவாக ஓடும் குதிரையையுடைய தலைவ! இரப்பவரை, வேண்டுவனவற்றைத் தந்து பாதுகாப்பவன் நீதான் என்பதும் இல்லை. வேண்டியவற்றைத் தந்து பாதுகாப்பவர் இரவலர்க்கு உன்னையல்லாது வேறு ஒருவர் இல்லாமலும் இல்லை. இன்னமும், வரிசை அறிந்து தாராது உன்னைப் போன்றவர் தோன்றிய பின்பும் இரவலர் இவ்வுலகத்தில் இருப்பதையும் நீ காண்பாயாக! இனி இரவலர்க்கு வேண்டியவற்றைத் தந்து பாதுகாக்கும் வள்ளல் இருப்பதையும் காண்பாயாக! உன் ஊரில் உள்ள காவல் மரம் வருந்தும் படி கொணர்ந்து நாம் கட்டியுள்ள பெரிய நல்ல யானை, நாம் இப்போது பெற்று வந்த பரிசிலாகும். இதை நீ அறிவாய். நான் இனிச்செல்வேன்.

## 12.15.பாடல் : 163

பாடியவர் : பெருஞ்சித்திரனார் பாடப்பட்டோன் : புலவரின் மனைவி

துறை : பாடாண் துறை : பரிசில்

குமணனிடம் பெரும் பரிசில் பெற்ற புலவர் பெருஞ்சித்திரனார் தாம் பெற்ற பரிசிலை எல்லார்க்கும் தருமாறு தம் மனைவியிடம் கூறுவதை இதில் காணலாம்.

நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து
உறைநர்க்கும்,
பன் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்,
கடும்பின் கடும் பசி தீர யாழ நின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது,
வல்லாங்கு கொடுமதி மனை கிழவோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்து வேல் குமணன் நல்கிய வளனே.

மனைக்கு உரியவளே! பலாப்பழம் முதலான கனிகள் பழுத்துத் தொங்கும் முதிரம் என்ற மலைக்குத் தலைவனாகிய திருந்திய வேலையுடைய குமணன் எனக்குக் கொடுத்த செல்வத்தை, உன்னை விரும்பி வாழ்கின்ற மகளிர்க்கும், உன்னாலர் அன்பு காட்டப்பட்ட மகளிர்க்கும் பல மாட்சிமையுடைய கற்புடைய உன் உறவினரான மூத்த மகளிர்க்கும், நெடுநாளாக உனக்குக் கடனாகப் பொருளைத் தந்து உதவி செய்தவர்க்கும். இன்ன தன்மை உடையவருக்குதான் தரவேண்டும் என்பதன்றி, இன்னவர்க்கு இதனை தரலாமா? என்று என்னுடன் கூடி எண்ணிப் பார்க்காமலும், இதை வைத்துக் கொண்டு நன்றாக வாழலாம் என்று எண்ணாமலும் நீயும் எல்லாருக்கும் அளிப்பாயாக. (நானும் எல்லார்க்கும் அளிப்பேன்).

## 12.16.பாடல் : 164

பாடியவர் : பெருந்தலைச் சாத்தனார் பாடப்பட்டோன் : குமணன்

திணை : பாடாண் துறை : பரிசில், கடாநிலை

பெருந்தலைவர் சாத்தனார் குமணனைக் கண்டு பெரும் பரிசில் பெற எண்ணினார். முதிர மலைக்கு வந்தார். ஆனால் அங்குக் குமணன் இல்லை. இளங்குமணன் நாட்டைக் கவர்ந்து ஆண்டு வந்தான். அது மட்டுமன்று. குமணனைக் கொல்லவும் எண்ணியிருந்தான். இத்தகைய பகைமையைப் போக்கி அவ்விருவருக்குள் ஒற்றுமையை உண்டாக்கச் சாத்தனார் குமணனிடம் சென்றார். தம் உண்மை எண்ணத்தைப் புலப்படுத்தவில்லை. தமது வறுமையைச் சொல்லிப் பரிசில் வேண்டினார்.

ஆடு நனி மறந்த கோடு உயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத், தேம்பு பசி உழவாப்
பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி,
இல்லி தூர்த்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறும் அழூஉம்தன் மகத்து முகம் நோக்கி,
நீரொடு நிறைந்த ஈர் இதழ் மழைக் கண் என்
மனையோள் எவ்வம் நோக்கி, நினைஇ
நிற் படர்ந்திசினே நற்போர்க் குமண!
என் நிலை அறிந்தனை ஆயின் இந்நிலைத்
தொடுத்தும் கொள்ளாது அமையலென் அடுக்கிய
பண் அமை நரம்பின் பச்சைந ல் யாழ்,
மண் அமை முழவின், வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப் பிறந்தோயே.

நல்ல போரைச் செய்யும் குமணனே! பலவாக அடுக்கப்பட்ட பண்ணுதல் அமைந்த நரம்புடைய தோலால் போர்க்கப்பட்ட நல்ல யாழையும் மார்ச்சனையை உடைய மத்தளத்தையும் உடைய கூத்தரின் வறுமையைப் போக்கும் குடியில் பிறந்தவன் நீ. சமைத்தல் தொழிலைப் பெரிதும் மறந்துவிட்ட பக்கம் உயர்ந்த என் வீட்டு அடுப்பில் காளான் பூத்துள்ளது. உடலை மெலியச் செய்யும் பசியால் வருந்தி, பால் இல்லாததால் தோல் சுருங்கப் பெற்று, துளை மூடப்பெற்ற வறிய முலையை, வறிதே சுவைக்கும் போதெல்லாம் அழும் குழந்தையின் முகத்தைப் பார்த்து, நீரால் நிறைந்த ஈரமான இமைகளையுடைய கண்ணை உடையவள் என் மனைவி. அவளது வருத்தத்தைக் கண்டு, இந்த வருத்தத்தைப் போக்கக் கூடியவன் நீ என எண்ணி, உன்னிடம் வந்தேன். என் இந்த நிலையை அறிந்து கொண்டாயானால், இந்த வறிய நிலையில் உன்னை வளைந்து வற்புறுத்தியேனும் நின்னிடமிருந்து பரிசிலைப் பெற்றுக் கொள்ளாமல் விடேன்.

## 12.17.பாடல் : 165

பாடியவர் : பெருந்தலைச் சாத்தனார் பாடப்பட்டோன் : குமணன்

திணை : பாடாண் துறை : பரிசில் விடை

பெருந்தலைச் சாத்தனார் காட்டில் குமணனைக் கண்டு தன் வறிய நிலையை மொழிந்தார். அவன் தன் தலையைக் கொய்து கொண்டு போகுமாறு தன் வாளைத் தந்தான். அவ்வாளைக் கையில் கொண்டவராக

குறிப்புகள்

இளங்குமணனிடம் சென்றார். யான் உன் தமையனைக் கண்டு பாடினேன். அவன் தான் நாடிழந்த துன்பத்தைவிட எனக்குப் பொருள் இல்லாததால், தன் தலையைக் கொய்து கொள்ளுமாறு வாளைத் தந்தான். அதனுடன் வந்தேன். காண்! என்றார். பின்னர், இவ்வுலகத்தில் நிலைபெற விரும்பியவர் புகழை நிலை நிறுத்திச் சென்றனர். மற்றவர் இரந்தவர்க்கு வேண்டியன தராது, இவ்வுலகத்தில் தொடர்பின்றி மறைந்தனர் என்று உரைத்தார். இளங்குமணன் மனம் திருந்தினான். தன் அண்ணனை அணுகித் தன் மனமாற்றத்தை உரைத்துத் திரும்ப அழைத்து வந்து நாட்டை ஆளச் செய்தான்.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத்தா மாய்ந்தனரே
துன் அருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போரக்கு ஈஇயாமையின்
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே
தாள் தாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடு இல் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனென் ஆகக் கொன்னே,
பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என்
நாடு இழந்ததனினும் நனி இன்னாது என,
வாள் தந்தனனே தலை எனக்கு ஈயத்
தன்னின் சிறந்தது பிறிது ஒன்ற இன்மையின்,
ஆடு மலி உவகையோடு வருவல்,
ஓடாப் பூட்கை நின் கிழமையோன் கண்டே.

இளங்குமணனே! எதுவும் நிலைத்து நிற்காத தன்மையுடைய இந்த உலகத்தில், நிலைபெற வேண்டும் என்று எண்ணியவர். தம் புகழை நாட்டித் தாம் இறந்து போயினர். நெருங்குவதற்குரிய தலைமைத் தன்மை கொண்ட பெருஞ்செல்வர் வறுமையால் தம்மிடம் வந்து இறந்தவர்க்குக் கொடாததால், பழைய கொடைத் தன்மை கொண்ட மக்கள் போலத் தம் பெயரை நிறுத்தி உலகத்துடன் தொடர்ந்து நிலைத்து இருத்தலை அறியாதவர் ஆவார். போரில் புறங்காட்டி ஓடாத கொள்கையை உடைய நின் தமையன் குமணனைப் பார்த்துவிட்டு இங்கு வருகின்றேன். காலில் தாழ்ந்து மணிகள் ஒலிகின்ற புள்ளிகளையுடைய வெற்றி பொருந்திய யானைகளைப் பரிசிலாகப் பாடும் இரவலர்க்கு அளிக்கும் குற்றமில்லாத நல்ல புகழையுடைய வலிய குதிரையையுடைய அவனைப் பாடி நின்றேன். நிற்க. பரிசிலன் ஒருவன் பயன் இல்லாமல் வீணே வாடித் திரும்புதல் என் நாட்டை இழந்ததைவிட மிகவும் துன்பம் தரத் தக்கது என்று எண்ணி, அங்குத் தருவதற்குத் தன் தலையைத் தவிர வேறொன்று இல்லாததால் தன் தலையை எனக்.்.குத் தருவதற்காக வாளைத் தந்தான். அதைப் பெற்றுக் கொண்டு வெற்றி மிகுந்த மகிழ்வுடன் இங்கு வந்தேன்.

*Self -Instructional Material*

## 12.18.பாடல் : 166

**பாடியவர் : ஆவூர் மூலங்கிழார்**

**பாடப்பட்டோன் : சோணாட்டுப் பூங்சாற்றுப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன்**

**திணை : வாகை** **துறை : பார்ப்பன வாகை**

கேட்கத் தக்கவற்றைக் கேட்டுத் தலை சான்ற யாகத்தால் வெற்றியைப் பெருக்குதல்.

நன்று ஆராய்ந்த நீள் நிமிர் சடை
முது முதல்வன் வாய் போகாது.
ஒன்று புரிந்த ஈர் இரண்டின்,
ஆறுணர்ந்த ஒரு முதுநூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்,
மெய் அன்ன பொய் உணர்ந்து,
பொய் ஓராது மெய் கொளீஇ,
மூவேழ் துறையம் முட்டின்று போகிய
உரை சால் சிறப்பின் உரவோர் மருக!
வினைக்கு வேண்டி நீ பூண்ட
புலப் புல்வாய்க் கலைப் பச்சை
சுவல் பூண் ஞாண் மிசைப் பொலிய,
மறங்கடிந்த அருங்கற்பின்.
அறம் புகழ்ந்த வலை சூடிச்,
சிறு நுதல் பேர் அகல் அல்குல்,
சில சொல்லின், பல கூந்தல் நின்
நிலைக்கு ஒத்த நின் துணைத் துணைவியர்
தமக்கு அமைந்த தொழில் கேட்பக்,
காடு என்றா நாடு என்ற ஆங்கு
ஈர் ஏழின் இடம் முட்டாது
நீர் நாண நெய் வழங்கியும்,
எண் நாணப் பலவேட்டும்,
மண் நாணப் புகழ் பரப்பியும்
அருங்கடிப் பெருங்காலை,
விருந்துற்ற நின் திருந்து ஏந்துநிலை,
என்றும் காண்க தில் அம்ம யாமே! குடாஅது
பொன்படு நெடுவரைப்புயல் ஏறு சிலைப்பின்
பூ விரி புது நீர்க் காவிரி புரக்கும்
தண் புனல் படப்பை எம்ஊர் ஆங்கண்.
உண்டும் தின்றும் ஊர்ந்தும் ஆடுகம்
செல்வல் அத்தை யானே, செல்லாது
மழை அண்ணாப்ப நீடிய நெடுவரைக்
கழை வளர் இமயம் போல,



குறிப்புகள்

நிலீஇயர் அத்தை நீ நில மிசையானே.

நன்றாக ஆராயப்பட்ட நீளமான சடையுடைய முதிய சிவபெருமானின் வாக்கைவிட்டு நீங்காது, அறம் ஒன்றையே பொருந்திய, நான்கு பகுதியுடையதாகி ஆறு அங்கங்களாலும் உணரப்பட்ட ஒரு பழைய நூலான வேதத்துக்கு மாறுபட்ட நூலைக் கண்ட புத்தர் முதலிய மதத்தாரின் மிகுதியைச் சாய்க்க, அவர்களின் மெய் போன்ற பொய்யை மெய் என்று எண்ணாது, உண்மையான பொருளை அவர்களுக்குத் தக்கவாறு சொல்லி, இருபத்தொரு வேள்வித் துறைகளையும் குறைவு இல்லாது செய்து முடித்த புகழ் பொருந்திய அறிவுடையோரின் மரபில் வந்தவனே! வேள்வித் தொழிலுக்கு வேண்டி நீ போர்த்திக் கொண்ட காட்டில் வாழும் புல்வாய்க் கலையின் தோல், உன் தோளின் மீது இடப்பட்ட பூணூல் மீது சிறந்து விளங்க, தீமை நீங்கிய பெறுவதற்கரிய கற்பையும், அற நூலில் கூறப்பட்ட சாலகத்தைச் சூடி, சிறிய நெற்றியையும் அகன்ற அல்குலையும் மென்மையான சொல்லையும் அகன்ற அல்குலையும் மென்மையான சொல்லையும் கூந்தலையும் உடைய உன் நிலைமைக்கு உள்ளம் ஒத்த உன் துணைவியாரான மனைவியர் தாங்கள் தங்கட்கு ஏற்ற உன் துணைவியாரான மனைவியர் தங்கள் தங்கட்கு ஏற்ற ஏவல் தொழிலைக் கேட்டுச் செய்ய, காடு என்றும் நாடு என்றும் சொல்லப்படும் அங்கே, காடுள் வாழும் ஏழுவகையான பசுவாலும் நாட்டுள் வாழும் ஏழு வகையான பசுவாலும் முட்டாது நீரானது வெட்கமடையுமாறு நெய்யைச் சொரிந்தும், அளவில்லாத பல வேள்விகளைச் செய்தாய், மண்ணின் இடம் போதாத வகையிலே புகழைப் பரப்பினாய். அப்படிப் பெறுவதற்கரிய வேள்வி முடிந்த காலத்தில், விருந்தினர் பொருந்திய உன் மேம்பட்ட நிலையை யாம் இன்று போல என்றும் காண்போமாக. மேற்குத் திக்கில் பொன் விளையும் பெரிய குடகு மலையில் மேகத்தில் இடி இடித்தால், மலர் பரந்த புதிய நீரையுடைய காவிரி, உலகத்தைக் காக்கின்ற குளிர்ந்த நீர்ப் பகுதியை உடைய எம் ஊரில், உண்ண வேண்டியவற்றை உண்டும் தின்ன வேண்டியவற்றைத் தின்றும் ஏறப்படும் ஊர்திகளில் ஏறியும் கொண்டாடச் செல்வேன் யான். நீ, மழை தலை எடுக்க உயர்ந்த நீண்ட பக்கமலைகளையுடைய மூங்கில் வளரும் இமய மலைபோல நிலத்தின் மீது நிலை பெறுவாயாக.

## 12.19.பாடல் : 167

**பாடியவர் : கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் -**

**பாடப்பட்டோன் : ஏனாதி திருக்கிள்ளி,**

**திணை : வாகை** **துறை : அரச வாகை**

சோழ நாட்டுக் குறுநில மன்னர்களுள் ஏனாதி திருக்கிள்ளி ஒருவன். அவன் சோழ மன்னர்க்குப் படைத்துணையாகிப் பல போர்களைச் செய்தவன். படைக்கலங்களால் புண்பட்ட மேனியன். ஏனாதி என்பது முடி மன்னரால் கொடுக்கப்படும் பட்டப் பெயர்.

நீயே அமர் காணின் அமர் கடந்து, அவர்

படை விலக்கி எதிர் நிற்றலின்,
வாஅள் வாய்த்த வடு வாழ் யாக்கையொடு,
கேள்விக்கு இனியை, கட்கு இன்னாயே,
அவரே நிற் காணின் புறங்கொடுத்தலின்,
ஊறு அறியா மெய் யாக்கையொடு,
கண்ணுக்கு இனியர் செவிக்கு இன்னாரே
அதனால் நீயும் ஒன்று இனியை அவரும் ஒன்று
இனியர்
ஒவ்வா யாவுள மற்றே வெல் போர்க்
கழல் புனை திருந்தடிக் கடு மான் கிள்ளி!
நின்னை வியக்கம் இவ்வுலகம் அஃது
என்னோ பெரும? உரைத்திசின் எமக்கே.

வெல்கின்ற போரையும் வீரக்கழல் அணிந்த திருந்திய அடியினையும் விரைவாக ஓடும் குதிரையையும் உடைய கிள்ளியே! நீ போரைக் கண்டால் அந்தப் போரை வென்று அப்பகைவரது படையை விலக்கி எதிர் நிற்பதால், வாள் ஏற்படுத்திய வடுப்பொருந்திய உடலுடனே கேட்கும் செவிக்கு இனியனாய் உள்ளாய். ஆனால் கண்ணுக்கு இனியனாய் இல்லை. நின் பகைவர். உன்னைக் கண்ட அளவில் புறம் காட்டி ஓடுகின்றனர். அதனால் புண் படாத உடல் தோற்றத்துடனே கண்ணுக்கு இனியராக உள்ளனர். செவிக்கு இனியர் அல்லர். எனவே, நீயும் ஒன்றில் இனியை. அவரும் ஒன்றில் இனியர். அவர் ஒவ்வாதவை யாவை உள்ளன? இங்ஙனம் இருக்க, உலகம் உன்னை மதிக்கும். அதன் காரணம் யாது? பெருமானே. எனக்குச் சொல்வாய்!

## 12.20.பாடல் : 168

**பாடியவர் : கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்**

**பாடப்பட்டோன் : பிட்டங்கொற்றன்**

**திணை : பாடாண் துறை : பரிசில், இயன்மொழி, அரச வாகை**

இவன் குதிரை மலைத் தலைவன். சேர மன்னனின் படைத் தலைவன்.

அருவி ஆர்க்கும் கழை பயில் நனந்தலைக்
கறி வளர் அடுக்கத்து மலர்ந்த காந்தள்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கண் கேழல் உழுத பூமி,
நன்னாள் வருபதம் நோக்கிக், குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறு தினை
முந்து விளை யாணர் நாள் புதிது உண்மார்
மரையான் கறந்த நுரை கொள் தீம் பால்,
மான்தடி புழுக்கிய புலவு நாறு குழிசி,
வான் கேழ் இரும் புடை கழாஅது, ஏற்றிச்
சாந்த விறகின் உவித்த புன்கம்

கூதளங் கவினிய குளவி முன்றில்,
செழுங்கோள் வாழை அகல் இலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ கூர் வேல்,
நறை நார்த் தொடுத்த வேங்கை அம் கண்ணி,
வடி நவில் அம்பின் வில்லோர் பெரும!
கைவள் ஈகைக் கடு மான் கொற்ற!
வையக வரைப்பில் தமிழகம் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப்
பாடுப என்ப பரிசிலர், நாளும்,
ஈயா மன்னர் நாண,
வீயாது பரந்த நின் வசை இல் வான் புகழே

அருவிகள் ஒலிக்கின்ற மூங்கில்கள் வளர்ந்த அகன்ற மலைச்சாரலில் மிளகுக்கொடி வளர்ந்துள்ளது. அங்கு மலர்ந்த காந்தளின் கொழுவிய கிழங்கை அஞ்சாமையுடைய கேழல் பன்றி தன் இனத்துடன் உழுவதுபோலக் கிளறுகிறது. அவ்வாறு அவை கிளறித் தோண்டிய நிலத்தில் நல்ல நாள் வந்த காரணத்ததால், அதைப் பார்ததுக் குறவர் உழாமலேரயே விதைத்த பருத்த தோகையையுடைய சிறிய திணை விளைந்தது. விளைந்த அந்தக் கதிரை, நல்ல நாளில் புதிதாக உண்ண வேண்டி, காட்டுப்பசுவின் துரையுடன் கூடிய இனிய பாலை, மான் தசை வேக வைத்த புலால் நாறும் பானையின் பக்கத்தைக் கழுவாமல் உலைநீராக வார்ப்பர். சந்தன விறகால் எரித்துச் சோறு சடைப்பர். அந்தச் சோற்றைக் கூதாளியினால் அழகு பெற்ற மலை மல்லிகையின் மணம் கமழும் வீட்டு முன் பக்கத்தில், வாழையின் அகன்ற இலையில் பரிமாறிப் பலருடன் பகுத்து உண்ணும் ஊர்ந்து செல்லப்படாத குதிரை மலைக்குத் தலைவ! கூர்மையான வேலையும் நறை என்ற கொடியின் நாரால் கட்டப்பட்ட வேங்கைப் பூமாலையையும் தீட்டப்பட்ட அம்பையும் உடைய வில் வீரர்களுக்குத் தலைவனே! கையால் கொடுக்கும் கொடைத் தன்மையையும் விரைவாக ஓடும் குதிரையையும் உடைய கொற்றவனே கொடாத மன்னர் நாணம் அடையப் பரந்த நினது வசையில்லாத புகழை, நாற்தோறும், உலகத்து எல்லைக்குள் தமிழ்நாடு கேட்கப் பொய்யாத நல்ல நாக்கு வருந்தும்படி வாழ்த்திப் பாடுவர் என்று பரிசிலர் சொல்லுவர். அதனால் நானும் உன்னிடம் பரிசில் பெற்றுப் பாடுபவனாதல் வேண்டும்.

## 12.21.பாடல் : 169

**பாடியவர் : காவிரிபூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்**

**பாடப்பட்டோன் : பிட்டங்கொற்றன்**

**திணை : பாடாண்** **துறை : பரிசில் கடாநிலை**

நும் படை செல்லுங்காலை, அவர் படை
எறித்தெறி தானை மன்னரை எனாஅ,
அவர் படை வருஉங் காலை நும் படைக்
கூழை தாங்கிய அகல் யாற்றுக்

குன்று விலங்கு சிறையின் நின்றனை எனாஅ,
அரிதால் அத்தை என் கடும்பினது இடும்பை,
இன்னே விடுமதி பரிசில், வென்வேல்
இளம்பல் கோசர் விளங்கு படை கன்மார்
இகலினர் எறிந்த அகல் இலை முருக்கின்
பெருமரக் கம்பம் போலப்,
பொருநர்க்கு உலையா நின் வலன் வாழியவே

பெரும! உம் படை படையானது பகைவர் மீது போகும்போது அவரது ஆயுதங்களான வேல் முதலானவற்றை உயர்த்தி வீசும் படைக்கு முன்பு நிபாய். பகைவிரன் படை உதிர்த்து வரும்போது உம் படையின் அணியைத் தாங்கி நிற்க வேண்டி, அகலாமான அற்றின் குறுக்கே தடுத்துக் கிடக்கும் மலைபோல அதைத் தடுத்து நின்றாய். ஆதலாலா் எந்நாளும் உன்னைக் காணும் காலத்தைப் பெறுவது அரிது. என் சுற்றத்தின் துன்பம் பெரிது. ஆதலால் நீ இப்போதே எனக்குப் பரிசில் தந்து அனுப்புவாயாக. வெற்றிவேலை உடைய இளைய பல கோசர் விளங்கிய படைக்கலம் பற்பவர் மாதறுபட்டு வீசிய அகன்ற இலையுடைய
முள் முருங்கை மரமான பெரிய மரத்தால் ஆன தூணாகிய இலக்கைப் போன்று போர' செய்வார்க்கு அழியாத நின் வெற்றி வாழ்க.

## 12.22.பாடல் : 170

**பாடியவர் : உறையூர் மருத்துவன் தாமோதரனார்**

**பாடப்பட்டோன் : பிட்டங்கொற்றன்**

**திணை : வாகை** **துறை : வல்லாண் முல்லை, தானை மறம்**

மரை பிரித்து உண்ட நெல்லி வேலிப்
பரல் உடை முன்றில். அம்குடிச் சீறூர்.
எல் அடிப்படுத்த கல்லாக் காட்சி
வில் உழுது உண்மார் நாப்பண், ஒல்லென
இழிபிறப்பாளன் கருங்கை சிவப்ப,
வலி துரந்து சிலைக்கும் வண்கண் கடுந்துடி
புலி துஞ்சு நெடுவரைக் குடிஞையோடு இரட்டும்
மலை கெழு நாடன் கூர் வேல் பிட்டன்,
குறுகல் ஓம்புமின். தெவ்விர்! அவனே
சிறுகண் யானை வெண்கோடு பயந்த
ஒளி திகழ் முத்தம் விறலியர்க்கு ஈத்து,
நார் பிழிக் கொண்ட வெங்கள் தேறல்
பண் அமை நல் யாழ்ப் பாண் கடும்பு அருத்தி,
நசைவர்க்கு மென்மை அல்லது பகைவர்க்கு
இரும்பு பயன்படுக்குங் கருங்கைக் கொல்லன்
விசைத்து எறி கூடமொடு பொரூஉம்
உலைக்கல் அன்ன வல்லாளன்னே.

காட்டுப்பசுவால் சிதை நீக்கி உண்ணப்பட்ட நெல்லி மரவேலி கொண்டதாய், அந்நெல்லியில் விதையான பரல் பெருந்திய முற்றம் கொண்ட அழகிய குடிகள் பொருந்திய சிறிய ஊர். அதில் பகல்பொழுது முழுவதும் வேட்டை ஆடித் திரிந்த கல்வியற்ற காட்சியுடைய வில்லாகிய ஏரால் உழுது உண்ணும் வேடர் நடுவில், இழிந்த பிறப்பை உடைய புலையன், தன் வலிய கையானது சிக்க வன்மையுடைய முக்கிக் கொட்டும் கண்ணையுடைய அச்சம் பொருந்திய துடி என்ற கருவி, புலி இருக்கும் மலையில் பேராந்தையுடன் கூடி ஒலிக்கும் இத்தகைய மலைபொருந்திய நாட்டையும் கூரிய லேையுமுடையவன் பிட்டங் கொற்றன். அவன் சிறிய கண் உடைய யானைக்கொம்பில் பிறந்த ஒளியுடைய முத்துக்களை விறலியர்க்குப் பரிசிலாக அளிப்பான். நாரால் வடித்து எடுக்கப்பட்ட விரும்பத்தக்க கள்ளைப் பண் அமைந்த நல்ல யாழை உடைய பாணர் சுற்றத்தை அருந்தச் செய்வான். இப்படித் தன்னிடம் பரிசில் பெற விரும்பி வந்தவர்க்கு மென்மையானவனாக இருப்பானே அல்லாது, அவன் பகைவர்க்கு இரும்பைப் பயன்படுத்தும் வலிய கையினனான கொல்லன் விசையுடனே அடித்த சம்மட்டி அடியை டீஏற்று மாறுபடும் (கொல்லன்) உலைக்களத்தில் உள்ள அடைகல் போன்ற வன்மையான ஆண்மையுடையவன். எனவே, பகைவரே, அவனை நெருங்குவதினின்று உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

## 12.23 .பாடல் : 171

**பாடியவர் : காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்**

**பாடப்பட்டோன் : பிட்டங்கொற்றன்**

**திணை : பாடாண்** **துறை : இயன்மொழி**

இன்ற செலினும் தருமே, சிறுவரை
நின்று செலினும் தருமே, பின்னும்
முன்னே தந்தனென் என்னாது, துன்னி
வைகலும் செலினும், பொய்யலன் ஆகி
யாம் வேண்டியாங்கு எம் வறுங்கலம் நிறைப்போன்,
தான் வேண்டியாங்குத் தன் இறை உவப்ப
அருந்தொழில் முடியரோ திருந்து வேல் கொற்றன்,
இன மலிகதச் சேக் களனொடு வேண்டினும்.
கள மலி நெல்லின் குப்பை வேண்டினும்,
அருங்கலம் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை
பிறர்க்கும் அன்ன அறத் தகையன்னே
அன்னன் ஆகலின், எந்தை உள்ளடி
முள்ளும் நோவ உறாற்க தில்ல,
ஈவோர் அரிய இவ் உலகத்து,
வாழ்வோர் வாழ அவன் தாள் வாழியவே.

திருந்திய வேலையுடை யகொற்றன், பெருந்தகையாளன்! இனமான மிக்க எருதுகளைத் தொழுவத்துடன் தரவேண்டும் என வேண்டினாலும்,

களத்தில் உள்ள மிக்க நெற்குவியலைத் தரவேண்டும் என வேண்டினாலும், அரிய அணிகளை ஆண் யானைகளும் தரவேண்டும் என வேண்டினாலும், நமக்கே அல்லாமல் மற்றவர்க்கும் அவற்றை எல்லாம் அளிக்கும் இயல்புடையவன். இன்று சென்றாலும் வேண்டியவற்றை தருவான். சிறிது நாள் கழித்:துச் சென்றாலும் வேணடியவற்றைத் தருவான். முன்னே தந்தோம் என்று எண்ணாமல், நாள்தோறும் பழகிச் சென்றாலும் பொய்யாதவனாய் யாம் விரும்பியபடியே எம் வெற்றுக் கலத்தை நிரப்புவான். அவன், தான் விரும்பியபடியே தன் அரசன் மகிழச் செய்வதற்கரிய போர்ச் செயல்களை முடிப்பானாக! இத்தகைய எம் தலைவனின் உள்ளங்காலிலே முள்ளும் வருந்தச் சென்று தைக்காது இருத்தல் வேண்டும். இவ்வுலகத்தில் உயிர் வாழ்வோர் வாழுமாறு அவன்தாள்கள் வாழ்க..

## 12.24.பாடல் : 172

**பாடியவர் : வடம வண்ணக்கன் தாமோதரனார்**

**பாடப்பட்டோன் : பிட்டங்கொற்றன்**

**திணை : பாடாண்** **துறை : இயன்மொழி**

வடமவண்ணக்கன் தாமோதரனார். ஒரு கால் இப்புலவர் பிட்டங் கொற்றனிடம் பரிசில் பெற்றார். அவர் தாம் பெற்ற அவ்வின்பத்தைப் பாணன் ஒருவன் தன் உறவினர்க்கு உரைப்பது போல விள்க்கியுள்ளார்.

ஏற்றுக உலையே! ஆக்குக சோறே!
கள்ளும் குறைபடல் ஓம்புக! ஒள்ளிழைப்
பாடுவல் விறலியர் கோதையும் புனைக!
அன்னவை பலவும் செய்க என்னதூஉம்
பரியல் வேண்டா, வருபதம் நாடி
ஐவனங் காவல் பெய் தீ நந்தின்,
ஒளி திகழ் திருந்து மணி நளி இருள் அகற்றும்
வன்புல நாடன் வயமான் பிட்டன்,
ஆர் அமர் கடக்கும் வேலும் அவன் இறை
மா வள் ஈகைக் கோதையும்,
மாறு கொள் மன்னரும் வாழியர் நெடிதே

ஐவன நெல்லைக் காப்பவர் காவலுக்கு இட்ட தீ அங்கு அழிந்தபோது, ஒளி விளங்கும் மாணிக்கம் இருளை விலக்கும் வலிய நிலமான மலை நாடன் பிட்டங்கொற்றன். அவரன் வலிய குதிரையை உடையவன். அவனுடைய போரை வெல்லும் வேலும், அவனுடைய தலைவனான பெரிய வள்ளன்மையுடைய சேரமான் கோதை என்பானும், அவனுடன் பகை கொண்ட மன்னரும் நீண்ட காலம் வாழ்க என வாழ்த்துவதே நாம் செய்ய வேண்டுவது. இனிமேல் உணவு எவ்வாறு கிடைக்கும் என்றுஞ நீங்கள் வருந்த வேண்டா. எனவே, உலை வைக்க! சோறாக்குக. மதுவை நிரம்ப உண்டாக்குக. விளங்கும் அணிகளை அணிந்த பாடுவதில் வல்ல விறலியரே! மாலையைச் சூடுக. அத்தகைய பிற செயல்களையும் செய்க! என பாணன் உரைத்தான்.

குறிப்புகள்

## 12.25.பாடல் :173

**பாடியவர் : சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் -**

**பாடப்பட்டோன் : சிறுகுடி கிழான் பண்ணன்**

**திணை : பாடாண் துறை : இயன்மொழி**

சிறுகுடி என்பது சோழ நாட்டில் உள்ள ஓர் ஊர். இப்பண்ணன் வேளாளர் தலைவன். சோழப் பேரரசன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். தான் பேரரசனாயினும் பண்ணன் எளியன் என்று எண்ணாது அவனுடன் நட்புக் கொண்டிருந்தான். பண்ணனின் கொடைச் சிறப்பு இம்மன்னனைக் கவர்ந்தது. அதை விளக்குகின்ற பாடல் இது.

யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!
பாணர் காண்க, இவன் கடும்பினது இடும்பை!
யாணர்ப் பழுமரம் புள் இமிழ்ந்தன்ன
ஊண் ஒலி அரவம் தானும் கேட்கும்,
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி,
முட்டை கொண்டு வன்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில் ஒழுக்கு ஏய்ப்பச்,
சோறுடைக் கையர் வீறு வீறு இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்,
மற்றும் மற்றும் வினவுதும், தெற்றெனப்,
பசிப் பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ, கூறுமின் எமக்கே?

நான் வாழக்கூடிய வாழ்நாளையும் பெற்றுப் பண்ணன் வாழ்வானாக. பாணரே! இந்தப் பாணனது சுற்றத்தின் வறுமையைக் காணுங்கள்! புதிய விளைவை உடைய பழுத்த மரத்தில் பறவைக் கூட்டம் ஒலித்தாற் போன்ற. உணவால் உண்டாகும் ஆரவாரம் கேட்கும். தவறாது மழை பெய்யப் போகும் காலத்தைப் பார்த்துத் தம் தம் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தை அடையும் சிறிய நுட்பமான எறும்பு வரிசை கோ, சோற்றைச் சுற்றத்துடன் கூடிய கையினராய் வெவ்வேறாகப் போகின்ற பெரிய சுற்றத்துடன் கூடிய பிள்ளைகளைக்காண்போம். இப்படிப் பார்த்த பின்பும் பவசி வருத்தத்தாலும் வழி நடந்து வந்த வருத்தத்தாலும் மேலும் மேலும் விருப்புக் கொண்டு கேட்கின்றோம். பசிப்பிணியைப் போக்கும் ˙மருத்துவனின் மனை அருகில் உள்ளதோ தொலைவில் உள்ளதோ எங்களுக்குச் சொல்லுங்கள்.

## 12.26.பாடல் : 174

**பாடியவர் : மாறோக்கத்து நப்பசலையார்**

**பாடப்பட்டோன் : மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணன்**

**திணை : வாகை துறை : அரச வாகை**

அணங்குடைஅ வுணர் கணம் கொண்டு ஒளித்தெனச்
சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது,
இருள் கண் கெடுத்த பருதி ஞாலத்து

இடும்பை கொள் பெருவரல் தீரக், கடுந்திறல்
அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு,
அரசு இழந்து இருந்த அல்லல் காலை
முரசு எழுந்து இரங்கும் முற்றமொடு, கரை பொருது
இரங்கு புனல் நெரிதரு மிகு பெருங்காவிரி
மல்லல் நன்னாட்டு அல்லல் தீரப்,
பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணணி நெடுவரை ஆங்கண், ஒய்யெனச்
செருப் புகல் மறவர் செல் புறங்கண்ட
எள் அறு சிறப்பின் முள்;ர் மீமிசை,
அருவழி இருந்த பெருவிறல் வளவன்
மதி மருள் வெண்குடை காட்டி, அக்குடை
புதுமையின் நிறுத்த புகழ் மேம்படுந!
விடர்ப்புலி பொறித்த கோட்டைச் சுடர்ப் பூண்,
சுரும்பு ஆர் கண்ணிப், பெரும் பெயர் நும் முன்
ஈண்டுச் செய் நல்வினை யாண்டுச் சென்று
உணீஇயர்,
உயர்ந்தோர் உலத்துப் பெயர்ந்தனன் ஆகலின்,
ஆறு கொள் மருங்கின் மாதிரம் துழவும்
கவலை நெஞ்சத்து அவலந்தீர,
நீ தோன்றினையே, நிரைத்தார் அண்ணல்!
கல் கண் பொடியக் கானம் வெம்ப,
மல்கு நீர் வரைப்பில் கயல் பல உணங்கக்
கோடை நீடிய பைதறு காலை,
இரு நிலம் நெளிய ஈண்டி,
உரும் உரறு கருவிய மழை பொழிந்தாங்கே

மற்றவரை வருத்தும் அச்சம் பொருந்திய அசுரர் ஞாயிற்றை எடுத்துக் கொண்டு போய் மறைத்தனர். தெலைவில் விளங்கக்கூடிய அஞ்ஞாயிற்றைக் காணாததால் இருளானது உலகத்தாரின் கண்ணை மறைத்த வட்டமான உலகத்தின் நோய் கொண்ட துன்பம் நீங்குமாறு, மிகுந்த வன்மையுடைய மை போன்ற கரிய நிறம் கொண்ட மேனியனான திருமால் அந்த ஞாயிற்றைக்கொண்டு வந்து இந்த உலகத்தின் இரள் நீங்குவதற்காக வானத்தில் நிறுத்தினான். அதுபோலப் பகை மன்னருடன் போரிட்டுத் தோற்றுப் போனதால், மன்னன் நாட்டை விட்டு மறைந்தான். ஆதலால் தம் மன்னனை இழந்த நாடு வருந்தியது. அக்காலத்தில் முரசு ஒலிக்கும் அரண்மனையின் கரையை மோதிடும் நீரால் உடைந்து ஆழ்ந்து ஓடும் மிக்க நீரையுடைய காவிரியையுடைய நாட்டில் துன்பம் நீங்கப் பொய்க்காத நாவையுடைய கபிலனால் புகழ்ந்து பாடப்பட்ட மேகம் பொருந்திய பெரிய மலையில், விரைவாகப் போரை விரும்பும் மறவர் புறங்காட்டி ஓடுதலைக் கண்ட குற்றம் இல்லாத,. மற்றவரால் பார்ப்பதற்கு

அரிய இடத்தில் இருந்த சோழனின் திங்கள் போன்ற வெண் குடையை வெளிப்படுத்தித் தோற்றுவித்து அக்குடைக்குப் புதுமை உண்டாக்கி நிலை பெறச் செய்தாய்! புகழ் மேம்படும் இயல்பு கொண்டவனே! மாலை சூடியவனே! மலைக்குகையில் வாழும் புலியின் வடிவான இலாஞ்சனை எழுதப்பட்ட கோட்டையையும், வண்டுகள் ஒலிக்கும் மாலையையும் மிக்க புகையையும் உடைய உன் தன்தை, இந்த உலகத்தில் செய்யப்பட்ட அறத்தின் பயனைத் தெய்வ உலகில் சென்று அனுவிக்க வேண்டிச் சென்றான். ஆதலால் நல்ல நெறியை அழித்த பக்கம் உடைய திசைகளில் எல்லாம் சூழ்ந்த கவலையுடைய மனதில் வருத்தம் கெட, மலையானது அழிய, காடு தீ மிக, மிக்க நீர் எல்லையையுடைய நீர்நிலைகள் பலவும் வற்ற, பெரிய கோடை பொருந்திய பசுமை எங்கும் நீங்கப் பெற்ற காலத்தில், நிலம் குழிந்து போகும்படி திரண்டு இடி இடித்து மின்னல் முதலியவற்றை உடைய மழை பெய்தாற் போல நீ தோன்றினாய். ஆதலால் இந்த உலகத்துக்குக் குறை யாது இருக்கின்றது? ஒன்றுமில்லை.

## 12.27.பாடல் : 175

**பாடியவர் : கள்ளில் ஆத்திரையனார்**

**பாடப்பட்டோன் : ஆதனுங்கன்**

**திணை : பாடாண்** **துறை : இயன்மொழி**

இவன் ஒரு குறுநில மன்னன். வேங்கடத்தைச் சார்ந்த நாடு இவனுடையது. இப்போது திருமால் கோயில் கொண்டுள்ள பகுதியே ஆதன் நுங்கன் ஆண்ட பகுதி என்பர். இவனைக் கள்ளில் ஆத்திரையனார் என்ற புலவர் பாடியுள்ளார். கள்ளில் என்பது தொண்டை நாட்டில் உள்ள ஊர்.

எந்தை வாழி ஆதனுங்க! என்
நெஞ்சம் திறப்போர் நின் காண்குவரே!
நின் யான் மறப்பின், மறக்குங் காலை,
என் உயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்,
என் யான் மறப்பின், மறக்குவென்,, வென்வேல்
விண் பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண் கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடை கழி அறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத்து அன்ன, நாளும்
பலர் புரவு எதிர்ந்த அறத்துறை நின்னே

ஆதன் நுங்கன் என்ற பெயர் உடையவனே! என் தலைவனே! வெள்ளிவேல், உயர்ந்த குடை, கொடிகள் கட்டப்பட்ட தேர் ஆகியவற்றை உடைய மோரிய மன்னரின் திண்மையான சக்கரம் இயங்குவதற்காக வெட்டப்பட்ட வெள்ளி மலைக்கு அப்பால் உள்ள உலகத்துக்குச் செல்லும் இடை வழியான அந்தப் பிளவுபட்ட வாயினில், தேவர்கள் நிறுத்தப்பட்டு இருபொழுதும் நிலையாக விளங்கும் சூரிய மண்டலத்தைப் போல், நாள்தோறும் இரவு பகல் என்னாது பலரையும் காக்கும் அறத்துறை நீ ஆவாய். நான் ஒன்றைச் சொல்ல நினைத்தால் உன் புகழே அல்லாது

சொல்லாததால் என் நெஞ்சத்தை வெளிப்படுத்திக் காண்பவர் அங்கு உன்னையே காண்பர். உன்னை நான் மறப்பதாயின், மறக்குங் காலத்தைச் சொல்வேன்., கேட்பாயாக, என் உயிர் என் உடலை விட்டு நீங்கும் காலத்தில் என்னை மறக்கும் நிலை உண்டாயின், அப்போது மறப்பேன், அதுவன்றி மற்றைப் போதில் மறவேன். நீ வாழ்க!

## 12.28.பாடல் : 176

**பாடியவர் : புறத்திணை நன்னாகனார் பாடப்பட்டோன் : ஓய்மான் நல்லியக்கோடன்**

**திணை : பாடாண் துறை : இயன்மொழி**

ஓய்மான் நாடு என்பது திண்டிவனத்தைச் சார்ந்த பகுதி. ஓய்மான் என்பது ஓய்மான் நாட்டை உடையவன் என்று பொருள்படும். நல்லியங்கோடன் என்பது இயற்பெயர். ஓவியர் குடியில் தோன்றியவன்.

ஓரை ஆயத்து ஒண்தொடி மகளிர்
கேழல் உழுத இருஞ்சேறு கிளைப்பின்,
யாமை ஈன்ற புலவு நாறு முட்டையைத்
தேன் நாறு ஆம்பல் கிழங்கொடு பொறூஉம்
இழுமென ஒலிக்கும் புனலம் புதவின்
பெரு மாவிலங்கைத் தலைவன், சீறியாழ்
இல்லோர் சொன்மலை நல்லியக்கோடனை
உடையை வாழி என் புணர்ந்த பாலே!
பாரி பறம்பின் பனிச் சுனைத் தெண்ணீர்
ஓரூர் உண்மையின் இகழ்ந்தோர் போலக்
காணாது கழிந்த வைகல், காணா
வழிநாட்கு இரங்கும் என் நெஞ்சம் அவன்
கழிமென் சாயல் காண்தொறும் நினைந்தே

வள்ளல் பாரியினது பறம்பு நாட்டில் குளிர்ந்த சுனையின் தெளிந்த நீர், ஊரில் உள்ளதால், அதனை விரும்பும் போது அருந்தலாம் என்று மனம் நெகிழ்ந்திருப்பவரைப் போல, என் நெஞ்சம் அவன் (நல்லியக்கோடன்) சாயலைக் காணும்போதெல்லாம் (அவனை) காணாமல் கடந்த சில நாட்கள், நாட்கள் அல்ல என்று நினைத்து, அவனுடன் உண்டான நட்பு இன்று போல என்றும் இருக்க வேண்டுமே என்று வரும் நாட்களுக்காக இரங்குகின்றது. என்னுடன் சேர்ந்த விதியே! விளையாட்டுக் கூட்டத்தில் வளையலை அணிந்த மகளிர் கேழல் பன்னி தோன்டிய கரிய சேற்றினைக் கிளறினால் அதில் ஆமை இட்ட புலால் நாற்றம் வீசும் முட்டையைத் தேன் மணம் கமழும் ஆம்பல் கிழங்குடனே பெறும் இயல்புடையது மாவிலங்கை. அது இழும் என ஒலிக்கும் ஓடுகின்ற மதகுகளையுடையது. மாவிலங்கை என்ற ஊர்க்குத் தலைவனும் சிறிய யாழையுடைய வறியவர் பாடும் புகழ் மாலை சூடுபவனுமான நல்லியக் கோடனைத் துணையாக உடையாய்! ஆதலால் உனக்கு என்ன குறை? நீ வாழ்வாயாக!

குறிப்புகள்

## 12.29.பாடல் :177

**பாடியவர் : ஆவூர் மூலங்கிழார்**

**பாடப்பட்டோன் : மல்லிகிழான் காரியாதி**

**திணை : பாடாண் துறை : இயன்மொழி**

மல்லி என்ற ஊரன் தலைவன் காரியாதி. இவன் பரிசிலர்க்கு, வேண்டுவனவற்றை அளிப்பவன். ஆவூர் மூலங்கிழார் அவனுடைய கை வண்மையைக் கண்டார். அதனை இப்பாடலில் விரித்துரைத்துள்ளார்.

ஒளிறு வாள் மன்னர் ஒண் சுடர் நெடுநகர்
வெளிறு கண் போகப் பன்னாள் திரங்கிப்,
பாடிப் பெற்ற பொன் அணி யானை,
தமர் எனின், யாவரும் புகுப, அமர் எனின்
திங்களும் நுழையா எந்திரப்படு பழைக்,
கள் மாறு நீட்ட நணி நணி இருந்த
குறும்பல் குறும்பின் ததும்ப வைகிப்,
புளிச் சுவை வேட்ட செங்கண் ஆடவர்
தீம் புளிக் களாவொடு துடரி முனையின்,
மட்டு அறல் நல் யாற்று எக்கர் எறிக்,
கருங்கனி நாவல் இருந்து கொய்து உண்ணும்
பெரும் பெயர் ஆதி, பிணங்கு அரில் குடநாட்டு
எயினர் தந்த எய்ம்மான் எறிதசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசு வெள் அமலை,
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய,
இரும் பனம் குடையின் மிசையும்
பெரும் புலர் வைகறைச் சீர் சாலாதே.

காரியாதிக்கு வேண்டியவரானால் எல்லாரும் எளிதில் புகுவர். போர் என்றால் சந்திரனும் உள்ளே நுழைய முடியாது. எந்திரப் பொறிகள் பல ஒனுருவர் நீட்டிக் கொடுக்கும் படியாக ஒன்றுக்கு ஒன்று குறுகிய பல அரண்களையுடையது. அத்தகைய அரணில் இருந்து அக்கள்ளை நிறைய உண்டு காலம் கழித்து, பின்பு செருக்கால் புளிச்சுவையை விரும்பும் ஆண் மக்கள் இனிய களாப்பழத்துடன் துடரிப் பழத்தையும் தின்பர். அதிலும் வெறுப்பு ஏற்பட்டால், கரையில் உள்ள மரத்தின் தேன் சிந்துகின்ற நல்ல காட்டாற்றின் மணல் திட்டல் ஏறிக்கரிய நாவல் பழத்தைப் பறித்து உண்பர். இத்தகைய ஊரின் தலைவன் புகழ்பெற்ற ஆதி. அவனது செடி கொடிகள் பின்னிக் கிடக்கின்ற நாட்டை உடைய குடநாட்டில் வேடர் எய்து கொண்டு வந்த எய்ப்பன்னறியின் தசை கலந்த செவ்விய சோற்றுக் கட்டியை வருபவர்க்கு எல்லாம் வரையாது கொண்டு வந்து அவன் கொடுப்பான். கொடுக்க, இரவலர் பெரிய பனை ஓலையால் ஆன குடையிலே பெற்று உண்டு, மகிழ்வர். இத்தகைய இயல்புடைய விடியற்காலையில் காணும் அவனதுத கொடைக் காட்சிக்கு, விளங்கும் வாளையுடைய மன்னரின் ஒளி

பொருந்திய அரண்மனையில் கண் ஒளி கெப் பலநாள் நின்று உலர்ந்து அங்குப் பாடிப்பெற்ற பொன் அணி அணிந்த யானை நிகராகாது.

## 12.30.பாடல் : 178

**பாடியவர் :ஆவூர் மூலங்கிழார்**

**பாடப்பட்டோன் : பாண்டியன் கீரஞ்சாத்தன்**

**திணை : வாகை** **துறை : வல்லாண் முல்லை**

பாண்டியர்க்குக் கீழ்ப்பட்ட குறுநிலத் தலைவன். சாத்தன் என்பது இயற்பெயர். கீரன் என்பது தந்தையின் பெயர். எனவே, கீரன் சாத்தன் என வழங்கப் பெற்றான்.

கந்து முனிந்து உயிர்க்கும் யானையொடு, பணை முனிந்து
கால் இயல் புரவி ஆலும் ஆங்கண்,
மணன் மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணார் ஆயினும் தன்னொடு சூளுற்று,
உண்மென இரக்கும் பெரும் பெயர்ச் சாத்தன்
ஈண்டோர் இன் சாயலனே, வேண்டார்
எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பின்,
கள்ளுடைக் கலத்தர் உள்;ர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபேராளர்
அஞ்சி நீங்கும் காலை,
ஏமமாகத் தான் முந்துறுமே.

தான் கட்டியிருக்கும் கட்டுத்தறியை வெறுத்துப் பெருமூச்சுவிடும் யானையுடன், தான் உள்ள பந்தியை (கொட்டிலை) வெறுக்கின்ற காற்றைப்போன்று விரைவாக ஓடும் குதிரை ஆராவாரம் செய்யும். அங்கு மணல் மிக்க வீட்டு முன் பக்கத்தில் புகுந்த சான்றோர், அப்போது உள்ளார் ஆயினும் தன்னைச்சார்த்திச் சூள் உரைத்து உண்க என வேண்டிக் கொள்ளும் பெரும்புகழ் உடையவன் சாத்தன். இத்தகைய அவன் எம் போன்றவரிடத்தில் மென்மையான இயல்புடையவன். ஆயினும், பகைவர் எறியும் படைக்கலம் மிக்க அஞ்சதக்க போர்க்களத்தில் வீர பானத்தையுடைய கலம் கொண்டவராய், அதனை உடைய செருக்கினாலே ஊரினுள் சொன்ன வீரமுடைய சொல்லைப் போரில் மறந்த சிறிய பேராண்மையுடையவர், அச்சம் கொண்டு போர்க்களத்தினின்று புறம்காட்டி ஓடும்போது அவர்க்கு அரணாக, அவன் முன் நின்று காப்பான்.

## 12.31.பாடல் : 179

**பாடியவர் : வடநெடுந்தத்தனார்**

**பாடப்பட்டோன் : நாலை கிழவன் நாகன்,**

**திணை : வாகை** **துறை : வல்லாண் முல்லை**



நல்லூர் என்பது நாலை என்று மருவியது. பாண்டிய நாட்டில் உள்ளது நாலூர். அருப்புக்கோட்டைப் பகுதியில் உள்ளது என்பர். அந்த

ஊருக்குத் தலைவன் 'நாலை கிழான்' எனப் பெற்றான். நாகன் என்பது இயற்பெயர்.

"ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென,
ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை
மலர்ப்போர் யார்?" என வினவலின், மலைந்தோர்
விசி பிணி முரசமொடு மண் பல தந்த
திருவீழ் நுண் பூண் பாண்டியன் மறவன்,
படை வேண்டுவழி வாள் உதவியும்
வினை வேண்டுவழி அறிவு உதவியும்,
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து
அசை நுகம் படாஅ ஆண் தகை உள்ளத்துத்
தோலா நல்லிசை நாலை கிழவன்
பருந்து பசி தீர்க்கும் நற்போர்த்
திருந்து வேல் நாகன் கூறினர் பலரே.

இந்த உலகத்தில் கொடைத் தன்மையுடையவர் இறந்துபோக, அதனாா் பிறரிடம் சென்று ஏற்காமல் கவிழ்நதுபோன என் உண்கலத்தை, உண்ணும் உணவை இட்டு மலர்த்த வல்லவர் யார் என்று கேட்டோம். அப்போது. பகைவரின் வலித்துக் காட்டப்பட்ட முரசத்துடன் நாடு பலவற்றை வென்று கொண்ட திருமகள் விரும்புனம் நுட்பமான அணி பலவற்றையும் உடைய பாண்டியனின் மறவன், பாண்டியனுக்குப் படை வேண்டும் போது படை உதவியும், அரசியல் கருமச் சூழ்ச்சி வேண்டும்பொதுஅமைச்சியலுடன் நின்று அறிவு உதவியும் வருபவன். இவ்வாறு பல விதமாக உதவி, தான் பூண்ட நுகம் ஒரு பக்கத்தில் சாய்ந்து தாழ்ந்து தளராமல் செலுத்தும் பகட்டைப் போல் வீரத்திர்லும் சூழ்ச்சியிலும் தளர்ச்சி அடையாத வீரம் பொருந்திய ஊக்கத்தையும், தோலவி காணாத நல்ல புகழையும் உடைய நாலை கிழவனும் பருந்தின் பசி தீர்க்கும் நல்ல போரைச் செய்யும் திருந்திய வேலைக் கொண்ட நாகனுமான வள்ளல் உள்ளான் என்று பலரும் கூறினர். அதனாா் உன்னிடம் யாம் வந்தோம்.

## 12.32.பாடல் : 180

**பாடியவர் : கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் -**

**பாடப்பட்டோன் : ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன்**

**திணை : வாகை துறை : வல்லாண் முல்லை, பாணாற்றுப்படை**

நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென் மறுக்கும் சிறுமையும் இலனே
இறையுறு விழுமம் தாங்கி அமர் அகத்து
இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண் நோய் தீர்ந்து
மருந்து கொள் மரத்தின் வாள் வடு மயங்கி
வடுவின்றி வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்து
ஈர்ந்தையோனே, பாண் பசிப் பகைஞன்,

ஈர்ந்தையோனே, பாண் பசிப் பகைஞன்,
இன்மை தீர வேண்டின் எம்மொடு
நீயும் வம்மோ முதுவாய் இரவல!
யாம் தன் இரக்கும் காலைத் தான் எம்
உண்ணா மருங்குல் காட்டித் தன் ஊர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்து இலை நெடுவேல் வடித்திசின் எனவே.

பாணரின் பசியைப்பொக்குபவன் ஈர்ந்தை என்ற ஊரிலே உள்ளான். அவன் நாள்தோறும் தொடர்ந்து கொடுக்கும் செல்வம் பெற்றவன் அல்லன். இங்ஙனம் வறியவனாயினும் தன்னிடம் வந்து இரந்தவர்க்கு இல்லை என்று சொல்லி மறுக்குடம் கீழான குணம் கொண்டவன் இல்லை. மற்ற மன்னர்க்குப் போரால் வந்த துன்பத்தைத் தான் பொறுத்து, அந்தப் போரில் படைக்கலங்கள் ஏற்படுத்திய சிறந்த புண்ணான நோய் நீங்கி, மருந்து எடுத்த (பால் எடுக்கப்பட்ட அத்தி) மரத்தினைப் போல வாளால் உண்டான வடுக்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து விளங்கும் ஆண்மைக் குறைவின்மை உடையவன். வசையில்லாத உடலை உடையவன். கொடைத் தன்மையை மேற்கொண்டவன். அவனிடம் சென்று அவனை இரந்தால், அவன்எம் பசித்த வயிற்றைக்காட்டித் தன் ஊரில் உள்ள கருங்கையையுடைய கொல்லனைத் திருந்திய வேலை வடித்துத் தருவாயாக என்று வேண்டிக் கொள்வான். முதிய வாயையுடைய இரவல! உன் பசி நீங்க வேண்டுமானால்என்னுடன் வா!

## 12.33.பாடல் : 181

**பாடியவர் : சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.**

**பாடப்பட்டோன் : வல்லார் கிழான் பண்ணன்,**

**திணை : வாகை துறை : வல்லாண் முல்லை**

மன்ற விளவின் மனை வீழ் வெள்ளில்,
கருங்கண் எயிற்றி காதல் மகனொடு,
கான இரும் பிடிக் கன்று தலைக்கொள்ளும்
பெருங்குறும்பு உடுத்த வன்புல இருக்கைப்
புலாஅ அம்பின் போர் அருங்கடி மிளை
வலாஅரோனே, வாய்வாள் பண்ணன்,
உண்ணா வறுங்கடும்பு உய்தல் வேண்டின்,
இன்னே சென்மதி நீயே, சென்று அவன்
பகைப்புலம் படரா அளவை நின்
பசிப் பகைப் பரிசில் காட்டினை கொளற்கே.

மன்றத்தினிடையே (பொதுவிடத்தில்) வளர்ந்துள்ள விளாமரத்தின் மனையில் எழுந்த விளாம்பழத்தைக் கரிய கண்ணையுடைய மறத்தியரின் புதல்வனுடனே, காட்டில் வாழும் கரிய யானையினது கன்றும் வந்து எடுக்கும் இயல்புடை பெரிய அரண் சூழ்ந்த வன்மையான நிலத்தின் ஊரான இருப்பினையும், புலால் நாறும் அம்பையும் உடைய வல்லார் என்ற ஊரில்

குறிப்புகள்

உள்ளான், தப்பாத வாளையுடைய பண்ணன், உணவு உண்ணாத நின் வறி சுற்றம் உண்டு பிழைக்க வேண்டின், அவன் அயலூரக்குச் செல்லாதபோதே, உன் பசிக்குப் பகையான பரிசிலை, உன் வறுமையைக் காட்டிப் பெற்றுக்கொள்வதற்கு, இப்போதே நீ செல்வாயாக!

## 12.34.பாடல் : 182

**பாடியவர் : கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

**திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி**

பாண்டிய நாட்டு மக்கள் அயல்நாட்டுக்கச்சென்று வாணிகம் செய்து வந்தனர். மன்னர் அயல்நாட்டுக்குச் சென்று போர் தொடுத்தனர். அவ்வாறு செல்லும் படைவீரர் கொண்ட கலங்களுள் அரசகுமரரும் செல்வது வழக்கம். பாண்டிய அரசகுமரருள் இளம்பெருவழுதி ஒருகால் கலத்தில் சென்றான். கல் கவிழ மாண்டான். அவ்வாற அவன் மாள்வதற்கு முன்னம் சான்றோரின் இயல்பை வியந்து விதந்து பாடுவானாயினன்.

உண்டால் அம்ம இவ்வுலகம். இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிது, எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்,
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர், அயர்விலர்,
அன்ன மாட்சி அனையராகித்,
தமக்கென முயலா நோன் தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மையானே.

தேவர்க்ள உண்ணும் அமிழ்தமே கிடைப்பதாயினும ்அதைத் தனித்திருந்து உண்ணார். யாரையும் வெறுக்க மாட்டார், மற்றவர் அஞ்சுவதற்றுகுத் தாமும் அஞ்சுவர். சோம்பி இரார், புகழ் பொருட:டு உயிரையும் தருவர். பழியுடன் வருவதாயின் உலகம் முழுவரையும ஆள்வதாயினும் அதனை வேண்டார். கவலை கொள்ளார். இத்தகைய சான்றோர் - பிறர் நல் பேணும் இயல்புடையோர் உள்ளதால் இவ்வுலகம் உளதாகின்றது என்று பாடினார்.

## 12.35.பாடல் : 183

**பாடியவர் : ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்**

**திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி**

சிலப்பதிகாரக் கோவலனைக் கொல்வித்தவன் இவனே ஆவான். இவன் புலி மன்னனாய் விளங்கியதுடன் கவிமன்னனாகவும் விளங்கினான். கல்வியின் சிறப்பை இதில் அவன் விளக்குகிறான்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே,
பிறப்பு ஓரன்ன உடன் வயிற்று உள்ளும்,
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்,
ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்

குறிப்புகள்

‘மூத்தோன் வருக என்னாது’ அவருள்
அறிவுடையோன் ஆறு அரசம் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே.

பிறப்பினால் ஒரே தன்மை கொண்ட ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்களுக்குள்ளும் கல்விச்சிறப்புக் காரணமாகப் பெற்றெடுத்த தாயும் மனம் வேறுபடுவாள். ஒரு குடியிலே பிறந்த பலருள்ளும் கல்வி கற்காத காரணத்தாலா் மூத்தவனை வருக என்று அழைக்காமல், அவர்களுக்குள் அறிவுடையவன் செல்லும் வழியிலேயே அரசன் தன் அரசியலை நடத்துவான். வேறுபாடுள்ள நான்கு குலங்களுள்ளும், கீழ்க்குலத்துள் பிறந்த ஒருவன் அகல்வி கற்றால் மேல் குலத்திலுள்ள ஒருவனும் அவனை வணங்கவான். ஆதலால் ஒருவன் தன் ஆசிரியர்க்குத் துன்பம் நேர்ந்துவிடத்து அவர்க்கு உதவி செய்தும், மிக்க பொருளைத் தந்தும் அவர்க்கு வழிபாடு செய்யும் தன்மையை வெறுக்காமலும் கற்பது நலம்.

## 12.36.பாடல் : 184

**பாடியவர் : பிசிராந்தையார்**

**பாடப்பட்டோன் : பாண்டியன் அறிவடைநம்பி**

**திணை : பாடாண்** **துறை : செவியறிவுறூஉ**

காய் நெல் அறுத்துக் கவளங்கொளினே,
மா நிறைவு இல்லதும் பன் நாட்கு ஆகும்
நூறு செறு ஆயினும் தமித்துப் புக்கு உணினே,
வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே.
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போலத்,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

ஒரு மா என்னும் அளவை விடக்குறைந்த நிலமேயாயினும் விளைந்த நெல்லைக்கொண்டு வந்து யானைக்குக் கவளமாக்கிக் கொடுக்கப் பெற்றால், அது யானைக்குப் பல நாட்களுக்கு உணவாக ஆகும். நூறு செய் அளவுடைய பெரிய நிலமாயினும் அதனுள் யானை தானே தனியாய்ப் புகுந்து உண்ணத் தொடங்கினால், அந்த யானையின் வாயினால் உண்ணும் நெல்லைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான நெல்லை அதன் கால் மிதித்து மிகுதியானதைக் கெடுத்துவிடும். அவ்வாறே அறிவுடைய மன்னன் ஒருவன் குடி மக்களிடமிருந்து வரி வாங்கம் நெறியை அறிந்து வாங்குவானானால், அவனது நாட்டில், வாழும் குடிமக்கள்

அவனுக்குக் கோடிக்கணக்கான பொருளை த் தந்து தாங்களும் மிகுதியாய்த் தழைப்பர். மன்னன் அந்நெறியை அறியும் அறிவற்றவனாகி நாள்தோறும் தகுதி அறியததவரும் உறுதி கூறாதவருமான, மன்னன் விரும்பியதையே விரும்பிப் பேசும் இயல்புடைய ஆரவாரம் உடைய அமைச்சர்களுடன் கூடி, கொண்ட அன்பு கெடும்படி வாங்கும் வரியை விரும்புவானாயின், அந்த யானை புகுந்த விளைநிலத்தைப் போல, தானும உண்ணப் பெறான், உலகமும் அழியும்

## 12.37.பாடல் : 185

**பாடியவர் : தொண்டைமான் இளந்திரையன்**

**திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி**

கால் பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவல் சாகாடு உகைப்போன் மாணின்,
ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே
உய்த்தல் தேற்றான் ஆயின், வைகலும்
பகைக் கூழ் அள்ளல் பட்டு,
மிகப் பல் தீ நோய் தலைத்தலைத் தருமே.

சக்கரத்தையும் பாரையும் கோத்து உலகத்தில் செலுத்தப்படும் காவலையுடைய வண்டி, அதனைச் செலுத்துபவன் மாட்சிமை உடையவனாக விளங்கினால், இடர்ப்பாடில்லாது வழியில் இனிதாகச் செல்லும். அவ்வண்டியை நன்கு செலுத்துதலை அவன் அறியானாயின். அது நாள்தோறும் பகையான செறிந்த சேற்றிலே அழுந்தி மிகப்பல தீய துன்பத்தை மேன் மேலும் கொடுக்கும்.

## 12.38.பாடல் : 186

**பாடியவர் : மோசி கீரனார்**

**திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி**

நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் 'யான் உயிர்' என்பது அறிகை,
வேல் மிகு தானை வேந்தற்குக் கடனே.

பரந்த இடத்தையுடைய இந்த உலகம் மன்னன் என்ற உயிரை உடையது. அதனால், இவ்வுலகத்தவர்க்கு நெல் என்பது உயிர் அன்று. நீரும் உயிர் அன்று. நான் இந்த உலகத்துக்கு உயிர் என்பதை அறிதல், வேல்கள் மிக்க படையை உடைய மன்னனுக்குக் கடமையாகும்.

## 12.39.பாடல் : 187

**பாடியவர் : ஔவையார்**

**திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி**

நாடாக ஒன்றோ, காடாக ஒன்றோ,
அவலாக ஒன்றோ, மிசையாக ஒன்றோ,
எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

நிலமே! நீ ஒன்றில் நாடே ஆகுக. அதுவன்றி ஒள்றில் காடே ஆகுக. ஒன்றில் பள்ளமே ஆகுக! அதுவன்றி ஒன்றில் மேடே ஆகுக. அ.்.து எவ்வறாயினும் எவ்விடத்தில் ஆண் மக்கள் நல்லவரோ, அவ்விடத்தில் நீயும் நல்லை! அதுவன்றி நினக்கு என ஒரு நலமும் உடையை அல்லை! நீ வாழ்க!

## 12.40.பாடல் : 188

**பாடியவர் : பாண்டியன் அறிவுடை நம்பி,**

**திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி**

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறு கை நீட்டி,
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்,
பயக்குறை இல்லைத் தாம் வாழு நாளே.

பெறக்கூடிய செல்வங்கள் பலவற்றையும் பெற்றுப் பலருட்ன உடனிருந்து உண்ணும் உடைமை மிக்க செல்வராக இருப்பினும், குறுகக் குறுக நடந்து சென்று சிறிய கையினை நீட்டிக் கலத்தில் உள்ளதைத் தரையிலே இட்டும் பிசைந்து தோண்டியும் வாயால் கவ்வியும் கையால் துழாவியும் நெய் கலந்த சோற்றை உடம்பில் படுமாறு சிதறியும், இங்ஙனம் அறிவை இன்பத்தார் மயக்கும் மைந்தரைப் பெறாதவர்க்குத் தாம் வாழ்கின்ற நாளில் பயனாகிய முடிக்கப்படும் பொருள் இல்லை.

## 12.41.பாடல் : 189

பாடியவர் : மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி,
வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்,
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி, உடுப்பவை இரண்டே,
பிறவும் எல்லாம் ஓரொக்குமே,
அதனால் செல்வத்துப் பயனே ஈதல்,
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே.

தெளிவான நீரால் சூழப்பட்ட இவ்வுலகம் முழுவதையும் மற்ற மன்னவர்க்ககும் பொது வாதலன்றித் தமக்கே உரியதாக ஆண்டு வெண்கொற்றக் குடையால் நிழல் செய்யும் ஒரு தன்மை கொண்டர்க்கும். நள்ளிரவிலும் பகலிலும் உறங்காதவனாய் விரைவாக ஓடுகின்ற விலங்ககளை வேட்டையாடி வீழ்த்த எண்ணுகின்ற கல்வியில்லாத ஒருவனுக்கும் (ஆகிய அவ்விருவர்க்கும்) உண்ணப்படும் பொருள் நாழி அளவாகும். உடுக்கப்படும் உடை மேலே ஒன்றும் இடையிலே ஒன்றுமாக

குறிப்புகள்

இரண்டேயாகுமட் மற்றவை எல்லாமும் இப்படியே ஒக்கும். ஆகவே, ஒருவன் தான் படைக்கும் செல்வத்தால் பெறும் பயன் மற்றவர்க்குக் கொடுத்தலாகும். அவ்வாறன்றி யாமே அனுபவிப்போம் என்று எண்ணினால் தவறுவன பலவாகும்.

## 12.42.பாடல் : 190

**பாடியவர் : சோழன் நல்லுருத்திரன்**

**திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி**

விளை பதச் சீறிடம் நோக்கி, வளை கதிர்
வல்சி கொண்டு அளை மல்க வைக்கும்
எலி முயன்றனையர் ஆகி, உள்ள தம்
வளன் வலி உறுக்கும் உளம் இலாளரோடு
இயைந்த கேண்மை இல்லாகியரோ!
கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென,
அன்று அவண் உண்ணாதாகி வழிநாள்,
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து,.
இருங்களிற்று ஒருத்தல் நல் வலம்படுக்கும்
புலி பசித்தன்ன மெலிவு இல் உள்ளத்து,
உரனுடையாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உளவாகியரோ.

விளைந்த விளைவையுடைய சிறிய இடத்தைப் பார்த்து வளைந்த நெற்கதிரான உணவைக்கொண்டு தன் வளையில் வைக்கும் எலி முயன்றாறா்போன்ற சிறிய முயற்சியையுடையவராகித் தம்மிடம் உள்ள செல்வத்தை, அனுபவிக்காது இறுப் பிடித்துச் சேர்த்து வைக்கும் ஊக்க உயர்வு இல்லாதவருடன் பொருந்திய நட்பு! இலலையாகுக. அஞ்சாமை கொண்ட கேழல் பன்றியானது (காட்டுப்பன்றி) தன் இடப் பக்கமாக வீழ்ந்ததால், அன்று அதனை உண்ணாமல் நீங்கிப் பின்நாள், பெரிய மலையில் தன் குடையில் தனிமைப்பட உணவை விரும்பி எழுந்து பெரிய ஆண் யானை நல்ல வலப் பக்கத்தி வீழ்த்தும் தன்மையுடைய புலி பசிததாற் போன்ற குறையில்லாத மேற்கோளையுடைய வன்மையுடையவர் நட்புடன் பொருந்திய நாட்கள் எனக்கு உள்ளனவாகுக.

## 12.43.பாடல் : 191

**பாடியவர் : பிசிராந்தையார்**

**திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி**

யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்,
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்,
யான் கண்ட அனையர் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும், அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர், யான் வாழும் ஊரே

பிசிராந்தையாரே! உங்களுள்கku வயது பலவாக இருக்கவும் நடை உண்.ாகாது இருப்பதை எவ்வாறு பெற்றீர்? என்று என்னை நோக்கிக் கேட்பீரானால், சிறந்த குணமும் செயலும் உடைய என் மனைவியுடனே. என் மக்களும் அறிவு நிரம்பப் பெற்றவராக உள்ளனர். என் பணிமாக்களும் நான் நினைப்பதையே தாங்களும் நினைத்துச் செயல்களைச் செய்து முடிப்பர். என் நாட்டு மன்னனும் குடிமக்களுக்கு அறமல்லாதவற்றைச் செய்து காப்பவனாக விளங்குகின்றான். அதன் மேலும், நான் வாழ்கின்ற ஊரில் நற்குணங்கள் அமைந்து, ஐம்புலன்களும் அடங்கப்பெற்று, உயர்ந்தவரிடத்திரல் பணிந்து நடக்கும் கொள்கையையுடைய சான்றோர் பலர் வாழ்கின்றனர். ஆதலால் எனக்கு நரை தோன்றவில்லை. யானும் முதுமை அடையாதவனாய் உள்ளேன் என்று சான்றோரை நோக்கிப் பிசிராந்தையார் உரைத்தார்.

## 12.44.பாடல் : 192

**பாடியவர் : கணியன் பூங்குன்றனார்,**

**திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி**

யாதும் ஊரே, யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர் தரவ ாரா,
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன,
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே, முனிவின்
இன்னாது என்றலும் இலமே, மின்னொடு
வானம் தண் துளி தலைஇ ஆனாது
கல் பொருது இரங்கும் மல்லற் பேர் யாற்று
நீர் வழிப்படூஉம் புணை போல, ஆருயிர்
முறை வழிப்படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

தீமையும் நன்மையும் தாமாகவே உண்டாவதல்லால் மற்வராரல் உண்டாகாது. துன்பம் அடைவதும் அது நீங்குதலும் அத்தீமை நன்மைகளைப் போலவே ஆகும். உலகத்தில் தோன்றியவர் இறப்பதும் புதிதாக உண்டாவதன்று, தாயின் கருவில் தோன்றிய நாள் தொடங்கியபோதே உண்டாகி இருப்பதாகும். இவ்வாறு உள்ளமையால் உயிர் வாழ்வை இனியது என்று மகிழ்ச்சிவாழ்வதைத் துன்பம் அளிக்கக் கூடியது என்று வெறுத்ததும் இல்லை. மின்னலுடன் மேகம் மேலும் குளிர்ந்த மழைத்துளிகளைப் பெய்தலால் அமையாது கற்களை மோதி ஒலிக்கின்ற வளமான பெரிய ஆற்றின் நீரின் வழியெ செல்கின்ற தெப்பத்தைப் போல், அரிய உயிர் ஊழின் வழியே செல்லும் என்பதை நன்மையின் இயல்பை அறிந்தவர் உரைத்த நூலால் நாம் அறிந்தோம். ஆதலால் நன்மையால் சிறந்து விளங்கும் பெரியோரை மதிப்பதும் இல்லை.

குறிப்புகள்

சிறியவரை அவமதித்தல் பெரியவரை மதித்தலைக் காட்டிலும் அதிகமாக உடையோம் இல்லை. ஆதலால் எங்கட்கு எல்லா ஊர்களும் எம் ஊர்களாகும். எல்லாரும் உறவினரே ஆவர்.

## 12.45.பாடல் : 193

பாடியவர் : ஓர் ஏர் உழவனார்

திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி

அதள் எறிந்தன்ன நெடுவெண்களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல,
ஓடி உய்தலும் கூடும் மன்,
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே.

தோலைத் திருப்பி வைத்தாற் போன்ற பெரிய வெண்மையான களர் நிலத்தில் ஒருவனால் துரத்தப்படும் மானானது தப்பிச் சென்று பிழைக்குமாறு போல் யானும் நல்ல நெறியில் போய்ப் பிழைக்கவும் கூடும். ஆனால் உறவினருடன் கூடி வாழும் வாழ்க்கை மேலே செல்லவொட்டாது காலைத் தடுக்கும். ஆதலால் உய்தல் முடியாததாக உள்ளது!

## 12.46.பாடல் : 194

பாடியவர் : பக்குடுக்கை நன்கணியார்

திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி

ஓரில் நெய்தல் கறங்க, ஓர் இல்
ஈர்ந் தண் முழவின் பாணி ததும்பப்,
புணர்ந்தோர் பூ அணி அணியப், பிரிந்தோர்
பைதல் உண்கண் பனி வார்பு உறைப்பப்,
படைத்தோன் மன்ற அப் பண்பிலாளன்,
இன்னாது அம்ம இவ்வுலகம்,
இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே.

ஒரு வீட்டிலே சாவுக்குரிய பறையானது ஒலிக்கவும், மற்றொரு வீட்டில் திருமணத்துக்குரிய முரசு மிகுந்து ஒலிக்கவும், தம் தம் கணவருடன் கூடிய மகளிர் பூவணியை அணியவும், தம் தம் தலைவரைப் பிரிந்த மகளிரின் வருத்தத்தையுடைய கண்கள் நீர் வடிந்து துளிக்கவும், அந்த நல்ல இயல்பு இல்லாத நான்முகன் படைக்கும் போதே இவ்வாறு இருவேறு நிலைகளை உறுதியாய்ப் படைத்துவிட்டான். இத்தகைய இயல்புடைய இந்த உலகத்து இயற்கை கொடியது. இந்த உலகத்தின் இயல்பை உணர்ந்தவர் வீட்டின்பத்தை அளிக்கும் நல்ல செயல்களை அறிந்து செய்வார்களாக!



## 12.47.பாடல் : 195

பாடியவர் : நரிவெரூஉத்தலையார்

திணை : பொதுவியல் துறை பொருண்மொழிக் காஞ்சி

பல் சான்றீரே! பல் சான்றீரே!
கயல் முள் அன்ன நரை முதிர் திரை கவுள்,
பயன் இல் மூப்பின் பல் சான்றீரே!

கணிச்சிக் கூர்ம் படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ,
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,
அல்லது செய்தல் ஓம்புமின், அது தான்
எல்லாரும் உவப்பது அன்றியும்,
நல் ஆற்றுப்படூஉம் நெறியுமார் அதுவே.

பல நல்ல குணங்களை உடையவர்களே! பல நல்ல குணங்களை உடையவர்களே! கயல் மீனின் முள்ளைப் போன்ற நரை மயிர் மிக்க, சுருங்கிய கன்னங்களையும் பயன் இல்லாத முதுமையையும் உடைய பல நற்குணங்களையுடையவரோ! மழு என்ற கூர்மையான படைக்கலத்தையும் மிகுந்த வலிமையயும் உடைய கூற்றுவன் உங்களைப் பாசக்கயிற்றால் கட்டிக்கொண்டு போகுங் காலத்தில் நீங்கள் மற்றவர்க்கு நன்மைகளைச் செய்யாது போயினும் தீவினையைச் செய்வதைக் கைவிடுங்கள். அதுதான் எல்லாராலும் புகழ்ந்து போற்றப்படுவதாகும். அன்றியும் உங்களை நல்ல நெறியில் செலுத்தும் வழியும் அதுவேயாகும்.

## 12.48.பாடல் : 196

**பாடியவர் : ஆவூர் மூலங்கிழார்**

**பாடப்பட்டோன் : பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்**

**திணை : பாடாண் துறை : பரிசில் கடாநிலை**

ஒல்லுவது ஒல்லும் என்றலும், யாவர்க்கும்
ஒல்லாது இல்லென மறுத்தலும், இரண்டும்
ஆள் வினை மருங்கின் கேண்மைப் பாலே
ஒல்லாது ஒல்லும் என்றலும், ஒல்லுவது
இல்லென மறுத்தலும், இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும், புரப்போர்
புகழ் குறைபடூஉம் வாயில் அத்தை,
அனைத்தாகியர் இனி இதுவே எனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டனம்,. அதனால்,
நோயிலர் ஆகநின் புதல்வர், யானும்
வெயிலென முனியேன், பனியென மடியேன்,
கல் குயின்றன்ன என் நல்கூர் வளி மறை
நாணலது இல்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியல் குறுமகள் உள்ளிச்
செல்வல் அத்தை சிறக்க நின் நாளே!

ஒருவர் தம்மால் கொடுக்கக் கூடியதைக் கொடுக்க இயலும் இயலாததைக் கொடுக்க இயலாது என்று சொல்லி மறுத்தலும் என்ற இந்த இவ்விரண்டும ˙கொடைத் தன்மையுடையவரின் இயல்புகள், தம்மால் கொடுக்க முடியாதவற்றைக் கொடுக்க முடியும் என்று கூறுவதலும், கொடுக்க முடியாது மறுத்தலும் என்ற இந்த இரண்டும் இரப்பவரை வருந்தச் செய்வனவாகும். அதுவே அல்லாமலும் கொடுக்கும் கொடையாளரின்

குறிப்புகள்

புகழும் குறைகின்ற வழியுமாகும். இப்போது என்னிடம் நீ செய்த செயலும் அத்தன்மையுடையதே! இச்செயல் எம்மவர் முன்பு காணாதது. இதனை யாம் கண்டோம். நின் மக்கள் நோயில்லாது இருப்பாராக! நானும் வெயிலாக உள்ளது என்று எண்ணி (என் ஊருக்குச் செல்வதை) வெறுக்காமல், பனி என்று கருதிச் செல்வதை விடுத்துச் சோம்பியிராமல், கல்லால் செய்தது போன்ற என் வறுமை மிகுதியால் காற்று மறைவிடமான வீட்டில், நாணம் அல்லாது வேறில்லாத கற்பினையும் ஒளியுடைய நெற்றியையும் மென்மையான இயலையும் உடையவளை எண்ணிச் செல்வென். நின் ஆயுள் சிறப்பதாகுக!

## 12.49.பாடல் :197

**பாடியவர் : கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார். -**

**பாடப்பட்டோன் : சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்**

**திணை : பாடாண் துறை : பரிசில் கடாநிலை**

வளி நடந்தன்ன வாஅய்ச் செலல் இவுளியொடு
கொடி நுடங்கு மிசைய தேரினர் எனாஅக்,
கடல் கண்டன்ன ஒண் படைத் தானையொடு
மலைமாறு மலைக்கும் களிற்றினர் எனாஅ,
உரும் உடன்றன்ன உட்குவரு முரசமொடு
செரு மேம்படுஉம் வென்றியர் எனாஅ,
மண்கெழு தானை ஒண் பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வல் வியத்தலோ இலமே,
எம்மால் வியக்கப்படுஉமோரே,
இடு முள் படப்பை மறி மேய்ந்து ஒழிந்த
குறு நறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்,
சீறூர் மன்னர் ஆயினும் எம் வயின்
பாடறிந்து ஒழுகும் பண்பினோரே,
மிகப் பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சியில்லோர் உடைமை உள்ளேம்,
நல்லறிவுடையோர் நல்குரவு
உள்ளுதும் பெரும, யாம் உவந்து நனி பெரிதே.

பெரு! காற்று வீசுவதைப்போன்று தாசி சல்லெலும் வேக் கதியையுடைய (ஓட்டத்தையுடைய) குதிரையுடன், கொடி அசையும் உச்சியையுடைய தேர்களை உடையவர் என்றும் , கடலைப் பார்த்தாற் போல் ஒளியுடைய ஆயுதங்களையுடைய படைகளுடனே, மலையுடனே சினந்து போரிடுகின்ற யானைகளையுடையவர் என்றும். இடி இடித்தாற் போன்ற அச்சம் பெருந்திய முரசடனே போரில் மேம்படும் வெற்றியினை உடையவர் என்றும், நிலத்தைப் பொருந்தியபடையையுடைய ஒளியுடைய பூணையுடைய மன்னரின் வெண்கொற்றக்குடை நிழல் செய்கின்ற அரச செல்வத்தை யாம் மதிக்கமாட்மோட். கட்டப்பட்ட முள்வேலியை உடைய

தோட்டத்து, மறியானது தின்றது போக மிஞ்சி நின்ற குறுகிய மணத்தையுடைய முஞ்ஞை என்ற செடியினது கொழுமையான கணுவில் தோன்றிய சிறிய இலையை, புன்மையான நிலத்தில் விளைந்த வரகரிசிச் சோற்றுடன் பெறுகின்ற சிறிய ஊரையுடைய மன்னரேயாயினும், எம்மிடத்தில் செய்யும் முறையை அறிந்து நடக்கும் குணத்தையுடையவர்களே எம்மால் மிக்கப்படுபவர்கள் ஆவார்கள். யாம் மிகப் பெரிய துன்பம் அடைந்தாலும் சற்றும் அறிவற்றவரின் செல்வம் பயன்படாததால் அச்செல்வத்தை நினைக்க மாட்டோம். நல்லறிவுடையோரின் வறுமையானது, பயன்படுவதால் அதனையே யான் விரும்பி மிகவும் நினைப்போம்

**12.50.பாடல் : 198 பாடியவர் : வடம வண்ணக்கன் பேரிசாத்தனார்**

**பாடப்பட்டோன் : பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்.**

**திணை : பாடாண் துறை : பரிசில் கடாநிலை**

"அருவி தாழ்ந்த பெரு வரை போல
ஆரமொடு பொலிந்த மார்பின் தண்டாக்,
கடவுள் சான்ற கற்பின், சேய் இழை
மடவோள் பயந்த மணி மருள் அவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிக" என்று ஏத்தித்,
திண் தேர் அண்ணல் நின் பாராட்டிக்,
காதல் பெருமையின் கனவினும் அரற்றும் என்
காமர் நெஞ்சம் ஏமாந்து உவப்ப,
ஆல் அமர் கடவுள் அன்ன நின் செல்வம்,
வேல் கெழு குருசில் கண்டேன் ஆதலின்
விடுத்தனென், வாழ்க நின் கண்ணி! தொடுத்த
தண் தமிழ் வரைப்பு அகம் கொண்டியாகப்,
பனித்துக் கூட்டுண்ணும் தணிப்பு அருங் கடுந்திறல்
நின்னோரன்ன நின் புதல்வர், என்றும்
ஒன்னார் வாட அருங்கலம் தந்து, நும்
பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்த நின்
முன்னோர் போல்க, இவர் பெருங்கண்ணோட்டம்!
யாண்டும் நாளும் பெருகி ஈண்டு திரைப்
பெருங்கடல் நீரினும் அக்கடல் மணலினும்,
நீண்டு உயர் வானத்து உறையினும், நன்றும்
இவர் பெறும் புதல்வர்க் காண்தொறும் நீயும்
புகன்ற செல்வமொடு புகழ் இனிது விளங்கி,
நீடு வாழிய நெடுந்தகை! யானும்
கேள் இல் சேஎய் நாட்டின் எந்நாளும்,
துளி நசைப் புள்ளின் நின் அளி நசைக்கு இரங்கி
நின்
அடி நிழல் பழகிய அடி உறை

கடு மான் மாற மறவாதீமே.

திண்ணிய தேரையடைய மன்ன! அருவியானது பொருந்தி யமலை போல மாலையுட்ன் விளங்கம் நின்மார்பில், வேட்கை தணியாத தெய்வத் தன்மை பொருந்திய கற்பையும், சிவந்த அணிகளையும் அணிந்த உன் மனைவி பெற்ற, பவழத்தைப் போன்ற அழகிய வாயையும் கிண்கிணி என்ற அணியையும் அணிந்த நின் மைந்தர் மேன்மையுடன் விளங்கக என்று வாழ்ததி நின்னைப் பாராட்டி நீ தரும் பரிசில் மீது வைத்த அன்பு பெரியதாதலால் கனவினும் உன் புகழையே என் விருப்பம் பொருந்திய நெஞ்சம் கூறும். இத்தகைய என் நெஞ்சம் மகிழ ஆல இலையில் பள்ளி கொண்ட திருமால் போன்ற உன் செல்வத்தை எல்லாம், வேலையுடைய தலைவ! நான் பார்த்தேன். ஆதலால், உன்னிடம் இப்போது விடை பெற்றேன். நின் தலைமாலை வாழ்க! தொடர்புடைய தமிழகம் முழுதும் கொள்ளையாகக்கொண்டு, நின் பகைவரை வென்று அவர்கள் பொருள் களையும் பெற்று உண்ணும் குறைக்க இயலாத மிக்க வன்மை உடைய உன்னைப் போன்ற வன்மை உடைய உன் மைந்தர், எக்காலத்தும் பகைவர் வருந்த வென்ற அவர்களடைய செல்வத்தைக்கொணர்ந்து உன் பொன்னுடைய நகரத்தில் நிறந்திருக்குமாறு வைத்த உன்னுடைய முன்னோரைப் போல இவர்களின் கண்ணோட்டமும் அமைவதாகுக. எப்போதும் எந்நாளும் மிக்கு விளங்கம் செறிந்த அலையை உடைய கடல் நீரை விடவம், அக்கடல் கொழித்த மணலை விடவம், நீண்ட உயர்ந்த மழைத்துளியை விடவம். பெரிதும், இவர்கள் பெறம் மைந்தரைக் காணுந்தோறும், நீயும் விரும்பிய செல்வத்துடனே புகழும் இனிதாக விளங்கி நீண்ட காலம் வாழ்க! பெருந்தகுதியுடையவனே! நானும் உறவல்லாத ரொலைவான நாட்டில் நாள்தோறும் மழைத்துளியை விரும்பும் வானம்பாடி என்ற பறவையைப் போல நின் கொடைத்தன்மை மீது உண்டான விருப்பத்தால் இரங்கி நின் அடி நிழலில் பழகியஅடியில் வாழ்வேன்! விரைவான ஓட்டத்மைதயுடைய கதிரையுடைய நன்மாறனே! நீ எனக்குச் செய்த செயலை மறவாதே!

**12.51.பாடல் : 199 பாடியவர் : பெரும்பதுமனார்**

**திணை : பாடாண் துறை : பரிசில் கடாநிலை**

கடவுள் ஆலத்துத் தடவுச்சினைப் பல் பழம்
நெருநல் உண்டனம் என்னாது, பின்னும்
செலவு ஆனாவே கலிகொள் புள்ளினம்
அனையர் வாழியோ இரவலர், அவரைப்
புரவு எதிர் கொள்ளும் பெருஞ் செய் ஆடவர்
உடைமை ஆகும் அவர் உடைமை,
அவர் இன்மை ஆகும் அவர் இன்மையே .

தெய்வம் வாழ்கின்ற ஆலமர்த்தினது பெரிய கொம்பில் உள்ள பல பழங்களை நேற்றும் உண்டோம் என எண்ணாது மேலம் அவ்விடத்துக்குப் பறவை இனம் போகும். அத்தகைய இயல்பையுடையவரே இரப்பவர்.

அத்தகைய இரவலரை எதிர்கொள்ளும் மிக்க செயலையுடைய ஆண்மகனின் செல்வம் அந்த இரப்பவரின் செல்வமாகும். அந்த ஆடவரின் வறுமை இரப்பவரின் வறுமையாகும்.

குறிப்புகள்

## 12.52.பாடல் : 200 பாடியவர் : கபிலர் பாடப்பட்டோன் : விச்சிக்கோ

**திணை : பாடாண்** **துறை : பரிசில்**

விச்சிக்கோ, இளம் விச்சிக்கோவுக்கு முன்னவன், பாரி மூவேந்தர் சூழ்சசியால் இறந்தனன். அதன் பின் கபிலர் பாரியின் மகளிரைத் திருக்கோவலூரில் வாழ்நச்த பார்ப்பனிடத்தே அடைக்கலப்படுத்தினார். பின் அவர்களைத் தக்க அரசிளங்குமரர்க்கு மணம் செய்விக்க எண்ணி விச்சிக்கோவை அடைந்தார். அவன் கபிலரை வரவேற்றுச் சிறப்பித்தான் அவர் அப்போது விச்சிக்கோவை நோக்கித் தம்முடன் வந்த பாரி மகளிரையும் தம்மையும் அறிமுகப் படுத்திக்கொண்ட அவர்களை மணந்துகொள்ள வேண்டுவது இப்பாடலாகும்.

பனி வரை நிவந்த பாசிலைப் பலவின்
கனி கவர்ந்து உண்ட கருவிரல் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்து சேண் விளங்கி,
மழை மிசை அறியா மால் வரை அடுக்கத்துக்
கழை மிசைத் துஞ்சும் கல்லக வெற்ப!
நிணந் தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேல்,
களங் கொண்டு கனலும் கடுங்கண் யானை,
விளங்கு மணி கொடும் பூண் விச்சிக்கோவே!
இவரே, பூத்தலை அறாஅப் புனை கொடி முல்லை
நாத் தழும்பு இருப்பப் பாடாது ஆயினும்,
“கறங்கு மணி நெடுந்தேர் கொள்க” எனக் கொடுத்த
பரந்து ஓங்கு சிறப்பின் பாரி மகளிர்
யானே பரிசிலன் மன்னும் அந்தணன் நீயே
வரிசையில் வணக்கும் வாள் மேம்படுநன்
நினக்கு யான் கொடுப்பக் கொண்மதி, சினப்போர்
அடங்கா மன்னரை அடக்கும்
மடங்கா விளையுள் நாடு கிழவோயே.

குளிர்ச்சியான மலையில் ஓங்கி வளரந்துள்ள பசுமையான இலையையுடைய பலா மரத்தின் பழத்தைப் பறித்து உண்ட கரிய விரலையுடைய ஆண் குரங்கு, சிவந்த முகத்தை உடைய தன் பெண் குரங்குடனே பொலிந்து தொலைவில் விளங்கி, மேகத்தாலும் உச்சியானது அறியப்படாத உயர்ந்த மலைப்பக்கத்தில் மூங்கிலின் உச்சியில் உறங்கம் தன்மையுடைய மலையை உடையவனே! ஊனைத் தின்று கறித்த, தீயைப் போன்ற தலையையுடைய நீண்ட வேலையும் களத்தைத் தனதாக்கிக் கொண்டு சிநன்து கொள்ளும் அஞ்சாமையுடைய யானைகளையும் விளங்கும் மணிகளால் செய்யப்பட்ட வளைந்த அணிகளையும் தலையில்

*Self -Instructional Material*

குறிப்புகள்

அலங்காரம் செய்ததைப் போல் விளங்கும் முல்லைக்கொடி, நாத்தழும்பு உண்டாகப்பாடாதாயினும் ஒலிக்கின்ற மணிகட்டப்பெற்ற பெரிய தேரைக் கொள்க என்று கூறித் தந்த பரவிய மேம்பட்டு விளங்கும் தலைமைத் தன்மை கொண்ட பாரி மன்னனின் மகளிர். நானோ, பரிசிலன். அதுவே அன்றி நிலைபெற்ற அந்தணன் நீயோ பகைவரைப் போர் செய்கின்ற முறைப்படி போரிட்டுத் தாழச் செய்கின்ற வாளால் மேன்மை அமைபவன். எனவே, சினத்தையுடைய போராலே வேந்தரை அடக்கம் குறைவு படாத மிக்க விளைச்சலையுடைய நாட்டையடையவனே, நான் இவர்களை மணத்தில் கொடுக்கக் கொள்வாயாக!

## 12.53.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறு வினா :**

1. வல்வில் ஓரியின் வில் திறனை எடுத்துரைக்க,
2. ஓரியின் கொடைப் பண்பிற்கு சான்று பகர்க
3. பிட்டன் கொற்றனை காரிக்கண்ணனார் எவ்வாறு போற்றுகின்றார்?
4. மோசிகீரனாரின் பொதுவியல் திணைப் பாடல்கள் உணர்த்தும் கடமை எவ்வகையில் எதனைவிட சிறந்தது?
5. கணியன் பூங்குன்றனாரின் அறவுரை யாது?

**பெருவினா :**

6. இயன்மொழித்துறை என்றால் என்ன? உம்பாடப்பகுதியில் அமைந்த எவையேனும் ஐந்து இயன்மொழித்துறை பாடல்களை சான்று காட்டி நிறுவுக
7. புறநானூற்றுப் பாடல்களில் உம்மனம் கவர்ந்த ஏழு பாடாண் திணைப் பாடல்களை குறித்துக் கட்டுரை வரைக
8. பெருஞ்சித்திரனார் பாடல்கள் வழி புலனாகும் குமணனின் சான்றாண்மையை விரித்துரைக்க.
9. புறநானூற்றுப்பாடல்களில் உம்பாடப்பகுதி வழி அறியலாகும் புலவர்களில் எவரேனும் ஐவரின் பாடல்களை நயத்துடன் எடுத்துரைக்க.

## 12.54.தொகுத்துக் காண்போம். :

பழந்தமிழ் மக்களின் வீரவாழ்க்கையினையும், பண்பாட்டினக் உயர்வனையும் விளக்குகின்ற உயர்ந்த ஆவணமாகப் புறநானூறு திகழ்கின்றது. பழங்காலத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள், நடைபெற்ற போர்கள், அவைகள் நிகழ்ந்த இடங்கள், மன்னர்களின் ஈகை குணம். உலகத்தின் நிலையாமை போன்ற பல்வேறு கருத்துகள் அடங்கிய கருத்துப்பேழையை மாணவர்களுக்கு அறியவதோடு அக்கால பெண்பாற் புலவர்களின் புலமையினையும் இப்பகுதியின் மூலம் நாம் அறியமுடிகின்றது.



## 12.55.மேலும் பயில்வதற்கான நூல்கள் :

- புறநானூறு மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.

- புறநானூறு, புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- புறநானூறு மூலமும் உரையும், அவ்வை துரைசாமிபிள்ளை உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை98
- புறநானூறு மூலமும் உரையும், அ.ப. பாலையன், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5

# கூறு-13 பதிற்றுப்பத்து -ஐந்தாம் பத்து-(41-50)

## 13.1.முன்னுரை :

பத்து சேரமன்னர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பத்து புலவர்களால் ஒவ்வொரு மன்னரைப் பற்றியும் பத்துப்பத்துப் பாடல்களால் தொகுக்கப்பட்டு உள்ளது பதிற்றுப்பத்து. இந்நூலின் முதல் மற்றும் இறுதிப் பத்துப்பாடல்கள் கிடைக்கவில்லை. எனவே தற்போது 80 பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றது. நம் பாடப்பகுதியில் ஐந்தாம் பத்து இடம்பெற்றுள்ளது.

## 13.2.குறிக்கோள்கள் :

பதிற்றுப்பத்து நூலின்கண் அமைந்த ஐந்தாம் பத்தானது பரணரால் பாடப்பட்டுள்ளது. அப்பாடல்கள் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் மீது பாடப்பட்டுள்ளது. மேலும், அம்மன்னனின் ஈகைச்சிறப்பு, போர்க்குணம், மனைவியரின் மாண்பு, இல்லறத்தின் இனிமை போன்ற பல செய்திகளும் இந்நூலின்கண் பேசப்படுகின்றது. அதனை நாம் அறியும் பொருட்டே இப்பகுதி இடம்பெற்றுள்ளது.

**பாடியவர் : பரணர்  பாடப்பட்டவர் : கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்**

**தூக்கு : செந்தூக்கு  வண்ணம் : ஒழுகு வண்ணம்**

## 13.3.பாடல் 41 : சுடர் வீ வேங்கை  துறை : காட்சி வாழ்த்து

புணர் புரி நரம்பின் தீம் தொடை பழுனிய
வணர் அமை நல் யாழ் இளையர் பொறுப்ப,
பண் அமை முழவும் பதலையும் பிறவும்,
கண் அறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவில் தகைத்த துறை கூடு கலப்பையர்
கைவல் இளையர் கடவுள் பழிச்ச,
மறப்புலிக் குழூஉக் குரல் செத்து வயக் களிறு
வரை சேர்பு எழுந்த “சுடர் வீ வேங்கைப்”
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்து, தன்
மா இருஞ் சென்னி அணி பெற மிலைச்சிச்
ஷசேஎர் உற்ற செல்படை மறவர்
தண்டு உடை வலத்தர் போர் எதிர்ந்ததாங்கு,
வழை அமல் வியன் காடு சிலம்பப் பிளிறும்
மழை பெயல் மாறிய கழை திரங்கு அத்தம்
ஒன்று இரண்டு அலபல கழிந்து திண்தேர்
வசை இல் நெடுந்தகை காண்கு வந்திசினே,
தாவல் உய்யுமோ மற்றே தாவாது
வஞ்சினம் முடித்து ஒன்றுமொழி மறவர்
முரசு உடைப் பெருஞ்சமத்து அரசு படக் கடந்து,
வெவ்வர் ஓச்சம் பெருகத் தெவ்வர்



கு

*Self -In Materi*

மிளகு எறி உலக்கையின் இருந்தலை இடித்து,
வைகு ஆர்ப்பு எழுந்த மைபடு பரப்பின்
எடுத்தேறு ஏய கடிப்பு உடை வியன் கண்
வலம்படு சீர்த்தி ஒருங்கு உடன் இயைந்து,
கால் உளைக் கடும் பிசிர் உடைய வால் உளைக்
கடும் பரிப் புரவி ஊர்ந்த நின்
படுந்திரைப் பனிக்கடல் உழந்த தாளே

துறை விளக்கம் : சேரன் ஆற்றிய கடல் போரால அவன் கால்கள் வருந்தலினின்று தப்பாது எனவுரைத்த இச் சிறப்பு நோக்கிக் காட்சி வாழ்த்து ஆயிற்று.

தெளிவுரை :

இசையை எழுப்புதற்கு உரிய முறுக்கிய நரம்பினையுடைய இனி யஇசையைச் செய்யும் யாழ்களை ஏவல் இளைஞர் சுமந்த வண்ணமாய் வர, பண்ணுடன் பொருந்துமாறு அமைந்த முழவு என் றகருவியும் ஒருகண் மாக்கிணை என்ற கருவியும் பிற இசைக் கருவிகளும் மூங்கிற் கணுவை இடையிட்டு அறுத்துச் செய்த பெருவங்கியம் என்னும் கருவியுடன் சேர்த்துக் கட்டிக் காவடித் தண்டின் ஒரு பக்கத்தே தொங்க விட்டனர். மறுபக்கத்தில் ஆடல் துறைக்கு வேண்டிய கருவிகள் எல்லாம் கூடிய மூட்டையை அமைத்துச் சுமந்தனர். இத்தகைய இயல்பு உடையவராய் இசைத் துறையில் வல்ல இளையவர்கள் போகும் வழியில் தீங்கு வாரமை குறிததுக் கடவுளைப் பரவினர். வலிமை மிக்க யானை, மலைப் பக்கத்தே சேர எழுந்து உணர்ந்து நின்ற ஒளி உடைய பூக்களை உடைய வேங்கை மரத்தை. மறம் பொருந்திய புலியின் மயிர்த் தொகுதியின் தோற்றமாய் எண்ணியது. சினங் கொண்டு பூக்கள் பொருந்திய பெரிய வேங்கை மரக் கிளையை வளைத்து இழுத்துப் பிளந்து தன் பெரிய தலையில் அழகு விளங்க அணிந்து கொண்டு, பலராகத் திரண்டு பகைவர் மீது படைதொடுத்துப் போகும் விரர் வலக்கையில் தண்டு ஏந்திக் கொண்டு சென்று பகைவரின் முன் நின்று போர்க்களத்தில் ஆரவாரம் செய்வதைப் போன்று சுரபுன்னை மரங்கள் வளர்ந்துள்ள காட்டடில் எல்லாம் எதிரொலிக்கும் படி பிளிறும்.

மழை பெய்யாமையால் மூங்கில்கய் பசையற்று உலர்ந்து போய் விள்ங்குகின்ற வழிகள் பலவற்றையும் கடந்து திண்மையான தேர்களை உடைய குற்றம் இல்லாத பெருந்தகையாளனான நின்னைக்காணும் பொருட்டாக வந்தேன். தாம் சொல்லிய வஞ்சினம் தப்பாது முடித்த வாய்மையுடைய வீரர் முரசுக்ள ஒலிக்கின்ற பெரிய போரில் எதிர்ப்பட்ட மன்னர் எல்லாம் இறந்து அழியுமாறு வஞசிக்காமல் போரிட்டு வெற்றி பெறுவர். நட்புடைய அரசரிடம் ஆக்கம் பெருகவும். பகை மன்னரின் பெரிய தாலைகளை உலக்கையால் இடிக்கப்பட்ட மிளகைப் போன்று தாம் கைக் கொண்ட தோமர் என்ற கருவியால் இடித்துச் சிதைப்பர். இடையறாத ஒலி உண்டாகிய கரிய நிறத்தையுடைய கடல் போல் எடுத்து எறிதலைத்

குறிப்புகள்

தெரிவிக்கும் கற்தடியால் அடிக்கப்படும் அகன்ற கண்ணையுடைய முரசு வெற்றியால் உண்மான மிக்க புகழுடன் ஒருங்கே கூடி அப்போர்களத்தில் விளங்கும் வெண்மையான தலைப்பட்டத்தை அணிந்த விரைவான ஓட்டத்தை உடைய குதிரையை ஊர்ந்த நின் ஒலிக்கும் அலைகளை உடைய குளிர்ந்த கடலில் போய், அந்த அலைகள் காற்றால் உடைந்து சிறு சிறு கடிய தளிகளாய் ஆகும்படி போர் செய்த கால்கள் வருத்தப்படுவதினின்று தப்புமோ! கூறுக!

## 13.4.பாடல் : 42 : "தசும்பு துளங்கு இருக்கை" துறை : செந்துறைப் பாடாண் பாட்டு

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு
இரும் பனம் புடையல் ஈகை வான் கழல்,
மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
சிரல் பெயர்ந்தன்ன நெடு வெள் ஊசி
நெடு வசி பரந்து வடு ஆழ் மார்பின்,
அம்பு சேர் உடம்பினர்ச் சேர்ந்தோர் அல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
அன்னோர் பெரும நன்னுதல் கணவ!
அண்ணல் யானை அடு போர்க் குட்டுவ!
மைந்து உடைநல் அமர்க் கடந்து வலம் தரீஇ
இஞ்சி வீ விராய பைந்தார் பூட்டிச்
சாந்து புறத்து எறித்த "தசும்பு துளங்கு இருக்கைத்"
தீம் சேறு விளைந்த மணி நிற மட்டம்
ஓம்ப ஈகையின் வண் மகிழ் சுரந்து,
கோடியர் பெரும் கிளை வாழ, ஆடு இயல்
உளை அவிர் ககலிமாப் பொழிந்தவை எண்ணின்
மன்பதை மருள அரசுபடக் கடந்து,
முந்து வினை எதிர் வரப் பெறுதல் காணியர்
ஒளிறு நிலை உயர் மருப்பு ஏந்திய களிறு ஊர்ந்து
மான மைந்தரொடு மன்னர் ஏத்தநின்
தேரொடு சுற்றம் உலகு உடன் மூய,
மாஇரும் தெள் கடல் மலி திரைப் பௌவத்து,
வெண்தலைக் குரூஉப்பிசிர் உடையத்
தண் பல வரூஉம் புணரியின் பலவே.

தெளிவுரை :

கருமையான பனந் தோட்டால் கட்டப்பட்ட மாலையையும் பொன்னானால் இயன்ற வீரக்கழலையும் உடையவராய், மீனைப் பிடிக்கும் மணிச்சிரல் என்ற பறவை குளத்துள் பாய்ந்து முழுகி மேலே எழும் காலத்து அதன் வாய் அலகு விளங்குவதைப் போன்று மார்பில் புண்களைத் தைக்கும் காலத்து அப்புண்ணின் இரத்தினால் மூழ்கி மறைந்து எழும்

குறிப்புகள்

நீண்ட வெண்மையான ஊசியால் ஆன நீண்ட தழும்பும் பரந்த வடுவும் பொருந்திய மார்பையும் அம்புகளால் புண்பட்ட உடம்பையும் உடையவராய்ப் போரிட வந்தவருடன் தும்பை மலர் மாலை சூடிப் போரிடுவது அல்லாமல் மற்றவருட்ன பேோரிடமாம் புறக்கணித்துப் போய் வீரரின் தலைவனே! நல்ல நெற்றியை உடைய இளங்கோ வேண்மானின் கணவனே! பெரிய யானைகளையும் வெல்லும் போரையும் உடைய செங்குட்டுவனே!

பகைவரின் வலிமை கெட்டு விடுவதற்குக் காரணமான நல்ல போலைர வஞ்சியாமல் எதிர்நின்று போர் செய்து வெற்றியைத் தந்தாய்! இஞ்சியும் நறுமணப் பூவும் கலந்து கட்டப்பட்ட பசிய மாலை சூடி, புறத்தே சந்தனம் பூசப்பட்ட கள்குடங்கள் அசையும் இருக்கைகளில் வைக்கப்பட்ட அவற்றின் இனிய சுவை நிறைந்த நீல மணியைப் போன்றுள்ள கள்ளை, தனக்குச் சிறிதும் வைத்துக் கொள்ளாது. கொடுக்கும் இயல்பால் மிக்க மகிழ்ச்சியை வீரர்க்கும் போர்க்களத்தைப்பாடும் பாணர் பொருநர் முதலியவர்க்கும் தந்து, கூத்தரின் பெரிய சுற்றம் மகிழும் படியாக வழங்கப்பட்டவையான அசையும் இயல்புடைய தலை ஆட்டத்தை அணிந்து விளங்கும் குதிரைகளை அளித்தாய் அவற்றை எண்ணத் தொடங்கினால், பார்ப்பவர் வியப்பை அடையும் வண்ணம் பகை மன்னரை வென்றமையால், முன்னேறிப் போய்ச் செய்யும் போர்ச்செயல் இல்லாமையால் அது எதிர்வரப் பெறுவதை விரும்பியவராய், நின் தேர் வீரரும் உலகம் எல்லாம் பரவி நெருங்கி நிற்க. விளங்கும் நிலையையுடைய உயர்ந்த கொம்புகளை ஏந்திய யானை மீது அமர்ந்து செல்லும் மானவீரரும் வேந்தரும் அஞ்சி ஏத்திப் பாராட்ட, பெரிய கரிய தெளிந்த கடலின் மிக்க திரைகளையுடைய நீர்ப்பரப்பில் வெண்மையான நுரையான தலை சிறு சிறு திவலைகளாய் உடைந்து கெட, குளிர்ந்த பலவாக மேன்மேல்வரும் அலைகளைவிடப் பலவாகும்.

## 13.5.பாடல் : 43 : “ஏறா ஏணி” துறை : இயன்மொழி வாழ்த்து

துறை : இயன்மொழி வாழ்த்து
கவரி முச்சிக் கார் விரி கூந்தல்,
ஊசல் மேவல், சேய் இழை மகளிர்
உரல் போல் பெருங்கால், இலங்கு வாள் மருப்பின்
பெருங்கை மத மாப் புகுதரின், அவற்றுள்
விருந்தின் வீழ் பிடி எண்ணு முறை பெறாஅக்
கடவுள் நிலைய கல் ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயமாகத்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்
முரசு உடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பு எழச்,
சொல் பல நாட்டைத் தொல் கவின் அழித்த
போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!

இரும் பணை திரங்கப் பெரும் பெயல் ஒளிப்பக்
குன்று வறம் கூரச் சுடர் சினம் திகழ,
அருவி அற்ற பெருவறல் காலையும்,
அருஞ்செலல் பேராற்று இருங்கரை உடைத்துக்
கடிஏர் பூட்டுநர் கடுக்கை மலைய,
வரைவில் அதிர் சிலை முழங்கியப் பெயல் சிறந்து,
ஆர்கலி வானம் தளி சொரிந்தாஅங்கு,
உறுவர் ஆர ஓம்பாது உண்டு
நகைவர் ஆர நன்கலம் சிதறி,
ஆடு சிறை அறுத்த நரம்பு சேர் இன் குரல்
பாடு விறலியர் பல் பிடி பெறுக!
மன்றம் படர்ந்து மறுகு சிறைப் புக்குக்
கண்டிநுண் கோல் கொண்டு களம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே என்றும்
இகல் வினை மேவலை ஆகலின், பகைவரும்
தாங்காது புகழ்ந்த தூங்கு கொளை முழவின்
தொலையாக் கற்ப நின் நிலை கண்டிகுமே,
நிணம் சுடு புகையொடு கனல் சினந்து தவிராது
நிரம்பு அகல்பு அறியா "ஏறா ஏணி"
நிறைந்து நெடிது இராத் தசும்பின். வயிரியர்
உண்டு எனத் தவாஅக் கள்ளின்
வண் கை வேந்தே, நின் கவி மகிழானே.

தெளிவுரை :

கவரிமானின் மயிர் முடி கலந்து முடிக்கப்பட்ட கொண்டை, கருமேகம் போன்ற கூந்தல், ஊஞ்சல் ஆடுதலில் விருப்பம் ஆகியவற்றை உடைய நல்ல அணிகளை அணிந்தவர் மகளிர், அவர்ள், உரலைப் போன்ற பெரிய காலையும் ஒளி பொருந்திய கொம்பையும் நீண்ட துதிக்கையையும் மதத்தையும் உடைய யானைகள் தாம் இருக்கும் காட்டில் புகுமானால், அவற்றுள் புதியவயா் வந்த ஆண் யானைகளால் விரும்பப்படும் பெண் யானைகள் இத்தனை என எண்ணத் தொடங்கவர். இத்தகைய இயல்புடையது கடவுளர் தங்கம் நிலைகளையுடைய கற்களால் உயர்ந்த பெரிய மலையான இமயம் அம்லை வடக்குத் திசையில் எல்லையாய், தெற்கு எல்லை குமரியாய் அமைய, இடைப்பட்ட நிலத்தில் பகை மன்னர் செய்யம் முரசு முழங்கம் பெரும் போர் கெடுவதால் வெற்றி ஆரவாரம் உண்டாக அம்மன்னர்களின் புகழ் பொருந்திய் நாட்டை அடைந்த அதன் புகழுக்குக் காரணமான பழைய நலத்தைக் கெடுத்து அழித்த, போரில் எதிர்ப்பவரை வெல்வதையே தொழிலாக உடைய படையையும் பொன்மாலையையும் அணிந்த செங்குட்டுவனே!

பெருமழை பெய்யாமல் பொய்த்தலால் காடு வாடி உலர்நதது. குன்றுகளில் பசும்புல் இல்லாமல் கெட்டது. ஞாயிற்றின் வெயிலின் வெப்பம் மிக்குத் தோன்றியது. அருவிகள் நீரில்லாது வறண்டு போயின. அக்காலத்தும், கடப்பதற்கு அரிய ஓட்டத்தை உடைய பெரிய ஆற்றிலே நீர் பெருக்கம், பெருங்கரைகளை உடைத்துக்கொண்டு செல்லும்படியும் புதிய ஏரைப்பூட்டும் உழவர் கொன்றைப்பூவைச்சூடி கொள்ளும்படியும். நிறைந்த முழக்கம் உடைய மழமைமேகம் பல முறை மின்னி அதிர்கின்ற இடியொலியைச் செய்து மிக்கமழை நீரைப்பெய்யும். அங்ஙனம் பெய்தது பொல், பெரும! உன்னை நாடி வ்த புலவர்கள் உண்பனவற்றை ஓம்பாது உண்ணச்செய்தனை அவருடன் அமர்நதது உண்டனை. இன்பச்சவை நல்கும் பாணர் கூத்தர் முதலியவர் நிரம்பப் பெறுமாறு நீ நல்ல பொன் அணிகளை எல்லை இல்லாது தந்தனை.

அசைகின்ற இறகையுடைய கின்னரம் என்ற பறைவையை இசையால் வென்ற யாட் நரம்பின் இசையுடன் ஒன்றாய் இசைந்து செல்லும் இனிய மிடற்றால் பாடுமம் இயல்படைய விறலியர் பல பெண் யானைகளைப் பெறுக என்ற ஈந்தனை. துய்யினை உடைய வாகைப்பூவும், நுண்ணிய கொடியானம உழிஞை மலரும் சூடும் வெற்றி விருப்பமும், பகைவர்க்கு அச்சத்தைத் தரும் சிறப்பும், பகைவர் நாட்டில் கொள்ளை இடுதலுமுடைய வீரர் கொலலும் ஆண் யானைகளைப் பெறுவராக எனத் தந்தனை. கணுக்களை உடைய நுட்பமான கோலைக் கைக்கொண்டு ஊர்மன்றத்தில் இருந்து, பாடற்குரிய தலைவன் புகழ்களை எண்ணித் தெருக்களின் இரண்ட பக்கத்தும் போய்த், தலைவன் போரிட்டு வென்ற போர்க்களத்தை வாழ்த்திப்பாடும் பாணன் குதிரைகளைப்பெறுவானாக எனக்கொடுப்பாய். இங்ஙனம் கொடுக்கம் கொடைத் தொழிலை விரும்பிஇருப்பதே அல்லாது போர்ச் செயலையும் நீ விரும்பி இருக்கின்றாய்! ஆதலால், பகைவரும் தங்கள் உள்ளத்தில் எழுந்த வியப்பைத் தாங்க மாட்டாமல்ல புகழ்ந்து பாராட்டும கெடாத கல்வியறிவு ஒழுக்கங்களை உடையாய்.

வளமான கொடையை உடைய மன்ன! தூங்கல் ஓசையுடைய பாட்டுக்க ஏற்ப முழங்கம் முழவையம், உடையயையாய் நிணத்தைச் சுடும் புகை நாற்றத்துடன் தீயின் வெம்மை நீங்காமல் நிரம்பதலும் அகலுதலும் இலலாத கோக்காலியின் மேல் வைக்கப்பட்டன கள் குடங்கள், அவை வார்த்த கன்னால் நிறைந்தவை. நீண்ட நேரம் அந்த நிறைவு குறையாமல் இருப்பவை. பாணர் முதலியவர் உண்டவிடத்தும் குறையாத கள்ளை உடையவை. இத்தகைய தன்மை பொலிவும் நின் திருவோலக்கத்தில் நின் செல்வப்பெருமை யாவற்றையும் கண்டோம்.

## 13.6.பாடல் : 44 : “நோய் தபு நோன் தொடை” துறை : செந்துறைப் பாடாண் பாட்டு

நிலம் புடைப்பு அன்ன ஆர்ப்பொடு விசும்பு துடையூ
வான் தோய் வெல் கொடி தேர் மிசை நுடங்கப்

பெரிய ஆயினும் அமர் கடந்து பெற்ற
அரிய என்னாது ஓம்பாது வீசிக்,
கலம் செலச் சுரத்தல் அல்லது கனவினும்,
களைக என அறியாக் கசடு இல் நெஞ்சத்து,
ஆடு நடை அண்ணல் நின் பாடுமகள் காணியர்
காணிலியரோ, நின் புகழ்ந்த யாக்கை
முழு வலி துஞ்சு "நோய் தபு நோன் தொடை"
நுண கொடி உழிஞை வெல் போர் அறுகை
சேணன் ஆயினும் கேள் என மொழிந்து,
புலம் பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு,
அரண்கள் தாவுறீஇ அணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு,
நெடுமொழி பணித்து அவன் வேம்பு முதல் தடிந்து,
முரசு செய முரச்சிக் களிறு பலபூட்டி,
ஒழுகை உய்த்த கொழு இல் பைந்துணி
வைத்தலை கவற்றும் குராலம் பறந்தலை
முரசுடைத் தாயத்து அரசு பல ஓட்டித்
துளங்கு நீர் வியல் அகம் ஆண்டு இனிது கழிந்த
மன்னர் மறைத்த தாழி,
வன்னி மன்றத்து விளங்கிய காடே.

தெளிவுரை :

நிலத்தை இடிப்பதைப் போன்ற ஒலியடன் முரசுகள் முழங்க, வானைத் துடைப்பதற்கென எடுத்த கொடிகள் வான் அளாவ உயர்ந்து பறப்பவை போன்று தேரின் மேலம் பறந்த வண்ணம் அசையபந் பல போர்களைச் செய்து பெற்ற பொருளகள் பெரியவை என்றாலும், அவை பெறுவதற்கு அிரயவை என்ற எண்ணாமலும், தனக்க வேண்டும் என் றபேணி வைத்துக் கொள்ளாமலும் பிறர்க்கு நிரம்ப வீசினாய், இங்ஙனம் பல அரிய அணிகளை மிகுதியாய்க் கொடுத்தலே அல்லாமல் கனவிலும் பிறரை இரந்து எனக் கஃஉண்டான துன்பத்தை போக்கியருள வேண்டாம் என வேண்டுதலை அறியாதவன் நீ குற்மில்லாத நெஞ்சத்தையும் வெற்றியால் பிறந்த பெருமித நடையையம் உடைய அண்ணலே! நுட்பமான உழிஞைக்கொடியின் பூவைச் சூடிய வெல்லும் போரைச் செய்பவன் அறுகை என்பவன். அவன் மொவில் இருப்பவைனாயினும் அவ்ன் என் நண்பன் என்று பலரும் அறியக் கூறினாய். பகைவனான மோகூர் மன்னனின் அரண்களைத் தெய்வத்தால் கேடு உண்டானதைப் போல் வலி அழித்தனை, அம்மன்னனின் காவல் முரசத்தைக் கைப்பற்றினாய், அதனால் அவன் உரைத்த வஞ்சினத்தைக் கெடுத்தாய். அவனை நினக்கு பணியும்படி செய்தாய். அவனது காவல் மரமான வேம்பையும் அடியுடன் வெட்டி வீழ்த்தி, முரசு செய்தற்கேற்ற சி றசிறு துண்டுகளாகத் துண்டித்த

வண்டியில் ஏற்றி யானைகளை அதனை இழுக்கும் பகடுகளாகப் பூட்டிச் செலுத்தினாய்.

குறிப்புகள்

நின்னை வீரர் பலரும் புகழ்வதற்குப் பொருளாய் அமைந்த மிக்க வன்மை பெருந்தி யநோய் இல்லாத யாக்கையான பெரிய உடம்பை நின்னைப் பாடும் பாடினி காண்பாளாக! பொழுப்பு இல்லாத பசிய இறைச்சித் துண்டங்களை வைத்த இடத்தை மறந்துவிட்ட உச்சிக் கொண்டையையுடைய தலை பொருந்திய கூகைச் சேவலை, கவலை அடையச் செய்கின்ற பெண் கோட்டானையுடைய இடுகாட்டில், முரசத்தையுடையவரும் வழி தொடர்ந்த உரிமை பெற்று அரசு செலுத்தி வருபவருமான அரசர் பலரை வென்று அசையும் கடல் சூழ்ந்த பரந்த நிலவுலகத்தை ஆட்சி செய்து தம் வாழ்நாளை இனிது கழித்த மன்னரை .இட்டு புதைக்கும் வன்னி மரம் நிற்கும் மன்றத்தால் விளக்கம் பொருந்திய இடுகாட்டில், தாழியானதது நின் நோயற்ற பெரிய உடலைக் காணாது ஒழிக.

## 13.7.பாடல் : 45 : "ஊண் துவை அடிசில்" துறை : செந்துறைப் பாடாண் பாட்டு

பொலம் பூந்தும்பைப் பொறி கிளர் தூணிப்
புற்று அடங்கு அரவின் ஒடுங்கிய அம்பின்,
நொசிவு உடை வில்லின் ஒசியா நெஞ்சின்,
களிறு எறிந்து முரிந்த கதுவாய் எ∴கின்,
விழுமியோர் துவன்றிய அகன் கண் நாட்பின்.
எழு முடி மார்பின் எய்திய சேரல்!
குண்டு கண் அகழிய மதில் பல கடந்து,
பண்டும் பண்டும் தாம் உள் அழித்து உண்ட
நாடு கெழு தாயத்து நனந்தலை அருப்பத்துக்
கதவம் காக்கும் கணை எழு அன்ன,
நிலம் பெறு திணி தோள் உயர ஓச்சிப்,
பிணம் பிறங்கு அழுவத்துத் துணங்கை ஆடிச்,
சோறு வேறு என்னா "ஊன் துவை அடிசில்"
ஓடாப் பீடர் உள்வழி இறுத்து,
முள் இடுபு அறியா ஏணித் தெவ்வர்
சிலை விசை அடக்கிய மூரி வெண்தோல்
அனைய பண்பின் தானை மன்னர்
இனியார் உளரோ, நின் முன்னும் இல்லை
மழை கொளக் குறையாது புனல் புக நிறையாது,
விலங்கு வளி கடவும் துளங்கு இருங் கமஞ்சூல்,
வயங்கு மணி இமைப்பின் வேல் இடுபு,
முழங்கு திரைப் பனிக்கடல் மறுத்திசினோரே.

*Self -Instructional Material*

தெளிவுரை :

பொன்னால் செய்யப்பட்ட அழகான் தும்பை மலரையும், பொறிகள் பொருந்திய தூணியில் புற்றில் அடங்கியுள்ள பாம்பைப் போல் ஒடுங்கி இருக்கும் அம்புகளையும், வளைந்த வில்லையும், பகை முதலியவற்றுக்கு அஞ்சி ஒடுங்காத மன எழுச்சியையும் களிறகளைக் கொல்வதால் நுனி மடிந்த வடுப்பட்ட வேலையுமுடைய சீரிய வீரர் நெருங்கிச் செய்யும் அகன்ற கோர்க்களத்தை உடைய பகை மன்னவர் முடிப் பொன்னால் செய்யப்பட்ட மாலையை மார்பில் அணிந்த சேர மன்னனான செங்குட்டுவனே! ஆழமான அகழிகளை உடைய மதில்கள் பலவற்றைக்கடந்து போய் உள்ளே புகுந்தாய்,அங்குள்ள பொருள்களைக் கைக் கொண்டாண். அழித்த நாட்டாட்சிக்குரிய இடத்தையடைய அரண்களின் வாயிற்கதவுக்கு வன்மை உண்டாகக் காக்கின்ற கணைய மரத்தைப்போன்ற பகைவர் நாடுகளைப் பெறும் வன்மையமைந்த திண்மையான நின்தோள்களை உயர எடுத்து வீசிப்பிணங்கள் விழுந்து உயர்ந்து கிடக்கும் போர்க்களத்தில் முன்பே பலகாலங்களில் பலமுறை துணங்கைக் கூத்த ஆடினாய் சோறு வேறு ஊன் குழைந்த போகும்படி சடைக்கப்பட் சோற்றைப் பகைவர்க்கு புறங்காட்டாத பெருமையடைய வீரரின் மனம் விரும்பும்படி பெருவிருந்து அளிததுச் சிறந்தனை. பகைவரின் குதிரை முதிய படைகளைத் துடுப்பதற்காக முன் வேலி இடுவதை அறியாத எல்லைப் புறத்தையும பகைவரின் வில்லில் தொடுக்கப்படும் அம்பின் கடுமையைக் கெடுத்த வலிமையான வெள்ளிய கேடகத்தையும் அவற்றிற்கு ஏற்ற மறப்பண்பு படைத்த படையையும் உடைய வேந்தருள்ளே. மேகமக் பொருந்தி முகத்தலால் நீர் குறையாமலும் ஆறுகளின் வரவால் நீர ˙நிறைந்து கடவாமலும் செல்லும் செலவைத் தடுத்து மோதும் காற்றுத் தீரட்டும். அலைகளால் அசைதலையுடைய மிகவும் நிறைந்த நீரையுடைய முழங்கும் அலைகளுடன் கூடிய குளிர்ந்த கடல். அதில்விளங்கம் மணியைப் போன்ற ஒளி பொருந்திய வேல் படையைச் செலுத்தி அக்கடலில் எதிர்த்தவரைப் போரிட்டு அழித்த வேந்தர் நின் முன்னோருள் எவரும் இலர். இப்போதும் உனக்கு ஒப்பானவர் எவரும் இல்லை.

## 13.8.பாடல் : 46 “கரைவாய்ப் பருதி” துறை :செந்துறைப்பாடாண் பாட்டு

இழையர், குழையர், நறுந்தன் மாலையர்,
சுடர் நிமிர் அவிர் தொடி செறித்த முன் கைத்
திறல் விடு திரு மணி இலங்கு மார்பின்,
வண்டுபடு கூந்தல் முடி புனை மகளிர்
தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபின் உழிஞை பாட,
இனிது புறந்தந்து அவர்க்கு இன் மகிழ் சுரத்தலின்,
சுரம்பல கடவும் “கரைவாய்ப் பருதி”
ஊர்பாட்டு எண் இல் பைந்தலை துமியப்

பல் செருக் கடந்த கொல் களிற்று யானைக்
கோடு நரல் பௌவம் கலங்க வேல் இட்டு
உடை திரைப் பரப்பில் படுகடல் ஓட்டிய
வெல் புகழ்க் குட்டுவன் கண்டோர்
செல்குவம் என்னார், பாடுபு பெயர்ந்தே.

தெளிவுரை :

அணிகளையும் காதணியையும், நறுமணம் மிக்க குளிர்ந்த மாலையையும், ஒளி மிக விளங்கும் தொடி அணிந்த முன்கையையும் , மிக்க ஒளி திகழும் அழகிய மணிமாலை கிடந்து விளங்கும் மார்பையும் உடைய வண்ட மொய்க்கும் கூந்தலைக் கொண்டையாக முடிதது அலங்கதரித்துக் கொண்டுள்ள பாடல் மகளிர், நரம்பையுடைய பேரியாழில் பாலைப் பண்ணை அமைத்துப் பகைவர்க்குப் பணியாத முறைமை உடைய உழிஞைத் திணைச் செயலைப்புகழ்ந்து பாட, அவர்களை நன்கு ஓம்பி, அவர்களுக்க மகிழ்சசியைத் தன் கொடையாலும் முக மல்ச்சியாலும் செய்வதால். காடுகள் பலவற்றிலும் செலுத்தப்படும் குருதிக்கறை தோய்ந்த விளிம்பையுடைய தேர்ச்சக்கரம், தன் போக்கில் செல்லுங்கால், எண்ணற்ற வீரர்களின் தலைகள் கீழே அகப்பட்டு நசுங்க, பல போர்களை வென்ற கொல்லும் யானைகள் பலவற்றையும் உடையவன் குட்டுவன்.

சங்குகள் ஒலிக்கும் கடல் கலங்கம்படி வேல் படையைச்செலுத்தி உடைந்து அலையும் அலைகளையுடைய நீர்ப்பரப்பான கடலை இடமாக் காண்ட போர் செய்தவரைத் தோற்று ஓடும்படியாகச்செய்த வெற்றியால் உண்டான பெரும் புகழையுடைய செங்கட்டுவனைப்பாடிச் சென்று அவனால்அளிக்கப்பெற்றவர் மீண்டும் தம் ஊருக்குச் செல்வோம் என்று எண்ணிப்பாரார் அவ்ன் பக்கத்திலேயே எப்போதும் இருக்கவே எண்ணுவர்.

## 13.9.பாடல் : 47 : “நன்னுதல் விறலியர்” துறை : செந்துறைப் பாடான் பாட்டு

அட்டு ஆனானே குட்டுவன் அடு தொறும்
பெற்று ஆனாரே பரிசிலர் களிறே
வரை மிசை இழிதரும் அருவியின் மாடத்து
வளி முனை அவிர்வரும் கொடி நுடங்கு தெருவில்,
சொரி சுரை கவரும் நெய் வழிபு உராலின்,
பாண்டில் விளக்குப் பரூஅச்சுடர் அழல,
“நன்னுதல் விறலியர்” ஆடும்
தொல்நகர் வரைப்பின் அவன் உரை ஆனாவே.

தெளிவுரை :

சேரன்செங்குட்டுவன் பகைவரை அடியுடன் போரிட்டு அழித்தும் அதனுடன் அமைதி பெறாதவன் ஆனான். அதன் காரணமாக அவன் பகைவரை நாடிப்போய்ப் போரிடுந்தோறும் பரிசிலர் களிறுகள் பலவற்றைப் பெற்றனர். அதனுட்ன் அவர்கள் அமையாது அவனது போர்ச் சிறப்பையே பாடலாயினர். மலையிலிருந்து வழியும் அருவியைப் பொல்மாங்களின்

மேலிடத்திலிருந்து கொடிகள் அசைகின்ற தெருவில். நெய் வார்க்கப்டும் விளக்குச் சுரையில் எரிக்கப்படும் நெய்வழியும்படி வார்த்து நிரப்புதலால், கால் விளக்கின் பருத்த திரியானதது மிகுந்த ஒளிகாட்டி எரிய, நல்ல நெற்றியை உடைய விறலியர் சூடுகின்ற பழைய மாளிகைகளையுடைய ஊர்களில் அவனைப் புகழ்கின்ற உரைகள் நீங்காமல் நிலவுவனவாயின.

## 13.10.பாடல் : 48 : "பேர் எழில் வாழ்க்கை" துறை : இயன்மொழி வாழ்த்து

பைம்பொன் தாமரை பாணர்ச் சூட்டி,
ஒண்ணுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டிக்
கெடல் அரும் பல் புகழ் நிலைஇ நீர் புக்குக்
கடலொடு உழந்த பனித் துறைப் பரதவ!
'ஆண்டு நீர்ப் பெற்ற தாரம் ஈண்டு இவர்
கொள்ளாப் பாடற்கு எளிதின் ஈயும்
கல்லா வாய்மையன் இவன்' எனத் தத்தம்
கைவல் இளையர் நேர் கை நிரைப்ப,
வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை,
முனை சுடு கனை எரி எரித்தலின், பெரிதும்
இகழ் கவின் அழிந்த மாலையொடு சாந்து புலர்
பல்பொறி மார்ப நின் பெயர் வாழியரோ!
நின் மலைப் பிறந்து நின் கடல் மண்டும்
மலி புனல் நிகழ்தரும் தீ நீர் விழவின்,
பொழில் வதி வேனில் "பேர் எழில் வாழ்க்கை"
மேவரு சுற்றமோடு உண்டு இனிது நுகரும்,
தீம் புனல் ஆயம் ஆடும்,
காஞ்சி அம்பெருந்துறை மணலினும் பலவே.

தெளிவுரை :

பாணர்களுக்குப் பொன்னால் ஆன தாமரைப் பூவைச் சூட்டி ஒளி பொருந்திய நெற்றியை உடைய விறலியர்க்கு முத்து மாலைகளைப் பூணும்படி தந்து கெடாத பல புகழை நிலை நாட்டி, கடலின் நீர்ப்பரப்பில் போய் அங்கிருந்த கடற்பகைவருடன் அரிய போரைச் செய்த குளிர்ந்த துறையை உடைய பரதவனே! அக்கடலில்பகைவரால்கடல் வழியாக்கக்கொணரப்பெற்ற் பொருள்களை இங்கு இப்பரிசிலரின் நின் புகழ் முழுவதையும் தன்னிடத்தே அடக்கிக்கொள்ள மாட்டாத பாட்டிற்காக மிக எளிதாக எண்ணிக்கொடுப்பவன். எததையும் எளிதில் ஈவதே அல்லாமல் தனக்கென அரியவற்றை ஓம்பலைக் கல்லாத வாய்மை வாய்க்கப் பெற்றவன் என்றஇசையில் வல்லா இளையர்கள் பாராட்டித் தங்களுடைய கைகளை வரிசையாக நீட்ட. நண்பர்க்கும் மகளிர்க்கும் வணங்கிய மென்மையினையம் பகைவர்க்கு வணங்காத ஆண்மையையம், பகைவரின் ஊர்களை எல்லாம் சுடுகின்ற மிக்க எரி எரித்தலால், மலர் இதழ்கள்

கரிந்து அழகு கெட்ட மாலையையம், உலர்ந்த சாந்தமும் கொண்ட பல பொறிகளை உடைய மார்பு பொருந்தியவனே! நினக்கு உரியதான மலையில் தோன்றி நின் கடலிலே கலக்கும் நீர் நிரம்பிய ஆறில் நிகழ்த்தப்படும் புனலாட்டு விழாவும் சோலை இடத்து இனிதாய ̇இருந்து செய்யும ̇வேனிற் கால விழாவும் உடையாய் நீ இத்தகைய பெரிய அரிய வாழ்வில், நின்னை விரும்பிச் சூழும் சுற்றத்டுமன் உடனிருந்து உண்டு மற்ற இன்பப்பகுதி பலவும் அனுபவிக்கும் இயல்பும் கொண்டவன் நீ . செல்வ மக்கள் கூடி வியைாடும் இனிய நீரையுடைய காஞ்சி என்னம் ஆற்றின் பெருந்துறையில் பரந்த நுண்ணிய மணலைவிடப் பல ஆண்டுகள் நின் பெயர் நிலை பெறுவதாகும்.



## 13.11.பாடல் : 49 : "செங்கை மறவர்" துறை : விறலியாற்றுப்படை

யாமும் சேறுக, நீயிரும் வம்மின்,
துயிலுங் கோதைத் துளங்கு இயல் விறலியர்!
கொளை வல் வாழ்க்கை நும் கிளை இனிது உணீஇயர்,
களிறு பரந்து இயலக் கடுமா தாங்க,
ஒளிறு கொடி நுடங்கத் தேர் திரிந்து கொட்ப,
எ.்.கு துரந்த எழுதரும் கை கவர் கடுந்தார்
வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து,
மொய் வளம் செருக்கி மொசிந்து வரு மோகூர்
வலம்படு குழூஉ நிலை அதிர மண்டி,
நெய்த்தோர் தொட்ட "செங்கை மறவர்"
நிறம் படு குருதி நிலம் படர்ந்து ஓடி,
மழை நாள் புனலின் அவல் பரந்து ஒழுகப்,
படுபிணம் பிறங்கப் பாழ் பல செய்து,
படுகண் முரசம் நடுவண் சிலைப்ப,
வளன் அற நிகழ்ந்து வாழுநர் பலர் படக்,
கருஞ் சினை விறல் வேம்பு அறுத்த
பெருஞ்சினைக் குட்டுவன் கண்டனம் வரற்கே.

தெளிவுரை :

யானைப்படையில் உள்ள யானைகள் எங்கும் பரவிச்செல்லும் விரைந்த செலவையுடைய குதிரைகள் தம்மைச்செலுத்துவோரின் குறிப்பின் படி அணி சிதையாது அவரைத் தாங்கிச் செலலும் விளங்கம் கொடிகள் அசையத் தேர் தான் செல்லும் நெறிக்கு ஏற்ற வண்ணம் சுழன்று செல்லும் வேற்படையைச் செலுத்தி எழுகின்ற பகைவர் முன்னணிப்படையின் இருபப்பங்களிலும் வரும் பக்ப் படையைப் போர் செய்த கவரும் படையையும் வெல்லும் போரையும் உடைய முடி வேந்தரமரும் குறுநில மன்னரும் தங்களுக்குள் அறுகை என்பானை வெல்லும் ஒன்றையே கூறியபடி உன் வர, மிகுந்த வன்மையால் மனம் செருக்கு் காண்ட அலருடன் கூடி வரும் மோகூர் மன்னனான பழையனுடைய வெற்றி தரும்

படைக் கூட்டத்தின் கூட்மட் கலைந்து சிதையமாறு நெருங்கித் தாக்கினவன் செங்குட்டுவன்.

உடலில் தைத்த கருவிகளைப்பிடுங்கம் பொத குருதியில் பட்டதால் சிவந்த கைகயையுடைய போர் வீரரின் மார்புப் புண்ணிடத்து ஒழுகம் குருதியானது, நிலத்தில் பரநத:து ஓடும், புதுத மழை பொழியும் நாளில் பெருக்கெடுத்தோடும ˙கலங்கிய நீரைப் போல் பரவிப் பள்ளம் நோக்கிப் பாயும். இறந்து விழும் பிணங்கள் எங்கும் குவியும்படி நிறைந்தன. இங்ஙனம் பலவற்றையம் பாழ் செய்து படையின் நடுவே முழங்க, அப்பழையனின் செல்வம் முழுவதும் கெட, இருந்து வாழ்வதற்றுகுரியவர் இராது இறந்து பொக, குருமையான கொம்பகளையும் வன்மையையும் கொண்ட காவல் மரமான வேம்பினைச் செங்குட்டுவன் வெட்டி வீழ்த்தியவன். மிக்க சினம் கொண்ட அச்செங்குட்டுவனைக் கண்டு வருவதற்காக, அசையும் கூந்தலையும் அச்சமும் உடைய விறலியர்களே! யாமும் செல்கின்றோம். நீங்களும் வருக! பாடல் வன்மையால் வாழுகின்ற வாழ்க கையை உடைய நும் சுற்றத்தவர் உடுப்பவையும அணிபவையும் பெறுவதே அல்லாமல் உண்பனவற்றையம் மிகுதியாய் பெற்று உண்பார்களாக!

## 13.12.பாடல் : 50 : "வெருவரு புனல் தார்" துறை : வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு

வண்ணம் : ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்

மா மலை முழக்கின் மான் கணம் பனிப்பக்,
கால் மயங்கு கதழ் உறை ஆலியொடு சிதறிக்,
கரும்பு அமல் கழனிய நாடு வளம் பொழிய,
வளங்கெழு சிறப்பின் உலகம் புரைஇச்,
செங்குணக்கு ஒழுகும் கலுழி மலிர் நிறைக்
காவிரி அன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூடல் அனையை!
கொல் களிற்று உரவுத் திரை பிறழ, வல்வில் பிசிரப்,
புரை தோல் வரைப்பின் எ∴கு மீன் அவிர் வர
விரவுப் பணை முழங்கு ஒலி, வெரீஇய வேந்தர்க்கு
அரணம் ஆகிய, "வெருவரு புனல் தார்"
கல் மிசையவ்வும், கடலவும் பிறவும்
அருப்பம் அமைஇய அமர் கடந்து, உருத்த
ஆள் மலி மருங்கின் நாடு அகப்படுத்து,
நல் இசைந னந்தலை இரிய, ஒன்னார்
உருப்பு அற நிரப்பினை ஆதரலின், சாந்து புலர்பு
வண்ணம் நீவி வகை வனப்புற்ற,
வரி ஞிமிறு இமிரும் மார்பு பிணி மகளிர்
விரிமென் கூந்தல் மெல் அணை வதிந்து,
கொல் பிணி திருகிய மார்பு கவர் முயக்கத்துப்
பொழுது கொள் மரபின் மென் பிணி அவிழ,

எவன் பல கழியுமோ பெரும, பல் நாள்
பகை வெம்மையின் பாசறை மரீஇப்,
பாடு அரிது இயைந்த சிறு துயில் இயலாது,
கோடு முழங்கு இமிழ் இசை எடுப்பும்
பீடு கெழு செல்வம் மரீஇய கண்ணே?

தெளிவுரை :

பெரீய மலையில் மேக ஒலியால் விலங்கக் கூடடம் அச்சம் கொண்ட நடுங்க. காற்றுக் கலந்த மோதுதலால் பொழிகின்ற மழை ஆலங்கட்டியுடன் சிதறிப்பெய்தது. அதனால் கரும்புகள் நெருங்கிய கழனிகளையுயை நாடுகள் வளம் பெருகிச் சுரக்க, சிறப்பையுடைய நிலவுலகத்தைக் காத்து நேர் கிழக்காக ஓடும் கலங்கிய நிறைந்த வெள்த்தையுடைய காவிரியை ஒப்பதே அல்லாமல், மலர்கள்மலர்நத நீரையுடைய ஆறுகள் மூன்றும் கூடிய முக்கூடலையும் ஒப்பவன்ஆவாய். போரிலே பகைவரைக்கொல்லும் தன்மை கொண்ட களிறுகளாகிய பரந்த கடல் அலைகள் அசைந்து வரும் வலிய வில்லாகிய படையை உடையவர். அவ்வலைகள் பிசிர் போன்று பரவுவர். உயர்ந்த கேடகத்தில் விளிம்பின் மீதுத வேற்படை என்ற மீன்கள் விளங்கும். இத்தகைய போர்ப்பறை முதலியவற்றுடன் கலந்து முழங்கம் முரசொலி கேட்டு அஞ்சிப்புகல் அடைவர் அரசர்கள். அவர்களுக்குப் புகலாகிக்காவலாகுவார். அச்சம் தரும் தூசிப்படை என்ற வெள்ளம் மலையிலும் கடலிலும் மற்ற இடங்களிலும் உள்ளனவான அரணிடம் பொருந்திய பேர்களை வஞ்சியாமல்பேரிட்டு வென்ற விளங்கும் அச்சம் பொருந்திய வீரர் மிக்குள்ள இடங்கை உடைய நாடுகளைக் கைப்பற்றி அகன்ற இடத்தை ஊடைய இவ்வுலகத்தில் பகைவரின் நல்ல புகழ் கெட்டழிய அவர் தம் சினம் என்ற தீ முற்றும் அவியும்படி செய்தாய்.

பெரும!ஆகையால் பூசிக்கொண்டள்ள சந்தனம் புலர, நெற்றியில் அணிந்த திலகம் கண்ணில் தீட்டிய மையம் பிறவுமான வண்ணங்கள் நீங்க, வரிகளை உடைய வண்டுக்கூட்டம் ஒலிக்கும் நின் மார்பால் பிணிக்கப்பட்ட மங்கையிரின் மன்மையான கூந்தலான மெல்லிய படுக்கையில் கிடந்து மிக்க வருத்தம். தரும் காமவேட்கை மிகுதலால் மார்ப அடைய முயங்கும் மயக்கத்தால், இரவுப் பொழுதைப் பயன் கொள்ளும் முறைமையை உடைய உறக்கம் பெறாது நீங்கும்படி. நாள் பலவும் எப்படிக் கழியுமோ? பல நாள்கள் பாசறையில் இருத்தலால் சங்கு ஒலிக்கும் ஒலியும பிற கருவிகள் எழுப்பும் ஒலியும் பெருமை பொருந்தியபோர் விளைக்கும் செல்வத்தில் பழகிய நின் கண்கள் பகைவரிடம் உண்மான மிக்க சினத்தால் உறங்குதல் அரிதாச் சிறு துயிலும் மேற்கொள்வதும் இயலாது.

சங்க இலக்கியம்

குறிப்புகள்

## 13.13.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறு வினா :**

1. ஐந்தாம் பத்துப் பாடிய புலவர்க்கு கடல்பிறகோட்டிய செங்குட்டுவன் அளித்த பரிசில் யாது?
2. வாழ்வியலோடு வளர்ந்த இசைத் தமிழ் குறித்த குறிப்புகளை உம்பாடப்பகுதி வழி எடுத்துரைக்க.
3. பதிற்றுப்பத்து காட்சிப்படுத்தும் இயற்கை நலன்களை சுட்டுக.
4. செங்குடடுவன் எவ்வாறு நீண்ட நாள் வாழ வேண்டும் என்று விரும்பி வாழ்த்துகின்றார் புலவர்?
5. சேரன் வீரர்களுக்கு அளித்த விருந்தின் சிறப்பினை எடுத்தியம்புக
6. பாண்டில் விளக்கு – குறிப்பு வரைக.
7. கலைஞர்கள் பெற்ற பரிசில்கள் யாவை?
8. கெங்கை மறவர் - குறிப்பு வரைக

**பெருவினா :**

9. கடல்பிறகோட்டிய சேரலாதனின் பண்பு நலன்களை உம்பாடப்பகுதி கொண்டு விரித்துரைக்க.
10. ஐந்தாம் பத்தின் வழி காணலாகும் சேரநாட்டின் இயற்கை நலன்களை எடுத்துரைக்கவும்.
11. ஐந்தாம் பத்து காட்சிப்படுத்தும் போர்க்களக் காட்சிகளைத் தொகுத்துரைக்க.
12. கடற்பிறகோட்டிய செங்குட்டுவனின் உறக்கம் மறந்த போர்க்குணச் சிறப்பைத் தொகுத்துரைக்க.

## 13.14.தொகுத்துக் காண்போம். :

பரணரால் இப்பாடல்கள் மூலம் கடல் பிறக்கோட்டிய செங்குட்வனின் ஈகைச்சிறப்பு, போர்க்குணம் ஆகியவற்றினையும், அக்கால மன்னர்களின் மனைவியரின் மாண்பு, இல்லறத்தின் இனிமை போன்ற பல செய்திகளும் இப்பகுதியின் மூலம் நாம் எடுத்துரைக்கப்பட்டுள்ளதனை அறிய முடிகின்றது.

## 13.15.மேலும் பயில்வதற்கான நூல்கள் :

- பதிற்றுப்பத்து மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- பதிற்றுப்பத்து, புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம்,திருவல்லிக்கேணி, சென்னை-5
- பதிற்றுப்பத்து மூலமும் உரையும், அவ்வை துரைசாமிபிள்ளை உரை, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5
- பதிற்றுப்பத்து உரை, வித்வான் நாராயணவேலுபிள்ளை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை98
- பதிற்றுப்பத்து உரை, ஆரிஸ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை98

குறிப்புகள்

# கூறு – 14 சிறுபாணாற்றுப்படை

## 14.1.நூல் அறிமுகம் :

பத்துப்பாட்டில் மூன்றாம் நூலாக அமையும் ஆற்றுப்படை நூல். சிறிய யாழ் கொண்டிருக்கும் பாணனை ஆற்றுப்படுத்தியமையின் சிறுபாணாற்றுப்படை எனப்பட்டது. ஓய்மா நாட்டு நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. 269 அடிகளால் இயன்ற ஆசிரியப்பாவால் பாடப்பட்டது. நூலில் பாலை வழியின் கடுமை, விறலி வருணனை, பாணனைக் காணுதல், வஞ்சி நகரத்தின் வளம், கொற்கை நகரின் வளும், உறையூரின் வளம், கடையெழு வள்ளல்களான பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி ஆகியோரின் சிறப்புகள், நல்லியக்கோடனின் உபசரிக்கும் பண்பு, எயில் பட்டினத்தின் சிறப்பு, வேலூரின் சிறப்பு, ஆமூரின் சிறப்பு, அரண்மனை வாயில் சிறப்பு, பரிசு வழங்கும் முறைமை, நல்லியக்கோடனின் புகழ் முதலானவை சிறப்பிக்கப்படுகின்றன.

## 14.2.குறிக்கோள்கள் :

பரிசில் பெற்ற சிறிய யாழினை உடைய யாழ்ப்பாணன் ஒருவன் மற்றொரு யாழ்ப்பாணனை வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது இவ்விலக்கியம். ஓய்மா நாட்டு நல்லியக்குோடனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டுள்ளது. விறலியின் வருணனை, வஞ்சி, மதுரை, உறையூரின் சிறப்புகள், கடையெழு வள்ளல்களின் கொடைச் சிறப்புகள், நெய்தல், முல்லை, மருத நிலங்களின் சிறப்புகள் ஆகியவற்றறைப் பற்றி இப்பகுதியின் மூலமாக எடுத்துரைப்பதே முக்கிய நோக்கமாகும்.

**பாடியவர் - இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடப்பட்டவன் - ஓய்மான் நாட்டு நல்லியக்கோடன் திணை – பாடாண் திணை துறை – ஆற்றுப்படை பா வகை – ஆசிரியப்பா மொத்த அடிகள் - 269**

## 14.3.நிலமகளின் தோற்றம்

மணி மலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணி முலைத் துயல்வரூஉம் ஆரம் போல,
செல்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்று
கொல் கரை நறும் பொழில் குயில் குடைந்து உதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடி, புடை நெறித்து
கதுப்பு விரித்தன்ன காழ் அக நுணங்கு அறல்

மூங்கில் போன்றதான தோள்களை உடையவளாகிய நிலம் என்னும் பெண்ணினுடைய மாணிக்க மலையாகிய முலைகளின் மீது படர்ந்து அசைந்து கொண்டிருக்கக் கூடியதான முத்து மாலையினைப் போன்றதான, ஓடக்கூடியதான நீரின் காரணமாக வருத்தம் கொண்ட வெகு தொலைவினில் இருந்து ஓடிவரக்கூடியதான காற்றாற்று வெள்ளமானது வந்து மோதுகின்ற

கரையினில் அமைந்துள்ள நறுமணம் வீசும் சோலையினில், குயிலின் அலகுகள் குடைந்து பின் உதிர்ந்து வாடியப் பூக்களைச் கூடி, நீரில் அரிக்கப்பட்டு படர்ந்திருந்த நிலம் என்ற பெண்ணின் கருமையான கூந்தல் போன்ற தோற்றம் உடைய மணல், கருப்புத் தங்கத்தினை வெள்ளையாக்கியது போன்றதான மணல் பரப்பில்..

## 14.4.இளைப்பாறும் பாணன்

அயில் உருப்பு˙அனைய ஆகி ஐது நடந்து
வெயில் உருப்புற்று வெம்பரல் கிழிப்ப,
வேனில் நின்ற வெம்ப வழி நாள்,
காலை ஞாயிற்றுக் கதிர் கடா உறுப்ப,
பாலை நின்ற பாலை நெடு வழி,
சுரன் முதல் மராஅத்த வரி நிழல் அசைஇ,

மெதுவாக நடந்து செல்லும் போதினில் வெப்பம் தாக்குகின்ற கூர்மையான கற்கள் பாதங்களில் குத்தி வருத்தம் தரக்கூடியதான இளவேனில் காலம் முழுமையான வெப்பத்தினைத் தந்து, முதுவேனில் பருவம் நடைபெறும் நாள்களில் சூரியனின் கதிர்கள் காலையிலேயே மிகுந்த வெப்பம் தருவதன் காரணமாக பாலை நிலத்தின் குணத்தை முழுமையாக அடைந்தவை போன்று அந்நிலம் காட்சி பெறும் நீண்ட பாலை நிலத்தின் வழியாக நிற்கக் கூடிய கடம்ப மரத்தின் கிளைகளில் மூலமாகப் பரந்து படர்ந்து வரிய (சிறிய) நிழலில் தங்கி நிற்கின்றனர்.

## 14.5.விறலியரின் அழகு

ஐது வீழ் அகு பெயல் அழகு கொண்டு அருளி,
நெய் கனிந்து இருளிய கதுப்பின், கதுப்பு என
மணிவயின் கலாபம் பரப்பி பலவுடன்
மயில் மயில் குளிக்கும் சாயல், சாஅய்
உயங்கு நாய் நாவின் நல் எழில் அசைஇ,
வயங்கு இழை உலறிய அடியின் அடி, தொடர்ந்து
ஈர்ந்து நிலம் தோயும் இரும் பிடித் தடக் கையின்
சேர்ந்து உடன் செறிந்த குறங்கின், குறங்கு என
மால் வரை ஒழுகிய வாழை, வாழைப்
பூ எனப் பொலிந்த ஓதி
நளிச்சினை வேங்கை நாள் மலர் நச்சி
களிச் சுரும்பு அரற்றும் சுணங்கின், சுணங்கு பிதிர்ந்து
யாணர்க் கோங்கின் அவிர் முகை எள்ளிப்
பூண் அகத்து ஒடுங்கிய வெம்முலை, முலை என
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன் சேறு இகுதரும் எயிற்றின், எயிறு என
குல்லை அம் புறவில் குவி முகை அவிழ்ந்த,
முல்லை சான்ற கற்பின், மெல்இயல்,
மட மான் நோக்கின், வாணுதல் விறலியர்

வானிலிருந்து சிறுசிறு தூறல்கள் விழுகின்றன. அந்த மழைத் துளிகளின் அழகினைத் தன்னருகில் கொண்டிருக்கக் கூடிய குளிர்ச்சியான கூந்தலையும், இவர்களுடைய அழகுக்கு முன்னால் நாம் எந்த வகையிலும் ஈடாக மாட்டோம் என்று நினைத்து மயில் கூட்டங்கள், நீண்ட தோகையினையுடைய ஆண் மயில்கள், பெண் மயில்களின் மத்தியில் தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டு செல்லக் கூடிய அழகினைப் போன்றும், வேகமாக ஓடி இளைத்த நாயின் தொங்குகின்ற நாக்கினைப் போன்று எந்தவிதமான அணிகலன்களும் இல்லாமல் அழகு குறைந்ததாக காணப்படும் பாதங்களையும், பெண் யானையின் தும்பிக்கையினைப் போன்ற திரண்ட பெரிய அழகானத் தொடைகளையும், வாழைப் பூவினைப் போன்ற தோற்றத்தையுடைய அலங்கரிங்கப்பட்ட கொண்டையினையும், வேங்கை மலர் போன்ற தேமலையும், கோங்க மலரின் மொட்டுகள் போன்ற தன்மையுடன் காட்சியளித்திடும் முலைகளையும், நுங்கின் இனிமையையுடைய நீரினையும், நீர் ஊறும் வாயினையும், முல்லை மலரினைச் சூடிக் கொள்ளத்தக்க சிறப்பினை உடைய கற்பினையும், மென்மையான உடல் வாகினையும், மானினைப் போன்ற மருட்சியான அச்சத் தன்மையும் கொண்ட பார்வையும் உடைய கண்களையும், ஒளி வீசக்கூடியதான நெற்றியினையும் உடைய விறலியர்கள்.

## 14.6.விறலியரின் காலைத் தடவி விடும் இளையர்கள்

நடை மெலிந்து அசைஇய நல்மென் சீறடி,
கல்லா இளையர் மெல்லத் தைவரப்

அவர்கள் ஊர் ஊராக நடந்து நடந்து களைத்து வருந்தி உடல் இளைத்ததான நிலையில் காணப்பட்ட விறலியர்களின் பாதங்களைக் கல்வி அறிவு என்பது சிறிதும் இல்லாத இளைஞர்கள் மெதுவாக வருடிக் கொண்டிருந்தார்கள்.

## 14.7.பரிசில் பெற்ற பாணன் குடும்பத்துடன் வந்து பாணனைச் சந்தித்தல்

பொன் வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ,
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன், கடன் அறிந்து இயக்க,
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ,
துனிகூர் எவ்வமொடு, துயர் ஆற்றுப்படுப்ப,
முனிவு இகந்து இருந்த, முதுவாய் இரவல

பொன்னால் செய்யப்பட்ட கம்பியினைப் போன்று சிறிதளவும் முறுக்கல் என்பது இல்லாத நரம்பின் இனிய ஓசை எழுப்பும் சிறிய யாழினை தம் இடது புறமாக இருக்கும் படியாக பொருத்திக் கொண்டு, நட்டபாடை என்னும் இனிமை நிறைந்த செம்மையான பண்ணினை இசைத்திட வேண்டிய முறைகளை நன்கு அறிந்தவனாகிய மூத்த பாணன் இசைத்திடவும், வள்ளல்கள் இல்லாத காரணத்தால் பரிசு பெறுவோர்

குறிப்புகள்

எங்கும் செல்லாமல் இந்த உலகில் பரிசு கொடுக்கக் கூடியதான வள்ளல் தன்மை உடையவர்களை விரும்பித் தேடிச் செல்லக்கூடிய அவசியத்தினை தங்களுடைய வறுமை ஏற்படுத்தியதனால், வழியில் நீண்ட தூரம் நடந்து வந்து துன்பம் தீர்ந்திருந்த முழுமையான அறிவினை உடைய இரவலன்.

## 14.8.சேர நாட்டின் வளம்

கொழுமீன் குறைய ஒதுங்கி, வள் இதழ்க
கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை,
பைங்கறி நிவந்த பலவின் நீழல்,
மஞ்சள் மெல் இலை மயிர்ப் புறம் தைவர,
விளையா இளங்கள் நாற, மெல்குபு, பெயரா,
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குட புலம் காவலர் மருமான், ஒன்னார்
வட புல இமயத்து வாங்கு வில் பொறித்த,
எழு உறழ் திணி தோள், இயல் தேர்க்
குட்டுவன்,
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே,
அதாஅன்று

கொழுத்துப் பருத்த மீன் துண்டாகச் சிதையும்படியாக அதனை மிதித்துக் கொண்டே சென்று, வளப்பத்துடன் கூடிய இதழ்களை உடைய செங்கழுநீர் மலர்களை உண்ணக்கூடிய எருமைக் கூட்டமும், பசுமையான மிளகுக் கொடிகள் படர்ந்திருக்கும் பலாமரத்தின் நிழலில் மஞ்சள் இலைகள் தன் முதுகைத் தடவிக் கொண்டிருக்கக் காட்டு மல்லிகைக் கொடிகள் மிகுதியாக நிறைந்திருந்த படுக்கையில் தேன் மணம் நிறைய தான் உண்டவற்றை அசை போட்ட வண்ணம் தூக்கத்தினை மேற்கொண்டுள்ள மேற்குத் திசையில் அமைந்துள்ள சேர நாட்டில் அரச மரபில் வந்து உதித்தவனும், கணையமரம் போன்ற வலிமையுடைய தோள்களை உடையவனும், வடதிசையில் அமைந்துள்ள இமயமலையில் தம்முடைய விற்கொடியினை நாட்டியவனும், குட்ட நாட்டினுடைய தலைவனுமாகிய மன்னன் வாழ்ந்திடக் கூடியதான வஞ்சி மாநகர். இக்காலத்தில் இரவலர்களாக வருபவர்களுக்கு வழங்கக்கூடிய பரிசு சிறிய அளவினதாக இருக்கும்.

## 14.9.பாண்டிய நாட்டின் பெருமை

நறவுவாய் உறைக்கும் நாகு முதிர்
நுணவத்து
அறைவாய்க் கநற்துணி அயில் உளி
பொருத,
கை புனை செப்பம் கடைந்த மார்பின்,
செய்பூங் கண்ணி செவி முதல் திருத்தி,
நோன் பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி, மடவோர்

நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்,
வாள் வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி,
தோள் புற மறைக்கும் நல்கூர் நுசுப்பின்
உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர் பூண் புதல்வரொடு, கிலுகிலி ஆடும்
தத்து நீர் வரைப்பின் கொற்கைக் கோமான்,
தென்புலம் காவலர் மருமான், ஒன்னார்
மண் மாறு கொண்ட மாலை வெண்குடை
கண்ணார் கண்ணி கடுந்தேர்ச் செழியன்,
தமிழ் நிலைபெற்ற தாங்கு அரு மரபின்,
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே,

மேற்சொன்ன வஞ்சி நகரம் மட்டுமின்றி, நுணா மரத்தினை அறுத்துச் செய்யப்பட்ட, மாலையினை அணிந்திருக்கக் கூடிய மார்பினையும் செயற்கையான பல இழைகளைக் கொண்டு செய்யப்பட்ட அழகான பூமாலையினைச் சுற்றிக் கொண்டிருக்கக் கூடிய நெற்றியினையும் உடையவர்களான உப்பு வணிகர்களின் வண்டிகளுடன் வந்த அவர்கள் பெற்ற பிள்ளைப் போன்று, அவர்களுடன் இணைந்தே வாழும் பெண் குரங்கு, மான் போன்றவற்றுடன், வாயினைத் திறந்தப்படி காட்சித் தரக் கூடிய கிளிஞ்சல்களின் உள்ளே முத்துகளை அடைத்து, அதன் வாயினை மூடி, அந்தக் கிளிஞ்சல்களைத் தங்களுடைய குழந்தைகளுக்கு கிலுகிலுப்பையாகக் கொண்ட பெண்கள், தங்களின் இடையினையும் தோளினையும் மறைக்கும் வகையில் தம்முடையக் கூந்தலை ஐந்து வகையான காலெடுத்துச் செய்யும் அலங்காரத்தால் பன்னி முடிக்கப்பட்ட அழகினை உடையவர்களாய், அந்த உப்பு வணிகர்களின் மனைவியர்கள், தாம் பெற்ற குழந்தைகளுடன் விளையாடக் கூடியதான கடற்கரை நகரமாகிய கொற்கை மாநகரின் தலைவனும், தென் திசையில் அமைந்துள்ள பாண்டிய நாட்டினைக் காவல் காத்திடக் கூடிய பாண்டிய மன்னனின் குலத்தோன்றலாகத் தோன்றியவனும், பகைவர்களின் நிலங்களைப் போர் மூலமாகத் தம்முடையதாக்கிக் கொண்டவனும், முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட வெண்கொற்றக் குடையினை நடையவனும், மாலை அணிந்தவனும், வலிமை உடைய தேரினை உடையவனுமாகிய பாண்டியன் நெடுஞ்செழியன் தமிழ் நிலைப் பெற்றுத் தங்கி விளங்கிடக் கூடியதான பெருமையினால் அளவற்ற மகிழ்வினை உடைய பெரிய தெருக்களைத் தன்னகத்தில் கொண்டுள்ள மதுரை மாநகரில் பெறக்கூடிய பரிசுகள் மட்டும் சிறிய அளவினதாகவா இருக்கும்?



## 14.10.சோழ நாட்டின் பெருமை

..................................அதாஅன்று
நறு நீர்ப் பொய்கை அடை கரை நிவந்த
துறு நீர்க் கடம்பின் துணை ஆர் கோதை,

ஒவத்து அன்ன உண் துறை மருங்கில்,
கோவத்து அன்ன கொங்கு சேர்பு
உறைத்தலின்
வருமுலை அன்ன வண்முகை உடைந்து
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை,
ஆசுஇல் அங்கை அரக்குத் தோய்ந்தன்ன,
சேயிதழ் பொதிந்த செம் பொற்கொட்டை,
ஏம இன் துணை தழீஇ, இறகு உளர்ந்து
காமரு தும்பி காமரம் செப்பும்
தண் பணை தழீஇய தளரா இருக்கை,
குணபுலம் காவலர் மருமான், ஒன்னார்
ஓங்கு எயில் கதவம் உருமுச்சுவல் சொறியும்
தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு
தடக்கை,
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்,
ஓடாப் புட்கை உறுந்தையும் வறிதே,
அதாஅன்று

மதுரை மாநகரம் மட்டுமின்றி நீர் நிலைகளை அடுத்து மனிதர்களால் உருவாக்கப்படாமல் இயற்கையாகவே அமைந்ததுடன், நறுமணம் வீசிடக் கூடியதான கரையினில் வளர்ந்திருக்கக் கூடியதான செறிவான மாலையினைப் போன்ற தன்மையுடன் திழ்ந்திடக் கூடிய கடம்ப மலர்கள், இந்திரக் கோபப் பூச்சியின் நிறம் போன்ற மகரந்தகளைச் சிந்துகின்ற காரணத்தினால், வரைந்து வைத்தற்கான ஓவியத்தினைப் போலக் காட்சித் தரக்கூடிய அழகு மிகுந்த குடிநீர்த் துறையில் பூத்துக் காட்சி தரக்கூடிய தாமரை மலரின் நிறத்தினை எடுத்துச் சேர்த்ததைப் போன்று சிவந்த நிறத்துடன் காணப்படக் கூடிய அக இதழ்களால் சூழப்பட்டிருக்கும். தங்க நிறத்திலான பொருட்டின் மீது தும்பி தன்னுடைய பெண் துணையினைத் தழுவிக் கொண்டு சிறகுகளை அசைத்துச் சிகாமரம் என்னும் பண்ணினைப் பாடியபடி, மருத நிலங்களால் சூழப்பட்டிருக்கும் வகையில் கிழக்கில் அமைந்துள்ள நிலங்களைப் பாதுகாத்திடக் கூடியதான சோழ மன்னர்களின் பழமையான குலத்தோன்றலாக வந்துதித்தவனும், தொடி என்னும் அழகிய அணியினை அழகுற தம் கைகளில் அணிந்தவனும், சிறப்பு உடைய தேரினை உடையவனும், சோழன் செம்பியனின் குடிமக்கள் தங்கி, தம் நிலத்தினை விட்டு நீங்கிவிடாத வகையில், அவர்கள் விரும்பித் தங்கும் வகையிலான வளமையான வாழ்வினைக் கொடுத்திடக்கூடிய உறையூர் என்னும் ஊரினில் தரக் கூடிய பரிசு சிறிய அளவினதாகவே ஈருக்கும்.

## 14.11.கடையெழு வள்ளல்களின் சிறப்பு

**பேகன் :**

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய

அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்

உறையூரில் கிடைத்திடக்கூடிய பரிசும் சிறியதாகவே இருக்கும். அதனால் தக்க பரிசினை வழங்கக் கூடிய இடம் வேறு ஏதும் இல்லை என்பதனாலும், பருவக் காலத்தில் பொழிந்திடக்கூடிய மழையானது பொய்த்து விடாமல், சரியான காலத்தினால் பொழிந்த காரணமாக வளமான மலைப் பகுதியினை ஒட்டிய காட்டினில் வாழ்ந்திடக்கூடிய மயில் அகவியதனைக் கேட்டு, அம்மயிலானது குளிரின் கொடுமை தாங்காமல் தான் நடுங்கிக் கத்துகின்றது என நினைத்து, அதன் காரணமாகத் தன்னுடைய மனதில் உண்டான அருள் தன்மையின் காரணமாகத் தான் அணிந்திருந்த தன்னுடைய போர்வையினை மயிலுக்குப் போர்த்தி அதன் குளிரைத் தடுக்க முயன்றவனும், வலிமை உடைய ஆவியர் குடியில் தோன்றி பெருந்தன்மையும் நற்குணமும் உடையவனுமாகிய, பெரிய மலை நாட்டிற்கு தலைவனுமாகிய பேகன் என்னும் வள்ளல்.

**பாரி :**

............ சுரும்பு உண
நறுவீ உறைக்கும் நாக நெடு வழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும்

வண்டுகள் அனைத்தும் மகிழ்ந்து தேன் உண்ணும் வகையில் எவ்விதமானக் குறையும் நேராத வகையில் தேன் துளிகளைத் துளிர்த்துக் கொண்டிருக்கக் கூடியதான சுரப்புன்னை மரங்கள் சூழ்ந்துள்ள வழியில் தான் செல்லுகின்ற பாதையில் தான் செல்லக்கூடியதான தேரினைத் தடுத்திட்ட சிறிய உடைய முல்லைக் கொடியினைக் கண்டு, அது தன்னுடையத் தேரின் கால்களைப் போன்று எங்கும் பட்டுச் சிதைந்துவிடாத வகையில் அந்த முல்லைக் கொடிக்குத் தன்னுடையத் தேரினையேக் கொடுத்திட்டவனும், ஓசையுடன் வீழ்ந்திடக் கூடியதான அழகிய அருவிகளால் சூழப்பட்டதான பறம்பு மலைக்கு சொந்தமுடைய மன்னனாகிய பாரி என்னும் வள்ளல்.

**காரி :**

........................ கறங்கு மணி
வால் உளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நல்மொழி இரவலர்க்கு ஈந்த,
அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடு
வேல்
கழல் தொடித் தடக் கை காரியும்

ஒலியினை உடையதான இயல்புடைய மலைகளால் கட்டப்பட்டதும் தலைகள் ஆட்டக் கூடியதுமான குதிரைகளையும், தம்முடைய

நாட்டினையும் கருணையுடையதான வார்த்தைகளையும் மற்றவர்கள் கேட்டு வியந்து போற்றும் வகையில் தம்மை நாடி வந்த இரவலர்களுக்கு அள்ளக் கொடுத்திட்டவனும், வேலினையும், தொடி என்னும் அணிகலனை கைகளில் அணிந்தவனுமாகிய காரி என்னும் வள்ளல்.

**ஆய் அண்டிரன் :**

……….. ……………. நிழல் திகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்து புலர் திணி தோள்
ஆர்வ நன் மொழி ஆயும்

ஒளி வீசக்கூடிய நீல நிறமுடைய வயிரக் கல்லினையும், நாகத்தினால் வழங்கப்பட்ட ஆடையினையும் மிகுந்த மன மகிழ்ச்சியுடன் ஆலத்தின் அடியில் அமர்ந்தவனாகிய சிவ பெருமானுக்கு வழங்கியவனும், வில்லினைக் கரங்களால் ஏந்தியவனும், சந்தனம் பூசியவுடன் அது உலர்ந்த தன்மையுடன் காட்சி அளித்திடக்கூடிய அழகிய தோள்களை உடையவனும், ஆர்வம் உடையதான இனிய சொற்களைப் பேசிடக்கூடியவனுமாகிய ஆய் என்னும் வள்ளல்.

**அதிகன் (அதியமான்) :**

…………. மால் வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த,
உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடுவேல்
அரவக்கடல் தானை அதிகனும்

பெரிய மலைச்சாரலில் வளர்ந்து நின்று அழகுபெற்ற நெல்லி மரங்களின் உயிர் நிலைப் பெற்று வாழ்ந்திட உதவும் வகையில் அமுதத்தின் தன்மையினை உடைய நெல்லிக் கனியினை உண்டு தன்னுடைய உடலுக்கு வலிமையினை சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்ற போதும் அதனை விரும்பிச் செய்யாமல், தமிழ் மீது கொண்ட காதலால் ஔவை பிராட்டிக்கு வழங்கியவனும், கொற்றவையின் கோபத்தினைப் போன்றதான ஒளிவீசும் வேலினையும் கடல் போன்ற ஓசையினை உடைய படைகளையும் கொண்டிருக்கக் கூடிய அதிகமான் என்னும் வள்ளல்.

**நள்ளி :**

……………………….. கரவாது
நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த முனை விளங்கு தடக்கை
துளி மழை பொழியும் வளி துஞ்சு
நெடுங்கோட்டு
நளி மலை நாடன் நள்ளியும்

தன் மனதினில் உண்டாகக் கூடிய எண்ணங்களை மற்றவர்களிடம் மறைக்காமல் எடுத்துக் கூறுவதனால் ஈர்க்கப்பட்டு தன்னிடம் நட்பு கொண்டவர்கள், மகிழ்ச்சியடையும் வகையில் அவர்களின் இல்லத்திற்குத் தேவையுடைய பொருள்களை அவர்கள் கேட்காமலேயே வழங்கிவிடும் அன்புடையவனும், உரிய காலத்தில் தவறாமல் பொழிந்திடக்கூடிய மழையினை உடையதான உயரமான மலை நாட்டினைத் தம்முடைய உரிமைப் பொருளாகக் கொண்டவனும், போரில் அளப்பறிய வீரத்துடன் செயல்படக் கூடியவனுமாகிய நள்ளி என்ற வள்ளலும்.

**ஓரி :**

……………….. நளி சினை
நறும்போது கஞலிய நாகு முதிர் நாகத்து
குறும் பொறை நல்நாடு கோடியர்க்கு ஈந்த,
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும்

அடர்ந்து வளர்ந்து கிளைகளில் மணம் வீசக் கூடிய பூக்கள் மிகுதியாகக் காட்சித் தரக்கூடிய சுரபுன்னை மரங்கள் நிறைந்த சிறிய மலை நாடுகளை தம்மை நாடி வந்த கூத்தர்களுக்குக் கொடுத்தருள் செய்தவனும், காரி என்னும் குதிரையினை உடையவனுமாகிய காரி என்னும் மன்னனுடன் போர் புரிந்தவனும் ஓரி என்னும் குதிரையினைத் தமக்குரிமை உடையதாக வைத்திருந்தவனுமாகிய ஓரி என்னும் வள்ளல்.

## 14.12.நல்லியக்கோடனின் ஈகைச் சிறப்பு :

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்,
விரிகடல் வேலி வியலகம் விளங்க,
ஒரு தான் தாங்கிய உரனுடை நோன் தாள்
நறு வீ நாகமும், அகிலும், ஆரமும்,
துறை ஆடு மகளிர்க்குத் தோள் புணை
ஆகிய,
பொரு புனல் தரூஉம் போக்கறு மரபின்,
தொல் மா இலங்கைக் கருவொடு பெயரிய,
நல் மா இலங்கை மன்னருள்ளும்,
மறு இன்றி விளங்கிய வடு இல் வாய்வாள்
உறு புலித் துப்பின் ஓவியர் பெருமகன்,
களிற்றுத் தழும்பு இருந்த கழல் தயங்கு
திருந்து அடி
பிடிக்கணம் சிதறும் பெயல் மழைத் தடக்கை
பல்இயக் கோடியர் புலவலன் பேர் இசை
நல்லியக்கோடனை ………………

என்றெல்லாம் பலவாறாகப் புகழ்ந்து எடுத்துரைக்கப்பட்டவர்களும் போர்ச் சூழலில் அளப்பறிய ஆற்றலால் சிறந்தவர்களாகவும் திகழ்ந்த இந்த

வள்ளல்கள் எழுவரும் செய்ததான கொடை என்பதான பாரத்தினை உலகம் முழுவதும் அறியும் படியாக தான் ஒருவனாகச் செய்து தாங்கிய மனவலிமையும் தளராத முயற்சியும் உடையவனும், சுரபுன்னை, அகில், சந்தானம் என்ற அனைத்தினையும் கலந்து நீராடக் கூடியவர்களான பெண்களுக்கு தெப்பமாக நீரினை முகர்ந்து வந்து அளித்திடக் கூடிய அழிவற்ற சிறப்பினை உடையதும் பழமையான நிலைத்த புகழினை உடையதுமான இலங்கை மாநகரின் பெயரைத் தன் பெயராகத் தான் தோன்றிய காலத்திலேயே பெற்ற நன்மை பொருந்திய இலங்கையினை ஆண்ட மன்னர்களுள் சிறப்பிற்குரியவனும், வாள் போரினில் சிறந்த வெற்றியினை அடையக் கூடியவர்களும், புலியினை அடையக் கூடியவர்களும், புலியினை அடையக் கூடியவர்களும், ஓவியர் குடியினில் தோன்றியவனும், அழகிய பாதங்களை உடையவனும், பெண் யானைகளை பரிசாக வழங்கும் மழை போன்றதானக் கருணைக் கரங்களை உடையவனும் கூத்தர்களைப் புகழ்ந்து அவர்கள் மகிழும்படியாகக் கொடையினை வழங்குவதில் தலைசிறந்தவனும், பெரும் புகழினை உடையவனுமாகிய நல்லியக்கோடன் என்னும் வள்ளலினைப்பாடிச் செல்கின்றோம்.

…………நயந்த கொள்கையொடு,
தாங்கரு மரபின், தன்னும், தந்தை
வான் பொரு நெடு வரை வளனும் பாடி,
முன் நாள் சென்றனம் ஆக

உயர்ந்த குடியில் பிறந்த சிறப்பினையும் நற்குணங்களையும் மிகுதியாக உடைய நல்லியக் கோடனைக் காண வேண்டும் என்று விரும்பிய மனதுடன் அவனையும் அவன் தந்ததையின் செல்வ வளத்தினையும் புகழ்ந்து பாடிய வண்ணம் அந்த வள்ளலைத் தேடி சில நாள்களுக்கு முன்பு நாங்கள் சென்றோம். அவ்வாறு சென்ற பின்னர்,

## 14.13.நல்லியக்கோடனைக் காணுமுன் இருந்த வறுமை நிலையும் கண்டபின் வளமை நிலையும் :

………………   ……… இந்நாள்
திறவாக் கண்ண சாய் செவிக் குருளை,
கறவாப் பால் முலை கவர்தல் நோனாது,
புனிற்று நாய் குரைக்கும், புல்லென் அட்டில்
காழ் சோர் முது சுவர்க் கணச் சிதல் அரித்த
பூழி பூத்த புழல் காளாம்பி,
ஒல்கு பசி உழந்த ஒழுங்கு நுண் மருங்குல்,
வளைக் கை கிணைமகள், வள் உகிர்க்
குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை,
மடவோர் காட்சி நாணிக் கடை அடைத்து,

இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்,
அழி பசி வருத்தம் வீடப் பொழி கவுள்
தறுகண் பூட்கைத் தயங்கு மணி மருங்கின்
சிறுகண் யானையொடு, பெருந்தேர் எய்தி,
யாம் அவண் நின்றும் வருதும்.

மன்னனை சென்று சந்திப்பதற்கு முன்னால் வந்த கலைஞர்களாகிய பாணர்கள் வாழும் வீடுகளில் புதிதாகப் பிறந்து இன்னும் கண்களைக் கூடத் திறக்க முடியாத சாய்ந்த காதுகளை உடைய நாய்க்குட்டிகள் மற்றவர்கள் எளிதில் கநற்து விடமுடியாத பால் முலையினை உடைய நாயின் (தாயின்) முலைகளைப் பசியால் கடித்துப் பால் உண்ணுவதனைப் பொறுக்க இயலாது பசியினால் வாடும் தாய் நாய் குரைக்கும். இத்தகைய நாய்கள் சிறுமைத் தன்மையுடைய சமையல் அறையில் கட்டப்பட்ட கயிறுகள் இற்று கூரை சரிந்து விழுந்து கிடக்கக் கூடிய பழமையான சுவரினில் உண்டான கரையான்கள் அரிக்கப்பட்ட புழுதிகள் சூழ்ந்த இடத்தினில் காளான்கள் முளைத்தன. இத்தகையதான வறுமையின் காரணமாக ஏற்பட்ட பசியின் காரணமாகத் தளர்ந்த இணைமகள் தன் கைகளால் கிள்ளி எடுத்து வந்த குப்பையில் வளர்ந்த வேளைக் கீரையினை உப்பில்லாமல் வேகவைத்து சமைத்து மற்றவர்கள் தன் வறுமையினை கண்டுவிடாதபடி நாணத்துடன் தன் வீட்டின் வாசலை அடைத்து, பின்னர் தங்களுடைய உறவுகளுடன் அதனைப் பகிர்ந்து உண்கின்றனர். அவ்வாறு அந்த உணவினைத் தின்பதற்குக் காரணமான அறிவு முதலானவற்றை அழிக்கும் பசித்துன்பம் என்பதே இல்லாமல் அழிந்து போகும் வகையில் மதம் வழியும் கன்னத்தினையும் கொலைத் தொழிலில் சிறந்து விளங்கிடக் கூடியதான வலிமையினையும் கொண்டதும் சிறிய கண்களை உடையதுமான யானையுடன் கூடிய பெரிய தேர்களையும் பரிசாகப் பெற்று நாங்கள் நல்லியக்கோடனின் அரண்மனையிலிருந்து வந்து கொண்டிருக்கின்றோம்.

## 14.14.பாணனின் ஆற்றுப்படுத்தும் பண்பு :

…… …… .. …………. நீயிரும்
இவண் நயந்து இருந்த இரும்பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின்

இது இத்தன்மையுடையதாகத் திகழ்வதனால் நீங்களும் உங்களை விரும்பி வாழும் உறவுகளுடன் எவ்விதமான சந்தேகமுமின்றி அந்த வள்ளல் தன்மை உடையவனான நல்லியக்கோடனை நோக்கிச் செல்லுங்கள். சென்றால்….



## 14.15.எயிற்பட்டினத்திற்குச் செல்லும் வழியும் பரதவர் தரும் விருந்தும் :

அலை நீர்த் தாழை அன்னம் பூப்பவும்,
தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்,

கடுஞ்சூல் முண்டகம் கதிர் மணி கழா
அலவும்,
நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்,
கானல் வெண் மணல் கடல் உலாய்
நிமிர்தர,
பாடல் சான்ற நெய்தல் நெடு வழி
மணி நீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனி நீர்ப் படுவின் பட்டினம் படரின்
ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன,
வீங்கு திரை கொணர்ந்த விரை மர விறகின்,
கரும் புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதி ஏக்கறூஉம் மாசு அறு திருமுகத்து
நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த
பழம் படு தேறல் பரதவர் மடுப்ப,
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்,
தளைஅவிழ் தெரியல் தகையோற் பாடி
அறல் குழல் பாணி தூங்கியவரொடு,
வறல் குழல் சூட்டின் வயின் வயின்
பெறுகுவீர்

கடற்கரையினால் அன்னப் பறவையின் நிறத்தினைப் பொன்ற தாழை மலர் மலர்ந்திருப்பதைப் போன்றும், பொன் போன்ற நிறத்தினை உடைய செருந்தி மலர்கள் பூத்திருப்பதனாலும், நீல வயிரக் கல்லின் நிறத்தினை உடையதான சுழி முள்ளிப்பூ மலர்ந்திருந்ததனாலும், புன்னை மரங்கள் முதுதுக்களைப் போல அரும்புகளைத் தோற்று வித்திருப்பதனாலும் கடல் அலை மலையில் பரவி உயர்ந்து எழுவதனாலும் இனிய இசை அறிந்த புலவர்கள் பாடுவதற்குப் பொருத்தம் உடையதான நெய்தல் நிலத்தின் வழியில் நீல வைரக்கல் போன்ற உப்பங்கழிகள் நிறைந்துள்ள எயிற் பட்டினத்தினைச் சென்று அடைவீர்களாக.

அங்குச் சென்றால் ஒட்டகம் உறங்கிக் கிடப்பதனைப் போன்ற தன்மையுடன் அமைந்திருக்கக் கூடிய கடல் கொண்டு வந்து ஒதுக்கியதுமான அகில் மரத்தின் விறகுகளால் எரித்து, பெரிய தோள்களையும் நிலவு போன்ற முகத்தினையும் வேல் போன்ற கூர்மையான நோக்கினையும் உடைய நுளையர் மகள் காய்ச்சி வடிகட்டிய கள்ளனைப் பரதவர்கள் உங்கள் வாயினில் ஊட்டி விடுவார்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சி கொண்டு கிடங்கில் பகுதியின் தலைவனாகிய நல்லியக் கோடனைப் புகழ்ந்து பாடிக் குழலின் ஓசைக்கு ஏற்ப ஒலிக்கும் தாளத்திற்கு ஏற்ப ஆடும் உங்கள் விறலியர்களுடன் குழல் மீன் கருவாட்டினையும் பெற்று உண்டு மகிழ்ந்திடுவீர்கள்.

## 14.16.வேலூரின் சிறப்பும் எயினர் தரும் விருந்தும் :

பைந்நனை அவரை பவழம் கோப்பவும்,

கரு நனைக் காயா கண மயில் அவிழவும்,
கொழுங்கொடி முசுண்டை கொட்டங்
கொள்ளவும்,
செழுங்குலைக் காந்தள் கை விரல் பூப்பவும்,
கொல்லை நெடு வழிக் கோபம் ஊரவும்,
முல்லை சான்ற முல்லை அம் புறவின்
விடர் கால் அருவி வியன் மலை மூழ்கிச்
சுடர் ்கால் மாறிய செவ்வி நோக்கித்
திறல் வேல் நுதியின் பூத்த கேணி,
விறல் வேல் வென்றி வேலூர் எய்தின்
உறுவெயிற்கு உலைஇய உருப்பு அவிர்
குரம்பை
எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ்சோறு
தேமா மேனி சில் வளை ஆயமொடு,
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்

பவளத்தினைக் கோர்த்து வைத்ததைப் போன்று அவரைப் பூக்கள் மலரச் செய்யவும், மயில்களின் கழுத்தில் அமைந்துள்ள நீல நிறத்தினைப் போன்று காணப்படக்கூடிய காயாம் பூக்கள் மலர்ந்திடவும், வளமான கொடியினை உடைய முசுண்டை சிறு சிறு பெட்டிகள் போன்?று கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கவும், காந்தள் மலர்கள் செழித்து வளர்ந்த கைவிரல்களைப் போல காட்சி தரவும், கொல்லை நிலத்தில் கிடந்த பாதைகளில் இந்திரகோபப் பூச்சிகள் ஊறித் திரியவும், முல்லை நில ஒழுகலாறுகள் நிறைந்தும் முல்லைக் கொடிகள் படர்ந்துள்ள அழகு பொருந்திய காட்டில் மலையின் பின்னால் சூரியன் மறைந்து அதன் ஒளி மங்கிய மாலை வேலையினை நோக்கி வேலின் நுனியினைப் போன்று அரும்பிய கேணிகளை உடைய வேலினால் வெற்றி மிகும் வேலூரினைச் சென்று சேர்ந்தீர்கள் என்றால் அங்கே வாழ்பவர்கள், வருத்தம் கொள்ள காரணமான வெப்பம் மிகுதியான குடிசைகளில் வாழ்ந்திடக்கூடிய எயினர்களின் குலத்தில் பிறந்த பெண்கள் தாங்கள் சமைத்த இனிமைத் தன்மையுடைய புளிக்கறியில் அமைந்த சோற்றினை இறைச்சியுடன் பசி நீங்கும் அளவிற்கு நிறைவாகப் பெறுவீர்கள்.

## 14.17.ஆமூர் வளமும் உழத்தியரின் விருந்தோம்பலும் :

நறும் பூங்கோதை தொடுத்த நாட் சினைக்
குறுங்கால் காஞ்சிக் கொம்பர் ஏறி,
நிலை அரும் குட்டம் நோக்கி நெடிது
இருந்து,
புலவுக் கயல் எடுத்த பொன் வாய்
மணிச்சிரல்,
வள்உகிர் கிழித்த வடு ஆழ் பாசடை,

முள் அரைத் தாமரை முகிழ் விரி நாட்
போது
கொங்கு கவர் நீலச் செங்கண் சேவல்
மதிசேர் அரவின் மானத் தோன்றும்,
மருதம் சான்ற மருதத் தண் பணை,
அந்தணர் அருகா அருங்கடி வியன் நகர்,
அம் தண் கிடங்கின் அவன் ஆமூர் எய்தின்
வலம்பட நடக்கும் வலி புணர் எருத்தின்
உரன் கெழு நோன் பகட்டு உழவர் தங்கை,
பிடிக்கை அன்ன பின்னு வீழ் சிறுபுறத்துத்
தொடிக் கை மகடூஉ, மகமுறை தடுப்ப,
இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த
அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு
பெறுகுவீர்

மணம் வீசக்கூடிய பூமாலைகளைக் கட்டியது போன்ற அழகுடன் மலர்ந்துள்ள பருவம் உடைய கிளைகளையும் சிறிய இலைகளையும் உடையதான காஞ்சி மரத்தின் கிளைகளில் ஏறி இருந்து நீர் எப்போதும் நிலையாக தங்கி இருப்பது அரிதாக இருக்கும் குளத்தினை உற்று நோக்கி எப்போது பெரிய மீன் வரும் என்று பார்த்திருந்து காத்திருந்து, கயல் மீன்கள் வரும்போது பாய்ந்து சென்று கவர்ந்து உண்ணும் நாரையின் நகம் கிழித்த தழும்புகளை ஆழமாகப் பதித்துக் கொண்ட பசுமையான இலைகளையும் முள் பொருந்தியுள்ள தண்டினையும் உடைய வெண் தாமரை மலரில் தேனினை உண்ணக்கூடிய கருமை நிறத்தின் வண்டுகளின் வரிசை நிலவினை விழுங்கும் கருமை நிறமுடைய பாம்பினைப் போலத் தோன்றும் என்று மருத நிலத்தின் ஒழுக்கங்களைக் குளிர்ச்சி பொருந்திய வயல்களை உடையதும் கல்வி கற்றவர்களான நல்லறிவுடைய சான்றோர்களை உடையதும், அரிதான காவல் இடங்களைக் கொண்டுள்ளதும், அகலமான பரப்புகளை உடைய வீடுகள் கொண்டதும், அகழிகளைக் கொண்டிருப்பதுமான நல்லியக்கோடனின் ஆமூரின்கண் சென்று சேர்வீர்கள்.

அவ்வாறு வந்து சேர்ந்தால் அங்கு வலம்பட நடக்கும் வலிமை உடைய எருதுகளை உடைய உழவர்கள் தங்கையாகிய பெண் யானையின் தும்பிக்கையினைப் போன்ற சடை கிடக்கும் சிறிய முதுகினையும் தொடி என்னும் அணிகலன் அணிந்த கைகளை உடைய பெண் தன்னுடைய மக்களால் உங்களை தடுத்து நிறுத்தி முறையாக சிறப்பாக அமைந்த வெண்மை நிறமுடைய அரிசியினால் சமைக்கப்பட்ட சோற்றினை நண்டுடன் உங்களுக்கு வழங்க நீங்கள் மகிழ்ந்து உண்பீர்கள்.

குறிப்புகள்

## 14.18.நல்லியக்கோடனின் ஊர் இருக்குமிடம் தொலைவு அருகில்தான் :

எரி மறிந்தன்ன நாவின், இலங்கு எயிற்றுக்
கரு மறிக் காதின்,கவை அடிப் பேய் மகள்,
நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல,
பிணன் உகைத்துச் சிவந்த பேர் உகிர்
பணைத்தாள்
அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப,
நீறு அடங்கு தெருவின், அவன் சாறு அயர்
மூதூர்
சேய்த்தும் அன்று, சிறிது நணியதுவே

நீங்கள் அனைவரும் ஆமூரை சென்று சேர்ந்த பின்னர், தீயின் ஒளிப்பிழம்பானது காய்ந்து காட்சி தருவதனைப் போன்ற நாக்கினையும் ஒளிவீசும் பற்களையும் உடைய வெள்ளாட்டுக் குட்டிகளை அணிகலனாக அணிந்துள்ள காதுகளையும், பிளந்துள்ளப் பாதத்தினை உடைய பெண் சிரித்ததைப் போன்று தோன்று கின்ற போர் களத்தினில் தம்மால் கொல்லப்பட்ட பிணங்களைக் காலால் உதைப்பதனால் இரத்தம் தோய்ந்து சிவந்த நிறத்துடன் தோன்றும் பெரிய நகங்களை உடைய, பெரிய கால்களை உடையனவும், தலைமைப் பண்புகளை உடைய யானைகளின் மதநீரானது அருவியினைப்போன்று வழிவதனால் துகள் அடங்கிப் புழுதி அடங்கியதும், திருவிழா நிகழ்கின்ற பாதைகளை உடைய வள்ளலின் பழமையான ஊரில் இருந்து மிக தூரமாக உள்ளது என்று எண்ண வேண்டாம் அவை மிக அருகிலேயே உள்ளன.

## 14.19.நல்லியக்கோடனின் அரண்மனை வாயில் :

பொருநர்க்கு ஆயினும், புலவர்க்கு ஆயினும்,
அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்,
கடவுள் மால் வரை கண்விடுத்தன்ன,
அடைய வாயில் அவன் அருங்கடை குறுகி

பொருநர், புலவர், வேதம் ஓதக்கூடிய அந்தணர்கள் முதலான அனைவரும் வருவதன் காரணமாக எப்போதும் அடைக்கப்படாமல் உள்ளதும், இமயமலையானது கண்ணைத் திறந்து பார்ப்பதனைப் போன்ற வாயிலினை உடையதுமான அவனுடைய பெரிய அரண்மனையில் மற்றவர்கள் எளிதில் நுழைவது என்பது எளிதான செயல் அல்ல. அத்தகைய அரண்மனையின் வாயிலினை நீங்கள் சென்று அடைவீர்கள்.

## 14.20.மன்னனைச் சான்றோர் புகழ்தல் :

*Self -Instructional Material*

செய்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,
இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்,
செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த,

அந்த வள்ளலின் கொடைப் பண்பாகிய செய்நன்றி அறிதலின் சிறப்பினையும், தீயவர்களுடன் தொடர்பு கொள்ளாத சிறப்பினையும்,

குறிப்புகள்

எப்போதும் இனிமை உடையவனாக திகழ்கின்ற சிறப்பினையும், அகம், புறம் இரண்டிலும் சிறந்து விளங்கும் சிறப்பினையும், அவன் மீது மிகுந்த அன்புகொண்டு சான்றோர்கள் எடுத்துரைக்கவும்,

### 14.21.மன்னனின் குணம் :

அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ்சினம்
இன்மையும்
ஆண் அணி புகுதலும், அழிபடை தாங்கலும்,
வாள் மீக்கூற்றத்து வயவர் ஏத்த

அந்த வள்ளலின் வலிமையினைக் கண்டு பயந்து அவனுடைய பாதங்களை வந்து பணிந்து தஞ்சம் அடைந்த பகைவர்களுக்கு இரக்கம் காட்டும் பெருமையினையும், கோபம் கொள்ளாமை என்பதான உயர்ந்த குணத்தினையும், பகைவர்களின் படையினிடையே அச்சம் இன்றி உள்நுழைந்து தன் படைவீரர்களின் வலிமை குன்றிய போது தானே முன் சென்று பகைவர்களை வெற்றி கொள்ளும் வீரத்தையும் போர் வீரர்கள் புகழ்ந்து கொண்டிருந்தனர்.

### 14.22.ஆளுமைப் பண்பு :

கருதியது முத்தலும், காமுறப்படுதலும்,
ஒருவழிப் படாமையும், ஓடியது உணர்தலும்,
அரிஏர் உண்கண் அரிவையர் ஏத்த

அந்த வள்ளலின் மனமானது எதனை எண்ணுகின்றனோ அதனை அவ்வண்ணமே முடிக்கும் இயல்பினையும், பெண்கள் விரும்பக் கூடியதான தன்மைகளையும், அதே சமயம் பெண்களுக்கு அவன் அடிமையாகி விடாததான தன்மையினையும் சிறந்த குணத்துடன் கூடிய பெண்களைப் பாதுகாத்து அருளக் கூடியதான சிறந்த பண்பினையும் செம்மையான கோடுகள் நிறைந்த கண்ணை உடைய பெண்கள் போற்றி உரைத்தனர்.

### 14.23.பரிசு வழங்கும் சிறப்பு :

அறிவு மடம் படுதலும், அறிவு நன்கு
உடைமையும்,
வரிசை அறிதலும், வரையாது கொடுத்தலும்,
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த

நல்லியக்கோடன் பகைவரால் அறியப்படுவதற்கு மிகவும் அரிதாக இருத்தலையும், சான்றோர்களிடம் அறிவுத் திறனில் சிறந்து விளங்குவதனையும் பரிசு வேண்டி வந்தவர்களின் சிறப்பிற்கேற்ப பரிசு வழங்குவதனையும், தகுதி இல்லாதவர்களுக்கும் பசிவு வழங்கிச் சிறப்பிப்பதனையும் பரிசு பெற வந்த இரவலர்கள் புகழ்ந்து கொண்டிருக்கவும்,

### 14.24.நல்லியக்கோடன் அவையில் வீற்றிருக்கும் காட்சி :

பன்மீன் நடுவண் பால்மதி போல
இன்நகை ஆயமொடு இருந்தோற் குறுகி

வானத்தில் விண்மீன்களின் இடையே தோற்றம் தரக்கூடியதான நிலவினைப் போன்ற இனிமையுடைய மகிழ்வினைத் தரக்கூடிய சான்றோர்கள், வயவர், பெண்கள், இரவலர்கள் ஆகியவர்களின் கூட்டத்திற்கு இடையில் அரசவையில் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கும் நல்லியக்கோடனின் அருசில் சென்று அணுகி, நீங்கள்,

## 14.25.மன்னனின் விருந்தோம்பல் :

பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன,
அம்கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்,
மணி நிரைத்தன்ன வனப்பின் வாய் அமைத்து,
வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து,
கானக் குமிழின் கனி நிறம் கடுப்ப,
புகழ் வினைப் பொலிந்த பச்சையொடு, தேம் பெய்து,
அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்கு புரி நரம்பின்,
பாடு துறை முற்றிய பயன் தெரி கேள்விக்
கூடு கொள் இன் இயம் குரல் குரல் ஆக,
நூல் நெறி மரபின், பண்ணி ஆனாது
மன்னனைப் புகழ்ந்து பாடும் தன்மை :
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்,
இளயோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்,
ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்,
தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்,
நீ சில மொழியா அளவை ….. ….

பசுமையான கண்களை உடையதான குரங்கு பாம்பின் தலையினைப் பிடித்தபோது, அந்தப் பாம்பானது குரங்கின் கையினைச் சுற்றி இறுக்கிக் கொள்ளும் நெகிழ்வைப் போன்ற அழகான தன்மையுடன் அமைக்கப்பட்ட யாழின் தண்டுகளில் தேவை உள்ளபோது நெகிழ்வு படுத்தவும், இறுக்கிக் கொள்வதற்கும் உரியதான வகையில் அமைக்கப்பட்டதான வார்க்கட்டினையும், வைரக் கற்கள் வரிசையாக வைத்ததனைப் போன்று இரண்டு தலைப்பினையும் ஒன்று சேர்த்து இறுக்கப்பட்ட அழகான ஆணிகளையும் பொருத்தமாக அமைக்கப்பட்ட குடம் போன்ற பிற்பகுதியில் குமிழம் பழத்தின் நிறத்தினைப் போன்று செய்யப்பட்டதான போர்வையினையும், தேன் சொட்டும் இனிமையினைத் தன்னிடம் கொண்டு அமுதம் தன்னிடமிருந்து வெளிப்படுவதனைப் போன்று நல்லதோர் இசையினைத் தந்திக் கூடியதான முறுக்குத் தன்மை அற்றதான நரம்புகளால் நட்டப்பட்ட இசை தரக்கூடிய யாழினை இசை நூல் கூறுகின்ற முறையுடன் மீட்டி செம்பாலைப் பண்ணினைப் பாடி, ஐம்பெரும் குரவர்களுக்கும் வணங்கிய கையுடன் இருப்பவனே, பகைவர்கள் தன் மீது வேலினை வீசுவதற்கு ஆயுத்தமாகின்ற சூழலில் மனமகிழ்ச்சியுடன் தம்முடைய மார்பினைக் கொடுப்பவனே, உழவர்களுக்கு என்றும் நன்மை

புரிந்திடக் கூடிய நல்லாட்சியினை அளித்திடக் கூடிய செங்கோலினை உடையவனே, என்றென்றும் சிறப்புடைய தேர்களைப் பெற்றிருக்கக் கூடியவனான பகை மன்னர்களுக்கும் அச்ச உணர்வினை மிகுவிக்கக் கூடிய கூர்மையான வேலினை உடையவனே என்றும் நீங்கள் மன்னன் நல்லியங்கோடனை மகிழ்ந்து சில வார்த்தைகள் போற்றுவதற்கும் முன்பாகவே,

## 14.26.மன்னன் இரவலருக்கு விருந்தோம்பல் செய்யும் முறை :

……………………. மாசில்
காம்பு ˙சொலித்தன்ன அறுவை உடீஇ,
பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,
காளரியூட்டிய கவர் கணைத் தூணிப்
பூ விரி கச்சைப் புகழோன் தன் முன்
பனி வரை மார்பன் பயந்த நுண் பொருள்
பனுவலின், வழாஅப் பல்வேறு அடிசில்
வாள் நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து,
விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி

அம்மன்னன் உங்களை எதிர்கொண்டு வரவேற்று மகிழ்ந்து மூங்கிலின் உள்ளே உள்ள பட்டையினை உரித்தது போன்ற தன்மையுடைய மென்மையான உடையினை உடுத்திக் கொள்ளும்படி செய்து, பாம்பின் நச்சுவால் மயக்கம் உண்டானதைப் போன்றதான மயங்கும் தன்மையினைச் செய்திடக் கூடிய கள்ளினை அனைவரும் விரும்பிக் குடிக்கும்படியாகக் கொடுத்து, அருச்சுணனின் மகனாகிய வீமன் எழுதியதான சமையல் கலை நுட்பம் தொடர்பான நூலினுள் கூறப்பட்டுள்ள முறைகளனிபடி எவ்விதமான சிறு தவறுகளும் ஏற்படாத வகையில் சமைக்கப்பட்ட உணவினை, கோள்கள் சுற்றி அழகு செய்ய இளமையான ஒளியினை உடையதான சூரியனின் ஒளியும் தோற்றுப் போகும் வகையிலான ஒளிவீசும் பொன்னால் செய்யப்பட்ட உணவு உண்ணும் பாத்திரங்களால் நீங்கள் விரும்பி உண்ணும் சுவை அறிந்து மகிழ்ச்சியுடன் தானே முன்னின்று உங்கள் அருகில் வந்து உங்களை உண்ணும்படி செய்வான்.

## 14.27.நல்லியக்கோடன் பரிசு வழங்கல் :

திறல் சால் வென்றியொடு, தெவ்வுப் புலம் அகற்றி,
விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி,
நயவர் பாணர் புன்கண் தீர்த்த பின்,
வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பால் கதிர் பரப்பி
உருவ வான் மதி ஊர் கொண்டாங்கு,
கூர் உளி பொருத வடு ஆழ் நோன் குறட்டு

ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு,
சிதர் நனை முரக்கின் சேண் ஓங்கு நெடுஞ்சிரைனத்
ததர் பிணி அவிழ்ந்த தோற்றம் போல,
உள் அரக்கு அறிந்த உருக்குறு போர்வை,
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி,
ஊர்ந்து பெயர் பெற்ற எழி நடைப் பாகரொடு
மா செலவு ஒழிக்கும் மதனுடை நோன் தாள்
வாள் முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில்

வலிமையும், வெற்றியும் ஆற்றலும் உடையதான பகை நாட்டு மன்னர்களை அவர்களுடைய நாட்டினை விட்டுப் போகும்படி செய்து வெற்றியினைக் கொண்டதான வேலினை கைகளில் ஏந்திய முடிமன்னர்களின் பாதுகாப்பிற்குரிய பெரிய அரண்களை அழித்துத் தன்னை நாடி வந்து போற்றும் இரவலர்களுக்குப் பரிசிலர்களுக்கும் வேண்டிய கொடையினை வழங்கிய பின்னர், படைத்தலைவர்கள் கொண்டு வந்து சேர்த்த பொருட் குவியல்களுடன் குளிர் காலத்தில் வானில் ஒளி தரக்கூடியதான நிலவு விரிந்து காட்சி தருவதனைப் போன்றதான சக்கரத்துடன் முருங்கை மரம் மலர்ந்தனைப் போன்று சாதி லிங்கம் கொண்டு நிறமூட்டப்பட்ட போர்வையினையும், தச்சுத் தொழிலில் திறம் படைத்தவர்களால் செய்யப்பட்டு, ஏறிச் செலுத்தி, ஆராய்ந்து அதன் வேகத்தினைப் புகழ்ந்திட்ட நல்ல தேரினையும், வெள்ளை நிறமுடையதான எருதுகளையும் பாகனுடன் சேர்த்து யானை குதிரை அணிகலன்கள் ஆகிய அனைத்தினையும் பிற பரிசுகளையும் வழங்கி அந்நாளிலேயே உங்கள் ஊர்களுக்குச் செல்லுங்கள் என அனுப்பி வைத்திடும் பண்பாளன்.

## 14.28.நல்லியக்கோடனை அடைந்தால் வளம் பெறுதல் உறுதி :

……………………………… மென் தோள்,
துகில் அணி அல்குல் துளங்கு இயல்
மகளிர்,
அகில் உண விரித்த அம்மென் கூந்தலின்ஷ
மணி மயில் கலாபம் மஞ்சு இடைப் பரப்பி,
துண மழை தவழும் துயல் கழை நெடுங்கோட்டு,
எறிந்து உரும் இறந்து ஏற்று அருஞ் சென்னிக்
குறிஞசிக் கோமான், கொய் தளிர்க் கண்ணி
செல் இசை நிலைஇய பண்பின்
நல்லியக்கோடனை நயந்தனிர் செலினே.

மென்மையான தோள்களும், ஆடை அணியப் பெற்றதான அல்குலும் மென்மைத் தன்மையுடையதான சாயலையும் உடைய பெண்கள், அகில் புகையினை இடுவதற்காக விரித்த கூந்தலைப் போன்றதான மயில் தோகையினை வெண்மேகங்களுக்கிடையில் விரித்துத் தெளிவான மேகம்

குறிப்புகள்

தவழ்ந்து கொண்டிருக்கவும், அசைகின்றதான மூங்கில் மரங்கள் நிறைந்ததும், இடி அதனைக் கடந்து செல்ல இயலாமல் இடிஇடித்துச் செல்லப்பட்டதும், எவரும் எளிதில் ஏறிவிட இயலாத உயரத்தினை உடைய மதில்கள் சூழ்ந்த நிலத்தின் தலைவனும் தளிர்களால் கட்டப்பட்ட மாலையினை அணிந்துள்ளவனும், புகழ் நிலைபெறுவதற்கான வள்ளல் குணம் நிறைந்தவனுமாகிய நல்லியக்கோடனை விரும்பி நீங்கள் செல்வீர்கள் என்றால்..

மேற்சொன்ன பரிசுகள் அனைத்தும் பெறுவீர்கள்.

## 14.29.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள் :

**சிறுவினா :**

1. சிறுபாணர் குறிப்பு வரைக.
2. நல்லியக்கோடனின் அரண்மனை வாயில் எத்தகையது?
3. விறலியின் பாதங்களுக்கு எதனை உவமையாக்கி பேசுகின்றார் புலவர்?
4. உழத்தியரின் விருந்தோம்பல் பண்பினை விளக்குக.
5. பாணரின் கொடிய வறுமை நிலையினை சிறுபாணாற்றுப்படை எவ்வாறு காட்சிப்படுத்துகின்றது?

**பெருவினா :**

6. கடை ஏழு வள்ளல்களின் சிறப்பினை உம்பாடப்பகுதி வழியாக தொகுத்துரைக்கவும்.
7. நல்லியக்கோடனின் ஈகைச் சிறப்பு எத்தகையது என்பதனை விளக்குக.
8. சேர சோழ பாண்டிய நாட்டின் உயர் நலங்களை சிறுபாணாற்றுப்படை வழி எடுத்துரைக்க.

## 14.30.தொகுத்துக் காண்போம். :

பரிசில் பெற்ற சிறிய யாழினை உடைய யாழ்ப்பாணன் ஒருவன் மற்றொரு யாழ்ப்பாணனை வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது இவ்விலக்கியம். ஓய்மா நாட்டு நல்லியக்குோடனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டுள்ளது. விறலியின் வருணனை, வஞ்சி, மதுரை, உறையூரின் சிறப்புகள், கடையெழு வள்ளல்களின் கொடைச் சிறப்புகள், நெய்தல், முல்லை, மருத நிலங்களின் சிறப்புகள் ஆகியவற்றறைப் பற்றி இப்பகுதியின் மூலமாக அறிந்துகொண்டோம்.

## 14.31.மேலும் பயில்வதற்கான நூல்கள் :


- சிறுபாணாற்றுப்படை, உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.
- சிறுபாணாற்றுப்படை, நாரயாணவேலுப்பிள்ளை, முல்லை நிலையம், சென்னை-17.
- சிறுபாணாற்றுப்படை, கதிர்முருகு, சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.

- பத்துப்பாட்டு, கழக வெளியீடு, திருநெல்வேலி,
- சிறுபாணாற்றுப்படை, முனைவர் இரா.மோகன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98

**அழகப்பா பல்கலைக்கழகம் - தொலைதூரக் கல்வி இயக்ககம்**

**எம்.ஏ - தமிழ் - இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்**

**31931 – சங்க இலக்கியம்- மாதிரி வினாத்தாள் - 1**

**பகுதி – அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 10X2=20**

**1.** நற்குணத்தின் அவசியத்தினை குறிஞ்சிப்பாட்டு எவ்வாறு வலியுறுத்துகின்றது?

**2.** முல்லைக்கலியில் காஞ்சிக்குக்கீழ் வா! சுட்டும் ஊடல் நாடகம் யாது?

3. பிற பெண்கள் தம்மை எவ்வாறு கூற வேண்டம் என்று தலைவி ஊடினாள்?

4. தோழி பாணனிடம் கூறியது யாது?

5. தலைவனை யாது கூறி தங்கிச் செல்ல வேண்டுகிறாள் தோழி?

6. தலைவன் பிரிவில் வருந்தியத் தலைவிக்கு தோழி கூறிய மொழி யாது?

7. பரிபாடல் நூல் குறிப்பு வரைக.

8. தலைவி நெஞ்சிடம் யாது கூறி புலம்புகின்றாள்?

9. செங்குட்டுவன் எவ்வாறு நீண்டநாள் வாழ வேண்டும் என்று விரும்பி வாழ்த்துகின்றார் புலவர்?

10. சிறுபாணர் - குறிப்பு வரைக.

**பகுதி – ஆ**

**II. எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக.**

**5X5=25**

11. குறிஞ்சுப்பாட்டுக் கூறும் 99 மலர்கள் யாவை?

அல்லது

தன் காதலை ஏற்காத தலைவியைக் கண்டு தலைவன் மனம் வெதும்பி கூறியது யாது?

12. தோழி கூற்றுப் பத்தாக அமைந்த மருதப்பாடல்கள் உணர்த்தும் தலைவியின் மாண்புகள் யாவை?

அல்லது

இரவுக்குறி விரும்பிய தலைவனைப் பகற்குறியில் வரும்படி தோழி கூறிய காரணம் யாது?

13. தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியது யாது?

அல்லது

தலைவி நெஞ்சிடம் யாது கூறி புலம்புகின்றாள்?

14. தலைவன் மீது தவறில்லை என்ற தலைவியின் வாதம் யாது?

அல்லது

பெருஞ்சித்திரனார் பாடல்கள் வழி புலனாகும் குமணனின் சான்றாண்மை இரண்டினை எடுத்துரைக்க.

15. தலைவன் கொடியவன் என்று தோழி கூற காரணம் யாது?

அல்லது

மோசிக்கீரனாரின் பொதுவியல் திணைப்பாடல்கள் உணர்த்தும் கடமை எவ்வகையில் எதனைவிட சிறந்தது என்று விளக்குக?

**பகுதி - இ-III.எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக 3X10=30**

**16.** ஏறு தழுவுதல் - சடங்கல்ல – வாழ்வியல் முறை என்பதனை உம்பாடப்பகுதி கொண்டு நிறுவுக.

**17.** தலைவன் கூற்றால் புலனாகும் அன்பின் உயர்வினைச் சான்றுக் காட்டி குறுந்தொகைப் பாடல் வழி எடுத்துரைக்க.

**18.** வையை ஆற்றின் கரைபுரண்ட வெள்ளக் காட்சிகளை பரிபாடல் வழி தொகுத்துரைக்க

**19.** தோழியின் அறத்தொடு நிற்றல் பண்பினை நற்றிணை பாடல் வழி நிறுவுக.

**20.** நல்லியக்கோடனின் ஈகைச் சிறப்பு எத்தகையது என்பதனை விளக்கி உரைக்க.

மாதிரி வினாத்தாள் - 2

**அழகப்பா பல்கலைக்கழகம் - தொலைதூரக் கல்வி இயக்ககம்**
**எம்.ஏ - தமிழ் -இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்**
**- 31931 – சங்க இலக்கியம் பகுதி – அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடை 10ஓ2ஹீ20**

1. திணைப்புனக்காவலில் யாது நிகழ்ந்தது?
2. தலைவியின் காதல் உறுதியாய் நிறைவேறும் என்பதற்கான தோழியின் கூற்றை எடுத்துரைக்க.
3. தோழி பாணனிடம் யாது கூறி வேண்டி நின்றாள்?
4. உலோச்சனார் பாடல் வழி தோழி தலைவிக்குக் கூறியது யாது?
5. தலைவி நெஞ்சிடம் யாது கூறி புலம்புகின்றாள்?
6. வினை முற்றி மீண்ட தலைவனின் கூற்று யாது?
7. வாயில் மறுத்த தலைவிக்கு தோழி அறிவுறுத்தியது யாது?
8. வல்வில் ஓரியின் வில் திறனை எடுத்துரைக்க
9. ஐந்தாம் பத்து பாடிய புலவர்க்கு கடற்பிறகோட்டிய செங்குட்வன் அளித்த பரிசில் யாது?
10. விறலியின் பாதங்களுக்கு எதனை உவமை ஆக்குகின்றார் புலவர்? ஏன்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக. 5ஓ5ஹீ25**

11. குற்ஞசிப்பாட்டின் வழி யானைதரு புணர்ச்சிக் குறித்து குறிப்பு வரைக.

அல்லது

ஏறு தழுவிய அழகைத் தோழி காட்சியப்படுத்திய நயத்தினைச் சுட்டுக.

12. தலைவியின் கூற்று வழி அவளது மனவுணர்வினை காட்சிப்படுத்துக.

அல்லது

வேட்கைப்பத்து உணர்த்தும் தலைவியின் பண்பு நலன்களை கூறுக.

13. பெரும்பதுமனார் கண்டோர் கூற்றாக கூறும் கருத்து யாது?

அல்லது

உப்பு வணிகரின் செயல் எதற்கு உள்ளுறை ஆக்கப்பட்டது?

14. பரிபாடலில் தலைவி நீராடிய அழகினை வையைப் பாடல் வழி காட்சிப்படுத்துக

அல்லது

பிட்டங்கொற்றனை காரிக்கண்ணனார் எவ்வாறு போற்றுகின்றார்?

15. சேரன் வீரர்களுக்கு அளித்த விருந்தின் சிறப்பினை எடுத்தியம்புக.

அல்லது

பாணனின் கொடிய வறுமை நிலையினை சிறுபாணாற்றுப்படை எவ்வாறு காட்சிப்படுத்துகின்றது?



**பகுதி - இ III.எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரைவடிவில் விடை தருக** **3X10=30**

**16.** களவு கற்பாக மலர உதவும் தோழியின் பங்களிப்பனை முல்லைக்கலி வழியாக நிறுவுக.

**17.** தோழி சிறைப்புறத்திருந்த தலைவன் கேட்ப கூறியவற்றை விளக்குக.

**18.** நற்றிணைப் பாடல்களில் தலைவன் மாண்பினைச் சான்றுகளுடன் நிறுவுக.

**19.** இயன்மொழித் துறை என்றால் என்ன? உம்பாடப்பகுதியில் அமைந்த எவையேனும் ஐந்து இயன்மொழி துறைப்பாடல்களை சான்று காட்டி நிறுவுக.

**20.** கடற்பிறகோட்டிய செங்குட்டுவனின் வீரச்சிறப்பினைத் தொகுத்துரைக்க.